வெளியீடு 30-6-98 Issued 30-6-98

404
99

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

புதன்கிழமை, ஏப்ரல் 30, 1997 – தொகுதி 36– எண் 1

**Wednesday the 30th April, 1997 – Volume 36 – No. 1**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**...slative Assembly Secretariat, Fort St. George,**
**Chennai-600 009**

D.
Y211,31'N97
N97.36.1
219441

**[Price Rs. 3.00**

30-4-1997

# உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | vii-x |
| Personnel of the Government of Tamil Nadu | xi-xv |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் | xvii-xviii |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் பட்டியல் (அகர வரிசைப்படி) | xix-xxix |
| 1. **வினாக்கள்-விடைகள்--** | |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் | 1-46 |
| (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (பத்து முதல் பதினாறு வரையிலான பட்டியல்கள் விதி 51-ன் கீழ் உடுக்குறியிட்ட வினாக்கள் உடுக்குறியிடாதவையாக மாற்றப்பெற்று சம்பந்தப்பட்ட அமைச்சர்களால் அளிக்கப்பட்டுள்ள விடைகளுடன் அவைமுன் வைக்கப்பட்டவை) | 46-801 |
| 2. **சிறப்புக் கவன ஈர்ப்பு--** | |
| காவிரி நதி நீர்ப் பங்கீடு பிரச்சினை தொடர்பாக கர்நாடக பாசனத் துறை அமைச்சரின் பேச்சு | 802-820 |
| 3. **கவன ஈர்ப்பு** | |
| விதி 55-ன் கீழ் அனுமதிக்கப்பெற்று அவைமுன் வைக்கப்பெற்ற கவன ஈர்ப்பு (1 முதல் 27 வரை)-- | 820,923-966 |
| 4. **அறிக்கைகள் அளித்தல்--** | |
| (அ) மதிப்பீட்டுக் குழு | 820 |
| (ஆ) பொது நிறுவனங்கள் குழு | 820 |

| | பக்கங்கள் |
|---|---|
| **5. அறிவிப்புகள்--** | |
| (அ) பேரவைக் குழுக்களுக்கு உறுப்பினர்கள் தேர்வு-- | 821-831 |
| (1) மதிப்பீட்டுக் குழு | 821-822 |
| (2) பொதுக் கணக்குக் குழு | 822-823 |
| (3) பொது நிறுவனங்கள் குழு | 823-824 |
| (4) அவை உரிமைக் குழு | 824-825 |
| (5) அலுவல் ஆய்வுக் குழு | 825-826 |
| (6) பேரவை விதிகள் குழு | 826-827 |
| (7) சட்ட விதிகள் ஆய்வுக் குழு | 827 |
| (8) அரசு உறுதிமொழிகள் குழு | 828 |
| (9) அவைக் குழு | 828-829 |
| (10) மனுக்கள் குழு | 829-830 |
| (11) நூலகக் குழு | 830 |
| (12) பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழு | 830-831 |
| (ஆ) குழுத் தலைவர்கள் பேரவைத் தலைவரைச் சந்தித்தல் | 831 |
| (இ) நகர்ப்புற நிலவரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1997 (ஆ.இ.) | 834 |
| (ஈ) தனி நீதிமன்றங்கள் சட்டமுன்வடிவு, 1997 (ஆ.இ.) | 878 |
| (உ) தந்தை பெரியார் பல்கலைக் கழக சட்டமுன்வடிவு, 1997 (ஆ.இ.) | 902 |
| (ஊ) பேரவை நிறைவேற்றிய அலுவல்கள் பற்றிய விவரங்கள் | 911-920 |

21844



D
Y24,3:N97
N97.36.1

| | பக்கங்கள் |
|---|---|
| **6. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)--** | |
| தந்தை பெரியார் பல்கலைக் கழகச் சட்டமுன்வடிவு, 1997 | 831-832 |
| **7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)--** | |
| (அ) கட்டாயத் தொடக்கக் கல்வி (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 1997 | 832-834 |
| மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் | |
| (ஆ) நகர்ப்புற நிலவரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1997 | 834-836 |
| மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் | |
| (இ) நகர்சார்ந்த பரப்பிடங்களிலுள்ள விலங்குகள் மற்றும் பறவைகள் கட்டுப்பாடு செய்தல் மற்றும் முறைப்படுத்துதல் சட்டமுன்வடிவு, 1997 | 836-857 |
| மாண்புமிகு திரு. கோ.சி. மணி | 837,838,839, 841-843,845, 849-857 |
| திரு. சி. வேலாயுதன் | 837-838 |
| திரு. ப. ரங்கநாதன் | 839-841,843, 845,850 |
| திரு. சி. ஞானசேகரன் | 843-844 |
| திரு. மு.க. ஸ்டாலின் | 844-845 |
| திரு. செங்கை சிவம் | 844,846-847 |
| திரு. ஜி. நிஜாமுதீன் | 847-848 |
| திரு. வை. சிவபுண்ணியம் | 848-849 |
| திரு. பி. வெங்கடசாமி | 851 |

| | பக்கங்கள் |
|---|---|
| 7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)--தொடர்ச்சி | |
| (ஈ) தகவல் பெறுவதற்கான உரிமைச் சட்டமுன்வடிவு, 1997 | 858-875 |
| மாண்புமிகு திரு. ஆலடி அருணா | 858,869-873 |
| திரு. சி.டி. தண்டபாணி | 858-861 |
| திரு. பி. வெங்கடசாமி | 861-862 |
| டாக்டர் க. கிருஷ்ணசாமி | 862-863 |
| திரு. சி. ஞானசேகரன் | 863-865 |
| திரு. எஸ். திருநாவுக்கரசு | 865-867 |
| திரு. ஜி. பழனிசாமி | 867-868 |
| திரு. ம. அப்துல் லத்தீப் | 868-869 |
| (உ) குற்றவியல் செய் சட்ட (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 1997 | 875-878 |
| மாண்புமிகு திரு. ஆலடி அருணா | 875-878 |
| திரு. சி. ஞானசேகரன் | 876-878 |
| (ஊ) தனி நீதிமன்றங்கள் சட்டமுன்வடிவு, 1997 | 878-893 |
| மாண்புமிகு திரு. ஆலடி அருணா | 879,880,882-886,888-893 |
| திரு. எஸ். திருநாவுக்கரசு | 879-880,887-888,891-892 |
| திரு. குழந்தை. தமிழரசன் | 881-882 |
| திரு. சி. ஞானசேகரன் | 886-887 |
| திரு. ஆர். சொக்கர் | 888-889 |
| திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் | 889-890 |

| | பக்கங்கள் |
|---|---|
| 7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)--தொடர்ச்சி | |
| (எ) கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1997 | 894-895 |
| மாண்புமிகு திரு. வே. தங்கபாண்டியன் | 894-895 |
| (ஏ) பொது விற்பனை வரி (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1997 | 896-897 |
| மாண்புமிகு திரு. வே. தங்கபாண்டியன் | 896-897 |
| (ஐ) பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1997 | 897-899 |
| மாண்புமிகு திரு. வே. தங்கபாண்டியன் | 898-899 |
| (ஒ) திரையரங்குகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1997 | 899-901 |
| மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன் | 899-901 |
| (ஓ) தந்தை பெரியார் பல்கலைக் கழகச் சட்டமுன்வடிவு, 1997 | 902-905 |
| மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் | 902-904 |
| (ஔ) நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்ட முன்வடிவு, 1997 | 905-906 |
| மாண்புமிகு திரு. கோ.சி. மணி | 905-906 |
| 8. அரசினர் தீர்மானங்கள்-- | |
| (அ) விதிகள் 30, 130 மற்றும் 132-ஐத் தளர்த்தல் | 901-902 |
| (ஆ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்பெறுதல் | 920 |

பக்கங்கள்

9. அரசினர் தனித் தீர்மானம்--

பணியிலிருந்து ஓய்வு பெறவிருக்கும் பேரவைச் செயலாளர் திரு. செ.சு. ஜானகிராமன் அவர்களுக்குப் பாராட்டுதல்கள் — 907-911

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் — 907-908

திரு. சோ. பாலகிருஷ்ணன் — 909

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி — 909-910

10. பேரவைமுன் வைக்கப்பெற்ற அறிவிக்கைகளுக்கான திருத்தம்-- — 906-907

11. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்-- — 912-921

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

## ஆளுநர்--செல்வி எம். பாத்திமா பீவி

## அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. **முதலமைச்சர்** : **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணி, மாவட்ட வருவாய் அதிகாரிகள், உள் துறை, நிதி, திட்டம், தொழில்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, சிறுபான்மையினர் நலன் மற்றும் கடவுச் சீட்டு.

2. **கல்வி அமைச்சர்** : **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** தொழிற்கல்வி உள்ளிட்ட கல்வி, சட்டமன்றம், தேர்தல்கள், மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், விளையாட்டு மற்றும் இளைஞர் பணிப்படை, முன்னாள் இராணுவத்தினர்.

3. **மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலம், மின்சாரம்.

4. **வருவாய்த் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் :** வருவாய், வருவாய் வாரியம், மாவட்ட வருவாய் நிர்வாகம், மாவட்டத் துணை ஆட்சியாளர்கள்.

5. **ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. கோ. சி. மணி :** நகராட்சி நிர்வாகம், சமுதாய வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.

6. வேளாண்மைத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:
வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்புப் பயிர் மேம்பாடு.

7. பொதுப் பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு திரு. துரைமுருகன்:
பொதுப்பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டம், செயற் திட்டப் பணிகள்.

8. போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி :
போக்குவரத்து, நாட்டுடமை யாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகம் மற்றும் நெடுஞ்சாலைகள், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

9. தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் : மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:
தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு.

10. உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. கே. என். நேரு:
உணவு, விலைக் கட்டுப்பாடு மற்றும் குடிமைப் பொருட்கள் வழங்கல், பொது விநியோக முறை, கூட்டுறவு மற்றும் புள்ளிவிவரங்கள்.

11. பால்வளத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. க. சுந்தரம்:
பால், பாற் பண்ணை வளர்ச்சி, குடிசை மாற்று வாரிய இடவசதிக் கட்டுப்பாடு.

12. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:
தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, இரும்பு மற்றும் எஃகுக் கட்டுப்பாடு, பத்திரிகை அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, இசுலாமிய அறக்கட்டளை (வக்ஃப்).

13. சட்டத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. ஆலடி அருணா:
சட்டம், நீதிமன்றங்கள், சிறைச் சாலைகள், எடைகள் மற்றும் அளவைகள் குறித்த சட்டம், கம்பெனிகள் பதிவு, கடன் நிவாரணம் (கடன் வழங்கல், சீட்டு நிதி இவை பற்றிய சட்டம் இயற்றுதல் உட்பட).

14. வணிக வரிகள் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. வே. தங்கபாண்டியன்:
வணிக வரிகள்.

15. கைத்தறித் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. என். கே. கே. பெரியசாமி:
கைத்தறி, துணித் தொழில், சுற்றுச் சூழல் மாசுக் கட்டுப்பாடு.

16. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. எம். ஆர். கே. பன்னீர்செல்வம்:
பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

17. வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி:
வனம், சின்கோனா, கால்நடை பராமரிப்பு.

18. வீட்டு வசதித் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:
வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி, நகர அமைப்பு திட்டமிடல் மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி.

19. ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:
கிராமக் குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பதிவுத் துறை, முத்திரைத் தாள் சட்டம், சத்துணவு.

20. செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:
*செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், திரைப்படச் சட்டம்.*

21. இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் : மாண்புமிகு புலவர் பூ. ம. செங்குட்டுவன்:
*இந்து சமய அறநிலையத் துறை.*

22. சமூக நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திருமதி எஸ். பி. சற்குண பாண்டியன் :
*சமூக நலன், அனாதை இல்லங்கள், குற்றவாளிகள் சீர்திருத்த நிர்வாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம்.*

23. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:
*ஆதிதிராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர், கொத்தடிமைத் தொழிலாளர்.*

24. சுற்றுலாத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:
*சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.*

25. கதர் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:
*கதர் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம், எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை, அரசு அச்சகம்.*

26. மீன் வளத் துறை அமைச்சர் : மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:
*மீன் வளம் மற்றும் மீன் வளக் கழகம், மகளிர் மற்றும் குழந்தைகள் நலன், இரவலர் காப்பு இல்லம்.*



## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR—SELVI M. FATHIMA BEEVI

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. **Chief Minister** .. **The Hon. Kalaignar M. Karunanidhi :**
Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Home, Finance, Planning, Industries, Prohibition and Excise, Minorities Welfare and Passports.

2. **Minister for Education** .. **The Hon. Prof. K. Anbazhagan:**
Education including Technical Education, Legislature, Elections, Electronics, Science and Technology, Sports and Youth Service Corps and Ex-Servicemen.

3. **Minister for Health and Electricity** .. **The Hon. Thiru Arcot N. Veerasamy:**
Health, Medical Education and Family Welfare and Electricity.

4. **Minister for Revenue** .. **The Hon. Thiru Nanjil K. Manoharan:**
Revenue, Board of Revenue, District Revenue Establishment and Deputy Collectors.

5. **Minister for Rural Development and Local Administration** .. **The Hon. Thiru Ko. Si. Mani:**
Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions and Rural Indebtedness and Urban and Rural Water Supply.

6. **Minister for Agriculture** .. **The Hon. Thiru Veerapandi S. Arumugham:**
Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development.

7. **Minister for Public Works** .. **The Hon. Thiru Duraimurugan:** Public Works, Irrigation including Minor Irrigation and Programme Works.

8. **Minister for Transport** .. **The Hon. Dr. K. Ponmudi:** Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Ports and Highways and Madras Metropolitan Development Authority.

9. **Minister for Tamil Official Language and Tamil Culture** .. **The Hon. Dr. M. Thamizhkudimagan:** Tamil Official Language and Tamil Culture.

10. **Minister for Food, Public Distribution and Co-operation** .. **The Hon. Thiru K. N. Nehru:** Food, Price Control and Civil Supplies, Public Distribution System, Co-operation and Statistics.

11. **Minister for Milk** .. **The Hon. Thiru K. Sundaram:** Milk and Dairy Development, Slum Clearance and Accommodation Control.

12. **Minister for Labour** .. **The Hon. Thiru A. Rahman Khan:** Labour, Census, Employment and Training Iron and Steel Control, Newsprint Control and Wakf.

13. **Minister for Law** .. **The Hon. Thiru Aladi Aruna:** Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits.

14. **Minister for Commercial Taxes** .. **The Hon. Thiru V. Thangapandian:** Commercial Taxes.



15. **Minister for Handlooms** .. **The Hon. Thiru N. K. K. Periasamy:** Handlooms, Textiles and Environmental Pollution Control.

16. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru M. R. K. Panneer-selvam:** Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees.

17. **Minister for Forest and Animal Husbandry** .. **The Hon. Thiru Pongalur N. Palanisamy:** Forest, Cinchona and Animal Husbandry.

18. **Minister for Housing** .. **The Hon. Thiru K. Pitchandi:** Housing, Rural Housing Development, Town Planning and Urban Development.

19. **Minister for Rural Industries and Registration** .. **The Hon. Thiru I. Periasamy:** Rural Industries including Village and Cottage Industries, Registration and Stamp Act and Nutritious Meals.

20. **Minister for Information and Publicity** .. **The Hon. Thiru V. Mullaivendan:** Information and Publicity, Film Technology and Cinematography Act.

21. **Minister for Hindu Religious and Charitable Endowments** .. **The Hon. Pulavar P. M. Senguttuvan:** Hindu Religious and Charitable Endowments.

22. **Minister for Social Welfare** .. **The Hon. Tmt. S. P. Sarkunapandian:** Social Welfare, Orphanages and Correctional Administration and Integrated Child Development Service Scheme.

| | | |
|---|---|---|
| 23. **Minister for Adi-Dravidar and Tribal Welfare** | .. | **The Hon. Thiru Samayanallur S. Selvarasu:** Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour. |
| 24. **Minister for Tourism** | .. | **The Hon. Thiru N. Suresh Rajan:** Tourism and Tourism Development Corporation. |
| 25. **Minister for Khadi and Printing** | .. | **The Hon. Thiru Andhiyur P. Selvarasu:** Khadi Board, Bhoodan and Gramdan, Stationery and Printing and Government Press. |
| 26. **Minister for Fisheries** | .. | **The Hon. Tmt. S. Jenefer Chandran:** Fisheries and Fisheries Development Corporation, Women's and Children's Welfare and Beggars Home. |



# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**பேரவைத் தலைவர்**

**மாண்புமிகு திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்**

**பேரவைத் துணைத் தலைவர்**

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி**

**மாற்றுத் தலைவர்கள் பட்டியல்**

1. திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்
2. திரு. இரா. ஆவுடையப்பன்
3. திரு. வை. இராமசாமி
4. திரு. செ. இராமலிங்கம்
5. திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்
6. திரு. கே. சுப்பராயன்

**செயலாளர்**

திரு. செ.சு. ஜானகிராமன்

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல்

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. டி. சாலமன் ஜெயபால், பி.எஸ்சி., பி.எல். | .. | கூடுதல் செயலாளர் |
| 2. | திரு. வெ. இராசாராமன், பி.எஸ்சி., பி.எல். | .. | இணைச் செயலாளர் |
| 3. | திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 4. | திரு. டி. சுந்தரராஜலு, எம். ஏ. | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 5. | திரு. கா.ப. இராஜன், டி.ஆர்.எஸ்., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 6. | திருமதி பானுமதி ஆனந்தராஜன், பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 7. | திரு. கி. சாயிநாதன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 8. | திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 9. | திரு. சா. கணேசன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 10. | திரு. தி. திருமாவளவன், பி.எஸ்சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 11. | திரு. வெ. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல். | .. | பேரவைத் தலைவரின் சிறப்புச் செயலாளர் |
| 12. | திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 13. | திரு. எம். ஆறுமுகப்பெருமாள், எம்.ஏ., பி.லிட். | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 14. | திருமதி வீ. நா. உமா, பி.ஏ. | .. | குழு அலுவலர் |
| 15. | திரு. சு. ராஜகுரு | .. | குழு அலுவலர் |
| 16. | திரு. எம். ஜோபாய், பி.காம். | .. | சார்புச் செயலாளர் |

| | | | |
|---|---|---|---|
| 17. | திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 18. | திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 19. | திரு. ஜி. அனீஸ் அகமத், பி.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 20. | திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 21. | திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| 22. | திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 23. | திருமதி என். துளசிபாய், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| 24. | திரு. கே. ரவீந்திரன், எம்.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| 25. | திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| 26. | திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 27. | திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 28. | திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 29. | திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 30. | திரு. இல. மாரியப்பன், பி.ஏ. | .. | தலைமை நிருபர் |
| 31. | திரு. ம. பிலிப், எம்.ஏ. | .. | தலைமை நிருபர் |
| 32. | திருமதி சீ. கனகவல்லி, டி.சி.பி. | .. | தலைமை நிருபர் |
| 33. | திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. | .. | தலைமை நிருபர் |
| 34. | திரு. கோ. ஸ்ரீராமன், பி.காம். | .. | உதவி விவாதப் பதிப்பாளர் |
| 35. | திரு. ம. ஸ்ரீனிவாசலு, பி.காம்., பி.எல். | | உதவி விவாதப் பதிப்பாளர் |
| 36. | திரு. எஸ். அய்யாத்துரை | .. | பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர். |



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
## உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)
## பெயர்களும் தொகுதிகளும்

| | | | |
|---|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | .. | திருவாரூர் (செ.வ.) |
| 2. | அந்தியூர் செல்வராசு, திரு. ப. | .. | அந்தியூர் (செ.வ.) |
| 3. | அபுல்ஹசன், திரு. எம்.எம்.எஸ். | .. | மயிலாடுதுறை |
| 4. | அப்துல் நாசர், திரு. அ.வ. | .. | புவனகிரி |
| 5. | அப்துல் லத்தீப், திரு. ம. | .. | வாணியம்பாடி |
| 6. | அப்பாவு, திரு. மு. | .. | ராதாபுரம் |
| 7. | அமரமூர்த்தி, திரு. டி. | .. | அரியலூர் |
| 8. | அய்யலுசாமி, திரு. வி. | .. | கோவில்பட்டி |
| 9. | அருண்குமார், திரு. பா. | .. | மேட்டுப்பாளையம் |
| 10. | அழகராஜா, திரு. என்.ஆர். | .. | தேனி |
| 11. | அழகிரி, திரு. ச. | .. | சிதம்பரம் |
| 12. | அழகுவேலு, திரு. ச. | .. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 13. | அன்பழகன், பேராசிரியர் க. | .. | துறைமுகம் |
| 14. | அன்பழகன், திரு. வ. | .. | செய்யார் |
| 15. | அன்பில் பொய்யாமொழி, திரு. | .. | திருச்சிராப்பள்ளி-2 |
| 16. | ஆசையன், திரு. பெ. | .. | ஆண்டிப்பட்டி |
| 17. | ஆண்டமுத்து, திரு. வெ. அ. | .. | பவானிசாகர் |
| 18. | ஆண்டி அம்பலம், திரு. எம். | .. | நத்தம் |
| 19. | ஆருண் ரஷீத், திரு. ஜே.எம். | .. | வில்லிவாக்கம் |
| 20. | ஆலடி அருணா, திரு. | .. | ஆலங்குளம் |

21. ஆல்பன், டாக்டர் வே. .. திருவட்டாறு
22. ஆவுடையப்பன், திரு. இரா. .. அம்பாசமுத்திரம்
23. ஆறுமுகம், திரு. வீரபாண்டி எஸ். .. வீரபாண்டி
24. ஆறுமுகம், திரு. டி.பி. .. திருச்செங்கோடு
25. ஆற்காடு நா. வீராசாமி, திரு. .. அண்ணாநகர்
26. ஆனந்தன், திரு. பால. .. வந்தவாசி (செ.வ.)
27. இரகுமான்கான், திரு. அ. .. இராமநாதபுரம்
28. இராசமாணிக்கம், திரு. க.வெ.வீ. .. மேலூர்
29. இராசமாணிக்கம், திரு. பி. .. ஒரத்தநாடு
30. இராசன், திரு. வி. பி. .. ராஜபாளையம் (செ.வ.)
31. இராசேந்திரன் என்கிற தீரன், திரு. ஆ. .. ஆண்டிமடம்
32. இராமசாமி, திரு. கே. ஆர். .. திருவாடனை
33. இராமசாமி, டாக்டர் வை. .. பண்ருட்டி
34. இராமச்சந்திரன், திரு. ஓ. ஆர். .. கம்பம்
35. இராமச்சந்திரன், திரு. சி. இரா. .. தொண்டாமுத்தூர்
36. இராமச்சந்திரன், திரு. மா. .. திருவோணம்
37. இராமலிங்கம், திரு. ஏ. .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.)
38. இராமலிங்கம், திரு. செ. .. திருவிடைமருதூர்
39. இராமன், டாக்டர் இ. எஸ். எஸ். .. பள்ளிப்பட்டு
40. இராமஜெயம், திரு. ந.பூ. .. மயிலாப்பூர்
41. இராஜரெட்டி, திரு. ச. .. தளி
42. இராஜேந்தர், திரு. டி. .. பூங்காநகர்



43. இளங்கோ, திரு. கோ. .. அவினாசி (செ.வ.)
44. ஈஸ்வரன், திரு. ரா. .. வாசுதேவநல்லூர் (செ.வ.)
45. உதயசூரியன், திரு. தா. .. சங்கராபுரம்
46. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். .. தஞ்சாவூர்
47. கணேசன், திரு. இ. .. எடப்பாடி
48. கணேசன், திரு. கே. சி. .. ஜெயங்கொண்டம்
49. கருணாநிதி, கலைஞர் மு. .. சேப்பாக்கம்
50. கருப்பண்ண உடையார், திரு. ந. .. பாபநாசம்
51. கருப்பசாமி, திரு. சொ. .. சங்கரநயினார்கோவில் (செ.வ.)
52. கருப்புசாமி, திரு. டி. .. உப்பிலியாபுரம் (ஆ.வா.)
53. கல்யாணம், திரு. குத்தாலம் பி. .. குத்தாலம்
54. கன்னையன், திரு. க. .. தொட்டியம்
55. காஞ்சனா கமலநாதன், டாக்டர் .. கிருஷ்ணகிரி
56. காந்தி, திரு. ஆர். .. இராணிப்பேட்டை
57. கிட்டு, திரு. சைதை கா. .. சைதாப்பேட்டை
58. கிருட்டிணன், திரு. பசும்பொன் தா... சிவகங்கை
59. கிருஷ்ணசாமி, டாக்டர் க. .. ஓட்டப்பிடாரம் (செ.வ.)
60. கிருஷ்ணன், திரு. எஸ். வி. .. நாங்குநேரி
61. கிருஷ்ணன், திரு. சீ. வெ. .. வேடசந்தூர்
62. குண்டன், திரு. டி. .. உதகமண்டலம்
63. குமாரதாஸ், டாக்டர் தே. . .. கிள்ளியூர்
64. கோதண்டம், திரு. ஏ. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
65. கோபால், திரு. பா. .. மேட்டூர்

| | | |
|---|---|---|
| 66. | கோபு, திரு. சி. .. | அணைக்கட்டு |
| 67. | கோமதி சீனிவாசன், திருமதி .. | வலங்கைமான் (செ.வ.) |
| 68. | கோவிந்தன், திரு. ப. .. | தாரமங்கலம் |
| 69. | கோவிந்தன், திரு. வி. .. | பேரணாம்பட்டு (செ.வ.) |
| 70. | சக்ரபாணி, திரு. ஆர். .. | ஒட்டன்சத்திரம் |
| 71. | சண்முகம், திரு. கோ. .. | திருப்பத்தூர் |
| 72. | சண்முகம், திரு. சி. .. | ஆலந்தூர் |
| 73. | சண்முகம், திரு. ம. .. | கிணத்துக்கடவு |
| 74. | சந்தானம், திரு. எல். .. | சோழவந்தான் |
| 75. | சந்திரசேகரன், திரு. சி. .. | சேந்தமங்கலம் (ஆ.வா.) |
| 76. | சந்திரசேகரன், திரு. துரை. .. | திருவையாறு |
| 77. | சமயநல்லூர் செல்வராசு, திரு. எஸ்... | சமயநல்லூர் (செ.வ.) |
| 78. | சம்பத், திரு. ஏ.ஜி. .. | முகையூர் |
| 79. | சரஸ்வதி, திருமதி ஆர். .. | தாராபுரம் (செ.வ.) |
| 80. | சற்குணபாண்டியன், திருமதி எஸ்.பி. .. | டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் |
| 81. | சாமிநாதன், திரு. மு.பெ. .. | வெள்ளக்கோவில் |
| 82. | சிங்காரவேலு, திரு. வி.பி. .. | வால்பாறை (செ.வ.) |
| 83. | சிவபுண்ணியம், திரு. வை. .. | மன்னார்குடி |
| 84. | சிவராமன், திரு. ஆர். .. | திருப்பத்தூர் |
| 85. | சிவராஜ், திரு. சு. .. | ரிஷிவந்தியம் |
| 86. | சிவலிங்கம், திரு. எஸ்.ஆர். .. | பனமரத்துப்பட்டி |
| 87. | சிவானந்தம், திரு. ஆர். .. | ஆரணி |



| | | |
|---|---|---|
| 88. | சிவாஜி, திரு. இ.ஏ.பி. .. | திருத்தணி |
| 89. | சின்னய்யா, திரு. வெ. .. | திருமயம் |
| 90. | சீனிவாசன், திரு. ஏ. ஆர். ஆர். .. | விருதுநகர் |
| 91. | சுகவனம், திரு. இ.ஜி. .. | பர்கூர் |
| 92. | சுடலைமுத்து, திரு. அ. .. | போடிநாயக்கனூர் |
| 93. | சுதர்சனம், திரு. டி. .. | பூந்தமல்லி |
| 94. | சுந்தரம், திரு. க. .. | பொன்னேரி (செ.வ.) |
| 95. | சுந்தரம், திரு. ந. .. | காரைக்குடி |
| 96. | சுந்தரம், திரு. பி.ஆர். .. | ராசிபுரம் |
| 97. | சுந்தர், திரு. கே. .. | உத்திரமேரூர் |
| 98. | சுப்பராயன், திரு. கே. .. | திருப்பூர் |
| 99. | சுப்பிரமணி என்கிற சி.சு.மணி, திரு. சி. .. | திருவள்ளூர் |
| 100. | சுப்பிரமணி, திரு. பி.என். .. | ஆற்காடு |
| 101. | சுப்பிரமணியன், திரு. அ.லெ. .. | திருநெல்வேலி |
| 102. | சுப்புலட்சுமி ஜெகதீசன், திருமதி .. | மொடக்குறிச்சி |
| 103. | சுரேஷ் ராஜன், திரு. என். .. | கன்னியாகுமரி |
| 104. | செங்குட்டுவன், புலவர் பூ.ம. .. | மருங்காபுரி |
| 105. | செங்கை சிவம், திரு. .. | பெரம்பூர் (செ.வ.) |
| 106. | செல்லக்குமார், டாக்டர் அ. .. | தியாகராயநகர் |
| 107. | செல்வம், திரு. ரெ. .. | குளித்தலை |
| 108. | செல்வராஜ், திரு. டி. .. | உடுமலைப்பேட்டை |
| 109. | செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன், திரு. .. | கொளத்தூர் (செ.வ.) |

110. சேகரன், திரு. ஆர். ஆர். .. ஓமலூர்
111. சேதுநாதன், திரு. ரா. .. திண்டிவனம்
112. சொக்கர், திரு. ஆர். .. சிவகாசி
113. சொக்கலிங்கம், திரு. ஜி. .. திருப்போரூர் (செ.வ.)
114. ஞானசேகரன், டாக்டர் ஆ. .. மேல்மலையனூர்
115. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்
116. டேவிட் செல்வின், திரு. எஸ். .. ஸ்ரீவைகுண்டம்
117. தங்கபாண்டியன், திரு. வே. .. அருப்புக்கோட்டை
118. தங்கமணி, திரு. கே. .. மானாமதுரை (செ.வ.)
119. தங்கவேலன், திரு. சுப. .. கடலாடி
120. தங்கவேல், திரு. அ. ல. .. சேலம்-2
121. தங்கவேல், திரு. என். .. குன்னூர் (செ.வ.)
122. தண்டபாணி, திரு. சி. டி. .. கோயம்புத்தூர் மேற்கு
123. தமிழரசன், திரு. குழந்தை. .. விருதாசலம்
124. தமிழ்க்குடிமகன், முனைவர் மு. .. இளையான்குடி
125. தமிழ்ச்செல்வன், திரு. ஆர். .. அரக்கோணம் (செ.வ.)
126. தமிழ்மணி, திரு. வீ. .. செங்கல்பட்டு
127. தளபதி, திரு. கோ. .. சேடப்பட்டி
128. தனபாலன், திரு. கே.ஆர்.ஜி. .. சேலம்-1
129. தனபால், திரு. வி. ஜி. .. குடியாத்தம்
130. தாமரைக்கனி, திரு. இரா. .. ஸ்ரீவில்லிபுத்தூர்
131. திசைவீரன், திரு. உ. .. பரமக்குடி (செ.வ.)
132. திருஞானசம்பந்தம், திரு. வி. .. பேராவூரணி
133. திருநாவுக்கரசு, திரு. எஸ். .. அறந்தாங்கி
134. திருவேங்கடம், திரு. பெ. சு. .. கலசப்பாக்கம்
135. துரை, திரு. க. .. திருவெறும்பூர்
136. துரைசாமி, திரு. பா. .. வரகூர் (செ.வ.)
137. துரைமுருகன், திரு. .. காட்பாடி
138. தெய்வநாயகம், திரு. எ. .. மதுரை மத்தி
139. தேவராஜன், டாக்டர் மு. .. பெரம்பலூர் (செ.வ.)
140. நடராசன், திரு. ஆ. .. பேளூர்
141. நடராஜன், திரு. டி. .. செஞ்சி
142. நயினா முகமது, திரு. கோ. .. கடையநல்லூர்
143. நன்னன், திரு. கொ. வி. .. செங்கம் (செ.வ.)
144. நாகரத்தினம், திரு. ச. .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
145. நாஞ்சில் கி. மனோகரன், திரு. .. திருவல்லிக்கேணி
146. நிஜாமுதீன், திரு. ஜி. .. நாகப்பட்டினம்
147. நேரு, திரு. கே. என். .. லால்குடி
148. பத்மா, டாக்டர் .. நன்னிலம் (செ.வ.)
149. பரணிகுமார், திரு. பா. .. திருச்சிராப்பள்ளி-1
150. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)
151. பழனிசாமி, திரு. ஜி. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
152. பழனிவேல் ராஜன், திரு. பி.டி.ஆர். .. மதுரை மேற்கு
153. பன்னீர்செல்வம், திரு. எம். ஆர். கே. .. குறிஞ்சிப்பாடி
154. பன்னீர்செல்வம், திரு. மு. .. சீர்காழி (செ.வ.)
155. பாண்டுரங்கன், திரு. என். .. பெரணமல்லூர்
156. பாலகிருஷ்ணன், திரு. சோ. .. முதுகுளத்தூர்

157. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.என். .. பவானி

158. பாலசுப்பிரமணியன், திரு. ப. .. பட்டுக்கோட்டை

159. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை

160. புகழேந்தி, திரு. இ. .. கடலூர்

161. புரட்சிமணி, திரு. எஸ். .. மங்களூர் (செ.வ.)

162. பூவேந்தன், திரு. த. .. பழனி (செ.வ.)

163. பெரியசாமி, திரு. இ. .. ஆத்தூர்

164. பெரியசாமி, திரு. என். .. தூத்துக்குடி

165. பெரியசாமி, திரு. என். கே. கே. .. ஈரோடு

166. பெரியசாமி, திரு. நா. .. பெருந்துறை

167. பெருமாள், திரு. வி. .. ஏற்காடு (ஆ.வா.)

168. பெர்னார்டு, திரு. இரா. .. குளச்சல்

169. பொங்கலூர் நா. பழனிச்சாமி, திரு. .. சிங்காநல்லூர்

170. பொன்முடி, திரு. எஸ். எஸ். .. பல்லடம்

171. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்

172. பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ். .. நிலக்கோட்டை (செ.வ.)

173. மகேந்திரன், திரு. ஆர். .. நாட்ராம்பள்ளி

174. மணி, டாக்டர் அ. .. உளுந்தூர்பேட்டை (செ.வ.)

175. மணி, திரு. நெல்லிக்குப்பம் அ. .. நெல்லிக்குப்பம்

176. மணி, திரு. கோ. சி. .. கும்பகோணம்

177. மணி, திரு. டி. .. விளவங்கோடு

178. மணி, திரு. ஜி. கே. .. பெண்ணாகரம்



179. மணிக்கண்ணன், திரு. ஆ. ஜெ. .. திருநாவலூர்

180. மணி நாடார், திரு. எஸ். எஸ். .. சாத்தான்குளம்

181. மணிமாறன், திரு. இரா. .. திண்டுக்கல்

182. மணிவர்மா, திரு. கே. .. தண்டராம்பட்டு

183. மதிவாணன், திரு. இரா. .. இராயபுரம்

184. மதிவாணன், திரு. செ. .. அச்சரப்பாக்கம் (செ.வ.)

185. மனோகரன், திரு. கு. .. தர்மபுரி

186. மாயவன், திரு. தி.ப. .. ஸ்ரீரங்கம்

187. மாரிஅய்யா, திரு. .. புதுக்கோட்டை

188. மாரிமுத்து, திரு. அ. .. வானூர் (செ.வ.)

189. முகம்மது இஸ்மாயில், திரு. எஸ். எஸ். .. அரவக்குறிச்சி

190. முகம்மது கோதர் மைதீன், திரு. .. பாளையங்கோட்டை

191. முத்து, திரு. வி. .. சங்கரி (செ.வ.)

192. முத்துராமலிங்கம், திரு. எம். .. திருமங்கலம்

193. முபாரக், திரு. பா.மு. .. கூடலூர்

194. முருகேசன், திரு. பொ. .. காஞ்சிபுரம்

195. முல்லைவேந்தன், திரு. வ. .. மொரப்பூர்

196. முனிரத்தினம், திரு. ஆ. மு. .. சோளிங்கர்

197. மூக்கப்பன், திரு. இரா. .. சின்னசேலம்

198. மூக்கையா, திரு. எல். .. பெரியகுளம்

199. மோகனதாசன், திரு. கோ. .. பூம்புகார்

200. மோகன் கந்தசாமி, திரு. ப. .. பொங்கலூர்

201. மோசஸ், டாக்டர் எம். .. நாகர்கோவில்

202. ரங்கநாதன், திரு. ப. .. புரசைவாக்கம்
203. ரவி அருணன், திரு. கு. .. தென்காசி
204. ரவிசங்கர், திரு. கு. .. விளாத்திகுளம்
205. ராசேந்திரன், திரு. ஏ. .. போளூர்
206. ராணி, செல்வி க. .. தலைவாசல் (செ.வ.)
207. ராமசாமி, திரு. ஏ.எம். .. ஆத்தூர்
208. ராமச்சந்திரன், திரு. செ. .. திருப்பரங்குன்றம்
209. ராஜு, திரு. எஸ். .. பொள்ளாச்சி
210. ராசேந்திரன், திரு. எஸ். கே. .. சத்தியமங்கலம்
211. ராஜ்குமார் மன்றாடியார், திரு. என். எஸ். .. காங்கேயம்
212. லட்சுமணன், திரு. வி. கே. .. கோயம்புத்தூர் (கிழக்கு)
213. வல்லரசு, திரு. பி.என். .. உசிலம்பட்டி
214. வாசுகி முருகேசன், திருமதி .. கரூர்
215. விஜயகுமார், திரு. கே. எம். .. சாத்தூர்
216. விஜயன், திரு. டி. சி. .. திருவொற்றியூர்
217. வீரப்பன், திரு. கோ. க. .. கபிலர்மலை
218. வெங்கடசாமி, திரு. பி. .. ஓசூர்
219. வெங்கடாசலம், திரு. அ. .. ஆலங்குடி
220. வெங்கடாசலம், திரு. ஜி. எல். .. பாலக்கோடு
221. வெங்கடேசன், திரு. ச. க. .. மதுராந்தகம்
222. வெங்கடேசன், திரு. பே. வே. ஸ்ரீ. .. காவேரிப்பட்டினம்
223. வெங்கிடு, திரு. ஜி. பி. .. கோபிச்செட்டிப் பாளையம்



224. வேடம்மாள், திருமதி ஏ. ஆர். .. அரூர் (செ.வ.)
225. வேணு, திரு. கே. .. கும்மிடிப்பூண்டி
226. வேதரத்தினம், திரு. எஸ். கே. .. வேதாரண்யம்
227. வேலாயுதன், திரு. சி. .. பத்மநாபபுரம்
228. வேலுசாமி, திரு. வ. .. மதுரை கிழக்கு
229. வேல்சாமி, திரு. க. .. நாமக்கல் (செ.வ.)
230. வேல்துரை, திரு. பா. .. சேரன்மகாதேவி
231. வைத்தியலிங்கம், திரு. மீ. அ. .. தாம்பரம்
232. ஜெனிபர் சந்திரன், திருமதி எஸ். .. திருச்செந்தூர்
233. ஜோதிகண்ணன், திரு. மு. ந. .. முசிறி
234. ஸ்டாலின், திரு. மு. க. .. ஆயிரம் விளக்கு
235. ஆன் டி'மான்டி, திருமதி .. நியமனம்

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. கே.வி. வெங்கடபதி, .. தலைமை வழக்கறிஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## சித்திரை 17, ஈஸ்வர - திருவள்ளுவர் ஆண்டு 2028

## 1997 ஏப்ரல் 30, புதன்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** *அவர்கள் தலைமையில் முற்பகல் 9.30 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

*"நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம்*
*மலையினும் மாணப் பெரிது."*

*உறுதியான உள்ளமும், அத்துடன் ஆர்ப்பாட்டமற்ற அடக்க உணர்வும் கொண்டவரின் உயர்வு, மலையைவிட சிறந்தது எனப் போற்றப்படும்.*

## 1. வினாக்கள் - விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** *வினா எண் 741, திரு. வி. கே. லட்சுமணன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

**741—**

**கரும்புச் சக்கையைப் பயன்படுத்த திட்டம்**

***4306—திரு. வி. கே. லட்சுமணன்:**

*மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

துணைத் தொழிலாக மின்சாரம் தயாரிக்காத கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் குவிந்து கிடக்கும் கரும்புச் சக்கையைப் பயன்படுத்த அரசிடம் ஏதேனும் திட்டம் உள்ளதா ?

[*1997 ஏப்ரல் 30*

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில் கரும்புச் சக்கையைக் கொண்டு படிப்படியாக மூன்று ஆண்டுகளில் மின்சாரம் தயாரிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ஆர். சொக்கர்.

**திரு. ஆர். சொக்கர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சர்க்கரை ஆலையைப் பொறுத்தவரையில், கரும்புச் சக்கை ஒரு கழிவுப் பொருளாக இருந்தாலும், அது பல பொருள்கள் தயாரிப்பதற்குரிய மூலப்பொருளாக இருக்கின்றது. மின்சாரம் தயாரிப்பது ஒரு பக்கம் இருந்தாலும்கூட, அந்த சக்கையைப் பயன்படுத்தி நிரந்தரமாக பல ஆண்டுகள் பயன்படுத்தக்கூடிய 'ஹார்ட் போர்டு' மரப்பலகைகள் தயாரிக்கக்கூடிய ஒரு வாய்ப்பு இருக்கின்றது. அதனால், பல ஆண்டு காலம் அந்தக் கழிவை உபயோகப்படுத்த முடியும். மேலும் இப்போது காகிதம் தயாரிப்பதற்கான மூலப்பொருளான மரம் மிகவும் அரிதான ஒரு பொருளாக உள்ளது. அதற்குத் தேவையான மூலப்பொருள்களை எல்லாம் வெளி நாட்டிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டியிருக்கிறது. ஆகவே மின்சாரம் தயாரிப்பதற்கு முன்னுரிமை கொடுக்காமல் மரப் பலகைகளையோ, காகிதமோ தயாரிப்பதற்குக் கொடுப்பதுதான், தொலைநோக்குக் கண்ணோட்டத்தில் நல்லதொரு பொருளாதாரக் கொள்கையாக இருக்கும் என்ற அடிப்படையில் அரசு அதற்கு முன்னுரிமை வழங்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி கேட்டவர் வராத காரணத்தால், திரு. ஆர். சொக்கர் அவர்கள், கேள்வி கேட்டவருடைய எண்ணத்தையே திசை திருப்புகிற அளவில் இந்தத் துணைக் கேள்வியைக் கேட்டிருக்கிறார். கேள்வி கேட்ட திரு. லட்சுமணன் அவர்கள் நிச்சயமாக இந்தக் கருத்தைக் கொண்டிருக்கமாட்டார் என்று எனக்கு நன்றாகத் தெரியும். ஏனென்றால், மின்சாரத்திற்கு அதிக முன்னுரிமை கொடுக்காமல் வேறு சில உப பொருள்களைத் தயாரிப்பதற்கு முன்னுரிமை கொடுக்கப்படுமா என்று திரு. சொக்கர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். நான் இந்தக் கேள்விக்கான துணை



*1997 ஏப்ரல் 30* ]

வினாக்களுக்கான பதிலைத் தயாரிக்க நீண்டநேரம் எடுத்துக்கொண்ட காரணத்தால் அவைகளை இங்கே சொல்லிவிடுவது நலம் என்று கருதுகிறேன்.

இதில், முதல்கட்டமாக இந்த மின்சார உற்பத்தி—1996-97-ல் முதல் கட்டமாக—சுப்பிரமணியம் சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலை ஃபேஸ் 2, நடிப்பிசைப் புலவர் கே.ஆர். இராமசாமி கூட்டுறவு சர்க்கரை ஆலை ஃபேஸ் 1, கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை ஃபேஸ் 1 ஆகியவற்றில் இந்த மின்சார உற்பத்திக்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அடுத்து, 1997-98-ல் இரண்டாவது கட்டமாக நடிப்பிசைப் புலவர் கே.ஆர். இராமசாமி கூட்டுறவு சர்க்கரை ஆலை ஃபேஸ் 2, பெரம்பலூர் சர்க்கரை ஆலை, செங்கல்வராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலை, கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை, மதுராந்தகம் சர்க்கரை ஆலை ஃபேஸ் 1, திருத்தணி சர்க்கரை ஆலை ஃபேஸ் 1, கள்ளக்குறிச்சி சர்க்கரை ஆலை ஃபேஸ் 1, ஃபேஸ் 2 என்ற முறையில் இரண்டாவது கட்டமாக இவைகள் எடுத்துக்கொள்ளப்பட இருக்கின்றன. பிறகு மூன்றாவது கட்டமாக 1998-99-ல் ஐந்து ஆலைகள் எடுத்துக் கொள்ளப்படவிருக்கின்றன. அநேகமாக நான் தயாரித்து வந்தது குறித்து துணைக் கேள்விகள் யாரும் கேட்காவிட்டாலும்கூட நானே அதற்கான பதிலை அளித்திருக்கின்றேன் என்பதைத் தலைவர் அவர்களே தங்கள் மூலமாக அவைக்கு அறிவித்துக் கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய பேரவைக் கூட்டத் தொடரின் கடைசி நாளாகும் இன்று. கேள்வியும் இனிப்பான கேள்வி. தமிழக, இந்திய அரசியல் சூழ்நிலையும் இனிப்பான செய்தியோடு இருக்கிற இன்றையதினம் நம்முடைய சபை நடந்து கொண்டிருக்கிற இந்த நேரத்திலே, நேற்றையதினம் கேள்வி ஒன்று கேட்க வாய்ப்புக் கிடைக்காமல் போய்விட்டது. திரு. ஆரூரான் சர்க்கரை ஆலை இடமாற்றம் செய்யப்படுவது பற்றித் தமிழக முதலமைச்சர் அவர்கள், மத்திய அரசினுடைய முடிவின்படி நடக்கிறோம் என்று ஏற்கெனவே சொல்லியிருக்கின்றார்கள். அவர்களைக் கேட்கிறபோது, அரவைத் திறனைக் குறைத்து கரும்பு உற்பத்தி செய்கிற பகுதியை, வடுவூர் பகுதியை இணைத்தால், அந்த ஆலை இடமாற்றம் செய்யப்பட மாட்டாது; எனவே இந்த இரண்டையும் உத்தரவாதப்படுத்துவதற்கு

[1997 ஏப்ரல் 30

உரிய முயற்சிகளை எடுத்துக் கொடுத்தால் ஆவன செய்யப்படுமென்று சொல்கிறார்களே, அதற்குரிய முயற்சிகளில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனிக் கவனம் செலுத்தி உதவுவார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-35

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக்கவனம் செலுத்த தனிக் கேள்வி போட்டிருக்க வேண்டும். இது கரும்புச் சக்கையைப் பற்றிய கேள்வி. (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்கிறபோது கட்டம் கட்டமாக இது எடுத்துக்கொள்ளப்பட இருப்பதாகச் சொன்னார்கள். அப்படி எடுக்கிறபோது எவ்வளவு மெகா வாட் மின்சாரம் இதுபோன்று கரும்புச் சக்கையிலிருந்து தயாரிக்கப்படும், அதற்காக எவ்வளவு திட்டச் செலவு ஆகும் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொத்தமாக 300 மெகா வாட் மின்சாரத்திற்கு இப்போது திட்டமிடப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. எல். சந்தானம்.

**திரு. எல். சந்தானம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு சட்டமன்றக் கூட்டத் தொடரின் கடைசி நாள் என்பதால் இது தித்திப்பாக இருக்க வேண்டுமென்று நமது அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, சக்கையைப் பற்றிய கேள்வியாக இருந்தாலும், சக்கை வருவதற்கு காரணமாக இருப்பது கரும்பு என்ற நிலையில், அந்த கரும்பை சென்ற ஆண்டு கொடுத்த விவசாயிகளுக்கு தமிழக அரசு கொடுக்கிற பங்குத் தொகை 140 ரூபாய் இன்னும் வழங்கப்படவில்லை என்கிற நிலை இருக்கிறது. என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், இரண்டு சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. அந்த இரண்டு சர்க்கரை ஆலைகளில் பதிவு செய்துள்ள இலட்சக்கணக்கான விவசாயிகள் இந்த நிலையில் இருக்கிறார்கள். எனவே அதை அரசு கருணைகூர்ந்து மிக விரைவாகக் கொடுக்க



1997 ஏப்ரல் 30]

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கே ஆணை பிறப்பிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது கரும்பைப் பற்றிய கேள்வியல்ல, சக்கையைப் பற்றிய கேள்வி. சக்கையை எவ்வளவுதான் மென்றாலும் இனிப்பு ஏற்படாது. (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இன்று இந்தக் கூட்டத்தொடரின் கடைசி நாள் என்ற காரணத்தால் துணை வினாக்களுக்கு சற்று விதிவிலக்கு அளிக்கப்படுகிறது.

வினா எண் 742, திரு. கே. சுப்பராயன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**742—**

## திருப்பூர் ஏற்றுமதி வளர்ச்சி மையம்

***5568—திரு. கே. சுப்பராயன் :**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் தொகுதி, திருப்பூர் ஒரு ஏற்றுமதி வளர்ச்சி மையம் என்று மத்திய அரசு அறிவித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதனால் திருப்பூர் நகருக்கு ஏற்பட்ட பலன்கள் என்ன ?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம். மைய அரசு திருப்பூரை ஒரு ஏற்றுமதி வளர்ச்சி மையமாக அறிவித்துள்ளது.

(ஆ) தமிழ்நாடு அரசு திருப்பூரில் ஏற்றுமதியை அதிகரிக்கவும், திருப்பூரைத் தொழில் துறையில் முன்னிலைப்படுத்தவும் அந்நகரில் செய்யப்பட வேண்டிய அடிப்படை வசதிகளைக் கண்டறிந்து செயல்படுத்த தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தை - டாசிட் - பணித்துள்ளது. டாசிட், திருப்பூர் நகரில் நீர்

[1997 ஏப்ரல் 30

வழங்கல், கழிவுநீர் சுத்திகரிப்புத் திட்டங்கள், சாலை அபிவிருத்தி, தொலைத் தொடர்பு வசதிகளின் விரிவாக்கம் ஆகியவை ஒருங்கமைந்த மேம்பாட்டுத் திட்டத்தை 1,313.20 கோடி ரூபாய் செலவில் அமலாக்க உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு திருப்பூர் நகரம் ஒரு ஏற்றுமதி மையம் என்று அறிவித்திருப்பதன் மூலம் அது மத்திய அரசால் தத்து எடுத்துக்கொள்ளப்படுவதற்குரிய அவசிய தேவை இருக்கிறது என்பது ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. எனவே, அதனுடைய அவசிய தேவைகளுக்காக மத்திய அரசு தனித்து தன் பங்காக எவ்வளவு ரூபாய் ஒதுக்குகிறது என்பதை அறிய விரும்புகிறேன். தற்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த 1,313 கோடி ரூபாய் திருப்பூர் மேம்பாட்டு திட்டத்தில் நிதி மூலதன சேகரிப்பு நடவடிக்கைகள் பற்றி சிலபல அரசியல் கட்சிகள் சில சந்தேகங்களை முன்வைத்து ஒரு வார காலமாக சில பிரச்சினைகளை கிளப்பி வருகிறார்கள். அதாவது உலக வங்கியிலிருந்தும், அதைப்போல அமெரிக்க குடிமக்களிடமிருந்தும் பெறப்படுகிற கடன் பல்வேறு நிபந்தனைகளைக் கொண்டதாக இருப்பதாகவும், அதனால் இந்தத் திட்டத்திற்கு பல்வேறு பாதிப்புகள் ஏற்படும் என்பதைப்போல பல பிரச்சினைகளை கிளப்பி வருவதை மாநில அரசு அறியுமா? அப்படியானால் அவர்களுடைய சந்தேகங்களை விளக்குவதற்காக துறை சார்ந்த அதிகாரிகளை அனுப்பி, எல்லா தரப்பினரையும் அழைத்து அமர வைத்து, பிரச்சினையைத் தெளிவாக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி ;** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐயப்பாடுகளை அகற்றுவதற்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் கருத்தின்படி துறை சார்ந்த அதிகாரிகள் நிச்சயமாகப் பயன்படுத்தப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் திட்டத்திற்கு, 1,313 கோடி ரூபாய் திட்டத்திற்கு, அதைப் பிரித்துப் பார்க்கும்போது, நீர் வழங்குவதற்காக 253 கோடி ரூபாய், சுத்திகரிப்புக்காக 303.60 கோடி ரூபாய், சாலை வசதிக்காக 32.10 கோடி ரூபாய், தொலை தொடர்புக்காக 64.50 கோடி ரூபாய், பகுதி மேம்பாட்டிற்காக 660 கோடி ரூபாய் என்று ஆக மொத்தம் 1313.20 கோடி ரூபாய் இதற்காகச் செலவிடப்படும் என்று



1997 ஏப்ரல் 30 ]

திட்டமிடப்பட்டிருக்கிறது. அவர்கள் இங்கே கேட்டுக்கொண்டதற்கிணங்க, அமெரிக்கச் சந்தையிலே 25 மில்லியன் டாலர்கள் இந்தத் திட்டத்திற்காக நிதி திரட்ட USAID என்ற நிறுவனம் விரிவான பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகு ஒப்புக்கொண்டிருக்கிறது. கிட்டத்தட்ட 25 மில்லியன் டாலர் என்றால், 80 கோடி ரூபாய்க்கு ஒத்துக்கொள்ளப்பட்டு இருக்கிறது. இது 30 ஆண்டுகளுக்குப் பிறகு திருப்பிச் செலுத்துவதாகவும், மிகக் குறைந்த வட்டி விகிதத்தில் எடுப்பதாகவும் இருக்கும். ஐ.எல்.எப்.எஸ். மூலமாக உலக வங்கியிடமிருந்து சுமார் 125 கோடி ரூபாய் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் திட்டத்தினுடைய கட்டுமானப் பணிகள் எல்லாம் 1997-98-ஆம் ஆண்டில் தொடங்கப்பட உள்ளன.

முற்பகல் 9-40

**திரு. கே. சுப்பராயன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1997-98-ல் தொடங்கப்படுவதற்கு உரிய டெண்டர்கள் விடப்பட்டு விட்டதா, டெண்டர்கள் விடப்பட்டு வேலைகள் துவங்கினால் எந்தக் காலவரம்பிற்குள் வேலைகள் முடியும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தத் திட்டமே, பெருகி வருகிற ஏற்றுமதி வாய்ப்புகளால் நாளும் வளர்ந்து வருகிற, பனியன் நகரம் என்று அழைக்கப்படுகின்ற திருப்பூரின் எதிர்காலத் தேவைகளைக் கணக்கிட்டு, அதற்கேற்ப அடிப்படை வசதிகளை உருவாக்கிட வேண்டுமென்று 1989-90-ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அப்போது தொடங்கப்பட்டது. அதற்குப் பிறகு, அதற்கான அடிக்கல் நாட்டுவிழாவும் நடைபெற்று, கழக ஆட்சி கலைக்கப்பட்டு விட்ட காரணத்தால், பிறகு முதலிபாளையம் என்ற இடத்திலே ஏற்றுமதிக்கான பனியன்களைத் தயாரிக்கும் தொழில் பேட்டை உருவானது என்பதும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மிக நன்றாகத் தெரியும். இந்த முயற்சியினுடைய தொடர்ச்சியாகத்தான் திருப்பூர் பகுதி மேம்பாட்டு நிறுவனம் உருவாக்கப்பட்டு, நான் குறிப்பிட்ட இந்தத் தொகையின் மூலம் பல வசதிகளும் செய்து தர திட்டமிடப்பட்டிருக்கிறது. இதற்கு 1997-98-ஆம் ஆண்டிலே இந்தத் திட்டத்தினுடைய கட்டுமானப் பணிகள் தொடங்கப்படவுள்ளன என்று குறிப்பிட்டிருக்கிறேன். அதற்கான டெண்டர்கள் விடப்பட்டனவா என்ற விவரங்கள் என்னிடத்தில் இல்லை. இருந்தாலும் 1997-98-ல் தொடங்கப்படவுள்ளது என்று

குறிப்பிடுகிற காரணத்தால் நிச்சயமாகத் தொடங்கப்படும். விரைவிலே பணிகள் முடியும் என்ற உறுதியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. மோகன் கந்தசாமி.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பனியன் நகரம் என்று நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொன்னதைக் கேட்டு, எனது உள்ளமே புளகாங்கிதம் அடைந்தது. அந்த நகரத்திற்கு ஒரு சிறப்பான சலுகையை அவர்கள் தந்திருக்கிறார்கள். அதைப்போல, இன்றைக்கு வெளிநாட்டிலே இருந்து வாங்குவோர் ஏராளமாக வந்து கொண்டிருக்கிற இந்த நேரத்திலே திருப்பூர் நகரத்தினுடைய இந்தத் திட்டத்தை மிக விரைவில் செயல்படுத்தினால்தான் சரியாக இருக்கும். காரணம், அவர்கள் தங்குவதற்கோ அல்லது போக்குவரத்திற்கோ சாலை வசதிகள் இல்லை. இப்போது மிகப் பெரிய ஒரு சாலை போடுவதற்காக, திட்டத்தைப் பார்த்து சென்று இருக்கிறார்கள். ஆனால் என்னுடைய பயம் எல்லாம், காலதாமதம் ஆகிவிடுமோ என்பதுதான், அந்தக் கருத்திற்கிணங்க போர்க்கால அடிப்படையிலே எல்லா அதிகாரிகளையும் அங்கே அனுப்பி வைத்து, ஒருமித்த எல்லா நடவடிக்கையும் அங்கே செய்து தருவதற்கு நம்முடைய அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுப்பராயன் அவர்கள் கேட்ட கேள்விக்கு, மிக விரைவில் செயல்படும் என்று சொன்னேன். திரு. மோகன் கந்தசாமி கேட்ட கேள்விக்கு, மிகமிக விரைவில் செயல்படும் என்று கூறிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 743, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**743—**

## சிறப்பு விரிவுரையாளர்கள் நியமனம்

***7315—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—





அரசு கலைக் கல்லூரிகளில் ஏற்படும் காலி பணியிடங்களுக்கு சிறப்பு விரிவுரையாளர்களை வேலைவாய்ப்பு அலுவலகம் மூலமாக நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1995-1996 ஆம் ஆண்டுகளில், அரசுக் கலைக் கல்லூரிகளில் காலியாக இருந்த விரிவுரையாளர் பணியிடங்கள், கௌரவ ஆசிரியர்களைக் கொண்டு நிரப்பப்பட்டு வந்தன. நிரந்தரப் பணிக்கு ஏதுவாகும் உரிமை இல்லாததாலும், விரும்பி வருகின்றவர்களைக் கொண்டு அந்தந்தக் கல்லூரிக்கென தற்காலிகமாக நியமனம் செய்யப்படுவதாலும் வேலைவாய்ப்பகம் மூலம் இந்தப் பணிகள் நிரப்பப்படுவதில்லை. வரும் கல்வியாண்டில் ஆசிரியர் தேர்வு வாரியத்தால் நியமனம் செய்யப்பட இருக்கும் சுமார் 450 ஆசிரியர்களைக் கொண்டு அந்தக் காலிப் பணியிடங்கள் நிரப்பப்படும்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசுக் கலைக் கல்லூரிகளிலே பணியாற்ற வாய்ப்பு கிடைத்துள்ள இந்தக் கௌரவ விரிவுரையாளர்கள் என்று அழைக்கப்படுகின்ற Guest Lecturers களுக்கு ஒரு மணி நேரத்திற்கு 50 ரூபாய் என்று இருந்த அந்த ஊதியத்தை 80 ரூபாயாக, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும், கல்வி அமைச்சர் அவர்களும் உயர்த்தி அளித்திருக்கிறார்கள். அதற்கு நான் முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்திலே இந்த கௌரவ ஆசிரியர்கள் நியமனம் செய்யக்கூடிய கல்லூரி முதல்வர்களுக்கு அந்த அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. வேலை வாய்ப்பு அலுவலகத்தின் மூலமாக எடுத்தால், அதிலே பதிவு செய்து இருப்பவர்களுக்கு ஒரு வாய்ப்பு கிடைக்கும். அதேநேரத்தில் இன்னொரு துணைக் கேள்வியும் நான் கேட்க விரும்புகிறேன். கௌரவ ஆசிரியர்களாக பணி செய்யக்கூடியவர்களுக்கு, தமிழ்நாடு ஆசிரியர் தேர்வு ஆணையத்தின் மூலம் கல்லூரி ஆசிரியர்கள் தேர்வு செய்யப்படுகிறபோது, அவர்களுக்கு ஏதேனும் முன்னுரிமை வழங்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-45

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலைவாய்ப்பு அலுவலகம் மூலமாக பல

[1997 ஏப்ரல் 30

பேர்களுடைய பட்டியலை வாங்கி தெரிவு செய்யக்கூடிய முறையில் அந்தப் பாட அமைப்புகள் அமைந்திருக்கவில்லை. ஏதேனும் ஒரு குறிப்பிட்ட பாடத்திற்குக் கேட்கப்படுமானால், 50, 60 பேர்களுடைய பட்டியலை வாங்கி, அதிலிருந்து ஒருவரை எடுக்கலாம். இது நிரந்தரமான வேலையாக இல்லாமலும், குறைந்த ஊதியமாக இருக்கிற காரணத்தாலும், பல பேர்கள் இதை விரும்பவும் மாட்டார்கள். எனவே, விரும்பி வருகிறவர்களைத் தற்காலிகமாக நியமிக்கிற ஒரு முறையாக இது அமைந்துவிட்ட காரணத்தால், அந்தப்பணிக்கு வேலைவாய்ப்பு அலுவலகத்திலேயிருந்து பட்டியல் கேட்கிற முறை இதுவரையில் மேற்கொள்ளப்படவில்லை. மேலும் தொடர்ந்து அந்த முறை நீடிக்கும் என்ற நிலையும் இல்லை. இனி இப்படிப் பணியாற்றியவர்களுக்கு ஆசிரியர் தேர்வு வாரியம், அவர்களைத் தெரிவு செய்யக்கூடிய வாய்ப்பு ஏற்படுகிறபோது, அதாவது அவர்களுடைய பெயர் வேலைவாய்ப்பகம் மூலமாக ஆசிரியர் தேர்வு வாரியத்திற்குக் கிடைக்கிற பட்டியலிலே இருக்குமானால், இவர்கள் பணியாற்றிய காலத்திற்கு ஒரு தகுதி எண் தரப்படுவதற்கு ஆணையிடப்பட்டிருக்கிறது. இரண்டு ஆண்டுக்காலம் இடைவிட்டு இடைவிட்டு பணியாற்றியிருந்தாலும் ஒரு குறிப்பிட்ட எண் பணி மதிப்புக்காக அவர்களுக்கு வழங்கப்படும். அது அவர்களுடைய உரிமையைச் சற்று உயர்த்தும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 744, திரு. ஆர். தமிழ்ச் செல்வன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**744—**

**நவீன அறுவை சிகிச்சை அரங்கம் அமைத்தல்**

***3721—திரு. ஆர். தமிழ்ச்செல்வன் :**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரக்கோணம் அரசு மருத்துவமனைக்கு நவீன அறுவை சிகிச்சை அரங்கம் அமைக்க அரசு முன்வருமா?



1997 ஏப்ரல் 30 ]

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. ஆர். தமிழ்ச்செல்வன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரக்கோணம் அரசு பொது மருத்துவமனைக்கு 'அல்ட்ரா சோனோகிராம்', 'சி.டி. டஸ்கேன்', ரத்த வங்கி, குளிர்பதன வசதியுடன் கூடிய பிணவறை ஆகியவற்றை வழங்கிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறிக் கொள்கிறேன். அதேவேளையில் அரக்கோணம் மருத்துவமனையில், தினசரி 1,000-லிருந்து 1,500 வரை புறநோயாளிகள் வருகிறார்கள். 50 முதல் 60 வரை உள்நோயாளிகளும் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்கள். அங்கே பெண்களுக்கான குடும்பக்கட்டுப்பாடு அறுவை சிகிச்சை மட்டுமே செய்யப்படுகிறது. அதிலும் ஆறே ஆறு படுக்கைகளைக் கொண்ட வசதிதான் இருக்கிறது. அதுவும் பழைய கட்டடத்தில் இயங்கி வருகிறது. 30 ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்ட ஒரு பழைய கட்டிடத்தில்தான் இயங்கி வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. ஆர். தமிழ்ச்செல்வன் :** அங்கே உள்ளவர்கள் ஹைட்ரோசல், இரணியா, குடற்புண், பிஸ்டுலா போன்ற அறுவை சிகிச்சைகளை சென்னைக்குச் சென்றுதான் செய்ய வேண்டிய ஒரு நிலை இருப்பதால் அரக்கோணம் அரசு மருத்துவமனைக்கு நவீன அறுவைச் சிகிச்சை அரங்கம் கட்டித் தரப்படுமா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதைப் போல, அங்கே ஒரு நல்ல அறுவை சிகிச்சை அரங்கம் இப்போது இயங்கி வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவது பழைய அறுவை சிகிச்சை அரங்கத்தை. அதைப் பழுது பார்க்கவேண்டும் என்று ஏற்கெனவே பொதுப்பணித் துறைக்கு வேண்டுகோள் விடப்பட்டு அந்தப் பணியும் இப்போது நடைபெற்று வருகிறது. எனவே, அரக்கோணத்திற்கு இரண்டு அறுவை சிகிச்சை அரங்கங்கள் மிக நல்லமுறையில் அமைத்துத் தரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அங்கே சராசரி வெளிநோயாளிகளாக

வருகிறவர்களுடைய எண்ணிக்கை 1813. உள்நோயாளிகள் தினந்தோறும் 120 பேர்கள் வருகிறார்கள். போதுமான எல்லாவிதமான பிரிவுகளும் அங்கே மிகச் சிறப்பாக செயற்பட்டுக் கொண்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 745, திரு. டி. மணி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**745—**

### ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு குடிநீர் வழங்குதல்

***6549—திரு. டி. மணி :**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இடைக்கோடு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இடைக்கோடு ஆரம்ப சுகாதார நிலையத்தில் மின்சார மோட்டாருடன் கூடிய குடிநீர் வசதி ஏற்கெனவே செய்யப்பட்டது. தற்போது மின்சார மோட்டார் பழுதுபட்டுள்ளதால், குடிநீர் வசதி பாதிக்கப்பட்டுள்ளது. இம்மின்சார மோட்டாரைச் சரி செய்து பொருத்த, பொதுப் பணித் துறைச் செயற்பொறியாளர் மூலமாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இம்மின்சார மோட்டாரைப் பழுதுபார்க்கும் பணிகள் முடிக்கப்பெற்றவுடன், இடைக்கோடு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி கிடைக்கும்.

*முற்பகல் 9-50*

**திரு. டி. மணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடர் தொடங்குமுன், ஒரு வாரத்திற்கு முன்னால் நான் அந்த மருத்துவமனைக்குச் சென்று பார்க்கின்றபோது, பாதுகாக்கப்பட்ட குடிநீரே இல்லாத ஒரு சூழ்நிலை அங்கே இருந்தது. இப்போது மாதம் இரண்டைத் தாண்டிவிட்டது.

என்னுடைய கேள்வி அதற்கு முன்னாலே போடப்பட்டது. இந்த நேரத்திலாகிலும் பாதுகாக்கப்பட்ட குடிநீரை வழங்கவேண்டும். ஏற்கெனவே கோடைக்காலம் ஆரம்பமாகிவிட்டது. அதை வழங்குவதிலே





இருக்கின்ற காலதாமதத்திற்குக் காரணம், அந்த மின் மோட்டார் பழுதடைந்துள்ளது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அதை விரைவிலே சீராக்கவேண்டும். ஒரு மருத்துவமனையில் குடிப்பதற்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் இல்லை என்று சொன்னால், எப்படிப்பட்ட நிலை இருக்கும் என்பதை அறிந்து, மிக விரைவாக அங்கு குடிநீர் கிடைப்பதற்கான வழிவகைகளை மாண்புமிகு அமைச்சரவர்கள் செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இந்தக் கேள்வியைக் கேட்டபோதே, தமிழ்நாட்டிலே ஆரம்ப சுகாதார நிலையங்களில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் கொடுப்பதிலே இருக்கக்கூடிய பிரச்சினைகள் அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே தெரிவித்து, தனியாக அதற்கென்று ரூ. 5 கோடி நிதியையும் பெற்று, கன்னியாகுமரி மாவட்டத்திற்கு மட்டும் அங்கேயுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் இருக்கக்கூடிய குறைபாடுகளைப் போக்குவதற்கு ரூ.13 லட்சம் பணத்தையும் ஒதுக்கிவிட்டோம். ஆனால் அங்கே இருக்கக்கூடிய பொதுப் பணித் துறை அந்த மின் மோட்டாரைப் பழுதுபார்ப்பதிலே கொஞ்சம் காலதாமதம் ஏற்படுத்திவிட்டது. இருந்தாலும்கூட, உடனடியாக இன்னும் ஒரு வார காலத்திற்குள்ளாக அந்த மின் மோட்டாரைச் சரிசெய்து, அங்கே நல்ல பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி செய்து தருவதற்கு இந்த இலாக்கா உடனடி நடவடிக்கை மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 746, திரு. மீ.அ. வைதியலிங்கம், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**746—**

### புறநகர்ப் பகுதிகளுக்கு கிருஷ்ணா நதிநீர் வழங்குதல்

***2079—திரு. மீ. அ. வைத்தியலிங்கம் :**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையை ஒட்டியுள்ள புறநகர்ப் பகுதிகளுக்கு கிருஷ்ணா நதிநீர் வழங்கப்பட உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எந்தெந்தக் கிராமங்களுக்கு வழங்கப்பட உள்ளது?

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) கிருஷ்ணா குடிநீர்த் திட்டத்தின்கீழ், முதல் கட்டமாக, சென்னைப் பெருநகரின் அருகாமையிலுள்ள 20 உள்ளாட்சி அமைப்புகளுக்கும் கிருஷ்ணா நதி நீரை வழங்க சென்னைக் குடிநீர் வாரியத்திற்கு அரசு ஏற்கெனவே அனுமதி வழங்கியுள்ளது.

(ஆ) கிருஷ்ணா நதி நீர் வழங்கப்படவுள்ள 20 உள்ளாட்சி அமைப்புகளில் கொட்டிவாக்கம், ராமாபுரம், நெற்குன்றம் மற்றும் அயனம்பாக்கம் ஆகிய நான்கு கிராமங்களும் அடங்கும்.

**திரு. மீ.அ. வைத்தியலிங்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில் தாம்பரம் தொகுதியிலுள்ள கொட்டிவாக்கம் அடங்கியிருப்பதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, உள்ளகரம், புழுதிவாக்கம் பேரூராட்சிப் பகுதியில், அதற்குப் பக்கத்திலே, வளர்ந்து வருகின்ற மிகப் பெரிய நகரப் பகுதியாக மடிப்பாக்கம் இருக்கிறது. அந்த ஒரு ஊராட்சிக்காவது கிருஷ்ணா நதி நீர்த் திட்டத்திலே சேர்த்துக் கொண்டு குடிநீர் வழங்க, மாண்புமிகு அமைச்சரவர்கள் ஏற்பாடு செய்வாரா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசாங்கத்தால் 1992 டிசம்பரில் ஒரு ஆலோசனை வழங்கப்பட்டு, அதன் அடிப்படையில் திட்டங்கள் ஏற்றுக்கொள்ளப்படாமல் இருந்து, ரொம்பவும் காலதாமதமாகி, அதற்குப் பிறகு நாம்தான் அதற்கு ஒரு முழு வடிவம் தந்திருக்கிறோம். அதன் அடிப்படையில், ஆலந்தூர், அம்பத்தூர், திருவொற்றியூர், மாதவரம், கத்திவாக்கம், ஆவடி, நந்தம்பாக்கம், வளசரவாக்கம், மதுரவாயல், போரூர், புழுதிவாக்கம், பெருங்குடி, பள்ளிக்கரணை, மணலி, சின்னசேக்காடு, கொட்டிவாக்கம், ராமாபுரம், நெற்குன்றம், அயனம்பாக்கம், பரங்கிமலை, ஆகிய பகுதிகள் மட்டும்தான் தற்போது ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**திரு. மீ. அ. வைத்தியலிங்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்ட மடிப்பாக்கம் பகுதி என்பது, அமைச்சரவர்கள் குறிப்பிட்ட பகுதிகளில் புழுதிவாக்கத்திற்குப் பக்கத்திலே இருக்கின்ற மிகப் பெரிய வளர்ந்து வருகின்ற கிராமம் என்ற காரணத்தினால் அதை மட்டும் சேர்த்துக்கொள்ள மாண்புமிகு அமைச்சரவர்கள் மறுபரிசீலனை செய்வாரா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தயாரிக்கப்படுகிற திட்டம் 400 மில்லியன் லிட்டர் குடிநீரைச் சுத்திகரிக்கும் வகையில் தயாரிக்கப்பட்டு வருகிறது. இதில் உறுப்பினர் குறிப்பிட்ட அந்தக் கிராமத்தை இணைத்து, தண்ணீர் கொடுத்தால் நிச்சயமாகக் கடைசிவரையில் தண்ணீர் போய்ச் சேரும் என்ற நிலை ஏற்படுமானால் நிச்சயம் அந்தக் கிராமமும் சேர்க்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 747, திரு. கு. ரவி அருணன், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**747—**

### தென்காசியில் புதிய பேருந்து நிலையம் அமைத்தல்

***6821—திரு. கு. ரவி அருணன் :**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், தென்காசியில் புதிய பேருந்து நிலையம் அமைக்கும் பணி முற்றுப்பெறாமல் இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது பணி நிறைவு பெறும்?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : தென்காசி நகராட்சியில் புதிய பேருந்து நிலையம் கட்டுவது சம்பந்தமான முதல் கட்டப் பணி முடிந்து, இரண்டாம் கட்டப் பணியில் ஐந்து பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும்

[1997 ஏப்ரல் 30

நிலுவையில் உள்ள பணிகளை முடிக்க ரூ. 35 லட்சம் தொகையை விடுவிக்க நகர ஊரமைப்பு இயக்குநரிடம் கோரப்பட்டுள்ளது. நிதி கிடைக்கப்பெற்றதும் எஞ்சிய பணிகள் விரைவாக முடிக்கப்படும்.

**திரு. கு. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே பேருந்து நிலையம் அமைக்கும் பணி துவக்கப்பட்டு 5 ஆண்டுகள் ஆகின்றன. நிதி ஒதுக்கீடு கிடைக்கப் பெறாததால், ஓராண்டுகாலமாக அங்கே எந்தவிதமான பணியும் நடைபெறாமல் இருக்கிறது. ஆகவே, விரைவாக நிதி ஒதுக்கீடு செய்து அந்தப் பேருந்து நிலையம் எப்போது பயனுக்குக் கொண்டுவரப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஐந்து ஆண்டுகாலத்தை மறப்பதே நல்லது. இப்போதுதான் அந்தப் பணியே துவங்குகிற நிலை போல் தெரியும். ஆனால் ஏற்கெனவே வாக்குறுதி அளிக்கப்பட்டு, நிறுத்தப்பட்டுவிட்டது. பிறகு நாம் இப்போது துவங்கி இருக்கிறோம். மீண்டும்கூட, ரூ. 41.72 லட்சம் அளவிற்கு அது செயல்பட்டு, பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. அதன் அடிப்படையில் ஏறத்தாழ ரூ. 35 லட்சத்தை விடுவிக்க நாம் தற்போது நடவடிக்கைகள் மேற்கொண்டிருக்கிறோம். விரைவாக அந்த இயக்குநருக்குத் தகவல் தெரிவித்து, முடிவுற்று விட்டால், அந்தப் பணிகள் ஓரளவிற்கு முடிந்துவிடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 748, திரு. செங்கை சிவம், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**748—**

## நியாய விலைக் கடைகள் அமைத்தல்

***3794—திரு. செங்கை சிவம்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1997 ஏப்ரல் 30]

சமூக விரோதிகளின் குறுக்கீட்டைத் தடுக்க சென்னை மாநகரில் நியாய விலைக் கடைகளை, பொதுமக்கள் எளிதில் அறிந்துகொள்ளும் வண்ணம் முக்கியத் தெருக்களில் மாற்றி அமைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?

முற்பகல் 9-55

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சமூக விரோதிகளின் குறுக்கீட்டைத் தடுக்க, சென்னை மாநகரில் நியாய விலைக் கடைகளை, பொதுமக்கள் எளிதில் அறிந்து கொள்ளும் பொருட்டு முக்கியத் தெருக்களில் மாற்றியமைக்கவும், அதே சமயம் புதியதாக அமைக்கப்படவுள்ள கடைகளுக்கு சமூக விரோதிகளால் குறுக்கீடு ஏற்படாதவண்ணம் இடம் தெரிந்தெடுக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், சமூக விரோதிகளின் குறுக்கீட்டை ஒடுக்குவதற்காக, அருகிலுள்ள காவல் நிலையங்களுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரேஷன் கடைகளில் ஏற்படுகின்ற குளறுபடிகளுக்கு தக்க நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் கூறியதற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில், சென்னை மாநகராட்சி, பால் டிப்போக்களைக் கட்டிக்கொள்வதற்கு இலவசமாக நிலங்களை அளித்துக் கொண்டிருப்பதைப் போல, மிக முக்கியமான இடங்களில், பொதுமக்கள் அறிந்து கொள்கிற இடங்களில் ரேஷன் கடைகளைக் கட்டுவதற்கு சென்னை மாநகராட்சியிடம் இலவசமாக இடங்களைப் பெற்று, அந்த இடங்களிலே கட்டிடங்கள் கட்டப்படுமா? அதேபோல், அந்தக் கட்டிடங்களில் பொதுமக்கள் புகார் சொல்வதற்கு, அனைத்து அதிகாரிகளினுடைய ஃபோன் நம்பர்களை எல்லாம் குறிக்க வேண்டும். மேலும் மண்ணெண்ணெய் டிப்போக்கள் சென்னையிலே ஒரு சில இடங்களில் அமைந்திருக்கின்றன. மண்ணெண்ணையாலேதான் ரேஷன் கடைகளிலே பல பிரச்சினைகள் எழும்புகின்றன. பணப்புழக்கம்கூட அதிகமாக இருக்கின்றது. ஆகவே, வட்டத்திற்கு இரண்டு மண்ணெண்ணெய் பங்குகள் வீதம் அமைக்க....

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வியாகக் கேளுங்கள்.

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட்டத்திற்கு இரண்டு மண்ணெண்ணெய் பங்க்குகளாவது அமைக்க அமைச்சர் முன்வருவாரா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட்டத்திற்கு ஒரு 'பங்க்கு' என்ற அளவிலே அமைக்க வேண்டுமென்று குறியீடு வைத்து முதல்கட்டமாக வணக்கத்திற்குரிய மேயர் அவர்களிடம், நமது கூட்டுறவுத் துறைக்கு புதிய பங்க்குகள் அமைப்பதற்காக இடங்களைத் தேர்வு செய்து அந்த இடங்களைக் கேட்டோம். மேயர் அவர்கள் உடனடியாக 25 இடங்களை இன்றைக்கு எங்களுக்கு அளித்திருக்கிறார்கள். அவற்றில் 10 இடங்களிலே பங்க்குகள் அமைப்பதற்கான முதல்கட்டப் பணிகள் தொடங்கியிருக்கின்றன. மேலும், எங்களுக்குத் தேவையான இடங்களைக் கேட்டு, மாநகராட்சியிடம் நாங்கள் மனுச் செய்து இருக்கிறோம். மண்ணெண்ணையைப் பொறுத்த அளவிலே அவர்களும் பரிசீலனை செய்து அந்த இடங்களைத் தருவதாக உறுதியளித்திருக்கிறார்கள். அதிலே, அந்தக் கடைகளைக் கட்டுவதற்குரிய ஏற்பாடுகளும் நடைபெற்று வருகின்றன. புகார் சொல்வதற்கு தொலைபேசி எண்களையெல்லாம் குறிக்க வேண்டும் என்று சொன்னார். கடந்த 10 நாட்களுக்கு முன்பாகவே, ஒரு கடையிலே ஏதாவது ஒரு கோளாறு நடைபெறுகிறது அல்லது திருட்டு நடைபெறுகிறது அல்லது அங்கிருக்கிற பணியாளர்கள் சரியாகச் செயல்படுவதில்லை என்றால், உடனடியாகத் தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி எண்களை எல்லாம் பத்திரிகையிலே விளம்பரம் கொடுத்திருக்கிறோம். தொடர்ந்து கடைகளில் எல்லாம் அந்த எண்களை எழுதி வைக்கக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்தித் தருவோம் என்ற உறுதியை அளித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 749, திரு. கொ.வி. நன்னன், மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர்.





**749—**

**பால் பண்ணை மற்றும் பால் குளிரூட்டும் நிலையம் அமைத்தல்**

***3198—திரு. கொ. வி. நன்னன் :**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் பகுதியில், பால் பண்ணை மற்றும் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால் வளத் துறை அமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): செங்கம் பகுதியில் பால் பண்ணை அல்லது பால் குளிரூட்டும் நிலையம் ஒன்று அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை.

**திரு. கொ.வி. நன்னன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கம் தொகுதியில் ஒரு நாளைக்கு ஏறத்தாழ 24,000 லிட்டர் பால் உற்பத்தியாகிறது. எனவே, அந்தப் பகுதியில் ஒரு பால் பண்ணை அல்லது பால் குளிரூட்டும் நிலையம் அமைத்துத்தர அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கம் பகுதியில் உற்பத்தியாகும் பால், 34 கிலோமீட்டர் தொலைவில் உள்ள திருவண்ணாமலையிலுள்ள பால் குளிரூட்டும் நிலையத்தில் பதப்படுத்தப்பட்டு வருகிறது. திருவண்ணாமலையில் பால் குளிரூட்டும் திறன் நாள் ஒன்றுக்கு 1 இலட்சம் லிட்டராக இருப்பதால். செங்கம் பகுதியில் புதியதாக பால் குளிரூட்டும் நிலையம் அல்லது பால் பண்ணை அமைக்கும் சாத்தியக்கூறு இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 750, திரு. ஆர். மகேந்திரன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

[1997 ஏப்ரல் 30

**750—**

**பிற்படுத்தப்பட்டோர் மாணவியர் விடுதி கட்டுதல்**

***4301—திரு. ஆர். மகேந்திரன் :**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதி, நாட்ராம்பள்ளியில் பிற்படுத்தப்பட்டோர் மாணவியர் விடுதி கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): நாட்ராம்பள்ளி தொகுதி, நாட்ராம்பள்ளியில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதிகள் இயங்காததால் அங்கு விடுதி கட்டும் வினா எழவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 751, திரு. எம். ஆண்டி அம்பலம், மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்.

**751—**

**திருமலைக்கேணியில் சரணாலயம் ஏற்படுத்துதல்**

***4720—திரு. எம். ஆண்டி அம்பலம் :**

மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நத்தம் தொகுதி, திருமலைக்கேணியில் மான்கள், மயில்கள் சரணாலயம் ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ஆரம்பிக்கப்படும்?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி, வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



1997 ஏப்ரல் 30]

(அ) மற்றும் (ஆ): நத்தம் தொகுதி திருமலைக்கேணியில், வருவாய்ப் புறம்போக்கு நிலப்பகுதிகளில் இயற்கையில் சுமார் 250 மயில்கள் உள்ளன. மான்கள் எதுவும் இல்லை. வன உயிரினச் சரணாலயம் எதுவும் அமைக்கக்கூடிய அளவில் இடவசதி அங்கு இல்லாத காரணத்தால், அப்பகுதியில் சரணாலயம் அமைக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை.

முற்பகல் 10-00

**திரு. எம். ஆண்டி அம்பலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமலைக்கேணியில் அமைச்சர் அவர்கள் இடம் இல்லை என்று சொல்கின்றார்கள். வனத் துறையிலே ஆயிரக்கணக்கான ஏக்கர் இடம் அதைச் சுற்றி இருக்கிறது. நீர் வளமும் இருக்கிறது. ஏற்கெனவே திண்டுக்கல்லுக்கு அருகிலே உள்ள அந்த திருமலைக்கேணியை திருபானந்த வாரியார் அவர்கள் கூட கீழ் ப்ழனி என்று சொல்லியிருக்கின்றார்கள். அந்த அடிப்படையிலே அமைச்சர் அவர்கள் அருள்கூர்ந்து மீண்டும் பரிசீலனை செய்து அங்கே மான்கள், மயில்கள் சரணாலயம் அமைப்பதற்கு முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சரை அழைத்துக் கொண்டு போய் மான், மயில் எல்லாம் காண்பியுங்கள். (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மான்கள் எதுவும் அப்பகுதியில் இல்லை. வெறும் மயில்களை மட்டும் வைத்துக்கொண்டு சரணாலயம் அமைக்க முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 752, திரு. என்.ஆர். அழகராஜா, மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்.

**752—**

**உயிரியல் பூங்கா அமைத்தல்**

***6354—திரு. என்.ஆர். அழகராஜா :**

மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1997 ஏப்ரல் 30

(அ) தேனி-அல்லிநகரம் நகராட்சிப் பகுதியில், வனத் துறைக்குச் சொந்தமாக உள்ள நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலத்தில் உயிரியல் பூங்கா அமைக்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி, வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): வைகை வீரன் அழகுமுத்து மாவட்டம், தேனி-அல்லி நகரப் பகுதியில் உள்ள வனத் துறைக்குச் சொந்தமான பகுதியில் இயற்கை மரங்கள் நிறைந்துள்ள காரணத்தால் அது வனப்பரப்பாகவே பேணிப் பாதுகாக்கப்பட உள்ளது. அவற்றை அழித்து உயிரியல் பூங்கா அமைக்க அரசிடம் செயற்குறிப்பு எதுவும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 753, திரு. ஆர்.ஆர். சேகரன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் . துறை அமைச்சர்.

**753—**

## கூட்டுறவுச் சங்கம் துவக்குதல்

***4828—திரு. ஆர்.ஆர். சேகரன் :**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூரில் கயிறு திரிக்கும் கூட்டுறவுச் சங்கம் ஒன்றைத் துவங்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஓமலூரில் கயிறு திரிக்கும் கூட்டுறவுச் சங்கம் ஒன்று துவக்குவதற்கான பிரேரணை ஏதும் தற்போது நிலுவையில் இல்லை.

**திரு. ஆர்.ஆர். சேகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பகுதியிலே தீவட்டிப்பட்டி, டேனிஷ்பேட்டை, திண்ணப்பட்டி, பூசாரிப்பட்டி, கருப்பூர் போன்ற பகுதிகளிலிருந்து நாள் ஒன்றுக்கு



1997 ஏப்ரல் 30 ]

சுமார் 100 லாரிகளுக்கு மேல் தேங்காய்கள் வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி ஆகின்றன. அந்தத் தேங்காய் மட்டைகளைக் கொண்டு அந்தப் பகுதியிலே கயிறு திரிக்கும் கூட்டுறவுத் தொழிற்சாலை ஒன்று துவங்கினால் அதற்கான சங்கத்தின் மூலமாக அந்தப் பகுதியில் உள்ள மக்கள் வேலைவாய்ப்பும், பொருளாதார மேம்பாடும் அடைய வாய்ப்பு இருக்கும். ஆகவே, அரசு அதை மறுபரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்திலே 6 தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்கெனவே இருக்கின்றன. புதிய கூட்டுறவுச் சங்கம் அந்தப் பகுதியிலே துவங்க வேண்டும் என்றால் மாவட்டப் பொது மேலாளர் அவர்களை அணுகினால் அதற்கு வேண்டிய உதவிகளை அரசு செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 754, திரு. என். பாண்டுரங்கன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

**754—**

## சத்துணவுக் கூடங்களுக்கு காய்கறி விநியோகம்

***6346—திரு. என். பாண்டுரங்கன் :**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சத்துணவுத் திட்டத்திற்கு வழங்கப்படும் காய்கறிகளை ஊராட்சி ஒன்றிய காய்கறி உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் வாங்கி சத்துணவுக் கூடங்களுக்கு விநியோகிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): அரசாணை எண் 2033, பொதுத் (முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம்) துறை, நாள் 4-12-1984-ல் அனைத்து சத்துணவு மையங்களுக்குக்கும் காய்கறி உற்பத்தியாளர்கள் சங்கம் மூலம்தான் காய்கறி விநியோகம் செய்யப்பட வேண்டும் என்றும்,

[1997 ஏப்ரல் 30

பள்ளிகளில் உள்ள தோட்டங்களில் காய்கறிகள் பயிரிடப்பட்டால் அவைகளையும் சத்துணவு மையங்கள் வாங்க அனுமதித்தும் ஆணையிடப்பட்டுள்ளது. ஆனால், நடைமுறையில் இது சரியாகச் செயல்படாததால், இவ்வாணை தற்போது செயல்பாட்டில் இல்லை.

**திரு. என். பாண்டுரங்கன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குழந்தைகள் சத்துணவு மையத்திற்காக சத்தான காய்கறிகளை சத்துணவுத் திட்டத்திற்காக அந்தந்த அமைப்பாளர்களே அவர்களாக தனியாரிடம் வாங்கிக்கொள்கிறார்கள். ஒருசில கிராமங்களிலே காய்கறிகளை வாங்குகின்றபோது ஏதோ அந்த இடத்திலே பீர்க்கங்காய், மொச்சைக்காய் என்று ஒருசில காய்களை வாங்கி அவை சத்துணவுத் திட்டத்திற்காகப் பயன்படுத்தப்பட்டு, கேரட், பீட்ரூட் பயன்படுத்தினோம் என்று பொய்யான பில்களை எழுதிவிடுகிறார்கள். ஏற்கெனவே இந்தத் திட்டம் நடைமுறையிலே இருந்தது. காய்கறி உற்பத்தியாளரிடத்திலே கூட்டுறவுச் சங்கத்தால், ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் வாங்கப்பட்டு அவை வெண்டார்களாலே விநியோகப்படுத்தப்பட்டு அவர்கள் அந்தந்தச் சத்துணவுக் கூடங்களுக்கு அனுப்பினார்கள். இதனால் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் 10 வெண்டார்களுக்காவது வேலைவாய்ப்பில் பலன் கிடைத்தது. எனவே ஊராட்சி ஒன்றிய உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டு அந்த ஊராட்சி ஒன்றியங்களின் மூலம் காய்கறிகள் வாங்கி சத்துணவு அமைப்பகங்களுக்கு அனுப்பப்படுமா என நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஒரு கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக வழங்கப்பட்டதிலே நிறைய முறைகேடுகள் நடைபெற்றன. முறையாக வழங்கப்படாத காரணத்தால்தான் அந்தத் திட்டம் 1984 ஆம் ஆண்டுக்குப் பின்னால் ரத்துச் செய்யப்பட்டு, அந்தந்த அமைப்பாளர்களே, அவர்களுக்கு வழங்கப்படுகின்ற பணத்திலே 9 காசிலே காய்கறிகளை வாங்கி குழந்தைகளுக்கு வழங்குவதற்கு அரசு ஏற்பாடு செய்துள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. கே. மணிவர்மா.

**திரு. கே. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவிற்கு வழங்கப்படும் காய்கறிகள் முழுமையாக மாணவர்களுக்குச் சென்றடைவதில்லை. முறைகேடுகள் நிறைய



1997 ஏப்ரல் 30 ]

நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. காய்கறிகள் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக வழங்கினால்கூட தவறுகள் நடைபெறுகிற வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, ஊராட்சி மன்றத் தலைவர்கள் மூலமாக அவர்கள் மேற்பார்வையில் வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல, ஊராட்சி மன்றத் தலைவர்கள் அந்தந்த ஊராட்சி மன்றங்களுக்கு உட்பட்ட சத்துணவுக் கூடங்களுக்கு நேரடியாகச் சென்று காய்கறிகள் வாங்கப்படுகிறதா, குழந்தைகளுக்கு வழங்கப்படுகிறதா என்பதை அவர்கள் ஆய்வு செய்வதற்கு அதிகாரம் இருக்கிறது.

முற்பகல் 10-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. வ. அன்பழகன்.

**திரு. வ. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக சத்துணவு மையங்களில் அனுமதிக்கப்பட்டிருக்கிற காய்கறிகளோ அல்லது சத்துணவோ முறையாக வழங்கப்படுவது இல்லை என்ற புகார்கள் இருக்கின்றன. எனவே, சத்துணவுக் கூடங்களைக் கண்காணிக்க ஒரு கண்காணிப்புக் குழுவை ஒவ்வொரு சத்துணவு மையத்திலும் அமைக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ரா. ஈஸ்வரன்.

**திரு. ரா. ஈஸ்வரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுக் கூடங்களில் பல்வேறு தவறுகள் நடக்கின்றன. காய்கறிகள் போடாமலேயே போட்டதாக வவுச்சர்கள் எல்லாம் வைத்து பணத்தை எடுக்கிறார்கள். அந்தமாதிரி நடைமுறையில் இருப்பதைக் கண்காணிப்பதற்கு சட்டமன்ற உறுப்பினர்கள் அதைப் பார்வையிடுவதற்கு அனுமதி உண்டா என அறிய விரும்புகிறேன்.

[1997 ஏப்ரல் 30

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல, சட்டமன்ற உறுப்பினர்கள், ஊராட்சி ஒன்றியத்தினுடைய பெருந்தலைவர்கள் ஏற்கெனவே பார்ப்பதற்கு அனுமதி இருந்தது. கடந்த ஆட்சிக் காலத்திலே அவர்கள் எல்லாம் பார்ப்பதற்கு அனுமதி இல்லை என்ற ஒரு மாயையை ஏற்படுத்தி விட்டார்கள். அங்கே இருக்கக்கூடிய பொதுவானவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் யாரும் பார்ப்பதற்கு இல்லை என்ற நிலையை ஏற்படுத்தியிருந்தார்கள். ஆனால் இந்த அரசைப் பொறுத்தவரையில், சட்டமன்ற உறுப்பினர்கள், ஊராட்சி ஒன்றியத்தினுடைய பெருந்தலைவர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள் நேரடியாகச் சென்று பார்த்து எங்காவது தவறு இருந்தால், புகார் சொன்னால் உறுதியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. கே. எம். விஜயகுமார்.

**திரு. கே.எம். விஜயகுமார் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே சத்துணவு மையங்களுக்கு காய்கறிகளுக்காக கோடிக்கணக்கான தொகை செலவழிக்கப்படுகிறது. காய்கறிகள் வழங்குவதில் பல ஊழல்கள் நடைபெறுகிற காரணத்தால், அரசாங்கமே காய்கறிகளை வாங்கி அவற்றை உலர வைக்கப்பட்ட காய்கறிகளாக— dehydrated vegetables—ஆக அனைத்து சத்துணவு மையங்களுக்கும் வினியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல, குழந்தைகளுக்குச் சத்துணவாக காய்கறிகளை வழங்கவேண்டும் என்றால் அன்றாடம் உற்பத்தி செய்யக்கூடிய, ஃபிரஷ்-ஆக இருக்கக்கூடிய காய்கறிகளைக் கொடுத்தால்தான் அது சத்து உள்ளதாக இருக்கும். ஆகவே, அதை டிரையராக, உலர வைத்த நிலையில் போட்டால் அதிலே சத்து இருக்காது என்று கருதுகிறேன். எனவே, அது இயலாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு சாப்பிடுகிற மாணவர்கள் என்று பெயர் பதிவு செய்திருப்பவர்களுக்குத்தான் இலவசமாகப் பாட நூல்கள் வழங்கப்படுகின்றன என்ற காரணத்தால் தான் மதிய உணவு அருந்தாத மாணவ, மாணவிகளுக்குக் கூட அந்தப் பெயரை பதிவு



1997 ஏப்ரல் 30]

செய்திருக்கிறார்கள். ஆகவே, எல்லா மாணவர்களுக்கும் இலவசமாகப் பாடப் புத்தகங்கள் வழங்கிவிட்டால்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது துணை வினாவா? உட்காருங்கள். அடுத்து திரு. எஸ். என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று சத்துணவுக் கூடங்களில் பணியாற்றக்கூடிய பணியாளர்கள் எல்லாம் சங்கங்கள் அமைத்துக் கொண்டு அந்தப் பள்ளிகளில் இருக்கக்கூடிய பெற்றோர்-ஆசிரியர் சங்கங்கள் எல்லாம் எடுத்துச் சொல்லியும்கூட தாங்கள் என்ன நினைக்கிறார்களோ அந்த நிலையைத்தான் எடுக்க முடியும், என்ற எண்ணம் உள்ளது. அவர்களுடைய அறிவுரைகளைக் கேட்காமல், நேரம் தாழ்த்தி வந்தாலும் அவர்களைக் கேட்க முடியாத சூழ்நிலையில், அவர்கள் செய்கின்ற காரியத்தை நியாயப்படுத்திச் சொல்லுகின்ற நிலையில் இருக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஊராட்சி ஒன்றிய ஆணையாளரிடத்தில் புகார் மனுக் கொடுத்தால்கூட அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய சத்துணவு அமைப்பாளர்களை மாற்ற முடியாத சூழ்நிலை உள்ளது. இந்த நிலையை எதிர்காலத்தில் மாற்றக்கூடிய அளவில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்து கொடுப்பார்களா என்பதை தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல, யார் தவறு செய்தாலும் அதில் நடவடிக்கை எடுப்பதற்கு தக்க அறிவுரைகள் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. பி. இராசமாணிக்கம்.

**திரு. பி. இராசமாணிக்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு அமைப்பாளர்கள் நீண்டகாலமாக நிரந்தரப்படுத்தப்பட வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அரசு அவர்களை நிரந்தரப்படுத்துவதற்கு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல,

சத்துணவு ஊழியர்களை நிரந்தரப்படுத்துவதற்கு ஏற்கெனவே இந்த அரசுதான் கடந்த காலத்தில் பொறுப்பு ஏற்றபோது அவர்களுக்கு 'பார்ட் டைம் ஸ்கேல்' என்று நிர்ணயம் செய்து, அன்றைக்கு அவர்களுக்கு சம்பளத்தை நிர்ணயம் செய்திருக்கிறார்கள். இப்பொழுது சம்பளக் கமிஷனுடைய பரிந்துரை வந்த பின்னால் அதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சத்துணவுத் துறையை ஏற்றிருக்கின்ற அமைச்சரவர்கள் சிறுதொழில் துறையையும் ஏற்றுக் கொண்டிருக்கின்ற காரணத்தால், நான் ஒரு யோசனையாகவும், அதேநேரத்தில் கோரிக்கையாகவும் வைக்க விரும்புகிறேன். நம்முடைய மாணவர்களுக்கு சத்துணவு என்ற பெயரால் சத்து இல்லாத உணவை நாம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே, நம்முடைய அமைச்சரவர்கள் சிறுதொழில் துறையையும் ஏற்று இருக்கின்ற காரணத்தால், ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் பேக்கரி, பேக்கரியாக ஏற்படுத்தி, நல்ல சத்துள்ள, அதாவது ஒரு ரொட்டி அல்லது பன் போன்றவற்றைத் தயார் செய்து அதை வேன்கள் மூலம் ஒவ்வொரு பள்ளிக்கும் மதிய உணவாகக் கொடுத்து, அதோடு பாலும் வழங்குகின்ற ஒரு நல்ல சூழ்நிலையை உருவாக்கி, மாணவர்களை எதிர்காலத்தில் நல்ல சத்துணவு உண்பவர்களாக ஆக்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்களுடைய ஆலோசனையோடு ஏற்கெனவே இந்தத் துறையிலே நாங்கள் பல்வேறு ஆலோசனைகளை சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளிடத்திலே தந்து, எதிர்காலத்திலே சிலவற்றை மாற்றி பன், பால் போன்றவைகள் வழங்கலாமா என்பதைப்பற்றி நாங்கள் சிந்தித்து வருகின்றோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. மணிமாறன்.

**திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழந்தைகளுக்குக் காய்கறி வாங்குவதற்காகக் கொடுக்கப் பட்டிருக்கக்கூடிய தொகை மிகவும் குறைவானது. அது 9 பைசா. ஒரு இடத்திலே 30 குழந்தைகள் இருக்கின்றன என்றால், 2 ரூபாய் 70 காசில்





அந்த 30 பிள்ளைகளுக்குத் தேவையான காய்கறிகளை வாங்க முடியுமா என்பது இன்றைய விலைவாசியில் சந்தேகத்திற்கு உரியதாக இருக்கிறது. எனவே, அந்தத் தொகையை உயர்த்துகின்ற திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கைப்படி ஏற்கனவே 18 பைசா கொடுப்பதிலே இன்னும் 7 பைசா சேர்த்துக்கொடுத்தால் ரூ.19.42 கோடி கூடுதல் செலவாகின்றது அரசுக்கு. எனவே, அப்படிப்பட்ட திட்டம் தற்சமயம் அரசினுடைய பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ப. கோவிந்தன்.

**திரு. ப. கோவிந்தன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு வழங்கப்படுவதிலே சாப்பாட்டிற்குப் பருப்பும் சேர்த்து முந்தைய காலங்களிலே உணவுகள் வழங்கப்பட்டன. இப்பொழுது பருப்பிற்குப் பதிலாக சோயா பீன்ஸைப் போட்டு, பவுடரைப் போட்டு சாம்பார் செய்து சாதங்கள் வழங்கப்படுகின்றன. அதை மாற்றி பருப்பு வகைகள் சேர்க்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல, ஏற்கனவே சாம்பாரிலே பருப்பும், சோயா மாவும் சேர்த்து குழந்தைகளுக்கு வழங்கப்பட்டு வந்தது. அந்த முறையை மாற்றி, முழுமையாகப் பருப்பு வழங்கினால் அரசுக்கு 7 கோடி ரூபாய் கூடுதல் செலவு வருகின்றது. வந்தாலும் பரவாயில்லை என்று எண்ணி, இந்த ஆண்டிலிருந்து அரசு முழுமையாகப் பருப்பு வழங்குவதற்கு ஆவன செய்து கொண்டிருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. பா. துரைசாமி.

**திரு. பா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சத்துணவு அமைப்பாளர்கள் எடுப்பதிலே வயது வரம்பை 27-லிருந்து 20 ஆகக் குறைப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. அ. வெங்கடாசலம்.

**திரு. அ. வெங்கடாசலம் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, குழந்தைகள் ஆரோக்கியமாக இருப்பதற்காகத்தான் சத்துணவுத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அப்படி சத்துணவுத் திட்டம் ஆரம்பித்தும்கூட, சில பள்ளிகளில் குழந்தைகள் சோகையாக, வயிறெல்லாம் வீங்கிய நிலையில் இருக்கின்றன. அப்படிப்பட்ட குழந்தைகளை ஒவ்வொரு பள்ளியாகக் கணக்கெடுத்து, சோகையாக இருக்கிற குழந்தைகளுக்கு நரிக்கறி வழங்கப்படுமா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதை அரசு நடைமுறைப்படுத்த இயலாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. பே.வே.ஸ்ரீ. வெங்கடேசன்.

**திரு. பே.வே.ஸ்ரீ. வெங்கடேசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுத் திட்டமே குழந்தைகள் சத்துணவு சாப்பிடுவதற்காகத்தான் அமைக்கப்பட்டது. ஆனால், பெரும்பாலான கிராமங்களிலே சத்துணவை வாங்கிக்கொண்டு முறையாக அவர்கள் சாப்பிடுவது இல்லை. முட்டையும் போடுகின்ற காரணத்தினால் அந்த முட்டை போடுகின்ற நேரத்தில்தான் உணவு வாங்குகிறார்கள். மற்ற நேரத்தில் அதை வாங்கிக்கொண்டு அப்படியே நாய்க்குப் போட்டும், வெளியே கொட்டியும் விடுகின்றார்கள். இவ்வாறு பாழ் பண்ணுவதைவிட, வெறும் பால், பழம், முட்டை வழங்கப்படுமா என்று மாண்புமிகு அமைச்சரவர்களிடம் அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னது போல், நல்ல பருப்பு சாம்பாரும், சாதமும் போடுவதற்கு இந்த அரசு ஏற்பாடு செய்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 755, திரு. கோ. சண்முகம், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.



**755—**

**உலவும் திரையரங்கம் அமைத்தல்**

***3214—திரு. கோ. சண்முகம்:**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நிரந்தரத் திரையரங்கு அருகிலேயே, உலவும் திரையரங்கம் அமைக்க வெளியிடப்பட்ட அரசு ஆணை, உள் (சினிமா) 1326, நாள் 6-9-1995-ஐ மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். நிரந்தரத் திரையரங்கு அருகிலேயே, உலவும் திரையரங்கம் அமைக்க வெளியிடப்பட்ட அரசு ஆணை எண் 1326, உள் துறை, நாள் 6-9-1995-க்குப் பதிலாக அரசாணை நிலை எண் 1685, உள் துறை நாள் 6-11-1996-ல் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

**திரு. கோ. சண்முகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாற்றம் செய்யப்பட்டுள்ள அரசாணையின்படி நிரந்தரத் திரையரங்கத்திற்கும், உலவும் திரையரங்கத்திற்கும் இடையில் நிர்ணயிக்கப்பட்டுள்ள தூரம் எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இருந்த சட்டப்படி ஒரு நிரந்தரத் திரையரங்கத்திற்கும், உலவும் திரையரங்கத்திற்கும் இடையில் 1.609 கிலோ மீட்டர் தூரம் இடைவெளி இருக்க வேண்டும். புதியதாக வெளியிடப்பட்ட ஆணைப்படி ஒரு கிலோ மீட்டர் இருந்தால் போதும் என்று மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய நிலையிலே ஏதோ ஒரு சில திரையரங்குகள் முறைகேடு இல்லாமல் சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருந்தாலும், ஏராளமான திரையரங்குகளிலே பல்வேறு முறைகேடுகள் எல்லாம் நடந்து கொண்டிருக்கின்றன. அங்கே டிக்கட் விற்பனை செய்கிறபோது கள்ள

[1997 ஏப்ரல் 30

மார்க்கெட்டிலே கூடுதல் கட்டணத்திற்கு விற்பனை செய்கிறார்கள். திரையரங்கு உரிமையாளர்களே அவர்களுடைய கவுண்டரிலேயே அதிகமாக, நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தைவிட கூடுதலாக வசூல் செய்கிறார்கள். ஆகவே, இப்படிப்பட்ட கூடுதல் கட்டணம் வசூல் செய்வது தவிர்க்கப்படுமா? அங்கீகரிக்கப்பட்ட இருக்கைகளின் எண்ணிக்கைக்கு அதிகமாக டிக்கட் வழங்கப்பட்டு சினிமா கொட்டகைகளில் நின்றுகொண்டு பார்க்கக்கூடிய அவல நிலையெல்லாம் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது, அதுவும் குழந்தைகளும், பெண்களும் அருவருக்கத்தக்க வகையில் புகைப் பிடித்தல் போன்ற .....

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஒரு உரையே நிகழ்த்துகிறீர்கள். ஒரு வினா கேட்க அனுமதித்தால் 8 வினா கேட்டுக்கொண்டிருக்கிறீர்கள். மாண்புமிகு அமைச்சர் குறுக்கீடு.

**திரு. ஜி.கே. மணி :** இப்படிப்பட்ட முறைகேடுகளைக் களைவதற்கு . . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர்.

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரையரங்குகளில் நடைபெறும் முறைகேடுகள் மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதற்கு, இன்றைக்கு இந்த அவையிலே இன்னும் சில மணி நேரங்களில் புதியதாக ஒரு சட்டமுன்வடிவைக் கொண்டுவந்து நிறைவேற்றப் போகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துணைத் தலைவர்.

**(மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, பேரவைத் துணைத் தலைவர்) :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இந்த அரசாணை மாற்றப்பட்டுள்ளது என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். ஆனால், ஏற்கெனவே அந்த அரசாணை மாற்றப்படுவதற்கு முன்பு, அந்த அரசாணை பிரகாரம் ஏதாவது உலவும் திரையரங்கு அமைக்கப்பட்டதா? ஆமெனில், அதன் விவரம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிரந்தரத் திரையரங்குக்குப் பக்கத்திலே, விதிகளில்



1997 ஏப்ரல் 30 ]

விலக்கு அளித்து சடந்த காலங்களில் திரையரங்குகளை உருவாக்கி சிலர் பழிவாங்கப்பட்டிருக்கிறார்கள். இருந்தாலும், முழுமையான விவரம் தேவையென்றால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களைத் தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மா. இராமச்சந்திரன்.

**திரு. மா. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரையரங்குகளில், குளிர் சாதன வசதியுடன்கூடிய திரையரங்குகள் என்று சொல்லி, அதிகமான கட்டணத்தை வசூலிக்கிறார்கள். ஆனால், எந்தத் திரையரங்கிலும் முறையான குளிர் சாதன வசதி இருப்பதில்லை. ஆகவே, சுகாதாரக் கேடு வருகிறது. அவைகளை ஆய்வு செய்து அவர்கள் மீது முறையான நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதிமுறைகளுக்கு மாறாகப் பல திரையரங்குகள் நடக்கின்ற காரணத்தினால், அவற்றையெல்லாம் ஒழுங்கு படுத்துவதற்கு, உரிமம் வழங்குகின்ற அதிகாரிகள் மூலம், அவர்களுக்கு உடனடியாக தண்டனை வழங்குவதற்காக, நான் முன்னாலே குறிப்பிட்டதைப் போல, இன்னும் சில மணி நேரங்களில் ஒரு சட்டத்தை நிறைவேற்ற இருக்கிறோம். அந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டதற்குப் பிறகு மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற குறைகள் முற்றிலுமாகத் தவிர்க்கப்படும் என்று நம்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** டாக்டர் ஆ. ஞானசேகரன்.

**டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் பல திரையரங்குகளில் சுகாதார வசதி குறைந்திருப்பதோடு, ஏ.சி. வசதியை இடைவேளைக்குப் பின்பு குறைத்துவிடுகின்றனர். இந்த நிலையிலுள்ள திரையரங்குகள் மீது நம்முடைய அரசு கடுமையான நடவடிக்கை எடுக்க ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப்பட்டு, விவாதிக்கப்பட்டு, நிறைவேற்றப்பட்டுவிட்டாலேயே, என்னென்ன தண்டனை வழங்கப்படும் என்பதெல்லாம் தெரிந்துவிடும் என்கிற

காரணத்தினால், அந்த நேரத்தில் என் பதிலைச் சொல்ல விரும்புகிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 756, திரு. வீ. தமிழ்மணி, மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

**756—**

### சங்கு தீர்த்தம் திருக்குளத்தைப் புதுப்பித்தல்

***3727—திரு. வீ. தமிழ்மணி:**

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருக்கழுக்குன்றம் அருள்மிகு வேதகிரீஸ்வரர் ஆலயத்தின் "சங்கு தீர்த்தம்" என்ற திருக்குளத்தைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது பணி தொடங்கப்படும்?

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) அருள்மிகு வேதகிரீஸ்வரர் திருக்கோவிலின் குடமுழுக்கு விழா முடிவுற்றதும் திருக்குளத் திருப்பணி தொடங்கப்படும்.

முற்பகல் 10-20

**திரு. வீ. தமிழ்மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சங்கு தீர்த்தத் திருக்குளத்தில், 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை குறிஞ்சி மலர் மலருவது போல், 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை சங்கு பிறப்பதாக ஆன்மீகவாதிகள் சொல்கிறார்கள். அப்படிப் பிறந்த சங்குகளை, ஆயிரத்திற்கும் மேற்பட்ட சங்குகளை வைத்து ஆண்டுதோறும் சங்கு தீர்த்த விழா நடத்தி வருகிறார்கள். அவர்களுடைய . . .





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேலைகள் ஆரம்பிக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் சொல்லிவிட்டார். அதற்குப் பிறகு இந்த வினா எதற்கு?

**திரு. வீ. தமிழ்மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் குளம் இப்போது மிகவும் பழுதுபட்டிருக்கிறது. இரண்டு பகுதிகளில்தான் மதில் சுவர்கள் கட்டப்பட்டிருக்கின்றன. மீதிப்பகுதிகளிலும் மதில் சுவர்களைக் கட்டி அந்தக் குளத்தைத் தூர் வாரி, சிறந்த முறையில் ஆன்மீகவாதிகள் அந்தக் குளத்தைச் சுற்றி வருவதற்கு, ஏற்பாடுகள் செய்யப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ. ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திருக்குளத்தின் வடக்கு மற்றும் மேற்குப் பகுதிகளில் மட்டும் சுற்றுச்சுவர்கள் உள்ளன. கிழக்கு மற்றும் தெற்குப் பகுதிகளில் சுற்றுச்சுவர்கள் இல்லை. அத்திருக்குளத்தில் பின்வரும் திருப்பணிகள் செய்ய வேண்டியுள்ளன:

தெற்குப் பக்கத்தில் கைப்பிடிச் சுவர், கிழக்குப் பக்கத்தில் கைப்பிடிச் சுவர், கிழக்கு, தெற்கு மற்றும் மேற்கில் ஒரு பகுதிப் படிகள் புதிதாக அமைத்தல், சங்கு தீர்த்தக் குளத்தின் மையப் பகுதியில் அமைந்துள்ள நீராழி மண்டபத்திற்குத் திருப்பணி செய்தல், சங்கு தீர்த்தக் குளத்தின் மேற்குக் கரையில் எழுந்தருளியுள்ள அருள்மிகு தீர்த்தகிரீஸ்வரர் கோவில் விமானத்திற்குத் திருப்பணி செய்தல் போன்றவைகளை, சுமார் ஏழு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் செலவில் செய்வதற்காக மதிப்பீடு தயார் செய்யப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. ஆவுடையப்பன்.

**திரு. இரா. ஆவுடையப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சிக்காலத்தில் தென் மாவட்டங்களில் அநேகக் கோவில்களில் கொள்ளையர்கள் சிலைகளை உடைத்து கொள்ளையடித்துச் சென்று விட்டார்கள் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. ஆவுடையப்பன். நீங்கள் ஒரு சிறந்த வக்கீல். இவ்வினா குளத்தைப் பற்றியது; ஆனால், உங்களுடைய துணை வினா எங்கேயோ போய்க்கொண்டிருக்கிறது.

**திரு. இரா. ஆவுடையப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவில்களினுடைய சிலைகள் இன்னும் சீரமைக்கப்படாத

நிலையில் அந்தத் திருத்தலங்கள் இருந்து கொண்டிருக்கின்றன. அந்தக் கோவில்களினுடைய சிலைகள் சீரமைக்கப்பட விரைவில் அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ. ம. செங்குட்டுவன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது பற்றிப் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. அ. அசோகன்.

**திரு. அ. அசோகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூர் தியாகராச சுவாமி கோவில் திருக்குளமான கமலாலயம் குளத்தில் தூர் எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ. ம. செங்குட்டுவன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூர் அருள்மிகு தியாகராச சுவாமி ஆலயத் திருக்குளத்தில் பொதுப்பணித் துறையின் மூலமாக ரூபாய் 29 இலட்சத்தில் திருப்பணி செய்வதற்கு மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள அறநிலையத் துறைக்குச் சொந்தமாகப் பல ஆயிரக்கணக்கான குளங்கள் இன்றைக்கு மேடிட்டிருக்கின்றன. அவை அனைத்திலும் தூர் எடுப்பதற்கான புதிய திட்டம் ஏதாவது அரசு வைத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ. ம. செங்குட்டுவன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவில்களினுடைய நிதி நிலையைப் பொறுத்து, அந்தந்தக் கோவில்களின் அருகேயிருக்கின்ற திருக்குளங்கள் பழுது பார்ப்பதற்குக் கருதப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ந.பூ. இராமஜெயம்.

**திரு. ந. பூ. இராமஜெயம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலாப்பூரில் உள்ள சித்திரைக்குளத்தில் தூர் வாருவதற்காகப் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, பல மாதங்கள் ஆகியும் இன்னும் பணிகள் தொடங்கப்படவில்லை. அது எந்த நிலையில் இருக்கிறது, எப்போது ஆரம்பிக்கப்படும் என்பதை உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு புலவர் பூ. ம. செங்குட்டுவன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சித்திரக்குளத்திற்குத் திருப்பணி செய்வதற்காக, ஏற்கெனவே வேலைகள்கூட துவங்குவதற்கு அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது. அது வேளாண்மைப் பொறியியல் துறையின் வசம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. மேலும், அதிலே நீர் நிரம்பியிருப்பதால் அந்த நீரை எடுத்துவிட்டு, விரைவில் திருப்பணியைச் செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரம் இளமையாக்கினார் கோவில் தெப்பக்குளம் மிகவும் தூர்ந்து போயுள்ளது. அதில் இருக்கக்கூடிய தண்ணீர் வெளியில் சென்று, புதிய தண்ணீர் உள்ளே வருவதற்கான வாய்ப்புகள் அடைபட்டுப்போயிருக்கின்றன. அதனால் அந்தத் தண்ணீர் மிகவும் கெட்டுப்போயிருக்கிறது. எனவே அந்தக் குளத்தினைத் தூர் வாரி, நீர் சென்று வருவதற்குரிய வழிவகை செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ. ம. செங்குட்டுவன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டிருக்கிறேன். நிதி வசதியைப் பொறுத்து அந்தக் குளம் பழுது பார்க்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. குழந்தை. தமிழரசன்.

*முற்பகல் 10-25*

**திரு. குழந்தை. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருத்தாசலம் நகரிலுள்ள விருத்தகிரீஸ்வரர் ஆலயத்திற்குச் சொந்தமான தெப்பக்குளத்தைச் செப்பனிட்டு, அதன் திருப்பணியை மேற்கொள்ள வேண்டுமென்று பலமுறை திருப்பணிக் குழுவினர் அரசுக்கு விண்ணப்பித்திருக்கிறார்கள். அதன் ஒரு கரையும் உடைந்து இருக்கிறது. எனவே, அந்தத் தெப்பக்குளத்தைச் சீர்செய்து தர அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப் போல,

விருத்தாசலம் நகரிலுள்ள விருத்தகிரீஸ்வரர் ஆலயத்திற்கு நிதி வசதி இருக்குமானால், மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 757, திரு. பெ.சு. திருவேங்கடம், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

**757—**

**புதிய மரத்தேர் செய்தல்**

***5718—திரு. பெ.சு. திருவேங்கடம்:**

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், கலசபாக்கம் தொகுதி, வில்வாரணி சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயத்திற்கு புதிய மரத்தேர் செய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): ஆம். திருவண்ணாமலை—சம்புவராயர் மாவட்டம், கலசபாக்கம் தொகுதி, வில்வாரணி சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயத்தின் பழைய பழுதடைந்த மரத்தேருக்குப் பதிலாக புதிய மரத் தேரினைச் செய்ய, ரூ. 8,25,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, இந்து சமய அறநிலையத் துறை ஆணையரின் பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பெ.சு. திருவேங்கடம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதி மக்கள் நீண்டநாட்களாக அந்தத் தேரினைப் புதுப்பித்துத் தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். பல ஆண்டுகளாக இந்தத் திட்டம் முடிக்கப்படாமல் உள்ளது. அந்த ஆலயத்திடம் 8 இலட்சம் ரூபாய் நிதியில்லை என்பதும் தெரிய வருகிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கு நிதியைப் பெறுவதற்கு ஒரு மாற்று ஏற்பாட்டைச் செய்து, அந்தத் தேரினைப் புதுப்பித்துத் தருவார்களா என அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், போளூர் வட்டம், வில்வாரணி சிவசுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான பழைய, பழுதடைந்த மரத்தேருக்குப் பதிலாக புதிய மரத்தேர் செய்வதற்காக, அரசு மானியம் ரூ. 2 இலட்சமும் ஆணையரின் பொதுநல நிதி மூலமாக ரூ. 2 இலட்சமும், மற்றும் பொதுமக்கள் நன்கொடை மூலமாக 4.25 இலட்சம் ரூபாயும், ஆக மொத்தம் 8.25 இலட்சம் ரூபாய்க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, இப்போது நிர்வாக அனுமதிக்காக ஆணையரின் பரிசீலனையில் உள்ளது. மேலும், திருத்தேர் செய்கின்ற வரைபடத்திலே சில திருத்தங்கள் செய்ய வேண்டுமென்று அதன் ஸ்தபதிகள் சொல்லி வருகிறார்கள். அந்தக் கோவில் அமைந்திருக்கின்ற வரலாற்று ஆகம விதிகளின்படி, ஆயாதி பொருத்தம் பார்த்து, அந்த வரைபடம் திருத்தப்பட்டு, விரைவில் புதிய தேர் அமைத்துத் தரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 758, திரு. பா. துரைசாமி, மாண்புமிகு கதர் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்.

**758—**

**காகித ஆலையை இயக்குதல்**

***4440—திரு. பா. துரைசாமி:**

மாண்புமிகு கதர் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வரகூர் தொகுதி, முருக்கன்குடி, நன்னை, ஒணப்பாடி ஆகிய கிராமங்களில் கட்டப்பட்டு, திறக்காமலுள்ள காகித ஆலையை இயக்குவதற்கு அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது இயக்கப்படும்?

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): வரகூர் தொகுதி, ஒணப்பாடி என்ற இடத்தில் காகித ஆலை ஒன்று இயங்கி வருகின்றது. எனவே, முருக்கன்குடி,

நன்னை ஆகிய இடங்களில் காகித ஆலை துவங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலுள்ள முருக்கன்குடி, நன்னை போன்ற கிராமங்களில் தாட்கோ மூலமாக ஸ்பின்னிங் மில்ஸ் நடத்தப்பட்டு வருகின்றன. எனவே, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களோடு கலந்து பேசி, அங்கே காகித ஆலையைத் திறப்பதற்கு ஆவன செய்வதோடு, ஓணப்பாடி காகித ஆலையை மேம்படுத்தி, அங்கே வேலைவாய்ப்பை அதிகப்படுத்துவதற்கும் அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட இடங்களிலுள்ள கிடங்குகள், கதர் வாரியத்தால் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை இருப்பில் வைத்துக் கொள்ளும் கிடங்குகளாகத் தற்போது பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் கூறிய கருத்து பரிசீலனையில் எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. குத்தாலம் பி. கல்யாணம்.

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலாடுதுறையிலுள்ள என்.பி.கே.ஆர். சர்க்கரை ஆலைக்குப் பக்கத்தில் ஒரு காகித ஆலை இயங்கி வருகிறது. அந்த ஆலை கடந்த பத்து ஆண்டுகளாக மூடப்பட்டிருக்கிறது. நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் இதனால் வேலையற்று இருக்கிறார்கள். அந்த ஆலையை அரசே ஏற்று நடத்துமா, அல்லது வேறு வகையில் இயங்கச் செய்ய அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாரியத்தின் மூலம் 32 காகித ஆலைகள் இயங்கி வருகின்றன. சுமார் 250-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட அந்த ஆலை, தனியார் ஒருவரால் தொழில் வளர்ச்சிக் கழகத்தின் மூலம் கடனுதவி பெறப்பட்டு நடத்தப்பட்டு வந்தது. தற்போது அது இயங்கவில்லை. அதை அரசு ஏற்று நடத்துவதற்குண்டான செயற்குறிப்பு தற்போது பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 759, திரு. எஸ்.எஸ். மணிநாடார், மாண்புமிகு கதர் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்.

**759—**

### பனை வாரியத்தை சீர் செய்தல்

***6807—திரு. எஸ்.எஸ். மணி நாடார்:**

மாண்புமிகு கதர் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பனை வாரியத்தை அரசு சீர் செய்து பனைத் தொழிலாளர் வாழ்க்கை மேம்பாடு அடைய செய்ய அரசுச் முன்வருமா?

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாடு பனைப் பொருட்கள் வளர்ச்சி வாரியத்தைச் சீர்செய்து பனைத் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கான பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எஸ்.எஸ். மணிநாடார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே பனையேறும் தொழிலாளர்கள் மிக மிகப் பின்தங்கிய நிலையில் இருக்கிறார்கள். நாட்டில் மற்ற தொழில்கள் நல்ல முறையில் முன்னேறிக் கொண்டிருக்கின்ற இந்த நேரத்திலே, பனைத் தொழில் மாத்திரம் பின்தங்கிய நிலையில் இருக்கிறது. மரம் ஏறும் தொழிலாளர்கள் இறந்தால் அவர்களுடைய குடும்பத்திற்கு ஒரு லட்ச ரூபாய் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. எஸ்.எஸ். மணிநாடார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென் மாவட்டங்களில் கடந்த 4, 5 ஆண்டுகளாக மழை இல்லாத காரணத்தால் கடும் வறட்சி ஏற்பட்டு, பனை மரங்கள் எல்லாம் பட்டுப்போய், தொழிலாளர்கள் நசிந்து போய் இருக்கின்ற காரணத்தால், பனையேறும் தொழிலாளர்கள் பெற்ற கடனை ரத்து செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[1997 ஏப்ரல் 30

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு கதர் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பனைத் தொழிலாளர்களுடைய வளர்ச்சிக்காக, வாரியத்தின்கீழ் ஒரு மாநிலக் கூட்டுறவு இணையமும், 7 மாவட்ட இணையங்களும் செயல்பட்டு வருகின்றன. கழக அரசு பொறுப்பேற்ற பிறகு இந்த வாரியத்தை மேம்படுத்துவதற்காக, 15 ஆண்டு காலம் இயங்காமல் இருந்த பனஞ்சீனி சர்க்கரை ஆலைகள் நான்கு இவ்வாண்டு முதல் இயங்கவிருக்கின்றன. கடப்பாக்கம், கலக்கண்நாயக்கன்பாளையம், மத்தூர் மற்றும் மாதவரம் போன்ற இடங்களில் இன்னும் ஒரு மாத காலத்திற்குள் இந்த ஆலைகள் இயங்க இருக்கின்றன. இதிலே 2,000 பேர் வேலை பெறவிருக்கிறார்கள்.

அதேநேரத்தில், இராமநாதபுரம் மாவட்டத்தில் பதநீர் குளிரூட்டு நிலையத்தைத் துவங்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதித்து இருக்கிறார்கள். தென் மாவட்டங்களான திருநெல்வேலி, கன்னியாகுமரி போன்ற மாவட்டங்களில் பணிபுரிகின்ற பனைத் தொழிலாளர்களையெல்லாம் அழைத்து ஒரு கருத்தரங்கினை நடத்தி, அவர்களுடைய கருத்திற்கேற்ப இந்த நிதியாண்டில் பனை வாரியத்தை வளர்ச்சி செய்வதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. ரங்கநாதன், இருந்த இடத்திலேயிருந்தே பரிந்துரை செய்யக்கூடாது. கடுமையான நடவடிக்கை எடுப்பேன். திரு. மணிநாடார் பாதி வினாவைப் படித்தார்கள். இரண்டாவது வினாவாக அடுத்த பாதியைப் படிக்கட்டும் என்றுதான் அமைச்சரை அழைத்தேன். திரு. எஸ்.எஸ். மணிநாடார்.

**திரு. எஸ்.எஸ். மணிநாடார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பின்தங்கிய நிலையிலுள்ள பனைத் தொழிலாளர்களை தாழ்த்தப்பட்ட அல்லது மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்க்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சிக்காலத்தில் பனை வாரியம் என்று



1997 ஏப்ரல் 30 ]

ஒன்று இருப்பதையே மறந்திருந்த நிலையில், கழக அரசு பொறுப்பேற்றவுடன் பனை வாரியத்தை மேம்படுத்துவதற்கு பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, இந்த நிதி ஆண்டில் ஓரளவு நிதியை அளித்திருக்கிறார்கள். இந்த வாரியத்தில்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் கேட்டது உங்களுடைய துறை சம்பந்தப்பட்ட கேள்வி இல்லை என்று சொல்லிவிட்டு உட்காருங்கள். இந்தக் கேள்வியை மாண்புமிகு முதலமைச்சரிடம் கேட்க வேண்டுமென்றும், என்னிடம் விவரம் இல்லை என்றும் சொல்லிவிட்டு உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வினாவை மாண்புமிகு முதலமைச்சரிடம் கேட்குமாறு பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சிக் காலத்திலே இந்த பனை வாரியமானது சீரற்று அல்லது செயலற்றுப் போயிருந்தது. புதிதாக இந்த வாரியத்தைச் சீர்செய்கின்றபோது, ஒவ்வொரு மாவட்டத்திலே இருந்தும் வருகின்ற எம்.எல்.ஏ க்களையும் அந்த வாரியத்திலே உறுப்பினராக்கி, அதன் மூலம் பனைத் தொழிலாளர்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த, அவர்கள் உற்பத்தி செய்கின்ற பொருள்களை விற்பனை செய்வதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பனை வாரியத்தில் சட்டமன்ற உறுப்பினர்களை நியமிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கலந்து பேசி, பனை வாரிய உறுப்பினர்கள் நியமனம் பற்றி அறிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 760, திரு. அ.வ. அப்துல் நாசர், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்.

[1997 ஏப்ரல் 30

**760—**

## மீனவக் குடும்பங்களுக்கு நிவாரண உதவி

***6204—திரு. அ.வ. அப்துல் நாசர்:**

*மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஜூன் 1996-ல் சென்னைக் கடலில் காணாமல்போன புவனகிரி தொகுதி, சாமியார்பேட்டையைச் சேர்ந்த மூன்று மீனவக் குடும்பங்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கப்பட்டு விட்டதா?*

*(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?*

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): விவர அறிக்கை அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

### அறிக்கை

1996 ஆம் ஆண்டு ஜூன் மாதம் சென்னை மீன்பிடித் துறைமுகத்தில் இருந்து வங்கக்கடலில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்களில் தென்னாற்காடு-வள்ளலார் மாவட்டம், புவனகிரி தொகுதி, சாமியார் பேட்டையைச் சேர்ந்த கீழ்க்கண்ட மூன்று மீனவர்கள் இதுவரை கரை திரும்பவில்லை.

1. திரு. வி. குப்புசாமி, த/பெ. வீரப்பப்பிள்ளை.
2. திரு. ஆறுமுகசாமி, த/பெ. கோவிந்தன்.
3. திரு. வி. இராஜேந்திரன், த/பெ. வீரப்பப்பிள்ளை.

22-7-96 ஆம் நாளும், (2டி) 34 ஆம் எண்ணும் கொண்ட கால்நடை பராமரிப்பு மற்றும் மீனளத் துறையின் அரசாணையில் மேற்சொல்லப்பட்டுள்ள மூன்று மீனவர்களின் குடும்பங்களுக்கும் நிவாரணமாக தலா ரூ. 5,000/- வழங்க ஆணையிடப்பட்டது.

மாண்புமிகு பாரதப் பிரதமரின் பொது நிவாரண நிதியிலிருந்தும் காணாமல் போன மீனவர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என்ற புதுடில்லி தேசிய மீனவர் சங்கத்தின் கோரிக்கையை தமிழக அரசு மைய அரசுக்குப் பரிந்துரை செய்தது. அக்கோரிக்கை மைய அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டு, நிவாரணத் தொகையும் மைய அரசிடமிருந்து பெறப்பட்டது. அதன்படி மேற்சொல்லப்பட்டுள்ள மூன்று மீனவர்களின் குடும்பங்களுக்கும் தலா ரூ. 50,000/- 13-2-97 ஆம் நாளும் (2டி) 4 ஆம் எண்ணும் கொண்ட கால்நடை பராமரிப்பு மற்றும் மீனளத் துறையின் அரசாணையின்படி, நிவாரணமாக வழங்கப்பட்டது.



1997 ஏப்ரல் 30]

மேற்படி மூன்று மீனவர்களும் கடலில் மீன்பிடிக்கச் சென்று காணாமல் போய் ஆறு மாதங்களுக்கும் மேலாகி விட்டபடியால் அவர்கள் இறந்ததாகக் கருதப்பட்டது. எனவே, மேற்படி மூன்று மீனவர்களில் திரு. வி. குப்புசாமி மற்றும் திரு. கோ. ஆறுமுகசாமி ஆகியோர் மீனவர் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினர்களாக இருந்ததால் அவர்களுடைய குடும்பங்களுக்கு புதுடில்லியிலுள்ள தேசிய மீனவர் கூட்டுறவு சம்மேளனத்திடம் இருந்து காப்பீட்டுத் தொகையாக தலா ரூ. 25,000 பெற்று வழங்க தக்க செயற்குறிப்புகள் 13-1-97 அன்று மீன் துறை ஆணையரால் அனுப்பப்பட்டு, நிவாரண நிதி எதிர்பார்க்கப்படுகிறது. எஞ்சிய மீனவர் திரு. இராஜேந்திரன், எந்தவொரு மீனவர் கூட்டுறவு சங்கத்திலும் உறுப்பினராக இல்லாததால் 28-8-96 ஆம் நாளும், (நிலை) 845 ஆம் எண்ணும் கொண்ட வருவாய்த் துறையின் அரசாணையின்படி, அவருடைய குடும்பத்திற்கு ரூ. 15,000- நிவாரணம் வழங்க சென்னை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு மீன் துறை ஆணையரால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். அரசின் கருணைக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். திரு. இராஜேந்திரன் என்ற மீனவர், கூட்டுறவுச் சங்கத்திலே உறுப்பினராக இல்லாத காரணத்தால் அவர் குடும்பத்திற்கு ரூ. 15,000/- நிவாரணம் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. கருணைமிக்க இந்த அரசு, அந்தக் குடும்பத்தின் ஏழ்மை சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு, அந்தக் குடும்பத்திற்கும் நிவாரணத் தொகையை ரூ. 10,000/- உயர்த்தி, ரூ. 25,000/- ஆக வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு, அந்த ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த குழந்தைகள் பள்ளியில் படித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை, அரசே தத்தெடுத்து, அவர்கள் பள்ளிப் படிப்பை முடிக்கவும், கல்லூரிப் படிப்பை முடிக்கவும், அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1997 ஏப்ரல் 30

முற்பகல் 10-35

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விபத்துக் காப்புறுதித் திட்டத்தின்கீழ், மீனவர்கள், கூட்டுறவுச் சங்கத்தில் அங்கத்தினர்களாக இருக்க வேண்டும். மேலும், இந்தக் காப்பீட்டில், மீனவர்கள், தங்கள் பங்கைச் செலுத்தாமலே, மத்திய, மாநில அரசுகள், அவர்களுடைய பங்கைச் செலுத்தி, இந்த நிவாரணத்தை வழங்கி வருகிறது. ஆகவே, இனி வருங்காலத்திலாவது, 18 வயது நிரம்பிய மீனவர்கள், கூட்டுறவுச் சங்கத்தில் அங்கத்தினர்களாகச் சேர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதன் பிறகு அவர்களுடைய குடும்பத்திலுள்ள பிள்ளைகளைத் தத்தெடுக்க வேண்டுமென்று உறுப்பினர் கூறினார்கள். இந்த அரசால் அது இயலாது. அவர்களுக்கு நிவாரணத்தை வழங்கி வருகிறது. தற்போது மத்திய, மாநில அரசுகள், மீனவர்களுக்கு விபத்துக் காப்புறுதி திட்டத்தின்கீழ், 35 ஆயிரம் ரூபாயை வழங்க அறிவித்திருக்கின்றன. அதைக் கருணையுள்ளம் கொண்ட நமது முதலமைச்சர் அவர்கள் அரசு மேலும், மாநில அரசின் பங்காக 15 ஆயிரம் ரூபாயையும். சேர்த்து, மொத்தம் 50 ஆயிரம் ரூபாய் நிவாரணம் என்று அறிவித்திருக்கிறது. இதுவே, நமது மீனவர்களுக்கு, நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளித்து வருகிற கருணைத் தொகையாகும். மேற்கொண்டு, அவர்கள் குடும்பத்திற்கு எதுவும் செய்ய இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உடுக்குறியிட்ட வினாக்கள் முடிவுற்றன.

## ஆ. உடுக்குறியிடாத வினாக்கள்

பத்து முதல் பதினாறு வரையிலான பட்டியல்கள் வழி 51-ன் கீழ் உடுக்குறியிட்டவினாக்கள் உடுக்குறியிடாதவையாக மாற்றப்பெற்று சம்மந்தப்பட்ட அமைச்சர்களால் அளிக்கப்பட்டுள்ள விடைகளுடன் அவை முன் வைக்கப்பட்டவை.

### (பத்தாவது பட்டியல்)

1—

### காட்பாடி வெடி மருந்துத் தொழிற்சாலை

வினா எண் 356—**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1997 ஏப்ரல் 30 ]

(அ) வட ஆற்காடு-அம்பேத்கர் மாவட்டத்தில், காட்பாடி வெடி மருந்துத் தொழிற்சாலையைத் தனியாருக்குக் கொடுக்காமல் அரசே தொடர்ந்து நடத்த முன்வருமா?

(ஆ) சென்ற ஆண்டு அதில் கிடைத்த லாபம் என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) வட ஆற்காடு-அம்பேத்கர் மாவட்டத்தில் காட்பாடியிலுள்ள வெடிமருந்துத் தொழிற்சாலையை அரசே தொடர்ந்து நடத்த முடிவு செய்துள்ளது.

(ஆ) இந்நிறுவனம் 1995-96-ஆம் ஆண்டில் நடைமுறை லாபமாக (Operating Profit) சுமார் ரூ. 10 கோடியும் ரொக்க லாபமாக (Cash Profit) சுமார் ரூ. 3.20 கோடியும் ஈட்டியுள்ளது.

2—

### தேர்ந்தெடுக்கப்பட்ட காவலர்கள்

வினா எண் 435—**திரு. பி. இராசமாணிக்கம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1989-90-ஆம் ஆண்டில் காவலர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டும், அவர்கள் பணியில் அமர்த்தப்படாதது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அப்பணியிடங்களை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) தெரியும்.

(ஆ) தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

3—

### இயற்கை வளங்களைக் கண்டறிய ஆய்வு நடத்தும் திட்டம்

வினா எண் 673—**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1997 ஏப்ரல் 30

தமிழ்நாட்டில் நிலத்தடியில் புதைந்துள்ள இயற்கை வளங்களைக் கண்டறிய ஆய்வு நடத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

ஆம். புவியியல் மற்றும் சுரங்கத் துறை தமிழ்நாட்டில் பல பகுதிகளில் நிலத்தடியில் புதைந்துள்ள இயற்கை வளங்களைக் கண்டறிய ஆய்வு மேற்கொண்டு, தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. எட்டாம் ஐந்தாண்டு திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் பழுப்பு நிலக்கரி (Lignite), களிமண் படிவங்கள் (Clay deposits), சிலிகா மணல், மணிக்கற்கள் மற்றும் குறை மணிக்கற்கள் (Silica Sand, Precious and Semi precious stones), மாலிப்டினம், பிளாட்டினம் வகையைச் சார்ந்த கனிமங்கள் மற்றும் கிராபைட் கனிமங்களுக்கும் மற்றும் பல வண்ண மற்றும் கருப்பு கிரானைட் கற்களுக்கும் விரிவான புவியியல் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகின்றன. ஆய்வுகள் முன்னேற்றத்தில் உள்ளன.

4—

## ஆறுகளில் மணல் எடுத்தல்

வினா எண் 718—**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள ஆறுகளில் மணல் எடுத்து வியாபாரம் செய்து வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டிலுள்ள ஆறுகளில் எங்கெங்கு மணல் எடுக்க அனுமதிக்கலாம் என்பது பற்றி அந்தந்த மாவட்டத்திலுள்ள பொதுப் பணித் துறையில், நிர்வாகப் பொறியாளரின் கருத்துக்கள் பெறப்பட்டு, அவர்கள் இசைவளித்த இடங்களில் மட்டும், விதிமுறைகளுக்கு உட்பட்டு, ஆற்று மணல் எடுத்து வியாபாரம் செய்ய குவாரி குத்தகைகள் அந்தந்த மாவட்ட ஆட்சியரால் விதிமுறைகளின்படி வழங்கப்பட்டு வருகின்றன.



1997 ஏப்ரல் 30]

(ஆ) குவாரி குத்தகைகள் இல்லாமல் அல்லது அனுமதி பெறாமல் கள்ளத்தனமாக ஆறுகளில் மணல் எடுத்து வியாபாரம் செய்வதைத் தடுக்க அரசு உரிய நடவடிக்கைகள் எடுத்து வருகின்றன.

5—

## இளநிலை உதவியாளர், தட்டச்சர், சுருக்கெழுத்துத் தட்டச்சர் ஆகியவர்களுக்குப் பணி நியமனம்

வினா எண் 795—**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தில் இளநிலை உதவியாளர், தட்டச்சர், சுருக்கெழுத்துத் தட்டச்சர் ஆகியவர்களுக்கான தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டும், இதுவரை பணி நியமனம் செய்யப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், உடனே பணி நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): வேலைவாய்ப்பகங்கள் மூலம் தற்காலிகப் பணி நியமனம் செய்யப்பட்ட இளநிலை உதவியாளர்கள், தட்டச்சர்கள், சுருக்கெழுத்து-தட்டச்சர்கள் ஆகியோருக்கு நிரந்தரப் பணி வாய்ப்பு அளிக்கும் நோக்கத்தோடு இவர்களுக்கு எனத் தனியாக ஒரு சிறப்புத் தகுதித் தேர்வு கடந்த 24-6-1995 அன்று அரசின் ஒப்புதலுடன் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்டது. இத்தேர்வை எழுதிய மொத்தம் 4557 பேர்களில், 30 விழுக்காட்டிற்குமேல் மதிப்பெண் பெற்று தகுதி பெற்றோரின் பதிவெண்கள் 24-2-1996 மற்றும் 25-2-1996 ஆகிய தேதிகளில் வெளியிடப்பட்டன. இவர்கள் வேலை வாய்ப்பகங்கள் மூலம் தற்காலிகமாகப் பணி நியமனம் செய்யப்பட்டனரா என்பதற்கான மூலக்கோப்புகளையும், சம்பளப்

[1997 ஏப்ரல் 30

பட்டியல்களையும் சரிபார்க்கும் பொருட்டு, அந்தந்த மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் மூலம் ஆவணங்களை வைத்து உறுதி செய்த பின்பே இவர்களுக்கு நிரந்தரப்பணி வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். தற்போது இப்பணிகள் யாவும் முடிக்கப் பெற்றுள்ளன. ஆவணங்கள்படி சரியான தகவல் தந்துள்ள அனைவருக்கும் நிரந்தரப் பணிக்கான ஒதுக்கீடு தேர்வாணையத்தின் மூலம் விரைவில் செய்யப்படவுள்ளது.

6—

### தமிழ்நாடு சட்டமன்றத்திற்குப் புதிய கட்டிடம் கட்டுதல்

வினா எண் 830—**திரு. கே. சுப்பராயன் மற்றும் திரு. வ. அன்பழகன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு சட்டமன்றத்திற்குப் புதிய கட்டிடம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தமிழ்நாடு சட்டமன்றத்திற்குப் புதிய கட்டிடம் கட்டும் திட்டம் ஏதும் இல்லை.

7—

### நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டத்தில் காவேரிப் படுகையிலிருந்து எடுக்கப்படும் எண்ணெய்

வினா எண் **934—திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகை-காயிதே மில்லத் மாவட்டத்தில் காவேரிப் படுகையிலிருந்து எடுக்கப்படும் எண்ணெய்க்கு, மத்திய அரசிடமிருந்து, தமிழ்நாடு அரசுக்கு உரிய பங்குத் தொகை (ராயல்டி) வழங்கப்படுகிறதா?



1997 ஏப்ரல் 30 ]

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) ஆம். நாகப்பட்டினம்—காயிதே மில்லத் மாவட்டத்தில் காவேரிப்படுகையில் எடுக்கப்படும் கச்சா எண்ணெய் மற்றும் இயற்கை வாயுவிற்கு திருவாளர்கள் எண்ணெய் மற்றும் நிலவாயு நிறுவனத்தால் ராயல்டி தொகை செலுத்தப்படுகிறது.

(ஆ) திருவாளர்கள் எண்ணெய் மற்றும் நிலவாயு நிறுவனத்திடமிருந்து கச்சா எண்ணெய்க்காக 1993-94, 1994-95 மற்றும் 1995-96-ஆம் ஆண்டுகளில் முறையே ரூ. 17,83,60,039/-, ரூ. 20,42,79,256/- மற்றும் ரூ. 19,49,76,337/- ராயல்டி தொகையாக வசூலிக்கப்பட்டன.

8—

### முன்னாள் முதலமைச்சருக்காக ஏற்படுத்தப்பட்ட தனிக் காவலர் பிரிவு

வினா எண் **953—திரு. வ. அன்பழகன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1991-96-ஆம் ஆண்டு காலத்தில் அன்றைய முதலமைச்சருக்கென தனி போலீஸ் பிரிவு ஏற்படுத்தப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

(இ) அப்படையின் தற்போதைய பயன்பாடு என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 28-10-91 அன்று முன்னாள் முதலமைச்சருக்குப் பாதுகாப்பு வழங்குவதற்கென "சிறப்புப் பாதுகாப்புப் படை" ஏற்படுத்தப்பட்டது. பின்னர், 1993 ஆம் ஆண்டில் முதலமைச்சர், முன்னாள் முதலமைச்சர்

[1997 ஏப்ரல் 30

மற்றும் அவர்களது குடும்பத்தினருக்குப் பாதுகாப்பு வழங்குவதற்காக "சிறப்புப் பாதுகாப்புப் படை" ஏற்படுத்துவதற்கான சட்டம் பிறப்பிக்கப்பட்டது.

(இ) "சிறப்புப் பாதுகாப்புப் படைச் சட்டம்" 5-6-1996 அன்று சட்ட நீக்கம் செய்யப்பட்டுள்ளது.

**9—**

## தலைமைச் செயலகத்தை இடம் மாற்றும் செயற்குறிப்பு

வினா எண் **1010—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தலைமைச் செயலகத்தை வேறு இடத்திற்கு மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தலைமைச் செயலகத்தை வேறு இடத்திற்கு மாற்றும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

**10—**

## பாலக்கோடு ஆலையின் சார்பில் இயங்கும் பல்தொழில் நுட்பப் பயிலகம்

வினா எண் **1215—திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டக் கூட்டுறவு சர்க்கரை ஆலை பாலக்கோடு ஆலையின் சார்பில் இயங்கும் பல்தொழில் நுட்பப் பயிலகத்தில் ஆலைக்குக் கரும்பு வழங்கும் விவசாயிகளின் குழந்தைகளுக்குக் கல்விக் கட்டணம் அதிகமாகவும், ஆலைக்குக் கரும்பு வழங்காத விவசாயிகளின் குழந்தைகளுக்குக் கல்விக் கட்டணம் குறைவாகவும் வாங்கக் காரணம் என்ன?



1997 ஏப்ரல் 30]

(ஆ) இக்குறைபாடு களையப்படுமா?

(இ) சென்ற ஆண்டு அதிகமாக வசூல் செய்த தொகையைத் திருப்பித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) ஆலைக்குக் கரும்பு வழங்கும் விவசாயிகளின் குழந்தைகள் கரும்பு வழங்காத விவசாயிகளின் குழந்தைகள் என்ற பாகுபாடு கட்டணம் வசூலிப்பதில் காட்டப்படுவதில்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

**11—**

## உலக வங்கித் திட்டம் மூலம் பெற்ற கடன் தொகை

வினா எண் **1529—பே.வேழுநீ. வெங்கடேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உலக வங்கித் திட்டத்தின் மூலம் கடந்த அரசு பெற்ற கடன் தொகை எவ்வளவு?

(ஆ) அத்தொகை எந்தெந்த மாவட்டங்களில் செலவு செய்யப்படுகிறது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) உலக வங்கித் திட்டத்தின் மூலம் 1991-92 முதல் 1995-96 வரை கடந்த அரசு பெற்ற மொத்த தொகை ரூ. 1273.67 கோடி ஆகும். இதில் கடனாக பெற்ற தொகை ரூ. 891.57 கோடிகளாகும். மானியமாக பெற்ற தொகை ரூ. 382.10 கோடிகளாகும்.

(ஆ) விவர அறிக்கை தனியாக வைக்கப்பட்டுள்ளது.

## அறிக்கை

உலக வங்கித் திட்டத்தின் மூலம் கடந்த அரசு பெற்ற மொத்த தொகை மற்றும் செயல்படும் மாவட்டங்கள்

(ரூபாய் கோடியில்)

| வ. எண். | திட்டம் | பெறப்பட்ட கடன்/மானியம் (வருடம் வாரியாக) 91-92 | 92-93 | 93-94 | 94-95 | 95-96 | மொத்தம் | திட்டம் செயல்படும் மாவட்டங்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | தமிழ்நாடு நகர்பகுதி மேம்பாட்டுத் திட்டம். | 47.74 | 66.24 | 119.82 | 97.73 | 39.45 | 370.98 | பெரம்பலூர் திருவள்ளுவர் மாவட்டம் நீங்கலாக அனைத்து மாவட்டங்களும். |
| 2. | தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் துப்புரவுத் திட்டம். | 30.01 | 52.09 | 73.27 | 46.57 | 13.76 | 215.70 | கோவை, சேலம் மற்றும் மதுரை மாவட்டங்கள். |
| 3. | சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் துப்புரவுத் திட்டம். | 18.79 | 17.19 | 29.57 | 20.04 | 7.11 | 92.70 | சென்னை மாநகரம். |
| 4. | தமிழ்நாடு ஒருங்கிணைந்த சத்துணவுத் திட்டம். | 4.53 | 14.49 | 38.66 | 45.12 | 36.64 | 139.44 | நீலகிரி, புதுக்கோட்டை, சென்னை மற்றும் செங்கல்பட்டு நீங்கலாக அனைத்து மாவட்டங்களும். |
| 5. | தமிழ்நாடு வேளாண்மை வளர்ச்சித் திட்டம். | 3.00 | 16.31 | 32.09 | 47.41 | 53.19 | 152.00 | அனைத்து மாவட்டங்களும். |
| 6. | தொழிற் பயிற்சித் திட்டம். | 0.39 | 0.62 | 0.98 | 1.01 | 2.02 | 5.02 | அனைத்து மாவட்டங்களும். |
| 7. | அணைக்கட்டுகள் பாதுகாப்பு மற்றும் மறுவாழ்வு பணிகள் திட்டம். | 0.85 | 0.81 | 1.10 | 1.22 | 1.36 | 5.34 | திருநெல்வேலி, கட்டபொம்மன், கன்னியாகுமரி, திருச்சி, தென் ஆற்காடு வள்ளலார், விழுப்புரம் இராமசாமி படையாச்சி, இராமநாதபுரம், திருவண்ணாமலை சம்புவராயர், பெரியார், மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்கள். |
| 8. | மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டம் | - | - | - | 3.57 | 25.19 | 28.76 | திருவண்ணாமலை சம்புவராயர், தென் ஆற்காடு வள்ளலார் மற்றும் தருமபுரி மாவட்டங்கள். |



(ரூபாய் கோடியில்)

| வ. எண். | திட்டம் | பெறப்பட்ட கடன்/மானியம் (வருடம் வாரியாக) 91-92 | 92-93 | 93-94 | 94-95 | 95-96 | மொத்தம் | திட்டம் செயல்படும் மாவட்டங்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9. | தொழில் நுட்பாளர் கல்வித் திட்டம். | - | 6.35 | 9.19 | 3.48 | 1.76 | 20.78 | அனைத்து மாவட்டங்களும். |
| 10. | வேளாண் மனித ஆற்றல் மேம்பாடு திட்டம். | - | - | - | - | 9.34 | 9.34 | அனைத்து மாவட்டங்களும். |
| 11. | தேசிய நீர்வள நிர்வாகத் திட்டம். | 8.63 | 13.34 | 18.23 | 18.93 | 50.15 | 59.28 | திருவண்ணாமலை சம்புவராயர், திருநெல்வேலி கட்டபொம்மன், கன்னியாகுமரி, மதுரை, பெரியார், கோயம்புத்தூர், திருச்சி, தென் ஆற்காடு வள்ளலார் மாவட்டங்கள். |
| 12. | தேசிய பட்டுப்புழு வளர்ப்புத் திட்டம். | 2.45 | 4.33 | 4.81 | 4.90 | 4.53 | 21.02 | தருமபுரி, சேலம், கோயம்புத்தூர், பெரியார், நீலகிரி, மதுரை, திருச்சி, நாகை காயிதே மில்லத், வட ஆற்காடு அம்பேத்கர், திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டங்கள். |
| 13. | இந்திய மக்கள் தொகை திட்டம். | 7.65 | 7.11 | 20.40 | 13.25 | 17.00 | 65.41 | அனைத்து மாவட்டங்களும். |
| 14. | தேசிய நெடுஞ்சாலைத் திட்டம். | 7.22 | 8.50 | 22.50 | 16.00 | 2.14 | 56.36 | செங்கல்பட்டு மாவட்டம். |
| 15. | பெரியார் வைகை திட்டம். | 4.11 | 9.33 | 18.10 | திட்டம் முடிவுற்றது | | 31.54 | மதுரை மாவட்டம். |
| | | | | | | மொத்தம் | 1273.67 | |

[1997 ஏப்ரல் 30

12—

**காவேரிப்பட்டினத்தில் கிரானைட் தொழிற்சாலை துவங்குதல்**

வினா எண் **1630—திரு. பே.வே.ஸ்ரீ. வெங்கடேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தர்மபுரி மாவட்டம் காவேரிப்பட்டினத்தில் கிரானைட் தொழிற்சாலை துவங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

தற்பொழுது வாய்ப்புகள் இல்லை.

13—

**தமிழக தொழில் துறை வளர்ச்சி**

வினா எண் **1679—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகம் தொழில் துறை வளர்ச்சியில் இந்திய அளவில் எந்த இடம் வகிக்கிறது?

(ஆ) முதல் இடத்திற்குக் கொண்டுவர அரசின் திட்டம் என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) தொழிற்சாலைகளின் உற்பத்தி, தொழில்களில் நிலையான முதலீடு, கூடுதல் முதலீடு, நிதி நிறுவனங்களின் கடன் பெறுதல் போன்ற பல்வேறு அளவுகோல்களால் தொழில் வளர்ச்சி மதிப்பிடப்படுகிறது. அனைத்திந்திய அளவில் இதற்கான குறிப்பிட்ட ஒரு அளவுகோல் வரையறுக்கப்படவில்லை. எனவே, இக்கேள்விக்கு திட்டவட்டமாக விடையளிப்பது எளிதல்ல. மைய அரசு ஏற்பளித்த தொழில் முதலீட்டினைப் பொறுத்தமட்டில் தமிழகம் ஐந்தாம் இடத்தையும், இம்முதலீட்டின் செயலாக்கம் குறித்த மட்டில் எட்டாம் இடத்தையும், உரிமம் தேவையில்லாத தொழில்கள் துவங்குவது



1997 ஏப்ரல் 30 ]

பொறுத்தமட்டில் ஆறாம் இடத்தையும், நிதி நிறுவனங்கள் கடன் அளித்ததைப் பொறுத்தவரை மூன்றாம் இடத்தையும் வகிக்கிறது.

(ஆ) அடிப்படை வசதிகளான மின்சாரம், தண்ணீர் வசதி, வடிகால், சாலைகள், ரெயில் போக்குவரத்து, துறைமுகங்கள், தகவல் தொடர்பு வசதிகள், நிலம், பல்வேறு துறைகள் மூலம் பெறவேண்டிய அனுமதிகள் விரைவில் பெறுவதற்கான விதிமுறைகள், திறமை வாய்ந்த கட்டுப்பாடுள்ள தொழிலாளர்கள், உறுதியான வெளிப்படையான கொள்கைகளுடன் செயல்படும் அரசு, இவை ஒரு மாநிலத்தில் இருந்தால், அங்கே நல்ல தொழில் வளர்ச்சி ஏற்பட துணை புரியும். மேலும், பொருளாதார சலுகைகளும் தேவைப்படுகிறது. தொழில் தொடங்குவோருக்கு ஆதரவு அளித்து அவர்களின் பிரச்சினைகளில் உடனுக்குடன் ஆக்கபூர்வமான முடிவு எடுக்கும் அலுவலர்களும் அவசியம். இவைகள் எல்லாம் நம் மாநிலத்தில் உறுதி செய்து உள்ளூர், வெளியூர் தொழில் முனைவோர்களை தமிழகத்தின்பால் ஈர்த்து தமிழகத்தை தொழில் வளர்ச்சியில் முதலிடத்திற்குக் கொண்டு வருவது அரசின் திட்டம்.

14—

**Tools International Company at Hosur**

வினா எண் **1747—திரு. பி. வெங்கடசாமி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(a) Whether the Tools International Company at Hosur Industrial Complex Hosur has been closed?

(b) If so, whether any settlement has been made?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய கடன் நிலுவைத் தொகையைச் செலுத்தாத காரணத்தால் இந்நிறுவனம் மாநில நிதி நிறுவனச் சட்டம் (State Financial Corporations Act) 29 பிரிவின்கீழ் மேற்படி கம்பெனியின் சொத்துக்கள்

[1997 ஏப்ரல் 30

8-2-1993 அன்று கைவசப்படுத்தப்பட்டது. எனவே, இத்தொழிற்சாலை மூடப்பட்டுள்ளது. இந்தக் கம்பெனி தொழில் மற்றும் நிதி சீரமைப்பு மன்றத்திடம் (BIFR) தான் நலிவுற்ற தொழிற்சாலை என நலிவுற்ற தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்தது. மேற்படி மன்றம் டூல்ஸ் இண்டர்நேஷனல் கம்பெனியை நலிவுற்ற கம்பெனி என அறிவித்தது. மேற்படி மன்றத்தின் முடிவை எதிர்த்து, தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம், தொழில் மற்றும் நிதி சீரமைப்பு மேல்முறையீட்டு மன்றத்திடம் (AAIFR) முறையீடு செய்துள்ளது.

**15—**

## தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையத்தால் தேர்வு செய்யப்பட்ட உதவி ஆய்வாளர் பணியிடங்கள்

வினா எண் **1817—திரு. டி. மணி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு அரசாணை நிலை எண் 1164, உள் (காவல் 3) துறை, நாள் 1-8-1995-ன்படி, தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையத்தால் உதவி ஆய்வாளர் பணியிடத்திற்குத் தேர்வு செய்யப்பட்ட 1100 பேரில் நியமன உத்தரவு வழங்கப்பட்டவர்களைத் தவிர மீதி உள்ளவர்களுக்கு எப்போது நியமன உத்தரவு வழங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையத்தால் உதவி ஆய்வாளர் பணியிடத்திற்கு தேர்வு செய்யப்பட்ட 1100 பேர்களில் 500 பேர் நியமன உத்தரவு வழங்கப்பட்டு 1-3-96 முதல் பயிற்சிக்கு அனுப்பப்பட்டுள்ளனர். மீதமுள்ள 600 நபர்களையும் பயிற்சிக்கு அனுப்புவது தொடர்பான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**16—**

## Government Employees Residing in Hill areas of Hosur and Denkonikottai Taluks

வினா எண் **1844—திரு. பி. வெங்கடசாமி:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1997 ஏப்ரல் 30 ]

(a) Whether there is any proposal to give House Rent Allowance and Hill Allowance to Government Employees Residing in Hill areas of Hosur and Denkonikottai Taluks? and;

(b) If so, the details thereof ?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): அரசு ஆணை எண் 218, நிதி (படிகள்)த் துறை, நாள் 23-3-1993-ன்படி ஓசூர் மற்றும் தென்கனிக்கோட்டை தாலுக்காக்களில் பணிபுரியும் அரசு ஊழியர்கள் குறைந்தபட்சமாக ரூ. 40-ம் அதிகபட்சமாக ரூ. 250-ம் வீட்டு வாடகைப்படி பெற்று வருகின்றனர். அரசு ஆணை எண் 148, நிதி (படிகள்)த் துறை, நாள் 12-2-1990-ன்படி அவர்கள் மலைப் பிரதேசப் படி பெற்று வருகின்றனர்.

**17—**

## என்ஜினியரிங் தொழிற்சாலைகளுக்குத் தேவையான வார்ப்பு இரும்பு

வினா எண் **1942—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) என்ஜினியரிங் தொழிற்சாலைகளுக்குத் தேவையான வார்ப்பு இரும்பு (Pig Iron) கிடைப்பதில் தட்டுப்பாடு உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், தட்டுப்பாட்டை நீக்க மாநில அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) தற்சமயம் வார்ப்பு இரும்பு தட்டுப்பாடு இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

[1997 ஏப்ரல் 30

**18—**

### கருப்பஞ்சாற்றுக் கசண்டுகள் ஏற்றுமதி

வினா எண் **1956—திரு. பெ.சு. திருவேங்கடம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1994-95, 1995-96-ல் சேவைக் கட்டணம் வசூலிக்காமல் மொலாசஸ் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) இம்மாநிலத்திலிருந்து வெளி மாநிலங்களுக்கும் அயல் நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படும் கருப்பஞ்சாற்றுக் கசண்டின் (Molasses) மீது மெட்ரிக் டன் ஒன்றுக்கு ரூ. 200/- நிர்வாகச் சேவைக் கட்டணமாக அரசுக்கு வசூலிக்கப்பட வேண்டும் என்ற ஆணை 8-7-96-இல் பிறப்பிக்கப்பட்டு நடைமுறைக்கு வந்துள்ளது. இதற்கு முன்பு 1994-95 மற்றும் 1995-96 ஆம் ஆண்டுகளில் கருப்பஞ்சாற்றுக் கசண்டு இம்மாநிலத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட போதிலும் ஏற்றுமதிக்கு சேவைக் கட்டணம் ஏதும் வசூலிக்கப்படவில்லை. 8-7-96 முதல் ஏற்றுமதி செய்யப்படும் கருப்பஞ்சாற்றுக் கசண்டு மீது நிர்வாகச் சேவைக் கட்டணம் மெட்ரிக் டன் ஒன்றுக்கு ரூ. 200/- வசூலிக்கப்பட்டு வருகிறது.

**19—**

### Additional Benches in the Tamil Nadu Administrative Tribunal

வினா எண் **1957—திரு. பி. வெங்கடசாமி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

Whether there is any proposal for starting Additional Aenches to clear the cases pending in the Tamil Nadu Administrative Tribunal?



1997 ஏப்ரல் 30]

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

இல்லை.

**20—**

### "போர்டு பியாண்டா" கார் தொழிற்சாலை

வினா எண் **197—டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை அருகே மறைமலை நகரில் அமெரிக்கக் கம்பெனியான 'போர்டு பியாண்டா' கார் தொழிற்சாலைக்கு 'சூப்பர் மெகா தொழிற்சாலை' என்ற பெயரில் 'விற்பனை வரிச்சலுகை' முப்பது ஆண்டுகட்கு கொடுக்கப்பட்டதால் அரசுக்கு ஏற்படும் இழப்பைத் தவிர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

அரசுக்கும், மஹேந்திரா & மஹேந்திரா மற்றும் போர்டு கம்பெனிகளுக்கும் இடையே ஒப்பந்தம் கையெழுத்தான பிறகு அதை அமுல்படுத்துவதுதான் அரசின் பொறுப்பு. அதனால் இழப்பு ஏதாவது இருந்தால் அதைத் தவிர்க்க தற்போது வழியில்லை.

விற்பனை வரிச்சலுகை கொடுக்கப்பட்டது 30 ஆண்டுகளுக்கு அல்ல; முதலில் 14 வருடத்திற்கும், அந்த 14 வருட காலத்தில் அவர்கள் முதலீடு செய்த தொகை முழுவதும் விற்பனைவரிச் சலுகையாகப் பெற முடியாமல் போனால், மீண்டும் 7 வருடக் [illegible]திற்கு சலு[illegible]த்துள்ளன.

**21—**

### மதுரையிலுள்ள வானொலி நிலையம்

வினா எண் **1976—திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 30-9-1995 அன்று மதுரையில் உள்ள வானொலி நிலையம் தாக்கப்பட்டது குறித்து மதுரை தல்லாகுளம் காவல் நிலையத்தில் புகார் செய்யப்பட்டது உண்மையா?

(ஆ) ஆம் எனில், குற்றவாளிகளின் மீது வழக்கு தொடரப்பட்டுள்ளதா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) ஆறு குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு, அவர்கள் மீது வழக்கு தொடரப்பட்டுள்ளது.

**22—**

## தமிழ்நாடு மக்னீஷியம் மற்றும் மரைன் கெமிக்கல்ஸ் நிறுவனம்

வினா எண் **1977—திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மக்னீசியம் அண்ட் மரைன் கெமிக்கல்ஸ் லிமிடெட் என்ற நிறுவனத்தை தனியாருக்கு விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், தற்போது அதன் நிலை என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தமிழ்நாடு மக்னீஷியம் மற்றும் மரைன் கெமிக்கல்ஸ் நிறுவனத்தை தனியார் மயமாக்க முந்தைய அரசு முடிவெடுத்து அதற்கான நடவடிக்கைகள் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் (டிட்கோ) மூலமாக எடுக்கப்பட்டது. ஆனால் புதிய அரசு பொறுப்பேற்ற பின் ஐதராபாத்திலுள்ள பாதுகாப்பு உலோக ஆய்வுக் கூடத்துடன் இணைந்து மத்திய அரசிடமிருந்து உதவித்தொகை ரூ. 5 கோடியைப் பெற்று புதிய தொழில் நுட்பத்தை உருவாக்கி இந்நிறுவனத்திற்கு புத்துயிரளித்து மீண்டும் உற்பத்தியைத் தொடங்க தேவையான முயற்சிகளை மேற்கொள்ளலாம் என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது.





**23—**

## House Rent Allowance to the employees working in Thally, Kolamangalam and Soolagiri Blocks

வினா எண் **1989—திரு. பி. வெங்கடசாமி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(a) Whether there is any proposal to sanction House Rent Allowance to the employees working in Thally, Kolamangalam and Soolagiri Blocks as being paid to the employees working in Hosur Municipal Areas? and;

(b) if, so the details thereof?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) இத்தகைய கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**24—**

## செந்துறை பகுதியில் கூட்டுறவு சர்க்கரை ஆலை

வினா எண் **2252—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆண்டிமடம் தொகுதி, செந்துறை பகுதியில் கூட்டுறவு சர்க்கரை ஆலை அமைத்துத் தர ஆவன செய்யுமா?

[1997 ஏப்ரல் 30

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

ஆண்டிமடம் தொகுதி செந்துறை பகுதியில் கூட்டுறவுத் துறையில் சர்க்கரை ஆலை அமைக்கும் சாத்தியக் கூறு ஏதும் தற்சமயம் இல்லை.

**25—**

**கல் குவாரிகளில் கொத்தடிமைத்தனத்தை நீக்குதல்**

வினா எண் **2294—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கல் குவாரிகளில் நடத்தப்பட்டு வரும் கொத்தடிமைத்தனத்தை முழுமையாக ஒழித்து, நலிந்த அம்மக்களுக்கே கல் குவாரி அனுமதி வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

கல் குவாரிகளில் கொத்தடிமைகள் இருப்பதை அரசின் கவனத்திற்கு கொண்டு வந்தால், கொத்தடிமைத்தனத்தை ஒழிக்க அரசு தக்க நடவடிக்கை எடுக்கும். நலிந்த மக்களுக்கோ, கொத்தடிமைகளுக்கோ கல் குவாரிகளை வழங்க 1959-ஆம் ஆண்டின் தமிழ்நாடு சிறு கனிம சலுகை விதிகளில் வழிவகை இல்லை.

**26—**

**சென்னை புறநகர்ப் பகுதி காவல் நிலையங்களில் காவலர் எண்ணிக்கையை உயர்த்துதல்**

வினா எண் **3008—திரு. மீ.அ. வைத்தியலிங்கம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை புறநகர்ப் பகுதி காவல் நிலையங்களில் காவலர் எண்ணிக்கையை உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?



1997 ஏப்ரல் 30]

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

**27—**

**பொது புறம்போக்கு நிலங்களில் கிரானைட் குவாரி தொடங்க அரசு அனுமதியளித்த நிலப்பரப்பு.**

வினா எண்.**3257- திரு. இ.ஜி. சுகவனம் :** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பரா.—

(அ) கடந்த ஐந்து ஆண்டுகளில் பொது புறம்போக்கு நிலங்களில் கிரானைட் குவாரி தொடங்க அரசு அனுமதியளித்த நிலப்பரப்பு எத்தனை ஏக்கர்?

(ஆ) பொது புறம்போக்கில் கிரானைட் குவாரி தொடங்கியதில் முறைகேடுகள் நடைபெற்றது குறித்து அரசிடம் தகவல்கள் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) கடந்த ஐந்து ஆண்டுகளில் புறம்போக்கு நிலங்களில் கிரானைட் குவாரி தொடங்க அரசு அனுமதியளித்த நிலப்பரப்பு 7151.51 ஏக்கர்களாகும்.

(ஆ) ஆம். புறம்போக்கு நிலங்களில் கிரானைட் குவாரிகளுக்கான உரிமம் வழங்கும்போது டெண்டர் முறையை கண்டிப்பாகக் கையாளவேண்டும் என்று முந்தைய தி.மு.க அரசு எடுத்த முடிவை புறக்கணித்து விட்டு, புறம்போக்கு குவாரிகளை தங்கள் விருப்பம்போல் யாருக்கு வேண்டுமானாலும் உரிமம் வழங்க ஏதுவாக விதி 39 என்கின்ற விதியை தமிழ்நாடு சிறு கனிம சலுகை விதிகள் 1959-ல் இயற்றி, அரசாங்க வருவாயை பாதிக்கும் முடிவுகள் எடுக்கப்பட்டன. இந்த முறைகேடுகள், ஊழல்களைப்பற்றி தற்போது விசாரணை நடைபெறுகிறது. விசாரணைக்கு பிறகு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.

[1997 ஏப்ரல் 30

28—

**புவியியல் மற்றும் சுரங்கத்துறையின் கனிம ஆய்வுப்பணி**

வினா எண் **3259—திரு. இ.ஜி. சுகவனம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா.—

புவியியல் சுரங்கத் துறை கனிம ஆய்வுப் பணியை விரைந்து மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

புவியியல் மற்றும் சுரங்கத் துறை தமிழ்நாட்டில் பல பகுதிகளில் எட்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் பழுப்பு நிலக்கரி (லிக்னைட்) களிமண் படிவங்கள் (Clay deposits) சிலிகா மணல், மணிக்கற்கள் மற்றும் குறை மணிக்கற்கள் (Precious and semi precious stones) மாலிப்டினம், பிளாட்டினம் வகையைச் சார்ந்த கனிமங்கள், கிராபைட் கனிமங்கள் ஒருங்கிணைந்த புவியியற்பியல் மற்றும் வேதியியல் ஆய்வு மற்றும் கருப்பு மற்றும் பல வண்ண கிரானைட் கற்களுக்கான ஆய்வு மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகின்றன. ஆய்வுகள் முன்னேற்றத்தில் உள்ளன.

29—

**வடஆற்காடு அம்பேத்கர் மாவட்டத்திலுள்ள தனியார் கறுப்புக்கல் குவாரிகள்**

வினா எண். **3262—திரு. இ.ஜி. சுகவனம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) வடஆற்காடு-அம்பேத்கர் மாவட்டத்தில் சில தனியார் கறுப்புக்கல் குவாரிகளிலிருந்து குவாரி கழிவு மற்றும் நிராகரிக்கப்பட்டகல் என்ற வகையில் ஏற்றுமதி தரம் வாய்ந்த கற்களை கடத்திக் கொண்டு செல்வதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இதனைத் தடை செய்ய அரசு முன்வருமா?



1997 ஏப்ரல் 30]

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) வடஆற்காடு அம்பேத்கர் மாவட்டத்தில் தனியார் கறுப்புக்கற்கள் குவாரிகளில் கழிவு மற்றும் நிராகரிக்கப்பட்ட கற்கள் என்ற அடிப்படையில் ஏற்றுமதி தரம் வாய்ந்த கற்கள் எடுத்துச்செல்லப்படுவதில்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

30—

**ஆரணி தொகுதி, தேவிகாபுரம் ஊராட்சிகளில் காவல் நிலையம் அமைத்தல்**

வினா எண் **3362—திரு. ஆர். சிவானந்தம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) ஆரணி தொகுதி, தேவிகாபுரம் ஊராட்சியில் ஒரு காவல் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

31—

**தண்டராம்பட்டு தொகுதியில் காகிதம் தயாரிக்கும் தொழிற்சாலை ஆரம்பித்தல்**

வினா எண் **3380—திரு. கே. மணிவர்மா:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் கிடைக்கும் சக்கையில் இருந்து காகிதம் தயாரிக்கும் தொழிற்சாலை தண்டராம்பட்டு தொகுதியில் ஆரம்பிக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர் :**

(அ) அத்தகைய திட்டம் ஏதுமில்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**32—**

**அரசு வேலைகளுக்கான வயது வரம்பு**

வினா எண் **3538—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) அரசு வேலைகளுக்கு என்ன வயது வரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது?

(ஆ) அதை மாற்றி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை.—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) அரசுப் பணியில் சேர நேரடி நியமனங்களுக்கு வயது வரம்பு 30 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

(ஆ) இல்லை.

**33—**

**அரசு அலுவலகங்களில் கணிப்பொறிகளை அதிக அளவில் பயன்படுத்தல்**

வினா எண் **3652—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

மாநில அரசு அலுவலகங்களில் கணிப்பொறிகளை அதிக அளவில் பயன்படுத்த அரசு ஆவன செய்யுமா?



விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

ஆம்.

தற்போது தலைமைச் செயலகத்திலும் பல்வேறு அரசுத் துறைத் தலைமையிடங்களிலும் கணிப்பொறிகள் நிறுவப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இதுகாறும் 11 தலைமைச் செயலகத் துறைகளிலும், 40 அரசுத் துறைத் தலைமையிடங்களிலும் கணிப்பொறிகள் நிறுவப்பட்டு உள்ளன. மத்திய அரசினரின் தேசிய விவர மையம் மூலமாக அனைத்து மாவட்ட ஆட்சியரின் அலுவலகங்களில் கணிப்பொறிகள் நிறுவப்பட்டு அவைகள் செயற்கைக்கோள் மூலமாக தலைமைச் செயலகத்துடன் இணைக்கப்பட்டு, தேவையான விவரங்களை உடனுக்குடன் பெறவும் அனுப்பவும் பயன்படுத்தப்படுகின்றது. நிதித்துறை வரவு செலவுத் திட்டம் முழுமையாக கணிப்பொறிமயமாக்கப்பட்டுள்ளது. இதுபோலவே மேலும் பல துறைகளிலும் கணிப்பொறி நிறுவுதல், பணியாளர்களுக்கு பயற்சியளித்தல் மற்றும் முக்கிய அரசுத் துறைகளை முழுமையாக கணிப்பொறிமயமாக்குதல் ஆகியவற்றிற்கு தேவையான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகின்றது.

**34—**

**அரசு ஊழியர்களின் பிள்ளைகளுக்காக அளிக்கப்படும் கல்விக் கடன் தொகை**

வினா எண் **3662—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா.—

கல்லூரிகளில் படிக்கின்ற அரசு ஊழியர்களின் பிள்ளைகளுக்காக அளிக்கப்படுகின்ற கல்விக் கடன் தொகையை 5,000 ரூபாயாக அதிகரிக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

கல்லூரிகளில் படிக்கின்ற அரசு ஊழியர்களின் பிள்ளைகளுக்காக அளிக்கப்படுகின்ற கல்விக் கடன் தொகையை ரூ. 5,000/-மாக உயர்த்தும் உத்தேசம் தற்போது இல்லை.

**35—**

### கள்ளச்சாராயத்தை கட்டுப்படுத்த மாவட்ட அளவில் கண்காணிப்புக் குழுக்களை அமைத்தல்.

வினா எண் **3722—டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

கள்ளச்சாராயத்தைக் கட்டுப்படுத்தவும், விஷச்சாராயம் அருந்தி சாவதைத் தடுக்கவும், காவல்துறை அல்லாத உயர்மட்டக்குழு, மாவட்ட அளவில் கண்காணிப்புக் குழு போன்ற குழுக்களை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

காவல்துறை அல்லாத உயர்மட்டக் குழு மற்றும் மாவட்ட அளவிலான கண்காணிப்புக் குழு அமைக்கும் உத்தேசமில்லை.

**36—**

### மாதனூரில் காவல் நிலையம் அமைத்தல்

வினா எண் **3906—திரு. வி. கோவிந்தன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரணாம்பட்டு தொகுதி, மாதனூரில் காவல் நிலையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.





**37—**

### திருப்பத்தூரில் காவல் துறை கட்டுப்பாட்டறை அமைத்தல்

வினா எண் **3943—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகரில் காவல்துறை கட்டுப்பாட்டறை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): அரசாணை (பல்வகை) எண் : 1254, உள் துறை, நாள் 18-8-1995-ல், திருப்பூரில் ஒரு காவல் கட்டுப்பாட்டறை தோற்றுவிக்க ஏற்கெனவே ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அவ்வாணையின்படி திருப்பூர் நகரில் 22-11-1995 முதல் காவல் கட்டுப்பாட்டறை இயங்கி வருகிறது.

**38—**

### திருப்பூர் தெற்கு பகுதியில் தீயணைப்பு நிலையம் அமைத்தல்

வினா எண் **3944—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா.—

திருப்பூர் தெற்கு பகுதியில் ஒரு தீயணைப்பு நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

இல்லை.

**39—**

### இந்துஸ்தான் போட்டோ பிலிம் தொழிற்சாலை

வினா எண் **3945—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1997 ஏப்ரல் 30

ஊட்டி, இந்துஸ்தான் போட்டோ பிலிம் தொழிற்சாலை மூடப்படாமல் தடுக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

ஊட்டியில் உள்ள இந்துஸ்தான் போட்டோ பிலிம் தயாரிப்பு நிறுவனத்தை புனரமைக்க தொழில் மற்றும் நிதி புனரமைப்புக் கழகம் (BIFR) பரிசீலனை செய்து வருகிறது. அக்கழகத்தின் முடிவிற்கேற்ப மேல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**40—**

**ஊசூர் பகுதியில் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை தொடங்குதல்**

வினா எண் **3946—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா.—

வடஆற்காடு—அம்பேத்கர் மாவட்டம் வேலூர் வட்டத்தில் ஊசூர் பகுதியில் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை தொடங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதல் அமைச்சர்:**

இல்லை.

**41—**

**திருவண்ணாமலையிலுள்ள காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் அலுவலகம்**

வினா எண் **4091—திரு கொ. வி. நன்னன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) செங்கம் பகுதியிலிருந்து, திருவண்ணாமலைக்கு மாற்றம் செய்யப்பட்ட காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் அலுவலகம் மீண்டும் செங்கத்திற்கு மாற்றம் செய்யப்படுமா?



1997 ஏப்ரல் 30]

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): ஆம். பரிசீலனையில் உள்ளது.

**42—**

**மன்னார்குடியில் சர்க்கரை ஆலை தொடங்குதல்.**

வினா எண் **4101—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா.—

ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டம், மன்னார்குடியில் சர்க்கரை ஆலை தொடங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

இல்லை.

**43—**

**திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தை தொழில் துறையில் பின்தங்கிய மாவட்டமாக அறிவித்தல்.**

வினா எண் **4201—திரு. ஆர். சிவானந்தம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தை தொழில் துறையில் பின்தங்கிய மாவட்டமாக அறிவிக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

அரசாணை எண் 41, தொழில் துறை, நாள் 18-3-1996 மூலம் தமிழக அரசு வட்டங்களுக்கு பதிலாக வட்டாரங்களை தொழிலில்

[1997 ஏப்ரல் 30

பின்தங்கிய/மிகவும் பின்தங்கிய பகுதிகளாக அறிவித்துள்ளது. இவ்வாணையின்படி, திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தில் உள்ள மொத்தம் 22 வட்டாரங்களில், 7 வட்டாரங்கள் தொழிலில் மிகவும் பின்தங்கிய வட்டாரங்களாகவும், 13 வட்டாரங்கள் பின்தங்கிய வட்டாரங்களாகவும் அறிவிக்கப்பட்டுள்ளன.

**44—**

**மணவாளக்குறிச்சியிலிருந்து ஏற்றுமதியான மணலின் மொத்த அளவு.**

வினா எண் **4333—திரு. டி. மணி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) 1994-95-ல் கன்னியாகுமரி மாவட்டம், மணவாளக்குறிச்சியிலிருந்து ஏற்றுமதியான மணலின் மொத்த அளவு எவ்வளவு?

(ஆ) மணல் எந்தெந்த நாடுகளுக்கு அனுப்பப்படுகிறது?

(இ) இதனால் அரசுக்குக் கிடைக்கும் அன்னியச் செலாவணி எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மணவாளக்குறிச்சி இந்தியன அரிய மணல் ஆலையிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட மணலின் மொத்த அளவு 31150.82 மெட்ரிக் டன்கள்.

(ஆ) நெதர்லாண்ட்ஸ், ஈரான், ஜப்பான், இங்கிலாந்து முதலிய நாடுகளுக்கு அனுப்பப்படுகிறது.

(இ) இதனால் கிடைத்துள்ள அன்னியச் செலாவணி 24,55,028.65 அமெரிக்க டாலர்களாகும், அதாவது ரூ.773.38 இலட்சம்.



1997 ஏப்ரல் 30]

**45—**

**தமிழ்நாடு சிறப்புக் காவல்படை மற்றும் ஆயுதப்படைப் பிரிவுகளில் பணியாற்றும் உதவி ஆய்வாளர்கள்.**

வினா எண் **4524—திரு. மு.க. ஸ்டாலின் மற்றும் திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா.—

தமிழ்நாடு காவல் துறை ஆணையத்தின் பரிந்துரைப்படி தமிழ்நாடு சிறப்புக் காவல்படை மற்றும் தமிழ்நாடு ஆயுதப்படை பிரிவுகளில் பணியாற்றும் உதவி ஆய்வாளர்களுக்குச் சிறப்பு பயிற்சி அளித்து தமிழகத்தில் காலியாகவுள்ள சட்டம் மற்றும் ஒழுங்கு பிரிவுக்கு மாற்றி பணியமர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

தமிழ்நாடு சிறப்புக்காவல் படை மற்றும் சேமப்படைப்பிரிவுகளில் பணிபுரிந்துவரும் உதவி ஆய்வாளர்களை, சில தகுதிகளுக்குட்பட்டு, தக்க பயிற்சி அளித்த பின்னர், சட்டம்-ஒழுங்கு பிரிவிற்கு மாறுதல் செய்வது தொடர்பாக அரசாணை எண் 1512, உள் துறை, நாள் 9-10-1996-ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

**46—**

**உதவி ஆய்வாளர் பணித்தேர்வில் காவல் துறையில் பணியாற்றும் பட்டதாரி காவலர்கள் மற்றும் தலைமைக் காவலர்கள்.**

வினா எண் **4525—திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு நிர்வாகத் தீர்பாணையத்தின் தீர்ப்பிற்கிணங்க அரசு வெளியிட்ட அரசாணை எண் 1054/95-ன்படி உதவி ஆய்வாளர் பணித் தேர்வில் காவல் துறையில் பணியாற்றும் பட்டதாரிக் காவலர்கள் மற்றும் தலைமைக் காவலர்களுக்கு 20% ஒதுக்கீடு தேர்வு செய்யப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) காவல் துறையில் பணியாற்றும் பட்டதாரிக் காவலர்கள் மற்றும் தலைமைக்காவலர்களுக்கென, உதவி ஆய்வாளர்களாக (Sub-Inspector of Police) நேரடித் தேர்வு அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய பணியிடங்களில் 20% இடங்களை ஒதுக்கிவைத்து, அந்தப் பணியிடங்களுக்கு தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையம் சிறப்புத் தேர்வினை நடத்தி, 267 தகுதி வாய்ந்த பட்டதாரிக்காவலர்/ தலைமைக்காவலர்களைக் கொண்ட தெரிவுப் பட்டியலை (Selection List) அளித்துள்ளது. இந்த 267 நபர்களுக்கு உதவி ஆய்வாளர் பதவிக்குரிய அடிப்படைப் பயிற்சியினை அளிப்பது குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**47—**

**மேல்பட்டி புறக்காவல் நிலையத்தை காவல் நிலையமாக மாற்றல்**

வினா எண் **4602—திரு. வி. கோவிந்தன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரணாம்பட்டு தொகுதி, மேல்பட்டி புறக்காவல் நிலையத்தை காவல் நிலையமாக மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) : இல்லை.

**48—**

**சிவகங்கை ஒன்றியத்தை தொழிலில் பின்தங்கிய பகுதியாக அறிவித்தல்**

வினா எண் **4614—திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா.—





பசும்பொன் முத்து இராமலிங்கத்தேவர் மாவட்டம், சிவகங்கை ஒன்றியத்தை தொழிலில் பின்தங்கிய பகுதியாக அறிவிக்க அரசு முன் வருமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

இல்லை.

**49—**

**மனித உரிமைக் குழுவிற்கு மாநில காவல் துறையைக் கண்காணிக்கவும், ஒழுங்கமைக்கவும் அதிகாரம் வழங்கல்**

வினா எண் **4669—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மனித உரிமைக் குழுவிற்கு மாநில காவல்துறையைக் கண்காணிக்கவும், ஒழுங்கமைக்கவும், அதிகாரம் வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மனித உரிமைக் குழுவிற்கு மாநில காவல்துறையைக் கண்காணிக்கவும், ஒழுங்கமைக்கவும்,. அதிகாரம் வழங்கும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

**50—**

**கள்ளிக்குடி நகரில் தீயணைப்பு நிலையம் அமைத்தல்**

வினா எண் **4907—திரு. எம். முத்துராமலிங்கம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமங்கலம் தொகுதி, கள்ளிக்குடி நகரில் தீயணைப்பு நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) கள்ளிக்குடியில் புதிதாக தீயணைப்பு நிலையம் அமைக்கும் அவசியம் இல்லை

(ஆ) எழவில்லை.

**51—**

**கூடக்கோவிலில் காவல் நிலையம் அமைத்தல்**

வினா எண் **4908—திரு. எம். முத்துராமலிங்கம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமங்கலம் தொகுதி, கூடக்கோவிலில் காவல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

**52—**

**நகரங்களில் குற்ற நடவடிக்கை பெருகும் காரணத்தை சமூக ஆய்வு நடத்தல்**

வினா எண் **4950—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமத்தைக் காட்டிலும் நகரங்களில் குற்ற நடவடிக்கை பெருகி வரக் காரணம் என்ன?

(ஆ) இது குறித்து விரிவான முறையில் சமூக ஆய்வு நடத்த அரசு முன் வருமா?



விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) கிராமத்தைக் காட்டிலும் நகரங்களில் கீழ்க்கண்ட காரணங்களால் குற்றங்கள் பெருகி வருகின்றன:—

(1) படித்த வாலிபர்களிடம் பெருகிவரும் வேலையில்லாத் தன்மை.

(2) குற்றவாளிகள் நகரங்களில் சுலபமாக ஒளிந்து வாழும் அமைப்பு முறை உள்ளது. ஆனால் கிராமங்களில் அத்தகையவர்களை சுலபமாகக் கண்டறிந்து கண்காணிக்கப்படுகிறது.

(3) கிராமங்களில் வாழ்பவர்களிடம் உள்ள ஒட்டுமொத்த இனம்/சாதி அடிப்படையிலான நல்லிணக்க உறவுகள் மற்றும் தொடர்புகள் குற்றவாளிகளின் மனதில் குற்ற உணர்வைத் தடுக்கிறது.

(4) புறநகர்ப் பகுதிகளில் காவலர்கள் சட்டம் மற்றும் ஒழுங்கு, பந்தோபஸ்து பணிகளில் அதிகக் கவனம் செலுத்த வேண்டியுள்ளதால் குற்றத்தடுப்பு நடவடிக்கைகள் பாதிக்கப்படுகின்றன.

(5) நகரங்களில் வாழும் மக்களிடம் காணப்படும் அதிக பணம் சம்பாதித்து வீட்டு உபயோகப் பொருள்களை அதிக அளவில் வாங்க வேண்டும் என்ற மனப்பாங்கு, பேராசை, ஒருவர்க்கொருவரிடம் உள்ள நம்பிக்கையின்மை, குறைந்துவரும் நல்லியல்புகள் போன்ற காரணங்களால் குற்றங்கள் பெருக ஏதுவாகின்றன.

6. கிராமங்களில் உள்ளது போல் கண்காணிப்புக்குழு (Vigilance Committee) போதிய அளவில் நகரங்களில் இல்லாமை.

7. மேலும் குற்றவாளிகள் ஒரு நகரப்பகுதியில் வாழ்ந்து கொண்டு வேறொரு நகர்ப் பகுதியில் குற்றம் புரிய எளிதாகும் தன்மை.

(ஆ) பரிசீலிக்கப்படும்.

**53—**

**தமிழ்நாட்டிற்கு வந்துள்ள இலங்கை அகதிகள்**

வினா எண் **5025—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1996-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிற்கு இலங்கை அகதிகள் எத்தனை பேர் வந்துள்ளனர்?

(ஆ) அவர்களுக்கு அரசு செய்து வருகிற உதவிகள் என்னென்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) 1996-ஆம் ஆண்டில் 21-10-1996 வரை 1,323 குடும்பங்களைச் சேர்ந்த 4,093 அகதிகள் இலங்கையிலிருந்து தமிழ்நாட்டிற்கு வந்துள்ளார்கள்.

(ஆ) அகதிகள் முகாம்களில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு பின்வரும் நிவாரண உதவிகள் அரசால் வழங்கப்படுகின்றன:—

(1) குடும்ப உறுப்பினர்களில் வயது வந்த முதல் நபருக்கு ரூ.150/-ம் ஏனைய வயது வந்த நபர்களுக்கு தலா ரூ. 120/-ம் முதல் குழந்தைக்கு ரூ. 75/-ம் ஏனைய குழந்தைகளுக்கு தலா ரூ. 37.50-ம் பணக்கொடையாக வழங்கப்பட்டு வருகிறது.

(2) வயது வந்தவர்களுக்கு நாள் ஒன்றுக்கு 400 கிராம் மற்றும் குழந்தைகளுக்கு நாள் ஒன்றுக்கு 200 கிராம் வீதம், 1 கிலோ ரூ. 0.57க்கு மலிவு விலையில் ரேஷன் அரிசி வழங்கப்படுகிறது. இது தவிர சர்க்கரை, மண்ணெண்ணெய், ஆகியவை பொது விநியோக முறைப்படி வழங்கப்படுகிறது.

(3) மின்சாரம், குடிநீர், மருத்துவ வசதி ஆகியவையும் பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு பிளஸ் 2 வரை இலவசக் கல்வி வசதியும் வழங்கப்படுகிறது.

(4) மத்திய அரசால் நிர்ணயம் செய்துள்ளபடி உடைகளும், பாயும், ஆண்டுக்கொருமுறையும், போர்வைகள் மற்றும் சமையல் பாத்திரங்கள் இரண்டாண்டிற்கு ஒரு முறையும் வழங்கப்படுகிறது.

(5) அகதிகள் முகாம்களில் தங்கியுள்ள அகதிகள் இறக்க நேரிட்டால் அவர்களது இறுதிச் சடங்கிற்காக ரூ.100/- வழங்கப்படுகிறது.

**54—**

## அரசு அலுவலகங்களில் நடத்தப்படும் மதச்சார்பான விழாக்களை தடுக்கும் நடவடிக்கை

வினா எண் **5041—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) மதச்சார்பற்ற அரசின் அலுவலகங்களில் சில மதச்சார்பான விழாக்கள் மட்டும் நடத்தப்படுவது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) எந்தவகையான மதச்சார்பான விழாக்களும் அரசு அலுவலகங்களில் நடத்தப்படாமல் பார்த்துக்கொள்ளுமாறு எல்லா அரசு முதல் நிலை அதிகாரிகளும் (அரசுச் செயலாளர்கள், துறைத் தலைவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள், காவல்துறை இயக்குநர், மாநகர காவல்துறை ஆணையர்கள்) தங்களின் கீழ் இயங்கும் அனைத்து அலுவலர்களையும் அறிவுறுத்துமாறு அரசால் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்கள்.

**55—**

## சமூக இயல் நிபுணர் குழு அமைத்தல்

வினா எண் **5042—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தீவிரவாதம் சமூக வாழ்வில் தோன்றுவதற்குரிய கார்ணத்தை ஆராய்ந்து அரசிற்கு அறிக்கை அளிக்க சமூக இயல் நிபுணர் குழு அமைக்க அரசு முன் வருமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

தீவிரவாதம் சமூக வாழ்வில் தோன்றுவதற்குரிய காரணத்தை ஆராய்ந்து அரசிற்கு அறிக்கை அளிக்க சமூக இயல் நிபுணர் குழு அமைக்கும் கருத்துரு ஏதும் இல்லை.

**56—**

**மத்திய திட்டக்குழு மூலம் மாநிலங்களுக்கு ஒதுக்கப்படும் நிதிக்கான அளவுகோல்**

வினா எண் **5193—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மத்திய திட்டக்குழு மாநிலங்களுக்கு நிதி ஒதுக்க என்ன அளவுகோல்களைப் பயன்படுத்துகிறது?

(ஆ) அதனால் தமிழ்நாட்டிற்கு நிதி ஒதுக்கீடு பாதிக்கப்படுகிறதா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) காட்கில்-முகர்ஜி என்னும் விதியைப் பயன்படுத்தி மத்திய அரசு மாநிலங்களுக்கு திட்ட நிதி உதவியைப் பகிர்ந்தளிக்கிறது.

(ஆ) ஆம்.

**57—**

**திருப்பூர் ஏற்றுமதி வளர்ச்சி மையம்.**

வினா எண் **5568—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் தொகுதி, திருப்பூர் ஒரு ஏற்றுமதி வளர்ச்சி மையம் என்று மத்திய அரசு அறிவித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதனால் திருப்பூர் நகருக்கு ஏற்பட்ட பலன்கள் என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) ஆம். மைய அரசு திருப்பூரை ஒரு ஏற்றுமதி வளர்ச்சி மையமாக அறிவித்துள்ளது.



(ஆ) தமிழ்நாடு அரசு திருப்பூரில் ஏற்றுமதியை அதிகரிக்கவும், திருப்பூரை தொழில் துறையில் முன்னிலைப்படுத்தவும் இந்நகரில் செய்யப்பட வேண்டிய அடிப்படை வசதிகளைக் கண்டறிந்து செயல்படுத்த தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தை (டாசிட்) பணித்துள்ளது. டாசிட், திருப்பூர் நகரில் நீர் வழங்கல், கழிவுநீர் சுத்திகரிப்பு திட்டங்கள், சாலை அபிவிருத்தி, தொலைத் தொடர்பு வசதிகளின் விரிவாக்கம் ஆகிய ஒருங்கமைந்த மேம்பாட்டு திட்டத்தை ரூ. 1313.20 கோடி செலவில் அமலாக்க உள்ளது.

**58—**

**திருவள்ளூரில் கார் தொழிற்சாலை ஏற்படுத்தல்**

வினா எண் **5576—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜப்பான் மிட்சுபிஷி நிறுவனத்தின் தொழில் நுட்ப உதவியுடன் திருவள்ளூரில் கார் தொழிற்சாலை உருவாக்கப்படவுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) ஆம். இந்துஸ்தான் மோட்டார் கம்பெனி, ஜப்பான் மிட்சுபிஷி நிறுவனத்துடன் சேர்ந்து ஒரு கார் தொழிற்சாலை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

(ஆ) திருவள்ளூரில் உள்ள இந்துஸ்தான் மோட்டார்ஸ் கம்பெனி அந்நிறுவனத்திற்கு சொந்தமாக உள்ள இடத்தில் ஜப்பான் மிட்சுபிஷி நிறுவனத்துடன் சேர்ந்து ரூ.300 கோடி முதலீட்டில் ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளது. கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

[1997 ஏப்ரல் 30

**59—**

**திருக்கழுக்குன்றம் தாலுக்கா தலைநகரத்திற்கு தீயணைப்பு நிலையம் அமைத்தல்**

வினா எண் **6017—திரு. வீ. தமிழ்மணி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா.—

அண்ணா மாவட்டம், திருக்கழுக்குன்றம் தாலுகா தலைநகரத்திற்கு ஒரு தீயணைப்பு நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

திருக்கழுக்குன்றத்திலிருந்து 15 கி.மீ. தொலைவில் செங்கல்பட்டில் ஒரு தீயணைப்பு நிலையம் அமைந்துள்ளது. எனவே, இங்கு தீயணைப்பு நிலையம் ஏற்படுத்த வேண்டிய அவசியம் இல்லை.

**60—**

**மாவட்டந்தோறும் அரசு ஒருங்கிணைப்பு கண்காணிப்புக் குழு வல்லுநர்களை கொண்ட குழு அமைத்தல்**

வினா எண் **6029—டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொதுத் திட்டங்கள், சமுதாய நலப்பணிகள் ஆகிய திட்டங்களை முழுமையான தரத்தோடு நிறைவேற்றுவதற்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் அரசு ஒருங்கிணைப்பு கண்காணிப்புக் குழு வல்லுநர்களைக் கொண்ட குழு அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

பொதுத் திட்டங்கள், சமுதாய நலப்பணிகள் ஆகிய திட்டங்களை முழுமையான தரத்தோடு நிறைவேற்றுவதற்கு வல்லுநர்கள் கொண்ட அரசு ஒருங்கிணைப்பு கண்காணிப்புக் குழுக்கள் மாவட்டங்களில் ஏற்படுத்தும் எண்ணம் அரசுக்குத் தற்பொழுது இல்லை. இருப்பினும் மாவட்டங்களில் செயல்படுத்தப்படும் அரசுத் திட்டங்களைக் கண்காணிக்க உயர் அரசு அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.



1997 ஏப்ரல் 30]

**61—**

**சேத்துப்பட்டு பேரூராட்சியில் புதிய தீயணைப்பு நிலையம் துவக்குதல்**

வினா எண் **6341—திரு. என். பாண்டுரங்கன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை–சம்புவராயர் மாவட்டம், சேத்துப்பட்டு பேரூராட்சியில் புதிய தீயணைப்பு நிலையம் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சேத்துப்பட்டில் தீயணைப்பு நிலையம் திறக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையிலுள்ளது.

**62—**

**தமிழ்நாட்டில் கல்லூரிகளுக்கு "ராணி அண்ணாதுரை" பெயர் சூட்டப்பட்டதை நீக்குதல்**

வினா எண் **11—திரு. பெ.சு. திருவேங்கடம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் அண்ணாவின் துணைவியார் ராணி அண்ணாவின் பெயர் கல்லூரிகளுக்குச் சூட்டப்பட்டு பிறகு நீக்கப்பட்டதை அரசு அறியுமா?

(அ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) அறியும்.

[1997 ஏப்ரல் 30

(ஆ) திருநெல்வேலியில் ராணி அண்ணாதுரை அரசினர் மகளிர் கல்லூரி 1970-ல் தொடங்கப்பட்டது. அரசு நிறுவனம், கட்டடங்களுக்கு உயிருடன் இருக்கும் அரசியல் தலைவர்/அமைச்சரின் பெயரைச் சூட்டியிருந்தால் அதனை நீக்குமாறு 1977-ல் ஆணையிடப்பட்டு, ராணி அண்ணாதுரை பெயர் நீக்கப்பட்டுள்ளது. ஆயினும் அன்னாரின் பெயரை அக்கல்லூரிக்கு மீண்டும் சூட்டி 'ராணி அண்ணா அரசு மகளிர் கல்லூரி' என அரசு தற்போது ஆணையிட்டுள்ளது.

**63—**

**விளையாட்டு மேம்பாட்டுக் குழுவை மாற்றி அமைக்கும் திட்டம்**

வினா எண் **27—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு கல்வியமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அளவில் அமைக்கப்பட்டுள்ள விளையாட்டு மேம்பாட்டுக் குழுவை மாற்றி அமைக்கும் திட்டம் அரசிற்கு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதில் விளையாட்டு வீரர்களை நியமிக்க எண்ணம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வியமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்கு நியமனம் செய்யப்பட்டுள்ள உறுப்பினர்களை மாற்றியமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**64—**

**விஜயமங்களம் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தல்**

வினா எண் **113—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு கல்வியமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறை தொகுதி விஜயமங்களம் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தக்கோரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?



1997 ஏப்ரல் 30]

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): 1996-97-ஆம் ஆண்டில் விஜயமங்களம் அரசு உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மேம்படுத்தி ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

**65—**

**செங்காநத்தம் கிராமத்தில் வாக்குச்சாவடி அமைத்தல்**

வினா எண் **392—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் வட்டம், செங்காநத்தம் கிராம மக்கள் பொதுத் தேர்தலில் வாக்களிக்க 15 கிலோ மீட்டர் தொலைவு செல்ல வேண்டிருப்பதால் செங்கர்நத்தம் கிராமத்தில் வாக்குச் சாவடி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

தற்போதுள்ள வாக்குச் சாவடிகள் நடந்து முடிந்த 1996-ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக்காக அமைக்கப்பட்டன. இந்த வாக்குச் சாவடிகளின் பட்டியலில், வாக்காளர் பட்டியல்கள் தீவிரமாகத் திருத்தப்படும் போதோ அல்லது பொதுத் தேர்தல்/இடைத் தேர்தலின் போதுதான் மாற்றங்கள் செய்ய இயலும். ஆதலின், வேலூர் வட்டம், செங்காநத்தம் கிராம மக்கள் அடுத்த பொதுத் தேர்தலில் வாக்களிக்க, அக்கிராமத்திலேயே தனியாக வாக்குச் சாவடி அமைப்பது குறித்து வட ஆற்காடு-அம்பேத்கர் மாவட்ட ஆட்சித் தலைவரின் செயற்குறிப்பினை பெற்று, உரிய நேரத்தில் இந்தியத் தேர்தல் ஆணையத்தின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்படும்.

[1997 ஏப்ரல் 30

66—

**அரசினர் உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தல்**

வினா எண் **522-திரு. ஆர். மகேந்திரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாட்றாம்பள்ளி தொகுதி, வெலக்கல் நத்தம் ஆகிய இடங்களிலுள்ள அரசினர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

தற்போதைக்கு அரசின் ஆய்வில் இல்லை.

67—

**ஆலங்குடி தொகுதியில் உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக மாற்றல்**

வினா எண் **693-திரு. அ. வெங்கடாசலம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குடி தொகுதி, கறம்பகுடி ஒன்றியம், ரெகுநாதபுரம் அரசு உயர்நிலைப் பள்ளி மற்றும் முள்ளங்குறிச்சி அரசு உயர்நிலைப் பள்ளிகள் அரசு மேல்நிலைப் பள்ளிகளாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இந்த ஆண்டில் நிறைவேற்ற அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) இல்லை



1997 ஏப்ரல் 30]

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை

68—

**வாக்காளர்கட்கு அடையாள அட்டை வழங்கல்**

வினா எண் **759-திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேர்தல்களில் வாக்களிக்கும் வாக்காளர்கட்கு புகைப்படம் ஒட்டிய அடையாள அட்டை வழங்கும் திட்டத்தின் தற்போதைய நிலை என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

வாக்காளர்களுக்கு, புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை வழங்குவதற்காக, வாக்காளர்களைப் புகைப்படம் எடுக்கும் மூன்று சுற்றுப் பணிகளில், முதற் சுற்றுப் புகைப்படமெடுக்கும் பணி எல்லா மாவட்டங்களிலும் முற்றுப் பெற்றிருக்கிறது. முதல் சுற்றில் விடுபட்ட வாக்காளர்களைப் புகைப்படமெடுக்க இரண்டாம் சுற்றுப் பணி 10-2-97 அன்று தொடங்கி ஒவ்வொரு மாவட்டமாக நடைபெற்று வருகிறது.

69—

**மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்தும் குடிமுறை அரசுப் பணித்தேர்வுகள்**

வினா எண் **765—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்தும் குடிமுறை அரசுப் பணித் தேர்வுகளில், தமிழ்நாட்டு மாணவர்கள் தேர்ச்சி பெறுவதில்லை என்பதை மாநில அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், மாணவர்களின் தரத்தை உயர்த்த அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாவை?

[1997 ஏப்ரல் 30

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) அறியும்.

(ஆ) மேற்கண்ட தேர்வில் பங்கேற்கும் தமிழக மாணவர்களின் தேர்ச்சி விகிதத்தை அதிகப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது.

**70—**

**சுயநிதிப் பள்ளிகள் கல்லூரிகளில் மாணவர்களுக்கு வசதிகள்**

வினா எண் **770—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சுயநிதிப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் முறையான வசதிகளை மாணவர்களுக்கு செய்து கொடுத்துள்ளார்களா என்பதை அரசு கண்காணித்து வருகிறதா?

(ஆ) ஆம் எனில், அவ்வசதிகளை நிறைவேற்றாமல் உள்ள நிறுவனங்கள் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): ஆம். சுயநிதிப்பள்ளிகளுக்கு அங்கீகாரம் வழங்கும் பொருட்டு பெறப்படும் கருத்துருக்களில் சுயநிதிப்பள்ளிகளில் முறையான வசதிகள் செய்து கொடுத்துள்ளார்களா என்பது குறித்து பரிசீலித்து அனுமதி அளிக்கப்படுகிறது. சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைப் பொறுத்தவரை அத்தகைய கல்லூரிகள் தொடங்க கல்வி முகமைகள் விண்ணப்பித்தவுடன் மூன்றுபேர் அடங்கிய குழு ஒன்று அக்கல்லூரி பற்றிய இடம், கட்டிடங்கள் மற்றும் வசதிகள் குறித்து ஆய்வு செய்து அளிக்கப்பட்ட அறிக்கையின் அடிப்படையிலும் கல்லூரிக்கல்வி இயக்குநரின் பரிந்துரையின் பேரிலும் புதிய கல்லூரிகள் தொடங்க அனுமதி அளிக்கப்படுகிறது.



1997 ஏப்ரல் 30]

**71—**

**ஆசிரியர்களுக்கான நிலத் திட்டங்கள்**

வினா எண் **776—திரு மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் ஆசிரியர்களுக்காக அறிவிக்கப்பட்ட நலத்திட்டங்களின் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

விவர அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

**அறிக்கை**

பள்ளிக்கல்வி/தொடக்கக்கல்வி/கல்லூரிக் கல்வித் துறையைச் சார்ந்த ஆசிரியர்களுக்காக அரசு வழங்கியுள்ள நலத் திட்டங்களின் விவர அறிக்கை.

தமிழ்நாட்டில், அனைத்து ஆசிரியர்களும், பயன்பெறும் வகையில் பல்வேறு திட்ட உதவிகள் வழங்கப்பட்டு, பயன்பெற்றுவருகின்றனர். பொதுவாக அரசு அலுவலர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் அனைத்தும் ஆசிரியர்களுக்கும் வழங்கப்பட்டு வருகின்றன. இச்சலுகைகள் தவிர, ஆசிரியர்களுக்கென, கீழ்க்கண்ட நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

**பள்ளிக்கல்வி (ம) தொடக்கக் கல்வித் துறை**

**(1) ஆசிரியர் தேசிய நலநிதியிலிருந்து அளிக்கப்படும் நலத்திட்டங்கள்**

**(i) மருத்துவ உதவி:**

அரசு மற்றும் உதவி பெறும் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கட்கு கடுமையான நோய்களான (1) இருதய அறுவை சிகிச்சை (2) சிறுநீரக மாற்றுச் சிகிச்சை (3) புற்றுநோய் சிகிச்சை ஆகியவற்றிற்கு ரூ. 25,000/-ம் சாதாரண கடுமை குறைந்த மற்ற நோய்களுக்கு ரூ. 750-ம் வழங்கப்படுகிறது; அவர்களுக்கு சிறப்பு வருங்கால வைப்பு நிதியிலிருந்து வழங்கப்படுகிறது.

[1997 ஏப்ரல் 30

**(ii)** சுற்றுலா செல்ல உதவி:

மத்திய அரசு ஆசிரியர் நலநிதியிலிருந்து விருதுபெற்ற ஆசிரியர்களுக்கும், அவர்கள் கணவர் அல்லது மனைவிக்கு அகில இந்திய சுற்றுப் பயணம் 14 நாட்கள் சென்றுவர முதல்வகுப்புக் கட்டணமும் 14 நாட்களுக்கு 1 நாளைக்கு ரூ.100/- வீதம் படியும் வழங்கப்பட்டு வருகிறது.

**(iii)** படிப்புதவி:

தொழிற்கல்வி பயிலும் அரசு (ம) தனியார் பள்ளி ஆசிரியர்களின் பிள்ளைகளுக்கு படிப்புதவித் தொகையாக பட்டப்படிப்புக்கு ஆண்டுக்கு ரூ.1000/-ம் பட்டையப்படிப்பிற்கு ரூ.500/-ம் வழங்கப்பட்டு வருகிறது.

**(iv)** ஆசிரியர் இல்லம்:

சென்னை சைதாப்பேட்டையில் 20 அறைகளுடன் ஆசிரியர் இல்லம் இயங்கி வருகிறது. பணி நிமித்தம் வெளியூரிலிருந்து சென்னை வரும் ஆசிரியர்கள், மிகக் குறைந்த வாடகையில் தங்க வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**2. நல்லாசிரியர் விருது :**

**மாநில நிதியிலிருந்து ஆசிரியர்களுக்கு நல்லாசிரியர் விருது வழங்கப்படுகிறது.**

| | | |
|---|---|---|
| தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளி ஆசிரியர்கட்கு | : | 168 |
| உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்கட்கு | : | 112 |
| மெட்ரிகுலேஷன் பள்ளி ஆசிரியர்கட்கு | : | 6 |
| ஆங்கிலோ-இந்தியப் பள்ளி ஆசிரியர்கட்கு | : | 2 |

என்ற வீதத்தில் மொத்தம் 288 வெள்ளி மெடல்கள் மற்றும் ஒவ்வொரு ஆசிரியருக்கும் விருதுத் தொகை ரூ. 1000-ம் அவர்கள் பணிபுரியும் இடத்திலிருந்து விருது வழங்கும் இடத்திற்கு வந்து செல்ல முதல் வகுப்பு இரயில் கட்டணத் தொகை ஆகியவை ஒவ்வோர் ஆண்டும் ஆசிரியர் தினத்தன்று (செப்டம்பர் 5-ம் நாள்) அரசு நிதியிலிருந்து வழங்கப்பட்டு வருகிறது.



1997 ஏப்ரல் 30]

3. அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியராக உள்ளவர்கள் 55 வயதை நிறைவு செய்தும் அவர்களுக்கு மாவட்டக் கல்வி அலுவலராக பதவி உயர்வு பெற இயலாத நிலையை மாற்றி அவர்கள் மாவட்டக் கல்வி அலுவலராகப் பதவி உயர்வு பெறுவதற்கு 1-3-95 முதல் வயது வரம்பு 55-லிருந்து 58-ஆக உயர்த்தி அரசாணை வழங்கப்பட்டுள்ளது. இதனால் இவர்களுக்கும் பதவி உயர்வு வாய்ப்பு அதிகரித்துள்ளது.

4. அனைத்து வகை ஆசிரியர்களுக்கும் அவர்கள் பெற்றுள்ள உயர்கல்வித் தகுதிக்குத் தக்கவாறு அதிக பட்சம் 2 ஊக்க ஊதிய உயர்வுகள் (4 ஊதிய உயர்வு) அளிக்கப்பட ஆணை வழங்கப்பட்டுள்ளது.

5. ஒவ்வொரு கல்வி ஆண்டிலும் மத்தியில் ஓய்வுபெறும் ஆசிரியர்களுக்கு அவர்கள் அந்தக் கல்வியாண்டு முழுவதும் பணிபுரிய மறுநியமன ஆணை வழங்கப்படுகிறது.

6. ஏற்கெனவே வருடத்திற்கு மூன்று நாட்களாக இருந்து வந்த ஈட்டிய விடுப்பு, 17 நாட்களாக உயர்த்தப்பட்டு உள்ளது.

**கல்லூரிக் கல்வித் துறை:**

1. கல்லூரிகளில் பணிபுரியும் அனைத்து ஆசிரியர்களுக்கும், புதுடில்லி பல்கலைக்கழக மானியக்குழு பரிந்துரைத்த திருத்திய ஊதிய விகிதங்கள் 1-1-1986 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. இதன்படி, பணி முன்னடைவு எனும் திட்டத்தின்கீழ் கல்லூரி ஆசிரியர்களுக்கு, முதுநிலை, தேர்வு நிலை மற்றும் ரீடர் எனப் பணி முன்னடைவு வழங்கப்படுகின்றது. ஒரு கல்லூரி ஆசிரியர் எட்டாண்டுப் பணி முடித்திருப்பின் முதுநிலையும், 16 ஆண்டுப்பணி முடித்திருந்தால் தேர்வு நிலையும் வழங்கப்படுகின்றன. இவ்விரண்டு பணிநிலைகளுக்கும் வெவ்வேறு ஊதிய விகிதங்கள் வழங்கப்படுகின்றன. எம்.பில். தகுதி இருந்தால் ஓர் ஆண்டுச் சலுகையும் பி.எச்டி. தகுதி இருந்தால் மூன்றாண்டுச் சலுகையும் வழங்கப்படுகிறது. பி.எச்.டி. தகுதி உடையவர்களுக்கு ரீடர் பதவியும் வழங்கப்படுகிறது. விரிவுரையாளர் பதவியில் பணி முன்னடைவுக்கு அவர்கள் விளக்குநர்/பயிற்றுநர் பதவிகளில் பட்ட மேற்படிப்பு தகுதியுடன் பணியாற்றிய காலத்தில் பாதியை கணக்கில் கொள்வதற்கும் ஆணையிடப்பட்டுள்ளது.

[1997 ஏப்ரல் 30

2. தற்போது பயிற்றுநர்/விளக்குநர்களாகப் பணியாற்றி வருபவர்களுக்கு அவர்கள் பட்டமேற்படிப்பு பெற்றிருந்தாலொழிய, விரிவுரையாளர்களாக பதவி உயர்வு பெற வாய்ப்பில்லாத காரணத்தால், அவர்கள் 10 ஆண்டுப் பணி 1-1-1986-ல் முடித்திருந்தால் தேர்வு நிலையும் (ஊதிய விகிதம் ரூ. 2200-75-2800-100-4000), 20 ஆண்டுப்பணி முடித்திருந்தால் சிறப்பு நிலையும் (ஊதிய விகிதம் ரூ. 2500-75-2800-100-4500) மாநில ஊதிய விகிதங்களின்படி) 8-5-1995 தேதி முதல் அதற்கான நிலுவைத் தொகை பெறவும் ஆணையிட்டுள்ளது.

3. ஒவ்வொரு கல்வி ஆண்டிலும் மத்தியில் ஓய்வுபெறும் ஆசிரியர்களுக்கு அவர்கள் அந்தக் கல்வியாண்டு முழுவதும் பணிபுரிய மறுநியமன ஆணை வழங்கப்படுகிறது.

4. கல்லூரிக் கல்வித் துறையில் பணிபுரியும் அரசு ஊழியர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் அவர்கள் முழு கோடை விடுமுறையினை அனுபவிக்காமல் இருந்தால் சேர்க்கப்படும் ஈட்டிய விடுப்பு 13 நாட்களிலிருந்து 15 நாட்களாக உயர்த்தப்பட்டுள்ளது.

5. ஒவ்வொரு ஆண்டும் மிகச் சிறந்த முறையில் பணியாற்றிய பத்து ஆசிரியர்களுக்கு ஆயிரம் ரூபாயும் ஒரு வெள்ளி மெடலும் கொண்ட விருதும் மிகச் சிறந்த முறையில் பணியாற்றிய இரண்டு கல்லூரி முதல்வர்களுக்குத் தலா ரூபாய் இரண்டாயிரத்து ஐநூறும் மற்றும் நற்சான்றிதழும் கொண்ட விருதும் வழங்கப்படுகிறது.

**72—**

**மாணவர்களை விளையாட்டுத் துறையில் ஊக்குவித்தல்**

வினா எண் **777—திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் மாணவர்களை விளையாட்டுத் துறையில் ஊக்குவிக்க அரசு என்னென்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

விவர அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.



1997 ஏப்ரல் 30]

**அறிக்கை**

தமிழ்நாட்டில் மாணவர்களை விளையாட்டுத் துறையில் ஊக்குவிக்க அரசு கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுத்துள்ளது:—

**1. மாநில அளவிலான கோடைகால பயிற்சி முகாம்:**

16 வயதுக்கு உட்பட்ட மாணவ, மாணவியர்களுக்கு மாவட்டம் மற்றும் மாநில அளவிலான கோடைகால பயிற்சி முகாம்கள் தங்கும் வசதியுடன் 21 நாட்களுக்கு அனைத்து விளையாட்டுகளிலும் ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்பட்டு வருகின்றன.

**2. மாணவர்களுக்கு ஊக்கத் தொகை/விருதுகள் வழங்குதல்:**

உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு மாநில அளவில் குடியரசு தின மற்றும் பாரதியார் தின விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படுகின்றன. இவற்றில் தடகளப் போட்டிகளில் முதலிடம் பெற்றவர்களுக்கு ரூ. 600/-ம் இரண்டாம் இடம் பெற்றவர்களுக்கு ரூ. 400/-ம் தடகளமல்லாத மற்ற விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு ரூ. 400/-ம் ஊக்க உதவித் தொகை அளிக்கப்படுகிறது.

**3. சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு விருது வழங்கும் விழா:**

பன்னாட்டு மற்றும் தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு இந்தியாவிற்குப் புகழாரம் சூட்டும் சிறந்த விளையாட்டு வீரர், வீராங்கனைகளை ஊக்குவிக்கும் வகையில் சிறப்பு உதவித் தொகை வழங்கப்பட்டு வருகின்றது.

**4. ஊரக விளையாட்டு வளாகங்கள்:**

ஊரக இளைஞர்களுக்குச் சிறந்த முறையில் அனைத்து வசதிகளுடன் விளையாட்டுகளில் பயிற்சி அளிக்க, தமிழ்நாட்டிலுள்ள 388 ஊராட்சி ஒன்றியத் தலைமையகங்களில் ஊரக விளையாட்டு வளாகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ரூ. 10,000/- மதிப்பில் விளையாட்டு உபகரணங்கள் ஒவ்வொரு ஊரக விளையாட்டு வளாகத்திற்கும் அளிக்கப்பட்டு வருகின்றன. ஊரக விளையாட்டு வளாகங்களின் உதவியுடன் ஊரக விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

**5. சிறார்களைக் கண்டு பயிற்சி அளிக்கும் திட்டம் (Catch them very young):**

12 வயதிற்குட்பட்ட சிறார்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் அனைத்து மாவட்டத் தலைநகரங்களில் சிறார்களைக் கண்டு பயிற்சி அளிக்கும் திட்டம் நடைபெற்று வருகிறது. இதில் வெற்றிபெறும் பள்ளிகளுக்கு வெகுமதிகள் பெறவும் இப்பயிற்சித் திட்டம் நடத்துவதற்கும், போட்டிகள் நடத்தவும் மற்றும் விளையாட்டுக் கருவிகள் வாங்கவும் ரூ. 1 இலட்சம் மானியம் வழங்கப்பட்டு வருகின்றது.

**6. இளமையில் தெரிந்தெடுத்தல் திட்டம் (Catch them young) :**

பள்ளியில் பயிலும் 14 வயதுக்குட்பட்ட மாணவ, மாணவியர்களுக்கு அவர்தம் விளையாட்டுத் திறமை வெளிப்படுத்தவும், விளையாட்டுத் திறமையை மேம்படுத்தவும் "இளமையில் தெரிந்தெடுக்கும் விளையாட்டுப் போட்டிகள்" தடகளம், கூடைப்பந்து, கையுந்துபந்து, கால்பந்து மற்றும் வளைகோல்பந்து ஆகிய விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. மேற்கண்ட போட்டிகளில் திறன் கொண்ட விளையாட்டு வீரர்களுக்கு கோடைகால பயிற்சி முகாம்களில் சிறப்பு பயிற்சி முகாம் நடத்தப்பட்டு வருகின்றது.

**7. தேசிய விளையாட்டுத் திறன் போட்டிகள் :**

9 முதல் 12 வயதுக்குட்பட்டவர்களுக்கு இந்திய விளையாட்டுக் குழுமம் சார்பில் தேசிய விளையாட்டுத் திறன் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இதில் விளையாட்டு வீரர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு மதிப்பீட்டு பயிற்சி முகாம் இந்திய விளையாட்டுக் குழுமத்தால் நிர்ணயிக்கப்படும் விதிமுறைகளுக்கு ஏற்ப நடத்தப்பட்டு வருகிறது. மேற்கண்ட மதிப்பீட்டு பயிற்சி முகாமில் மாணவர்களுக்கு இந்திய விளையாட்டுக் குழுமத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டு இந்திய விளையாட்டுக் குழும தத்துப் பள்ளிகளில் சேர்க்கப்பட்டு ஊட்ட உணவு, கல்வி மற்றும் தீவிர பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது.

**8. அண்ணா மிதிவண்டி பந்தயப் போட்டிகள் :**

மறைந்த தமிழ்நாடு முதல்வர் பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவாக ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 15-ல் அனைத்து மாவட்டத் தலைநகரங்களில், மாணவர்களுக்கு 15 கிலோ மீட்டர் தூர





மிதிவண்டி போட்டிகளும், மாணவியர்களுக்கு 5 கி.மீ. தூர மிதிவண்டிப் பந்தயமும் நடைபெற்று வருகின்றன. இதில் வெற்றி பெறும் மாணவ, மாணவியர்களுக்கு ஊக்கப் பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டு வருகின்றன.

**9. மாநில அளவிலான மிதிவண்டி பந்தயப் போட்டிகள் :**

மாவட்ட அளவிலான மிதிவண்டிப் போட்டிகளில் வெற்றி பெறும் மாணவ மாணவியர்களுக்கு மாநில அளவிலான மிதிவண்டிப் பந்தயப் போட்டிகள் சிறப்பான முறையில் நடைபெற்று வருகின்றன.

**10. நடுநிலைப்பள்ளி விளையாட்டுப் போட்டிகள் :**

நடுநிலைப் பள்ளிகளில் பயிலும், மாணவ, மாணவியர்களுக்கு நடுநிலை விளையாட்டுப் போட்டிகள் கல்வி மாவட்ட அளவில் ஒவ்வொரு ஆண்டும் நடைபெற்று வருகின்றன.

**11. அகில இந்திய ஊரக விளையாட்டுப் போட்டிகள் :**

அகில இந்திய விளையாட்டுப் போட்டிகள் பாட்டியாலாவில் உள்ள இந்திய விளையாட்டு குழுமத்தால் ஒவ்வொரு ஆண்டும் ஊரகப் பகுதிகளில் உள்ள மாணவ, மாணவியர்களுக்கு நடத்தப்பட்டு வருகின்றன. இப்போட்டிகள் வட்டார அளவிலும், மாவட்ட அளவிலும் மற்றும் மாநில அளவிலும் நடைபெற்று வருகின்றன. இந்திய விளையாட்டுக் குழுமம், அகில இந்திய ஊரக விளையாட்டுப் போட்டிகளை இரு பகுதிகளாக அனைத்து விளையாட்டு போட்டிகளிலும் நடத்தி வருகின்றது. இப்போட்டிகள் ஏதாவது ஒரு இந்திய மாநில தலைநகரங்களில் நடைபெறும். தமிழ்நாடு அணி இந்திய அளவில் நடைபெறும் இப்போட்டிகளில் ஒவ்வொரு ஆண்டும் தவறாமல் கலந்து கொள்கின்றது. கலந்து கொள்வதற்கு முன் தமிழக அணிக்கு வட்டார அளவிலும், மாவட்ட அளவிலும் விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட்டு மாநில அளவில் தேர்ந்தெடுக்கப்பட்டு தேசிய அளவிலான போட்டிகளில் பங்கு பெறுகின்றது. வெற்றிபெற்ற விளையாட்டு வீரர்களுக்கு ஊக்கப் பரிசும், சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன. கலந்து கொண்டதற்கான சான்றிதழ் மீது தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் படிவம்-2 வழங்கி வருவதால் விளையாட்டு வீரர்கள் அரசுப் பணிகளில் சேர வாய்ப்பினை பெற்று வருகின்றனர்.

[1997 ஏப்ரல் 30

**12. தேசிய அளவிலான மகளிர் விளையாட்டுப் போட்டிகள்:**

இந்திய விளையாட்டுக் குழுமம் அகில இந்திய அளவில் அனைத்து விளையாட்டுப் போட்டிகளிலும் இரண்டு பகுதிகளாக விளையாட்டுகள் பிரிக்கப்பட்டு தேசிய அளவிலான மகளிர் விளையாட்டுப் போட்டிகள் இந்திய மாநில தலைநகரங்களில் ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்பெற்று வருகின்றன. இப்போட்டிகளில் மகளிர் கலந்துகொள்ள வயது வரம்பு மற்றும் இன வேறுபாடு ஏதும் இல்லை. தமிழக அணி மேற்கண்ட போட்டிகளில் அனைத்து விளையாட்டு போட்டிகளிலும் கலந்து கொள்கின்றது. மாவட்ட அளவிலும், வட்டார அளவிலும் போட்டிகள் நடத்தப்பட்டு மாநில அளவில் வீராங்கனைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு தமிழக அணி தேசிய அளவில் கலந்து கொள்கின்றது. வெற்றி பெறும் வீராங்கனைகளுக்கு ஊக்கப் பரிசும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டு வருகின்றன. கலந்து கொண்டதற்கான சான்றிதழ்கள் மீது தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் படிவம்-2 வழங்கி வருவதால் விளையாட்டு வீராங்கனைகள் அரசுப் பணிகளில் சேர வாய்ப்பினை பெறுகின்றனர்.

**13. குடியரசு மற்றும் பாரதியார் தினப் போட்டிகள் :**

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மாநில அளவிலான குடியரசு தின மற்றும் பாரதியார் தின விளையாட்டுப் போட்டிகள் நடத்த பள்ளிக் கல்வி இயக்ககத்திற்கு ஒவ்வொரு ஆண்டும் மானியம் அளித்து வருகின்றது.

**14. பள்ளி மாணவர்களுக்கு தேசிய அளவிலான போட்டிகள் :**

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், பள்ளிகளில் பயிலும் சிறந்த மாணவர்களை தேர்ந்தெடுக்கும் பொருட்டு பள்ளிக் கல்வித் துறைக்கு மானியம் அளித்து வருகின்றது. சிறந்த விளையாட்டு வீரர்கள் தமிழ்நாடு சார்பில் கீழ்க்கண்ட விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றிவாகை சூடி மாநிலத்திற்கு புகழாரம் தேடி வருகின்றனர்:—

1. வினோமன்காட் கிரிக்கெட் போட்டிகள்
2. சுப்ராட்டோ முகர்ஜி கால்பந்து போட்டிகள்
3. சி.கே. நாயுடு கிரிக்கெட் போட்டிகள்



1997 ஏப்ரல் 30]

4. ஜவஹர்லால் நேரு சப்-ஜூனியர் வளைகோல் போட்டிகள்
5. ஜவஹர்லால் நேரு ஜூனியர் வளைகோல் போட்டிகள்
6. டென்னிஸ் போட்டிகள்
7. தேசிய பள்ளி இணையம் நடத்தும் வெவ்வேறு போட்டிகள்

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் ரூ. 6.50 இலட்சம் மானியமாக மேற்கண்ட போட்டிகளில் தமிழக அணி கலந்து கொள்வதற்காக பள்ளிக் கல்வித்துறை மூலம் முதன்மை உடற்கல்வி ஆய்வர்களுக்கு அளித்து வருகின்றது.

**15. பத்து பள்ளி விளையாட்டுப் போட்டிகள் (Ten Schools Sports):**

மாநில அளவிலான குடியரசு தின மற்றும் பாரதியார் தின விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்வதற்கு முன் மண்டல அளவிலும் மாவட்ட அளவிலும் அனைத்து போட்டிகளில் கீழ்மட்ட விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இப்போட்டிகள் நடத்த தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் ரூ. 1.62 இலட்சம் மானியம் அளித்து ஊக்குவித்து வருகின்றது.

**16. மாணவ/மாணவியருக்கு விளையாட்டுப் பயிற்சி அளிக்கும் திட்டங்கள்:**

பள்ளி மற்றும் கல்லூரிகளில் படிக்கும் மாணவ/மாணவியருக்கு விளையாட்டில் பயிற்சி அளிக்கும் வகையில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் 101 பயிற்றுநர்களை நியமித்து பல்வேறு விளையாட்டுக்களில் சிறப்பு பயிற்சி அளித்து வருகின்றது. விளையாட்டு வீரர்/வீராங்கனைகளின் விளையாட்டுத் திறனை விரிவுபடுத்துவதற்கும், சிறந்த விளையாட்டு நுணுக்கங்களை வெளிக் கொணர்வதற்கும் இப்பயிற்றுநர்களின் பணி பயன்படுகிறது. இப்பயிற்றுநர்கள் பாட்டியாலாவில் உள்ள தேசிய விளையாட்டு பள்ளியில் பயிற்சி பெற்றவர்கள். கீழ்க்கண்ட விளையாட்டுக்களில் பயிற்சி அளிக்க பயிற்றுநர்கள் இந்த ஆணையத்தில் பணிபுரிகின்றனர்:—

1. தடகளம்
2. கூடைப்பந்து

[1997 ஏப்ரல் 30

3. கால்பந்து
4. கையுந்துபந்து
5. வளைகோல்பந்து
6. கோ-கோ
7. கபடி
8. நீச்சல்
9. டென்னிஸ்
10. பளு தூக்குதல்
11. கிரிக்கெட்
12. ஜிம்னாஸ்டிக் மற்றும்
13. சிறகுப் பந்து

இது தவிர, இந்திய விளையாட்டு ஆணையம் அதன் செலவில் 55 பயிற்றுநர்களை பல்வேறு மாவட்டங்களில் பணிபுரிய அனுப்பி வைத்துள்ளது. இந்த பயிற்றுநர்கள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மேற்பார்வையில் செயல்படுகின்றனர்.

இந்த பயிற்றுநர்கள் காலை 6.00 மணி முதல் 8.30 மணி வரையிலும், மாலையில் 3.30 மணி முதல் 6.30 மணி வரையிலும் சிறப்பு பயிற்சி அளிக்கின்றனர். மாவட்டங்களிலுள்ள விளையாட்டு மைதானங்களில் செயல்படுவதுடன், பள்ளிகள் மற்றும் கல்லூரிகளிலும் மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கவும் அனுப்பி வைக்கப்படுகின்றனர். மாணவர்களுக்காக நடத்தப்படும் இளையோர் (16 வயதுக்குட்பட்டோர்) மிக இளையோர் (13 வயதுக்குட்பட்டோர்) போட்டிகளில் பங்கெடுக்கவும் மாணவ/மாணவியருக்கு சிறப்பு பயிற்சி வழங்குகின்றனர். பல்வேறு விளையாட்டுக்களுக்கான மாவட்ட/மாநில சங்கங்களுடன் இணைந்து மாவட்ட/மாநில/தேசிய மற்றும் பன்னாட்டு போட்டிகளில் கலந்து கொள்பவர்களுக்கும் சிறப்பு பயிற்சி இந்த பயிற்றுநர்களாலேயே வழங்கப்படுகின்றது.

### 17. மாணவ/மாணவியரை ஊக்குவிக்கும் திட்டங்கள்:

விளையாட்டில் ஈடுபடும் மாணவ/மாணவியர்கள் தொடர் பயிற்சியின் மூலமே சிறந்து விளங்க இயலும். இந்த மாணவ/மாணவியருக்கு பள்ளி படிப்பில் முழுவதுமாக ஈடுபட இயலாமலும், மற்ற மாணவர்களுடன் படிப்பில் போட்டியிட முடியாமலும் இருக்க



1997 ஏப்ரல் 30]

வாய்ப்பிருப்பதால், மேல்படிப்பிற்கு கல்லூரிகளில் சேரும்பொழுது தேவையான பாடப்பிரிவில் சேர இயலாமல் போகவும் வாய்ப்புண்டு. எனவே தமிழ்நாடு அரசு தனது ஆணை எண் 466, கல்வி, நாள் 8-6-1994-ல் பட்டப் படிப்பிற்கான இடங்களில் 3 சதவிகித இடங்களையும், பட்ட மேல்படிப்பிற்கான இடங்களில் 2 சதவிகித இடங்களையும் விளையாட்டு வீரர்களுக்கென ஒதுக்கீடு செய்து ஆணை வழங்கியுள்ளது. இது தவிர, தமிழ்நாட்டிலுள்ள அரசு மருத்துவக் கல்லூரிகளில் 3 இடங்களையும், பொறியியல் கல்லூரிகளில் 35 இடங்களையும், விளையாட்டு வீரர்கள்/வீராங்கனைகளுக்காக ஒதுக்கீடு செய்துள்ளது.

### 18. ஊரக விளையாட்டு மையங்கள்:

கிராமப்புறங்களில் உள்ள மாணவர்கள் மற்றும் மாணவரல்லாதவர்கள் தேவையான விளையாட்டுக்களில் பயிற்சி பெற போதிய விளையாட்டு தளங்கள் இல்லாத குறையினை நீக்கிட ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒன்று வீதம் ஊரக விளையாட்டு மையங்கள் துவக்கப்பட்டுள்ளன. தற்போது 358 ஊராட்சி ஒன்றியங்களில் இந்த ஊரக விளையாட்டு மையங்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும், இந்த மையங்களில் உள்ள விளையாட்டு தளங்களை மேம்படுத்திடவும், புதிய தளங்கள் ஏற்படுத்தவும் அரசின் ஜவஹர் வேலை வாய்ப்பு திட்டத்தின் மூலம் நடவடிக்கை எடுக்க கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. இது தவிர, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் இந்த மையங்களுக்கு தேவையான விளையாட்டு உபகரணங்களையும் வழங்கியுள்ளது.

### 19. விளையாட்டுப் பள்ளி, விளையாட்டு விடுதி:

தமிழ்நாட்டில் பள்ளிகளில் படிக்கும் மாணவ/மாணவிகளின் விளையாட்டுத் திறனை மேம்படுத்தவும், ஊக்குவிக்கும் பொருட்டும் தமிழக அரசு விளையாட்டுப் பள்ளி/விடுதிகளை ஏற்படுத்தி உள்ளது. தற்போது இயங்கிவரும் விளையாட்டுப் பள்ளி/விடுதிகள் விவரம் கீழ்வருமாறு:—

மாணவர்களுக்கு மட்டும்:

1. ஒய்.எம்.சி.ஏ. விளையாட்டுப் பள்ளி, சென்னை.
2. என்.எல்.சி. விளையாட்டுப் பள்ளி, நெய்வேலி.



21844

3. எஸ்.ஆர்.கே. விளையாட்டுப் பள்ளி, கோவை.

4. விளையாட்டு விடுதி, திருச்சி.

5. விளையாட்டு விடுதி, மதுரை.

6. விளையாட்டு விடுதி, திருநெல்வேலி.

மாணவிகளுக்கு :

7. விளையாட்டு விடுதி, ஈரோடு.

8. விளையாட்டு விடுதி, தர்மபுரி.

விளையாட்டுப் பள்ளி/விடுதிகள் தேர்வு:

7-ம் வகுப்பு தேறிய மாணவ/மாணவியர் 8-ம் வகுப்பிற்கு தேர்வு செய்யப்படுவர். வயது வரம்பு 15-க்கு மிகாமல் இருக்க வேண்டும்.

8-ம் வகுப்பு தேறிய மாணவ/மாணவியர் 9-ம் வகுப்பிற்கு தேர்வு செய்யப்படுவர். வயது வரம்பு 16-க்கு மிகாமல் இருக்க வேண்டும்.

10-ம் வகுப்பு தேறிய மாணவ/மாணவியர் 11-ம் வகுப்பிற்கு தேர்வு செய்யப்படுவர். வயது வாம்பு 18-க்கு மிகாமல் இருக்க வேண்டும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவ/மாணவியர்களுக்கு ஊக்க உதவித்தொகை ரூ. 450/- மாதத்திற்கு ஒரு முறையும், சர்வீஸ் தொகை ரூ. 300/-ம் சீருடைக்காக ரூ. 550/-ம் உபகரணங்களுக்காக ரூ. 150/-ம் வருடத்திற்கு ஒரு முறை வழங்கப்படும். தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவ/மாணவிகளுக்கு என்.ஐ.எஸ். நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் தேசிய விளையாட்டு நிலையத்தில் பயிற்சி பெற்ற சிறந்த பயிற்சியாளர்களால் பயிற்சி அளிக்கப்படுகின்றது.

**73—**

**நாகப்பட்டினம்-காயிதேமில்லத் மாவட்டத்தில் அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்குப் புதியக் கட்டிடம் கட்டுதல்**

வினா எண் **792—திரு. ஜி. பழனிச்சாமி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—





நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், திருத்துறைப்பூண்டி ஊராட்சி ஒன்றியம், குரும்பல் ஊராட்சி அரசு உயர்நிலைப் பள்ளிக்குப் புதிய கட்டிடம் கட்டித்தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

1996-97-ஆம் ஆண்டில் புதிய வகுப்பறைகள் கட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட பள்ளிகளுள் இப்பள்ளியும் தேர்ந்தெடுக்கப்பட்டு ரூ. 3.01 லட்சம் செலவில் இரண்டு வகுப்பறைகள் கட்ட அரசாணை (நிலை) எண் 718, க.அ. தொ.நு.து., நாள் 4-10-96-ல் அரசு ஆணை வழங்கியுள்ளது.

**74—**

**தனியார் கல்லூரிகளை அரசு ஏற்று நடத்துதல்**

வினா எண் **984—திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் தனியார் நடத்தும் கல்லூரிகளைத் தடை செய்து, அரசே ஏற்று நடத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**75—**

**சென்னையில் புதிய விஞ்ஞானக் கண்காட்சி நிறுவுதல்**

வினா எண் **989—திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் புதியதாக விஞ்ஞானக் கண்காட்சி நிறுவ அரசு முன்வருமா?

[1997 ஏப்ரல் 30

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரயர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) : ஏற்கெனவே சென்னையிலுள்ள தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையத்தில் இதுபோன்ற நிரந்தர அறிவியல் கண்காட்சி நடத்தப்பட்டு வருவதால் புதியதாக ஒரு விஞ்ஞான கண்காட்சி நடத்தும் அவசியம் அரசுக்கு எழவில்லை.

**76—**

**பொறியியல் பட்டயம் மற்றும் சான்றுகள் வழங்க நடவடிக்கை**

வினா எண் **1002—திரு. இ. கணேசன் மற்றும் திரு. செ. இராமலிங்கம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசு தொழில் நுட்பக்கல்வி இயக்குநர் அலுவலகத்தில் படிப்பு முடித்து தேர்வு முடிவு அறிவிக்கப்பட்ட பின்னரும் பொறியியல் பட்டயம் மற்றும் பொறியியல் பட்டத்திற்கான சான்றுகள் வழங்கப்படாமல் நிலுவையில் உள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், பட்டங்கள் வழங்க விரைந்து அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) அரசு உரிய நடவடிக்கை எடுத்து வருகிறது.

**77—**

**சின்னம்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்குதல்**

வினா எண் **1139—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1997 ஏப்ரல் 30]

(அ) சேலம் மாவட்டம், சங்ககிரி கல்வி மாவட்டத்தில் உள்ள சின்னப்பம்பட்டியில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், வரும் கல்வியாண்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): 1996-97 ஆம் ஆண்டில் சின்னப்பம்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மேம்படுத்தி ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

**78—**

**தருமபுரியில் நுழைவுத் தேர்வு மையம் அமைத்தல்**

வினா எண் **1220—திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரியில் நுழைவுத் தேர்வு மையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

இவ்வாண்டு தருமபுரியில் நுழைவுத் தேர்வு மையம் அமைக்கப்பட்டுள்ளது.

**79—**

**சென்னை தேவநேயப் பாவாணர் மத்திய நூலகக் கட்டிடத்திலுள்ள விழா அரங்கு**

வினா எண் **1363. திரு. டி. இராஜேந்தர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை அண்ணா சாலையில் உள்ள தேவநேயப் பாவாணர் மத்திய நூலக கட்டிடத்தில் உள்ள விழா அரங்குகள் போதிய பராமரிப்பு இன்றி இருப்பதை அரசு அறியுமா?

[1997 ஏப்ரல் 30

(ஆ) ஆம் எனில், அதனை பராமரிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) : சென்னை அண்ணா சாலையில் உள்ள தேவநேயப் பாவாணர் மத்திய நூலக கட்டிடத்தில் சொற்பொழிவு கூடங்களாக செயல்பட்டு வந்த ஒரு பெரிய மற்றும் ஒரு சிறிய விழா அரங்குகளில் போதுமான நவீன வசதிகள் இல்லாததை முன்னிட்டு அவ்வசதிகளுடன் அவற்றைப் புதுப்பிக்கும் பொருட்டு பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டதால், அவ்விழா அரங்குகள் தற்காலிகமாக சில மாதங்களுக்கு பொது மக்களின் பயன்பாட்டிற்கின்றி பூட்டி வைக்கப்பட்டன. தற்பொழுது அப்பணிகள் முடிக்கப்பட்டு, இவ்விழா அரங்குகள் பொது மக்களின் பயன்பாட்டிற்கு அனுமதிக்கப்பட்டு நல்ல நிலையில் செயல்பட்டு வருகின்றன.

**80—**

**ஆங்கிலோ-இந்தியக் குழந்தைகளுக்கு வழங்கப்பட்ட கட்டண மானியம்**

வினா எண் **1465—டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆங்கிலோ-இந்தியன் பள்ளிகளில் பயின்று வரும் ஆங்கிலோ இந்தியக் குழந்தைகளுக்கு வழங்கப்பட்டுள்ள கட்டண மானியத்தைச் சீரமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

அரசாணை 701, நாள் 5-9-1995-ல் ஆங்கிலோ-இந்தியப் பள்ளிக்கான கட்டண ஈடுமானியத்தை சீரமைத்து குறைந்தபட்ச நிர்ணயமான ரூ. 20-ஐ ரூ. 50 ஆகவும் அதிகபட்ச கட்டணமான ரூ. 70-ஐ ரூ. 100 ஆகவும் உயர்த்தி ஆணை வழங்கப்பட்டுள்ளது. இது தவிர சில பள்ளிகளுக்கு பற்றாக்குறை மானியமும் (deficit grant) வழங்கப்படுகிறது.



1997 ஏப்ரல் 30]

**81—**

**அரசு நடத்தும் பள்ளிகளில் கட்டாய நன்கொடை வசூலிப்பதைத் தடுக்க நடவடிக்கை**

வினா எண் **1664—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு நடத்தும் பள்ளிகளில் மாணவர்களிடம் கட்டாய நன்கொடை வசூலிப்பது அரசிற்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) அரசு பள்ளிகளில் எவ்வித கட்டாய நன்கொடையும் தற்பொழுது வசூலிக்கப்படுவதில்லை.

(ஆ) வினா எழாது.

**82—**

**கல்வி மேம்பாட்டிற்கு பொது மக்களிடம் கடன் பெறும் திட்டம்**

வினா எண் **1690—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் கல்வி மேம்பாட்டிற்காக பொது மக்களிடம் கடன் பெறும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழாது.

[1997 ஏப்ரல் 30

**83—**

**கன்னியாகுமரி மாவட்ட அரசுப் பள்ளிகளில் பிளஸ்-2 மாணவர்களுக்கு மலையாளப் பாடப் புத்தகம் வழங்கல்**

வினா எண் **1815—திரு. டி. மணி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசுப் பள்ளிகளில் பிளஸ்-2 வகுப்பிற்கான மாணவர்களுக்கு மலையாள பாடப் புத்தகங்கள் அச்சிட்டு வழங்கப்படாதது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், வழங்க என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) அரசு அதற்கான நடவடிக்கை எடுத்து வருகிறது.

**84—**

**பரமக்குடியில் மேல்நிலைப்பள்ளிக் கட்டிடத்தில் இயங்கி வரும் அரசு கலைக் கல்லூரி**

வினா எண் **2026—திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடியில் அரசு கலைக் கல்லூரி, மேல்நிலைப்பள்ளிக் கட்டிடத்தில் இயங்கி வருவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பு நிதியாண்டில் கட்டிடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?



1997 ஏப்ரல் 30]

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) கல்லூரிக்கென புதிய கட்டிடம் கட்டுவதற்கு திட்டம் மற்றும் மதிப்பீடுகள் தயாரிப்பில் உள்ளன.

**85—**

**பரமக்குடியில் தொழில் நுட்பக் கல்லூரி, பொறியியற் கல்லூரி துவக்குதல்**

வினா எண் **2029—திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பரமக்குடியில் தொழில் நுட்பக் கல்லூரியும், பொறியியற் கல்லூரியும் துவக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

தற்போதைக்கு இது பற்றி எந்த கருத்துருவும் அரசிடம் இல்லை.

**86—**

**கே. கருங்குளம் கிராமத்தில் ஆரம்பப்பள்ளி அமைத்தல்**

வினா எண் **2034—திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி தொகுதி, போகலூர் ஒன்றியம், கே. கருங்குளம் கிராமத்தில் ஆரம்பப்பள்ளி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

87—

**ஆண்டிமடம் தொகுதியில் கலை அறிவியல் கல்லூரி அமைத்தல்**

வினா எண் **2247—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆண்டிமடம் தொகுதியில், ஒரு கலை அறிவியல் கல்லூரி அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

88—

**எரியூர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்றல்**

வினா எண் **2279—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் ஒன்றியம், எரியூர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்ற தொகை முழுவதும் கட்டப்பட்டும் இதுவரை மேல்நிலைப் பள்ளியாக மாற்றாதது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): வினாவில் குறிப்பிட்டுள்ள பள்ளி குறித்த கருத்துரு, அரசு உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக மேம்படுத்தப் பெறப்படும் கோரிக்கைகளை ஆய்வு செய்வதற்கென அமைக்கப்பட்ட உயர்மட்டக் குழுவின் கூட்டம் முடிவடைந்த பிறகே





(24-6-1996-க்குப் பிறகு) பெறப்பட்டுள்ளதால் அதனை அக்குழுவின் பரிசீலனைக்கு உட்படுத்தப்படவில்லை.

89—

**புளியரையிலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்துதல்**

வினா எண் **2441—திரு. கு. ரவி அருணன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், புளியரையில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

தற்போதைக்கு இல்லை.

90—

**தருமபுரி அரசு கலைக் கல்லூரியில் பட்ட மேற்படிப்பு தொடங்குதல்**

வினா எண் **2489—திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி அரசு கலைக் கல்லூரியில் பட்ட மேற்படிப்பு தொடங்கப்பட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

செயற்குறிப்பெதுவும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

91—

**திண்டிவனம் அரசுக் கலைக் கல்லூரி**

வினா எண் **2502—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1997 ஏப்ரல் 30

திண்டிவனம் அரசு கலைக் கல்லூரியில் பட்ட மேற்படிப்பு மற்றும் புதிய வேலைவாய்ப்பு தொடர்பான இளநிலை இதர பிரிவுகள் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

**92—**

## அரசு உயர் கல்விக் குழு

வினா எண் **2506—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழக அரசின் உயர் கல்விக் குழு உயர்நிலை ஆய்விலும் கல்வியிலும் நேரடித் தொடர்புடைய பல்கலைக்கழகப் பேராசிரியர்களையும் உறுப்பினர்களாக நியமித்து அவர்களுடைய நிகழ்வுநிலை அனுபவத்தையும் அறிவுரைகளையும் பயன்படுத்திக் கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

இல்லை.

**93—**

## பாரதியார் பல்கலைக்கழகம்

வினா எண் **2721—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாரதியார் பல்கலைக் கழகத்திற்காக நிலம் கையகப்படுத்தப் பட்டதால் பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் அனைவருக்கும் பல்கலைக் கழகத்தில் வேலை கொடுக்கப்பட்டுள்ளதா?



1997 ஏப்ரல் 30]

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

பாரதியார் பல்கலைக்கழகத்திற்கென தமிழக அரசால் 931.86 ஏக்கர் நிலம் 1982-85 ஆண்டுகளில் கையகப்படுத்தப்பட்டுள்ளது. பல்கலைக் கழகத்தில் ஆசிரியரல்லாதோர் மொத்தப் பதவிகள் 305 ஆகும். இதில் அதிகாரிகள் மற்றும் பதவி உயர்வு பணியிடங்களைத் தவிர்த்து மீதமுள்ள பதவிகள் 221. நிலம் கையகப்படுத்தப்பட்ட குடும்பத்தினரிடமிருந்து வேலை வாய்ப்பு வேண்டி மொத்தம் 337 நபர்கள் பதிவு செய்திருந்தனர். அவர்களில் நேரடி வாரிசுதாரர்களான 111 நபருக்கு (தினக்கூலியாளர் உட்பட) கல்வித் தகுதி மற்றும் இதர தகுதிகளின் அடிப்படையில் பல்கலைக்கழகத்தில் வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. இது, நேரடி நியமனத்தில் பணியமர்த்தப்பட்ட மொத்த நபர்களில் சுமார் 50 சதவிகிதம் ஆகும்.

நிலம் கையகப்படுத்தப்பட்ட எஞ்சிய குடும்பத்தினருக்குக் கீழ்க்கண்ட காரணத்திற்காக வேலை வாய்ப்பு அளிக்க இயலவில்லை.

1. இளநிலை உதவியாளர் மற்றும் அதற்குக் கீழே உள்ள பதவிகளுக்குத்தான் பெரும்பாலும் நேரடி நியமனம் செய்யப்பட்டது. அதில் நிலம் கொடுத்தவர்களில் தகுதியுடையோர் அனைவருக்கும் காலியிடங்களைப் பொறுத்து அந்தக் கால கட்டத்தில் வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டது.

2. தற்போது நிரப்பப்பட வேண்டிய பணியிடங்கள் இல்லாமை.

3. வேலை வாய்ப்புக் கோருபவரில் சிலர் நிலச் சொந்தக்காரரின் நேரடி வாரிசாக இல்லாமை.

4. பல்கலைக் கழக விதிகளில் நிர்ணயிக்கப்பட்ட கல்வி மற்றும் இதர தகுதிகள் சிலருக்கு இல்லாமை.

**94—**

## அரசு கலைக் கல்லூரிகளில் தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு படிக்க ஒதுக்கப்பட்ட இடங்கள்

வினா எண் **2895—திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1997 ஏப்ரல் 30

(அ) அரசு கலைக் கல்லூரிகளில் தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு படிக்க ஒதுக்கப்பட்டுள்ள இடங்கள் எத்தனை?

(ஆ) அவற்றுள் எத்தனை இடங்கள் நிரப்பப்பட்டுள்ளன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) அரசு கலைக் கல்லூரிகளில் தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு படிக்க ஒதுக்கப்பட்டுள்ள இடங்கள் .. 9080

(ஆ) அவற்றுள் நிரப்பப்பட்டுள்ள இடங்கள் .. 8782

**95—**

**அரசு உதவி பெறும் தனியார் பள்ளிகள்**

வினா எண் **2902—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு உதவி பெறும் தனியார் பள்ளிகளில் ஆசிரியர் மற்றும் அலுவலர் பணியிடங்கள் எத்தனை காலியிருக்கின்றன?

(ஆ) இப்பணியிடங்கள் எப்போது நிரப்பப்படும்?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) காலிப் பணியிடங்கள் ஏதுமில்லை.

(ஆ) இவ்வினா எழாது.

**96—**

**பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான ஊதியம் வழங்கல்**

வினா எண் **2904—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான சம்பளம் வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



1997 ஏப்ரல் 30]

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**97—**

**நாங்குனேரி தொகுதியில் பல்தொழில் நுட்பப் பயிலகம் தொடங்குதல்**

வினா எண் **2949—திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், நாங்குனேரி தொகுதி, களக்காடு ஒன்றியத்தில் பல்தொழில் நுட்பப் பயிலகம் (Polytechnic) தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், நாங்குனேரி தொகுதியில், அரசால் புதியதாக பல்தொழில் நுட்பப் பயிலகம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**98—**

**நெடுங்குளம் தேள் குடியிருப்பு கிராமத்தில் அரசு ஆரம்பப் பள்ளி தொடங்குதல்**

வினா எண் **2953—திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், நாங்குனேரி ஒன்றியம், நெடுங்குளம் தேள் குடியிருப்பு கிராமத்தில் புதிதாக அரசு ஆரம்பப்பள்ளி தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

**99—**

**நாங்குனேரியில் அரசினர் கலைக் கல்லூரி தொடங்குதல்**

வினா எண் **2954—திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், நாங்குனேரியில் புதிதாக அரசினர் கலைக் கல்லூரி தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): இல்லை.

**100—**

**வணிக கணித செயல்முறைத் தேர்வுக்கு அளிக்கப்படும் மதிப்பெண்கள்**

வினா எண் **3549—திரு. அ. இராசேந்திரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேல்நிலைக் கல்வி வணிகவியல் பிரிவில் வணிக கணிதத்திற்கு (Commercial Mathematics) செயல்முறைத் தேர்வுக்கு 50 மதிப்பெண்கள் அளிப்பது என்ற திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா?

(ஆ) ஆம் எனில், இத்தகு வாய்ப்பு பொருளியல், வணிகவியல் போன்ற பாடப் பகுதிகளுக்கும் அளிக்கும் எண்ணம் அரசுக்கு உண்டா?



விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழ வாய்ப்பில்லை.

**101—**

**எடப்பாடி அரசினர் மகளிர் மேல்நிலைப் பள்ளிக்கு உடற்பயிற்சி ஆசிரியர் நியமனம்**

வினா எண் **3556—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் எடப்பாடி அரசினர் மகளிர் மேல்நிலைப் பள்ளியில் 4 உடற்பயிற்சி ஆசிரியர் தேவை இருந்தும், ஒரு உடற்பயிற்சி ஆசிரியர் கூட இல்லாமல் கடந்த 5 ஆண்டுகளாக இயங்கி வருவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அங்கு உடனடியாக உடற்பயிற்சி ஆசிரியர் நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): உடற்கல்வி ஆசிரியர் பணியிடங்களை நிரப்பிட தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**102—**

**ஆசிரியர்களை தேர்வு செய்யும்போது வயது வரம்பு**

வினா எண் **4035—திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலை வாய்ப்பகத்திலுள்ள முதுநிலைப் பட்டியலின் (Seniority) அடிப்படையில் ஆசிரியர் பணிக்கு ஆசிரியர்களைத் தேர்வு

[1997 ஏப்ரல் 30

செய்யும்போது அரசு நிர்ணயித்துள்ள வயது வரம்பிற்கு உட்படாதவர்களுக்கு வயது வரம்பைத் தளர்த்த அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

வயது வரம்பினை தளர்த்துவதாக இல்லை.

**103—**

**அரசு உதவிபெறும் பல்தொழில் நுட்பப் பயிலகங்களில் பணிபுரியும் பயிற்றாசிரியர்கள்**

வினா எண் **4183—திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் அரசு உதவிபெறும் பல்தொழில் நுட்பப் பயிலகங்களில் பணிபுரியும் 130 பயிற்றாசிரியர்கள் (Tutors) முறைப்படி வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் பணியில் அமர்ந்தும் சுமார் 8 ஆண்டு காலமாக பணி நிரந்தரம் செய்யப்படாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) இவர்களுக்கு பணிப் பாதுகாப்பு வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): ஆம். மேற்கண்ட போதகர்களுக்குப் பணி நிரந்தரம் செய்யப்பட 7-3-1997 நாளிட்ட அரசு கடித (நிலை) எண் 120-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**104—**

**அரசு உதவிபெறும் பல்தொழில் நுட்பப் பயிலகங்களில் பணிபுரியும் பயிற்றாசிரியர்கள்**

வினா எண் **4184—திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் அரசு உதவிபெறும் பல்தொழில் நுட்பப் பயிலகங்களில் பணிபுரியும் பயிற்றாசிரியர்களுள் (Tutors) தேவையான



1997 ஏப்ரல் 30]

கல்வித் தகுதிகள் அனைத்தும் உள்ளவர்களுக்கு அரசாணை எண் 1081-ன் முழு பயன்களும் கிட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) : 1. தமிழ்நாட்டில் அரசு நிதி உதவிபெறும் பல்தொழில் நுட்பப் பயிலகங்களில் பணிபுரியும் போதகர்களுக்கு, 19-8-1989 நாளிட்ட அரசாணை எண் 1081-ல் திருத்திய ஊதிய விகிதங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன.

2. அரசு நிதியுதவி பெறும் பல்தொழில் நுட்பப் பயிலகங்களில் பணிபுரிந்து வரும் தகுதி வாய்ந்த போதகர்களுக்கு, மேற்கண்ட அரசாணை வாயிலாக நேரடியாக பதவி உயர்வு வழங்க இயலாது.

3. ஆனால், உதவி மானிய விதி தொகுப்பின்படி (Grant-in-aid-code), நிதி உதவிபெறும் மேற்படி பயிலகங்களில் ஒவ்வொரு நியமனமும் வேலை வாய்ப்பகம் மூலம் தகுதி வாய்ந்த பணி வேட்பாளர் பட்டியல் பெறப்பட்டு பயிலகப் பணியாளர் தேர்வுக் குழு (Staff Selection Committee) நடத்தும் நேர்முகத் தேர்வு மூலம் நியமனம் செய்யப்படுவர். இத்தேர்வில் அவ்வந்த உதவிபெறும் பயிலகங்களில், தகுதி உள்ள போதகர்கள் உள் நபர்களாகப் பங்கேற்று, உயர் பதவியான இணை விரிவுரையாளர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட உரிமையுண்டு.

4. அவ்வகையில் மேற்படி அரசு நிதியுதவி பெறும் பல்தொழில் நுட்பப் பயிலகங்களில் பணியாற்றி வரும் தகுதி வாய்ந்த போதகர்களில், பணியாளர் தேர்வுக்குழு வாயிலாக, உள் நபர்களாகப் பங்கேற்று, 43 பேர் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மேலும், காலியிடங்கள் ஏற்படும் போது, மேற்கொண்டு 260 நபர் நியமனம் செய்யப்பட உள்ளார்கள்.

5. இவ்வாறாக, அரசாணை 1081-ன் முழுப் பயன்களும் அரசு நிதியுதவி பெறும் பல்தொழில் நுட்பப் பயிலகங்களில் பணியாற்றி வரும் தகுதி வாய்ந்த போதகர்களுக்கு கிடைப்பதற்கு ஆவன செய்யப்பட்டுள்ளது.

[1997 ஏப்ரல் 30

105—

## புத்தகரம் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக மாற்றும் திட்டம்

வினா எண் **4296—திரு. ஆர். மகேந்திரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்றம்பள்ளி தொகுதி, சோலையார்பேட்டை ஒன்றியம், புத்தகரம் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக மாற்றும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) அத்தகைய செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழ இடமில்லை.

106—

## மாணவர்களை விளையாட்டுத் துறையில் ஊக்குவித்தல்

வினா எண் **4403—திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் மாணவர்களை விளையாட்டுத் துறையில் ஊக்குவிக்க அரசு என்னென்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

(ஆ) பெண்களை அத்துறையில் ஊக்குவிக்க அரசு தனிக் கவனம் செலுத்துமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): ஒரு விவர அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.



1997 ஏப்ரல் 30]

## அறிக்கை

தமிழ்நாட்டில் மாணவர்களை விளையாட்டுத் துறையில் ஊக்குவிக்க அரசு கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுத்துள்ளது:—

**1. மாநில அளவிலான கோடைகால பயிற்சி முகாம்:**

16 வயதுக்கு உட்பட்ட மாணவ, மாணவியர்களுக்கு மாவட்டம் மற்றும் மாநில அளவிலான கோடைகால பயிற்சி முகாம்கள் தங்கும் வசதியுடன் 21 நாட்களுக்கு அனைத்து விளையாட்டுகளிலும் ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்பட்டு வருகின்றன.

**2. மாணவர்களுக்கு ஊக்கத் தொகை/விருதுகள் வழங்குதல்:**

உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு மாநில அளவில் குடியரசு தின மற்றும் பாரதியார் தின விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படுகின்றன. இவற்றில் தடகளப் போட்டிகளில் முதலிடம் பெற்றவர்களுக்கு ரூ. 600/-ம் இரண்டாம் இடம் பெற்றவர்களுக்கு ரூ. 400/-ம் தடகளமல்லாத மற்ற விளையாட்டுகளில் வெற்றி பெற்றவர்களுக்கு ரூ. 400/-ம் ஊக்க உதவித் தொகை அளிக்கப்படுகிறது.

**3. சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு விருது வழங்கும் விழா:**

பன்னாட்டு மற்றும் தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு இந்தியாவிற்கு புகழாரம் சூட்டும் சிறந்த விளையாட்டு வீரர், வீராங்கனைகளை ஊக்குவிக்கும் வகையில் சிறப்பு உதவித் தொகை வழங்கப்பட்டு வருகின்றது.

**4. ஊரக விளையாட்டு வளாகங்கள்:**

ஊரக இளைஞர்களுக்கு சிறந்த முறையில் அனைத்து வசதிகளுடன் விளையாட்டுகளில் பயிற்சி அளிக்க, தமிழ்நாட்டிலுள்ள 388 ஊராட்சி ஒன்றிய தலைமையகங்களில் ஊரக விளையாட்டு வளாகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ரூ. 10,000/- மதிப்பில் விளையாட்டு உபகரணங்கள் ஒவ்வொரு ஊரக விளையாட்டு வளாகத்திற்கும் அளிக்கப்பட்டு வருகின்றன. ஊரக விளையாட்டு வளாகங்களின் உதவியுடன் ஊரக விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

[1997 ஏப்ரல் 30

**5. சிறார்களைக் கண்டு பயிற்சி அளிக்கும் திட்டம் (Catch them very young) :**

12 வயதிற்குட்பட்ட சிறார்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் அனைத்து மாவட்ட தலைநகரங்களில் சிறார்களை கண்டு பயிற்சி அளிக்கும் திட்டம் நடைபெற்று வருகிறது. இதில் வெற்றிபெறும் பள்ளிகளுக்கு வெகுமதிகள் பெறவும், இப்பயிற்சி திட்டம் நடத்துவதற்கும், போட்டிகள் நடத்தவும் மற்றும் விளையாட்டுக் கருவிகள் வாங்கவும் ரூ. 1 இலட்சம் மானியம் வழங்கப்பட்டு வருகின்றது.

**6. இளமையில் தெரிந்தெடுத்தல் திட்டம் (Catch them young) :**

பள்ளியில் பயிலும் 14 வயதுக்குட்பட்ட மாணவ, மாணவியர்களுக்கு அவர் தம் விளையாட்டுத் திறமையை வெளிப்படுத்தவும், விளையாட்டுத் திறமையை மேம்படுத்தவும் "இளமையில் தெரிந்தெடுக்கும் விளையாட்டுப் போட்டிகள்" தடகளம், கூடைப்பந்து, கையுந்துபத்து, கால்பந்து மற்றும் வளைகோல்பந்து ஆகிய விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. மேற்கண்ட போட்டிகளில் திறன் கொண்ட விளையாட்டு வீரர்களுக்கு கோடைகால பயிற்சி முகாம்களில் சிறப்பு பயிற்சி முகாம் நடத்தப்பட்டு வருகின்றது.

**7. தேசிய விளையாட்டுத் திறன் போட்டிகள்:**

9 முதல் 12 வயதுக்குட்பட்டவர்களுக்கு இந்திய விளையாட்டுக் குழுமம் சார்பில் தேசிய விளையாட்டுத் திறன் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இதில் விளையாட்டு வீரர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு மதிப்பீட்டு பயிற்சி முகாம் இந்திய விளையாட்டுக் குழுமத்தால் நிர்ணயிக்கப்படும் விதிமுறைகளுக்கு ஏற்ப நடத்தப்பட்டு வருகிறது. மேற்கண்ட மதிப்பீட்டு பயிற்சி முகாமில் மாணவர்கள் இந்திய விளையாட்டுக் குழுமத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டு இந்திய விளையாட்டுக் குழும தத்துப் பள்ளிகளில் சேர்க்கப்பட்டு ஊட்ட உணவு, கல்வி மற்றும் தீவிர பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றன

**8. அண்ணா மிதிவண்டி பந்தயப் போட்டிகள் :**

மறைந்த தமிழ்நாடு முதல்வர் பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவாக ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 15-ல் அனைத்து மாவட்ட தலைநகரங்களில், மாணவர்களுக்கு 15 கிலோ மீட்டர் தூர மிதிவண்டி போட்டிகளும், மாணவியர்களுக்கு 5 கி.மீ. தூர மிதிவண்டிப் பந்தயமும்



1997 ஏப்ரல் 30]

நடைபெற்று வருகின்றன. இதில் வெற்றி பெறும் மாணவ, மாணவியர்களுக்கு ஊக்க பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டு வருகின்றன.

**9. மாநில அளவிலான மிதிவண்டி பந்தயப் போட்டிகள் :**

மாவட்ட அளவிலான மிதிவண்டிப் போட்டிகளில் வெற்றி பெறும் மாணவ, மாணவியர்களுக்கு மாநில அளவிலான மிதிவண்டிப் பந்தயப் போட்டிகள் சிறப்பான முறையில் நடைபெற்று வருகின்றன.

**10. நடுநிலைப்பள்ளி விளையாட்டுப் போட்டிகள் :**

நடுநிலைப் பள்ளிகளில் பயிலும், மாணவ மாணவியர்களுக்கு நடுநிலை விளையாட்டுப் போட்டிகள் கல்வி மாவட்ட அளவில் ஒவ்வொரு ஆண்டும் நடைபெற்று வருகின்றன.

**11. அகில இந்திய ஊரக விளையாட்டுப் போட்டிகள் :**

அகில இந்திய விளையாட்டுப் போட்டிகள் பாட்டியாலாவில் உள்ள இந்திய விளையாட்டு குழுமத்தால் ஒவ்வொரு ஆண்டும் ஊரகப் பகுதிகளில் உள்ள மாணவ, மாணவியர்களுக்கு நடத்தப்பட்டு வருகின்றன. இப்போட்டிகள் வட்டார அளவிலும், மாவட்ட அளவிலும் மற்றும் மாநில அளவிலும் நடைபெற்று வருகின்றன. இந்திய விளையாட்டுக் குழுமம், அகில இந்திய ஊரக விளையாட்டுப் போட்டிகளை இரு பகுதிகளாக அனைத்து விளையாட்டு போட்டிகளிலும் நடத்தி வருகின்றது. இப்போட்டிகள் ஏதாவது ஒரு இந்திய மாநில தலைநகரத்தில் நடைபெறும். தமிழ்நாடு அணி இந்திய அளவில் நடைபெறும் இப்போட்டிகளில் ஒவ்வொரு ஆண்டும் தவறாமல் கலந்து கொள்கின்றது. கலந்து கொள்வதற்கு முன் தமிழக அணிக்கு வட்டார அளவிலும், மாவட்ட அளவிலும் விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட்டு மாநில அளவில் தேர்ந்தெடுக்கப்பட்டு தேசிய அளவிலான போட்டிகளில் பங்கு பெறுகின்றது. வெற்றிபெற்ற விளையாட்டு வீரர்களுக்கு ஊக்கப் பரிசும், சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன. கலந்து கொண்டதற்கான சான்றிதழ் மீது தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் படிவம்-2 வழங்கி வருவதால் விளையாட்டு வீரர்கள் அரசுப் பணிகளில் சேரும் வாய்ப்பினை பெற்று வருகின்றனர்.

[1997 ஏப்ரல் 30

**12. தேசிய அளவிலான மகளிர் விளையாட்டுப் போட்டிகள் :**

இந்திய விளையாட்டுக் குழுமத்தால் தேசிய அளவிலான மகளிர் விளையாட்டுப் போட்டிகள் இந்திய மாநில தலைநகரங்களில் ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்பெற்று வருகின்றன. இப்போட்டிகளில் மகளிர் கலந்துகொள்ள வயது வரம்பு மற்றும் இன வேறுபாடு ஏதும் இல்லை. தமிழக அணி மேற்கண்ட போட்டிகளில் அனைத்து விளையாட்டு போட்டிகளிலும் கலந்து கொள்கின்றது. மாவட்ட அளவிலும், வட்டார அளவிலும் போட்டிகள் நடத்தப்பட்டு மாநில அளவில் வீராங்கனைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு தமிழக அணி தேசிய அளவில் கலந்து கொள்கின்றது. வெற்றி பெறும் வீராங்கனைகளுக்கு ஊக்கப் பரிசும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டு வருகின்றது. கலந்து கொண்டதற்கான சான்றிதழ்கள் மீது தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் படிவம்-2 வழங்கி வருவதால் விளையாட்டு வீராங்கனைகள் அரசுப் பணிகளில் சேர வாய்ப்பினை பெறுகின்றனர்.

**13. குடியரசு மற்றும் பாரதியார் தினப் போட்டிகள் :**

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், மாநில அளவிலான குடியரசு தின மற்றும் பாரதியார் தின விளையாட்டுப் போட்டிகள் நடத்த பள்ளிக் கல்வி இயக்ககத்திற்கு ஒவ்வொரு ஆண்டும் மானியம் அளித்து வருகின்றது.

**14. பள்ளி மாணவர்களுக்கு தேசிய அளவிலான போட்டிகள் :**

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், பள்ளிகளில் பயிலும் சிறந்த மாணவர்களை தேர்ந்தெடுக்கும் பொருட்டு பள்ளிக் கல்வித் துறைக்கு மானியம் அளித்து வருகின்றது. சிறந்த விளையாட்டு வீரர்கள் தமிழ்நாடு சார்பில் கீழ்க்கண்ட விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றிவாகை சூடி மாநிலத்திற்கு புகழாரம் தேடி வருகின்றனர்

1. வினோமன்காட் கிரிக்கெட் போட்டிகள்
2. சுப்ராட்டோ முகர்ஜி கால்பந்து போட்டிகள்
3. சி.கே. நாயுடு கிரிக்கெட் போட்டிகள்
4. ஜவஹர்லால் நேரு சப்-ஜூனியர் வளைகோல் பந்து போட்டிகள்
5. ஜவஹர்லால் நேரு ஜூனியர் வளைகோல் பந்து போட்டிகள்



1997 ஏப்ரல் 30]

6. டென்னிஸ் போட்டிகள்
7. தேசிய பள்ளி இணையம் நடத்தும் வெவ்வேறு போட்டிகள்

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் ரூ. 6.50 இலட்சம் மானியமாக மேற்கண்ட போட்டிகளில் தமிழக அணி கலந்து கொள்வதற்காக பள்ளிக் கல்வித்துறை மூலம் முதன்மை உடற்கல்வி ஆய்வர்களுக்கு அளித்து வருகின்றது.

**15. பத்து பள்ளி விளையாட்டுப் போட்டிகள் :**

மாநில அளவிலான குடியரசு தின மற்றும் பாரதியார் தின விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்வதற்கு முன் மண்டல அளவிலும் மாவட்ட அளவிலும் அனைத்து போட்டிகளில் கீழ்மட்ட விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இப்போட்டிகள் நடத்த தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் ரூ. 1.62 இலட்சம் மானியம் அளித்து ஊக்குவித்து வருகின்றது.

**16. மாணவ/மாணவியருக்கு விளையாட்டுப் பயிற்சி அளிக்கும் திட்டங்கள் :**

பள்ளி மற்றும் கல்லூரிகளில் படிக்கும் மாணவ/மாணவியருக்கு விளையாட்டில் பயிற்சி அளிக்கும் வகையில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் 101 பயிற்றுநர்களை நியமித்து பல்வேறு விளையாட்டுக்களில் சிறப்பு பயிற்சி அளித்து வருகின்றது. விளையாட்டு வீரர்/வீராங்கனைகளின் விளையாட்டுத் திறனை விரிவுபடுத்துவதற்கும், சிறந்த விளையாட்டு நுணுக்கங்களை வெளிக் கொணர்வதற்கும் இப்பயிற்றுநர்களின் பணி பயன்படுகிறது. இப்பயிற்றுநர்கள் பாட்டியாலாவில் உள்ள தேசிய விளையாட்டு பள்ளியில் பயிற்சி பெற்றவர்கள். கீழ்க்கண்ட விளையாட்டுக்களில் பயிற்சி அளிக்க பயிற்றுநர்கள் இந்த ஆணையத்தில் பணிபுரிகின்றனர்:

1. தடகளம்
2. கூடைப்பந்து
3. கால்பந்து
4. கையுந்துபந்து
5. வளைகோல்பந்து

[1997 ஏப்ரல் 30

6. கோ-கோ
7. கபாடி
8. நீச்சல்
9. டென்னிஸ்
10. பளு தூக்குதல்
11. கிரிக்கெட்
12. ஜிம்னாஸ்டிக்
13. சிறகுப் பந்து

இது தவிர, இந்திய விளையாட்டு ஆணையம் அதன் செலவில் 55 பயிற்றுநர்களை பல்வேறு மாவட்டங்களில் பணிபுரிய அனுப்பி வைத்துள்ளது. இந்த பயிற்றுநர்கள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மேற்பார்வையில் செயல்படுகின்றனர்.

இந்த பயிற்றுநர்கள் காலை 6.00 மணி முதல் 8.30 மணி வரையிலும், மாலையில் 3.30 மணி முதல் 6.30 மணி வரையிலும் சிறப்பு பயிற்சி அளிக்கின்றனர். மாவட்டங்களிலுள்ள விளையாட்டு மைதானங்களில் செயல்படுவதுடன், பள்ளிகள் மற்றும் கல்லூரிகளிலும் மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கவும் அனுப்பி வைக்கப்படுகின்றனர். மாணவர்களுக்காக நடத்தப்படும் இளையோர் (16 வயதுக்குட்பட்டோர்) மிக இளையோர் (13 வயதுக்குட்பட்டோர்) போட்டிகளில் பங்கெடுக்கவும் மாணவ/மாணவியருக்கு சிறப்பு பயிற்சி வழங்குகின்றனர். பல்வேறு விளையாட்டுக்களுக்கான மாவட்ட/மாநில சங்கங்களுடன் இணைந்து மாவட்ட/மாநில/தேசிய மற்றும் பன்னாட்டு போட்டிகளில் கலந்து கொள்பவர்களுக்கும் சிறப்பு பயிற்சி இந்த பயிற்றுநர்களாலேயே வழங்கப்படுகின்றது.

### 17. மாணவ/மாணவியரை ஊக்குவிக்கும் திட்டங்கள் :

விளையாட்டில் ஈடுபடும் மாணவ/மாணவியர்கள் தொடர் பயிற்சியின் மூலமே சிறந்து விளங்க இயலும். இந்த மாணவ/மாணவியர் பள்ளி படிப்பில் முழுவதுமாக ஈடுபட இயலாமலும், மற்ற மாணவர்களுடன் படிப்பில் போட்டியிட முடியாமலும் இருக்க வாய்ப்பிருப்பதால், மேல்படிப்பிற்கு கல்லூரிகளில் சேரும்பொழுது தேவையான பாடப் பிரிவில் சேர இயலாமல் போகவும் வாய்ப்புண்டு. எனவே தமிழ்நாடு அரசு தனது ஆணை எண் 466



1997 ஏப்ரல் 30]

கல்வி, நாள் 8-6-94-ல் பட்டபடிப்பிற்கான இடங்களில் 3 சதவிகித இடங்களையும், பட்ட மேற்படிப்பிற்கான இடங்களில் 2 சதவிகித இடங்களையும் விளையாட்டு வீரர்களுக்கென ஒதுக்கீடு செய்து ஆணை வழங்கியுள்ளது. இது தவிர, தமிழ்நாட்டிலுள்ள அரசு மருத்துவக் கல்லூரிகளில் 3 இடங்களையும், பொறியியல் கல்லூரிகளில் 35 இடங்களையும், விளையாட்டு வீரர்கள்/வீராங்கனைகளுக்காக ஒதுக்கீடு செய்துள்ளது.

### 18. ஊரக விளையாட்டு மையங்கள் :

கிராமப்புறங்களில் உள்ள மாணவர்கள் மற்றும் மாணவரல்லாதவர்கள் தேவையான விளையாட்டுக்களில் பயிற்சிபெற போதிய விளையாட்டு தளங்கள் இல்லாத குறையினை நீக்கிட ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒன்று வீதம் ஊரக விளையாட்டு மையங்கள் துவக்கப்பட்டுள்ளன. தற்போது 358 ஊராட்சி ஒன்றியங்களில் இந்த ஊரக விளையாட்டு மையங்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும், இந்த மையங்களில் உள்ள விளையாட்டு தளங்களை மேம்படுத்திடவும், புதிய தளங்கள் ஏற்படுத்தவும் அரசின் ஜவஹர் வேலை வாய்ப்பு திட்டத்தின் மூலம் நடவடிக்கை எடுக்க கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. இதுதவிர, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் இந்த மையங்களுக்கு தேவையான விளையாட்டு உபகரணங்களையும் வழங்கியுள்ளது.

### 19. விளையாட்டுப் பள்ளி, விளையாட்டு விடுதி :

தமிழ்நாட்டில் பள்ளிகளில் படிக்கும் மாணவ/மாணவிகளின் விளையாட்டுத் திறனை மேம்படுத்தவும், ஊக்குவிக்கும் பொருட்டும் தமிழக அரசு விளையாட்டுப் பள்ளி/விடுதிகளை ஏற்படுத்தி உள்ளது. தற்போது இயங்கிவரும் விளையாட்டுப் பள்ளி/விடுதிகள் விவரம் கீழ்வருமாறு:

**1. மாணவர்களுக்கு மட்டும் :**

1. ஒய்.எம்.சி.ஏ. விளையாட்டுப் பள்ளி, சென்னை
2. என்.எல்.சி. விளையாட்டுப் பள்ளி, நெய்வேலி
3. எஸ்.ஆர்.கே. விளையாட்டுப் பள்ளி, கோவை
4. விளையாட்டு விடுதி, திருச்சி
5. விளையாட்டு விடுதி, மதுரை

6. விளையாட்டு விடுதி, திருநெல்வேலி

**2. மாணவிகளுக்கு மட்டும் :**

7. விளையாட்டு விடுதி, ஈரோடு

8. விளையாட்டு விடுதி, தர்மபுரி

**விளையாட்டுப் பள்ளி/விடுதிகள் தேர்வு :**

7-ம் வகுப்பு தேறிய மாணவ/மாணவியர் 8-ம் வகுப்பிற்கு தேர்வு செய்யப்படுவர். வயது வரம்பு 15-க்கு மிகாமல் இருக்க வேண்டும்.

8-ம் வகுப்பு தேறிய மாணவ/மாணவியர் 9-ம் வகுப்பிற்கு தேர்வு செய்யப்படுவர். வயது வரம்பு 16-க்கு மிகாமல் இருக்க வேண்டும்.

10-ம் வகுப்பு தேறிய மாணவ/மாணவியர் 11-ம் வகுப்பிற்கு தேர்வு செய்யப்படுவர். வயது வரம்பு 18-க்கு மிகாமல் இருக்க வேண்டும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவ/மாணவியர்களுக்கு ஊக்க உதவித்தொகை ரூ. 450/- மாதத்திற்கு ஒரு முறையும், சர்வீஸ் தொகை ரூ. 300/-ம் சீருடைக்காக ரூ. 550/-ம் உபகரணங்களுக்காக ரூ. 150/-ம் வருடத்திற்கு ஒருமுறை வழங்கப்படும். தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவ/ மாணவிகளுக்கு என்.ஐ.எஸ். நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் தேசிய விளையாட்டு நிலையத்தில் பயிற்சி பெற்ற சிறந்த பயிற்சியாளர்களால் பயிற்சி அளிக்கப்படுகின்றது.

பெண்களை விளையாட்டுத் துறையில் அரசு ஊக்குவித்து வருகின்றது. பெண்கள் சரிசமமாக ஆண்களுடன் அனைத்து விளையாட்டுகளிலும் பங்கு பெற்று வருகின்றனர். பெண்கள் அரியானாவில் 19-11-1996 முதல் 22-11-1996 வரை நடைபெற்ற தேசிய மகளிர் விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு தடகளத்தில் வெள்ளி பதக்கமும், கையுந்து பந்தில் மூன்றாவது இடமும், கபடியிலும் வெற்றி பெற்றுள்ளனர். மேலும் 4-12-1996 முதல் 7-12-1996 வரை கட்டாக்கில் நடந்த தேசிய மகளிர் விளையாட்டுப் போட்டியில் கூடைப்பந்து விளையாட்டில் கலந்து கொண்டு இரண்டாவது இடம் பெற்றுள்ளனர். 21-11-1996 முதல் 24-11-1996 வரை நடந்த அகில இந்திய ஊரக விளையாட்டுப் போட்டிகளிலும் பெண்கள் கலந்து கொண்டு கைப்பந்தாட்டத்தில் முதலிடம் பெற்றுள்ளனர், மற்றும் தடகளப் போட்டியில் கலந்து கொண்டு வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்களைப் பெற்றுள்ளனர். குறிப்பாக பெண்கள் தேசிய மகளிர் விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி வாகை சூடி பரிசுகள் பெற்று வருகின்றனர்.



**107—**

**நல்லாசிரியர்களுக்கு வழங்கப்படும் விருதுக்கான வெகுமதிகள்**

வினா எண். **5023—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நல்லாசிரியர் விருதுக்கு என்னென்ன வெகுமதிகள் வழங்கப்படுகின்றன ?

(ஆ) அவற்றை உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) நல்லாசிரியர் விருது பெறும் ஆசிரியர்களுக்கு ரூ.2,000 பணமுடிப்பும், ரூ.200/- பெறுமானமுள்ள ஒரு வெள்ளிப் பதக்கமும் ஒரு சான்றிதழும் வழங்கப்படுகிறது. மேலும் நல்லாசிரியர் விருது பெறும் ஆசிரியர்களுக்கு அவர்கள் வேலை பார்க்கும் இடத்திலிருந்து விழா நடைபெறும் இடத்திற்கு இரயில் மூலம் வந்து போக முதல் வகுப்பிற்குண்டான இரயில்வே கட்டணமும் வழங்கப்படுகிறது.

(ஆ) இல்லை.

**108—**

**தனியார் சுயநிதிக் கல்லூரி மற்றும் பள்ளிகளில் வசூலிக்கப்படும் கட்டணம்**

வினா எண் **5031—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர், கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தனியார் சுயநிதிக் கல்லூரி மற்றும் பள்ளிகளின் கட்டணம் அதிகரித்துள்ளதால் வசதியற்ற மாணவர்களின் கல்வி பெறுகிற உரிமை மறுக்கப்பட்ட நிலையை அரசு அறியுமா?

[1997 ஏப்ரல் 30

(ஆ) ஆம் எனில், அதற்கு அரசின் மாற்று நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) சுயநிதிக் கல்லூரி மற்றும் பள்ளிகளில் கட்டணம் அதிகரித்துள்ளதால் வசதியற்ற மாணவர்களின் கல்வி பெறுகின்ற உரிமை மறுக்கப்பட்டதாக புகார்கள் ஏதும் பெறப்படவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

## 109—

### சுயநிதித் தொழில் கல்லூரிகள், பல்தொழில் நுட்பப் பயிலகம் ஆகியவற்றில் அதிக நன்கொடை வசூலித்தல்

**வினா எண் 5036—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சுயநிதித் தொழில் கல்லூரிகள், பல்தொழில் நுட்பப் பயிலகம் ஆகியவற்றில் அதிக நன்கொடை வசூலிப்பது அரசிற்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) அனைத்துக் கல்லூரி முதல்வர்களுக்கும் இதுகுறித்து அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

## 110—

### கல்லூரி மற்றும் பள்ளிகளில் கராத்தே பயிற்சியை கட்டாய பாடமாக்குதல்

**வினா எண் 5078—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—



1997 ஏப்ரல் 30]

கல்லூரி/பள்ளிகளில் பயிலும் மாணவ/மாணவியர்களுக்கு தன்னம்பிக்கையை வளர்க்க கராத்தே பயிற்சியை கட்டாயப் பாடமாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

## 111—

### தொடக்கப் பள்ளிகளுக்கு ஆசிரியர்கள் நியமனத்தில் மாணவர்—ஆசிரியர் விகிதங்கள்

**வினா எண் 5482—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொடக்கப் பள்ளிகளுக்கு ஆசிரியர்களை நியமிக்க ஒப்புக் கொள்ளப்பட்ட மாணவர்—ஆசிரியர் விகிதங்கள் ஏதேனும் உள்ளனவா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) அரசாணை எண் 340, கல்வி, நாள் 1-4-1992-ல் மாணவர்-ஆசிரியர் விகிதம் 50:1 என வரையறுக்கப்பட்டுள்ளது. இந்த விகிதத்தை மாற்றியமைக்கப் பல தனியார் பள்ளி நிர்வாகிகளின் சங்கங்கள் அரசிடம் முறையீடு செய்ததை அடுத்து அரசு, கடித எண் 9463/டி-1/95-1-நாள் 8-3-1995-ல் ஆசிரியர் பணியிடங்களை நிர்ணயிக்க ஒரு இடைக்கால வழிகாட்டு முறையினை (Interim Guidelines) வகுத்துத் தந்தது. இதன்படி 50:1 என்று மாணவர்—ஆசிரியர் விகிதம் அமைக்கப்பட்டு பணியிடங்கள் அதிகபட்சமாக அனுமதிக்கப்படும் வரன்முறை தளர்த்தப்பட்டது.

[1997 ஏப்ரல் 30

**112—**

**கல்லூரிகளில் நடக்கும் "ராகிங்"-கை தடை செய்தல்**

**வினா எண் 5664—திரு. செங்கை சிவம் மற்றும் திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்லூரிகளில் மாணவர்களிடையே நடக்கும் "ராகிங்" கொடுமையை தடை செய்ய புதிய சட்டம் கொண்டு வரும் எண்ணம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தமிழகக் கல்வி நிறுவனங்களில் 'கேலிவதை' செய்தலைத் தடுப்பதற்கான சட்டத்தை அரசு இயற்றியுள்ளது.

**113—**

**நாடாளுமன்றத் தொகுதிகளை திருத்தி அமைத்தல்**

**வினா எண் 6032—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாடாளுமன்றத் தொகுதிகளைத் திருத்தி அமைப்பது குறித்து மாநில அரசு மத்திய அரசிற்கு ஏதேனும் ஆலோசனைகளை அனுப்பி வைத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): இல்லை.



1997 ஏப்ரல் 30]

**114—**

**தருமபுரியில் அரசினர் பொறியியற் கல்லூரி, பல்தொழில் நுட்பப் பயிலகம் அமைத்தல்**

**வினா எண் 6160—திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரியில் அரசினர் பொறியியற் கல்லூரியும், பல்தொழில் நுட்பப் பயிலகமும் (Polytechnic) அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

இல்லை.

**115—**

**கிருஷ்ணகிரி அரசு கலைக் கல்லூரியில் அனைத்துப் பாடங்களிலும் முதுகலைப் பாடப் பிரிவு துவங்குதல்**

**வினா எண் 6295—திரு. பே. வே. ஸ்ரீ. வெங்கடேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி அரசு கலைக் கல்லூரியில் அனைத்துப் பாடங்களிலும் முதுகலைப் பாடப்பிரிவு 1997-98-ஆம் கல்வியாண்டில் துவங்கிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இப்போது இல்லை.

**116—**

**திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்திலுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள்**

**வினா எண் 91—திரு. பெ. சு. திருவேங்கடம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1997 ஏப்ரல் 30

(அ) திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் பெரும்பாலும் மருத்துவ அதிகாரிகள், மருந்துகள் இல்லாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) இதுகுறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ): காலியாக இருந்த மருத்துவர் பணியிடங்களில் சுமார் 26 மருத்துவ அலுவலர்கள் தற்போது பணியமர்த்தப்பட்டுள்ளார்கள். ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திலும், ஒரு மருத்துவராவது இருக்குமாறு அருகில் (2 மருத்துவ அலுவலர்கள் இருக்கும்) உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களிலிருந்து மருத்துவ அலுவலர் மாற்றுப் பணிக்கு அமர்த்தி, பொது மக்களுக்குச் சேவை செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. காலியாக உள்ள பணியிடங்களுக்கு தமிழ்நாடு தேர்வாணையம் மூலம் மருத்துவர்கள் தேர்ந்தெடுக்கப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மருந்துகளைப் பொறுத்தமட்டில், எந்த ஆரம்ப சுகாதார நிலையத்திலும் பற்றாக்குறை இல்லை. தமிழ்நாடு மருத்துவப் பணிகள் நிறுவனம் (Tamil Nadu Medical Services Corporation Limited) மூலம் போதிய அளவு தரமான மருந்துகள் வழங்கப்படுகின்றன.

## 117—

### திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத் தலைமை மருத்துவமனை

**வினா எண் 92—திரு. பெ. சு. திருவேங்கடம்**: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத் தலைமை மருத்துவமனையில் போதிய வசதிகள் இல்லாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



1997 ஏப்ரல் 30]

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத் தலைமை மருத்துவனை போதிய வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

## 118—

### மின்வாரியத்தில் வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் புதிய உதவியாளர்களை நியமித்தல்

**வினா எண் 202—திரு. வீ. தமிழ்மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மின்வாரியத்தில் புதிதாக நியமிக்கப்பட்ட தற்காலிக உதவியாளர்களுக்குப் பதிலாக வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலம் புதிய உதவியாளர்களை நியமிக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் :**

உச்சநீதிமன்ற ஆணைக்கிணங்க, நீதிபதி காலித் கமிஷன் பரிந்துரை செய்துள்ள 18,006 ஒப்பந்தத் தொழிலாளர்களை 31-3-1998-க்குள் வாரியம் பணியில் அமர்த்த வேண்டும். நீதிபதி காலித் கமிஷன் பரிந்துரை செய்துள்ள 18,006 ஒப்பந்தத் தொழிலாளர்களில் 9,000 ஒப்பந்தத் தொழிலாளர்கள் நேர்காணலுக்கு அழைக்கப்பட்டு, அவர்களின் பணி நிரந்தரம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், 3,500 ஒப்பந்தத் தொழிலாளர்களை 31-3-1997-க்குள் பணி நிரந்தரம் செய்திட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மீதம் உள்ள 5,506 ஒப்பந்தத் தொழிலாளர்களை 31-3-1998-க்குள் பணி நிரந்தரம் செய்ய வேண்டும். இந்தத் தொழிலாளர்களை நியமிப்பதற்கு முன் வேறு எவரையும் வாரியம் உதவியாளர்களாக நியமிக்கக் கூடாது.

எனவே, வேலை வாய்ப்பு அலுவலகத்தின் மூலம் புதிய உதவியாளர்களை நியமிக்க தற்போது இயலாது.

**119—**

### ஊராட்சி, பேரூராட்சிப் பகுதிகளிலுள்ள ஆழ்குழாய்க் கிணறுகளுக்கு இலவச மின்சாரம் வழங்குதல்

**வினா எண் 291—திரு. நா. பெரியசாமி:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—*

*ஊராட்சி, பேரூராட்சிப் பகுதிகளில் ஆழ்குழாய்க் கிணறுகளுக்கு பொருத்தப்பட்டுள்ள கம்ப்ரஸர் மின் இணைப்புகளுக்கு இலவச மின்சாரம் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*விடை—*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*அத்தகைய திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

**120—**

### வேடசந்தூருக்கு உயர்சக்தி மின்மாற்றி அமைத்தல்

**வினா எண் 299—திரு. சீ. வெ. கிருஷ்ணன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—*

*வேடசந்தூருக்கு உயர்சக்தி மின்மாற்றி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

*விடை—*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*ஆம்.*



**121—**

### Proposal to improve low voltage and irregular supply of Electricity in Hosur villages

**வினா எண் 304—திரு. பி. வெங்கடசாமி:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(a) Whether there is any proposal to improve the low voltage and irregular supply of electricity in remote villages in Hosur Taluk; and

(b) If so, the details thereof?

*விடை—*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) பலகிரி, பாத்தூர், பேகிசெட்டிபள்ளி, பீரமங்களம், பேரிகை ஆகிய கிராமங்களில் நிலவும் மின் அழுத்தக் குறைவை சரிசெய்ய தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.*

**122—**

### குஜிலியம்பாறை அரசு மருத்துவமனை

**வினா எண் 306—திரு. சீ. வெ. கிருஷ்ணன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திண்டுக்கல் அண்ணா மாவட்டம் குஜிலியம்பாறை அரசு மருத்துவமனையை 24 மணி நேரமும் இயங்கும் பெரிய அரசு மருத்துவமனையாக தரம் உயர்த்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

*விடை—*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*குஜிலியம்பாறையில் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. வட்டார அளவில் அனைத்து ஆரம்ப சுகாதார*

[1997 ஏப்ரல் 30

நிலையங்களும் வாரத்தின் அனைத்து நாட்களிலும் 24 மணி நேரமும் செயல்பட ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் நடைமுறைகளை தயாரித்து செயல்படுத்துமாறு இயக்குநர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். இது செயல்படுத்தப்படும்போது குஜிலியம்பாறை ஆரம்ப சுகாதார நிலையமும் 24 மணி நேரமும் செயல்படத் தொடங்கும்.

**123—**

**அய்யலூர் மலைப்பகுதி கிராம மக்களுக்கென அரசு மருத்துவமனை கட்டுதல்**

**வினா எண் 314—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடமதுரை ஒன்றியம், அய்யலூர் மலைப்பகுதி கிராம மக்கள் பயன்பெற அரசு மருத்துவமனை கட்டப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் :**

(அ) அய்யலூர் மலைப்பகுதி கிராம மக்களுக்காக புதிய மருத்துவமனை துவங்கும் திட்டம் ஏதுமில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**145—**

**விவசாயிகள் சுயநிதித் திட்டத்தின் கீழ் மின் இணைப்புகள் வழங்கும் திட்டம்**

**வினா எண் 334—திரு. துரை. சந்திரசேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1997 ஏப்ரல் 30]

விவசாயிகள் சுயநிதித் திட்டத்தின் கீழ் ரூ. 10,000 பணம் செலுத்தி மின் இணைப்புகள் வழங்கும் திட்டம் நடைமுறையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் :**

ஆம்.

**125—**

**வட ஆற்காடு அம்பேத்கர் மாவட்டத்தில் மின் வெட்டினால் விவசாயிகள், குடிமக்கள் பாதிப்பு**

**வினா எண் 357—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு அம்பேத்கர் மாவட்டத்தில் மின்வெட்டினால் விவசாயிகள், குடிமக்கள் பாதிக்கப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆமெனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மின் விநியோகத்தில் செய்யப்பட்ட கட்டுப்பாட்டினால் விவசாயிகள் பாதிக்கப்பட்டது தெரியும்.

(ஆ) மின் விநியோகத்தில் செய்யப்பட்ட கட்டுப்பாடுகளின் காரணமாக, வட ஆற்காடு அம்பேத்கர் மாவட்டத்தில் சில துணை மின் நிலையங்களில் 30-5-1996-க்கு முன்னால் 110 கிலோ வோல்ட் மின் பாதைகளில் மின்சாரக் கட்டுப்பாடு செய்யப்பட்டு வந்ததால் விவசாயக் குடிமக்களுக்கு பகலில் நாலு மணி நேரத்திற்குக் குறைவாகவும், இரவு ஆறு மணி நேரத்திற்குக் குறைவாகவும் மும்முனை மின்சாரம் வழங்கப்பட்டு வந்தது.

[1997 ஏப்ரல் 30

126—

**அரசு மருத்துவமனைகளிலுள்ள புதிய அமரர் ஊர்திகள்**

**வினா எண் 386—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பழுதடைந்த நிலையில் அரசு மருத்துவமனைகளில் உள்ள அமரர் ஊர்திகளுக்குப் பதிலாக புதிய ஊர்திகள் வாங்க அரசு முன் வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

பழுதடைந்த, ஓட இயலாத நிலையில் உள்ள அமரர் ஊர்திகளுக்குப் பதிலாக புதிய ஊர்திகள் வாங்குவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

127—

**ஊராட்சிகளிலுள்ள குடிதண்ணீர் விநியோக 'கம்ப்ரஸர்' மோட்டார்களுக்கு இலவச மின்சாரம் வழங்கல்**

**வினா எண். 484—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டிலுள்ள ஊராட்சிகளில் குடிதண்ணீர் விநியோகம் செய்யும் "கம்ப்ரஸர்" மோட்டார்களுக்கு இலவச மின்சாரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் :**

தமிழ்நாட்டிலுள்ள ஊராட்சிகளில் குடிதண்ணீர் விநியோகம் செய்யும் 'கம்ப்ரசர்' மோட்டார்களுக்கு இலவச மின்சாரம் வழங்கும் திட்டம் ஏதும் இல்லை.



1997 ஏப்ரல் 30]

128—

**மருத்துவப் படிப்பை தமிழில் பயில வழிவகை செய்தல்**

**வினா எண் 486—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அடுத்தக் கல்வி ஆண்டிலிருந்து மருத்துவப் படிப்பினை தமிழில் பயில அரசு வழிவகை செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்சமயம் இல்லை.

129—

**புதுப்பேட்டை அரசு மருத்துவமனையில் படுக்கை வசதிகளை அதிகரித்தல்**

**வினா எண் 489—திரு. ஆர். மகேந்திரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாட்றாம்பள்ளி தொகுதி, புதுப்பேட்டை அரசு மருத்துவமனையில் படுக்கை வசதிகள் அதிகரிக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நலவாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

அங்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் 6 படுக்கைகளுடன் செயல்படுகிறது. அந்தப் படுக்கைகளை அதிகரிக்க வேண்டிய அவசியம் ஏதும் தற்போது இல்லை.

[1997 ஏப்ரல் 30

130—

**வெலக்கல்நத்தம் கிராம அரசு மருத்துவமனைக்குக் கட்டிட வசதி**

**வினா எண் 490—திரு. ஆர். மகேந்திரன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*நாட்றாம்பள்ளி தொகுதி, வெலக்கல்நத்தம் கிராமத்தில் உள்ள அரசு மருத்துவமனைக்குக் கட்டிட வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?*

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*வெலக்கல்நத்தம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கட்டிடம் கட்டத் தேவையான நிலம் கிடைக்கவில்லை. நன்கொடையாகவோ அல்லது அரசு புறம்போக்கு நிலமோ கிடைக்கப்பெற்றதும் மேற்படி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கட்டிடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.*

131—

**திம்மாம்பேட்டை, சுந்தரம்பள்ளி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்**

**வினா எண் 491—திரு. ஆர். மகேந்திரன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*நாட்றாம்பள்ளி தொகுதி, திம்மாம்பேட்டை மற்றும் சுந்தரம்பள்ளி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*மத்திய அரசு வரையறையின்படி தமிழ்நாட்டின் முழுத் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் 1,419 ஆரம்ப சுகாதார நிலையங்கள்*



1997 ஏப்ரல் 30]

*செயல்பட்டு வருவதால் புதிதாக ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை.*

132—

**தாம்பரம் சானடோரியம் பகுதியில் எம்.ஜி.ஆர். மருத்துவ ஆராய்ச்சி நிலையம் அமைக்கும் திட்டம்**

**வினா எண் 715—திரு. மீ. அ. வைத்தியலிங்கம்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தாம்பரம் சானடோரியம் பகுதியில் எம்.ஜி.ஆர். மருத்துவ ஆராய்ச்சி நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதன் தற்போதைய நிலை என்ன?*

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ): இல்லை.*

133—

**மருத்துவர்களுக்கு மறுபயிற்சி அளிக்கும் திட்டம்**

**வினா எண் 726—திரு. கே. சுப்பராயன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) டாக்டர்களுக்கு மறுபயிற்சி அளிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

[1997 ஏப்ரல் 30

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ): புதிதாகத் தேர்ந்தெடுக்கப்படும் டாக்டர்களுக்கு 3 மாதப் பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும் தேவைப்படும்போது சிறப்புத் துறைகளில் பயிற்சிக்கு வழி செய்யப்பட்டிருக்கிறது.*

**134—**

**கோயம்புத்தூர் மாவட்டத்தில் அனல் மின் நிலையம் அமைத்தல்**

வினா எண் **895—திரு. கே. சுப்பராயன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கோயம்புத்தூர் மாவட்டத்தில் அனல் மின் நிலையம் அமைக்கும் கருத்து அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.**

*(அ) இல்லை.*

*(ஆ) கேள்வி எழவில்லை.*

**135—**

**காற்றாலைகள் மூலம் மின்சாரம் தயாரிக்கும் மையங்கள்**

**வினா எண் 897—திரு. கே. சுப்பராயன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழ்நாட்டில் காற்றாலைகள் மூலம் மின்சாரம் தயாரிப்பு எத்தனை மையங்களில் நடைபெறுகிறது?*



1997 ஏப்ரல் 30]

*(ஆ) யூனிட் ஒன்றுக்கு ஆகும் உற்பத்திச் செலவு எவ்வளவு?*

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ): 16 மையங்களில் நடைபெறுகிறது. முதலாண்டில் உற்பத்திச் செலவு யூனிட் ஒன்றுக்கு ரூ. 2.50 ஆக இருக்கும். இரண்டாவது ஆண்டு முதல் உற்பத்திச் செலவு படிப்படியாக குறையும். இந்த உற்பத்திச் செலவு குறைவு எட்டாண்டுகள் முதல் ஒன்பது ஆண்டுகள் வரை இருக்கும். ஏனென்றால் மூலதனத்துக்கான வட்டி ஒவ்வொரு ஆண்டும் குறைவதால் வாங்கிய கடனின் அளவும் குறையும். அதன் பின்னர் உற்பத்திச் செலவு ஆண்டுக்கு ஆண்டு கூடும். ஏனென்றால், நிர்வாகச் செலவுகள் மற்றும் மின் உற்பத்தி அதிகரிப்பு மற்றும் குறைதல்- காற்றாலைகளின் செயல் திறனைப் பொறுத்து அமையும்.*

**136—**

**சித்த மருத்துவத்தைப் பாதுகாத்து வளர்த்தல்**

*வினா எண்* **903—திரு. கே. சுப்பராயன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழ்நாட்டில் சித்த மருத்துவத்தைப் பாதுகாத்து வளர்க்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?*

*(ஆ) தமிழ்நாட்டில் சித்த மருத்துவ ஆராய்ச்சி மையம் இயங்குகிறதா?*

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) சித்த மருத்துவத் துறைக்கு என்று இயக்ககம் ஒன்று உள்ளது. மாவட்டத் தலைமை மருத்துவமனைகள், வட்டம் மற்றும் வட்டம் சாரா மருத்துவமனைகள் மற்றும் பல ஆரம்ப சுகாதார*

[1997 ஏப்ரல் 30

நிலையங்களில் சித்த மருத்துவப் பிரிவுகள் இயங்குகின்றன. அரசு சித்த மருத்துவக் கல்லூரிகள் இரண்டு உள்ளன. சித்த மருத்துவ நூல்களை ஆங்கிலத்தில் மொழிமாற்றம் செய்தல், ஓலைச்சுவடிக் கட்டுகளிலிருந்து மருந்து செய்முறைகள், நோய்கள் பற்றிய விவரங்கள் கண்டறியப்பட்டு நூல்களாக வெளியிடுதல், சித்த மருத்துவத்தில் எய்ட்ஸ், புற்றுநோய் ஆகியவற்றிற்கு மருந்துகள் கண்டறிய ஆராய்ச்சிப் பிரிவுகள் ஆகியவை சித்த மருத்துவ வளர்ச்சிக்கு அரசால் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளாகும். National Institute of Siddha என்ற அமைப்பதைத் தமிழகத்தில் சென்னையில் நிறுவ மத்திய அரசுக்கு எழுதப்பட்டுள்ளது.

(ஆ) சித்த மருத்துவ ஆராய்ச்சி மையம் மத்திய அரசின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனை வளாகத்தில் இயங்கி வருகிறது.

**137—**

**தமிழ்நாட்டில் அனைத்துக் கிராமங்களுக்கும் மின் இணைப்பு வழங்கல்**

**வினா எண் 908—திரு. மு. க. ஸ்டாலின்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் உள்ள அனைத்துக் கிராமங்களுக்கும் மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் :**

ஆம்.

**139—**

**பாலாறு படுகையில் சான்றிதழ் இல்லாமல் விவசாயிகளுக்கு மின் இணைப்பு வழங்கல்**

**வினா எண் 961—திரு. வீ. தமிழ்மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1997 ஏப்ரல் 30]

பாலாறு படுகையில் சான்றிதழ் இல்லாமல் விவசாயிகளுக்கு மின் இணைப்பு வழங்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

இல்லை.

**139—**

**எடப்பாடி துணை மின் நிலையத்தை விரிவுபடுத்தும் திட்டம்**

**வினா எண். 1028—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடியில் உள்ள துணை மின் நிலையத்தை விரிவுபடுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் :**

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**140—**

**தமிழ்நாடு மருந்துக் கழகத்திலுள்ள கால அளவு கடந்த மருந்துகள்**

**வினா எண் 1037—டாக்டர் பத்மா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு மருந்துக் கழகத்தில் கால அளவு முடிந்த மருந்துகள் உள்ளனவா?

[1997 ஏப்ரல் 30

(ஆ) ஆம் எனில், அதன் மதிப்பு எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகத்தில் கால அளவு முடிந்த மருந்துகள் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**141—**

**எடப்பாடி அரசு மருத்துவமனையில் படுக்கை வசதியை அதிகரித்தல்**

**வினா எண் 1165—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி அரசு மருத்துவமனையில் போதிய படுக்கை வசதி இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், படுக்கை வசதியை அதிகப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி அரசு மருத்துவமனையில் போதிய படுக்கை வசதி உள்ளது.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

**142—**

**பி.என். பட்டி கிராமம், அனல் மின் திட்டத்தில் வெளியாகும் மேல்சாம்பல் நீர் குவிப்பு**

**வினா எண் 1171—திரு. ஜி. கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1997 ஏப்ரல் 30]

சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், பி.என். பட்டி கிராமம் அனல் மின் திட்டத்தில் வெளியாகும் (MTPS) மேல் சாம்பல் நீர் குவிப்பு செய்ய, புதுரெட்டியூர், புதுசின்னக்காவூர் ஆகிய பகுதிகளை வேறு இடங்களுக்கு மாற்றம் செய்வது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், பி.என். பட்டி கிராமம்-அனல் மின் நிலையத்திலிருந்து (MTPS) வெளியாகும் மேல் சாம்பல் நீர் குவிப்பு செய்ய-புதுரெட்டியூர், புதுசின்னக்காவூர் ஆகிய பகுதிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளது. மேற்படி பகுதியிலிருந்து மக்களை வேறு இடங்களுக்கு மாற்றவும், அந்தக் கிராமங்களில் உள்ள மக்களுக்கு மாற்று குடியிருப்பு வசதிகள் அமைத்துக் கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**143—**

**கிராமப்புற அரசு மருத்துவமனைகளில் விஷக்கடிகளுக்கு மருத்துவ சிகிச்சை மற்றும் மருந்துகள் வழங்கல்**

**வினா எண் 1271—திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிராமப்புறங்களில் உள்ள அரசு மருத்துவமனைகளில் விஷக்கடிகளுக்கு மருத்துவ சிகிச்சையும், மருந்துகளும் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

கிராமப்புறங்களில் இயங்கும் எல்லா ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் போதுமான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு விஷக்கடி மற்றும் அவசர நோய் சிகிச்சைக்கான மருந்துகள் தேவைக்கேற்ப தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகத்தின் மூலமாக வழங்கப்பட்டு வருகின்றன.

[1997 ஏப்ரல் 30

144—

**கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மற்றும் திருப்பூர் அரசு மருத்துவமனைகளில் படுக்கை வசதிகளை அதிகரித்தல்**

**வினா எண் 1276—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மற்றும் திருப்பூர் அரசினர் மருத்துவமனைகளில் படுக்கை வசதிகளை அதிகரிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

இல்லை.

145—

**அயோடின் கலந்த உப்பு பயன்படுத்தல்**

**வினா எண் 1378—திரு. டி. இராஜேந்தர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அயோடின் கலந்த உப்பைத்தான் பயன்படுத்த வேண்டும் என்ற அரசு ஆணை காரணமாக ஆயிரக்கணக்கான சிறு உப்பளக்காரர்கள் பாதிக்கப்பட்டு இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம் வழங்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மனித உணவில் பயன்படுத்தப்படும் உப்பு மட்டுமே அயோடின் கலந்த உப்பாக விற்பனை செய்யப்பட வேண்டும் என்று



1997 ஏப்ரல் 30]

அரசு ஆணையிட்டுள்ளது. மற்ற உபயோகத்திற்குச் சாதாரண உப்பை உபயோகப்படுத்தலாம். மேலும் உப்பு தயாரிக்கும் போது அயோடின் சேர்த்துத் தயாரித்தால் விற்பனை பாதிக்கப்படாது. எனவே, வியாபாரிகளுக்குப் பாதிப்பு ஏதும் ஏற்பட வாய்ப்பில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

146—

**அரசு பொது மருத்துவமனைகளில் பணிபுரியும் மதிப்புறு அறுவை சிகிச்சை நிபுணர்கள் பதவி**

**வினா எண் 1474—டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு பொது மருத்துவமனைகளில் பணிபுரியும் மதிப்புறு அறுவை சிகிச்சை நிபுணர்கள் (Honorary Surgeons) பதவி ரத்து செய்யப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): மதிப்புறு மருத்துவர்கள் தற்போது நியமனம் செய்யப்படுவதில்லை. ஏற்கெனவே பணிபுரியும் மதிப்புறு மருத்துவர்கள் பணியிலிருந்து விலகும்போது பணியிடங்கள் மேற்கொண்டு நிரப்பப்படாமல் படிப்படியாக ரத்து செய்யப்படுகின்றன.

147—

**மருத்துவக் கல்வி படிப்பில் செமஸ்டர் முறையை நீக்குதல்**

**வினா எண் 1476—டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1997 ஏப்ரல் 30

மருத்துவக் கல்வி படிப்பில் செமஸ்டர் முறையை நீக்கி பழைய கல்வி முறை மீண்டும் கொண்டு வரப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

இல்லை.

**148—**

**மருத்துவக் கல்லூரி பட்டதாரிகள் தனியாக மருத்துவத் தொழில் நடத்த தனித் தேர்வு**

**வினா எண் 1480—டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டப்படிப்பு நிறைவு செய்த மருத்துவக் கல்லூரி பட்டதாரிகள் தனியாக மருத்துவத்தொழில் செய்ய அதற்கென்று தனித்தேர்வை நடத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

இல்லை.

**149—**

**அறிஞர் அண்ணா அரசு மருத்துவமனைக்கு அதிக படுக்கை வசதிகள்**

**வினா எண் 1483—டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னையில் உள்ள அறிஞர் அண்ணா அரசு மருத்துவமனையில் அதிக படுக்கை வசதிகள் செய்யப்படுமா?



1997 ஏப்ரல் 30]

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

சென்னையில் உள்ள அறிஞர் அண்ணா அரசு மருத்துவமனையில் படுக்கைகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**150—**

**கொசுத் தொல்லையை ஒழித்தல்**

**வினா எண் 1485—டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கொசுத் தொல்லையில் இருந்தும், மலேரியா காய்ச்சல் நோயில் இருந்தும், யானைக்கால் நோயில் இருந்தும் காப்பாற்ற, நேஷனல் மலேரியா எராடிக்கேஷன் புரோகிராம், பைலேரியா கன்ட்ரோல் புரோகிராம் போன்ற திட்டங்களை மீண்டும் செம்மைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

இந்த இரு திட்டங்களும் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அவற்றை மேலும் செம்மைப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**151—**

**ஆரம்ப சுகாதார நிலையங்களில் தொழுநோய் கண்காணிப்புப் பிரிவு நிறுவுதல்**

**வினா எண் 1486—டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1997 ஏப்ரல் 30

தொழுநோய் கண்காணிப்புப் பிரிவு ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திலும் நிறுவப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

தற்போது தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளும் தொழுநோய் ஒழிப்புத் திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டு, ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ள பகுதிகளிலும் தொழுநோயாளிகளுக்கு நல்ல முறையில் சிகிச்சையளிக்கப்பட்டு வருவதால், ஆரம்ப சுகாதார நிலையத்தில் தனியாக தொழுநோய் கண்காணிப்புப் பிரிவு நிறுவ வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

**152—**

## மருந்து பொருட்கள் கட்டுப்பாடு வாரியம் அமைத்தல்

**வினா எண் 1487—டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மருந்து பொருட்கள் கட்டுப்பாடு நிர்வாகத்தை சீர் அமைக்கின்ற வகையில் மருந்து பொருட்கள் கட்டுப்பாடு வாரியம் அமைக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

மருந்து பொருட்கள் கட்டுப்பாடு வாரியம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

**153—**

## குடும்பக்கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்து கொள்பவர்களுக்கு ஊக்கத்தொகையை அதிகரித்தல்

**வினா எண் 1488—டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1997 ஏப்ரல் 30]

குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை மக்களிடையே ஊக்குவிக்கின்ற வகையில் குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்து கொள்ளும் நபர்களுக்கு தற்பொழுது வழங்கப்படும் ஊக்கத்தொகை அதிகப்படுத்தப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

குடும்ப நலத்திட்டம் முழுமையாக மத்திய அரசு உதவியுடன் நிறைவேற்றப்பட்டு வருவதால், மத்திய அரசு நிர்ணயித்துள்ள தொகைதான் குடும்ப நல அறுவை சிகிச்சை செய்து கொள்வோருக்கு வழங்கப்படுகிறது. எனவே, மத்திய அரசு நிர்ணயித்துள்ள ஊக்கத் தொகையை அதிகரிக்க சாத்தியமில்லை.

**154—**

## பூலாம்பட்டி தலைமை நீரேற்று நிலையத்திற்கு மின் இணைப்பு

**வினா எண் 1507—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி பூலாம்பட்டியில் உள்ள தலைமை நீரேற்று நிலையத்திற்கு மின் இணைப்புத் தர நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

எடப்பாடி, பூலாம்பட்டி தலைமை நீரேற்று நிலையத்திற்கு 10-5-1965-ல் மின் இணைப்பு கொடுக்கப்பட்டு இயங்கி வருகிறது.

**155—**

## கோரணம்பட்டி கிராமத்தில் மின் அழுத்தத்தை சீர்செய்தல்

**வினா எண் 1649—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1997 ஏப்ரல் 30

கொங்கணாபுரம் ஒன்றியம், கோரணம்பட்டி கிராமத்தில் மின் அழுத்தம் குறைவாக உள்ளதால் அதனை சீர் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

ஆம்.

**156—**

**திருப்பூர் பழைய அரசினர் மருத்துவமனை**

**வினா எண் 1676—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் பழைய அரசினர் மருத்துவமனையில், மகப்பேறு பிரிவு, குழந்தைகள் நலப்பிரிவு தொடங்கப்படும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை. இவ்வசதிகள் திருப்பூர் மருத்துவமனையில் உள்ளன.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

**157—**

**மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளில் அணுவியல் மருத்துவ ஆராய்ச்சி நிலையம் நிறுவுதல்**

**வினா எண் 1709—டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஒவ்வொரு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையிலும் அணுவியல் மருத்துவ ஆராய்ச்சி நிலையம் நிறுவ அரசு ஆவன செய்யுமா?



1997 ஏப்ரல் 30]

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

இல்லை.

**158—**

**மருத்துவ பல்கலைக் கழகத்தில் அணுவியல் மருத்துவ பட்டமேல் படிப்பு**

**வினா எண் 1710—டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மருத்துவ பல்கலைக் கழகத்தில் அணுவியல் மருத்துவ (Nuclear Medicine) பட்ட மேல் படிப்பிற்கு (Post Graduate Degree or Diploma in Nuclear Medicine) அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

இல்லை.

**159—**

**வெண்குஷ்டம் வியாதியை குணப்படுத்த புதிய மருந்து கண்டுபிடிப்பு**

**வினா எண் 1748—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் வேகமாகப் பரவிவரும் வெண்குஷ்டம் வியாதியை குணப்படுத்த புதிய மருந்தினைக் கண்டுபிடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) வெண்குஷ்டம் என்பது தோல் சம்பந்தப்பட்ட வியாதியாகும். இதனைக் கட்டுப்படுத்த இயலுமே தவிர பூரணமாகக் குணப்படுத்த இயலாது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**160—**

**வால்பாறை முடீஸ் ஆரம்ப சுகாதார நிலையத்தை விரிவு படுத்துதல்**

**வினா எண் 1937—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை முடீஸ் ஆரம்ப சுகாதார நிலையத்தை விரிவுபடுத்தி படுக்கை வசதிகளை அதிகரிக்க அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) வால்பாறை முடீஸ் நகர் ஆரம்ப சுகாதார நிலையத்தை விரிவுபடுத்தி படுக்கை வசதிகளை அதிகரிக்க கோரிக்கை எதுவும் பெறப்படவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**161—**

**அம்மன் குப்பத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்**

**வினா எண் 1972—திரு. அ. வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) புவனகிரி தொகுதி, புவனகிரி ஒன்றியம் அம்மன் குப்பத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மத்திய அரசின் வரைமுறையின்படி முழுத் தேவைக்கேற்ப ஏற்கனவே தமிழ்நாட்டில் 1419 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. எனவே, புவனகிரி தொகுதி, புவனகிரி ஒன்றியம் அம்மன் குப்பத்தில் புதியதாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

**162—**

**ஈரோடு தந்தைப்பெரியார் தலைமை மருத்துவமனை**

**வினா எண் 2157—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம் - ஈரோடு தந்தைப் பெரியார் தலைமை மருத்துவமனையில் நரம்பியல் அறுவை சிகிச்சை (Neuro Surgery)-க்கான வசதிகள் செய்யக் கோரும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அவை எப்போது செய்து கொடுக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): ஈரோடு அரசு தலைமை மருத்துவமனையில் புதிய நரம்பியல் அறுவை சிகிச்சைப் பிரிவு (Neuro Surgery Unit) துவங்க அரசு ஆணையிட்டுள்ளது. அப்பிரிவில் நரம்பியல் அறுவை சிகிச்சைக்கான வசதிகள் செய்துதரப்படும்.

[1997 ஏப்ரல் 30

**163—**

**பரமக்குடி அரசு பொது மருத்துவமனை**

**வினா எண் 2178—திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள பரமக்குடி அரசு பொது மருத்துவமனையை 100 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக மாற்ற அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் மருத்துவமனையில் அவசர மருத்துவ பிரிவு துவங்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி அரசினர் மருத்துவ மனையில் தற்போது 58 படுக்கைகள் உள்ளன. இதை 100 படுக்கைகளாக மாற்றும் திட்டம் எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) தற்போது அவசரப் பிரிவு துவங்கும் திட்டம் இல்லை.

**164—**

**எட்டிவயல் கிராமத்தில், துணை சுகாதார நிலையம் கட்டுதல்**

**வினா எண் 2184—திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி, எட்டிவயல் கிராமத்தில், துணை சுகாதார நிலையம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



1997 ஏப்ரல் 30]

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) பரமக்குடி எட்டிவயல் கிராமம் கவிதைக்குடி துணை சுகாதார நிலையத்தைச் சார்ந்தது. பரமக்குடி எட்டிவயல் கிராமத்தில் மக்கள் தொகை 640 ஆகும். மத்திய அரசின் விதிமுறைப்படி அவ்வூரின் மக்கள் தொகைக்கு ஒரு துணை சுகாதார நிலையம் நிறுவ சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**165—**

**நாகதாசம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கட்டிடம்**

**வினா எண் 2300—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் ஒன்றியம், பிளியனூர் பஞ்சாயத்து, நாகதாசம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு பொது மக்கள், தொகை செலுத்தியும், இடம் கொடுக்கப்பட்டும், கட்டிடம் கட்டப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பு ஆண்டில் கட்டிடம் கட்டித் தரப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 1996-97-ம் ஆண்டில் கட்டிடம் கட்ட அனுமதி வழங்கியுள்ள 300 ஆரம்ப சுகாதார நிலையங்களில் நாகதாசம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையமும் சேர்க்கப்பட்டுள்ளது. எனவே ஒப்பந்தப்புள்ளிகள் பெற்று இதற்கான கட்டிட வேலைகள் விரைவில் தொடங்கப்படும்.

[1997 ஏப்ரல் 30

**166—**

**மணலூர் பேட்டையில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்**

**வினா எண் 2304—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் இராமசாமி படையாச்சியார் மாவட்டம், முகையூர் ஒன்றியம், மணலூர் பேட்டையில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசின் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், நடப்பு ஆண்டில் கட்டப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மணலூர் பேட்டையில் ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்கனவே செயல்பட்டு வருகிறது. ஆனால், இது ஊராட்சி ஒன்றிய மருந்தகக் கட்டிடத்தில் இயங்கி வருகிறது.

(ஆ) தற்போது தனியார் கட்டிடத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு கட்டிடம் கட்ட அரசு முன்னுரிமை கொடுத்துள்ளது. இப்பணிகள் முடிந்த பின்னர் தேவையின் அடிப்படையில் ஊராட்சி ஒன்றிய கட்டிடங்களிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு கட்டிடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

**167—**

**வட ஆற்காடு-அம்பேத்கர் மாவட்டத்தில யானைக்கால் நோயை தடுத்தல்**

**வினா எண் 2367—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு-அம்பேத்கர் மாவட்டத்தில் யானைக்கால் நோய் வேகமாகப் பரவுவதை அரசு அறியுமா?



1997 ஏப்ரல் 30]

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) வட ஆற்காடு-அம்பேத்கர் மாவட்டத்தில் யானைக்கால் நோய் பரவியுள்ளது. அந்நோய் பரவுவதைத் தடுக்க அரசு பல்வேறு தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

(ஆ) வட ஆற்காடு-அம்பேத்கர் மாவட்டத்தில் யானைக்கால் நோய் பரவுவதைத் தடுக்க தேசிய யானைக்கால் நோய்த் தடுப்புத் திட்டத்தின்கீழ் பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

(1) இத்திட்டத்தின்கீழ் வேலூரைத் தலைமையிடமாகக் கொண்டும் குடியாத்தம், திருவண்ணாமலை, திருப்பத்தூர் ஆகிய இடங்களில் யானைக்கால் நோய்க் கட்டுப்பாட்டுப் பிரிவுகளும், வேலூர், குடியாத்தம், ஆரணி, ஆம்பூர், வாணியம்பாடி, களம்பூர் ஆகிய பகுதிகளில் இரவு சிகிச்சைப் பிரிவுகளும் அமைக்கப்பட்டு, யானைக்கால் நோய்த் தடுப்பு பணிகள் வட ஆற்காடு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(2) இந்நோய் கொசுக்கள் மூலம் பரவுவதால் கொசு ஒழிப்புப் பணிகளும் உள்ளாட்சி அமைப்புகளின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

(3) கிராமப்புறங்களில் நோய் தாக்கத்தினைக் கண்காணித்து, ஆரம்ப சுகாதார நிலையங்கள் மூலம் சிகிச்சையும் அளிக்கப்பட்டு வருகின்றன.

**168—**

**வேலூரில் மலேரியா நோய் தடுப்பு நடவடிக்கை**

**வினா எண் 2368—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு-அம்பேத்கர் மாவட்டம், வேலூரில் ஆயிரக்கணக்கானோர் மலேரியா நோயால் பாதிக்கப்பட்டுள்ளதை அரசு அறியுமா?

[1997 ஏப்ரல் 30

(ஆ) ஆம் எனில், அரசு தடுப்பு நடவடிக்கை ஏதும் மேற்கொண்டுள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ). வேலூர் நகரில் நகர்ப்புற மலேரியா திட்டத்தின் மூலம் தீவிர தடுப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டு மலேரியா நோய் பரவாமல் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

**169—**

### வெள்ளக்குட்டை கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

**வினா எண் 2369—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வட ஆற்காடு அம்பேத்கர் மாவட்டம் வாணியம்பாடி தாலுக்கா வெள்ளக்குட்டை கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் எப்போது அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

வட ஆற்காடு அம்பேத்கர் மாவட்டம், வாணியம்பாடி தாலுக்கா, வெள்ளக்குட்டை கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் எதுவும் தற்போது இல்லை.

**170—**

### அலமேலு மங்காபுரத்தில் ஆரம்பசுகாதார நிலையம் அமைத்தல்

**வினா எண் 2370—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



வட ஆற்காடு-அம்பேத்கர் மாவட்டம், வேலூர் தாலுக்கா, அலமேலுமங்காபுரத்தில் எப்போது ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

வட ஆற்காடு அம்பேத்கர் மாவட்டம், வேலூர் தாலுக்கா, அலமேலுமங்காபுரத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை. எனவே இக்கேள்வி எழவில்லை.

**171—**

### எடப்பாடி தொகுதியிலுள்ள டேனிடா திட்டம் மூலம் கட்டப்பட்ட மருத்துவமனைகள்

**வினா எண் 2395—இ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் டேனிடா திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட சில மருத்துவமனைகள் செயல்படாத நிலையில் உள்ளது என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சேலம் மாவட்டம், எடப்பாடித் தொகுதியில் மொத்தம் 41 துணை சுகாதார நிலையங்களில், வடுகப்பட்டி, வெள்ளையம்பாளையம் ஆகிய இரண்டு இடங்களில் உள்ள துணை சுகாதார நிலையங்களைத் தவிர மற்ற 39 துணை சுகாதார நிலையங்கள் நல்லமுறையில் இயங்கி வருகின்றன. மேற்சொன்ன இரண்டு இடங்களில், துணை சுகாதார நிலையக் கட்டிடம் பழுதடைந்த காரணத்தினாலும், இ. செட்டிமாங்குறிச்சியில் குடும்ப சூழ்நிலை காரணமாகவும் கிராம

சுகாதார செவிலியர்கள் தங்க இயலவில்லை. இருப்பினும் அக்கிராமங்களில் பொதுமக்களுக்கு மருத்துவ சேவையை தொடர்ந்து கிராம சுகாதார செவிலியர்களால் அளிக்கப்பட்டு வருகிறது. பழுதடைந்த கட்டிடங்கள் பழுது நீக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**172—**

**தருமபுரி அரசு தலைமை பொது மருத்துவமனை**

**வினா எண் 2462—திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரியில் உள்ள அரசு தலைமை பொது மருத்துவமனைக்கு தந்தை பெரியார் அரசு தலைமை பொது மருத்துவமனை என்று பெயர் சூட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் செயல்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

**173—**

**விவசாயிகளுக்கு மின் இணைப்பு வழங்கல்**

**வினா எண் 2573—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விவசாயிகளுக்கு மின் இணைப்பு வழங்கும்போது காவிரி டெல்டா பகுதியில் மட்டும் 200 மீட்டர் தூரம் மறுப்பின்மை சான்றிதழ் பெற வேண்டும் என்ற விதியைச் சாதாரண காட்டாறு, ஓடைகளுக்கும்



பெற வேண்டும் என்று வற்புறுத்தப்படுவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

தற்போது உள்ள தமிழ்நாடு மின்சார வாரிய விதிகளின்படி காவிரி டெல்டா பகுதியில் மட்டுமில்லாமல் தமிழ்நாட்டிலுள்ள எந்த ஆற்றங்கரையிலிருந்தும் 200 மீட்டர் தூரத்திற்குட்பட்ட விவசாய பம்பு செட்டிற்கு மின் இணைப்பு பெறுவதற்கு, மறுப்பின்மை சான்றிதழ் பெற வேண்டும். காட்டாறு, ஓடைகள் போன்றவற்றிலிருந்து 200 மீட்டர் தூரத்திற்குட்பட்ட விவசாய பம்பு செட்டிற்கு மின் இணைப்பு பெறுவதற்கு மறுப்பின்மை சான்றிதழ் தேவையில்லை.

**174—**

**அரசு பொது மருத்துவமனைகளில் இன்சினிரேட்டர் இயந்திரம் பயன்படுத்தும் திட்டம்**

**வினா எண் 2579—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கழிவுப் பொருட்களாகிய (Bandage) பரிசோதனைக் குழாய், சிரஞ்சி, இவைகளை உடைத்து அழிக்க, அழிப்பதன் மூலம் மற்றும் நோய் பரவாமல் தடுக்க, இன்சினிரேட்டர் (Incinerator) என்ற இயந்திரத்தை எல்லா அரசு பொது மருத்துவமனைகளிலும் பயன்படுத்தும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): ஏற்கெனவே காஞ்சிபுரம், திருப்பூர், புதுக்கோட்டை, தர்மபுரி, தூத்துக்குடி, திருச்சி, ஈரோடு, கடலூர் மற்றும் வேலூர் ஆகிய ஒன்பது (9) மாவட்டத்தலைமையிட மருத்துவமனைகளில்

[1997 ஏப்ரல் 30

இன்சினிரேட்டர் வாங்குவதற்கு அரசு ஒப்புதல் அளிக்கப்பட்டு, தற்போது கடலூர் மற்றும் காஞ்சிபுரம் மருத்துவமனைகளில் இன்சினிரேட்டர் செயல்பட்டு வருகிறது. நடப்பு நிதி ஆண்டில் (1996-97) மருத்துவக்கல்வி இயக்ககத்தின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் 8 மருத்துவ நிலையங்களில் இன்சினிரேட்டர் பொருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அரசின் நிதிநிலைமைக்கேற்ப இத்திட்டம் மற்ற அரசு மருத்துவமனைகளிலும் செயற்படுத்தப்படும்.

## 175—

### வேலூர் நகராட்சியில் இந்திய மக்கள் தொகைத் திட்டத்தின் கீழ் மாணவர்களுக்கு பரிசுப்போட்டிகள் நடத்தல்

**வினா எண் 2736—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் நகராட்சியில் இந்திய மக்கள் தொகைத் திட்டம்-ன் கீழ் மாணவர்களுக்கு பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி நடத்த பரிசு வழங்க ஒதுக்கப்பட்ட நிதி ரூ.30,000/-செலவிடப்படாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தகவல் கல்வி தொடர்பு பணியின் கீழ் ரூ.30,000/- வேலூர் நகராட்சிக்கு இந்திய மக்கள் தொகை திட்டத்தின் கீழ் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக வேலூர் நகராட்சி ஆணையர் அவர்கள் பள்ளி கல்லூரி மாணவர்களுக்கு இடையே கட்டுரைப்போட்டி, அடைமொழிப்போட்டி, வாழ்த்து அட்டைகள் மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடத்தி போட்டியில் வெற்றி பெற்ற மாணவ மாணவியர்களுக்கு பரிசுத் தொகை வழங்கும் விழா டிசம்பர் 12, 1996 அன்று நகரமன்றத் தலைவர் முன்னிலையில் நடைபெற உள்ளது எனத் தெரிவித்துள்ளார்.



1997 ஏப்ரல் 30]

## 176—

### தமிழ்நாட்டில் பெருகிவரும் கொசுக்களை ஒழித்தல்

**வினா எண் 2772—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் நகரம், மாநகரங்களில் கொசுக்களின் பெருக்கம் அதிகரித்து வருவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் நகரம், மாநகரங்களில் கொசுக்களின் பெருக்கம் பருவமழைக்குப்பிறகு அதிகரிக்கிறது. பருவகாலங்களில் பெய்யும் மழையினால் ஆங்காங்கே தண்ணீர் தேங்கி அந்நீர் நிலைகளில் கொசு உற்பத்தியாவதே இதற்குக் காரணமாகும்.

(ஆ) 1. நகராட்சி மற்றும் ஊராட்சி மற்றும் பேரூராட்சிப் பகுதிகளில் கொசு ஒழிப்புக்கான செலவில மூன்றில் ஒரு பங்கு மானியம் கொடுத்து அரசு கொசு ஒழிப்புத் திட்டங்களுக்கு உதவி வருகிறது.

2. யானைக்கால் நோய் ஒழிப்பு மானியத் திட்டம், மலேரியா நோய் ஒழிப்பு மானியத் திட்டம், நகர்ப்புற மலேரியா ஒழிப்பு மானியத்திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் மலேரியா, யானைக்கால் நோய் ஆகியவற்றை பரப்பும் கொசுக்களை ஒழிக்கும் பணியினைச் செயல்படுத்த 174 உள்ளாட்சி அமைப்புகளிலும் மூன்று மாநகராட்சி பகுதிகளிலும், ஏழு நகராட்சி மற்றும் நகர்ப்புற பகுதிகளிலும் அரசு உதவி வருகிறது.

3. கொசுப்புழுக்களை உண்டு வளரும் மீன்களை குளங்கள், வடிகால்கள், நீர்நிலைகளில் வளர்ப்பதன் மூலம் கொசுக்களை கட்டுப்படுத்தும் திட்டத்திற்கும் அரசு உதவி செய்கிறது. நகரங்களிலும்,

பெருநகர்ப்பகுதிகளிலும் மானியம் மூலம் நிதி உதவி செய்து கொசுக்களை ஒழிக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

**177—**

## அரசு மருத்துவமனைகளில் மூளை மின் நரம்பியல் பயிற்சிபெற்றவர்களுக்கு வேலைவாய்ப்பு

வினா எண் **2870—திரு. அ. வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் குறைந்த எண்ணிக்கையில் மூளை மின் நரம்பியலில் (ஈ.ஈ.ஜி) அரசு பயிற்சி பெற்றவர்களுக்கு அரசு மருத்துவமனைகளில் வேலை வாய்ப்பு வழங்க முன்னுரிமை அளிக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மூளை மின் நரம்பியலில் (ஈ.ஈ.ஜி) அரசு பயிற்சி பெற்றவர்களுக்கு அரசு மருத்துவமனைகளில் வேலை வாய்ப்பில் முன்னுரிமை வழங்க இயலாது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**178—**

## விவசாயிகளுக்கு சூரிய ஒளி மூலம் விசைக்குழாய்கள் அமைக்க மானியம் வழங்கல்

**வினா எண் 2941—திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் தொகுதி, விவசாயிகளுக்கு சூரிய ஒளிமூலம் இயங்கும் விசைக்குழாய்கள் (Pumpsets) அமைக்க ஆகும் முழுத்தொகையையும் மானியமாக வழங்க அரசு முன்வருமா?



விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

இல்லை.

**179—**

## சித்தூர் ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 2970—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, சித்தூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் இரவு நேரங்களில் மருத்துவ வசதி அளிக்கப்படுவதில்லை என்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், மருத்துவ வசதி அளிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): எடப்பாடி ஊராட்சி ஒன்றியம் சித்தூர் கிராமத்திலுள்ள ஆரம்ப சுகாதார நிலையம் 24 மணி நேரமும் செயல்படும் ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றப்படவில்லை. எனவே இங்கு இரவு நேரங்களில் மருத்துவ வசதி அளிக்கப்படுவதில்லை.

**180—**

## ஜம்பை ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்டிடம் கட்டுதல்

**வினா எண் 3003—திரு. எஸ். என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1997 ஏப்ரல் 30

(அ) பவானி ஒன்றியம் ஜம்பை ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) மேற்படி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு நடப்பு ஆண்டில் (1996-97) கட்டிடம் கட்ட அரசு அனுமதி அளித்துள்ளது.

**181—**

**பவானி ஒன்றியத்தில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைத்தல்**

**வினா எண் 3004—திரு. எஸ். என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பவானி ஒன்றியத்தில் மயிலம்பாடி, பெரியபுலியூர், வளையக்கார பாளையம் ஆகிய இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

பவானி ஒன்றியத்தில் மயிலம்பாடி மற்றும் பெரிய புலியூர் ஆகிய இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஏற்கனவே செயல்பட்டு வருகின்றன. வளையக்காரபாளையத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை.



1997 ஏப்ரல் 30]

**182—**

**சென்னை ஸ்டான்லி மருத்துவமனை சவக் கிடங்கைப் புதுப்பித்தல்**

**வினா எண் 3018—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவமனை சவக்கிடங்கை புதுப்பிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) சவக் கிடங்கு நல்லமுறையில் பயன்படுத்தப்பட்டு வருகிறது, அதனை மேம்படுத்த செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினா எழாது.

**183—**

**வடசென்னை அனல் மின்திட்டத்தின் இரண்டாம் பகுதி**

**வினா எண் 3088—திரு. டி. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட சென்னை அனல் மின்நிலையத்தில் 2-ஆம் பகுதியை தமிழ்நாடு மின்சார வாரியமே ஏற்று நடத்துமா?

(ஆ) தூத்துக்குடி அனல் மின்நிலையத்தில் 6-வது பகுதி தனியாருக்கு விடப்பட்டுள்ளதா?

[1997 ஏப்ரல் 30

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) ஆம்.

**184—**

**தமிழ்நாடு மின்வாரியத்தில் தொழிலாளர்களை நிரந்தம் செய்தல்**

**வினா எண் 3089—திரு. டி. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் காலித் கமிஷன் தீர்ப்பின் அடிப்படையில் பணியில் அமர்த்தப்பட்டவர்களைத் தவிர மற்ற தொழிலாளர்களையும் நிரந்தரம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

இல்லை.

**185—**

**தமிழ்நாடு மின்வாரிய ஊழியர்களுக்கு வழங்கப்படும் ஊதிய உயர்வு**

**வினா எண் 3090—திரு. டி. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு மின்சார வாரிய ஊழியர்களுக்கு 1-12-1995 முதல் ஊதிய உயர்வு வழங்கப்படவில்லையென புகார்கள் ஏதேனும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், ஊதிய உயர்வு வழங்க அரசு ஆவன செய்யுமா?



1997 ஏப்ரல் 30]

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கிடமில்லை.

**186—**

**கடமக்குடி பகுதி கொள்ளிடக்கரையில் காற்றாலை மூலம் மின்உற்பத்தி செய்தல்**

**வினா எண் 3101—திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாபநாசம் தொகுதி, வீரமாங்குடி, கடமங்குடி பகுதியில், கொள்ளிடக்கரையில் காற்றாலை மூலம் மின் உற்பத்தி செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

இல்லை.

**187—**

**பூவனூரில் மின் அழுத்தக் குறைபாட்டைப் போக்க கூடுதல் மின் மாற்றி அமைத்தல்**

**வினா எண் 3134—திரு. கு. ரவி அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம்-தென்காசி தொகுதி, கீழப்பாவூர் ஒன்றியம், பூவனூரில் மின் அழுத்தக் குறைப்பாட்டைப் போக்க கூடுதல் மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) அந்த மின்மாற்றி அமைக்கும் வேலை இன்னும் 3 மாத காலங்களில் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**188—**

**நயினார் கோவில் ஒன்றிய கிராமங்களில் ஏற்படும் மின் அழுத்தக் குறைவு**

**வினா எண் 3172—திரு. உ. திசை வீரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி தொகுதி, நயினார்கோவில் ஒன்றியத்தில் அனைத்து கிராமங்களிலும் மின் அழுத்தக் குறைவினால் மின் விளக்குகள் எரியாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) ஓடிகுளம் பகுதியில் ஒரு துணை மின் நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.



**189—**

**முத்துப்பேட்டை ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் புதிய கட்டிடம் கட்டுதல்**

**வினா எண் 3175—திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை ஆரம்ப சுகாதார நிலையக் கட்டிடத்திற்குப் புதிய கட்டிடம் கட்டவும் படுக்கை வசதி செய்யவும் அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

முத்துப்பேட்டை ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் புதிய கட்டிடம் கட்டவும் கூடுதல் படுக்கை வசதி செய்யவும் தற்போது திட்டம் ஏதுமில்லை.

**190—**

**கடம்பூர் மலைப்பகுதி மக்களுக்கு மருத்துவ வசதி அளித்தல்**

**வினா எண் 3203—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரியார் மாவட்டம், பர்கூர், கடம்பூர் மலைப்பகுதி மக்களுக்கு மருத்துவ வசதி அளிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

தற்போது பெரியார் மாவட்டம், பர்கூர், கடம்பூர் மலைப்பகுதி மக்கள் முறையே அந்தியூர், சத்தியமங்கலம் ஊராட்சி ஒன்றியங்களில்

[1997 ஏப்ரல் 30

செயல்பட்டு வரும் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் மூலமும், இரண்டு துணை சுகாதார நிலையங்கள் மூலமும் மருத்துவ வசதிகளைப் பெற்று வருகின்றனர். இவை அப்பகுதி மக்களுக்கு போதுமானதாகும்.

**191—**

**தமிழ்நாடு மின்வாரியத்திற்கு தேவையான மின் அளவைக் கருவிகள் கொள்முதல் செய்தல்**

**வினா எண் 3224—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் போதுமான மீட்டர்களை வழங்காததால் வீடுகளுக்கு மின் இணைப்பு அளிக்க தாமதம் ஏற்படுவதைத் தவிர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

ஆம். காலதாமதம் இன்றி வீடுகளுக்கு மின் இணைப்பு கொடுப்பதற்காக தேவையான மின் அளவைக் கருவிகள் கொள்முதல் செய்வதற்கு மின்வாரியத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**192—**

**நுணாக்காடு ஊராட்சியிலுள்ள கிராமங்களில் மின் அழுத்தத்தை போக்கும் நடவடிக்கை**

**வினா எண் 3274—திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதி, நுணாக்காடு ஊராட்சி, ரெகுநாதபுரம் கிராமம் மற்றும் பாமணி கோட்டூர் ஊராட்சிகளிலுள்ள கிராமங்கள், சேந்தமங்கலம் பெரியகுடி கிராமம் ஆகியவற்றில் குறைந்த மின் அழுத்தத்தை சரி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?



1997 ஏப்ரல் 30]

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

ஆம்.

**193—**

**முத்துப்பேட்டை ஒன்றியத்தில் ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கு வீட்டுக்கொரு விளக்கு திட்டத்தின் கீழ் மின் இணைப்பு**

**வினா எண் 3283—திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஏ.டி.பன்னீர்செல்வம் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை ஒன்றியம் அனைத்து ஆதி திராவிடர் குடும்பங்களுக்கு "வீட்டுக்கொரு விளக்கு" திட்டத்தின் கீழ் மின் இணைப்பு வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

ஆம்.

**194—**

**காடையம்பட்டி ஒன்றிய கிராமங்களுக்கு மின்வசதி அளித்தல்**

**வினா எண் 3314—திரு. ஆர் ஆர். சேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் வட்டம், காடையம்பட்டி ஒன்றியம், கண்ணம்பாடி, கோவில்பட்டி வீராச்சியூர், பூமரத்தூர் ஆகிய கிராமங்களுக்கு மின்வசதி அளிக்க அரசு ஆவன செய்யுமா?

[1997 ஏப்ரல் 30

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

ஆம்.

**195—**

**ஒகேனக்கல்லில் மூலிகைப் பண்ணை ஏற்படுத்தல்**

**வினா எண் 3327—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு, மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு மூலிகைப் பண்ணைக் கழகம் மூலம் ஒகேனக்கல்லில் மூலிகைப் பண்ணை ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், நடப்பு ஆண்டில் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஒகேனக்கல்லில் மூலிகைப் பண்ணை ஏற்படுத்த திட்டம் எதுவும் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**196—**

**பரங்கிப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு அவசர ஊர்தி வழங்கல்**

**வினா எண் 3348—திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1997 ஏப்ரல் 30]

(அ) பரங்கிப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு "ஆம்புலன்ஸ்" (அவசர ஊர்தி) வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): பரங்கிப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் (அவசர ஊர்தி) வழங்கும் செயற்குறிப்பு பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

**197—**

**தமிழ்நாடு மின்வாரியத்திலுள்ள களப்பணியாளர் பணியிடங்கள்**

**வினா எண் 3363—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் 1987-ஆம் ஆண்டு களப்பணியாளர் (Helper) பணிக்கு ஐடிஐ. படித்த மாணவர்களுக்கு நேர் காணல் நடந்ததில் திருச்சி மாவட்டத்திலுள்ள பணியிடங்கள் தற்போது நிரப்பப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

இல்லை.

[1997 ஏப்ரல் 30

**198—**

**தருமபுரி ஒன்றியத்தில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஏற்படுத்தல்**

**வினா எண் 3714—திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தர்மபுரி ஒன்றியம் கடகத்தூரிலும் புத்தம்பட்டியிலும் ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

தர்மபுரி ஒன்றியம் கடகத்தூரிலும் புத்தம்பட்டியிலும் ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

**199—**

**ஒரத்தநாடு தொகுதியில் துணை மின் நிலையங்கள் அமைத்தல்**

**வினா எண் 3717—திரு. பி. இராசமாணிக்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒரத்தநாடு தொகுதி, வடுவூர்-ஒக்கநாடு கீழையூர்-பாப்பாநாடு ஆகிய ஊர்களில் துணை மின் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அத்திட்டம் செயல்படுத்தப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை

(ஆ) கேள்வி எழவில்லை



1997 ஏப்ரல் 30]

## பதினொன்றாவது பட்டியல்

**1—**

**அரசு மருத்துவமனையில் நவீன சவக்கிடங்கு கட்டுதல்**

**வினா எண் 3985—திரு. ரா. சேதுநாதன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டிவனம் அரசு மருத்துவமனையில் நவீன சவக் கிடங்கு கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

விடை—

**மாண்புமிகு ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

**2—**

**அரசு மருத்துவமனைகளில் இயற்கை வைத்தியத்தை அங்கீகரித்து தொடங்குதல்**

**வினா எண் 4025—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சித்தா, ஆயுர்வேதம், அலோபதி ஆகியவற்றிற்கு அளிக்கப்பட்ட அங்கீகாரம் போல், இயற்கை வைத்தியத்தையும் அங்கீகரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், தமிழகத்தில் அனைத்து அரசு மருத்துவ மனைகளிலும் இயற்கை வைத்தியப் பிரிவுகள் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) இயற்கை வைத்திய முறைக்குத் தமிழ்நாடு அரசால் ஏற்கெனவே அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

(ஆ) தற்போது இயற்கை வைத்தியப் பிரிவுகள் அரசு மருத்துவ மனைகளில் துவக்க கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**3—**

**மருத்துவமனைகளில் ஓமியோபதி மருத்துவர்களை நியமித்தல்**

**வினா எண் 4062—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதியதாக துவக்கப்பட்ட மாவட்ட தலைமை மருத்துவமனை மற்றும் பெரிய தாலுக்கா மருத்துவமனைகளில் ஓமியோபதி மருத்துவர்களை நியமிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): 1996-97-ஆம் ஆண்டு பகுதி-II திட்டத்தின்கீழ் திருவண்ணாமலை, கும்பகோணம் மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் ஓமியோபதி பிரிவுகள் ஏற்படுத்த அரசு ஆணை வழங்கப்பட்டுள்ளது. அங்கு ஓமியோபதி மருத்துவர்கள் நியமிக்கப்பட்டு விரைவில் செயல்படத் துவங்கும். ஓமியோபதி மருத்துவப் பிரிவு இல்லாத தாலுக்கா மருத்துவமனைகளில் அரசின் நிதி நிலைமைக்கேற்ப நாளடைவில் ஓமியோபதி மருத்துவப் பிரிவுகள் ஏற்படுத்தப்படும்.



**4—**

**பணி மருத்துவர்களுக்கு முதுகலை மருத்துவப்படிப்பிற்கு இடஒதுக்கீடு அமல்படுத்துதல்**

**வினா எண் 4065—திரு. செ. இராமலிங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முதுகலை மருத்துவப் படிப்பிற்குப் பணியிலுள்ள மருத்துவர்களுக்கு 50 சதவீத இட ஒதுக்கீடு அமல்படுத்தப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், 1994-95 ஆண்டில் இந்த ஒதுக்கீடு பின்பற்றப்பட்டதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): பணியிலுள்ள மருத்துவர்களுக்கு மொத்த இடங்களில் 50% ஒதுக்கப்படுகிறது. 1994-95-லும் இதுபோல் ஒதுக்கப்பட்டது.

**5—**

**கானகம் தரமணி பகுதியில் புதிய மின்மாற்றி அமைத்தல்**

**வினா எண் 4072—திரு. மீ. அ. வைத்தியலிங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதியில், 154வது வட்டம் கானகம் தரமணி பகுதியில் புதியமின் மாற்றி (Transformer) அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) மூன்று 100 கே.வி.ஏ. மின் மாற்றிகள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

6—

### ஆரம்ப சுகாதார நிலையம் கட்டுதல்

**வினா எண் 4075—திரு. மீ.அ. வைத்தியலிங்கம்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தாம்பரம் தொகுதி 61-வது வட்டம் தாமணி திருவள்ளுவர் சாலையில் ஆரம்ப சுகாதார நிலையம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், விவரமென்ன?*

*விடை—*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தாமணி திருவள்ளுவர் சாலையில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

7—

### வைத்தீஸ்வரன் கோவில் அரசு மருத்துவமனையை விரிவுபடுத்துதல்

**வினா எண் 4108—திரு. கோ. மோகனதாசன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம், வைத்தீஸ்வரன் கோவில் அரசு மருத்துவமனையை விரிவுபடுத்த அரசு ஆவன செய்யுமா?*

*விடை—*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம், வைத்தீஸ்வரன் கோவில் அரசு மருத்துவமனையில் தற்போதுள்ள வசதிகளே போதுமானதாகும். இம்மருத்துவமனையை விரிவுபடுத்த வேண்டிய அவசியமில்லை.*





8—

### தமிழக அரசு ஊழியர்களின் குழந்தைகளுக்கான தனி சுயநிதிக்கல்லூரிகள் துவக்குதல்

**வினா எண் 4287—திரு. மு.க.ஸ்டாலின்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருச்சிராப்பள்ளியில் தமிழக அரசு ஊழியர்களின் குழந்தைகளுக்கென்று தனியாக சுயநிதி* (Self financing) *கலை, அறிவியல் மற்றும் தொழிற்கல்வி கல்லூரிகள் துவங்கும் பணியின் தற்போதைய நிலை என்ன?*

*விடை—*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*திருச்சிராப்பள்ளியில் வரும் 1997-98-ம் கல்வியாண்டில், முதல் கட்டமாக மருத்துவம், பல் மருத்துவம், மருந்தியல், செவிலியர் மற்றும் பிஸியோதெரபி ஆகிய பாடங்களில் பட்டப் படிப்பும், செவிலியர் மற்றும் மருந்தியல் ஆகிய பாடங்களில் பட்டயப்படிப்பும் தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. மருத்துவம், பல் மருத்துவம் ஆகியவற்றிற்கான கல்லூரிகளுக்கான அனுமதியை மத்திய அரசிடமிருந்து பெற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.*

9—

### சேத்தியாதோப்பு அரசு மருத்துவமனைக்கு அவசர ஊர்தி வழங்குதல்

**வினா எண் 4319—திரு. அ.வ. அப்துல்நாசர்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேத்தியாதோப்பு அரசு மருத்துவமனைக்கு அவசர ஊர்தி* (Ambulance) *வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு இயக்குநரிடமிருந்து கருத்துரு பெறப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**10—**

**நடமாடும் மருந்து சோதனைக்கூடம் ஏற்படுத்துதல்**

**வினா எண் 4320—திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள மருந்துக்கடைகளில் போலி மருந்துகள் விற்பதைத்தடுக்கும் வகையில் நடமாடும் மருந்து சோதனைக்கூடம் (Mobile Medicine Testing Unit) ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) நடமாடும் மருந்து சோதனைக்கூடம் ஏற்படுத்த அரசுக்கு உத்தேசம் இல்லை.

(ஆ) எழவில்லை.

**11—**

**கொசுவினால் உண்டாகும் நோய்களை ஒழிக்க திட்டம் விரிவாக்குதல்**

**வினா எண் 4367—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) கொசுவினால் உண்டாக்கப்படும் நோய்களை ஒழிக்க திட்டத்தை சிறுநகரம், நடுத்தர நகரம் மற்றும் கிராமப் பகுதிகளுக்கு விரிவாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) தற்போது மலேரியாவைப் பரப்பும் கொசுக்களை ஒழிப்பதற்கு நகர்ப்புறங்களில் மட்டும் அந்தந்த நகராட்சி மற்றும் மாநகராட்சி மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதனை பிற பகுதிகளுக்கு விரிவாக்கும் செயற்குறிப்பு இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

**12—**

**மின்தடை செய்து மின்பற்றாக்குறையை சரிசெய்தல்**

**வினா எண் 4422—திரு. கு. ரவி அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் குறுகிய கால வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மின் தட்டுப்பாட்டை சமாளிக்க, டெல்லி போன்ற நகரங்களில் உச்ச நேரங்களில் (Peak Hours) மாலை 6.00 மணி முதல் இரவு 9.00 மணிவரை நியான் விளக்குகள், குளிர்சாதனப் பெட்டிகள், ஆடம்பர விளக்குகள் ஆகியவற்றிற்கு மின் தடை செய்து மின்சாரத்தை சேமிப்பதன் மூலம் மின் பற்றாக்குறையை சரி செய்வது பற்றி அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அந்த முறையைப் பின்பற்றி தமிழகத்தில் நிலவும் மின் பற்றாக்குறையை சரிசெய்ய அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

தற்போது நடைமுறையிலுள்ள 11-10-1993 நாளிட்ட எரிசக்தித் துறை அரசாணை எண் 25-ல் கண்டுள்ளபடி எல்லா உயர்மின் அழுத்த மற்றும் 3 எச்.பி-க்கு மேற்பட்ட குறைந்த மின் அழுத்த தொழிற்சாலைகளும் (தொடர் செய்முறை மற்றும் மூன்று முறை மாற்றம் செய்யும் தொழிற்சாலைகள் தவிர) மற்றும் எல்லா பற்றவைக்கும் இயந்திரங்களும் தினசரி மாலை 6-00 மணி முதல் 9-00 மணி வரை வேலை செய்யக்கூடாது. ஆனால் நியான் விளக்குகள், ஆடம்பர ஒளி அலங்காரம், குளிர்பதன நிலையங்கள் ஆகியவற்றிற்கு தற்போது 6-00 மணி முதல் 9-00 மணி வரையுள்ள உச்ச நேரத்தில் தடை ஏதும் இல்லை என்றாலும் ஆடம்பரமான ஒளி விளக்குகள் பொருத்தப்பட்ட மணவிழாக்கள், தனியார் விழாக்கள் ஆகியவற்றிற்கு வழங்கப்படும் மின்சாரத்திற்கு தற்காலிக மின் வழங்கலுக்கு விதிக்கப்படும் கட்டணத்தைப் போல இருமடங்கு கட்டணம் விதிக்கப்படுகிறது. மேலும் ஒரு நாளைக்கு ஒரு கிலோ வாட்டுக்குரிய குறுமக் கட்டணம் உச்சபட்சமாக வசூலிக்கப்படுகிறது.

**13—**

**தண்டராம்பட்டில் யானைக்கால் நோய் மருத்துவ மையம் அமைத்தல்**

**வினா எண் 4539—திரு. கே. மணிவர்மா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தண்டராம்பட்டு தொகுதி, தண்டராம்பட்டில் யானைக்கால் நோய் மருத்துவ மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

தண்டராம்பட்டு தொகுதியைச் சார்ந்த தண்டராம்பட்டில் யானைக்கால் நோய் மருத்துவ மையம் அமைப்பது பற்றி பொதுச் சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்து இயக்குநரிடமிருந்து கருத்துரு



பெறப்பட்டுள்ளது. இதனைப் பரிசீலித்து அரசு விரைவில் தக்க ஆணை வெளியிடும்.

**14—**

**நெமிலியில் துணை மின் நிலையம் அமைத்தல்**

**வினா எண் 4553—திரு. அ. மாரிமுத்து:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் இராமசாமி படையாச்சியார் மாவட்டம், வானூர் வட்டம் நெமிலியில் துணை மின் நிலையம் ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) மின்வாரிய நிதி நிலைமைக்கு ஏற்ப இனி வரும் நிதி ஆண்டுகளுக்குரிய திட்டத்தில் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**15—**

**கொல்லிமலை மின் உற்பத்தித் திட்டம்.**

**வினா எண் 4608—திரு. இ. கணேசன்.** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கொல்லிமலை மின் உற்பத்தித் திட்டம் தற்பொழுது எந்த நிலையில் உள்ளது?

[1997 ஏப்ரல் 30

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

மைய அரசின் அனுமதிக்காகவும், வனத்துறை நிலம், மின்வாரியத்துக்கு மாற்றம் செய்ய வேண்டியும், பணிகள் தற்காலிகமாய் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

**16—**

**அரசு மருத்துவமனையில் ஹோமியோபதி மருத்துவப் பிரிவு ஏற்படுத்துதல்**

**வினா எண் 4610—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி அரசு மருத்துவமனையில் ஹோமியோபதி மருத்துவப் பிரிவு ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) தற்போது இதுகுறித்து செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை:

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**17—**

**குடிசைகளுக்கு ஒரு விளக்கு இலவச மின்சாரம் வழங்குதல்.**

**வினா எண் 4807-திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1997 ஏப்ரல் 30]

நகரப் பஞ்சாயத்துப் பகுதியில் குடிசைகளுக்கு ஒரு விளக்கு இலவச மின்சாரம் வழங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

இல்லை.

**18—**

**கொசு விரட்டப் பயன்படும் மேட்கள், சுருள்களால் புற்றுநோய் வருவதை மருத்துவ ரீதியாகக் கண்டுபிடித்தல்**

**வினா எண் 4946—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொசுவை விரட்டப் பொதுமக்கள் பயன்படுத்தும் சுருள்கள் மற்றும் மேட்களால் புற்றுநோய் வரும் என்பது மருத்துவ ரீதியாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) கொசுவர்த்திச் சுருள் மற்றும் மேட்களால் புற்றுநோய் ஏற்பட்டதாக இதுவரை தெரியவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**19—**

**மோசடி நபர்கள் மீது அரசு நடவடிக்கை எடுத்தல்**

**வினா எண் 4955—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1997 ஏப்ரல் 30

மருத்துவ அறிவியலில் இன்றும் மருந்து கண்டறியப்படாத பல நோய்களுக்கு மருந்து இருப்பதாக பத்திரிகைகளில் கவர்ச்சிகரமான விளம்பரம் செய்யும் மோசடி நபர்கள் மீது அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**20—**

**அரசு மருத்துவமனையில் "இன்சினிரேட்டர்" கருவியின் பயன்பாடு மற்றும் அமைத்தல்**

**வினா எண் 4957—திரு. கே. சுப்பராயன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அரசு மருத்துவமனைகளில் இன்சினிரேட்டர் (Incinerator) என்ற கருவி வைக்கப்பட வேண்டும் என்ற அரசு விதி இருக்கிறதா?*

*(ஆ) ஆம் எனில், அதன் பயன்பாடு என்ன?*

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம், உள்ளது.

(ஆ) அரசு மருத்துவமனைகளில் இன்சினிரேட்டர் கருவி மூலம் உயிரியல் மருத்துவக் கழிவுகள் அழிக்கப்படுவதால், கிருமிகள் மூலம் தொற்றுநோய்கள் பாவுவது தடுக்கப்படுவதுடன், சாம்பல் வடிவத்தில் கழிவுப் பொருட்களின் அளவு மிகவும் குறைக்கப்படுகிறது.



1997 ஏப்ரல் 30]

**21—**

**நவீன மருத்துவ முறைகளின் மூலம் சிகிச்சையளித்தல்**

**வினா எண் 5098—திரு. கே. சுப்பராயன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மரபணுக்களால் ஏற்படுகிற நோய்களை நவீன மருத்துவ முறைகளின் மூலம் சிகிச்சை அளித்து நீக்க அரசு ஏதேனும் சிறப்புத் திட்டம் வைத்துள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மரபணுக்களால் ஏற்படுகிற நோய்களை நவீன மருத்துவ முறைகளின் மூலம் சிகிச்சை அளிக்க சிறப்புத் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**22—**

**தருமபுரி அரசு மருத்துவமனையில் ஸ்கேன் வசதி செய்தல்**

**வினா எண் 5127—திரு. கு. மனோகரன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தருமபுரி அரசு மருத்துவமனையில் நோயாளிகளைப் பரிசோதிக்க ஸ்கேன் வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?*

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

தருமபுரி அரசு மருத்துவமனைக்கு ஏற்கெனவே ஸ்கேன் கருவி வழங்கப்பட்டு, அக்கருவி தற்போது அம்மருத்துவமனையில் செயல்பட்டு வருகிறது.

[1997 ஏப்ரல் 30

**23—**

**ஆரம்ப சுகாதார நிலையம் கட்டுதல்**

**வினா எண் 5255-திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர், வீரபாண்டி கிராமம் செல்விநகர் பகுதியிலுள்ள உபரி நிலத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

வீரபாண்டி கிராமத்தில் தற்போது ஆரம்ப சுகாதார நிலையம் எதுவும் செயல்படவில்லை. எனவே, அங்கு ஆரம்ப சுகாதார நிலையம் கட்டும் திட்டம் ஏதுமில்லை.

**24—**

**உலக வங்கியின் உதவியோடு ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைத்தல்**

**வினா எண் 5273—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உலக வங்கியின் உதவியோடு ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உண்டா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் உலக வங்கியின் உதவியோடு ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைத்திடும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.



1997 ஏப்ரல் 30]

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

**25—**

**பின்னத்தூரில் துணை சுகாதார நிலையம் அமைத்தல்**

**வினா எண் 5276—திரு. அ.வ. அப்துல்நாசர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரங்கிப்பேட்டை ஒன்றியம், பின்னத்தூரில் துணை ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) பரங்கிப்பேட்டை ஒன்றியம், பின்னத்தூரில் துணை ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் எதுவும் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

**26—**

**புதிய அணுமின் உலை அமைத்தல்**

**வினா எண் 5314—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்பாக்கத்தில் அதிக மின் உற்பத்தித் திறன் கொண்ட புதிய அணுமின் உலை அமைக்க மத்திய அரசு தீர்மானித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதனால் தமிழ்நாட்டிற்குக் கிடைக்கும் மின் ஆதாயம் என்ன?

[1997 ஏப்ரல் 30

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை

(ஆ) கேள்வி எழவில்லை

**27—**

**திருப்பூர் தனலெட்சுமி மில், மின் இணைப்பு துண்டித்தல்**

**வினா எண் 5317—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் தனலட்சுமி மில்லின் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதற்கான காரணம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) செப்டம்பர் 1996-க்கான மின் கட்டணம் தமிழ்நாடு மின் வாரியத்துக்கு உரிய தேதிக்குள் கட்டத் தவறியதால் 16-10-1996 அன்று மின் இணைப்பு துண்டிக்கப்பட்டது.

**28—**

**மத்திய அரசின் ஒப்புதலுக்காகவுள்ள தமிழக மின் திட்டங்கள்**

**வினா எண் 5352—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1997 ஏப்ரல் 30]

(அ) தமிழ்நாட்டில் எத்தனை மின் திட்டங்கள் மத்திய அரசின் ஒப்புதலுக்காகக் காத்திருக்கின்றன?

(ஆ) அவற்றிற்கு அனுமதி பெற அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): ஒரு விவர அறிக்கை அவை முன் வைக்கப்படுகிறது.

**அறிக்கை**

தமிழ்நாட்டில் மொத்தம் எட்டு மின் திட்டங்கள் மத்திய அரசின் ஒப்புதலுக்காகக் காத்திருக்கின்றன. அவற்றின் நிலவரம் கீழ்வருமாறு:

1. ஸ்பிக் நிறுவனத்திடம் ஒப்பளிக்கப்பட்டுள்ள 525 மெகாவாட் தூத்துக்குடி அனல் மின் திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு கூடுதல் விபரங்கள் கேட்டு நிறுவனத்தாருக்கு திருப்பப்பட்டுள்ளது. இந்த நிறுவனம் தூத்துக்குடி துறைமுகத்தில் நிலக்கரி இறக்குமதி செய்வதற்குக் கூடுதல் வசதிகள் பெறுவதற்கும், சுற்றுச் சூழல் மற்றும் வன அமைச்சக மறுப்பில்லாச் சான்றிதழ் பெறுவதற்கும் காத்திருக்கிறது.

2. சமயநல்லூரில் டீசல் என்ஜின் மின் திட்டம் 106 மெகாவாட். இம்மின் நிலையத்திற்கு 4 உதைப்புக் கொண்ட உள்எரி என்ஜினைத் தேர்வு செய்து பாலாஜி பவர் கார்ப்பரேஷன் (பி) லிமிடெட் நிறுவனம் இது தொடர்பான பத்திரிக்கை விளம்பரங்கள் செய்திடவும், விமானதள அதிகார அமைப்பின் அனுமதிக்கும் சுற்றுப்புறச் சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு அமைச்சக அனுமதிக்கும் காத்திருக்கிறது.

3. வடசென்னை அனல் மின் திட்டம் மூன்றாம் நிலை 500 மெ.வா. ட்ரை சக்தி எனர்ஜி (பி) லிமிடெட் நிறுவனத்தினர் தொழில் நுட்பப் பொருளாதார அனுமதிக்காக நாளிதழ்களிலும் அரசு பதிவுத்தாளிலும் தேவையான விளம்பரம் செய்வதற்கும், எரிபொருள் விநியோகம், எரிபொருள் போக்குவரத்து ஒப்பந்தங்கள் செய்வதற்கும்,

[1997 ஏப்ரல் 30

சுற்றுப்புறச் சூழல் மற்றும் வனத்துறை அமைச்சக ஒப்புதல் பெறுவதற்கும் விழைந்துள்ளது.

4. 1320 மெ.வா. திறன் கொண்ட கடலூர் அனல் மின் திட்டம் பற்றிய திட்ட அறிக்கை, மைய அரசின் அதிகார மின் குழுமத்திற்கு, கடலூர் பவர் கம்பெனி லிமிடெட் எனும் நிறுவனம், ஒப்புதலுக்காகக் கொடுத்துள்ளது.

5. மோயாறு இறுதி நிலை புனல் மின் திட்டம் 50 மெ.வா. திறன் - தமிழக அரசின் ஒப்புதல் பெற்ற பின்னர் மைய அரசின் சுற்றுப்புறச் சூழ்நிலை மற்றும் வன அமைச்சகத்தின் அனுமதிக்காக 9-5-1996 அன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

6. கொல்லிமலை புனல் மின் திட்டம் 20 மெகாவாட் திறன் கொண்டது - தமிழக அரசின் ஒப்புதல் 4-9-1995 அன்று பெறப்பட்டு மைய அரசின் சுற்றுப்புறச் சூழல் மற்றும் வனத்துறை அமைச்சக அனுமதிக்காக முழுமையான வடிவில் விண்ணப்பம் 6-11-1996 அன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

7. குந்தா 7வது மின்நிலையம் நீரேற்றும் புனல் மின் திட்டம் - 1000 மெகா வாட் திறன் கொண்டது. மைய அரசின் சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை அமைச்சக ஒப்புதலுக்கு விரிவான அறிக்கை 29-1-1996 அன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இந்த அமைச்சகம் வனத்துறை, தாவர இயல்துறை, விலங்கியல் துறை முதலியவற்றிலிருந்து விவரங்கள் கேட்டுள்ளது. இவ்விவரங்கள் பெற்ற பின்னரே தமிழ்நாடு மின்வாரிய விண்ணப்பம் அனுமதிக்காகப் பரிசீலிக்கப்படும்.

8. பேசின்பாலம் துணை மின் திட்டம் - 30 மெகாவாட் திறன் கொண்டது - இத் திட்டம் பேசின்பாலம் எரிவாயு சுழலியிலிருந்து மீண்டும் வெப்பச் சக்தியைப் பயன்படுத்தி மின் உற்பத்தித் துணை மின் திட்டம் - 1 பற்றிய விரிவான திட்டக் குறிப்பிரையின் மீது கேட்கப்பட்ட வினாக்களுக்கு பதில்களுடன் விரிவான திட்டக் குறிப்புரை அனுப்பப்படடுள்ளது.

முதன் நான்கு திட்டங்களும் தனியார் நிறுவனங்கள் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளமையால், இந்நிறுவனங்கள் தொடர்பு கொள்ளப்பட்டு அவை நிறைவேற்ற வேண்டிய பணிகளை விரைவாக நிறைவேற்றுமாறு அவ்வப்போது நினைவூட்டப்படுகின்றன. மைய அரசின் ஒப்புதலையும் பெறுமாறு அறிவுறுத்தப்படுகின்றன.



1997 ஏப்ரல் 30]

**29—**

**கிராமப்புறங்களில் குறைந்த மின் அழுத்தத்தைப் போக்குதல்**

**வினா எண் 5353—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் கிராமப்புறங்கள் முழுவதும் குறைந்த மின் அழுத்தத்தால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைப் போக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்

(ஆ) திருப்பூர் கிராமப்புறங்களில் நிலவும் குறைந்த மின் அழுத்தத்தை நிவர்த்தி செய்வதற்காக திருமுருகன் பூண்டிக்கு அருகில் 110/11 கி.வோ. துணை மின் நிலையம் ஒன்று அமைக்கத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**30—**

**மாநில அரசு அனல் மின் நிலையம் அமைத்தல்**

**வினா எண் 5354—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் மாநில அரசு தனது பொறுப்பில் அனல் மின் நிலையம் அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

[1997 ஏப்ரல் 30

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை

(ஆ) கேள்வி எழவில்லை

**31—**

**கோயம்புத்தூரில் அனல் மின் நிலையம் அமைத்தல்**

**வினா எண் 5355—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூரில் அனல் மின் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை

(ஆ) கேள்வி எழவில்லை

**32—**

**அரசு மருத்துவமனைகளுக்கு அமரர் ஊர்தி வழங்குதல்**

**வினா எண் 5357—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை, அரசு குழந்தைகள் மருத்துவமனைக்கு அமரர் ஊர்தி வழங்க அரசு ஆவன செய்யுமா?



1997 ஏப்ரல் 30]

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

ஆம். சென்னை, அரசு குழந்தைகள் மருத்துவமனைக்கு அமரர் ஊர்தி வழங்குவதற்குள்ள செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**33—**

**அரசு மருத்துவமனைகளில் மின் தகனக் கருவி அமைத்தல்**

**வினா எண் 5362—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு மருத்துவமனைகளில் (அநாதைப் பிணங்களை எரிக்க) மின் தகனக் கருவி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) அரசு மருத்துவமனைகளில் அநாதைப் பிணங்களை எரிக்க மின் தகனக் கருவி அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**34—**

**அரசு மருத்துவமனைகளின் பயனற்ற அறைக்கலன்கள் ஏலம் விடுதல்**

**வினா எண் 5366—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1997 ஏப்ரல் 30

(அ) தமிழ்நாட்டிலுள்ள அரசு மருத்துவமனைகளில் பயனற்றதாகக் கழிக்கப்பட்ட அறைக்கலன்கள் (Furniture) விற்கப்படாமல் அதிகமாகத் தேங்கிக்கிடக்கின்றனவா?

(ஆ) ஆம் எனில், அதை விற்பதற்கு, டெண்டர்விட அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் உள்ள ஒருசில மருத்துவமனைகளில் மட்டுமே பயனற்றதாகக் கழிக்கப்பட்ட அறைகலன்கள் விற்கப்படாமல் உள்ளன. அவற்றையும் விரைவில் அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(ஆ) அரசு மருத்துவமனைகளில் பயனற்றதாகக் கழிக்கப்பட்டுச் சேகரமாகும் அறைகலன்களை அவ்வப்போது அவற்றின் மதிப்பிற்குத் தக்கவாறு பொது ஏலமுறையைப் பின்பற்றியோ அல்லது வரையறுக்கப்பட்ட (அல்லது) திறந்த ஒப்பந்தப்புள்ளி முறையைப் பின்பற்றியோ விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**35—**

**மின் கட்டணம் குறைக்க வேண்டுதல்**

**வினா எண் 5377—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மின் கட்டணம் யூனிட் ஒன்றுக்கு ரூ. 3.50 வீதம் வசூலித்து வருவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இதைக் குறைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?



1997 ஏப்ரல் 30]

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ): 14-2-1997-ஆம் நாள் வரை அமலில் இருந்த மின் கட்டண வீதப்படி, பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மின் கட்டணம் யூனிட் ஒன்றுக்கு ரூ. 3.50 என்ற வீதத்தில் வசூலிக்கப்படவில்லை.

**36—**

**எய்ட்ஸ் நோயைக் கட்டுப்படுத்த வசதி அமைத்தல்**

**வினா எண் 5615—திரு. நா. பெரியசாமி** : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரியார் மாவட்டத் தலைமை மருத்துவமனையான ஈரோடு அரசு மருத்துவமனையில் எய்ட்ஸ் நோயைக் கட்டுப்படுத்த H.I.V. Test வசதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் :**

பெரியார் மாவட்டத் தலைமை மருத்துவமனையான ஈரோடு அரசு மருத்துவமனையில் எய்ட்ஸ் நோயைக் கட்டுப்படுத்த எச்.ஐ.வி பரிசோதனை வசதி ஏற்கனவே உள்ளது. எனவே புதிதாக ஏற்படுத்த வேண்டிய அவசியம் இல்லை.

**37—**

**இன்சினிரேட்டர் கருவி அமைத்தல்**

**வினா எண் 5627—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1997 ஏப்ரல் 30

ஈரோடு அரசு மருத்துவமனையில், மருத்துவக் கழிவுகளை எரிக்க இன்சினிரேட்டர் கருவி பொருத்தப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத்துறை அமைச்சர்:**

ஈரோடு அரசு மருத்துவமனையில், மருத்துவக் கழிவுகளை எரிக்க இன்சினிரேட்டர் கருவி பொருத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**38—**

**ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்.**

**வினா எண் 5634—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் தொகுதி, அனுப்பர்பாளையம் பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) திருப்பூர் தொகுதி, அனுப்பர்பாளையம் பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.



1997 ஏப்ரல் 30]

**39—**

**கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்**

**வினா எண் 5640—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் தொகுதி, மங்கலத்தில் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) திருப்பூர் தொகுதி, மங்கலத்தில் ஏற்கெனவே ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருவதால் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டிய அவசியமில்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

**40—**

**பழுதடைந்த பேரேஜை சீர் செய்தல்**

**வினா எண் 5649—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் அணையில் இருந்து கீழே வரக்கூடிய காவேரி ஆற்றில் மின் உற்பத்தி செய்யக்கூடிய பேரேஜ் பழுதடைந்துள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இதைச் சீர் செய்ய விரைவில் நடவடிக்கை எடுக்கப்படுமா?

[1997 ஏப்ரல் 30

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) கீழ் மேட்டூர் தடுப்பு அணை (பேரேஜ்) மின் உற்பத்தி நிலையம் 3ல் உள்ள அலகு 1, அலகு 2 ஆகியவற்றில் ஏற்பட்ட பழுதுகள் சீராக்கப்பட்டு, அவை மீண்டும் 24-10-1996, 2-12-1996 ஆகிய தேதிகளில் முறையே இயக்கி வைக்கப்பட்டுள்ளன.

41—

**துணை மின் நிலையப்பணியை உடனே துவங்குதல்**

**வினா எண் 5880—திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குத்தாலம் தொகுதி, குடவாசலில் அனுமதிக்கப்பட்டுள்ள துணை மின் நிலையப் பணி உடன் துவங்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

இந்த நிதியாண்டில் (1997-98) துவக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

42—

**ஆரம்ப சுகாதார நிலையங்களில் விஷப்பாம்பு கடிக்கு மருத்துவ சிகிச்சை அளித்தல்**

**வினா எண் 5987-டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விஷப்பாம்புகள் கடிக்கு சிகிச்சை அளிப்பதற்குத் தேவையான மருந்துகள் அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களில் கிடைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா?



1997 ஏப்ரல் 30]

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

விஷப்பாம்புகள் கடிக்கு சிகிச்சை அளிப்பதற்குத் தேவையான மருந்து, தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகத்தின் மூலமாக அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் வழங்கப்பட்டு வருகிறது.

43—

**மீனவக் குப்பங்களுக்குத் தனி மின் வாங்கி அமைத்தல்**

**வினா எண் 6019—திரு. மீ. அ. வைத்தியலிங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிழக்குக் கடற்கரைச் சாலை, உத்தண்டி வரையில் உள்ள மீனவக் குப்பங்களுக்குத் தனியாக மின் வாங்கி (டிரான்ஸ்பார்மர்) அமைத்துத் தரும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரமென்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) கிழக்குக் கடற்கறைச் சாலையில் திருவான்மியூரிலிருந்து உத்தண்டி வரையில் உள்ள மீனவக் குப்பங்களுக்குப் புதியதாக மின் மாற்றி அமைத்தல் மற்றும் மின் கம்பிகளை புதைவடமாக மாற்றுதல் போன்ற அபிவிருத்திப் பணிகள் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் பரிசீலனையில் உள்ளன.

44—

**தென்காசி உபமின் நிலையத்திலிருந்து மின்சார விநியோகம் செய்தல்**

**வினா எண் 6320—திரு. கு. ரவி அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், தென்காசி நகராட்சி, கீழ்ப்புலியூர் பகுதிக்கு தென்காசி உபமின் நிலையத்திலிருந்து மின்சாரம் விநியோகம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தென்காசி நகராட்சி எல்லைக்குட்பட்ட கீழ்ப்புலியூர் பகுதிக்கு தென்காசி உபமின் நிலையத்திலிருந்துதான் மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

**45—**

### கிராமங்களுக்கு மின் மோட்டார் இணைப்பு வழங்கி மின்சாரம் வழங்குதல்

**வினா எண் 6482—திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி ஒன்றியம் கொண்டகரஅள்ளி ஊராட்சி மலைவாழ் கிராமங்களான வத்தல்மலை, பெரியூர் போன்ற கிராமங்களுக்கு 3 கம்பி (Three phase) வழியாக மின் மோட்டார் இணைப்பு வழங்கி மின்சாரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

இல்லை.

**46—**

### செங்கை-எம்.ஜி.ஆர் மாவட்டம் இரண்டாக பிரித்தல்

**வினா எண் 86—திரு. பெ.சு திருவேங்கடம்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) செங்கை-எம்.ஜி.ஆர் மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆமெனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர் மாவட்டத்தைச் சீரமைத்து காஞ்சீபுரத்தை தலைமையிடமாகக் கொண்டு அண்ணா மாவட்டமும், திருவள்ளூரைத் தலைமையிடமாகக் கொண்டு எம்.ஜி.ஆர் மாவட்டமும் அமைத்து அரசாணை (நிலை) எண். 677, வருவாய், நாள் 25-7-96இல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**47—**

### புறம்போக்கு இடங்களில் விடுகட்டி வசித்து வருபவர்களுக்கு பட்டா வழங்குதல்

**வினா எண் 206—திரு. வீ. தமிழ்மணி:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பஞ்சாயத்து புறம்போக்கு நிலம், மேய்க்கால் புறம்போக்கு, குட்டை புறம்போக்கு, கல்லாங்குத்து புறம்போக்கு ஆகிய இடங்களில் வீடுகட்டி பத்து வருடங்களுக்குமேல் வசித்து வருபவர்களுக்கு பட்டா வழங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

தகுதிவாய்ந்த இனங்களில், கிராமப் பொதுநன்மைக்கு குறிப்பிட்ட நிலம் தேவைப்படாது எனில், அது குறித்து நிலநிர்வாக ஆணையரின் பரிந்துரை பெற்று அரசு பரிசீலிக்கும்.

[1997 ஏப்ரல் 30

48—

**சான்றிதழ் வழங்கக் கோரும் மனு மீது ஒட்டப்படும் முத்திரை வில்லையினை நீக்குதல்**

**வினா எண் 210—திரு. வீ. தமிழ்மணி:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா:—

மாணவர்களுக்கு சாதி, வருமானம் மற்றும் இருப்பிடச் சான்றிதழ் வழங்கக்கோரும் மனுவின்மீது முத்திரை வில்லையினை ஒட்டவேண்டும் என்ற நடைமுறையினை நீக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

தற்போது நடவடிக்கை ஏதுமில்லை.

49—

**திருக்கழுக்குன்றத்தை தனி வட்டமாக அமைத்தல்**

**வினா எண் 213—திரு. வீ. தமிழ்மணி:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா:—

செங்கல்பட்டு வட்டத்திலிருந்து திருக்கழுக்குன்றம் மற்றும் சில குறுவட்டங்களைப் பிரித்து புதிய திருக்கழுக்குன்றம் வட்டம் அமைக்க, 1991-ல் முடிவு செய்யப்பட்டும் இன்னும் செயல்படுத்தப்படாததால், விரைவில் திருக்கழுக்குன்றத்தை தனி வட்டமாக அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

திருக்கழுக்குன்றத்தைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் அமைக்க அரசாணை (நிலை) எண்.677, வருவாய், நாள் 25-7-1996இல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.



1997 ஏப்ரல் 30]

50—

**புதிய வட்டாட்சியர் அலுவலகம் அமைத்தல்**

**வினா எண் 498—திரு. துரை சந்திரசேகரன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு வட்டத்தில் புதிய வட்டாட்சியர் அலுவலகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம், எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) திருவையாறு வட்டத்தில் புதிய வட்டாட்சியர் அலுவலகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

51—

**நீடாமங்கலம் வட்டத்தை தஞ்சாவூர் மாவட்டத்துடன் இணைத்தல்**

**வினா எண் 621—திரு. பி. இராசமாணிக்கம்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஒரத்தநாடு தொகுதி, நீடாமங்கலம் வட்டத்தை நிர்வாக வசதி கருதியும், பொது மக்கள் நலன் கருதியும் தஞ்சாவூர் மாவட்டத்துடன் இணைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டங்களைச் சீரமைத்து திருவாரூரைத் தலைமையிடமாகக் கொண்டு ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டம் ஏற்படுத்தும் பொருட்டு அரசுக்கு அறிக்கை

அளிக்க உயர்நிலை வலலுநர் குழு அமைக்கப்பட்டுள்ளது. குழுவின் அறிக்கை கிடைக்க பெற்றதும் அரசு பரிசீலிக்கும்.

**52—**

**அரசு நிலங்கள் தனியாருக்கு விற்றல்**

**வினா எண் 727—திரு கே. சுப்பராயன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடந்த 5 ஆண்டுகளில் அரசுக்குச் சொந்தமான நிலம் தனியாருக்கு விற்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விற்பனை மதிப்பு என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): வருவாய்த்துறையைச் சார்ந்த அரசு நிலங்கள் தனியாருக்கு விற்கப்படுவதில்லை. வருவாய் நிலை ஆணையின் கீழ் நிலக்கிரயம் வசூலித்துக் கொண்டோ அல்லது நிலக்கிரயமின்றியோ ஒப்படையாகவோ/குத்தகையாகவோ தான் வழங்கப்படுகிறது. இது தவிர வட்டாட்சியர்/ கோட்டாட்சியர்/மாவட்ட ஆட்சியர் மற்றும் நில நிர்வாக ஆணையர் அளவிலும் அவரவர் நிதி அதிகார வரம்பிற்குட்பட்டு நில ஒப்படை/ குத்தகை வழங்கப்படுகின்றது. ஆகவே, மாநிலம் முழுவதிலுமாக 5 ஆண்டுகளில் செய்யப்பட்ட ஒப்படை/ குத்தகை குறித்த விவரங்களையும், அவற்றின் மதிப்பினையும் தெரிவிப்பது எளிதானதல்ல.

**53—**

**குடிமனை சொந்தமில்லாதவருக்கு குடிமனைப்பட்டா வழங்குதல்**

**வினா எண் 909—திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகம் முழுவதும் குடிமனை சொந்தமாக இல்லாதவர்களுக்கு குடிமனைப் பட்டா வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?





**விடை—**

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

இல்லை.

**54—**

**குடியிருப்பு நிலங்களுக்கு பட்டா வழங்குதல்**

**வினா எண் 1080—திரு. எல். மூக்கையா:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொடைக்கானல் மலைப் பகுதியில் ஏழை சிறு விவசாயிகள் குடியிருந்து அனுபவித்து வரும் நிலங்களுக்கு பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது வழங்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): மாநிலத்திலுள்ள அனைத்து மலைப் பகுதிகளிலும், நில ஒப்படை செய்வதற்கும், ஆக்கிரமணங்களை வரன்முறைப்படுத்துவதற்கும் தடை விதிக்கப்பட்டு உள்ளதால், கொடைக்கானல் மலைப் பகுதியில் விவசாயிகள் குடியிருந்து அனுபவித்து வரும் நிலங்களுக்கு ஒப்படை செய்ய இயலாத நிலை உள்ளது.

**55—**

**நிலவரி ரத்து செய்தல்**

**வினா எண் 1157—திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1405 பசலி ஆண்டிற்கான நிலவரி தென்னாற்காடு-வள்ளலார் மாவட்டம் முழுமைக்கும் ரத்து செய்யப்படுமா?

[1997 ஏப்ரல் 30

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

1405 பசலி ஆண்டில் தென்னாற்காடு-வள்ளலார் மாவட்டத்தில் சிதம்பரம் மற்றும் திட்டக்குடி வட்டங்கள் மட்டும் வறட்சியால் பாதிக்கப்பட்டவையாக அரசால் அறிவிக்கப்பட்டதன்பேரில் அன்னவாரி சான்றிதழ்கள் முறையே சிதம்பரம் வட்டத்தில் 193 கிராமங்களுக்கும் திட்டக்குடி வட்டத்தில் 130 கிராமங்களுக்கும் வழங்கப்பட்டன. இவ்விரு வட்டங்களுக்கும் நிலவரி முதலியன தள்ளுபடி செய்யப்பட்டன. வருவாய் தீர்வாயமும் நடத்தி கணக்குகள் முடிவு செய்யப்பட்டு விட்டன. மேற்கண்ட சூழ்நிலையில் மேற்படி மாவட்டம் முழுமைக்கும் நிலவரியை 1405 பசலி ஆண்டிற்கு இரத்து செய்ய வேண்டிய அவசியம் எழவில்லை.

**56—**

## மாவட்ட பெயர் சூட்டல்

**வினா எண் 1264— திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டத்திற்கு தருமபுரி அதியமான் மாவட்டம் என்று பெயர் சூட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டத்திற்கு தருமபுரி அதியமான் மாவட்டம் என்று பெயர் சூட்டும் செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**57—**

## அரசு நிலம் ஆக்கிரமிப்பு செய்தது குறித்து நடவடிக்கை எடுத்தல்

**வினா எண் 1622—திரு. மீ. அ. வைத்தியலிங்கம்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1997 ஏப்ரல் 30]

(அ) தாம்பரம் தொகுதி, பம்மல் பேரூராட்சியில் சர்வே எண்.9/5 அரசுக்குச் சொந்தமான கால்நடைகள் அடைக்கும் பட்டியாக (பவுண்டு) இருந்த இடம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருப்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை யாது?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**58—**

## அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு வாகனம் வழங்குதல்

**வினா எண் 1834—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் உள்ள அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்களுக்கும் அலுவலக உபயோகத்திற்கு வாகனம் வழங்கப்பட்டுள்ளதா?

(ஆ) இல்லையெனில் வழங்கப்படாத அலுவலகங்களுக்கு வாகனம் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): ஆம். இவற்றில் புரசைவாக்கம்-பெரம்பூர் வட்டாட்சியர் அலுவலக ஈப்பு வாங்கி 27 ஆண்டுகள் ஆகிவிட்டதால் செயல்படாத நிலையில் தற்போது உள்ளது.

[1997 ஏப்ரல் 30

**59—**

### தண்ணீர் கொண்டு செல்ல வசூலிக்கப்படும் பாதைவரி கைவிடுதல்

**வினா எண் 1873—திரு நா. பெரியசாமி:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) விவசாயிகள் ஒரு நிலத்திலிருந்து மற்றொரு நிலத்திற்கு குழாய் வழியாகப் பாசனத் தண்ணீர் கொண்டு செல்வதற்கு வசூலிக்கப்படும் பாதை வரி கைவிடப்படுமா?*

*(ஆ) பாசனத் தண்ணீர் கொண்டு செல்வதற்குக் காலதாமதமின்றி அனுமதி வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*விடை—*

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) இல்லை.*

*(ஆ) ஆட்சேபணையற்ற இடங்களில் விவசாயத்திற்குக் குழாய் பதிப்பதற்கு அனுமதி அளிப்பதற்கான நேர்வுகளில் காலதாமதத்தைத் தவிர்க்க வேண்டும் என மாவட்ட ஆட்சியர்களுக்கு அறிவுரை வழங்குமாறு நில நிர்வாக ஆணையரை அரசு ஏற்கனவே கேட்டுக் கொண்டுள்ளது*

**60—**

### ஏழைகளுக்கு அளிக்கப்படும் இலவச வீட்டு மனை இடம் குறைந்தபட்சம் நிர்ணயித்தல்

**வினா எண் 1923—திரு. நா. பெரியசாமி:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*ஏழைகளுக்கு அரசு வழங்கும் இலவச வீட்டுமனை இடம் குறைந்தபட்சம் [illegible] சென்ட் என்று இருக்கும் அளவில் மாற்றம் செய்யும் கருத்து அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*விடை—*

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

*இல்லை.*



1997 ஏப்ரல் 30]

**61—**

### திருப்பூர், மாவட்டமாக அறிவிக்க வேண்டுதல்

**வினா எண் 1931—திரு. கே. சுப்பராயன்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருப்பூரைத் தலைமையிடமாகக் கொண்ட திருப்பூர் குமரன் மாவட்டம், அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*விடை—*

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

*இல்லை.*

**62—**

### புதிய வருவாய்க் கோட்டம் அமைத்தல்

**வினா எண் 1950—திரு. பெ. சு. திருவேங்கடம்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தில் போளூர் நகரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வருவாய்க் கோட்டம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

*விடை—*

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) இல்லை.*

*(ஆ) கேள்விக்கு இடமில்லை.*

**63—**

### தனி வருவாய்க் கோட்டாட்சியர் அலுவலகம் அமைத்தல்

**வினா எண் 2189—திரு. ஜி. பழனிசாமி:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[1997 ஏப்ரல் 30

ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டம் மன்னார்குடி வருவாய்க் கோட்டாட்சியர் அலுவலகத்தை இரண்டாகப் பிரித்து திருத்துறைப்பூண்டியை மையமாகக் கொண்டு தனி வருவாய்க் கோட்டாட்சியர் அலுவலகம் அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

இல்லை.

**64—**

**சில பகுதிகளை தாலுக்காவுடன் இணைக்க அரசு நடவடிக்கை எடுத்தல்**

**வினா எண் 2379—திரு. கு. ரவிஅருணன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசிக்கும் செங்கோட்டைக்கும் இடையில் உள்ள வீரகேரளம்புதூர் தாலுக்காவைச் சேர்ந்த கொட்டாகுளம், பிரானூர் பகுதிகளை தென்காசி அல்லது செங்கோட்டை தாலுகாவுடன் இணைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) தென்காசிக்கும் செங்கோட்டைக்கும் இடையில் உள்ள வீரகேரளம்புதூர் தாலூக்காவைச் சேர்ந்த கொட்டாகுளம், பிரானூர் பகுதிகளை தென்காசி அல்லது செங்கோட்டை தாலுகாவுடன் இணைக்கும் செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.



1997 ஏப்ரல் 30]

**65—**

**காந்தி நகர் பகுதி மக்களுக்குப் பட்டா வழங்குதல்**

**வினா எண் 2558—திரு. டி. ராஜேந்தர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பூங்கா நகர் தொகுதியிலுள்ள காந்திநகர் பகுதி மக்களுக்குப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

இராணுவத்திற்குச் சொந்தமான நிலம். ஆதலால் பட்டா வழங்க இயலாது.

**66—**

**பயிர்வாரி தீர்வைக்குப் பதிலாக ஏக்கர்வாரி தீர்வை விதித்தல்**

**வினா எண் 3204—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கீழ்பவானி பாசனப் பகுதியில் பயிர்வாரி தீர்வை விதிப்பதற்கு பதிலாக ஏக்கர்வாரி தீர்வை விதிப்பதற்கான கோரிக்கை அரசிற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) இப்பொருள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

67—

**புதிய வட்டம் உருவாக்குதல்**

**வினா எண் 3302—திரு. ஜே. எம். ஆரூண் ரஷீத்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சைதாப்பேட்டை வட்டத்தை இரண்டாகப் பிரித்து, அம்பத்தூரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் உருவாக்க அரசு முன்வருமா?*

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

சைதாப்பேட்டை வட்டத்தை இரண்டாகப் பிரித்து, அம்பத்தூரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் உருவாக்க அரசாணை (நிலை) எண் 677, வருவாய், நாள்: 25-7-96-இல் ஏற்கெனவே ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

68—

**மாவட்டங்கள் ஏற்படுத்துதல்**

**வினா எண் 3331— திரு. ஜி. கே. மணி:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தருமபுரி மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, தருமபுரியைத் தலைமையிடமாகக் கொண்டு, அதியமான் மாவட்டமும் கிருட்டிணகிரியைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு மாவட்டமும் ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில் எப்போது?*

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) தருமபுரி மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.



(ஆ) கேள்விக்கு இடமில்லை.

69—

**இலவச வீட்டுமனைப்பட்டா வழங்குதல்**

**வினா எண் 3383—திரு. கே. மணிவர்மா:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தண்டராம்பட்டு தொகுதியில் இலவச வீட்டுமனைப் பட்டா எப்போது வழங்கப்படும்?*

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

பட்டா வழங்க அரசு நத்தம் புறம்போக்கு நிலங்களில் நிலுவை இனம் ஏதும் இல்லாமையால் நிலவகைமாற்றம் மற்றும் நில கையகப்படுத்துதல் மூலம் பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

70—

**வறட்சிப் பகுதிகளை பின் தங்கிய ஒன்றியங்களாக அறிவித்தல்**

**வினா எண் 3612—திரு. கே. மணிவர்மா:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தண்டராம்பட்டு, திருவண்ணாமலை ஆகிய ஒன்றியங்களை வறட்சியால் பாதிக்கப்பட்ட மிகவும் பின்தங்கிய ஒன்றியங்களாக அரசு அறிவிக்குமா?*

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

தண்டராம்பட்டு ஒன்றியம் செங்கம் வட்டத்தில் உள்ளது. அவ்வட்டம் ஏற்கெனவே வறட்சிப் பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது. திருவண்ணாமலை வட்டத்தை வறட்சிப் பகுதியாக அறிவிக்க தேவையில்லை என்று கருதப்பட்டுள்ளது.

[1997 ஏப்ரல் 30

71—

**தமிழகத்தின் இரண்டாவது தலைநகரம் அமைத்தல்**

**வினா எண் 3759—டாக்டர் மு. தேவராஜன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தமிழகத்தின் இரண்டாவது தலைநகரமாக திருச்சிராப்பள்ளியை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?*

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) தமிழகத்தின் இரண்டாவது தலைநகரமாக திருச்சிராப்பள்ளியை அமைப்பது குறித்து செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

72—

**காலனி மக்களுக்கு மனைப்பட்டா பிரித்து வழங்குதல்**

**வினா எண் 4082—திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) புவனகிரி தொகுதி, மதுரா மேட்டுக்குப்பத்திலுள்ள 178/3இல் 3.12 ஏக்கர் நிலம் அப்பகுதி வாழ் காலனி மக்களுக்கு மனைப்பட்டாவாக பிரித்து வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



1997 ஏப்ரல் 30]

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): இப்புல எண்ணில் கண்டுள்ள நிலம் ஆரம்ப சுகாதார நிலையம் கட்ட தேர்வு செய்யப்பட்டு நடவடிக்கையில் உள்ளமையால் மனைப்பட்டா வழங்க இயலாது.

73—

**காஞ்சிநகரை கிராம நில வரைப்பட பதிவேட்டில் பதிவு செய்தல்**

**வினா எண் 4084—திரு. அ. வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) பறங்கிப்பேட்டை ஒன்றியம், காஞ்சிநகரை கிராம நில வரைபட பதிவேட்டில் (F.V.M.) பதிவு செய்ய ஆவன செய்யப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ உடனடியாக தக்க பதிவுகளை ஆவணங்களில் மேற்கொள்ள கடலூர் உதவி இயக்குநருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

74—

**காடுகளில் நிலம் சாகுபடி செய்து வாழ்ந்துவரும் குடும்பங்களுக்கு மனைப்பட்டா வழங்குதல்**

**வினா எண் 4133—திரு. ஆர். மகேந்திரன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1997 ஏப்ரல் 30

நாட்றம்பள்ளி ஒன்றியம் மல்லகுண்டா ஊராட்சியில் ஒதுக்கப்படாத காடுகளில் 30 ஆண்டுகளாக நிலம் சாகுபடி செய்து வாழ்ந்து வரும் (201) குடும்பங்களுக்குப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

மேற்படி நிலம் ஒதுக்கப்படாத காடுகள் என்ற வகைப்பாட்டில் உள்ளது. இதனை புன்செய் அனாதீனமாக நிலமாற்றம் செய்து தகுதியின் அடிப்படையில் நில ஒப்படை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**75—**

### புறம்போக்கு நிலத்தில் குடியிருக்கும் மக்களுக்கு பட்டா வழங்குதல்

**வினா எண் 4218—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர், நெறிப்பறைச்சல் கிராமத்திலுள்ள புறம்போக்கு நிலத்தில் குடியிருக்கும் ஏழை மக்களுக்கு பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தொடர்புடைய நிலம் ஆட்சேபணையுள்ள இட்டேரி புறம்போக்கு என்பதால் ஒப்படை செய்யப்படவில்லை. நத்தமாக நிலவகை மாற்றம் செய்து, ஒப்படை செய்ய மாவட்டாட்சியரால் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

**76—**

### நகர்ப்புற நிலவங்கி உருவாக்குதல்.

**வினா எண் 4285—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1997 ஏப்ரல் 30]

(அ) நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டத்தின்கீழ் கையகப்படுத்தப் பட்ட உபரி நிலங்களைக் கண்டறியவும், பாதுகாக்கவும், ஒருங்கிணைந்த நகர் வளர்ச்சித் திட்டங்களுக்குப் பயன்படுத்தவும் நகர்ப்புற நில வங்கி (Urban Land Bank) ஒன்றை உருவாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): இல்லை.

**77—**

### தலைஞாயிறு ஒன்றியத்தை வட்டமாக அறிவித்தல்

**வினா எண் 4305—திரு. எஸ். கே. வேதரத்தினம்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம் வேதாரண்யம் வட்டம், தலைஞாயிறு ஒன்றியத்தை வட்டமாக மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**78—**

### கருணை அடிப்படையில் பணி நியமனம் அமுல்படுத்தல்

**வினா எண் 4325—திரு. அ. மாரிமுத்து:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பணியிலிருந்து இறந்து விட்ட கிராமக் காவலர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யும் முறை மீண்டும் அமல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

[1997 ஏப்ரல் 30

(ஆ) இந்நிதியாண்டில் எத்தனை பேர் கருணை அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இச்செயல் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) தற்போது விதிமுறையில்லாததால் பணியிலிருந்து இறந்துவிட்ட கிராம காவலர்களின் வாரிசுதாரர்கள் யாரும் நியமனம் செய்யப்படவில்லை.

**79—**

**புறம்போக்கு நிலத்தில் இஸ்லாமியர் தொழுகை தல பட்டா கோருதல்**

**வினா எண் 4656—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் ஜீவாபாய் பள்ளிக்கு எதிரிலும், புகைவண்டிப் பாதைக்கு தெற்கிலும், புதுநகர் காலனிக்கு மேற்கிலும் குடியிருப்புகளுக்கு கிழக்கிலும் அமைந்துள்ள அரசுப் புறம்போக்கு நிலத்தை இஸ்லாமியர் தொழுகை தலத்திற்காக பட்டா கோரி முறையீடு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**80—**

**ஏரி நிலங்களை தனியார் ஆக்கிரமித்ததின் மீது நடவடிக்கை எடுத்தல்**

**வினா எண் 4659—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1997 ஏப்ரல் 30]

(அ) அரியலூர் வட்டம், கயர்லாபாத் கிராமத்தில் ஏரிக்குரிய நிலங்கள் தனி நபர்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது அரசிற்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) அரியலூர் வட்டம், கயர்லாபாத் கிராம ஏரிகளில் உள்ள நிலங்கள் தனி நபர்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன.

(ஆ) அவைகள் ஆட்சேபணை உள்ளவை என்பதால் அவற்றை அகற்ற தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**81—**

**விவசாயிகளுக்கு பட்டா வழங்குதல்**

**வினா எண் 4920—திரு. ச. இராஜா ரெட்டி:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தளித்தொகுதி, தளி ஊராட்சி ஒன்றியம், ஆச்சுப்பாலம் பஞ்சாயத்து நெல்லுமாறு அக்ரஹாரம் ஜாகிர் நிலத்தில் உபரி நிலத்தை சாகுபடி செய்துவரும் விவசாயிகளுக்குப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

தேன்கனிக்கோட்டை வட்டம், தளித் தொகுதியில் உள்ள நிலங்கள் மலைகளால் சூழப்பட்ட மலைப் பிரதேசமாகும். மலைப்பகுதி நிலங்களுக்கு ஒப்படை வழங்குவதற்கும் வரன்முறைப்படுத்துவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. எனவே தளித் தொகுதியில் உள்ள நிலங்களுக்கு தற்போது ஒப்படை வழங்க இயலாது.

[1997 ஏப்ரல் 30

**82—**

**அரசு ஊழியர்களுக்கு வீட்டுமனை வழங்குதல்**

**வினா எண் 4938—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை பெரியார் நகர் அருகிலுள்ள, கொளத்தூரில் அரசு ஊழியர்களுக்கு வீட்டுமனை வழங்க 1994-லேயே ஆணை பிறப்பிக்கப்பட்டும் இன்னும் மனை ஒதுக்கப்படாததை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது வழங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது.

**83—**

**பஞ்சமி நிலங்களை மீட்டல்**

**வினா எண் 5050—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள பஞ்சமி நிலங்களை மீட்டு மீண்டும் ஆதிதிராவிடர்களிடம் வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தமிழ்நாட்டிலுள்ள பஞ்சமி நிலங்களை மீட்டு மீண்டும் ஆதிதிராவிடர்களிடம் வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.



1997 ஏப்ரல் 30]

**84—**

**மீனவர்களுக்கு இலவச மனைப்பட்டா**

**வினா எண் 5162—திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஒன்றியம், சாமியார் பேட்டையில் மீனவர்களுக்கு இலவச மனைப்பட்டா வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

இப்பொருள் குறித்த செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

**85—**

**நொய்யலாற்றங்கரையில் மனைப்பட்டாவோடு கூடிய பாதுகாப்பான இடம் ஒதுக்குதல்**

**வினா எண் 5393—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் நொய்யலாற்றாங்கரையில் குடியிருப்போருக்கு பாதுகாப்பில்லாததால் மனைப்பட்டாவோடு கூடிய பாதுகாப்பான இடம் ஒதுக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

ஆட்சேபகரமான புறம்போக்குகளில் ஆக்கிரமணங்களை ஆய்வு செய்து அவை உண்மையாகவே ஆட்சேபகரமானவை என்றால் தகுதியுடைய ஏழைகளுக்கு மாற்று இடம் தருவது குறித்துப் பரிந்துரை செய்ய ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் அறிக்கை பெறப்பட்டபின் மேற்கண்ட கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

[1997 ஏப்ரல் 30

86—

## புறம்போக்கு நிலத்தில் வீட்டுமனைப்பட்டா

**வினா எண் 5415—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் இடுவம்பாளையத்தில் பல்லாண்டுகளாகப் புறம்போக்கு நிலத்தில் குடியிருப்போர் வீட்டுமனைப்பட்டா கோரி அரசுக்கு முறையீடு செய்துள்ளார்களா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): இல்லை.

87—

## நேரு நகரில் 120 வீடுகளுக்கு மனைப்பட்டா

**வினா எண் 5417—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் தொட்டிபாளையம் ஊராட்சி நேரு நகரிலுள்ள சுமார் 120 வீடுகளுக்கு மனைப்பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

செயற்குறிப்பு ஏதும் நிலுவையில் இல்லை.

88—

## திருப்புவனத்தை தனிவட்டமாக அறிவித்தல்

**வினா எண் 5554—திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1997 ஏப்ரல் 30]

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனத்தை தனி வட்டமாக அறிவிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) திருப்புவனத்தை தனி வட்டமாக மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

89—

## புவனகிரி தொகுதியில் புதிய வட்டம் உருவாக்குதல்

**வினா எண் 5579—திரு. அ. வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புவனகிரி தொகுதி, சேத்தியாதோப்பை தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் உருவாக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

சேத்தியாதோப்பை தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

90—

## எடப்பாடி வட்டம் தனித் தாலுக்காவாக ஆரம்பிக்க நடவடிக்கை

**வினா எண் 5822—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தனி தாலுக்காவாக அறிவிக்கப்பட்டும் இதுவரை தாலுக்கா புதிதாக ஆரம்பிக்காத நிலையில் உள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

[1997 ஏப்ரல் 30

(ஆ) ஆம் எனில், அதை அமைக்க விரைவாக நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) எடப்பாடி வட்டம் தனித்தாலுக்காவாக அறிவிக்கப்பட்டு 1-1-1997 முதல் செயல்பட்டு வருகிறது.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**91—**

**திருக்கழுக்குன்றம் வட்டத்தில் நான்கு பிர்க்காக்களை ஆறு பிர்க்காக்களாகப் பிரித்தல்**

**வினா எண் 6009—திரு. வீ. தமிழ்மணி:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அண்ணா மாவட்டம், திருக்கழுக்குன்றம் தாலுக்காவில் உள்ள நான்கு பிர்க்காக்களை நிர்வாக வசதிக்காக ஆறு பிர்க்காக்களாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்**

அண்ணா மாவட்டம், திருக்கழுக்குன்றம் வட்டத்தில் உள்ள நான்கு பிர்க்காக்களை ஆறு பிர்க்காக்களாகப் பிரிக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**92—**

**நெல்லிக் கொல்லையில் உள்ள வீடுகளுக்கு மனைப் பட்டா வழங்குதல்**

**வினா எண் 6324—திரு. அ. வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1997 ஏப்ரல் 30]

புவனகிரி தொகுதி, புவனகிரி ஒன்றியம், நெல்லிக்கொல்லை (Nellikollai) கிராமத்தில் சர்வே எண். 126-132 ல் உள்ள வீடுகளுக்கு மனைப்பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

மேற்சொன்ன புலங்களில் வீடுகள் ஏதும் இல்லை. அனைத்தும் விவசாயம் செய்யப்படும் நிலங்கள். எனவே, வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டிய அவசியம் எழவில்லை.

**93—**

**பெரம்பூர் தொகுதியில் இறைச்சிக் கூடத்தை நவீனப்படுத்துதல்**

**வினா எண் 50—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பூர் தொகுதியில் உள்ள இறைச்சிக்கூடத்தை நவீனப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): பெரம்பூர் தொகுதியில் உள்ள இறைச்சிக் கூடத்தை நவீனப்படுத்தும் திட்டத்தை சென்னை மாநகராட்சி உடனடியாக அமல்படுத்தத் தொடங்கியுள்ளது. இத்திட்டப்பணியின் கீழ் திருத்திய கட்டுமானச் செலவுத் தொகை ரூ.810 லட்சத்திற்கு ஒப்புதல் கோரி, சென்னை மாநகராட்சி ஆணையர் செயற்குறிப்பு அனுப்பியுள்ளார். அது அரசின் பரிசீலனையில் உள்ளது.

94—

**தாம்பரம் நகராட்சியில் பாதாளச் சாக்காடைக் கால்வாய் அமைக்கும் திட்டம்**

**வினா எண் 379—திரு. மீ.அ. வைத்தியலிங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் நகராட்சியில் பாதாளச் சாக்கடைக் கால்வாய் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எந்நிலையில் உள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை

(ஆ) பதில் அளிக்கும் நிலை எழவில்லை.

95—

**குடமுருட்டி ஆற்றின் குறுக்கே புதிய நடைபாலம் அமைத்தல்**

**வினா எண் 556—திரு. துரை. சந்திரசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு வட்டம், மணத்திடல், வளப்பக்குடி ஊர்களுக்கிடையே குடமுருட்டி ஆற்றின் குறுக்கே புதிய நடைபாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தஞ்சாவூர் மாவட்டம் திருவையாறு வட்டம், மணத்திடல், வளப்பக்குடி ஊர்களுக்கு இடையே குடமுருட்டி ஆற்றின் குறுக்கே புதிய நடைபாலம் அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

96—

**திருப்பூர் நகர இரண்டாம் குடிநீர் திட்டம் 23 ஊராட்சிகளிலும் விஸ்தரித்தல்**

**வினா எண் 912—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட 23 ஊராட்சிகளிலும் கடுமையான குடிநீர்ப் பஞ்சம் நிலவுவதால் திருப்பூர் நகர இரண்டாம் குடிநீர் திட்டத்தை 23 ஊராட்சிகளுக்கும் உடனடியாக அரசு விஸ்தரிக்க உத்திரவிடுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருப்பூர் குடிநீர் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் 412 வழியோரக் கிராமங்களுக்கு குடிநீர் வழங்கும் திட்டம் ரூ. 31.50 கோடிகளுக்கு 3-11-1996 நாளிட்ட அரசு ஆணை எண். 220-ல் அங்கீகரிக்கப்பட்டு இத்திட்டப் பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டத்தில் திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 14 ஊராட்சிகளும் மற்றும் நல்லூர் ஊரகப் பேரூராட்சியும் சேர்க்கப்பட்டுள்ளது.

**97—**

### மாம்பலம் கால்வாயில் கரைகளை உயர்த்திக் கட்டுதல்

**வினா எண் 974—திரு. மு. க. ஸ்டாலின்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆயிரம் விளக்கு தொகுதி, மாம்பலம் கால்வாயில் செடிகள், கழிவுகள் ஆகியவற்றை அகற்றி சுத்தம் செய்து, இருபுறமும் கரைகளை உயர்த்திக் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஆயிரம் விளக்குத் தொகுதி, மாம்பலம் கால்வாயில், செடிகள், கழிவுகள் ஆகியவற்றை சர் தியாகராய சாலை சந்திப்பு முதல், டாக்டர் விஜயராகவா சாலை சந்திப்பு வரை சுமார் 700 மீட்டர் நீளத்தை 1-7-1996 முதல் 13-7-1996 வரை அகற்றி, இப்பணி செய்து முடிக்கப்பட்டுள்ளது. 15-7-1996 முதல் டாக்டர் விஜயராகவா சாலை முதல் வடக்கு பக்கமாக நக்கீரன் நகர் அருகில், செடிகள் மற்றும் கழிவுகள் அகற்றும் பணி தொடங்கபட்டு, முடிக்கப்பட உள்ளது. இந்த கால்வாயில் சுமார் 1.5 மீட்டர் முதல் 2 மீட்டர் ஆழம் வரையில் புதைந்து கிடக்கும் கழிவுகளை அகற்றி, சுத்தப்படுத்தி மழைநீர் செல்ல வழிவகுத்திருப்பதால், இரு கரைகளையும் உயர்த்த வேண்டிய அவசியம் இருக்காது.

**98—**

### மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

**வினா எண் 1111—திரு. அ. வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஒன்றியம், கொடிப்பள்ளம் கிராமத்தில் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைத்துத் தரப்படுமா?



(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஒன்றியம் கொடிப்பள்ளம் கிராமம் என்பது ஓர் முஸ்லீம் காலனியாகும். இதுவே பின்னத்தூர் மேற்குப்பகுதி என்றும் அழைக்கப்பட்டு வருகின்றது. இந்நிலையில் பின்னத்தூர் காலனி நடப்பு நிதியாண்டில் (1996-97) மின் இறைப்பான் திட்டமாக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. அதற்கு நீர்ஆதாரம் அமைக்க இடம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. ஆழ்குழாய் கிணறு அமைக்கப்பட்டவுடன் கொடிப்பள்ளம் கிராமத்தையும் சேர்த்துத் திட்டம் வடிவமைக்கப்பட்டு இவ்வாண்டு இறுதிக்குள் குடிநீர் வசதி அளிக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

**99—**

### தென்காசி தாலுக்காவிலுள்ள கிராமங்களுக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைத்தல்

**வினா எண் 1414—திரு. கு. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், தென்காசி தாலுகா, ஆவுடையனூர் கிராமத்தை சார்ந்த அழகம் பெருமாளூர், பொடியலூர், வடக்கு கொண்டலூர் ஆகிய கிராமங்களுக்கு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

[1997 ஏப்ரல் 30

**100—**

**பழுதடைந்துள்ள ஆற்றுப்பாலத்தைச் செப்பனிடல்**

**வினா எண் 1455—திரு. கு. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், செங்கோட்டை வட்டம், கட்டளை குடியிருப்புக்கும், பூலாங்குடியிருப்புக்கும் இடையில் பழுதடைந்துள்ள ஆற்றுப் பாலத்தைச் செப்பனிட்டு புதியதாக அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

போதிய நிதி வசதி இல்லாததால், மேற்படி பாலத்தைத் தற்போது புதுப்பிக்க இயலாது.

**101—**

**மெரினா கடற்கரையில் சிறு கடைகளை அகற்ற நடவடிக்கை**

**வினா எண் 1518—டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை மெரினா கடற்கரையில் வைத்திருக்கும் அனைத்து சிறு கடைகளையும் அகற்ற அரசு தீவிர நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சென்னை மெரினா கடற்கரையை அழகுபடுத்தும்பொருட்டு ஏற்படுத்தப்பட்ட உயர்மட்டக் குழுவின் மேற்பார்வையில் கடந்த 4-1-1997 அன்று சென்னை மெரினா கடற்கரையில் ஆக்கிரமிப்பு செய்திருந்த கடைகளும், குடிசைகளும் அகற்றப்பட்டு விட்டன.



1997 ஏப்ரல் 30 ]

**102—**

**சென்னையில் கழிவுநீர்க் குழாய்களை மாற்றி அமைக்கும் திட்டம்**

**வினா எண் 1521—டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை மாநகரில் உள்ள மக்கள் தொகையின் அடிப்படையில் கழிவு நீர்க் குழாய்களை மாற்றி அமைக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சென்னை மாநகரில், கி.பி. 2011-ல் எதிர்பார்க்கப்படும் மக்கட்தொகையினைக் கருத்தில் கொண்டு, தற்போதுள்ள கழிவுநீர் அமைப்புகளை மாற்றி அமைக்கவும், தேவைக்கேற்றவாறு பெரிய குழாய்கள் அமைக்கவும் மற்றும் கழிவு நீர் வசதி இல்லாத பகுதிகளுக்கு அமைக்கவிருக்கும் புதிய கழிவு நீர் அமைப்புகளையும் அதற்கேற்றவாறு வடிவமைத்து நிர்ணயிக்க நிபுணர்குழு மூலம் சென்னை குடிநீர் வடிகால் வாரியம் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

**103—**

**நாம்ஸ் கமிட்டி பரிந்துரைப்படி தற்காலிக தினக்கூலி பணியாளர்களை நிரந்தரம் செய்தல்**

**வினா எண்—1620-திரு. மீ.அ. வைத்தியலிங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேரூராட்சிகளில் நாம்ஸ் கமிட்டி பரிந்துரையின் பேரில் நியமிக்கப்பட்டு, பணியாற்றிவரும் அனைத்து தற்காலிக தினக்கூலி பணியாளர்களையும் நிரந்தரம் செய்யும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பேரூராட்சிகளில் தினக்கூலி அடிப்படையில் பணியாளர்களை நியமனம் செய்ய, நாம்ஸ் கமிட்டியால் பரிந்துரை செய்யப்படவில்லை. பேரூராட்சிகளில் தறபோது பணிபுரியும் தினக்கூலி பணியாளர்களை நிரந்தரம் செய்யும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

**104—**

**பழுதடைந்துள்ள ஆரம்பப் பள்ளிக் கட்டிடங்களைச் செப்பனிடல்**

**வினா எண் 1687—திரு. கே. சுப்பராயன் :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் நகராட்சி, மண்ணரை, செல்லப்பபுரம், கவுண்டன்புதூர் ஆரம்பப் பள்ளிக் கட்டிடங்கள் பழுதடைந்துள்ளதைச் செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருப்பூர் நகராட்சி, மண்ணரையில் நகராட்சிக்குச் சொந்தமான ஆரம்பப் பள்ளிக் கட்டிடம் பழுது இல்லாமல் நல்ல முறையில் உள்ளது. ஆனால் அங்கு இட நெருக்கடி உள்ளது. எனவே, அங்கு தனியார் நிதி உதவி மூலம் கட்டிடம் கட்டுவது குறித்த கருத்துரு நகராட்சியில் பரிசீலனையில் உள்ளது. செல்லப்பபுரம் ஆரம்பப் பள்ளிக் கட்டிடம் சமூக விரோதிகளால் அடிக்கடி சேதப்படுத்தப்பட்டு வருவதால் நகராட்சி பொது நிதியினின்று பழுது பார்க்க ஆவன செய்யப்பட்டு வருகின்றது. கவுண்டன்புதூர் பள்ளி வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வருகின்றது. 'யூனிசெப்' நிதி உதவி பெற்று புதிய கட்டிடம் கட்ட முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேலும் 1996-97-ம் ஆண்டில் ஆரம்பப் பள்ளிக் கட்டிடத்தைப் பராமரிக்க ரூ.9.00 லட்சம் நகராட்சி பொது நிதியிலிருந்து ஒதுக்கப்பட்டுள்ளது. இப்பராமரிப்புப் பணிகள், நடப்பு நிதி ஆண்டிற்குள் செய்து முடிக்கப் பெறும்.





**105—**

**சென்னையில் குடிநீரின் அளவை உயர்த்துதல்**

**வினா எண் 1848—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னைக்கு தற்போது தினசரி வழங்கப்படும் 55 மில்லியன் கேலன் குடிநீரை உயர்த்தித் தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): 1996-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 13 முதல் 15-ம் தேதி வரையில் பெய்த மழையின் காரணமாகவும் மற்றும் அக்டோபர் - டிசம்பர் '96 மாதங்களில் பெய்த மழையின் காரணமாகவும், சென்னை குடிநீர் நீர் நிலை ஆதாரங்களான பூண்டி, சோழவரம் மற்றும் புழலேரியில் நீரின் மொத்தக் கொள்ளளவு 1900 மி.க. அடியிலிருந்து 7053 மி.க. அடியாக உயர்ந்ததை அடுத்து, 28-6-1996-ஆம் முதல் 55 மி.காலன் குடிநீர் வழங்கப்பட்டதை, அக்டோபர் 1996 மாதம் முதல் 97 மி. காலன் குடிநீராக உயர்த்தி சென்னை நகருக்கு வழங்கப்பட்டு வருகிறது.

**106—**

**மிகப்பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இலவச தொகுப்பு வீடுகள்**

**வினா எண் 2088—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் [redacted]க்கு விடையளிப்பாரா—

(அ) மிகப்பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இலவச தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா ?

[1997 ஏப்ரல் 30

(ஆ) 1991-95 ஆம் ஆண்டுகளில் மிகப் பிற்படுத்தப்பட்டோருக்கு எத்தனை வீடுகள் இத்திட்டத்தின் கீழ் கட்டித்தரப்பட்டுள்ளன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

(அ) ஆம்.

(ஆ) 1994-95 ஆம் ஆண்டிலிருந்துதான் மிகப்பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இலவச தொகுப்பு வீடுகள் கட்டி வழங்கப்பட்டு வருகின்றன.

1994-95 ... 145 வீடுகள்

1995-96 ... 1644 வீடுகள்

**107—**

**பூவாலையில் சமுதாய நலக்கூடம் அமைத்தல்**

**வினா எண் 2225—திரு. அ. வ. அப்துல் நாசர் :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தென்னாற்காடு-வள்ளலார் மாவட்டம், புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஒன்றியம், பூவாலையில் சமுதாய நலக்கூடம் அமைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா ?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தென்னாற்காடு-வள்ளலார் மாவட்டம், பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், பூவாலையில் சமுதாய நலக்கூடம் கட்ட செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.



1997 ஏப்ரல் 30 ]

**108—**

**மலிவு விலையில் கழிப்பிடம் கட்டும் திட்டம்**

**வினா எண் 3622—டாக்டர் இ. எஸ். எஸ். இராமன் :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எம்.ஜி.ஆர். மாவட்டம், பள்ளிப்பட்டு வட்டம், பொதட்டூர் பேட்டையில் மலிவு விலையில் கழிப்பிடம் கட்டும் (Low Cost Sanitary Programme) திட்டத்தைச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா ?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

1994-95-ம் ஆண்டு உலக வங்கி நிதியுதவியுடன் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பேரூராட்சிகளில் குறைந்த செலவிலான கழிப்பிடம் கட்டும் திட்டப் பணி செயல்படுத்தப்பட்டது. தற்பொழுது உலக வங்கி நிதியுதவி கிடைக்க வாய்ப்பு இல்லை. எனவே, ஹட்கோ நிதி உதவியின் மூலம் குறைந்த செலவிலான கழிப்பிடம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**109—**

**சேத்தியாதோப்பில் பேருந்து நிலையம் கட்டுதல்**

**வினா எண் 4143—திரு. அ. வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, சேத்தியாதோப்பில் பேருந்து நிலையம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

**மாண்புமிகு திரு. கோ .சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சேத்தியாதோப்பில் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் பேருந்து நிலையம் அமைக்க மதிப்பீடுகள் மற்றும் மாதிரி வரைபடங்கள் தயார் செய்து அனுப்பி வைக்க, செங்கற்பட்டு நகர் ஊரமைப்பு துணை இயக்குநரைக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

**110—**

**காவிரி கழிமுகப் பகுதிகளில் சமுதாயக் குழாய்க் கிணறு அமைத்தல்**

**வினா எண் 4174—திரு. குத்தாலம் பி. கல்யாணம் :**—மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், காவிரி கழிமுகப் பகுதிகளில் ஒவ்வொரு கிராமத்திலும் சமுதாயக் குழாய்க்கிணறு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இல்லை.

**111—**

**நெசவாளர்களுக்கு இலவச தொகுப்பு விடுகள்**

**வினா எண் 4453—திரு. அ. வ. அப்துல் நாசர் :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரியில் வசிக்கும் நெசவாளர்களுக்கு இலவச தொகுப்பு வீடுகள் கட்ட அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.





(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**112—**

**தேன்கனிக் கோட்டையில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்**

**வினா எண் 4483—திரு. ச. இராஜரெட்டி :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தளி தொகுதி, தேன்கனிக் கோட்டையில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் பணியை உடனடியாகத் தொடங்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தளி தொகுதி, தேன்கனிக்கோட்டை குடிநீர் திட்டம் துரிதப்படுத்தப்பட்ட நகரக் குடிநீர் வழங்கும் திட்டத்தின்கீழ் (AUWSP) ரூ. 114.00 இலட்சங்களுக்கு அரசு ஆணை எண் 210, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள் 3-11-1995 மூலம் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் 7.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுவதற்காக ரூ.24.64 இலட்சங்களுக்கு மாருதி கன்ஸ்ட்ரக்ஷன், சேலம் என்ற ஒப்பந்தக்காரர், மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை-5 மூலம் தேர்வு செய்யப்பட்டுள்ளார். இப்பணி விரைவில் முடிக்கப்பட உள்ளது.

**113—**

**சென்னை புறநகர்ப் பகுதியில் பேருந்து நிலையம் அமைத்தல்**

**வினா எண் 4692—திரு. மு. க. ஸ்டாலின் :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை புறநகர்ப் பகுதியில் வசதியான பெரிய பேருந்து நிலையம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ): சென்னை புறநகர்ப் பகுதியில் பேருந்து நிலையம் அமைப்பது தொடர்பான செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை.

**114—**

**வேளச்சேரியில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் இணைப்பு**

**வினா எண் 4842—திரு. சி. ஞானசேகரன் :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, வேளச்சேரியில், தன்னிறைவு வீட்டு மனைத் திட்டப் பகுதியில் வீடு கட்டியவர்கள் பாதுகாக்கப்பட்ட குடிநீர் இணைப்பு கேட்டு விண்ணப்பித்துள்ளனரா?

(ஆ) ஆம் எனில், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் குடிநீர் இணைப்பு வழங்கப்படுகிறதா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) சென்னை, வேளச்சேரியில் தன்னிறைவு வீட்டுமனைத் திட்டப் பகுதியில் வீடு கட்டியவர்கள் பாதுகாக்கப்பட்ட குடிநீர் இணைப்பு கேட்டு விண்ணப்பிக்கவில்லை.

(ஆ) வினா எழவில்லை.

**115—**

**பேருந்து நிலையம் அமைத்தல்**

**வினா எண் 4686— திரு. கோ. மோகனதாசன் :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) தரங்கம்பாடி பேரூராட்சியில், பேருந்து நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தரங்கம்பாடி பேரூராட்சியில் பரிசீலனையில் உள்ளது.

**116—**

**குழாய்க்கிணறு அமைத்தல்**

**வினா எண் 4870—திரு. வி. கே. லட்சுமணன் :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாநகராட்சி, திருச்சி சாலையில் உள்ள எல்.ஜி.பி. (L.G.P.) அலுவலகத்திற்குப் பின்புறம் வாழும் மக்களுக்கு உடனடியாக குழாய்க் கிணறு அமைத்துத் தர அரசு முன்வருமா ?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கோயம்புத்தூர் மாநகராட்சியில் திருச்சி சாலையில், எல்.ஜி.பி. (L.G.P.) அலுவலகத்திற்குப் பின்புறம் வாழும் மக்களின் வசதிக்காக குழாய்க் கிணறு ஒன்று 5-11-1996 அன்று அமைக்கப்பட்டுள்ளது.

**117—**

**நல்லாத்துப்பாளையம் ஊரில் சமூகக்கூடம் அமைத்தல்**

**வினா எண் 4981—திரு. கே. சுப்பராயன் :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1997 ஏப்ரல் 30

கோயமுத்தூர் மாவட்டம், திருப்பூர், நெறிப்பறைச்சல் கிராமம், நல்லாத்துப்பாளையம என்ற ஊரில் சமூகக் கூடம் கட்டி முடிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கோயமுத்தூர் மாவட்டம், திருப்பூர் வட்டம், நெறிப்பறைச்சல், ஊராட்சியைச் சேர்ந்த நல்லாத்துப்பாளையத்தில் ரூ.2.50 இலட்சம் செலவில் சமூகக்கூடம் கட்ட அனுமதிக்கப்பட்டு கட்டுமானப்பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 118—

### பஞ்சாயத்து ராஜ், நகர்பாலிகா சட்டங்களைத் திருத்தி அமைத்தல்

**வினா எண். 5195—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பஞ்சாயத்து ராஜ் மற்றும் நகர்பாலிகா சட்டங்களை சமூக வளர்ச்சிக்கு உதவுகிற முறையில் திருத்தி அமைக்க வேண்டும் என்று மத்திய அரசை மாநில அரசு கோரியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) : இல்லை.

## 119—

### உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கூடுதல் நிதி அதிகாரம் வழங்குதல்

**வினா எண் 5312—கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1997 ஏப்ரல் 30]

(அ) உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கூடுதல் நிதி மற்றும் அதிகாரம் வழங்க அரசு பொருத்தமான சட்டத்திருத்தம் மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) அனைத்துப் பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளுக்கும் பொருந்தும் வகையில் ஒரு பொதுச் சட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது. இச்சட்டத்தின் மூலம் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கூடுதல் நிதி மற்றும் அதிகாரங்கள் வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

## 120—

### பேரூராட்சிகளில் ஊரகப் பேரூராட்சிகளின் விவரம்

**வினா எண் 6189—திரு. நா. பெரியசாமி :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டத்தில், உள்ளாட்சி அமைப்பிலுள்ள பேரூராட்சிகளில் ஊரகப் பேரூராட்சி என்று அறிவிக்கப்பட்டுள்ள பேரூராட்சிகள் எத்தனை?

(ஆ) இதற்கான வழிமுறைகள், வரையறை விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) 51 பேரூராட்சிகள்

(ஆ) பேரூராட்சிகளில் நகர்ப்புற பேரூராட்சிகள், ஊரகப் பேரூராட்சிகள் என்ற வகைப்பாடு உள்ளன. 5000 மக்கள் தொகையும் குறைந்தபட்சம் 75 சதவிகிதம் ஆண்கள் விவசாயம் அல்லாத பிற தொழிலில் ஈடுபட்டிருத்தல், மற்றும் 1 சதுர கி.மீ.-க்கு 400 பேர்

கொண்ட மக்கள் தொகை கொண்டவை நகர்ப்புறம் என்றும் மற்றவை ஊரகப் பகுதி என்றும் வரையறுக்கப்பட்டுள்ளது. இந்த வகையில் பெரியார் மாவட்டத்தில் மொத்தமுள்ள 61 பேரூராட்சிகளில் 10 நகர்ப்புற பேரூராட்சிகளும் 51 ஊரகப் பேரூராட்சிகளும் உள்ளன.

**121—**

**வேளாண்மை ஆராய்ச்சிப் பண்ணையில் வேளாண்மைக் கல்லூரி அமைத்தல்**

**வினா எண் 406—திரு. பே.வே.ஸ்ரீ. வெங்கடேசன் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், காவேரிப்பட்டினத்தில் உள்ள வேளாண்மை ஆராய்ச்சிப் பண்ணையில் ஒரு வேளாண்மைக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

இல்லை.

**122—**

**பார்த்தீனியம் விஷச் செடிகளை அழிக்க நடவடிக்கை**

**வினா எண் 641—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் எங்கும் பரவி வளர்ந்து காணப்படும் பார்த்தீனியம் என்கிற விஷச் செடிகளை அழிக்க மாநில அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

விவசாய நிலங்களில், தோட்டக்கலைத் துறை களப்பணியாளர்கள் மூலம் கீழ்க்கண்ட கட்டுப்பாட்டு முறைகளை விவசாயிகளுக்குத் தெரிவிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.



1. கோடை உழவு செய்தல்
2. பார்த்தீனியம் பூக்கும் முன்பாகவே பிடுங்கி எறிந்துவிடுதல்.

**123—**

**எம்.ஜி.ஆர். வீரிய ஒட்டு ரக நெல்லின் விதைகள் விற்பனை செய்தல்**

**வினா எண். 994—திரு. வீ. தமிழ்மணி :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எம்.ஜி.ஆர். என பெயரிடப்பட்டுள்ள வீரிய ஒட்டு ரக நெல்லின் விதைகளை அரசுக் கிடங்குகளில் விற்பனை செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

ஆம்.

எம்.ஜி.ஆர். வீரிய ஒட்டு ரக நெல்லின் விதைகள் வேளாண் விரிவாக்க மையங்கள் மூலமாக வேளாண் பெருமக்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது.

**124—**

**நெய்வேலி காட்டாமணியை ஒழிக்க நடவடிக்கை**

**வினா எண் 1812—திரு. ஜி. நிஜாமுதீன் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விவசாயிகளுக்குப் பெரும்பிரச்சினையாக இருந்துவரும் நெய்வேலி காட்டாமணியை அழிக்க அரசு எடுத்துவரும் நடவடிக்கைகளுக்குப் பொதுமக்கள் ஒத்துழைப்பைப் பெற ஆவன செய்யப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

ஆம்.

**125—**

### மல்லிகைப்பூ செண்ட் தொழிற்சாலை அமைத்தல்

**வினா எண் 2450—திரு. எஸ். ஆர். சிவலிங்கம் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பனைமரத்துப்பட்டி தொகுதியில். அதிக அளவில் பயிரிடப்படும் மல்லிகைப் பூவில இருந்து செண்ட் தயாரிக்க மல்லிகைப் பூ செண்ட் தொழிற்சாலை தொடங்க அரசு முன் வருமா ?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர் :**

இல்லை.

**126—**

### இயற்கை விவசாய முறையை ஊக்குவிக்கும் செயற்குறிப்பு

**வினா எண் 2492—திரு. கே. சுப்பராயன் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இயற்கை உரங்களிட்டு இயற்கை விவசாய முறையை ஊக்குவிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர் :**

(அ) ஆம்.

(ஆ) இயற்கை உரங்களிட்டு இயற்கை விவசாய முறையை ஊக்குவிக்க கீழ்க்கண்ட செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.



1. ஊட்டமேற்றிய தொழு உரம் உற்பத்தி செய்ய உர மினிகிட்டுகள் விநியோகம்.

2. புளுரோட்டஸ் காளான் கொண்டு அதிக அளவில் கம்போஸ்ட் தயாரித்தல்

3. பசுந்தாரே விதை கொள்முதல் மற்றும் விநியோகம்.

**127—**

### விவசாய மண்வளத்தை மேம்படுத்த சிறப்புத் திட்டம்

**வினா எண் 2493— திரு. கே. சுப்பராயன் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டின் விவசாய மண்வளத்தை மேம்படுத்துவதற்கு அரசு ஏதேனும் சிறப்புத் திட்டத்தை உருவாக்கியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர் :**

(அ) ஆம்.

(ஆ) வேளாண்மை தட்பவெட்ப மண்டல திட்டத்தின் கீழ் திருச்சி மாவட்டம் மணிகண்டம் வட்டாரத்தில் 1993-1994 முதல் 1996-1997 வரையில் நான்கு ஆண்டுகளுக்கு களர் மற்றும் உவர் நிலங்கள் சீர்திருத்த திட்டத்தை ரூ.268.18 இலட்சங்கள் செலவில் சிறப்பு திட்டமாக செயற்படுத்த 25-9-96 நாளிட்ட வேளாண்துறையின் அரசாணை எண் 268-ல் ஆணை வெளியிடப்பட்டு இதுவரையில் 1663 ஹெக்டேர் நிலப்பரப்பில் இப்பணி முடிவடைந்துள்ளது.

**128—**

### உயிர் உரம் பற்றிய புகார் விவரம்

**வினா எண் 2495—திரு. கே. சுப்பராயன் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) விவசாயிகளுக்கு வழங்கப்படும் உயிர் உரம் பற்றி அரசுக்கு ஏதேனும் புகார் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர் :**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**129—**

### வேளாண்மை கல்லூரி துவங்குதல்

**வினா எண் 2837—திரு. ந. கருப்பண்ண உடையார் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் தொகுதியில் வேளாண்மைக் கல்லூரி துவங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர் :**

(அ) இல்லை.

(ஆ) எழாது.

**130—**

### தரமற்ற விதைகளை வழங்கப்படுவது குறித்து

**வினா எண் 2900—திரு. கே. சுப்பராயன் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) தரமற்ற முளைப்புத்திறனற்ற விதைகளை விவசாயக் கிடங்குகளிலிருந்து வழங்கப்படுவதாக அரசுக்குப் புகார் ஏதேனும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர் :**

(அ) இல்லை.

(ஆ) வினா எழாது.

**131—**

### ஒகேனக்கல்லில் பழப்பண்ணை அமைக்கும் திட்டம்

**வினா எண் 3571—திரு. ஜி. கே. மணி :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம் ஒகேனக்கல்லில் பழப்பண்ணை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர் :**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**132—**

## கரும்பு பயிர் செய்யும் முறையில் திசு வளர்ப்பு குறைந்ததன் விவரம்

**வினா எண் 3773—திரு. வி. கே. லட்சுமணன் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கரும்பு ஆதாரமுள்ள பயிர் செய்யும் முறைக்கான நிலையான வளர்ச்சியில் (Sustainable Development of Sugarcane Based Cropping System) 1995-96ஆம் ஆண்டிற்கான சாதனையில் திசு வளர்ப்பு (எண்) இலக்கைக் காட்டிலும் சாதனையில் மூன்றில் ஒரு பங்காகக் குறைத்துள்ளதன் காரணம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர் :**

1995-96 ஆம் ஆண்டில் சுபாக்ஸ் திட்டத்தின் கீழ் மூன்று திசு வளர்ச்சி மையங்கள் அமைக்க ஆணையிடப்பட்டது. இதில் ஒன்று சர்க்கரைத் துறை இயக்குநரால் நிறைவேற்றப்பட்டது. மீதி இரண்டு மையங்கள் அமைக்க வேளாண்மை பல்கலைக் கழகத்திடம் கேட்டுக்கொள்ளப்பட்டது. இந்திய அரசு ஒதுக்கிய ஒரு மையத்துக்கு ரூ.5/- லட்சம் தொகைக்கு மாறாக ரூ. 10 லட்சம் தேவை என வேளாண்மைப் பல்கலைக் கழகம் கேட்டது. அத்தொகையை கொடுக்க இயலாத நிலையில் இரண்டு மையங்கள் அமைக்கப்படவில்லை. இதனால் எண் இலக்கு குறைந்துள்ளது.

**133—**

## மாம்பழக்கூழ் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம்

**வினா எண் 4349—திரு. எல். மூக்கையா :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியகுளத்தில் மாம்பழக்கூழ் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசு முன் வருமா?



(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) : பெரியகுளத்தில் மாம்பழக்கூழ் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் செயற்திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**134—**

## வரைவாளர் காணாமற் போனது பற்றிய விவரம்

**வினா எண் 4876—திரு. டி. மணி :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறை வேளாண்மை பொறியியல் துறையில் வரைவாளராக (டிராப்ட்ஸ் மென்) பணிபுரியும் திரு ட்டி. மோகன்குமார் கடந்த 6-1-96 அன்று முதல் காணாமல் போனது குறித்து அரசுக்கு ஏதேனும் மனு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) : கன்னியாகுமரி மாவட்டம், தக்கலை என்ற இடத்தில் உள்ள வேளாண்மை பொறியியல் அலுவலகத்தில், பாசனப்பகுதி மேன்மைத் திட்டத்தில் பணிபுரிந்த திரு டி. மோகன்குமார். உதவி வரைவாளர் 6-1-1996 முதல் காணாமல் போனது குறித்து, அன்னாரது மாமனார் மூலம் மார்த்தாண்டம் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டுள்ளது (எப்.ஐ.ஆர்.18/96 நாள் 8-1-1996), மேலும், தினமலர் பத்திரிகை வாயிலாகவும் அன்னார் காணவில்லை என தகவல் அளிக்கப்பட்டுள்ளது. இது குறித்து மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) அவர்களும் 23-1-1996 அன்று நேரிடையாக வந்து விசாரணை நடத்திச் சென்றார்கள்.

[1997 ஏப்ரல் 30

மேலும், தக்கலை பாசனப் பகுதி மேன்மை திட்டம் உதவி செயற்பொறியாளர் (வேளாண்மை பொறியியல்) அவர்களும், இது குறித்து தக்கலை காவல்துறை சார்பு ஆய்வாளருக்கு புகார் அளித்துள்ளார். காணாமற்போன அரசு ஊழியரைத் தேடும் பணி காவல் துறையினரால் தொடரப்பட்டு வருகிறது.

**135—**

## புன்செய் தானிய உற்பத்தி மேம்பாடு

**வினா எண் 5021 திரு. கே. சுப்பராயன் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் புன்செய் தானியங்களில் ஆண்டு உற்பத்தி எவ்வளவு?

(ஆ) புன்செய் தானிய உற்பத்தி மேம்பாட்டிற்கு அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர் :**

(அ) தமிழ்நாட்டில் புன்செய் தானியங்களான சோளம், கம்பு, கேழ்வரகு, மக்காச்சோளம், தினை, சாமை, வரகு மற்றும் இதர சிறுதானியங்கள் ஆண்டுதோறும் சுமார் 12 இலட்சம் மெட்ரிக் டன்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

(ஆ) புன்செய் தானிய உற்பத்தி மேம்பாட்டிற்கு மத்திய அரசு நிதி உதவியுடன் ஒருங்கிணைந்த தானிய உற்பத்தித் திட்டமானது 1994-95-ம் ஆண்டு முதல் சென்னை மற்றும் நீலகிரி மாவட்டங்கள் தவிர இதர மாவட்டங்களிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட 140 வட்டாரங்களிலும் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் சான்று பெற்ற விதைகளுக்கு மான்யம் வழங்கப்படுகிறது. வேளாண் கருவிகள் 50 சத மானியத்தில் வழங்கப்படுகின்றன. மேலும் கள அலுவலர்களால் சிறுதானிய உற்பத்திக்கான செயல் விளக்கங்களும் தொழில் நுட்பங்களும் விவசாயிகளுக்குச் செய்து காட்டப்படுகின்றன. மத்திய அரசு சார்புத்திட்டத்தின் கீழ் நடப்பு ஆண்டில் 18000 எண்கள் சிறுதானிய மினிகிட் விதைகள் சிறு/குறு மற்றும் ஆதிதிராவிட விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன. மத்திய அரசு சார்புத் திட்டத்தின் கீழ் ரூ.1.70 இலட்சம் செலவில், சிறுதானியங்கள் பற்றிய தொழில் நுட்ப செயல்விளக்கத்தளைகள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி இன விவசாயிகள் நிலங்களில் நிறுவப்படுகின்றன. நடப்பு ஆண்டில் மக்காச்சோள உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் தொழில் நுட்பக்குழு விரைவுத்திட்டமானது மத்திய அரசு நிதி உதவியுடன் ரூ.37/- இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட உள்ளது.





**136—**

## கரும்பு விலையை நிர்ணயம் செய்தல்

**வினா எண் 5197—திரு. கே. சுப்பராயன் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1996-97 ஆம் ஆண்டிற்கான கரும்பு விலையை நிர்ணயிக்குமாறு கரும்பு விவசாயிகளிடமிருந்து மாநில அரசிற்குக் கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர் :**

(அ) ஆம்.

(ஆ) விவசாயிகளின் கோரிக்கையை பரிசீலித்து அரசு 1996-97 ஆம் ஆண்டு அரைவைப் பருவத்திற்கான 8.5% சர்க்கரை கட்டுமானத் திறன்கொண்ட ஒரு டன் கரும்பிற்கு மாநில அரசு பரிந்துரை செய்யும் விலை ரூ.599/- என அரசு கடிதம் நிலை எண்: 66, நாள் 14-2-97-ல் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

[1997 ஏப்ரல் 30

137—

### பருத்தி உற்பத்தியை அதிகரிக்க தொழில் நுட்ப அமைப்பு ஏற்படுத்துதல்

**வினா எண் 5307—திரு. கே. சுப்பராயன் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பருத்தி உற்பத்தியை அதிகரிக்கும் வழிமுறைகள் பற்றி ஆராய தொழில் நுட்ப அமைப்பு ஒன்றை ஏற்படுத்த அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர் :**

இல்லை.

138—

### மதுராந்தகம் சர்க்கரை ஆலைகள் பற்றிய விவரம்

**வினா எண் 6086—திரு. வீ. தமிழ்மணி :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அண்ணா மாவட்டம், மதுராந்தகம் சர்க்கரை ஆலையில் எத்தனை கிலோ மீட்டர் தூரத்திற்கு கரும்புச்சாலைகள் போடப்பட்டுள்ளன?

(ஆ) மேற்படி சாலைகள் அவ்வப்போது பராமரிக்கப் படுகின்றனவா?

(இ) இந்த ஆண்டு பராமரிப்புக்காக எவ்வளவு தொகை செலவிடப்பட்டது?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர் :**

(அ) மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலைப் பகுதிகளில் 52.00 கி. மீட்டர் தூரத்திற்கு கரும்புச்சாலைகள் போடப்பட்டுள்ளது.

(ஆ) மேற்படி சாலைகள் அவ்வப்போது பராமரிக்கப்பட்டு வருகிறது.



1997 ஏப்ரல் 30 ]

(இ) 1996-97 ஆம் நிதியாண்டில் மேற்படி சாலைகளின் பராமரிப்பின் பொருட்டு ரூ.17.18 இலட்சம் 24-2-97 முடிய செலவிடப்பட்டுள்ளது.

139—

### ஆனைமலையாறு நல்லாறு பாசனத் திட்டம்

**வினா எண் 175—திரு. கே. சுப்பராயன் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆனைமலையாறு நல்லாறு பாசனத் திட்டத்தை நிறைவேற்றும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது திட்டம் நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர் :**

(அ) ஆம்.

(ஆ) கேரள அரசின் ஒப்புதல் பெற்றவுடன் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

140—

### மேற்கு நோக்கிப் பாயும் நதிகளின் உபரி நீரை தமிழகத்திற்கு கொண்டுவருதல்

**வினா எண் 178—திரு. கே. சுப்பராயன் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கேரள மாநிலத்தில் மேற்கு நோக்கிப் பாயும் நதிகளின் உபரி நீரை அணைகள் கட்டி தமிழகத்திற்கு கொண்டுவர கேரள அரசோடு தமிழக அரசு பேச்சுவார்த்தை நடத்துமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர் :**

பேச்சுவார்த்தை நடத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

[1997 ஏப்ரல் 30

141—

## நிலத்தடிநீர் கீழிறங்கியது குறித்த விபரம்

**வினா எண் 182—திரு. கே. சுப்பராயன் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டத்தில் நிலத்தடி நீர் கீழிறங்கி இருப்பது அரசிற்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுக்கவுள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர் :**

(அ) ஆம்.

(ஆ) கோவை மாவட்டத்தில் பல இடங்களில் கசிவு நீர்க்குட்டைகளை அமைத்து உபரி நீரை அதில் தேக்கி அப்பகுதியில் நிலநீர் மட்டம் உயர்வதற்கு வழிவகை செய்யப்படுகிறது.

142—

## ஏரிகட்டும் திட்டம்

**வினா எண் 939—திரு. ஆர். ஆர். சேகரன் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காடையாம்பட்டி ஒன்றியம், கணவாய்புதூர் ஊராட்சி, கே. மோட்டூர்-குரியாத்து கொம்பையில் ஏரி கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர் :**

ஆம்.



1997 ஏப்ரல் 30 ]

143—

## சோத்துப்பாறை அணை விரைவில் முடிக்க திட்டம்

**வினா எண் 1083—திரு. எல். மூக்கையா:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியகுளத்திற்கு மேற்கில் வராகநதியின் குறுக்கே கட்டப்பட்டு வரும் சோத்துப்பாறை அணைத் திட்டப் பணியை விரைவில் முடிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அணை கட்டிமுடிக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர் :**

(அ) ஆம்.

(ஆ) சோத்துப்பாறை அணையை மார்ச் திங்கள் 2000 ஆம் ஆண்டில் கட்டி முடிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

144—

## நிலத்தடி நீர் கீழிறங்குவதை உயர்த்த நடவடிக்கை

**வினா எண் 1087—திரு. கே. சுப்பராயன் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் நிலத்தடி நீர் கீழிறங்கி வருவதைத் தவிர்த்து அதனை உயர்த்த அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர் :**

பார்வை கிணறுகளில் நீர் மட்ட அளவைக் கண்காணித்தல், மாநிலம் முழுவதும் கசிவு நீர்குட்டைகளை அமைத்தல், சிறிய ஓடைகளின் குறுக்கே தடுப்புச் சுவர்களை கட்டுதல் போன்ற பல்வேறு நடவடிக்கைகள் மூலமாக தமிழகத்தில் நிலத்தடி நீர் மட்டம் கீழ்

இறங்கி வருவதை தவிர்த்து நிலத்தடி நீர் மட்டம் உயர பல நடவடிக்கைகளை அரசு எடுத்தும் வருகிறது.

**145—**

### ஏற்காடு மலைதண்ணீரை பாசனத்திற்கு உபயோகப்படுத்த திட்டம்

**வினா எண் 1403—திரு. ஆர்.ஆர். சேகரன் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் ஒன்றியம், சக்கரைசெட்டிப்பட்டி-தொப்பாளான் காட்டுவண்டி பகுதியில் உள்ள குள்ளம்பட்டியன் பள்ளத்தில் ஏற்காடு மலையில் இருந்து வரும் தண்ணீரைச் சேமித்து பாசனத்திற்கும் குடிதண்ணீருக்கும் பயன்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர் :**

திட்டம் ஏதும் இல்லை.

**146—**

### ஆறுகளிலிருந்து தொழிற்சாலைகளுக்கு தண்ணீர் தரும் விபரம்

**வினா எண் 2008—திரு. மு.க. ஸ்டாலின் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆறுகளிலிருந்தும், அணைகளிலிருந்தும் தொழிற்சாலைகளுக்கு தண்ணீர் தரப்படுகிறதா?

(ஆ) ஆம் என்றால், எந்தெந்த ஆறுகளிலிருந்து எந்தெந்த தொழிற்சாலைகளுக்கு எவ்வளவு தண்ணீர் தரப்படுகிறது?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர் :**

(அ) ஆம். ஆறுகளிலிருந்தும், அணைகளிலிருந்தும் தொழிற்சாலைகளுக்கு தண்ணீர் தரப்படுகிறது.





(ஆ) ஆம். எந்தெந்த ஆறுகளிலிருந்து எந்தெந்த தொழிற்சாலைகளுக்கு எவ்வளவு தண்ணீர் தரப்படுகிறது என்ற விவரம் பிற்சேர்க்கையில் இணைக்கப்பட்டுள்ளது.

### பிற்சேர்க்கை

**அரசு நீர் ஆதாரங்களிலிருந்து தொழிற்சாலைகளின் பயனுக்காக விநியோகிக்கப்படும் நீர் பற்றிய விவரங்கள்**

**மதுரை மண்டலம்-மதுரை**

| வரிசை எண் | தொழிற்சாலையின் பெயர் | நீர் எடுக்கப்படும் ஆறு/நீர்த்தேக்கங்கள் | எடுக்கப்படும் தண்ணீர் அளவு கனமீட்டர்/நாள் |
|---|---|---|---|
| 1. | 2. | 3. | 4. |
| 1. | சன்பேப்பர் மில்ஸ் லிமிடெட் அம்பாசமுத்திரம் | தாமிரபரணி ஆறு | 1818 |
| 2. | தாரங்கதாரா கெமிகல் ஒர்க்ஸ் லிமிடெட், சோகுபுரம் | தாமிரபரணி ஆறு | 13638 |
| 3. | பாபநாசம் பேப்பர் மில்ஸ் லிமிடெட் | தாமிரபரணி ஆறு | 680 |
| 4. | மதுரா கோர்ட்ஸ் லிமிடெட் | தாமிரபரணி ஆறு | 9796 |
| 5. | இந்தியா சிமண்ட்ஸ் லிமிடெட் | தாமிரபரணி ஆறு | 4900 |
| 6. | மதுரா கோர்ட்ஸ் லிமிடெட் | தாமிரபரணி ஆறு | 4065 |
| 7. | இண்டர்ஸ்ரியல் காம்ப்லக்ஸ் (த.நா.நீ.வா) தூத்துக்குடி | தாமிரபரணி ஆறு | 90920 |
| 8. | இந்தியன் ரேர் எர்த்ஸ் லிமிடெட் மணவாளக்குறிச்சி | வள்ளியார் | 4500 |
| 9. | ராஜ ஸ்ரீசுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் வரதராஜ் நகர்-வைகை அணை | வைகை ஆறு | 1400 |
| 10. | தனலஷ்மி பேப்பர் மில்ஸ் (பி) லிமிடெட் விலாம்பட்டி | வைகை ஆறு | 1095 |

[1997 ஏப்ரல் 30

| வரிசை எண் | தொழிற்சாலையின் பெயர் | நீர் எடுக்கப்படும் ஆறு/நீர்த்தேக்கங்கள் | எடுக்கப்படும் தண்ணீர் அளவு கனமீட்டர்/நாள் |
|---|---|---|---|
| (1). | (2). | (3). | (4). |
| 11. | ஸர்வால் இன்ஜினியரிங் இண்டஸ்ட்ரீஸ் (பி) லிமிடெட், விலாம்பட்டி | வைகை ஆறு | 163 |
| 12. | சக்தி சுகர்ஸ், படமத்தூர் | வைகை ஆறு | 4910 பருவகாலம் 2455 |
| 13. | சிட்கோ, பரமக்குடி | வைகை ஆறு | 50 |
| 14. | பாண்டியன் செரிகல்சர் பாம் (பி) லிமிடெட், தேனி | முல்லை-பெரியார் ஆறு | 513 |
| 15. | சிமெண்ட் தொழிற்சாலை, ஆலங்குளம் | வடகார தலை மதகு | 3440 |
| 16. | சிமெண்ட் தொழிற்சாலை, துலுக்கப்பட்டி | அர்ஜுனா ஆறு | 198 |
| 17. | தென்னிந்திய இரயில்வே, விருதுநகர் | அர்ஜுனா ஆறு | 226 |
| 18. | தென்னிந்திய இரயில்வே, அருப்புக்கோட்டை | குண்டார் ஆறு | 55 |



1997 ஏப்ரல் 30 ]

திருச்சி மண்டலம், திருச்சி

| வரிசை எண் | தொழிற்சாலையின் பெயர் | நீர் எடுக்கப்படும் ஆறு/நீர்த்தேக்கங்கள் | எடுக்கப்படும் தண்ணீர் அளவு கனமீட்டர்/நாள் |
|---|---|---|---|
| (1). | (2). | (3). | (4). |
| 1. | தென்னக இரயில்வே, திருச்சிராப்பள்ளி | காவிரி ஆறு | 6611 |
| 2. | காவிரி சுகர்ஸ் மற்றும் கெமிகல்ஸ், பேட்டைவாத்தலை | உய்யக்கொண்டான் வாய்க்கால் (காவிரி ஆறு பிரிவு) காவிரி ஆறு | 9323 |
| 3. | எச்.ஏ.பி.பி., திருச்சி | காவிரி ஆறு | 6810 |
| 4. | திருச்சி டிஸ்டெல்லரீஸ் மற்றும் கெமிக்கல்ஸ் லிமிடெட், திருச்சி | உய்யக்கொண்டான் வாய்க்கால் (காவிரி ஆறு பிரிவு) காவிரி ஆறு | 7612 |
| 5. | துப்பாக்கி தொழிற்சாலை, திருச்சி | காவிரி ஆறு | 5460 |
| 6. | பாரத மிகுமின் நிறுவனம், திருச்சி | காவிரி ஆறு | 20457 |
| 7. | டால்மியா சிமெண்ட், டால்மியாபுரம் | கொள்ளிடம் ஆறு | 3200 |
| 8. | தமிழ்நாடு காகித ஆலை, புகளூர் | காவிரி ஆறு | 109100 |
| 9. | தி/வா. சேஷாயி பேப்பர் மற்றும் போர்ட்ஸ் லிமிடெட், ஈரோடு | காவிரி ஆறு | 68190 |
| 10. | தி/வா. டெக்கான் சுகர் அப்காரி லிமிடெட், புகளூர் | புகளூர் வாய்க்கால் (காவிரி ஆறு) | 41917 57 |
| 11. | சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட், சேலம் | காவிரி ஆறு | 7365 |
| 12. | தென்னக இரயில்வே, ஈரோடு | காவிரி ஆறு | 6000 |

| வரிசை எண் (1) | தொழிற்சாலையின் பெயர் (2) | நீர் எடுக்கப்படும் ஆறு/நீர்த்தேக்கங்கள் (3) | எடுக்கப்படும் தண்ணீர் அளவு கனமீட்டர்/நாள் (4) |
|---|---|---|---|
| 13. | மேட்டூர் நூற்பாலை | காவிரி ஆறு | 727 |
| 14. | சதர்ன் அயர்ன் & ஸ்டீல் கம்பெனி லிமிடெட் | காவிரி ஆறு | 3636 |
| 15. | தி/வா. கோயம்புத்தூர் பயோனீர் மில்ஸ் லிமிடெட் | காவிரி ஆறு | 2000 |
| 16. | தி/வா. ஸ்ரீ கந்தன் எக்ஸ்போர்ட்ஸ் | காவிரி ஆறு | 150 |
| 17. | தி/வா. கிரிஸ்டல் நிட் ப்ராஸஸ் (பி) லிமிடெட் | காவிரி ஆறு | 475 |
| 18. | தி/வா. நர்மதா டெக்ஸ்டைல்ஸ் ப்ராஸஸிங் மில்ஸ் (பி) லிமிடெட் | காவிரி ஆறு | 500 |
| | தி/வா. நர்மதா டெக்ஸ்டைல்ஸ் ப்ராஸஸிங் மில்ஸ் (பி) லிமிடெட் | காவிரி ஆறு | 700 |
| 19. | தி/வா. இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட் | காவிரி ஆறு | 4546 |
| 20. | பெரியார் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தி ஒன்றியம் | காவிரி ஆறு | 1000 |
| 21. | தி/வா. சேலம் ஸ்டீல் பிளாண்ட் | காவிரி ஆறு | 9055 |
| 22. | தி/வா. ஜே.கே.கே. டெக்ஸ்டைல்ஸ் & ப்ராஸஸிங் மில்ஸ் | காவிரி ஆறு | 300 |
| 23. | தி/வா. ராஜலஷ்மி டெக்ஸ்டைல்ஸ் ப்ராஸஸர்ஸ் லிமிடெட் | காவிரி ஆறு | 1500 |
| 24. | தி/வா. எஸ்.எஸ்.எம். ப்ராஸஸிங் மில்ஸ் | காவிரி ஆறு | 685 |
| 25. | தி/வா. கெமிக்கல்ஸ் & பிளாஸ்டிக்ஸ் இந்தியா லிமிடெட் (பிளாண்ட் 1 & 3) | காவிரி ஆறு | 6850 |



| வரிசை எண் (1). | தொழிற்சாலையின் பெயர் (2). | நீர் எடுக்கப்படும் ஆறு/நீர்த்தேக்கங்கள் (3). | எடுக்கப்படும் தண்ணீர் அளவு கனமீட்டர்/நாள் (4). |
|---|---|---|---|
| 26. | தி/வா. கெமிக்கல்ஸ் & பிளாஸ்டிக்ஸ் இந்தியா லிமிடெட் (பிளாண்ட் 2) | காவிரி ஆறு | 10910 |
| 27. | தி/வா. மெட்ராஸ் அலுமினியம் கம்பெனி லிமிடெட் | காவிரி ஆறு | 36704 |
| 28. | தி/வா. மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ் லிமிடெட் | காவிரி ஆறு | 1745 |
| | **சென்னை மண்டலம், சென்னை.** | | |
| 1. | சதர்ன் இரயில்வே, திருவள்ளூர் | கூவம் ஆறு | 288 |
| 2. | சென்னை சுத்திகரிப்பு ஆலை, மணலி | வடக்கு பக்கிங்காம் வாய்க்கால் | 36000 |
| 3. | பின்னி லிமிடெட், சென்னை | ஓட்டேரி நல்லா | 548 |
| 4. | ஓரியன் இண்டஸ்ட்ரீஸ் & கெமிக்கல்ஸ் லிமிடெட், வேதநாராயணபுரம், செங்கல்பட்டு | ஓமலூர் வாய்க்கால் (பாலாறு) | 455 |
| 5. | கிருத்துவ மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவ மனை, வேலூர் | பாலாறு | 2273 |
| 6. | சிப்காட், இராணிப்பேட்டை | பாலாறு | 1600 |
| 7. | ஈ.ஐ.டி.பாரி அன் கோ, இராணிப், பேட்டை | பாலாறு | 1600 |
| 8. | வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை, அம்முண்டி | பாலாறு | 3816 |
| 9. | ஈஸ்டர்ன் குரோம் டேன் ஏரி, ஆம்பூர் | பாலாறு | 22 |

[1997 ஏப்ரல் 30

| வரிசை எண் | தொழிற்சாலையின் பெயர் | நீர் எடுக்கப்படும் ஆறு/நீர்த்தேக்கங்கள் | எடுக்கப்படும் தண்ணீர் அளவு கனமீட்டர்/நாள் |
|---|---|---|---|
| (1). | (2). | (3). | (4). |
| 10. | ருமனா லெதர்ஸ் கம்பெனி, ஆம்பூர் | பாலாறு | 8.50 |
| 11. | தமிழ்நாடு ஸ்டீல்ஸ் லிமிடெட், அரக்கோணம் | பாலாறு | 6819 |
| 12. | தர்மபுரி காகித ஆலை, கேளவல்லி கிராமம், பருகூர் வட்டம், தர்மபுரி மாவட்டம் | தெற்கு பெண்ணையாறு | 2951 |
| 13. | கெமிக்கல்ஸ் மற்றும் பிளாஸ்டிக் இந்தியா லிமிடெட், மாரிகம்பள்ளி கிராமம் தர்மபுரி மாவட்டம் | தெற்கு பெண்ணையாறு | 2500 |
| 14. | சிப்காட் லிமிடெட், ஓசூர் தர்மபுரி மாவட்டம் | தெற்கு பெண்ணையாறு | 9920 |
| 15. | சிப்காட் நிறுவனங்கள் வளாகம் கும்முடிப்பூண்டி | ஆரணியார் (வடக்கு) | 4546 |
| 16. | சோழன் பேப்பர் மற்றும் போர்டு ஆலை-மதுராந்தகம் | பாலாறு | 500 |
| 17. | செய்யார் கூட்டுறவு சர்க்கரை ஆலை, செய்யார் | செய்யார் | 903 |
| 18. | செங்கல்வராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலை, பெரியசெவலை | மலட்டாறு | 1107 |
| 19. | பொம்பலூர் சர்க்கரை ஆலை, பெரம்பலூர் வட்டம் | வெள்ளாறு | 3200 |
| 20. | கேரிசன் என்ஜினியர், ஆவடி | கூவம் ஆற்றுபடுகை | 133 |
| 21. | கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை-மூங்கில்துறைபட்டு | பொன்னையாறு | 682 |



1997 ஏப்ரல் 30 ]

| வரிசை எண் | தொழிற்சாலையின் பெயர் | நீர் எடுக்கப்படும் ஆறு/நீர்த்தேக்கங்கள் | எடுக்கப்படும் தண்ணீர் அளவு கனமீட்டர்/நாள் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | பொள்ளாச்சி மண்டலம், பொள்ளாச்சி. | | |
| 1. | யுனைடெட் பிக்ச்சர்ஸ் நிறுவனம் | பவானி ஆறு | 2446.57 |
| 2. | என்.சி.ஆரோமெட்டிக் லிமிடெட் | பவானி ஆறு | 83.30 |
| 3. | தி/வா. இந்தோ ஸ்விஸ்சிந்தெடிக் ஜெம் தயாரிப்பு நிறுவனம் | பவானி ஆறு | 1554.00 |
| 4. | தி/வா. ஸ்ரீசுதர்சன் பேப்பர் மில்ஸ் (பி) லிமிடெட் | பவானி ஆறு | 1636.20 |
| 5. | சவுத் இந்தியா விஸ்கோஸ் நிறுவனம் | பவானி ஆறு | 18184.00 ரயான் ப்ளான்ட் 40860.00 பல்ப் ப்ளான்ட் |
| 6. | தமிழ்நாடு கார்டு போர்ட்ஸ் மற்றும் பேப்பர் மில்ஸ் | பவானி ஆறு | 4545.00 |
| 7. | பண்ணாரியம்மன் சுகர்ஸ் லிமிடெட் கிரேனைட் டிவிஷன் | பவானி ஆறு | 2158.87 |
| 8. | பண்ணாரியம்மன் சுகர்ஸ் லிமிடெட் | பவானி ஆறு | 4473.00 |
| 9. | ஸ்ரீ பவானி டெக்ஸ்டைல்ஸ் ப்ராசசிங் (பி) லிமிடெட் | பவானி ஆறு | 50.00 375.00 |
| 10. | சக்தி சர்க்கரை ஆலை | பவானி ஆறு | 10908.00 |
| 11. | தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் பேப்பர் லிமிடெட் | பவானி ஆறு | 590.98 |

[1997 ஏப்ரல் 30

| வரிசை எண் | தொழிற்சாலையின் பெயர் | நீர் எடுக்கப்படும் ஆறு/நீர்த்தேக்கங்கள் | எடுக்கப்படும் தண்ணீர் அளவு கனமீட்டர்/ நாள் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 12. | கோயமுத்தூர் ஆல்கஹால்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் லிமிடெட் | பவானி ஆறு | 14181.24 |
| 13. | தமிழ்நாடு கூட்டுறவு டெக்ஸ்டைல்ஸ் புராசசிங் லிமிடெட் | பவானி ஆறு | 566.00 |
| 14. | ஸ்ரீ வைஷ்ணா தேவி மில்ஸ் (பி) லிமிடெட் | பவானி ஆறு | 600.00 |
| 15. | மைக்ரோடெக்ஸ் இந்தியா லிமிடெட் | பவானி ஆறு | 500.00 |
| 16. | சிறுவாணி டெக்ஸ்டைல்ஸ் I (பி) லிமிடெட் | பவானி ஆறு | 113.65 |
| 17. | டேலண்ட் பேப்பர் மற்றும் போர்ட்ஸ் (பி) லிமிடெட் | பவானி ஆறு | 4000.00 |
| 18. | நெஸ்லே இந்தியா லிமிடெட் | சோல்டி ஆறு | 500.00 |
| 19. | சன் நிறுவனம் லிமிடெட் | பவானி ஆறு | 2000.00 |
| 20. | அமராவதி-தி/வா. கமலா, சர்க்கரை ஆலை, அமராவதி நகர் | அமராவதி ஆறு | 2416.00 |
| 21. | தி/வா. அமராவதி கூட்டுறவு-சர்க்கரை ஆலை, கிருஷ்ணாபுரம் | அமராவதி ஆறு | 3247.00 |
| 22. | அமராவதி ஸ்ரீ வெங்கடேசா காகித ஆலை, சுவாமிநாதபுரம், மடத்துக்குளம் | அமராவதி ஆறு | 6526.00 |
| 23. | ஸ்ரீவெங்கடேசா பேப்பர் போர்ட்ஸ், சுவாமிநாதபுரம், மடத்துக்குளம் | அமராவதி ஆறு | 2022.00 |
| 24. | தி/வா. வி.ஜி.பேப்பர் அண்டு போர்டு (பி) லிமிடெட், புஷ்பத்தூர், மடத்துக்குளம் | அமராவதி ஆறு | 1091.00 |



1997 ஏப்ரல் 30 ]

| வரிசை எண் | தொழிற்சாலையின் பெயர் | நீர் எடுக்கப்படும் ஆறு/நீர்த்தேக்கங்கள் | எடுக்கப்படும் தண்ணீர் அளவு கனமீட்டர்/ நாள் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 25. | தி/வா. க்ளுவெல் இந்தியா, ஐஸ்வர்யா நகர், உடுமலை | அமராவதி ஆறு | 250.00 |
| 26. | வெங்கடேசா மில்ஸ் லிமிடெட் ப்ளீச்சிங் அண்ட் டையிங், மடத்துக்குளம் | அமராவதி ஆறு | 682.00 |
| 27. | தி/வா. ராஜலட்சுமி காகித ஆலை, புஷ்பத்தூர், பழனி | அமராவதி ஆறு | 4350.00 |
| 28. | தி/வா. விஷ்ணு வர்த்தன் பேப்பர் மில்ஸ், மடத்துக்குளம் | அமராவதி ஆறு | 1631.00 |
| 29. | தி/வா.பி.வி. பேப்பர் மில்ஸ், புஷ்பத்தூர், மடத்துக்குளம் | அமராவதி ஆறு | 1091.00 |
| 30. | தி/வா. ஜி.வி.ஜி.மில்ஸ் (பி) லிமிடெட், புஷ்பத்தூர் | அமராவதி ஆறு | 1087.00 |
| 31. | தி/வா. சூர்யநாராயணா போர்ட்ஸ் பழனி | அமராவதி ஆறு | 1091.00 |
| 32. | தி/வா. பெரியார் மாவட்ட கூட்டுறவு பால் பண்ணை, ஈரோடு | அமராவதி ஆறு | 100.00 |
| 33. | தொழிற்பேட்டை, கரூர் | அமராவதி ஆறு | 453.00 |
| 34. | ஆளியாறு தி/வா. சக்தி சோயா, பொள்ளாச்சி | ஆளியாறு | 1500.00 |
| 35. | தி/வா. கார்த்திக் பேப்பர் மில்ஸ், உடுமலை (ஆழியார் நகர்) | ஆளியாறு | 1500.00 |
| 36. | தி/வா. ரம்யா பேப்பர் அண்ட் போர்ட்ஸ் லிமிடெட், திம்மாங்குத்து, பொள்ளாச்சி வட்டம் | ஆளியாறு | 100.00 |

[1997 ஏப்ரல் 30

**147—**

**நல்லாறு-நீராறு திட்டம் நிறைவேற்றுதல்**

**வினா எண் 2594-திரு. வி. பி. சிங்காரவேலு:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா.—

பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டத்தின் கீழ் நல்லாறு-நீராறு திட்டம் நிறைவேற்றப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர் :**

நல்லாறு-நீராறு திட்டம் நிறைவேற்ற முன்னோடி அறிக்கை மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. பரம்பிக்குளம் ஆழியாறு திட்டத்தின் கீழ் நீராறு, நல்லாறு திட்டம் தமிழ்நாடு கேரள அரசுடன் பேச்சு வார்த்தை நடத்தி வருகிறது. இதுநாள் வரை கேரள அரசு ஒப்புதல் அளிக்காத காரணத்தினால் தற்சமயம் நல்லாறு-நீராறு திட்டத்தைச் செயல்படுத்துவதற்கில்லை.

**148—**

**வாய்க்காலின் இருகரைகளையும் உயர்த்தி சீர் செய்தல்**

**வினா எண் 3317- திரு. ஆர். ஆர். சேகரன்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா.—

ஓமலூர் பூலா ஏரியிலிருந்து புளியம்பட்டி வழியாகச் செல்லும் வாய்க்காலில் இரு கரைகளையும் உயர்த்தி பாசனத்திற்குப் பயன்படுமாறு சீர்செய்ய அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர் :**

இல்லை.

**149—**



1997 ஏப்ரல் 30]

**கிருஷ்ணா நதித்திட்டம்**

**வினா எண் 5056-திரு. கே. சுப்பராயன்;** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா.—

சென்னைக்கு குடிநீர் வழங்கும் கிருஷ்ணா நதித் திட்டத்தின் முழுப் பணிகளும் எப்போது முடிவுறும்?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர் :**

கிருஷ்ணா குடிநீர் வழங்கும் திட்டத்தின் தமிழ்நாடு பகுதியில் அமைந்துள்ள பணிகள் தமிழ்நாடு அரசாலும், ஆந்திர மாநிலப்பகுதியில் அமைந்துள்ள பணிகள் ஆந்திர அரசாலும் செயலாக்கப்படுகின்றன. இதில் தமிழ்நாட்டுப் பகுதியில் உள்ள முக்கியப் பணிகள் யாவும் முடிக்கப்பெற்று, 29-9-96 அன்று இருமாநில முதலமைச்சர்கள் முன்னிலையில் கிருஷ்ணா நதிநீர் பெறப்பட்டது. ஆந்திரப் பிரதேசப் பகுதியில் அமைந்துள்ள பணிகள் முடிக்கப்பெற்ற ஒரு சில இடங்களில் பெரும் மழையினால் ஏற்பட்ட கரைகள் உடைப்பையும் மற்றும் நீர்க்கசிவு ஏற்படும் இடங்களில் அதனைச் சரி செய்வதற்கு வேண்டிய வேலைகளை ஆந்திர அரசு அரசாணை எண்.169, பாசனம், நாள் 25-11-96-ன்படி ரூ.436.90 இலட்சம் ரூபாயில் இப்பணிகளை முடிக்க ஒப்புதல் அளித்துள்ளது. இப்பணிகளை 30-6-97க்குள் முடிப்பதாக ஆந்திரப்பிரதேச தெலுங்கு கங்கா திட்டப் பொறியாளர்கள் திட்டமிட்டுள்ளனர்.

**150—**

**ரேஷன் கடைகளில் நீண்ட நேரம் நிற்பதைத் தவிர்க்க நடவடிக்கை**

**வினா எண் 561-திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு உணவு,பொதுவிநியோகம் மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ரேஷன் கடைகளில் பொருள்கள் வாங்க வரிசையில் நீண்ட நேரம் நிற்க வேண்டியிருப்பதைத் தவிர்க்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கே. என். நேரு, உணவு, பொதுவிநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

ரேஷன் கடைகளில் பொருள்கள் வாங்க வரிசையில் நீண்ட நேரம் நிற்பதைத் தவிர்க்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

**151—**

**அரிசி விலை உயர்வைக் கட்டுப்படுத்த நடவடிக்கை**

**வினா எண் 988—திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு உணவு,பொதுவிநியோகம் மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரிசி விலை உயர்வைக் கட்டுப்படுத்த அரிசியை வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்வதைத் தடை செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**152—**

**நியாயவிலைக் கடை அமைத்தல்**

**வினா எண் 1396-திரு. கு. ரவி அருணன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா.-

(அ) செங்கோட்டை வட்டம் புளியரை ஊராட்சி கேசவபுரத்தில் நியாயவிலைக் கடை அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?





விடை—

**மாண்புமிகு திரு. கே. என். நேரு, உணவு, பொதுவிநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) குறைந்த அளவு குடும்ப அட்டைகளைக் கொண்ட புளியரை ஊராட்சி கேசவபுரம் நியாயவிலைக் கடை தற்பொழுது 0.4 கிலோ மீட்டர் தூரமுள்ள புதூரில் அரசுக் கட்டடத்தில் இயங்குவதால் கேசவபுரத்தில் ஓர் நியாயவிலைக் கடை அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

**153—**

**அரிசி கடத்தப்படுவதைத் தடுக்க நடவடிக்கை**

**வினா எண் 2408-திரு. எல். மூக்கையா:** மாண்புமிகு உணவு,பொதுவிநியோகம் மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நியாயவிலைக் கடைகளில் அரிசியை விலைக்கு வாங்கி லாரிகளில் தொடர்ந்து கேரளாவுக்கு கடத்திக் கொண்டிருக்கும் வியாபாரிகள்மீது அரசு எடுக்கும் நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கே. என். நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

நியாயவிலைக் கடைகளில் அரிசியை விலைக்கு வாங்கி கேரளா மற்றும் அண்டை மாநிலங்களுக்கு கடத்திச் செல்லும் வியாபாரிகள்மீது செயலாக்கப்பிரிவினரின் கண்காணிப்பை தீவிரப்படுத்தி, குற்றம் இழைப்பவர்கள்மீது இன்றியமையாப் பண்டங்கள் சட்டத்தின்கீழ் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**154—**

**தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத் தொழிலாளர்களின் புதிய சம்பளக் கோரிக்கை பற்றிய விபரம்**

**வினா எண் 3542—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு உணவு, பொதுவிநியோகம் மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1997 ஏப்ரல் 30

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத் தொழிலாளர்களின் புதிய சம்பளக் கோரிக்கை குறித்த அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

**மாண்புமிகு திரு. கே. என். நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

19-11-96 அன்று தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாகத்திற்கும் பணியாளர்களுக்கும் இடையே நடந்த பேச்சு வார்த்தையின் அடிப்படையில் நேரடிக் கொள்முதல் நிலைய பணியாளர்களான பட்டியல் எழுத்தர், உதவியாளர் (Holper) காவலர் ஆகியோருக்கும் சுமை தூக்குவோர்க்கும் ஊதியத் திருத்தம் செய்து அரசு ஆணைகள் வெளியிட்டுள்ளது.

**155—**

**கூட்டுறவு வங்கி ஊழியர்களின் பணி நிரந்தரம்.**

**வினா எண் 4190-திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொடக்கக் கூட்டுறவு வங்கிகளின் 1980-ஆம் ஆண்டுக்குப் பிறகு பணியமர்த்தப்பட்ட ஊழியர்களின் பணி நிரந்தரம் செய்வது குறித்த கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கே. என். நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 8-7-80-க்குப் பிறகு, வேலைவாய்ப்பு அலுவலகம் மூலமாக அன்றியும் அல்லது உரிய கல்வி மற்றும் வயது தகுதி அன்றியும் பல்வேறு கூட்டுறவுத்துறை நிறுவனங்களில் 10,000-க்கும் அதிகமானவர்கள் தற்காலிகமாக பணியமர்த்தம் செய்யப்பட்டுள்ளனர். 1981-ஆம் ஆண்டு



1997 ஏப்ரல் 30 ]

தமிழ்நாடு தொழில் நிறுவன சட்டத்தின்படி 480 நாட்களுக்கு மேல் பணிபுரிந்தவர்களை நிரந்தர பணியாளர்களாக்க வேண்டும். அதன்படி, 8-7-80-க்குப் பிறகு தற்காலிக பணியமர்த்தம் செய்யப்பட்டவர்களுக்கு, விதிமுறைகளைத் தளர்த்தம் செய்து, அவர்களது பணியை முறைப்படுத்தும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் செயற்குறிப்பின் மீது அரசு பரிசீலித்து விரைவில் தக்க ஆணை வெளியிடும்.

**156—**

**சிந்தாமணி சூப்பர் மார்க்கெட் நிதி நெருக்கடி தடுக்க நடவடிக்கை.**

**வினா எண் 5513-திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா.-

(அ) கோவை சிந்தாமணி சூப்பர் மார்க்கெட்டில் ஊழியர்களுக்கு சம்பளம் கொடுக்க முடியாத அளவு நிதி நெருக்கடி நிலவுவது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதைத் தீர்க்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை.-

**மாண்புமிகு திரு. கே. என். நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): ஆம். இப்பண்டகசாலையின் நிதி நிலையை மேம்படுத்தவும், வியாபாரத்தை பெருக்கவும், தேசிய நுகர்வோர் கூட்டுறவு இணையத்தின் ஆலோசனை மற்றும் அபிவிருத்திக் குழு, பண்டகசாலையை நேரடியாகப் பார்வையிட்டு புனரமைப்புத் திட்டம் ஒன்றினை தயாரித்துள்ளது. அதனை நடைமுறைப்படுத்துவது குறித்து தற்பொழுது கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அளவில், பரிசீலிக்கப்பட்டு வருகிறது. மேலும் புனரமைப்புத் திட்டமாக இப்பண்டகசாலையில் உபரியாக இருக்கும் பணியாளர்களில் விருப்பம் தெரிவித்துள்ள மொத்தமுள்ள 839 பணியாளர்களில் 43 பணியாளர்களை கோவை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியில் பணியமர்த்தம் செய்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு, முதற்கட்டமாக 7 பணியாளர்கள் ஏற்கனவே

[1997 ஏப்ரல் 30

அயற்பணி அடிப்படையில் கோவை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியில் பணியமர்த்தம் செய்யப்பட்டுள்ளனர். இதன் நிதிநிலையை மேம்படுத்த உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**157—**

## தானியங்கி பால் நிலையம் அமைத்தல்

**வினா எண் 1053—திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா.—

சென்னையில் உள்ளதுபோல், தமிழகத்தில் உள்ள அனைத்து நகரங்களிலும், தானியங்கி பால் வழங்கும் நிலையம் அமைக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்: பால்வளத் துறை அமைச்சர்:**

சென்னையில் உள்ளது போல் மற்றைய நகரங்களான கோவை, மதுரை, திருச்சி, சேலம், ஈரோடு மற்றும் தர்மபுரி ஆகிய இடங்களில் தானியங்கி பால் நிலையம் அமைக்கும் கருத்துருவை பரிசீலித்த தேசிய பால்வள வாரியம் ஒரு நகரத்தில் குறைந்தது 30 இடங்களிலாவது தானியங்கி பால் வழங்கும் நிலையம் அமைக்க வாய்ப்பிருந்தால்தான் அவை இலாபகரமாக இருக்கும் என்று கூறி இக்கருத்துருவுக்கு ஒப்புதல் அளிக்கவில்லை. மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்களின் நிதிநிலைமை மற்றும் அதன் சாத்தியக் கூறுகளை கணக்கில் கொண்டும் தமிழகத்திலுள்ள அனைத்து நகரங்களிலும் தானியங்கி பால் வழங்கும் நிலையம் அமைக்கும் கருத்துரு தற்சமயம் ஏதுமில்லை.

**158—**

## ஆவின் தானியங்கி பால் நிலையங்கள் விவரம்

**வினா எண் 3477—திரு. சைதை கா. கிட்டு:** மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1997 ஏப்ரல் 30 ]

(அ) சென்னை மாநகரத்தில் ஆவின் தானியங்கி பால நிலையங்கள் (Automatic Vending Machines) எத்தனை உள்ளன? இதில் பினாமி பெயரில் தானியங்கி பால் நிலையங்கள் உள்ளனவா?

(ஆ) ஆம் எனில், பினாமிகள் மீது உடனடி நடவடிக்கை எடுத்து அவர்கள் உரிமங்களை ரத்து செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:**

(அ) சென்னை மாநகரத்தில் 201 ஆவின் தானியங்கி பால் வழங்கும் நிலையங்கள் உள்ளன. பினாமி பெயரில் தானியங்கி பால் வழங்கும் நிலையங்கள் ஏதுமில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**159—**

## குடிசை மாற்று வாரிய குடியிருப்புகளை புதுப்பித்தல்

**வினா எண் 4466—திரு. மீ. அ. வைத்தியலிங்கம்:** மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி 154-வது வட்ட இந்திரா நகரிலுள்ள குடிசை மாற்று வாரிய குடியிருப்புகளை புதுப்பிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சென்னை, 154-வது வட்டம் தாம்பரம் தொகுதியிலுள்ள இந்திரா நகர் பகுதியில் 100 குடியிருப்புகள் தமிழ்நாடு குடிசைப்பகுதி

[1997 ஏப்ரல் 30

மாற்றுவாரியம் வசமுள்ளது. இக்குடியிருப்புகளுக்கு கூரைதளத்தில் ஓடுகள் பதித்தல், வெளிப்புற சுவர்களைப் பூசுதல், மாடிப்படிகளை சீர் செய்தல், தளங்களை பூசுதல் போன்ற பணிகள் ரூ.10.00 இலட்சம் செலவில் துவங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. டிசம்பர் மாதத்திற்குள் பணிகள் முடிவுறும்

**160—**

**பால் விநியோக வாகனங்களின் கசிவின் நஷ்டத்தை ஈடு செய்தல்**

**வினா எண் 5321—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பால் விநியோகம் செய்கிற வாகனங்களில் ஏற்படும் கசிவின் நஷ்டத்தை ஈடுகட்ட எத்தனை லிட்டர் பால் ஒதுக்கப்படுகிறது?

(ஆ) தினசரி சென்னை நகர பால் விநியோகத்தில் அவ்வாறு ஒதுக்கப்படும் பாலின் மதிப்பு எவ்வளவு ?

விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:**

(அ) பால் விநியோகம் செய்கிற வாகனங்களில் ஏற்படும் கசிவின் நட்டத்தை ஈடுகட்ட, ஒவ்வொரு தட வண்டியிலும், அவ்வாகனம் ஏற்றிச் செல்லும் பாலின் அளவில் 0.5% அளவு பால் ஒதுக்கப்படுகிறது.

(ஆ) சென்னை நகரில் அவ்வாறு ஒதுக்கப்படும் பாலின் மதிப்பு சுமார் ரூ.23,750 ஆகும்.

**161—**

**தனியார் பேருந்து ஊழியர்களுக்கு ஊதியம் அளித்தல்**

**வினா எண் 159—திரு. கே. சுப்பராயன் மற்றும் திரு. துரை. சந்திரசேகரன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1997 ஏப்ரல் 30 ]

தனியார் போக்குவரத்து நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு அரசு அறிவித்துள்ள ஊதியம் மற்றும் பஞ்சப்படியை அந்த நிர்வாகங்கள் வழங்குவதில்லை என்பது அரசிற்குத் தெரியுமா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத்துறை அமைச்சர்:**

ஆம்.

**162—**

**சிகை அலங்காரத் தொழில் புரிபவருக்கு நலத்திட்டம்**

**வினா எண் 720—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா.-

நமது மாநிலத்தில் சிகை அலங்காரத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு அரசு ஏதாவது நலத்திட்டம் வைத்துள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

நமது மாநிலத்தில் சிகை அலங்காரத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுககு இதுவரை எவ்வித நலத்திட்டமும் அரசின் பரிசிலனையில் இல்லை.

**163—**

**தனியார் பேருந்து உரிமம் ரத்து செய்தல்**

**வினா எண் 1230—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1997 ஏப்ரல் 30

(அ) தொழிலாளர்களின் சட்ட ரீதியான உரிமைகளை நிறைவேற்ற மறுக்கும் தனியார் பேருந்து நிறுவனங்களின் உரிமத்தை இரத்து செய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

**164—**

**திரையரங்குகளில் பணியாற்றுபவர்களின் சம்பளம் உயர்த்துதல்.**

**வினா எண் 1934—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள திரை அரங்கங்களில் பணியாற்றும் தொழிலாளர்களின் சம்பளம் மற்றும் பஞ்சப்படியை உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத்துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): இதற்கான அரசாணைகள் ஏற்கெனவே 12-7-1996 அன்று வெளியிடப்பட்டுள்ளன.

**165—**

**வடசேரி கிங் கெமிக்கல்ஸ் நிர்வாகம் பற்றியது.**

**வினா எண் 3374—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1997 ஏப்ரல் 30]

(அ) தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், வடசேரி கிங் கெமிக்கல்ஸ் நிர்வாகம் குறித்து அரசிற்கு ஏதேனும் புகார் வந்துள்ளதா?

(ஆ) ஆமெனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத்துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) மேற்படி நிர்வாகத்தில் பணிபுரிந்த 120 தொழிலாளர்களின் வேலை நீக்கம் குறித்த தொழிற் தாவா எழுப்பப்பட்டு, தஞ்சாவூர் தொழிலாளர் அலுவலர் முன்பு 20-11-96 அன்று நடை பெற்ற இறுதி சமரச பேச்சுவார்த்தை முடிவடைந்தது. தஞ்சாவூர் தொழிலாளர் அலுவலரின் சமரச முறிவறிக்கை மீது தொழிலாளர் ஆணையரும் தன்னுடைய பரிந்துரையை 18-2-97 அன்று அரசுக்கு அனுப்பி இதனை அரசு பரிசீலனை செய்து இத்தவாவினை தொழிலாளர் நீதிமன்றத் தீர்ப்பிற்கு விடப்பட்டுள்ளது.

**166—**

**மத்திய கட்டிடத் தொழிலாளர் சட்டமுன்வடிவு சட்டமாக்குதல்**

**வினா எண் 3942—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மத்தியக் கட்டிடத் தொழிலாளர் சட்ட முன்வடிவு சட்டமாக்கப்படுவதை தடுக்க மத்திய அரசிடம் மாநில அரசு வலியுறுத்துமா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத்துறை அமைச்சர்:**

மைய அரசு கட்டிடத் தொழிலாளர்களுக்காக நவம்பர், 1995-ல் கீழ்க்குறிப்பிட்டவாறு வெளியிடப்பட்ட இரண்டு பிரகடனங்களை, 20-8-96 அன்று முதல் சட்டமாக இயற்றியுள்ளது.

[1997 ஏப்ரல் 30

(i) "கட்டிடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்களின் நல நிதி பிரகடனம் 1995, மற்றும்

(ii) கட்டிடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் (பணிமுறைப்படுத்துதல் மற்றும் வேலை நிபந்தனைகள் பிரகடனம், 1995)"

அதனில் கட்டிடம் மற்றும் இதர கட்டுமானத் தொழிலாளர்கள் (பணிமுறைப் படுத்துதல் மற்றும் வேலை நிபந்தனைகள்) சட்டம் 1996 பிரிவு 63-ஐ அடிப்படையாகக் கொண்டு தமிழ்நாடு கட்டிடத் தொழிலாளர் நலத்திட்டங்களையே தொடர்ந்து நடைமுறைப்படுத்த அரசு முடிவெடுத்துள்ளது. எனவே மைய அரசு சட்டத்தினை தடுக்க மாநில அரசுக்கு அவசியமில்லை.

**167—**

**பனியன் தொழிலாளர் நல வாரியம் அமைத்தல்.**

**வினா எண் 4215—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பனியன் தொழிலாளி இறந்தாலும், கடுமையான நோயினால் பாதிக்கப்பட்டாலும், உதவுகிற முறையில் பனியன் தொழிலாளர் நல வாரியம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத்துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழாது.



1997 ஏப்ரல் 30 ]

**168—**

**கல் உடைக்கும் தொழிலாளர் நல வாரியம் அமைத்தல்.**

**வினா எண் 4216—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கல்லுடைக்கும் தொழிலாளர்களுக்கு கட்டிடத் தொழிலாளர்களுக்கு அமைக்கப்பட்டுள்ளது போல் கல் உடைக்கும் தொழிலாளர் நல வாரியம், அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத்துறை அமைச்சர்:**

இல்லை.

**169—**

**ஹஜ் குழு பற்றிய விவரம்**

**வினா எண் 4324—திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் ஹஜ் குழுவில் எத்தனை உறுப்பினர்கள் உள்ளனர்?

(ஆ) அக்குழுவில் பெண் உறுப்பினர்கள் சேர்க்க அரசு ஆவன செய்யுமா?

(இ) இவ்வுறுப்பினர்களுக்கு அரசு என்னென்ன சலுகைகள் வழங்குகிறது?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத்துறை அமைச்சர்:**

(அ) 15 பேர்கள், குழுத் தலைவர் மேலும் 7 பேர்களை உறுப்பினர்களாக அழைக்கலாம். (Co-opt.)

(ஆ) ஒரு பெண் உறுப்பினர் அக்குழுவில் இடம் பெற்றுள்ளார்.

(இ) இவர்கள் முதல்நிலை குழு உறுப்பினர்கள். (Members of First Class Committee) பெறும் பயணப்படி (Travelling Allowance) பெறுகின்றனர்; கூட்ட நாட்களுக்கு நாள் படியும் (Daily Allowance) பெறுகின்றனர்.

**170—**

**திரையரங்குகளில் பணிபுரிபவர்கள் பணிநேரம்.**

**வினா எண் 4649—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திரையரங்குகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு பணி நேரம் வரையறுக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) இத்தொழிலாளர்கள் தினசரி 8 மணி நேரத்திற்கு மிகாமல் பணி செய்யுமாறு பணிநேரம் வரையறுக்கப்பட்டுள்ளது.

**171—**

**ஒப்பந்தத் தொழிலாளர் முறையை அழித்தல்**

**வினா எண் 4657—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஒப்பந்தத் தொழிலாளர் முறையை அறவே ஒழித்திடும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?





விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

ஒப்பந்தத் தொழிலாளர் முறையை அறவே ஒழித்திடும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

**172—**

**சமரச அதிகாரிகளுக்கு அதிக அதிகாரம் வழங்கல்.**

**வினா எண் 4658—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தொழில் தாவாக்களின்போது சமரசப் பேச்சுவார்த்தைக்கு வர மறுக்கிற நிர்வாகத்தை வரவழைக்க சமரச அதிகாரிக்கு அதிக அதிகாரம் வழங்க வகை செய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

ஆம்.

**173—**

**குறைந்த பட்ச கூலி அறிவிப்பு**

**வினா எண் 4661—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குறைந்தபட்சக் கூலிச் சட்டப்படி அறிவிக்கப்பட்ட தொழில்களின் அரசு அறிவிப்பு அமலாகிறதா?

(ஆ) அதை முறையாக அமலாக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தொழிலாளர்துறை, தொழிற்சாலைகள் ஆய்வகத்துறையிலுள்ள அலுவலர்கள் இச்சட்டத்தின்கீழ் ஆய்வாளர்களாக நியமனம் செய்யப்பட்டு, முறையான ஆய்வு மற்றும் திடீர் ஆய்வுகளை மேற்கொண்டு குறைந்த பட்ச ஊதியம் வழங்குவதைக் கண்காணித்து, தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியத்தைப் பெற்றுத் தர உரிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள்.

**174—**

### தனலட்சுமி 'பி'மில்ஸ் மூடப்பட்டதால் ஏற்பட்ட நிலைமை

**வினா எண் 5316—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் தனலட்சுமி 'பி' மில்ஸ் மூடப்பட்டுள்ளதால் பாதிக்கப்பட்டுள்ள தொழிலாளர்கள் எத்தனை பேர்?

(ஆ) அவர்களுக்குரிய சட்டப்படியான தொகைகள் வழங்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) 410 பேர்கள்

(ஆ) 'பி' மில்லை மூட தொழிற் தீர்ப்பாயம் அளித்த தீர்ப்பினை எதிர்த்து தாக்கல் செய்துள்ள உரிமை மனு மீது உயர்நீதிமன்ற தீர்ப்பு வந்த பின்னரே தொழிலாளர்களுககு எந்தவிதமான இழப்பீடுகள், தொகைகள் வழங்கப்பட வேண்டும் என்பதைத் தீர்மானிக்க இயலும்.



தனலட்சுமி மில்ஸ் லிமிடெட் ஆலையில் ('ஏ' மற்றும் 'பி') பணிபுரிந்த தொழிலாளர்களில் 13 தொழிலாளர்கள் மட்டும் கோவை தொழிலாளர் உதவி ஆணையர் (பணிக்கொடை) முன்பு பணிக்கொடை பட்டுவாடா சட்டத்தின் கீழ் மனுச் செய்து அவைகள் மீது கோவை தொழிலாளர் உதவி ஆணையர் (பணிக்கொடை) உத்திரவு வழங்கியுள்ளார். அதன்படி அத்தொழிலாளர்களுக்கு ரூ. 4,50,000/- வழங்க உத்திரவிடப்பட்டுள்ளது.

**175—**

### துணை கால்நடை மருத்துவமனை அமைத்தல்

**வினா எண் 1532—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், ஏகாபுரம் கிராமம், தைலம்பட்டியில் ஒரு துணை கால்நடை மருத்துவமனை ஏற்படுத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி, வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்:**

(அ) அழகப்பன் பாளையம்புதூர் கிளை நிலையம் அருகிலேயே இருப்பதால், தைலம்பட்டியில் கால்நடை கிளை நிலையம் அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

[1997 ஏப்ரல் 30

176—

**விளவங்கோடு வட்ட கிராமங்களில் நிலம் பற்றிய விவரம்**

**வினா எண் 1907—திரு. டி. மணி:** மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், களியல் வனச்சரகம் வெள்ளறுக்கு காணி, தலக்குமலை ஆகிய பகுதிகளில் சுமார் 200 ஏக்கர் நிலத்தை தனியார் எவரேனும் உரிமை கோரி மனு தந்துள்ளார்களா ?

(ஆ) இது சம்பந்தமாக நீதிமன்றத்தில் வழக்கு ஏதேனும் உள்ளதா ?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி, வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்:**

(அ) கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், களியலில் உள்ள திரு. சி. தாஸ் என்பவர் தலக்குமலை காணி மற்றும் சுற்றுப்புறத்தில் 275 ஏக்கர் நிலம் பட்டா கேட்டு 20-2-86ல் மதுரை உதவி செட்டில்மெண்ட் அலுவலரிடம் விண்ணப்பித்தார். இது உதவி செட்டில்மெண்ட் அதிகாரியால் 25-4-88ல் நிராகரிக்கப்பட்டது. மனுதாரரால் செய்யப்பட்ட மேல்முறையீடும் 3-6-88ல் செட்டில்மெண்ட் இயக்குநரால் நிராகரிக்கப்பட்டது.

(ஆ) இது சம்பந்தமாக வழக்கு நாகர்கோவில் கீழ் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

177—

**வனத்துறை நிலத்தைக் கையகப்படுத்தியதை மீட்டல்**

**வினா எண் 1909—திரு. டி. மணி:** மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1997 ஏப்ரல் 30 ]

கன்னியாகுமரி மாவட்டத்தில், தோவாளை தாலுகாவில், அசம்புகாடு பகுதியில் திரு. நாயகம் என்பவர் 7.5 ஏக்கர் நிலம் குத்தகைக்கு எடுத்துவிட்டு 400 ஏக்கருக்கு அதிகமான வனத்துறை நிலத்தைக் கையகப்படுத்தியதை மீட்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி, வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்:**

கன்னியாகுமரி மாவட்டத்தில், தோவாளை வட்டத்தில், அசம்புகாடு பகுதியில் திரு. நாயகம் என்பவருக்கு 7.5 ஏக்கர் நிலம் குத்தகைக்கு விடப்படவில்லை. எனவே, 400 ஏக்கருக்கு அதிகமான வனத்துறை நிலத்தைக் கையகப்படுத்திய கேள்விக்கு இடமில்லை.

178—

**புதிய கால்நடை மருத்துவமனை அமைத்தல்**

**வினா எண் 1986—திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, கீழமணக்குடி கிராமத்தில், புதியதாக கால்நடை மருத்துவமனை கட்டப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி, வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) : தற்போது கீழமணக்குடி கிராமத்தில் கால்நடை மருந்தகம் அமைக்க பிரேரணை ஏதுமில்லை.

[1997 ஏப்ரல் 30

179—

**பொன்பரப்பியில் கால்நடை மருத்துவமனை**

**வினா எண் 2475—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொன்பரப்பியில் கால்நடை மருத்துவமனைக்கு பணம் கட்டப்பட்டும் இதுவரை கால்நடை மருத்துவமனை அமைக்கப் படவில்லை என்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அங்கு கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி, வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): பொன்பரப்பியில் கால்நடை மருத்துவமனைக்கு பணம் ஏதும் கட்டப்படவில்லை. தற்போது பிரேரணை ஏதுமில்லை.

180—

**கால்நடை மருத்துவமனை அமைத்தல்**

**வினா எண் 2707—திரு. கு. ரவி அருணன்:** மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், தென்காசி தாலுகா அரியப்பபுரம் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்கும் திட்டம் அரசுக்கு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?



1997 ஏப்ரல் 30]

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி, வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தற்போது இல்லை.

181—

**கடமங்குடியில் கால்நடை மருந்தகம்**

**வினா எண் 2798—திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாபநாசம் தொகுதி, மகாராஜபுரம் வட்டம், கடமங்குடி கிராமத்தில் கால்நடை மருந்தகம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி, வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்:**

தற்போது பிரேரணை ஏதுமில்லை.

182—

**கால்நடை துணை மருத்துவமனை அமைத்தல்**

**வினா எண் 3382—திரு. கே. மணிவர்மா:** மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், தண்டராம்பட்டு தொகுதி, நாராயண குப்பம் கிராமத்தில் கால்நடை துணை மருத்துவமனை ஆரம்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி, வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) வேலூர் கால்நடை கிளை நிலையத்தை நாராயண குப்பம் கிராமத்திற்கு மாற்ற, திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவரின் அனுமதியும், தண்டராம்பட்டு ஊராட்சி ஒன்றிய அலுவலரின் அனுமதியும் பெற்ற பின்பு செயல்படுத்தப்படும்.

**183—**

**தண்டராம்பட்டு தொகுதியில் கால்நடை மருத்துவமனை**

**வினா எண் 3594—திரு. கே. மணிவர்மா:** மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தண்டராம்பட்டு தொகுதி, பண்டிதப்பட்டு, கோவிந்தம்பட்டு, படத்தணூர், நாறையூர் ஆகிய கிராமங்களில் கால்நடை மருத்துவமனைகளை ஏற்படுத்த அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி, வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்:**

தற்போது பிரேரணை ஏதுமில்லை.





**184—**

**முதலைப் பண்ணையை விரிவுபடுத்துதல்**

**வினா எண் 3602—திரு. ஜி. கே. மணி:** மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதி, ஒகேனக்கல்லிலுள்ள முதலைப் பண்ணையை சுற்றுச்சூழல் கெடாமல் விரிவாக்கம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி, வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, ஒகேனக்கல்லிலுள்ள முதலைப் பண்ணையை விரிவுபடுத்தும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

**185—**

**கீச்சலம் கிராமத்தில் கால்நடை மருந்தகம்**

**வினா எண் 3827—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு, எம்.ஜி.ஆர். மாவட்டம், பள்ளிப்பட்டு ஒன்றியத்தில் கீச்சலம் கிராமத்தில் கால்நடை மருந்தகம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி, வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்:**

தற்போது திட்டமேதுமில்லை.

[1997 ஏப்ரல் 30

**186—**

**கால்நடை சுகாதார நிலையங்கள் அமைத்தல்**

**வினா எண் 4249—திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி, முத்தம்பட்டி மற்றும் கடகத்தூர் ஊராட்சி ஒன்றியங்களுக்கு கால்நடை சுகாதார நிலையங்கள் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி, வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): இல்லை.

**187—**

**மரங்கள் வனத்துறை மூலம் விற்க நடவடிக்கை**

**வினா எண் 4475—திரு. டி. மணி:** மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வனத்துறைக்குச் சொந்தமான சோதனைச் சாவடி மூலம் கைப்பற்றப்பட்ட அனைத்து மரங்களையும் உடனுக்குடன் வனத் துறை மூலம் விற்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி, வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்:**



1997 ஏப்ரல் 30 ]

பொதுவாக, சோதனைச் சாவடிகளில் பிடிபடும் மரங்கள் உடனுக்குடன் ஏலம் விடப்படுகின்றன. எனினும், தேக்கு, ஈட்டி, சில்வர் ஓக் போன்ற அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள மரங்கள் பிடிபடும்போது அதுபற்றி நீதிமன்றங்களில் தொடுக்கப்படும் வழக்குகள் முடிவுற்ற பின்னரே ஏலமிடப்படுகின்றன.

**188—**

**கால்நடை மருத்துவமனைக்கு அரசு கட்டிடம்**

**வினா எண் 4715—திரு. ரா. சேதுநாதன்:** மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டிவனம் கால்நடை மருத்துவமனைக்கு அரசு நிலத்தில் கட்டிடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி, வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்:**

(அ) தற்சமயம் அரசிடம் கருத்துரு ஏதுமில்லை.

(ஆ) எழாது.

**189—**

**விற்பனை அங்காடி வழங்குதல்**

**வினா எண் 4721—திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகம் "டாப்கோ" மூலம் வழங்கப்படும் விற்பனை அங்காடி (Bunk) தற்போது

விண்ணப்பதாரர்களுக்கு வழங்கப்படுவதில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், புதிய விற்பனை அங்காடிகள் (Bunk) வழங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி, வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) டாப்கோவின் தற்போதைய நிதி நிலையில் புதிய பங்க் செய்து வழங்க இயலாததாலும், 1995-ல் சென்னை மாநகராட்சி தனது அனுமதியில்லாமல் அமைக்கப்பட்ட ஏழு டாப்கோ பங்க்குகளை ஆக்கிரமிப்புகள் என்று அப்புறப்படுத்தி விட்டதாலும், முறையாக சென்னை மாநகராட்சியின் அனுமதி பெற்று புதிய விற்பனை அங்காடிகள் அமைக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. புதிய விற்பனை அங்காடி அமைக்க அனுமதி வழங்குவதற்கு 28-11-1996 அன்று நடைபெற்ற டாப்கோவின் நிர்வாகக் குழுக் கூட்டத்தில் பரிசீலித்து புதிய விதி முறைகள் வகுக்கப்பட்டுள்ளன. சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட ஆறு இடங்களில் சென்னை மாநகராட்சியின் அனுமதி கிடைத்த உடன் புதிய விற்பனை அங்காடிகள் அமைக்க முகவர் உரிமம் வழங்கப்படும். மேலும் சென்னையில் 20 முக்கிய இடங்களில் டாப்கோவின் புதிய விற்பனை அங்காடிகள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவ்விடங்களுக்கு மாநகராட்சியின் அனுமதி கிடைத்தால் உடனடியாக டாப்கோ விற்பனை அங்காடிகள், முகவர்கள் மூலமாக நடத்த அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்படும்.

**190—**

**கால்நடை மருத்துவமனை அமைத்தல்**

**வினா எண் 5237—திரு. கு. ரவி அருணன்:** மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம் தென்காசி வட்டம், சுரண்டை சிவகுருநாதபுரத்தில் கால்நடை மருத்துவமனை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி, வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): கால்நடை மருத்துவமனை ஏற்படுத்த சாத்தியக் கூறுகள் இல்லை.

**191—**

**புதிய கால்நடை மருத்துவமனை**

**வினா எண் 5742—திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஒன்றியம், பூவாலை கிராமத்தில் புதியதாக கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி, வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): பூவாலை கிராமம் புவனகிரி ஊராட்சி ஒன்றியத்தின்கீழ் உள்ளது. இந்த கிராமம் புவனகிரி ஊராட்சி ஒன்றியத்திலிருந்து 12 கி.மீ. தொலைவில் உள்ளது. பூவாலை கிராமத்தின் அருகில் 3 கி.மீ. தொலைவில் புதுச்சத்திரம் என்ற இடத்தில் ஒரு

கால்நடைக் கிளை நிலையம் உள்ளது. இந்நிலையில் புதிய கால்நடை மருத்துவமனை பூமாலை கிராமத்தில் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**192—**

### பாம்பு கடித்து இறந்த மாணவனுக்கு நஷ்டஈடு

**வினா எண் 6437—திரு. டி. மணி:** மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம் மணலோடை கோட்டத்தில் பணிபுரியும் தொழிலாளியின் மகனை பாம்பு கடித்து உடனடி சிகிச்சை அளிக்கமுடியாமல் மாணவன் இறந்து விட்டதை அரசு அறியுமா?

(ஆ) மணலோடைக் கோட்டத்திற்கு ஆம்புலன்ஸ் வாகனம் வழங்க அரசு முன்வருமா?

(இ) இறந்த மாணவன் குடும்பத்திற்கு அரசு நஷ்ட ஈடு வழங்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி, வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்:**

(அ) அரசுக்குக் கிடைத்த தகவலின்படி இந்நிகழ்ச்சி கோதையார் கோட்டத்தில் குத்தியார் பிரிவில் 25-10-1996 அன்று காலை 8.20 மணிக்கு நடந்துள்ளது. இப்பிரிவில் பணிபுரிந்து வரும் திரு. சிவசாமி/கிருஷ்ணன் என்ற தொழிலாளியின் மகன் சிவசங்கர் என்ற பள்ளி மாணவனை பாம்பு கடித்ததாகவும், குத்தியார் அரசு ரப்பர் கழக மருந்தகத்தில் முதலுதவி சிகிச்சை செய்து, கழக வாகனத்தின் மூலம் குலசேகரம் மருத்துவமனைக்கு காலை 8.35 மணிக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டதாகவும், சிகிச்சை பலன் அளிக்காமல் அச்சிறுவன் இறந்து விட்டதாகவும் தெரிய வந்துள்ளது.





(ஆ) அரசு ரப்பர் கழகத்தின் சித்தார், கோதையார் மற்றும் கீரிப்பாறை கோட்டங்களில் உள்ள ஆம்புலன்ஸ் வாகனங்களும் மணலோடை கோட்டம் உள்பட மற்ற கோட்டங்களில் ஜீப்பும், மற்ற வாகனங்களும் மருத்துவ வசதிக்காகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

(இ) இறந்தவர், தொழிலாளியின் மகன் என்பதால் வேலையாள் இழப்பீடு சட்டப்படி நஷ்டஈடு வழங்க வழியில்லை.

**193—**

### முத்திரைத்தாள்கள், கோர்ட் விண்ணப்பவில்லைகள் தட்டுப்பாடு

**வினா எண் 1933—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முத்திரைத்தாள்களும், கோர்ட் விண்ணப்பவில்லைகளும் தட்டுப்பாடாக உள்ளதாக அரசிற்கு புகார் ஏதேனும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) முத்திரைத்தாள்களும், நீதிமன்ற ஒட்டுவில்லைகளும் கிடைப்பதில் தட்டுப்பாடு உள்ளதாக் அரசிற்கு புகார் ஏதும் வரப்பெறவில்லை.

(ஆ) முத்திரைத்தாள்கள் போதுமான அளவு நாசிக்கில் உள்ள மைய அச்சகத்திலிருந்து முன்கூட்டியே பெற்று, தேவையான அளவு அனைத்து கருவூலகங்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்று உரிய அலுவலர்களுக்கு தகுந்த அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

[1997 ஏப்ரல் 30

**194—**

## சிட்கோ தொழிற்பேட்டை அமைத்தல்

**வினா எண் 3672—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி நகரில் சிட்கோ தொழிற்பேட்டை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): எடப்பாடி நகரில் சிட்கோ தொழிற்பேட்டை அமைப்பது பற்றிய செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**195—**

## சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் மூலம் கயிறு திரிக்கும் தொழிற்சாலை

**வினா எண் 4244—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, வெள்ளையம்பாளையம், வைகுந்தம் பகுதியில் சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் மூலம் கயிறு திரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



1997 ஏப்ரல் 30]

விடை—

**மாண்புமிகு இ. பெரியசாமி, ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): எடப்பாடி தொகுதி, வெள்ளையம்பாளையம், வைகுந்தம் பகுதியில் சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் மூலம் கயிறு திரிக்கும் தொழிற்சாலை அமைக்க செயற்குறிப்பு எதுவும் தற்சமயம் சிட்கோவின் பரிசீலனையில் இல்லை.

**196—**

## திருப்பூர் நகர நிலமதிப்பு குறைத்தல்

**வினா எண் 4655—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகர நில மதிப்பை மறுபரிசீலனை செய்து குறைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): திருப்பூர் நகராட்சி உட்பட எல்லா நகராட்சிப் பகுதிகளிலும், நிலம் உட்பட, எல்லா அசையாச் சொத்துக்களின் வழிகாட்டி மதிப்புகளும் (Guideline Value), அரசு ஆணைகளின்படி ஆண்டுதோறும் திருத்தியமைக்கப்படுகிறது. திருப்பூரில் வருடா வருடம் மதிப்பு திருத்தி உயர்த்தப்படுவதால் தெருவாரியாக சொத்துக்களின் மதிப்பு சரியானதாக இல்லை என்றும், ஏழைகள் சொத்து வாங்க இயலாத நிலை உள்ளது என்றும், புகார்கள் வந்துள்ளன. புகார்களின் அடிப்படையில், தக்க விசாரணைகள் செய்தும், தெருவாரி பதிவேடுகளை

[1997 ஏப்ரல் 30

ஒப்பீடு செய்தும், எல்லாச் சொத்துக்களின் வழிகாட்டி மதிப்புகளையும் வரும் 1-4-1997 முதல் சரியான முறையில் திருத்தி அமைக்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

**197—**

## கேபிள் டி.வி. உரிமம் பற்றிய விவரம்

**வினா எண் 906—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் எத்தனை கேபிள் டி.வி.களுக்கு உரிமம் வழங்கப்பட்டுள்ளது?

(ஆ) உரிமம் வழங்க அரசு வகுத்துள்ள நெறிமுறை என்ன?

(இ) உரிமம் பெறாமல் இயக்குகிறவர்கள் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை-

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் இதுவரை 2,631 கேபிள் டி.வி.களுக்கு உரிமம் வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) கேபிள் தொலைக்காட்சி மூலமாக திரைப்படங்களை திரையிடுவதை முறைப்படுத்தும் நோக்கத்துடன், தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு வீடியோ கேசட் ரெக்கார்டர்கள் மூலம் தொலைக்காட்சித் திரையில் திரைப்படங்களைக் காட்டுதல் (முறைப்படுத்தல்) திருத்தச் சட்டத்தை 1991-ல் இயற்றியுள்ளது. இத்திருத்தச் சட்டம், 11-11-1991 முதல் நடைமுறைக்கு வந்தது. மாவட்டங்களில், மாவட்ட ஆட்சியரும், சென்னை மாநகரில் காவல்துறை ஆணையரும், உரிமம் வழங்கும் அதிகாரிகளாவர். விண்ணப்பதாரர்களின் தகுதி, அரசுக்குச் சேர வேண்டிய வரி செலுத்துவதில் அவரின் நடத்தை, முன் அனுபவம்,



1997 ஏப்ரல் 30 ]

பொது நலன் ஆகியவற்றை ஆராய்ந்த பிறகே உரிமம் வழங்கப்படுகிறது. இத்திருத்தச் சட்டம் விதி 20-ஏ-ன்படி, தொலைக்காட்சித் திரையில் திரையிடுவதற்கு உரிமங்கள் பெறுவது தொடர்பான வழிமுறைகள் உள்ளன. இதன் அடிப்படையில் உரிமங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

(இ) உரிமம் பெறாமல் கேபிள் டிவி. இயக்கிய குற்றத்திற்காக தென்னாற்காடு-வள்ளலார் மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவர் மீது திட்டக்குடி காவல் நிலைய குற்ற எண் 40/95-ல் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கோயம்புத்தூரில் 37 நபர்கள் மீதும் காமராஜர் மாவட்டத்தில் 1 நபர் மீதும், பெரம்பலூர்-திருவள்ளுவர் மாவட்டத்தில் 45 நபர்கள் மீதும், திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தில் 2 நபர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

**198—**

## அண்ணா சதுக்கம் அழகுபடுத்தும் திட்டம்

**வினா எண் 3208—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை, அண்ணா சதுக்கத்தை மேலும் அழகுபடுத்தும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:**

அரசின் பரிசீலனையில் உள்ளது.

**199—**

## பகுத்தறிவுப் பிரச்சாரம் செய்தல்

**வினா எண் 5905—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1997 ஏப்ரல் 30

தொலைக்காட்சி மற்றும் வானொலியில் பகுத்தறிவுப் பிரச்சாரம் செய்ய தனி நேரம் ஒதுக்கும்படி மாநில அரசு மத்திய அரசை வலியுறுத்துமா?

விடை—

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:**

மாநில அரசிடமிருந்து மத்திய அரசுக்கு இது குறித்து எவ்வித கோரிக்கையும் அனுப்பப்படவில்லை.

**200—**

**அதியமானுக்கு விழா நடத்துதல்**

**வினா எண் 4145—திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா.—

தருமபுரியை ஆண்ட கடையேழு வள்ளல்களில் ஒருவரான அதியமானுக்கு ஆண்டிற்கொரு முறை விழா நடத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:**

தருமபுரியை ஆண்ட கடையேழு வள்ளல்களில் ஒருவரான அதியமானுக்கு ஆண்டிற்கொருமுறை விழா நடத்தும் கருத்துரு அரசிடம் இல்லை.



1997 ஏப்ரல் 30]

**பனிரெண்டாவது பட்டியல்**

**1—**

**தமிழ்நாட்டின் ஸ்பிக் உரத் தொழிற்சாலையின் பங்கை ஏற்றல்**

**வினா எண் 214—திரு. வீ. தமிழ்மணி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டின் ஸ்பிக் உரத் தொழிற்சாலையில் அரசின் பங்கு எவ்வளவு?

(ஆ) தற்போது அந்த பங்கின் மார்க்கெட் விலை எவ்வளவு?

(இ) முந்தைய அரசு ஸ்பிக் நிர்வாகத்திற்கு என்ன விலைக்கு விற்றது?

(ஈ) மீண்டும் அரசே தன் பங்கை ஏற்க நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) ஒவ்வொன்றும் ரூ. 10/- மதிப்பு கொண்ட 88,40,000 பங்குகள்.

(ஆ) ஒரு பங்கின் தற்போதைய விலை ரூ. 49.50/-.

(இ) மூலதனப் பங்குகள் விற்கப்படவில்லை. 1992-ல் ஸ்பிக் நிறுவனம் கடனீட்டுறுதிப் பத்திரங்கள் (Zero Coupon Debentures) வெளியிட்டது. மூலதனப் பங்குதாரர் என்ற அடிப்படையில் ஒரு கடன் பத்திரத்தின் விலை ரூ. 625/- வீதம் டிட்கோ, 1,76,800 கடனீட்டுறுதிப் பத்திரங்களுக்கு உரிமை உடையது. ஸ்பிக் நிறுவனத்தில் அரசின் பங்குகள் மொத்த மூலதனத்தில் 26%. திருவாளர்கள் எம்.ஏ. சிதம்பரம் குழுவினரின் பங்குகள் 25%. இந்தக் கடனீட்டுறுதிப் பத்திரங்கள் குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு பங்குகளாக மாற்றப்படக் கூடியவை. ஏற்கனவே பங்குகள் வைத்திருப்பவர்களுக்கு அப்பங்குகளின் எண்ணிக்கையைப் பொறுத்து இந்தக் கடன் பத்திரங்கள் வழங்கப்படும். அரசுக்கு வழங்கப்பட்ட இந்தக் கடன் பத்திரங்களை ஏற்றுக்கொள்ள மறுத்து, அந்தப் பத்திரங்களை எம்.ஏ. சிதம்பரம் குழுவினருக்கே அளித்துவிடுமாறு கேட்டுக் கொண்டதன் வாயிலாக, ஸ்பிக்

நிறுவனத்தில் அரசின் பங்குகள் 26%-இருந்து 17% ஆக குறைந்துவிட்டது. எம்.ஏ. சிதம்பரம் குழுவினரின் பங்கு 25%-ல் இருந்து 34% ஆக உயர்ந்தது. இந்தக் கடன் பத்திரங்களை ஏற்க மறுத்து எம்.ஏ. சிதம்பரத்திற்கு ஆவண நாள் (24-1-92) அன்று நிலவர பங்கு விலையான ரூ.80/- வீதம் விற்கும்படி அரசு டிட்கோ நிறுவனத்திற்கு தெரிவித்து அவ்வாறே விற்கப்பட்டது.

(ஈ) ஏற்கனவே உரிமையை ஏற்க மறுத்த எம்.ஏ. சிதம்பரம் குழுவினர்களுக்கு திரும்ப அளித்த கடனீட்டுறுதிப் பத்திரங்களை திரும்பவும் ஸ்பிக் நிறுவனத்திடமிருந்து வாங்க சட்டப்படி வழி எதுவும் இல்லை. வெளிச்சந்தையிலிருந்துதான் பங்குகளை தற்போதைய விலைக்கு வாங்க வேண்டும். தற்போதைய விலை குறைவாக இருந்தால்கூட, அரசு அப்போது ஏற்றுக்கொள்ள மறுத்த அளவில் பங்குகளை வாங்கிக் கொள்ள முயலும்போது சந்தையில் விலை ஏறிவிடும். இதற்கு அதிக முதலீடு தேவைப்படும்.

2—

**புதிய தீயணைப்பு நிலையம் அமைத்தல்**

**வினா எண் 259—திரு. வி. கோவிந்தன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், பேர்ணாம்பட்டில் புதியதாக தீயணைப்பு நிலையம் அமைக்க அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): வடஆற்காடு மாவட்டம், பேர்ணாம்பட்டில் புதிதாக தீயணைப்பு நிலையம் அமைக்க செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.





3—

**காவல் நிலையங்களில் சட்டம் படித்தவர்களை அரசு நியமனம் செய்தல்**

**வினா எண் 358—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் எல்லா காவல் நிலையங்களிலும் குற்ற வழக்குத் தொடர்பு ஆய்வாளர்களாக சட்டம் படித்தவர்களை அரசு நியமனம் செய்யுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

இல்லை.

4—

**பட்டுக்கோட்டையில் தாலுகா காவல் நிலையம் அமைத்தல்**

**வினா எண் 462—திரு. ப. பாலசுப்பிரமணியம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டையில் தாலுகா காவல் நிலையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

இல்லை.

5—

**செய்யாறு நகரில் மகளிர் காவல் நிலையம் அமைத்தல்**

**வினா எண் 636—திரு. வ. அன்பழகன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செய்யாறு தொகுதியில், செய்யாறு நகரில் மகளிர் காவல் நிலையம் ஒன்றும், கொருக்கை பகுதியில் புதிய காவல் நிலையம் ஒன்றும் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

[1997 ஏப்ரல் 30

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

**6—**

**எடப்பாடி நகரில் காவலர் குடியிருப்பு கட்டித் தருதல்**

**வினா எண் 1029—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் எடப்பாடி நகரில் காவலர் குடியிருப்பு கட்டித் தரும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தற்போது அரசின் பரிசீலனையில் ஏதும் இல்லை.

**7—**

**"சதர்ன் அயர்ன்" கம்பெனி நஷ்டஈடு கொடுக்காதது**

**வினா எண் 1086—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம் பொட்டனேரி, எம். காளிப்பட்டி ஆகிய ஊர்களில் "சதர்ன் அயர்ன்" கம்பெனி (தனியார்) எடுத்துக் கொண்ட நிலத்திற்கு நிலச் சொந்தக்காரருக்குச் சேர வேண்டிய நஷ்டஈடு கொடுக்கப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?



1997 ஏப்ரல் 30]

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சதர்ன் அயர்ன் மற்றும் ஸ்டீல் நிறுவனத்திற்கு (சிஸ்கால்) 210.91.0 ஹெக்டேர் நிலம் கையகப்படுத்தப்பட்டு, 1995 ஆம் ஆண்டு, 284 பட்டாதாரர்களுக்குச் சொந்தமான மொத்த நிலமும் அந்நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்டது. நில எடுப்பு அலுவலரின் தீர்ப்பு விசாரணையின்போது, 284 பட்டாதாரர்களில் 61 நபர்கள் மட்டுமே ஆஜராகி இழப்புத் தொகை ரூ. 59,91,766 பெற்றுக் கொண்டனர். இதர நபர்கள், நிலச் சொந்தக்காரர் அல்லது அனுபவதாரர் என்பதற்கு ஆதாரம் தெரிவிக்கவில்லை என்பதால் நில உரிமைத் தொகையை பிரித்து அளிக்க இயலவில்லை. இதற்குண்டான ஈட்டுத் தொகையான ரூ. 2,27,24,295/- சங்ககிரி சப் கோர்ட்டில் டெபாசிட் செய்யப்பட்டுள்ளது. நிலச் சொந்தக்காரர்கள் தங்கள் நிலத்தின் மீதுள்ள உரிமையை நிரூபித்து அவர்களுக்குண்டான தொகையினை வழக்கு மன்றத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**8—**

**தீயணைப்பு நிலையத்திற்கு சொந்தக் கட்டிடம் கட்டுதல்**

**வினா எண் 1096—திரு. செ. இராமலிங்கம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவிடைமருதூர் தீயணைப்பு நிலையத்திற்குச் சொந்தக் கட்டிடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு ஏதேனுமுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): இல்லை.

**9—**

**சிவகங்கை "கிராபைட்" தொழிற்சாலையின் முறைகேடுகளை நீக்கி, விரிவுபடுத்துதல்**

**வினா எண் 1281—திரு. கே.ஆர். இராமசாமி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1997 ஏப்ரல் 30

சிவகங்கையில் உள்ள கிராபைட் தொழிற்சாலையின் முறைகேடுகளை நீக்கி அதனை விரிவுபடுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

ஆம்.

**10—**

### அரசு அமைச்சுப் பணிகளில் பணி நியமன தடையை ரத்து செய்தல்

**வினா எண் 1444—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு அமைச்சுப் பணிகளில் பணி நியமனத்திற்கு அரசு தடை விதித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், இதற்கு முன் அரசு கொண்டு வந்த தடை ஆணை ரத்து செய்யப்படுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) தமிழ்நாடு தேர்வாணையத்தின் வரம்பில் உள்ள அமைச்சுப் பணியிடங்களை வேலை வாய்ப்பகங்கள் மூலம் தற்காலிகமாக நியமிப்பதற்கு அரசு தடை ஆணை உள்ளது.

(ஆ) இத்தடை ஆணையை நீக்குவதற்கான கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**11—**

### புதிய காவல் நிலையம் ஏற்படுத்துதல்

**வினா எண் 1502—திரு. கு. ரவி அருணன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1997 ஏப்ரல் 30]

(அ) திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம் - தென்காசி தாலுகா, சுந்தரபாண்டியபுரத்தில் புதிய காவல் நிலையம் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தென்காசி தாலுகா, சுந்தரபாண்டியபுரத்தில் புதிய காவல் நிலையம் ஏற்படுத்த சாத்தியக்கூறுகள் இல்லை.

**12—**

### டாமின் மூலம் தொழிற்சாலை நிறுவுதல்

**வினா எண் 1795—திரு. அ. மாரிமுத்து:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வானூர் தொகுதி, கரசானூர், குன்னம் திருவக்கரை சேமங்களம் ஆகிய கிராமங்களில் உள்ள கருப்பு கற்களை வெட்டி எடுத்து, டாமின் மூலமாக தொழிற்சாலை நிறுவும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) வானூர் தொகுதி கரசானூர் குன்னம் மற்றும் திருவக்கரை ஆகிய கிராமங்களில் டாமினால் வெட்டியெடுக்கப்படும் கற்களுக்காக மட்டும் ஒரு தொழிற்சாலை நிறுவும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

**13—**

### ஓய்வுபெற்ற அரசு ஊழியர்களுக்கு படிப்பயன்கள்

**வினா எண் 1842—திரு. பி. வெங்கடசாமி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(a) Whether there is any proposal to give Hill Allowance and Winter Allowance to the retired Government Officials in Hozur and Denkanikotta Taluk, and;

(b) if so, the details thereof?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) அத்தகைய கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**14—**

### காவல் துறைக்கு "மனித உரிமை" குறித்து வகுப்புகள் எடுத்தல்

**வினா எண் 1975—டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகக் காவல்துறைக்கு "மனிதாபிமான" உணர்வுகளை வளர்க்க, 'மனித உரிமை' பற்றிய வகுப்புகள் எடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

தமிழக காவல்துறைக்கு 'மனிதாபிமான' உணர்வுகளை வளர்க்க 'மனித உரிமை' பற்றிய வகுப்புகள் ஏற்கெனவே நடைமுறையில் உள்ளது.

**15—**

### தென்கனிக்கோட்டை தாலுக்கா அரசு ஊழியர்களுக்கு படிப்பயன்கள் வழங்குதல்

**வினா எண் 1991—திரு. பி. வெங்கடசாமி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(a) Whether there is any proposal to extend the City Compensatory Allowance to the Government employees working in Hosur and Denkanikotta Taluks of Dharmapuri District as they are living within 80 km. to cosmopolitan city of Bangalore; and





(b) if so, the details thereof,

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) இத்தகைய கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. No such proposal is under consideration of the Government.

(ஆ) கேள்வி எழவில்லை. Does not arise.

**16—**

### வடவள்ளிப் பகுதியில் காவல் நிலையம் அமைத்தல்

**வினா எண் 2172—திரு. சி. இரா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், தொண்டாமுத்தூர் தொகுதிக்கு உட்பட்ட வடவள்ளி என்கிற பகுதியில் 'காவல் நிலையம்' அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): கோயம்புத்தூர் மாவட்டம் தொண்டாமுத்தூர் தொகுதிக்குட்பட்ட வடவள்ளி என்கிற பகுதியில் காவல் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**17—**

### தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் காகிதம் விற்பனையாகாமல் தேங்கி கிடத்தல்

**வினா எண் 2187—திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியாகும் காகிதங்கள் வரி இல்லாமல் விற்கப்படுவதால், தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் காகிதங்கள் விற்பனை ஆகாமல் தேங்கிக் கிடப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியாகும் செய்தித்தாள் காகிதத்திற்கு சுங்கவரி விதிக்கப்படாமல் இருந்தது. எனவே, செய்தித்தாள் நிறுவனங்கள், கட்டுப்பாடின்றி குறைந்த விலைக்கு செய்தித்தாள் காகிதங்களை இறக்குமதி செய்து கொண்டிருந்தன. இதன் காரணமாக, உள்ளூர் காகித உற்பத்தியாளர்களால், இறக்குமதி காகிதத்தின் விலைக்கு இணையாக தங்களின் விலையைக் குறைத்துக்கொண்டு விற்பனையில் போட்டியிட இயலவில்லை. ஆனால், மத்திய அரசு, 1996 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 29-ம் தேதி முதல் இறக்குமதி செய்யப்படும் செய்தித்தாள் காகிதத்திற்கு 10 சதவீதம் சுங்க வரி விதித்து விட்டது.

(ஆ) செய்தித்தாள் உபயோகிப்போர் மட்டுமில்லாமல் யார் வேண்டுமானாலும் செய்தித்தாள்களை இறக்குமதி செய்யலாம் என்ற விதிகளை மாற்றி செய்தித்தாள் உண்மையாக உபயோகிப்போர் (Actual users) மட்டுமே செய்தித்தாளை இறக்குமதி செய்ய வேண்டும் என மத்திய அரசு தற்போது நிபந்தனையிட்டுள்ளது. தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தைப் பொறுத்தவரையில், இலாபம் கிடைத்தாலும் உற்பத்திச் செலவைக் குறைத்து, உற்பத்தித் திறனை மேலும் உயர்த்தி, விற்பனை நடைமுறையில் தவறுகள் ஏற்படாவண்ணம் செய்து. விற்பனையில் உள்ள தேக்கத்தை நீக்க, தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த நடவடிக்கை காரணமாக தற்போது உள்ள செய்தித்தாள் இருப்பு மற்றும் பிப்ரவரி மற்றும் மார்ச்சு '97 மாதங்களின் உற்பத்தியையும் சேர்த்து 31-3-97-க்குள் முழுமையாக விற்பனை செய்ய முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.





**18—**

**கொந்தகையில் புதிய காவல் நிலையம் அமைத்தல்**

**வினா எண் 2340—திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்புவனம் ஒன்றியம் கொந்தகையில் புதிய காவல் நிலையம் அமைக்கும் கருத்துரு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**19—**

**மக்னீசியம் தயாரிக்கும் நிறுவனம் மூடப்பட்டு அவதியுறும் தொழிலாளர்களுக்கு ஊதியம், இடைக்கால நிவாரணம் வழங்குதல்**

**வினா எண் 2360—திரு. டி. மணி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி தாலுக்கா வாலி நோக்கத்தில் கடல் நீரிலிருந்து மக்னீசியம் தயாரிக்கும் நிறுவனம் மூடப்பட்டதால் தொழிலாளர்களுக்குக் கிடைக்க வேண்டிய ஊதியம் மற்றும் இடைக்கால நிவாரணம் கிடைக்கவில்லை என அரசுக்கு புகார் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) இது குறித்த புகார் தமிழ்நாடு மக்னீசியம் மற்றும் மரைன் கெமிக்கல்ஸ் எம்பிளாயீஸ் யூனியனிடமிருந்து 19-8-96 ஆம் தேதியிட்ட கடிதம் மூலம் டி.எம்.எம்.எல். நிறுவனத்தால் பெறப்பட்டது.

(ஆ) தமிழ்நாடு மக்னீசியம் மற்றும் மரைன் கெமிக்கல்ஸ் நிறுவனத்தில் கடந்த 3 ஆண்டுகளாக மக்னீசியம் உற்பத்தி

இல்லையெனினும் ஊழியர்களுக்கு ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. எனினும் 1-7-95 முதல் அரசு ஆணைப்படி வழங்க வேண்டிய அகவிலைப்படி இயக்குநர் குழுமம் முடிவுப்படி 1-1-96 முதல் அகவிலைப்படி உயர்வு செய்து வழங்கப்பட்டு வருகிறது. 1-1-96 முதல் அகவிலைப்படி உயர்வு செய்து தமிழக அரசால் பிறப்பிக்கப்பட்ட ஆணை நிறுவன இயக்குநர் குழுமத்தின் ஆய்வில் உள்ளது.

இடைக்கால நிவாரண நிதி, முதல் மற்றும் இரண்டாவது தவணையாக வழங்கப் பிறப்பிக்கப்பட்ட அரசு ஆணைகள் இந்நிறுவன இயக்குநர் குழுமத்திற்கு தனித்தனியே சமர்ப்பிக்கப்பட்டது. வாலிநோக்கம் மக்னீசியம் நிறுவனத்தில் 31-1-93 முதல் மக்னீசியம் உற்பத்தி இல்லாத நிலையிலும், சொந்த நிதி ஆதாரம் இல்லாத நிலையிலும் இடைக்கால நிவாரணம் அனுமதிக்க இயலாதென நிறுவன இயக்குநர் குழுமம் முடிவு எடுத்துள்ளது.

**20—**

**தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத் திருத்தம் கொண்டு வருதல்**

**வினா எண் 2596—திரு. வி.பி. சிங்காரவேலு:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கள்ளச்சாராய வழக்குகளில் காவல் துறையினரே அபராதம் விதிக்கலாம் என்ற பிரிவை நீக்கவும், குற்றம் நிரூபிக்கப்பட்டால் குறைந்தபட்சம் 6 மாத காலம் சிறைத்தண்டனை வழங்குவதற்கும், தமிழ்நாடு மதுவிலக்குச் சட்ட திருத்தம் கொண்டு வரப்படுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

மதுவிலக்குக் குற்றங்களில் இணக்கமுறைத் தீர்வின்மூலம் காவல்துறையினர் அபராதம் விதிக்கும் முறையில் மாற்றம் செய்யவும், தற்போது நடைமுறையில் உள்ள மதுவிலக்குக் குற்றங்களுக்கான தண்டனைகளையும் மாற்றம் செய்யும் உத்தேசம் இல்லை.

**21—**

**விக்கிரவாண்டியில் "சிப்காட்" தொழிற்பேட்டை தொடங்குதல்**

**வினா எண் 2628—திரு. ச. அழகுவேலு:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) விக்கிரவாண்டியில் ஒரு சிப்காட் தொழிற்பேட்டை தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): விழுப்புரம் ராமசாமி படையாட்சியார் மாவட்டம் விக்ரவாண்டியில் தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்) மற்றும் தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் (டாசிட்) தொழில் வளாகம் அமைப்பதற்கான உத்தேசம் ஏதும் தற்போது இல்லை.

**22—**

**பேராவூரணித் தொகுதியில் கூட்டுறவு சர்க்கரை ஆலை அமைத்தல்**

**வினா எண் 2630—திரு. வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணித் தொகுதியில் ஒரு கூட்டுறவு சர்க்கரை ஆலை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணித் தொகுதியில் ஒரு கூட்டுறவு சர்க்கரை ஆலை அமைக்க தற்சமயம் சாத்தியக் கூறு ஏதும் இல்லை.

**23—**

**கூட்டுறவு சர்க்கரை ஆலை அமைத்தல்**

**வினா எண் 2758—திரு. கே. வேணு:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கும்மிடிப்பூண்டி கூட்டுறவு சர்க்கரை ஆலையை விரைவில் அமைக்க அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமா?

[1997 ஏப்ரல் 30

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

கும்மிடிப்பூண்டி புதிய சர்க்கரை ஆலையை விரைவில் அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அது கூட்டுறவுத் துறையில் அமைக்கலாமா? அல்லது தனியார் துறையில் அமைக்கலாமா என்பதும் பரிசீலனையில் உள்ளது.

**24—**

**புதிய காவலர் குடியிருப்பு கட்டுதல்**

**வினா எண் 2969—திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதி, நாங்குநேரி, ஏர்வாடியில் பணிபுரியும் காவலர்களுக்குப் புதிய காவலர் குடியிருப்பு கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும்?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**25—**

**காவல் துறையினர் குடியிருப்புகளுக்கு தனி மீட்டர் பொருத்துதல்**

**வினா எண் 3085—திரு. இரா. மதிவாணன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகக் காவல் துறையினர் குடியிருப்புகளுக்கு தனி மீட்டர் (EB) பொருத்துவது குறித்து அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

தமிழகக் காவல் துறையினரின் அனைத்து காவலர் குடியிருப்புகளுக்கும் தனி மீட்டர் (EB) பொருத்துவது குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.



1997 ஏப்ரல் 30 ]

**26—**

**மத்திய அரசு வழங்கும் உரிமத்தை உயர்த்திக் கொடுத்தல்**

**வினா எண் 3120—திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கனிமப் பொருள்களுக்கும் எண்ணெய் மற்றும் வாயு (கேஸ்) பொருள்களுக்கும் மத்திய அரசு வழங்கும் உரிமத்தை உயர்த்திக் கொடுக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், இதன் மூலம் தமிழ்நாட்டிற்குக் கிடைக்கவுள்ள அதிக வருமானம் எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) கனிமப் பொருட்களுக்கும் (நிலக்கரி நீங்கலான) எண்ணெய் வாயு பொருட்களுக்கும் உரிமத் தொகை உயர்த்தி கொடுப்பது மத்திய அரசு ஏற்படுத்தியுள்ள குழுக்களின் ஆய்வில் உள்ளது.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**27—**

**கள்ளச்சாராயம் காய்ச்சுவோரை வேறு தொழிலில் ஈடுபடுத்துதல்**

**வினா எண் 3122—திரு. வெ.ஆ. ஆண்டமுத்து:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானிசாகர் தொகுதி, ராயர் பாளையம் கிராமத்தில் கள்ளச் சாராயம் காய்ச்சுவது பலரின் பரம்பரைத் தொழிலாக உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) அப்பணியில் உள்ளோரை வேறு தொழிலில் ஈடுபடுத்தி வாழவைக்க அரசிடம் திட்டம் ஏதேனும் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) ஆம்.

(இ) கள்ளச்சாராயம் காய்ச்சும் தொழிலை விட்ட நபர்களில், தகுதியானவர்களுக்கு, ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் மற்றும் மாவட்ட தொழில் மையங்களில் இயங்கிவரும் சுயவேலை வாய்ப்புத் திட்டம் முதலியவற்றின் மூலம் ஏதாவது வணிகம் அல்லது தொழில்கள் நடத்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நிதியுதவி அளித்து வருகின்றனர்.

**28—**

## சிப்காட் தொழிற்பேட்டையில் தொழிற்சாலைகளை மூடுவதினின்று காப்பாற்றுதல்

**வினா எண் 3236—திரு. செ. இராமலிங்கம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் சிப்காட் தொழிற்பேட்டையில் நலிவடைந்த தொழிற்சாலைகள் எத்தனை?

(ஆ) இத்தொழிற்சாலைகள் செலுத்த வேண்டிய பாக்கித் தொகையை அரசு தள்ளுபடி செய்து தொழிற்சாலைகளை மூடிவிடுவதினின்று காப்பாற்ற அரசு முன் வருமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மூன்று. அவையாவன:

1. ஆஸ்வாலி கெமிக்கல்ஸ்.
2. கோரமண்டல் பாலிபேக்ஸ் பி. லிட்.
3. இண்டாக் பிராடக்ட் பி. லிட்.

(ஆ) சிப்காட்டின் நடப்பு விதிகளின்படி தொழிற்சாலை செலுத்த வேண்டிய பாக்கித் தொகையை தள்ளுபடி செய்ய இயலாது.



**29—**

## சர்க்கரை ஆலை அமைக்கும் திட்டம்

**வினா எண் 3247—திரு. பி. இராசமாணிக்கம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஒரத்தநாட்டில் சர்க்கரை ஆலை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

இல்லை.

**30—**

## சென்னை 153-வது வட்ட ஒரு பகுதி மக்களுக்கு ஏற்படும் இடர்ப்பாடு

**வினா எண் 3252—திரு. மீ. அ. வைத்தியலிங்கம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை 153-வது வட்டத்தில் ஒரு பகுதி அண்ணா மாவட்டத்திலுள்ள காவல் நிலையத்தோடு இணைக்கப்பட்டிருப்பதால் அப்பகுதி மக்களுக்கு ஏற்படும் இடர்ப்பாடு அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுத்துவரும் நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 153-வது வட்டம் வேளச்சேரி சென்னை மாநகர எல்லையுள் உள்ளது. மேற்படி வட்டம் சென்னை மாநகர் வேளச்சேரி காவல்நிலைய எல்லைக்குள் உள்ளது. ஆனால், மேற்படி வட்டத்திற்குள் அடங்கும் ஒரு பகுதியான டாக்டர் அம்பேத்கார் நகர் அண்ணா மாவட்டத்தில் உள்ள ஆதம்பாக்கம் காவல் நிலையத்தின் எல்லைக்குள் உள்ளது. இதனால் பொதுமக்களுக்கு இடையூறு உள்ளது. பொதுமக்களுக்கு ஏற்படும் இடையூறுகளைப் போக்க தற்போது

[1997 ஏப்ரல் 30

தற்காலிக ஏற்பாடாக 6-11-96 முதல் ஏற்கெனவே உள்ள ஆளினர்களைப் பயன்படுத்தி டாக்டர் அம்பேத்கார் நகரில் புறக்காவல் நிலையம் செயல்பட்டு வருகிறது.

**31—**

**பாரடைஸோ கிரானைட் கற்கள் எடுத்துச் செல்வதைத் தடுத்தல்**

**வினா எண் 3269—திரு. இ. ஜி. சுகவனம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டம், பர்கூர் தொகுதியில் அதிகமாக பாரடைஸோ கிரானைட் கற்கள் தனியார் நிறுவனங்கள் அரசுக்குச் செலுத்த வேண்டிய தொகையைச் (permit fee etc.) செலுத்தாமல் எடுத்துச் செல்வதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தனியார் குத்தகை நிறுவனங்கள் அரசுக்கு "சீலியரேஜ்" கட்டணம் செலுத்தி விண்ணப்பம் செய்து மாவட்ட ஆட்சியரின் அங்கீகாரம் பெற்ற பிறகு அனுப்புகை சீட்டு மற்றும் இசைவாணை சீட்டுப்பெற்று கற்கள் எடுத்துச் செல்கின்றனர். எனினும் சிலர் அனுமதியின்றி கற்கள் எடுத்துச் செல்வது கண்டறியப்பட்டு லாரிகள் கற்களுடன் கைப்பற்றப்பட்டு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. சில நேர்வுகளில் அனுமதியின்றி கள்ளத்தனமாக எடுத்துச் செல்வது கண்டுபிடிக்கப்பட்டு அபராதம் விதிக்கப்படுகிறது. மேலும் அனைத்து கிராம நிர்வாக அலுவலர்கள் மற்றும் உள்வட்ட வருவாய் ஆய்வாளர்களுக்கு தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டு வருகிறது.

**32—**

**புதூரில் காவல் நிலையம்**

**வினா எண் 3304—திரு. ஜே. எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அம்பத்தூர் புதூரில் காவல் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?



1997 ஏப்ரல் 30]

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

இல்லை.

**33—**

**இன்டூரில் காவல் நிலையம்**

**வினா எண் 3333—திரு. ஜி. கே. மணி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தர்மபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி இன்டூரில் காவல் நிலையம் நடப்பாண்டில் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

இல்லை.

**34—**

**மற்றொரு கரும்பு ஆலை**

**வினா எண் 3359—டாக்டர் மு. தேவராஜன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பலூர் தொகுதியில் கரும்பு உற்பத்தி அதிகம் உள்ளதால் மற்றொரு கரும்பு ஆலை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

[1997 ஏப்ரல் 30

35—

## சர்க்கரை ஆலை அமைக்கும் திட்டம்

**வினா எண். 3368—திரு. பா. அருண்குமார்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டுப்பாளையம் தொகுதியில், ஒரு சர்க்கரை ஆலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) இல்லை

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

36—

## தச்சம்பட்டில் காவல் நிலையம்

**வினா எண் 3381—திரு. கே. மணிவர்மா:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம் தண்டராம்பட்டு தொகுதி, தச்சம்பட்டு கிராமத்தில் காவல் நிலையம் ஏற்படுத்த அரசு முன் வருமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

இல்லை.

37—

## நீலாங்கரை, டாக்டர் அம்பேத்கார் நகரில் புறநகர் காவல் நிலையம்

**வினா எண் 3724—திரு. மீ.அ. வைத்தியலிங்கம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1997 ஏப்ரல் 30]

(அ) செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டம், தாம்பரம் தொகுதியில் நீலாங்கரையிலும் சென்னை மாவட்டத்தில் 153வது வட்டம் டாக்டர் அம்பேத்கார் நகரிலும், புறநகர் காவல் நிலையங்கள் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): செங்கை எம்.ஜி.ஆர் மாவட்டம், தாம்பரம் தொகுதியில் நீலாங்கரையில் புதியதாக காவல் நிலையம் அமைக்கும் கருத்துருவை 1998-99ம் ஆண்டு பகுதி-2 திட்டங்களின் கீழ் கொண்டுவர முடிவெடுக்கப்பட்டுள்ளது. சென்னை மாவட்டம் 153வது வட்டம் டாக்டர் அம்பேத்கார் நகரில் தற்போது தற்காலிக ஏற்பாடாக 6-11-96 முதல் ஏற்கனவே உள்ள ஆளினர்களைப் பயன்படுத்தி புறக்காவல் நிலையம் செயல்பட்டுவருகிறது. இப்புறக்காவல் நிலையத்தில் 1 தலைமைக் காவலரும், 4 இரண்டாம் நிலைக் காவலரும் பணிபுரிந்து வருகின்றனர்.

38—

## சின்ன திருப்பதியில் புறக்காவல் நிலையம்

**வினா எண் 3739—திரு. ஆர். ஆர். சேகரன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓமலூர் தொகுதி, சின்ன திருப்பதியில் புறக்காவல் நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரமென்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

39—

## சோடா ஆஷ் தொழிற்சாலை

**வினா எண் 3741—திரு. எஸ்.கே. வேதரத்தினம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேதாரண்யத்தில் சோடா ஆஷ் தொழிற்சாலை எப்போது தொடங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

வேதாரண்யத்தில் சோடா ஆஷ் தொழிற்சாலை துவங்கும் திட்டம் எதுவும் இப்பொழுது பரிசீலனையில் இல்லை.

40—

## போக்குவரத்து காவல் பிரிவு தொடங்குதல்

**வினா எண் 3917—திரு. எஸ். எஸ். பொன்முடி :** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சூலூர் காவல் நிலைய அதிகார எல்லையில் போக்குவரத்து காவல் பிரிவு தொடங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

இல்லை.

41—

## கரும்பு உற்பத்தியாளர்களுக்கு பாக்கித் தொகை

**வினா எண் 3935—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், சக்தி சர்க்கரை ஆலை நிறுவனம், கரும்பு உற்பத்தியாளர்களுக்குக் கொடுக்க வேண்டிய பாக்கித் தொகை குறித்து விவரம் வந்துள்ளதா?



(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) சக்தி சர்க்கரை ஆலை நிறுவனம் மைய அரசின் விலை மற்றும் மாநில அரசின் பரிந்துரை விலை ஆகியவற்றை நிலுவையின்றி முழுமையாக, கரும்பு உற்பத்தியாளர்களுக்குக் கொடுத்து முடித்து விட்டது.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

42—

## மதுரை சர்க்கரை ஆலை விவரம்

**வினா எண் 3950—திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை சர்க்கரை ஆலை அரசுடைமையாக்கப்பட்டுள்ளதா?

(ஆ) அதன் அரைவைத்திறன் நாள் ஒன்றுக்கு எத்தனை டன்?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) ஆம் அரசுடைமையாக்கப்பட்டுள்ளது.

(ஆ) அரைவைத்திறன் நாளொன்றுக்கு 1250 டன்களாகும்.

43—

## தமிழகக் காவல்துறைக் குழு பரிந்துரை

**வினா எண் 4061—திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசால் அமைக்கப்பட்ட தமிழகக் காவல் துறைக் குழு அரசுக்குப் பரிந்துரை செய்த நூறு பரிந்துரைகளின் மீது அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): போலீஸ் கமிஷனின் அறிக்கையில் காணும் பரிந்துரைகளில் இதுகாறும் 48 பரிந்துரைகள் முழுமையாகவும், 16 பரிந்துரைகள் பகுதியாகவும் செயல்படுத்தப்பட்டுள்ளன. எஞ்சிய பரிந்துரைகளின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**44—**

**அயல்நாட்டில் வாழும் இந்தியர்கள், தமிழ்நாட்டில் தொழில் தொடங்கும் விவரம்**

**வினா எண் 4069—திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அயல்நாட்டில் வாழும் இந்தியர்கள், தமிழ்நாட்டில் தொழில் தொடங்க அரசு என்னென்ன சலுகைகள் அளிக்கிறது?

(ஆ) குறிப்பிட்ட தொகைக்கு மேல் முதலீடு செய்யும் தொழில்களுக்கு அரசு சிறப்புச் சலுகை ஏதாவது அளிக்கிறதா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): ஒரு விவர அறிக்கை பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

## அறிக்கை

**தமிழக அரசினால் தொழிற்சாலைகளுக்கு அளிக்கப்பட்டு வரும் சலுகைகள்**

(அ) மாநில மூலதன ஊக்குதவி (சிறு, நடுத்தர மற்றும் பெரிய அளவிலான எல்லா தொழில்களுக்கும் பொதுவானவை.)





**(1) மிகவும் பின்தங்கிய வட்டாரங்களுக்கான ஊக்குதவி:**

மிகவும் பின்தங்கிய வட்டாரங்கள் மற்றும் தூத்துக்குடி, மானாமதுரை, புதுக்கோட்டை ஆகிய இடங்களிலுள்ள சிப்காட் தொழில் வளாகங்களில் அமைக்கப்படும் தொழிற்சாலைகளுக்கு அதிக பட்சம் ரூ. 20 இலட்சம் என்ற உச்சவரம்பிற்கு உட்பட்டு, நிலையான சொத்துக்களின் மீது 20% மூலதன ஊக்குதவி தரப்படும்.

**(2) பின்தங்கிய வட்டாரங்களுக்கான ஊக்குதவி:**

பின்தங்கிய வட்டாரங்கள் மற்றும் தூத்துக்குடி, மானாமதுரை, புதுக்கோட்டை ஆகியவற்றைத் தவிர மற்ற இடங்களில் உள்ள சிப்காட் தொழில் வளாகங்களிலும், மற்றும் சிட்கோ, சென்னை ஏற்றுமதி செயல்முறை மண்டலம் (MEPZ), சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் உள்ளிட்ட அரசு நிறுவனங்களால் ஏற்படுத்தப்பட்டுள்ள தொழில் பேட்டைகளிலும் அமைக்கப்படும் தொழிற்சாலைகளுக்கு ரூ.15 இலட்சம் என்ற உச்சவரம்பிற்கு உட்பட்டு நிலையான சொத்துக்களின்மீது 15% மூலதன ஊக்குதவி தரப்படும்.

**(3) மின்னியல் தொழில்களுக்கு சிறப்பு ஊக்குதவி:**

தமிழ்நாட்டில் எந்த இடத்திலும் நிறுவப்படும் தோல் பிரிவுகளுக்கு ரூ. 20 இலட்சம் என்ற உச்ச வரம்பிற்கு உட்பட்டு நிலையான சொத்துக்களின் மீது 20% சிறப்பு ஊக்குதவி அளிக்கப்படும்.

**(4) தோல் தொழில்களுக்கு சிறப்பு ஊக்குதவி:**

தமிழ்நாட்டில் எந்த இடத்திலும் நிறுவப்படும் தோல் பிரிவுகளுக்கு ரூ. 20 இலட்சம் என்ற உச்ச வரம்பிற்கு உட்பட்டு நிலையான சொத்துக்களின் மீது 20% சிறப்பு ஊக்குதவி அளிக்கப்படும்.

**(5) தெரிந்தெடுக்கப்பட்ட வகை தொழில்களுக்கு சிறப்பு ஊக்குதவி:**

தமிழ்நாட்டில் எந்த இடத்திலும் அமைக்கப்படும் கீழ்க்கண்ட தெரிந்தெடுக்கப்பட்ட வகை நடுத்தர மற்றும் பெருந்தொழில்களுக்கு ரூ. 15 இலட்சம் என்ற உச்ச வரம்பிற்குட்பட்டு நிலையான சொத்துக்களின் மீது 10% சிறப்பு ஊக்குதவி அளிக்கப்படும்.

(i) ஆட்டோமொபைல் உதிரிபாகங்கள்

(ii) மருந்துகள் மற்றும் மருந்துவியல்

[1997 ஏப்ரல் 30

(iii) சூரிய ஒளி எரிசக்தி சாதனங்கள் மற்றும் இதர மரபு சாரா எரிசக்தி சாதனங்கள்.

(iv) ஏற்றுமதிக்காக தங்க நகை செய்தல் மற்றும் வைர செயல்முறை பிரிவுகள்

(v) மாசுக்கட்டுப்பாடு சாதனங்கள்

(vi) விளையாட்டு சாதனங்கள் மற்றும் உபகரணங்கள்

(vii) உணவு செயல்முறைத் தொழில்

(viii) அலுமினியம் அல்லது பி.வி.சி. கதவுகள் மற்றும் ஜன்னல்கள், ஜன்னல் சட்டங்கள் போன்ற விலைப்பயனுள்ள கட்டுமான பொருட்கள்.

(ix) சணல் தொழிற்சாலை (சில குறிப்பிட்ட இடங்களில்) மேற்படி பொருட்கள் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள சிறு தொழில்களைப் பொருத்தவரை ரூ.15 இலட்சம் என்ற உச்சவரம்பிற்குட்பட்டு நிலையான சொத்துக்களின் மீது 20% ஊக்குதவி அளிக்கப்படும்.

**(6) வழிமுனைத் தொழில்களுக்கான சிறப்பு ஊக்குதவி:**

தொழில் வளத்தில் பின்தங்கிய அல்லது மிகவும் பின்தங்கிய வட்டாரங்களில் நிலையான சொத்துக்களின் மீது ரூ. 5 கோடிக்கு மேல் முதலீடு செய்து புதியதாக ஏதேனும் தொழிற்பிரிவு தொடங்கப்பட்டு ஏற்கனவே அந்த அளவிற்கு மூலதன முதலீட்டுடன் அப்பகுதியில் அதுபோன்ற தொழிற்பிரிவு ஏதும் இல்லாதிருப்பின் மூலதன ஊக்குதவியாக ரூ.25 இலட்சம் வழங்கப்படும். தமிழ்நாட்டில் எந்த இடத்திலேனும் நிலையான சொத்துக்களின் மீது ரூ.25 கோடிக்கு மேல் முதலீடு செய்து புதிய பிரிவுகள் தொடங்கப்பட்டாலும், ஏற்கனவே உள்ள தொழில் பிரிவுகள் நிலையான சொத்துக்களின் மீது கூடுதலாக ரூ. 25 கோடிக்கு மேல் முதலீடு செய்து தொழிலை விரிவுபடுத்தினாலும் அல்லது மாற்றியமைத்தாலும் மூலதன ஊக்குதவியாக ரூ.25 இலட்சம் வழங்கப்படும்.



1997 ஏப்ரல் 30 ]

**(7) மெகா திட்டங்களுக்கான சிறப்பு ஊக்குதவி :**

(i) தமிழ்நாட்டில் எந்தப் பகுதியிலேனும் ரூ. 50 கோடிக்கு மேற்பட்டும், ரூ. 100 கோடிக்கு குறைவாகவும் முதலீட்டுடன் தொழில் தொடங்கப்பட்டால் மூலதன ஊக்குதவி ரூ. 25 இலட்சம் வழங்கப்படும்.

(ii) தமிழ்நாட்டில் எந்தப்பகுதியிலேனும் ரூ.100 கோடிக்கு மேற்பட்டும் ரூ. 200 கோடிக்குக் குறைவாகவும் முதலீட்டுடன் தொடங்கப்படும் தொழில்களுக்கு ரூ. 50 இலட்சம் ஊக்குதவி அளிக்கப்படும்.

(iii) தமிழ்நாட்டில் எந்தப் பகுதியிலேனும் ரூ. 200 கோடி அல்லது அதற்கு மேலும் முதலீட்டுடன் தொடங்கப்படும் தொழில்களுக்கு ரூ. 100 இலட்சம் ஊக்குதவி வழங்கப்படும்.

**(8) கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கான சிறப்பு ஊக்குதவி :**

தற்போதுள்ள தோல் தொழிற்சாலைகளால் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட சொத்துக்களின் மீது ரூ.2 இலட்சம் என்ற உச்சவரம்பிற்குட்பட்டு 10% சிறப்பு ஊக்குதவி அளிக்கப்படும்.

**(9) ஜெனரேட்டர்கள் வாங்குவதற்காக கூடுதல் ஊக்குதவி :**

சொந்த உபயோகத்திற்காக வாங்கப்படும் புதிய ஜெனரேட்டர்களுக்கு ரூ. 5 லட்சம் என்ற உச்சவரம்பிற்கு உட்பட்டு, அவற்றின் மதிப்பில் 15% ஊக்குதவியாக வழங்கப்படும். இந்த ஊக்குதவி, தகுதிவாய்ந்த தொழில்களுக்கு அவை எந்த இடத்தில் இருப்பினும் பிற்படுத்தப்பட்ட பகுதி ஊக்குதவி/சிறப்பு ஊக்குதவி ஆகியவை அல்லாமல் கூடுதலாக வழங்கப்படும்.

**(10) பெண் தொழிலாளர்களை பணி அமர்த்துவதற்காக அளிக்கப்படும் கூடுதல் ஊக்குதவி :**

எந்த ஒரு தொழில் பிரிவிலும் (சிறு, நடுத்தர அல்லது பெரிய) மொத்த பணியாட்களில் 30% பெண்களாக இருப்பின் ரூ. 5 இலட்சம் என்ற உச்சவரம்பிற்குட்பட்டு, நிலையான சொத்துக்களின் முதலீட்டின் மீது 5% கூடுதல் மூலதன ஊக்குதவியாக அளிக்கப்படும்.

[1997 ஏப்ரல் 30

**(11) புதிய சுற்றுலா திட்டங்களுக்காக சிறப்பு ஊக்குதவி :**

தமிழ்நாட்டில் சென்னை, கோயம்புத்தூர் மற்றும் மாநகராட்சி எல்லைகளைத் தவிர மற்ற இடங்களில் அமைக்கப்படும் ரூ. 100 இலட்சத்திற்கு குறைவான முதலீட்டுடன் கூடிய ஒரு நட்சத்திரம், இரண்டு நட்சத்திரம், மூன்று நட்சத்திர ஓட்டல்களுக்கும், பொழுதுபோக்கு பூங்காக்கள், ஏற்பளிக்கப்பட்ட சுற்றுலா நடத்துநர்கள் (குளுமை வசதி செய்யப்பட்ட ஊர்திகளுக்கான) கோல்ப் மைதானங்கள் மற்றும் மத்திய/மாநில அரசுகளால் ஏற்பளிக்கப்பட்ட உணவகங்கள் ஆகியவற்றிற்கு ரூ. 10 இலட்சம் என்ற உச்சவரம்பிற்குட்பட்டு நிலத்தின் விலை உள்ளிட்ட மொத்த முதலீட்டின் மீது 10% மூலதன ஊக்குதவியாக அளிக்கப்படும். மேற்படி சுற்றுலாத் திட்டங்களுக்கு ஜெனரேட்டர் ஊக்குதவியும் அளிக்கப்படும்.

## (ஆ) விற்பனைவரி ஒத்தவைப்பு/ கைவிடுதல் திட்டம்

**1. சிறு, நடுத்தர, மற்றும் பெரும் தொழில்களுக்கான புதிய வட்டியற்ற விற்பனை வரி ஒத்திவைப்பு/ கைவிடுதல் திட்டம்.**

*1.1.* புதிய பிரிவுகள் மற்றும் ஏற்கனவே உள்ள பிரிவுகள் விரிவு படுத்துதல்/ மாற்றியமைத்தல் ஆகியவற்றை மேற்கொள்ளும்போது விற்பனை வரி ஒத்திவைப்பு/கைவிடுதல் வசதிகள் அளிக்கப்படும். இந்த திட்டம் மாநிலத்தின் எல்லா பகுதிகளுக்கும் கிடைக்கும். இந்த திட்டத்தின் கீழ் மாநிலத்திலுள்ள மூன்று விதமான பகுதிகளுக்கு வேறுபட்ட அளவிலான உதவிகள் அளிக்கப்படும்.

*1.2.* தொழில் வளத்தில் மிகவும் பின்தங்கிய வட்டாரங்கள் தூத்துக்குடி, புதுக்கோட்டை, மானாமதுரை ஆகிய இடங்களிலுள்ள சிப்காட் தொழில் வளாகங்கள், செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டம், சோளிங்கநல்லூரில் உள்ள விக்ரம் சாராபாய், இன்ஸ்ட்ரானிக்ஸ் எஸ்டேட், மின்னியல் நகரம், சென்னை பெருங்குடியில் உள்ள தொழில் பேட்டை.

*1.3.* தொழில் வளத்தில் பின்தங்கிய வட்டாரங்கள், தூத்துக்குடி, புதுக்கோட்டை, மானாமதுரை, அல்லாத பிற இடங்களிலுள்ள சிப்காட் தொழில் வளாகங்கள் சிட்கோ தொழிற் பேட்டைகள் மற்றும் அரசு நிறுவனங்களான சென்னை ஏற்றுமதி செயல்முறை மண்டலம், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம், மற்றும் தொழில் மற்றும் வணிக வரித்துறை இயக்குநரால் ஏற்படுத்தப்பட்ட எல்லா தொழில் பேட்டைகள்.



1997 ஏப்ரல் 30 ]

*1.4.* மேலே பத்தி 1.2, மற்றும் 1.3 ல் குறிப்பிடப்படாத, மாநிலத்திலுள்ள மற்ற இதரப் பகுதிகள்.

**2. புதிய பிரிவுகள்**

*2.1.* பத்தி 1.2-ல் குறிப்பிடப்பட்டுள்ள பகுதிகளில் ஏற்படுத்தப்பட்ட புதிய சிறு, நடுத்தர மற்றும் பெரும் தொழில்களுக்கு நிலையான சொத்துக்களின் மீதான மொத்த முதலீட்டுக்குட்பட்டு, 5 வருட காலத்திற்கான விற்பனை வரியைக் கைவிடல் வசதி அளிக்கப்படும். 5 வருட விற்பனை வரி கைவிடல் வசதிக்கு பதிலாக 9 வருட விற்பனை வரி ஒத்திவைப்பை வேண்டுமானாலும் அவர்கள் பெற்றுக் கொள்ளலாம்.

*2.2.* பத்தி 1.3-ல் குறிப்பிடப்பட்டுள்ள பகுதிகளில் ஏற்படுத்தப்பட்ட புதிய தொழில்களுக்கு நிலையான சொத்துக்களின் மீதான மொத்த முதலீட்டு அளவு வரைக்குமான முழுமையான விற்பனை வரி ஒத்திவைப்பு ஒன்பது வருட காலங்களுக்கு அளிக்கப்படும்.

*2.3.* மற்ற பகுதிகளில் ஆரம்பிக்கப்பட்ட புதிய தொழில்களுக்கு, நிலையான சொத்துக்களின் மீதான மொத்த முதலீட்டில் 60 % என்ற உச்சவரம்பிற்குட்பட்டு விற்பனை வரி ஒத்திவைப்பு 5 வருட காலத்திற்கு அளிக்கப்படும்.

*2.4.* 18-4-90-ல் அல்லது அதற்குப் பிறகு விற்பனைக்கு உண்டான பொருள் உற்பத்தியைத் தொடங்கிய பிரிவுகளுக்கு இத்திட்டத்தின் கீழ் சலுகைகள் அளிக்கப்படும்.

**3. விரிவாக்கம் மற்றும் மாற்றியமைத்தல்**

பத்தி 1.2-ல் குறிப்பிடப்பட்டுள்ள பகுதிகளில் ஏற்கனவே உள்ள தொழிற்சாலைகள் விரிவாக்கம்/ மாற்றியமைத்தலை மேற்கொள்கிற பொழுது அவற்றிற்கு நிலையான சொத்துக்களின் மீதான விரிவாக்கம்/ மாற்றியமைத்தலில் கூடுதலாக முதலீட்டு தொகைக்கு உட்பட்டு 5 வருட காலத்திற்கு முழுமையாக விற்பனை வசதி கைவிடல் வசதி அளிக்கப்படும். 5 வருட விற்பனை வரி கைவிடல் வசதிக்குப் பதிலாக ஒன்பது வருட காலத்திற்கான விற்பனை வரி ஒத்திவைப்பு வசதியை வேண்டுமானாலும் அவர்கள் பெற்றுக் கொள்ளலாம்.

[1997 ஏப்ரல் 30

**3.2.** பத்தி 1.3-ல் குறிப்பிடப்பட்டுள்ள பகுதிகளில் ஏற்கெனவே உள்ள தொழிற்சாலைகள் விரிவாக்கம்/ மாற்றியமைத்தலை மேற்கொள்ளும் பொழுது நிலையான சொத்துக்களின் மீதான விரிவாக்கம்/ மாற்றியமைத்தலில் கூடுதல் முதலீட்டில் 80% என்ற உச்சவரம்பிற்குட்பட்டு ஒன்பது வருடகாலத்திற்கான விற்பனை வரி ஒத்திவைப்பு அளிக்கப்படும்.

**3.3.** மற்ற பிற பகுதிகளில் ஏற்கனவே உள்ள தொழில் பிரிவுகளுக்கு நிலையான சொத்துகளின் மீதான விரிவாக்கம்/மாற்றியமைத்தலில் கூடுதல் முதலீட்டில் 50% என்ற உச்ச வரம்பிற்குட்பட்டு 5 வருடகாலத்திற்கான விற்பனை வரி ஒத்திவைப்பு அளிக்கப்படும்.

**4. ஓட்டல்களுக்கான விற்பனை வரி ஒத்திவைப்பு வசதி**

மற்ற புதிய தொழிற்சாலைகளுக்கு உள்ளது போலவே நிலையான சொத்துக்களின் மீதான மொத்த முதலீட்டு தொகைக்குட்பட்டு, சென்னை, கோயம்புத்தூர் மற்றும் மதுரை மாநகராட்சி எல்லைகள் நீங்கலாக தமிழ்நாட்டில் மற்ற இடங்களில் 20-1-92-ல் அல்லது அதன்பிறகு ரூ. 100 இலட்சம் முதலீட்டிற்குக் குறைவாக நிறுவப்பட்ட ஒரு நட்சத்திரம், இரு நட்சத்திரம் மற்றும் மூன்று நட்சத்திர ஓட்டல்களுக்கு 5 ஆண்டுகளுக்கு விற்பனை வரி ஒத்திவைப்பு அளிக்கப்படும்.

**5. மெகா திட்டங்களுக்கான விற்பனை வரி ஒத்திவைப்பு/கைவிடல் வசதி**

**5.1.** தமிழ்நாட்டில் எந்தப் பகுதியிலேனும், ரூ. 50 கோடி அல்லது அதற்கு மேலும் மற்றும் ரூ. 100 கோடிக்குக் குறைவான முதலீட்டில் நிறுவப்படும் தொழில்களுக்கு, நிலையான சொத்துக்களின் மீதான மதிப்பில் 100 % என்ற உச்சவரம்பிற்குட்பட்டு, ஐந்து ஆண்டிற்கான விற்பனைவரி கைவிடல் வசதி அல்லது பத்து ஆண்டிற்கான ஒத்திவைப்பு வசதி அளிக்கப்படும்.

**5.2.** தமிழ்நாட்டில் எந்தப்பகுதியிலேனும் ரூ.100 கோடி அல்லது அதற்கு மேலும் மற்றும் ரூ.300 கோடிக்குக் குறைவான முதலீட்டில் நிறுவப்படும் தொழில்களுக்கு, நிலையான சொத்துக்களின் மீதான மதிப்பில் 100 சதவிகிதம் என்ற உச்சவரம்பிற்குட்பட்டு, 6 ஆண்டுகளுக்கான விற்பனை வரி கைவிடல் வசதி அல்லது 12 ஆண்டுகளுக்கான ஒத்திவைப்பு வசதி அளிக்கப்படும்.



1997 ஏப்ரல் 30 ]

**5.3.** தமிழ்நாட்டில் எந்தப் பகுதியிலேனும் ரூ.300 கோடிக்கு மேலான முதலீட்டில் நிறுவப்படும் தொழில்களுக்கு நிலையான சொத்துக்களின் மீதான முதலீட்டில் 100 சதவிகிதம் என்ற உச்சவரம்பிற்குட்பட்டு 7 வருடத்திற்கான விற்பனைவரி கைவிடல் வசதி அல்லது 14 வருடத்திற்கான ஒத்திவைப்பு வசதி அளிக்கப்படும்.

**(இ) விற்பனை வரி (தமிழ்நாடு பொது விற்பனை வரி) திருப்பியளிக்கும் திட்டம்**

சென்னை ஏற்றுமதி செயல்முறை மண்டலத்தில் (MEPZ) நிறுவப்பட்டுள்ள தொழிற்பிரிவுகள் மற்றும் 100 சதவீத ஏற்றுமதி தயாரிப்புப் பிரிவுகளுக்கு உள்ளூர் வரிவிதிப்புப் பகுதியிலிருந்து வழங்கப்படும் கச்சாப் பொருட்கள் மற்றும் மூலதனப் பொருட்களின் மீதான தமிழ்நாடு பொது விற்பனை வரியை சிப்காட் நிறுவனம் மூலமாக 31-3-96 வரை தொழில் பிரிவுகளுக்குத் திரும்ப அளிக்கப்படுகிறது. வரும் ஆண்டுகளில் இத்தொழில் பிரிவுகள் செலுத்தும் கச்சாப் பொருட்களுக்கான விற்பனைவரி, வணிகவரித்துறை மூலமாக திரும்ப அளிக்கப்படும்.

**5.4.** ரூ.1500 கோடிக்கு மேற்பட்ட சூப்பர் மெகா (Super Mega) திட்டங்களுக்கு 14 ஆண்டுகள் விற்பனைவரி தள்ளுபடி/ஒத்திவைப்பு அளிக்கப்படும். மேற்கண்ட சலுகைகள் அனைத்தும் அயல்நாட்டு வாழ் இந்தியர்கள் துவங்கும் தொழில்களுக்கும் அளிக்கப்படும்.

**45—**

**தனியார் சர்க்கரை ஆலை**

**வினா எண் 4115—திரு. தா. உதயசூரியன் :** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் வட்டத்தில் தனியார் சர்க்கரை ஆலை நிறுவ அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) சங்கராபுரம் வட்டத்தில் தனியார் துறையில் ஒரு சர்க்கரை ஆலை நிறுவ மாநில அரசு, மைய அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது.

(ஆ) மத்திய அரசின் ஆணை கிடைத்தவுடன் இந்த ஆலை நிறுவப்படும்.

**46—**

**ஆளுநரின் காரை மறித்தவர்கள் மீது வழக்குப் பதிவு செய்தல்**

**வினா எண் 4158—திரு. ரா. சேதுநாதன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1995-ம் வருடம் திண்டிவனத்தில் வீராணம் இல்லம் எதிரில் மேதகு ஆளுநரின் காரை மறித்து சேதப்படுத்தியவர்கள் மீது வழக்குப் பதிவு செய்ய நடவடிக்கை ஏதேனும் எடுக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) இச்சம்பவம் தொடர்பாக, அ.இ.அ.தி.மு.க. மாவட்டச் செயலாளர் திரு.எஸ்.எஸ். பன்னீர்செல்வம் உள்ளிட்ட 300 பேர் மீது திண்டிவனம் காவல் நிலையக் குற்ற எண்.294/95 பிரிவு 147, 341, 332 இ.அ.ச. படி 10-4-1995 அன்று வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. பின்னர் புலன் விசாரணை மேற்கொண்டதன் பேரில் 75 நபர்கள் எதிரிகளாக அடையாளம் காணப்பட்டு திருபன்னீர்செல்வம் உள்பட 27 நபர்கள் கடந்த 5-9-1996 அன்று கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலுக்கு அனுப்பப்பட்டு அனைவரும் பிணையில் வெளிவந்துள்ளனர். மற்ற குற்றவாளிகளைக் கைது செய்து விரைவில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்ய, தகுந்த அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

**47—**

**சர்க்கரை ஆலை கூட்டுறவுத் துறை மூலம் அமைத்தல்**

**வினா எண் 4205—திரு. ஆர். சிவானந்தம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், ஆரணி தொகுதியில் உற்பத்தியாகும் இரண்டு லட்சம் டன் கரும்பை அரைவை செய்ய



ஒரு சர்க்கரை ஆலையை கூட்டுறவுத் துறையின் மூலம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

இல்லை.

**48—**

**கரும்பு சக்கையைக் கொண்டு மின்சாரம் தயாரித்தல்**

**வினா எண் 4306—திரு. வி. கே. லட்சுமணன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

துணைத்தொழிலாக மின்சாரம் தயாரிக்காத (Co-generation) கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் குவிந்து கிடக்கும் கரும்புச் சக்கையைப் பயன்படுத்த அரசிடம் ஏதேனும் திட்டம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் கரும்பு சக்கையைக் கொண்டு படிப்படியாக வருகிற மூன்று ஆண்டுகளில் 300 மெகா வாட் மின்சாரம் தயாரிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

**49—**

**தமிழ்நாடு அரசுத் தேர்வாணைய தொகுதி-I பணிகளுக்கு வயது வரம்பை நீக்குதல்**

**வினா எண் 4351—திரு. ஆ. இராசேந்திரன் (என்கிற) தீரன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு அரசுத் தேர்வாணைய தொகுதி-I (Group-1) பணிகளுக்குத் தாழ்த்தப்பட்டோருக்கு மிகப் பிற்படுத்தப்பட்டோருக்கும் வயது வரம்பை நீக்கிட அரசு முன்வருமா?

[1997 ஏப்ரல் 30

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

இல்லை.

**50—**

**தீயணைப்பு நிலையம் ஏற்படுத்துதல்**

**வினா எண் 4549—திரு. கொ. வி. நன்னன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா.-

(அ) செங்கம் தொகுதி புதுப்பாளையம் ஒன்றியத்தில் தீயணைப்பு நிலையம் ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): இல்லை.

**51—**

**நிபுணர் குழு அமைத்தல்**

**வினா எண் 4835—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குரிய தொலைநோக்குத் திட்டங்களை வரையறை செய்ய நிபுணர்குழு அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) அத்தகைய கருத்துரு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.



1997 ஏப்ரல் 30]

**52—**

**குடியாத்தம் தொகுதியை பின்தங்கிய பகுதியாக்குதல்**

**வினா எண் 4933—திரு. வி.ஜி. தனபால்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குடியாத்தம் தொகுதியை தொழில் துறையில் பின்தங்கிய பகுதியாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

இல்லை.

**53—**

**செவன் ஸ்டார் நிதி நிறுவன மோசடி குறித்து நடவடிக்கை**

**வினா எண் 5243—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செவன்ஸ்டார் என்ற பெயரில் திருப்பூரில் கடந்த 1986-ல் இயங்கி வந்த நிதி நிறுவனத்தின் மோசடி சம்மந்தமாக அரசு எடுத்த சட்ட நடவடிக்கை கைவிடப்பட்டு விட்டதா?

(ஆ) ஆம் எனில், அதற்கான காரணம் என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சட்ட நடவடிக்கை கைவிடப்படவில்லை. தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**54—**

**தீயணைப்பு நிலையம் அமைத்தல்**

**வினா எண் 5258—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1997 ஏப்ரல் 30

(அ) ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டம், மன்னார்குடி தொகுதி, கூத்தாநல்லூர் நகராட்சியில் தீயணைப்பு நிலையம் அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது தொடங்கப்படும்?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

55—

**சமச்சீரான தொழில் வளர்ச்சியை உருவாக்க நிபுணர் குழு**

**வினா எண் 5402—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அனைத்து மாவட்டங்களிலும் சமச்சீரான தொழில் வளர்ச்சியை உருவாக்கும் வழி முறைகளைக் கண்டறிய நிபுணர் குழு அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், குழு எப்போது அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

56—

**புறக்காவல் நிலையம் அமைத்தல்**

**வினா எண் 5752—டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூரிலுள்ள அங்காள பரமேஸ்வரி அம்மன் ஆலயத்திற்கு அருகில் புறக்காவல் நிலையம் ஒன்று அமைக்க அரசு ஆவன செய்யுமா?



1997 ஏப்ரல் 30 ]

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

மேல்மலையனூரிலுள்ள அங்காள பரமேஸ்வரி அம்மன் ஆலயத்திற்கு அருகில் புறக்காவல் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் நிலுவையில் இல்லை.

57—

**தீயணைப்பு நிலையத்திற்கு அவசர ஊர்தி**

**வினா எண் 6504—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம் எடப்பாடியில் உள்ள தீயணைப்பு நிலையத்திற்கு அவசர ஊர்தி வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

தற்பொழுது அவசியம் ஏற்படவில்லை.

58—

**முதியோர் தடகள கழகத்திற்கு அரசு அங்கீகாரம்**

**வினா எண் 28—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முதியோர் தடகள கழகத்திற்கு (Veteran Athletic Association) அரசு அங்கீகாரம் வழங்குமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

தமிழ்நாடு மாநில விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் முதியோர் தடகள கழகத்திற்கு அங்கீகாரம் ஏற்கனவே அளித்துள்ளது.

[1997 ஏப்ரல் 30

**59—**

**உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்குதல்**

**வினா எண் 114—திரு. வீ. தமிழ்மணி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருக்கழுக்குன்றம் அரசினர் பெண்கள் உயர்நிலைப்பள்ளியை மேல் நிலைப்பள்ளியாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மேம்படுத்த கருத்துரு ஏதும் பெறப்படவில்லை. இதுபற்றிய உரிய கருத்துரு ஏதும் பெறப்படின், உயர்மட்டக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் தக்க நடவடிக்கை எடுக்க இயலும்.

**60—**

**நடுநிலைப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக்குதல்**

**வினா எண் 249—திரு. கு. ரவி அருணன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கோட்டை வட்டம், கட்டளைக்குடியிருப்பில் உள்ள நடுநிலைப்பள்ளி உயர்நிலைப்பள்ளியாகத் தரம் உயர்த்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) அரசாணை (நிலை) எண் 444, கல்வி அறிவியல மற்றும் தொழில்நுட்பவியல் துறை, நாள் 16-7-96-ன்படி செங்கோட்டை வட்டம் கட்டளைக் குடியிருப்பு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக பங்குத் தொகை முழுவதுமாக செலுத்தவேண்டும் என்ற நிபந்தனையுடன் தரம் உயர்த்தி ஆணை வழங்கப்பட்டுள்ளது.



1997 ஏப்ரல் 30 ]

**61—**

**அரசு உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக்குதல்**

**வினா எண் 393—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வடாற்காடு அம்பேத்கார் மாவட்டம், வேலூர் வட்டம், கொணவட்டம், வேலப்பாடி, தொரப்பாடி, வெள்ளக்குட்டை ஆகிய இடங்களில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

வினாவில் குறிப்பிட்ட தொரப்பாடி அரசு உயர்நிலைப் பள்ளியை 1996-97-ம் ஆண்டில் மேல்நிலைப் பள்ளியாக மேம்படுத்தி ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. வினாவில் குறிப்பிட்ட மற்ற பள்ளிகளை மேம்படுத்தும் கருத்துரு தற்போதைக்கு அரசின் ஆய்வில் இல்லை.

**62—**

**பல்கலைக் கழகம் அமைக்கும் திட்டம்**

**வினா எண் 539—திரு. ஆர். ஆர். சேகரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலத்தில் பல்கலைக்கழகம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படு?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

[1997 ஏப்ரல் 30

63—

## கோளரங்கு நிறுவுதல்

**வினா எண் 753—திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூரில் ஓர் கோளரங்கு (Planetarium) நிறுவ அரசு முன் வருமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

கோயம்புத்தூரில் மண்டல அறிவியல் மையம் மற்றும் கோளரங்கம் அன்னை சந்தியா குழந்தைகள் கல்வி மற்றும் பொழுது போக்கு பூங்கா அருகில் அமைப்பதற்கு 5.19 ஏக்கர் காலி நிலம் ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது. இந்த அமைவிடம் விமான தளத்திற்கு அருகில் உள்ளது என்றும் மற்றும் அதன் அருகில் ஜம்போ பூங்கா, ஐந்து நட்சத்திர உணவகம் அமைவதற்கும் நிலம் ஒதுக்கப்படவுள்ளது.

64—

## ஆசிரியர்களின் கல்வித் தகுதிகள் குறித்து ஆய்வு செய்தல்

**வினா எண் 771—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சுயநிதிப்பள்ளி மற்றும் கல்லூரி ஆசிரியர்களின் கல்வித் தகுதிகள் குறித்து அரசு நேரடி ஆய்வு செய்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தமிழ்நாட்டில் சுயநிதிப்பள்ளிகள் முதன்முறையாக அனுமதிக்கப்படும் போதோ மற்றும் சிறுபான்மை நிர்வாகப் பள்ளியாயின் முதன்முறையாக அங்கீகாரம் வழங்கும் போதோ அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகளுக்கான கல்வி விதிகளின்படி முழுக்கல்வித் தகுதிபெற்ற ஆசிரியர்களையே பணியில் அமர்த்த வேண்டுமென ஆணையிடப்படுகிறது. இதே போல் அனைத்து



1997 ஏப்ரல் 30]

கல்லூரிகளைப் பொறுத்த மட்டில் கல்லூரி ஆசிரியர்களின் கல்வித்தகுதி பல்கலைக் கழக மானியக்குழுவால் நிர்ணயிக்கப்பட்ட கல்வித்தகுதியேயாகும். இது சுயநிதிக் கல்லூரிகளுக்கும் பொருந்தும். மேலும் சுயநிதிக் கல்லூரிகளின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு செய்வதற்குக் குழு ஒன்றினை அரசு அமைத்துள்ளது. இக்கல்லூரி ஆசிரியர்களின் கல்வித் தகுதியும் ஆய்வின்போது இடம்பெறும்.

65—

## அரசு மேல்நிலைப் பள்ளியில் புதிய கட்டிடம்

**வினா எண் 786—திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம் திருத்துறைப்பூண்டி அரசு மேல்நிலைப் பள்ளிக் கட்டிடம் பழுதடைந்த நிலையில் உள்ளதால், பழுது பார்த்து, புதிய கட்டிடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

நாகை-காயிதே மில்லத் மாவட்டம், நாகப்பட்டினம், திருத்துறைப்பூண்டி அரசு மேல்நிலைப் பள்ளிக் கட்டிடம் பழுதடைந்த நிலையிலுள்ளதை சீர்செய்ய 1996-97-ல் நிதி நிலைமைக்கேற்ப மராமத்துப் பணிகள் மேற்கொள்ளப்படும். புதிய கட்டிடம் கட்டவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

66—

## நவோதயா பள்ளிகளில் கல்வித் திட்டத்தை மாற்றுதல்

**வினா எண் 1366—திரு. டி. இராஜேந்தர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசின் மொழிக்கொள்கைக்குப் பாதிப்பு இல்லாத வகையில் நவோதயா பள்ளிகளில் கல்வித் திட்டத்தை மாற்றிட மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

[1997 ஏப்ரல் 30

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): நவோதயா பள்ளிகள் பற்றிய மத்திய அரசின் ஒரே சீரான நடைமுறையின் மொழிக் கொள்கையை தமிழ்நாடு அரசு ஏற்கவியலாது எனவும், நவோதயா பள்ளிகளுக்குப் பதிலாக பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் மாணவர்களின் விடுதிகளை மாநில அரசு நடத்துவதற்கு நிதியுதவி கோரி மைய அரசுக்குக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

**67—**

**தொடக்கப் பள்ளி அமைத்தல்**

**வினா எண் 1397—திரு. கு. ரவி அருணன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், செங்கோட்டை வட்டம் - புதூர் பேரூராட்சி, இரவிய தர்மபுரத்தில் தொடக்கப்பள்ளி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 1996-97-ஆம் கல்வி ஆண்டில் பகுதி-2 திட்டத்தின் கீழ் திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், செங்கோட்டை வட்டம் - புதூர் பேரூராட்சி இரவியதர்மபுரத்தில் தொடக்கப்பள்ளி அமைக்கப்பட உள்ளது.

**68—**

**தட்டச்சு - கட்டாயப் பாடமாக்குதல்**

**வினா எண் 1541—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1997 ஏப்ரல் 30 ]

அரசு உயர்நிலைப் பள்ளிகளில் 10 ஆம் வகுப்புவரை படிக்கும் மாணவர்களுக்கு தட்டச்சு கட்டாயப் பாடமாகக் கற்றுக் கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

இதுபோன்ற திட்டம் ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

**69—**

**பகுதிநேர நூலகங்களை முழுநேர நூலகங்களாக்குதல்**

**வினா எண் 1766—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மாநிலம் முழுவதும் செயல்படும் பகுதிநேர நூலகங்களை முழு நேர நூலகங்களாக மாற்றுவதற்கு அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

தமிழ் நாட்டில் 1069 பகுதி நேர நூலகங்கள் செயல்பட்டு வருகின்றன. இவை குறிப்பிட்ட நேரம் மட்டுமே இயங்கக்கூடியவை. மக்கட்தொகை 1000 உள்ள இடங்களில் பகுதி நேர நூலகங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன. முழுநேர நூலகங்கள் திறப்பதற்கு மக்கள் தொகை 5000-க்கு மேற்பட்டிருக்க வேண்டும். எனவே பகுதி நேர நூலகங்கள் அனைத்தையும் முழு நேர நூலகங்களாக மாற்றுவதற்கான வாய்ப்புகள் இல்லை.

**70—**

**அரசு பொறியியற் கல்லூரி அமைத்தல்**

**வினா எண் 1768—திருமதி ஆர். சரஸ்வதி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாராபுரம் தொகுதியில் அரசு பொறியியற் கல்லூரி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

[1997 ஏப்ரல் 30

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழாது.

71—

### மலையாள ஆசிரியர்கள் பற்றாக்குறையைப் போக்குதல்

**வினா எண் 1816—திரு. டி. மணி:** மாண்புமிகு கல்வியமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசுப் பள்ளிகளில் மலையாள ஆசிரியர்கள் பற்றாக்குறையைப் போக்க அரசு என்ன நடவடிக்கை மேற்கொண்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

கன்னியாகுமரி மாவட்டத்தில் இயங்கி வரும் அரசினர் மேல்நிலை, உயர்நிலை மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் 51 இடைநிலையாசிரியர் பணியிடங்கள் மலையாள போதனா மொழிப் பிரிவுகளில் காலியாக உள்ளன. இவற்றை வேலை வாய்ப்பகம் மூலம் நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் மலையாள மொழி போதிக்க முதல்நிலை மற்றும் முதுகலைப் பட்டம் பெற்ற மலையாள மொழி ஆசிரியர்களோ அன்றி பள்ளி உதவியாசிரியர்களோ (மலையாள போதனா மொழி பிரிவுக்குரியவர்) அந்தந்த பணியிடங்களில் அரசினர் உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரிகின்றனர். எனவே, இவைகளில் காலியிடங்கள் ஏதுமில்லை.



1997 ஏப்ரல் 30 ]

72—

### Shifting of Secondary Grade Training Centre

**வினா எண் 1822—திரு. பி. வெங்கடசாமி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

(a) Is there any proposal to shift the Telugu Secondary Grade Training Centre from Krishnagiri to Hosur ?

(b) If so, the details thereof ?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழ இடமில்லை.

73—

### டி.கே.எம். கல்லூரியை அரசே நடத்துதல்

**வினா எண் 1885—திரு. பெ. சு. திருவேங்கடம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடஆற்காடு-அம்பேத்கர் மாவட்டம், வேலூர் டிகே.எம். கல்லூரியை அரசே ஏற்று நடத்த வேண்டுமென அரசுக்கு கோரிக்கை ஏதும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) ஆம்

(ஆ) தனியார் கல்லூரியை ஒழுங்காற்றுச் சட்டத்தின்படி 15 ஆண்டு காலம்வரை தான் அரசு தன் வசம் வைத்துக் கொள்ள இயலும். இதை நீடிக்க வேண்டுமெனில் சம்பந்தப்பட்ட பிரிவு திருத்தம் செய்யப்பட வேண்டும். எனவே 15 ஆண்டுகள் முடிந்ததால் அரசு

[1997 ஏப்ரல் 30

இக்கல்லூரியை நிர்வாகத்திடம் ஒப்படைக்க அரசாணை எண் 448 நாள் 16-7-96-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

74—

## அரபு மொழித்துறை ஏற்படுத்துதல்

**வினா எண் 2027—திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பரமக்குடி அரசு கலைக் கல்லூரியில் அரபுமொழித்துறை ஏற்படுத்துவதற்கு அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

75—

## கலைக்கல்லூரி நிறுவுதல்

**வினா எண் 2061—திரு. ஆர். தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரக்கோணத்தில் கலைக் கல்லூரி நிறுவ அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் திரு. க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

76—

## துவக்கப்பள்ளி துவங்காமல் இருத்தல்

**வினா எண் 2267—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் ஒன்றியம் மஞ்சநாயக்கன்ஹள்ளி ஊராட்சி, வரகூரான் கொட்டாய் கிராமத்தில்



1997 ஏப்ரல் 30]

ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளி துவங்க இடம் கொடுக்கப்பட்டும் இதுவரை பள்ளி துவங்காமல் இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், நடப்பு ஆண்டில் ஊராட்சி ஒன்றியத் துவக்கப் பள்ளி அமைக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

77—

## கண்டமங்கலத்தில் பெண்கள் உயர்நிலைப் பள்ளி அமைத்தல்

**வினா எண் 2725—திரு. ச. அழகுவேலு:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் வட்டம், கண்டமங்கலத்தில் பெண்கள் உயர்நிலைப்பள்ளி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

தற்பொழுது செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை.

78—

## பேராவூரணியில் அரசு கலைக்கல்லூரி அமைத்தல்

**வினா எண் 2765—திரு. வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணியில் அரசு கலைக் கல்லூரி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

இல்லை.

[1997 ஏப்ரல் 30

79—

## அரசு பொறியியற் கல்லூரி துவங்குதல்

**வினா எண் 2840—திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் அரசு பொறியியற் கல்லூரி துவங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழாது.

80—

## கடமங்குடியில் பொது நூலகம்

**வினா எண் 2843—திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், மகாராஜபுரம் வட்டம், கடமங்குடி கிராமத்தில் ஒரு பொது நூலகம் ஏற்படுத்த அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், மகாராஜபுரம் வட்டம், கடமங்குடி கிராமத்தில் கிளை நூலகம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.



1997 ஏப்ரல் 30]

81—

## மாவட்ட விளையாட்டு அலுவலர்களது பணியை வரன்முறைப்படுத்துதல்

**வினா எண் 2850—திரு. டி. மணி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தில், 1986-லிருந்தே பணிபுரியும் மாவட்ட விளையாட்டு அலுவலர்களின் பணி, வரன்முறைப்படுத்தப்பட்டுள்ளதா?

(ஆ) இல்லை எனில், அவர்களது பணியினை வரன்முறைப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): முன்னதாக, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறையில் 1986 ஆம் ஆண்டு வரை மாவட்ட விளையாட்டு அலுவலர்களாக தற்காலிகமாக நியமனம் செய்யப்பட்டு, தற்போது தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தில் பணிபுரியும் 17 மாவட்ட விளையாட்டு அலுவலர்களின் பணியினை வரன்முறைப்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

82—

## அரூரில் பெண்கள் அரசு கலைக்கல்லூரி

**வினா எண் 2898—திருமதி ஏ. ஆர். வேடம்மாள்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், அரூரில் பெண்கள் அரசு கலைக் கல்லூரி தொடங்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) : இல்லை.

83—

## கலைக் கல்லூரி அமைத்தல்

**வினா எண் 2913—திரு. கே. சி. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செயங்கொண்டம் தொகுதியில், கலைக் கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்த ஆண்டு தொடங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) : இல்லை.

84—

## தொடக்கப்பள்ளியை நடுநிலைப் பள்ளியாக நிலை உயர்த்துதல்

**வினா எண் 2952—திரு. எஸ். வி. கிருஷ்ணன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், களக்காடு ஒன்றியம், கீழ்க்கட்டளை அரசு தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக நிலை உயர்த்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.



85—

## முன்னுரிமை அடிப்படையில் பட்டதாரி, முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர்களை நியமித்தல்

**வினா எண் 3418—திரு. செ. இராமலிங்கம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இடைநிலை ஆசிரியர்களை முன்னுரிமை அடிப்படையில் நியமிக்க இருப்பது போல், பட்டதாரி ஆசிரியர்கள், தமிழாசிரியர்கள், முதுநிலை பட்டதாரி ஆசிரியர்களை நியமிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், ஆசிரியர் தேர்வு ஆணையத்தைக் கலைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

86—

## பெண்கள் மேல்நிலைப்பள்ளி அமைத்தல்

**வினா எண் 3519—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு அம்பேத்கர் மாவட்டம், சத்துவாச்சாரி பகுதியில் பெண்களுக்கென தனியே மேல்நிலைப் பள்ளி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) : கருத்துரு ஏதும் இதுவரை பெறப்படவில்லை.

[1997 ஏப்ரல் 30

87—

**மேல்நிலைக் கல்வியில் உள்ளுரை கணிப்பின் மூலம் 20 மதிப்பெண்கள் வழங்குதல்**

வினா எண் **3550—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் மற்றும் திரு. செங்கை சிவம்** : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேல்நிலைக்கல்வியில் தமிழ், ஆங்கிலம் போன்ற மொழிப்பாடங்களில் உள்ளுரை கணிப்பின் (Internal Assessment) மூலம் 20 மதிப்பெண்கள் வழங்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், மற்றப் பாடங்களுக்கு இம்முறையினை விரிவு படுத்தும் செயற்குறிப்பு அரசுக்கு உண்டா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) புதிய பாடத்திட்டத்தின்படி மார்ச், 97 மேல்நிலைக்கல்வி பொதுத் தேர்வு, முதல் மொழிப்பாடம் தாள் - இரண்டில் (II) (Language-Paper-II) உள்ளுரை கணிப்பில் (Internal Assessment) மூலம் 20 மதிப்பெண்கள் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

(ஆ) அறிவியல் பாடங்களுக்கு மட்டும் செய்முறை தேர்வில் ஏற்கனவே 20 மதிப்பெண்களுக்கு அக மதிப்பீடும் (Internal Assessment) 30 மதிப்பெண்களுக்குப் புற தேர்வும், (External Assessment) ஆக 50 மதிப்பெண்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. தற்போது புவியியல் (Geography) பாடத்திற்கும் ஆய்வுக்காக (Practical) 50 மதிப்பெண்கள் பெற ஆணை வெளியிடப்பட்டுள்ளது. ஏனைய பாடங்களுக்கு அக மதிப்பீடுமுறை அமுல் படுத்தப்படவில்லை. தேவையுமில்லை.

88—

**துவக்கப்பள்ளியை நடுநிலைப்பள்ளியாக மேம்படுத்துதல்**

**வினா எண் 3624—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1997 ஏப்ரல் 30]

எம்.ஜி.ஆர். மாவட்டம், பள்ளிப்பட்டு தொகுதி செருக்கனூர் துவக்கப்பள்ளியை நடுநிலைப்பள்ளியாக மேம்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

எம்.ஜி.ஆர். மாவட்டம், பள்ளிப்பட்டு தொகுதி, செருக்கனூர் துவக்கப்பள்ளியை 1996-97 ஆம் ஆண்டில் நடுநிலைப்பள்ளியாக உயர்த்தி ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

89—

**நடுநிலைப்பள்ளியை உயர்நிலைப்பள்ளியாக உயர்த்துதல்**

**வினா எண் 3627—திரு. சி. கோபு:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு-அம்பேத்கர் மாவட்டம், அணைக்கட்டு தொகுதி, திப்பசமுத்திரம் நடுநிலைப்பள்ளியினை உயர்நிலைப்பள்ளியாக உயர்த்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் உயர்த்தப்படும்?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) அத்தகைய செயற்குறிப்பு அரசின் ஆய்வில் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

90—

**கருப்பான் குளத்தை விளையாட்டு அரங்கமாக மாற்றுதல்**

**வினா எண் 3661—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாசனத்திற்குப் பயன்படாத அம்பத்தூர், மேனாம்பேடு கருப்பான் குளத்தைத் தூர்த்து, விளையாட்டு அரங்கமாக மாற்றி அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

அம்பத்தூர், மேனாம்பேடு, கருப்பான் குளத்தைத் தூர்த்து விளையாட்டு அரங்கமாக மாற்றி அமைக்க அரசிடம் தற்போது திட்டம் ஏதும் இல்லை.

**91—**

**இடைக்கால ஆசிரியர் பயிற்சிப் பள்ளி ஏற்படுத்துதல்**

**வினா எண் 3806—திரு. ரா. சேதுநாதன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென் ஆற்காடு வள்ளலார் மாவட்டம், திண்டிவனம் தொகுதியில் இடைநிலை ஆசிரியர் பயிற்சிப் பள்ளி ஒன்று ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழ இடமில்லை.

**92—**

**மேல்நிலைப் பள்ளித் தேர்வுகளின் மதிப்பெண்களை மறுமதிப்பீடு செய்யும் முறை**

**வினா எண் 3810—திரு. செ. இராமலிங்கம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேல்நிலைப்பள்ளித் தேர்வுகளின் மதிப்பெண்களை மறு ஆய்வு செய்யும் வகையில் மறு எண்ணிக்கை செய்வதை விடுத்து, மறு மதிப்பீடு செய்யும்முறை கொண்டு வருவது குறித்து அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?





(ஆ) ஆம் எனில், தெரிவு செய்யப்பட்ட ஆராய்வாளர்களை நியமனம் செய்து மறு மதிப்பீடு மேற்கொள்ளப்படுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழ வாய்ப்பில்லை.

**93—**

**ஊழலால் பாதிக்கப்பட்டுள்ள ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கு ஓய்வு நல நிதி**

**வினா எண் 3814— திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம், உதவி கல்வி அலுவலக நிதி ஊழலால் பாதிக்கப்பட்டுள்ள சுமார் 60 ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கு ஓய்வு நல நிதி வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) ஓய்வு பெற்ற ஆசிரியர்களின் வைப்புநிதி கணக்குகளை தணிக்கை செய்து தணிக்கைச் சான்று பெற்ற பின்பு சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுக்கு தொகை வழங்க துரித நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**94—**

**நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக மாற்றுதல்**

**வினா எண் 4028—திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் - காயிதே மில்லத் மாவட்டம், நாகூர், சிவன் மேலவீதி நகராட்சி நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப்பள்ளியாக மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது தரம் உயர்த்தப்படும்?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**95—**

**முதுகலை அறிவியல் சுயநிதி முறையில் தொடங்க அனுமதி**

**வினா எண் 4194— திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, நந்தனம் அரசு ஆடவர் கல்லூரியில் முதுகலை அறிவியல் (விலங்கியல்) சுயநிதி முறையில் தொடங்க அரசு அனுமதி அளித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) : இல்லை.

**96—**

**பட்டதாரி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி துவங்குதல்**

**வினா எண் 4786—திரு. பி. என். வல்லரசு:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், உசிலம்பட்டியில், பட்டதாரி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி துவங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?





(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) : இல்லை.

**97—**

**புதுச்சத்திரத்தில் கிளை நூலகம்**

**வினா எண் 5086—திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, பறங்கிப்பேட்டை ஒன்றியம் புதுச்சத்திரத்தில் கிளை நூலகம் துவங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) : 30-1-96 நாளிட்ட கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறை அரசாணை (நிலை) எண் 66-ல் தமிழ்நாட்டில் 625 கிராமங்களில் கிராமப்புற நூலகங்கள் ஆரம்பிக்க அரசு ஆணையிட்டுள்ளது. இதில் தென்னாற்காடு வள்ளலார் மாவட்டத்தில் 53 கிராமப்புற நூலகங்கள் திறப்பதற்கும் ஆணையிடப்பட்டுள்ளது. இந்த 53 கிராமங்களுள் புதுசத்திரம் இடம்பெறவில்லை. இருப்பினும், அரசாணையில் அனுமதிக்கப்பட்டுள்ள கிராமங்களில் ஏதாவதொரு கிராமம் தேவையான நிபந்தனைகளை நிறைவு செய்யாத நிலையில், புதுசத்திரம் கிராம மக்கள் அந்நிபந்தனைகளை நிறைவேற்றித்தர முன்வருவார்களானால், அவ்வூரில் கிராமப்புற நூலகம் திறக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**98—**

**தன்னாட்சி தகுதி பெற்ற கல்லூரிகளில் முறைகேடு**

**வினா எண் 5215—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1997 ஏப்ரல் 30

(அ) தமிழ்நாட்டில் தன்னாட்சி தகுதி அளிக்கப்பட்டுள்ள கல்லூரிகளில் பல முறையாகச் செயல்படுவதில்லை என்ற குற்றச்சாட்டுக்கள் அரசுக்கு வரப்பெற்றுள்ளனவா?

(ஆ) ஆம் எனில், அவற்றின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) : தன்னாட்சி தகுதி பெற்ற பி.எஸ்.ஜி. கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் போலி மதிப்பெண் சான்றிதழ் வெளியிட்டதாக செய்தித்தாளில் வெளியிடப்பட்ட குறிப்பையடுத்து கோவை, பாரதியார் பல்கலைக் கழகம் விசாரணை மேற்கொண்டது. தவிர, இது தொடர்பாக பொது நலன் கருதி கல்லூரியைச் சாராத வெளிநபர் ஒருவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றினைத் தொடர்ந்துள்ளார் என்றும், அவ்வழக்கின் மீதான விசாரணை இனிமேல் தான் நடைபெறவுள்ளது எனவும் தெரிவிக்கலாகிறது. மேற்குறித்த தன்னாட்சிக் கல்லூரி தவிர, இதர கல்லூரிகளின் செயல்பாடு குறித்து குற்றச்சாட்டுகள் ஏதும் பெறப்படவில்லையெனத் தெரிவிக்கலாகிறது.

**99—**

## பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக மாற்றுதல்

**வினா எண் 5470—திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மானாமதுரை ஒன்றியம், மிளகனூரில் உள்ள பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

அரசு மட்டத்தில் கருத்துரு ஏதும் தற்போது நிலுவையில் இல்லை. கருத்துரு பெற்றபின் பரிசீலிக்கப்படும்.



1997 ஏப்ரல் 30 ]

**100—**

## நூலகங்களுக்குத் தரமான இலக்கிய இதழ்கள் வாங்குதல்

**வினா எண் 5539—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நூலகங்களுக்குத் தரமான இலக்கிய இதழ்கள் முழுவதும் வாங்கப்பட வேண்டும் என்று அரசு ஆணையிட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் வாங்கப்படுகின்றன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) பொது நூலகத் துறையில், அந்தந்த நூலக ஆணைக் குழுக்களின் மொத்த வருமானத்தில் 6 ¼ விழுக்காட்டிற்கு மிகாமல் இலக்கிய இதழ்கள் உட்பட பருவ இதழ்கள் மற்றும் செய்தித் தாள்கள் வாங்கிட அரசாணை எண் 1138, கல்வி, நாள் 23-6-80-ல் அரசு ஆணையிட்டுள்ளது.

(ஆ) மேற்படி அரசாணையின் நாளான 23-6-80 முதல் அவ்வாறு வாங்கப்பட்டு வருகின்றன.

**101—**

## உடற்கல்வி ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்படுதல்

**வினா எண் 5906—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி, அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் காலியாக உள்ள இரண்டு உடற்கல்வி ஆசிரியர் பணியிடங்களை உடனே நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

ஆவன செய்யப்படும்.

[1997 ஏப்ரல் 30

**102—**

**மாநில அரசுத் துறைகளில் இராணுவத்தில் பணியாற்றியதற்கு சமமான பணி நியமனம்**

**வினா எண் 5959—திரு. அ. சுடலைமுத்து:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முன்னாள் இராணுவத்தினர் இராணுவத்தில் எந்தத் துறையில் பணியாற்றினார்களோ, அதற்குச் சமமான மாநில அரசுத் துறைகளில் அவர்களை பணி நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

முன்னாள் படைவீரர்களின் குறைகளை ஆய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும் பொருட்டு அரசால் அமைக்கப்பட்ட குழு தக்க ஆய்வுக்குப் பின் குரூப் 'ஏ' மற்றும் 'பி' பிரிவுகளில் அடங்கும் பதவிகளில் முன்னாள் படைவீரர்களுககு இட ஒதுக்கீடு செய்ய இயலாது என முடிவெடுத்தது.

குரூப் 'சி' பதவிகளிலும் முன்னாள் படைவீரர்களுக்கு ஒதுக்கீடு ஏதுமில்லை. குரூப் 'டி' பதவிகளில் மட்டும் 10 சதவீதம் முன்னாள் படைவீரர்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**103—**

**பாதுகாப்பு காவலர் பணிக்கு முன்னாள் படைவீரர்கள் நியமனம்**

**வினா எண் 5960—திரு. அ. சுடலைமுத்து:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு நிறுவனங்களிலும் மற்றும் வாரியம், கூட்டுறவுத் துறை ஆகியவற்றிலும் பாதுகாப்பு காவலர் [illegible] செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

இதுவரை மாநில பொது நிறுவனங்களில் 887 பேர்களும், மத்திய அரசின் பொது நிறுவனங்களில் 471 பேர்களும், ஆக மொத்தம் 1358 பேர் பாதுகாப்பு காவலர் பணிக்கு (Security Guards) ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.



1997 ஏப்ரல் 30 ]

**104—**

**38 வயதிற்கு ஓய்வு பெற்ற இராணுவ வீரர்களை, காவலர்களாக பணியமர்த்துதல்**

**வினா எண் 5962—திரு. அ. சுடலைமுத்து:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

15 ஆண்டுகள் இராணுவத்தில் பணிபுரிந்து 38 வயதிற்குள் ஓய்வுபெற்ற இராணுவ வீரர்களில் தகுதியுள்ளவர்களை காவல்துறையில் காவலர்களாகப் பணியமர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

காவல் துறையில் பொதுவாக பிரிவு 'பி' மற்றும் 'சி' பணியிடங்களில் முன்னாள் படைவீரர்களுக்கு ஒதுக்கீடு செய்வது தொடர்பான செயற்குறிப்பு, கூடுதல் இயக்குநர், முன்னாள் படைவீரர் நலத்துறை அவர்களிடமிருந்து பெறப்பட்டு உள்துறையில் பரிசீலனையில் உள்ளது. காவலர் பணியிடம் என்று அதில் குறிப்பாகத் தெரிவிக்கப்படவில்லை.

**105—**

**கிருஷ்ணாபுரம் ஊராட்சியில் நூலகம்**

**வினா எண் 6165—திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், தருமபுரி ஒன்றியம், கிருஷ்ணாபுரம் ஊராட்சியில் நூலகம் ஏற்படுத்தித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

30-1-96 நாளிட்ட கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறை அரசாணை (நிலை) எண் 66-ல், தமிழ்நாட்டில் 625 கிராமங்களில், கிராமப்புற நூலகங்கள் ஆரம்பிக்க அரசு ஆணையிட்டுள்ளது. இதில்

[1997 ஏப்ரல் 30

தருமபுரி மாவட்டத்தில் 41 கிராமப்புற நூலகங்கள் திறப்பதற்கு ஆணையிடப்பட்டுள்ளது. இந்த 41 கிராமங்களுள் கிருஷ்ணாபுரம் ஊராட்சி இடம் பெறவில்லை. இருப்பினும், அரசாணையில் அனுமதிக்கப்பட்டுள்ள கிராமங்களில் ஏதாவதொரு கிராமம் தேவையான நிபந்தனைகளை நிறைவு செய்யாத நிலையில், கிருஷ்ணாபுரம் ஊராட்சி மக்கள் அந்நிபந்தனைகளை நிறைவேற்றித்தர முன்வருவார்களானால், அவ்வூரில் கிராமப்புற நூலகம் திறக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**106—**

**அரசுக் கல்லூரி அமைத்தல்**

**வினா எண் 6612—திரு. எஸ். என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், பவானி தொகுதியில் அரசுக் கல்லூரி ஒன்று அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விரைவில் செயல்படுத்தப்படுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) : செயற்குறிப்பு எதுவும் அரசின் ஆய்வில் இப்போது இல்லை.

**107—**

**இரவியதர்மபுரத்தில் மின்மாற்றி அமைத்தல்**

**வினா எண் 1500—திரு. கு. ரவி அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், செங்கோட்டை தாலுகா, புதூர் பேரூராட்சி, இரவியதர்மபுரத்தில் ஏற்படுகின்ற மின் அழுத்தக் குறைவினைப் போக்க மின் மாற்றி அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?



1997 ஏப்ரல் 30]

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், செங்கோட்டை தாலுகாபுதூர் பேரூராட்சி, இரவியதர்மபுரத்தில் மின் மாற்றி அமைக்கும் திட்டம் எதுவும் தற்பொழுது தமிழ்நாடு மின்சார வாரியத்தின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**108—**

**செயல்படாத ஆரம்பச் சுகாதார நிலையம் செயல்படச் செய்தல்**

**வினா எண் 2374—திரு. கு. ரவி அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெல்லை மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், மத்தளம்பாறை ஊரில் 1985-ஆம் ஆண்டு தன்னிறைவு திட்டத்தின்கீழ் கட்டப்பட்டு செயல்படாத நிலையில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையம் எப்போது செயல்படத் துவங்கும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் மத்தளம்பாறை கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் எதுவும் செயல்படவில்லை. இக்கிராமத்தில் துணை சுகாதார நிலையக் - கட்டிடம் தன்னிறைவு திட்டத்தில் 1982-ஆம் ஆண்டில் கட்டப்பட்டு 1995 வரையில் செயல்பட்டது. மேற்படி கட்டிடம் பழுதுபார்க்க பொதுப்பணித்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டு சரிபார்க்கப்பட்டு வருகிறது. பொதுமக்களுக்கு சேவை தொடரும் வகையில் மேற்படி துணை சுகாதார நிலையம் வாடகைக் கட்டிடத்தில் செயல்பட்டுவருகிறது.

## 109—

### உதவி மின் பொறியாளர் அலுவலகம் அமைத்தல்

**வினா எண் 3133—திரு. கு. ரவி அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், தென்காசி வட்டம், அரியப்பபுரத்தில் உதவி மின் பொறியாளர் அலுவலகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

## 110—

### ஆரம்பச் சுகாதார நிலையத்தை இரும்பறைக்கு மாற்றுதல்

**வினா எண் 3367—திரு. பா. அருண்குமார்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டுப்பாளையம் தொகுதி, சண்முகபுரம் ஆரம்பச் சுகாதார நிலையத்தினை பொதுமக்கள் வசதிக்காக இரும்பறை என்ற இடத்துக்கு மாற்றுவதற்கு அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மேட்டுப்பாளையம் தொகுதி, சண்முகபுரம் கிராமத்தில் ஆரம்பச் சுகாதார நிலையம் எதுவும் செயல்படவில்லை. சண்முகபுரம் கிராமம், காரமடை ஊராட்சி ஒன்றியத்தினைச் சேர்ந்தது. அவ்வூராட்சி



ஒன்றியத்தினைச் சேர்ந்த இரும்பறை கிராமத்தில் ஆரம்பச் சுகாதார நிலையம் ஒன்று செயல்பட்டு வருகின்றது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

## 111—

### இலவச சேலை, வேட்டிகள் உணவுப் பங்கீடு கடைகள் மூலம் அளித்தல்

**வினா எண் 203—திரு. வீ. தமிழ்மணி:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஏழைகளுக்கு இலவசமாக அளிக்கப்படும் சேலை, வேட்டிகளை வருமான அடிப்படையில் உணவுப் பங்கீடு கடைகள் மூலம் அளிக்க அரசு முன் வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

உணவுப் பங்கீடு கடைகளின் மூலம் ஏழை மக்களுக்கு இலவச வேட்டி, சேலை வழங்குவது நடைமுறைக்கு ஏற்றதாக இருக்காது.

## 112—

### விவசாயிகளுக்குப் பட்டா

**வினா எண் 913—திரு ஜி.கே. மணி:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பென்னாகரம் தொகுதி, பென்னாகரம் ஒன்றியம், கோடிஅள்ளி, அஜ்ஜனஅள்ளி ஆகிய கிராமங்களில் 40 ஆண்டுகளாக பட்டா இல்லாமல் விவசாயம் செய்து வருபவர்களுக்கு அரசு பட்டா வழங்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

மேற்படி கிராமங்களில் ஆக்கிரமிப்பு செய்த நிலங்கள் ஆட்சேபணை அற்றதாகவும், ஒப்படை செய்ய தடை செய்யப்படாதவையாகவும் இருந்தால், ஒப்படை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**113—**

**புதிதாக ஏற்படுத்தப்பட்ட மாவட்டத்துக்கு சிங்காரவேலர் பெயர் வைத்தல்**

**வினா எண் 1712—திரு. இரா. மதிவாணன் மற்றும் திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் புதியதாக ஏற்படுத்தப்படும் மாவட்டத்துக்கு சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் பெயர் வைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

புதிதாக ஏற்படுத்தப்பட்ட மாவட்டங்களுக்கு ஏற்கனவே பெயர் சூட்டி ஆணை வெளியிடப்பட்டுவிட்டது. இது குறித்து எந்த கருத்துருவும் தற்போது அரசின் நிலுவையில் இல்லை.

**114—**

**முத்துப்பேட்டையைத் தனித் தாலுகாவாக அறிவித்தல்**

**வினா எண் 2191—திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தாலுகாவை இரண்டாகப் பிரித்து முத்துப்பேட்டையைத் தனி தாலுகாவாக அறிவிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

இல்லை.



**115—**

**அரியப்பபுரத்தை வருவாய் கிராமமாகப் பிரித்தல்**

**வினா எண் 2376—திரு. கு. ரவி அருணன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், தென்காசி தாலுகா அரியப்பபுரத்தை வருவாய் கிராமமாகப் பிரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**116—**

**பெரியகுளத்தில் இயங்கும் அரசு அலுவலகங்களை தேனிக்கு மாற்றாமலிருத்தல்**

**வினா எண் 2435—திரு. எல். மூக்கையா:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரியகுளத்தில் தற்போது இயங்கிவரும் அரசு அலுவலகங்கள் எதையும் வீரன் அழகுமுத்து மாவட்டத் தலைநகரமான தேனிக்கு மாற்றாமலிருக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

பெரியகுளத்தில் தற்போது இயங்கிவரும் அரசு அலுவலகங்களை தேனிக்கு மாற்றும் திட்டம் அரசிடம் இல்லை.

117—

## குத்தாலத்தை வட்டத் தலைநகரமாக ஆக்குதல்

**வினா எண் 2562—திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குத்தாலத்தை வட்டத் தலைநகரமாக (Taluk Headquarters) ஆக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

இல்லை.

118—

## உயிர் நீத்தவர்களுக்கு ஒதுக்கப்பட்ட குளம், திடல் - தனியார் ஆக்கிரமிப்பு

**வினா எண் 2700—திரு. டி. இராஜேந்தர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூங்கா நகர் தொகுதியிலுள்ள காசி விஸ்வநாதர் கோவில், கிருஷ்ணன் குளம், தட்டான் குளம் மற்றும் அங்காளம்மன் கோவிலைச் சார்ந்த இடங்களில், உயிர் நீத்தவர்களுக்குச் சடங்கு புரிய ஒதுக்கப்பட்டுள்ள குளத்தையும் திடலையும் சில தனியார்கள் ஆக்கிரமித்து கட்டணம் வசூல் செய்வதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



119—

## நில சம்பந்தமான ஆவணங்கள் வட்டாட்சியர் அலுவலகத்தில் ஒப்படைத்தல்

**வினா எண் 3020—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வில்லிவாக்கம் வட்டம், பெரம்பூர்-புரசைவாக்கம் வட்டாட்சியர் அலுவலகத்தில் இணைக்கப்பட்டும் நில சம்பந்தமான ஆவணங்கள் பத்து ஆண்டு காலம் ஆகியும் சம்பந்தப்பட்ட வட்டாட்சியர் அலுவலகத்தில் ஒப்படைக்கப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) வில்லிவாக்கம் உட்பட அனைத்து 17 கிராமங்களின் ஆவணங்களும் 1997-ஆம் ஆண்டின் இறுதிக்குள், வட்ட அலுவலகங்களில் ஒப்படைக்கப்பட சென்னை மாவட்ட நில அளவைத் துறை உதவி இயக்குநரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

120—

## வட்டாட்சியர் அலுவலகத்திற்குக் கட்டிடம் கட்டுதல்

**வினா எண் 3071—திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி வட்டாட்சியர் அலுவலகத்திற்குக் கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இதன் விவரம் என்ன?

[1997 ஏப்ரல் 30

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) பாப்பிரெட்டிப்பட்டி வட்டாட்சியர் அலுவலகம் கட்ட 1996-97 ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தின் கீழ் ரூ.69 இலட்சத்திற்கு ஏற்பளிக்கப்பட்டு, 1996-97 ஆம் ஆண்டில் ரூ.27.60 இலட்சம் செலவிட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

121—

**நகர்ப்புற நில உச்சவரம்பு சட்ட பயன்**

**வினா எண் 3119—திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நகர்ப்புற நில உச்சவரம்பு சட்டத்தினால் அரசுக்குக் கிடைத்த உபரி நிலத்தின் மொத்த பரப்பளவு எவ்வளவு?

(ஆ) அந்நிலம் இதுவரை எவ்வாறு பயன்படுத்தப்பட்டு உள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) நகர்ப்புற நில உச்சவரம்பு சட்டத்தினால் அரசுக்குக் கிடைத்த உபரி நிலத்தின் மொத்த பரப்பளவு 15-8-96 முடிய 1547.83.20 ஹெக்டேர்கள் ஆகும்.

(ஆ) மேற்படி நிலத்தில் 234.79.45 ஹெக்டேர் நிலம் அரசுத் துறை, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், தமிழ்நாடு குடிசைப் பகுதி வாரியம், தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம், மற்ற அரசுத்துறை கழகங்கள், தனியார் நிறுவனம், தொழிற்சாலைகள் மற்றும் தனி நபர்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



1997 ஏப்ரல் 30]

122—

**தண்டராம்பட்டை வட்டமாக அறிவித்தல்**

**வினா எண் 3157—திரு கே. மணிவர்மா:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், தண்டராம்பட்டைத் தலைமையிடமாகக் கொண்டு வட்டம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், தண்டராம்பட்டைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

123—

**ஆர்.கே. பேட்டையை மையமாகக் கொண்டு புதுவட்டம் ஏற்படுத்துதல்**

வினா எண் **3385—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எம்.ஜி.ஆர். மாவட்டம் பள்ளிப்பட்டு வட்டத்தை இரண்டாகப் பிரித்து ஆர். கே. பேட்டையை மையமாகக் கொண்டு ஒரு புது வட்டம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

ஆர்.கே. பேட்டையை மையமாகக் கொண்டு புது வட்டம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

[1997 ஏப்ரல் 30

**124—**

### புறம்போக்கு நில மக்களுக்கு வீட்டுமனைப்பட்டா

**வினா எண் 3702— திரு. சி. ஞானசேகரன்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேலூர், தொரப்பாடி, சேன்பாக்கம், அல்லாபுரம் ஆகிய பகுதிகளில் புறம்போக்கு நிலங்களில் வீடுகட்டி வாழ்ந்து வருபவர்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): ஆக்ரமணங்கள் ஆட்சேபகரமான புறம்போக்குகளில் உள்ளதால் வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாத நிலை உள்ளது.

**125—**

### கீவளூர், திருமருகல் ஒன்றியங்களைத் தனித்தனி வட்டங்களாக்குதல்

**வினா எண் 3888—திரு. ஜி. நிஜாமுதீன்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நாகை-காயிதே மில்லத் மாவட்டம் கீவளூர், திருமருகல் ஒன்றியங்களை தனித்தனி வட்டங்களாக அறிவிக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

நாகை-காயிதே மில்லத் மாவட்டம், கீவளூர், திருமருகல் ஒன்றியங்களை தனித்தனி வட்டங்களாக மாற்றும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.



1997 ஏப்ரல் 30 ]

**126—**

### இலவச சாதிச் சான்றிதழ் வழங்குதல்

**வினா எண் 3991—திரு. ரா. சேதுநாதன்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பள்ளிக்குழந்தைகளுக்கு இலவசமாக சாதிச் சான்றிதழ் வழங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

சாதிச் சான்றிதழ்கள் எவ்வித கட்டணமும் இன்றி இலவசமாகவே வழங்கப்பட்டு வருகின்றன.

**127—**

### கோட்டூர் ஒன்றியம், புதிய வட்டமாக அறிவிக்கப்படல்

**வினா எண் 4104—திரு. வை. சிவபுண்ணியம்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டம், கோட்டூர் ஒன்றியத்தைப் புதிய வட்டமாக அறிவிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

கோட்டூர் ஒன்றியத்தைப் புதிய வட்டமாக மாற்றும் செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**128—**

### ஆரணியை வருவாய்க் கோட்டமாக அறிவித்தல்

**வினா எண் 4199—திரு. ஆர். சிவானந்தம்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[1997 ஏப்ரல் 30

திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், ஆரணியை வருவாய்க் கோட்டமாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

ஆரணியைப் புதிய வருவாய்க் கோட்டமாக அமைக்கும் செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**129—**

**மனைப்பட்டா வழங்குதல்**

**வினா எண் 6343-திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) புவனகிரி தொகுதி, மஞ்சக்குழி ஊராட்சிக்குட்பட்ட சம்மந்தம் சைதானி பீவி தர்காவில் நீண்ட காலமாக குடியிருப்பவர்களுக்கு மனைப்பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) ஒப்படைக் கேட்டு கோரிக்கை ஏதும் நடவடிக்கையில் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**130—**

**தீ விபத்து காப்பீட்டுத் திட்டம் அமுல்படுத்துதல்**

**வினா எண் 6833—திரு. ஜே. எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா.—

தமிழ்நாட்டிலுள்ள ஆதி திராவிடர் மற்றும் மலைவாழ் மக்கள் வசிக்கும் குடிசைப் பகுதிகளுக்குத் தீ விபத்து காப்பீட்டுத் திட்டத்தை அமுல்படுத்த அரசு முன்வருமா?



1997 ஏப்ரல் 30 ]

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு முழுவதும் தீ விபத்தால் பாதிக்கப்படும் குடிசைகளுக்கு மத்திய அரசின் குடிசைக் காப்பீட்டுத் திட்டம் 21-9-88 முதல் அமுல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் தீ விபத்தில் பாதிக்கப்பட்ட அனைத்துக் குடிசைகளுக்கும் நிவாரணம் வழங்கப்படுகிறது. தீ விபத்தில் பாதிக்கப்பட்ட ஆதி திராவிடர் மற்றும் மலைவாழ் மக்கள் வசிக்கும் குடிசைகளும் இத்திட்டத்தில் அடங்கும்.

**131—**

**ஜம்புநதி அணை திட்டத்திலிருந்து தண்ணீர் கொண்டுவருதல்**

**வினா எண் 1499—திரு. கு. ரவி அருணன்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம் கீழப்பாவூர் ஒன்றியம் கல்லூரணி ஊராட்சி - பனையடிப்பட்டி கிராமத்தில் உள்ள பூலாங்குளத்திற்கு ஜம்புநதி அணை திட்டத்திலிருந்து தண்ணீர் கொண்டுவர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): ஜம்புநதி அணைக்கட்டிலிருந்து பூலாங்குளத்திற்கு தண்ணீர் கொண்டுவர சாத்தியக்கூறுகள் இல்லை.

**132—**

**குழிலியம்பாறை பகுதி குளங்களுக்குப் பாசன வசதி**

**வினா எண் 5106—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடகனாறு நீர்த்தேக்கத்திலிருந்து குஜிலியம்பாறை பகுதியிலுள்ள குளங்களுக்குப் பாசன வசதி அளிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**133—**

### சத்துவாச்சாரியில் நீதிமன்ற வளாகம் கட்டுதல்

**வினா எண் 354— திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், சத்துவாச்சாரியில் புதிதாகக் கட்டப்படும் நீதிமன்ற வளாகம் எப்போது கட்டி முடிக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், வேலூர் சத்துவாச்சாரியில் புதிதாகக் கட்டப்பட்டுவரும் நீதிமன்றக் கட்டிடங்கள் கட்டும் பணி 31-3-97-க்குள் கட்டி முடிக்கப்படும்.

**134—**

### குற்றவியல், உரிமையியல் நீதிமன்றங்களுக்குத் தனித்தனி அலுவலகம்

**வினா எண் 870—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெருந்துறையில் ஒரே அலுவலகத்தில் இயங்கி வரும் குற்றவியல் மற்றும் உரிமையியல் நீதிமன்றங்களுக்குத் தனித்தனியாக அலுவலகம் ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?





விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

பெருந்துறையில் இயங்கி வந்த குற்றவியல் நடுவர் நீதிமன்றம் உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றமாக (District Munsif-*cum*-Judicial Magistrate Court) மாற்றம் செய்யப்பட்டு 1995 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. இந்நீதிமன்றம் அரசுக் கட்டிடத்தில் செயல்பட்டு வருகிறது. எனவே, பெருந்துறையில் உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம் (District Munsif-*Cum*-Judicial Magistrate Court) என்கிற ஒரே ஒரு நீதிமன்றம் மட்டுமே இயங்கி வருவதால் தனித்தனி அலுவலகங்கள் ஏற்படுத்த வேண்டிய நிலை எழவில்லை.

**135—**

### சட்டப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு நிறைவேற்றுதல்

**வினா எண் 889—திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சட்டப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு ஏன் நிறைவேற்றப் படவில்லை?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டப் பல்கலைக்கழகச் சட்ட முன்வடிவு 7-11-1995 ஆம் நாளன்று 10-வது சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்டது. ஆனால், 10-வது சட்டமன்றப் பேரவை முடிவுற்றக் காரணத்தினால் அச்சட்ட முன்வடிவானது இந்திய அரசமைப்புச் சட்டம் உறுப்பு 196 (5)-ன் படி செயல் இழந்தது (lapsed). பிறகு புதிய அரசு அமைக்கப்பட்டபின் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் 17-7-96 ஆம் நாளன்று நிதிநிலை அறிக்கையில் இந்த நிதியாண்டிலேயே டாக்டர் அம்பேத்கார் பெயரில் சட்டப்பல்கலைக்கழகம் அமைக்கப்படும் என்று அறிவித்திருந்தார். அதன்படி, சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட 1996 ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கார் சட்டப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 22/96) ஆளுநரின் ஒப்புதலுக்குப்பின் குடியரசுத்

தலைவரின் ஒப்புதலுக்காக 13-9-96 ஆம் நாளன்று மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

**136—**

**அனைத்து நீதிமன்றங்களையும் ஒரே வளாகத்தில் கொண்டு வருதல்**

**வினா எண் 893—திரு. வி. கே. லட்சுமணன்:** மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூரில் உள்ள அனைத்து நீதிமன்றங்களையும் ஒரே வளாகத்தில் கொண்டுவரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

கோயம்புத்தூரில் அனைத்து நீதிமன்றங்களும் ஒரே வளாகத்தில் செயல்பட ஏற்றவகையில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டிடங்கள் கட்டுவதற்கு ரூ. 9,29,44,300/- செலவில் அரசு 26-11-96 அன்று ஒப்புதல் வழங்கியுள்ளது.

**137—**

**சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஆய்வுக் குழு அமைத்தல்**

**வினா எண் 898—திரு. கே. சுப்பராயன் மற்றும் திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறைவாசிகளின் குறைகளைக் கேட்டறிய சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஆய்வுக் குழு அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?



விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**138—**

**முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட் கோர்ட்டுக்கு அரசுக் கட்டிடம்**

**வினா எண் 1272—திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரியில் இயங்கும் முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட் கோர்ட் வாடகைக் கட்டிடத்தில் இயங்குவதை மாற்றி, அரசுக் கட்டிடம் கட்ட ஆவன செய்யப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

தருமபுரியில் உள்ள குற்றவியல் நீதிமன்றத்திற்கு அரசுக் கட்டிடம் ரூ. 65 இலட்சம் செலவில் கட்டுவதற்கு ஜனவரி 1995-ல் அரசு ஆணை பிறப்பித்துள்ளது. கட்டிடம் கட்டும் பணி தற்போது நடைபெற்று வருகின்றது. கட்டிடப் பணிகள் இவ்வாண்டு டிசம்பர் திங்களுக்குள் முடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**139—**

**இஸ்மாயில் கமிஷன் பரிந்துரை மீது நடவடிக்கை**

**வினா எண் 1530—திரு. பே.வே.ஸ்ரீ. வெங்கடேசன்:** மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நீதிபதி இஸ்மாயில் கமிஷன் பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

விவர அறிக்கை ஒன்று அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

## அறிக்கை

### எடுத்த நடவடிக்கை குறித்த விவரம்

(i) நீதிபதி இஸ்மாயில் தலைமையில் விசாரணைக் கமிஷன் இருமுறை அமைக்கப்பட்டது.

(1976 ஆம் வருடம் அவசர நிலை காலத்தில் சென்னை மத்திய சிறையில் நடந்த சில சம்பவங்கள் குறித்த விசாரணை)

அவசர நிலை காலத்தில் 1976 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் சென்னை மத்திய சிறைச்சாலையில் சில அரசியல் சிறைவாசிகள் துன்புறுத்தப்பட்டதாகவும், தாக்கப்பட்டதாகவும் பெறப்பட்ட புகார்கள் குறித்து விசாரிக்க உயர்நீதி மன்ற நீதிபதி திரு. மு.மு. இஸ்மாயில் அவர்கள் தலைமையில் ஒரு விசாரணைக் கமிஷன் அரசு ஆணை (நிலை) எண் 1202, பொது (சட்டம் மற்றும் ஒழுங்கு - ஏ) நாள் 12-5-1977-ல் நியமிக்கப்பட்டது. விசாரணை அறிக்கையில் இச்சம்பவத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் குறித்து சுட்டிக் காட்டியதோடு, சிறை நிர்வாகத்தை மேம்படுத்தவதற்காகவும் சில கருத்துகள் மாண்புமிகு நீதிபதியால் தெரிவிக்கப்பட்டது. அவை பரிசீலிக்கப்பட்டு நிதி வசதிகளுக்கு ஏற்ப நடைமுறைப்படுத்தப்பட்டன. இந்த அறிக்கையின் அடிப்படையில் உரிய பரிசீலனைக்குப்பின் கீழ்க்கண்ட பணியாளர்கள் மீது அரசால் ஒழுங்கு நடவடிக்கை தொடரப்பட்டது.

1. திரு. கே. வித்யாசாகர், முன்னாள் சிறைக் கண்காணிப்பாளர். (சிறைத் துறை துணைத் தலைவராக ஓய்வு பெற்றவர்)
2. திரு. எம்.ஏ. கையூம், முன்னாள் சிறை அலுவலர் (ஓய்வு)
3. திரு. எம். செந்தூர்பாண்டியன், முன்னாள் உதவி சிறை அலுவலர். (தற்போது கூடுதல் கண்காணிப்பாளர்)
4. திரு. ஆர். சுருளிராஜன், முன்னாள் முதல் தலைமைக் காவலர். (தற்போது இடைநிலை ஆசிரியர்)
5. திரு. எஸ். மகாலிங்கம், முன்னாள் இரண்டாம் நிலைக் காவலர்.
6. திரு. மனோகரன், முன்னாள் இரண்டாம் நிலைக் காவலர்.
7. திரு. ஓபேயதுல்லா, முன்னாள் இரண்டாம் நிலைக் காவலர்.





மேற்படி அலுவலர்கள் அனைவரும் 5-6-78 முதல் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டனர். பின் திரு. ஆர். நடராஜன், இ.ஆ.ப. (தற்போது ஓய்வு பெற்றுவிட்டார்) அவர்கள் மேற்படி அலுவலர்கள் மீது குற்றச்சாட்டு குறிப்பாணைத் தயார் செய்து அதன் மீது விசாரணை மேற்கொள்ளும் பொருட்டு, விசாரணை அலுவலராகவும் நியமிக்கப்பட்டார். இத்தருணத்தில், குற்றம் சாட்டப்பட்ட நபர்களில் ஒருவரான திரு. எஸ். மனோகரன், இரண்டாம் நிலைக் காவலர், தன்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை எதிர்த்து சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். உயர்நீதிமன்றம் அவர் மீது தொடர்ந்த குற்றச்சாட்டு குறிப்பாணையினை ரத்து செய்ததோடு, விசாரணை அலுவலர் அவர் மீது நடவடிக்கை எடுப்பதையும் தடை செய்து தீர்ப்பு அளித்தது. திரு. கே. வித்யாசாகரனும் தன் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கைக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கிலும், அவர் மீதான ஒழுங்கு நடவடிக்கையினைத் தடை செய்து இடைக்கால ஆணைப் பிறப்பித்தது. இவ்விரு நீதிமன்ற தடை ஆணைகளால் விசாரணை அலுவலர் மேல் நடவடிக்கை மேற்கொள்ள இயலவில்லை. திரு. என். மனோகரன் தொடர்ந்த வழக்கில் உயர்நீதிமன்றம் பிறப்பித்த ஆணைக்கிணங்க, அவர் மீண்டும் பணியமர்த்தப்பட்டார். அரசாணை எண் 211, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை, நாள் 27-2-80-ல் உள்ள அறிவுரைகளின்படி இதர பணியாளர்களின் தற்காலிகப் பணி நீக்கமும் ரத்து செய்யப்பட்டு அவர்கள் அனைவரும் பணியமர்த்தப்பட்டனர். 11-7-89 அன்று உயர்நீதிமன்றத்தில் திரு. கே. வித்யாசாகரன் தொடர்ந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. தற்போது விசாரணை அலுவலர் மேல்நடவடிக்கை மேற்கொள்ள தடை ஏதும் இல்லை என்றாலும், குற்றச்சாட்டு குறிப்பாணைகள் விசாரணை அலுவலரால் தயாரிக்கப்படுள்ளதால் அது சட்டவிதிகளின்படி செல்லத்தக்கது அல்ல என்று சுட்டிக்காட்டப்பட்டது. எனவே குற்றம் சாட்டப்பட்ட அனைத்து நபர்கள் மீதும் 1989 ஆம் ஆண்டு மறு குற்றச்சாட்டு குறிப்பாணைகள் அரசு மட்டத்தில் தயாரிக்கப்பட்டு 3-10-89 முதல் 5-12-90 ஆன காலத்தில் அனைவருக்கும் தனித்தனியே வழங்கப்பட்டு அவர்களின் விளக்கமும் பெறப்பட்டது.

இந்நிலையில் திரு. ஆர். நடராஜன் பணியில் இருந்து ஓய்வு பெற்றுவிட்டார். எனவே அரசு ஆணை (நிலை) எண் 1575, உள் (சிறை.I) துறை, நாள் 8-9-92-ல் திரு. ஜே.ஆர். இராமநாதன், இ.ஆ.ப.

முன்னாள் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் லிமிடெட், சென்னை, அவர்கள் விசாரணை அலுவலராக அரசால் நியமனம் செய்யப்பட்டு மேற்கண்ட ஒழுங்கு நடவடிக்கையில் நேர்முக விசாரணையை நடத்த ஆணைப் பிறப்பிக்கப்பட்டது. இந்நிலையில் அனைத்து அலுவலர்களும், தங்கள் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையினை ரத்து செய்யக்கோரி தமிழ்நாடு மாநில நிர்வாக தீர்ப்பாயத்தில் வழக்கு தொடர்ந்தனர். வழக்கின் விவரம் மற்றும் முடிவு இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது. அரசால் நியமிக்கப்பட்ட இரண்டாவது விசாரணை அலுவலரும், குற்றம் சாட்டப்பட்ட அலுவலர்கள் பார்வையிடக் கோரிய சில ஆவணங்களை அவர்களுக்கு வழங்க இயலாததாலும் தமிழ்நாடு நிர்வாக தீர்ப்பாயத்தில் குற்றம் சாட்டப்பட்ட அலுவலர்கள் தொடர்ந்த வழக்குகளின் காரணமாகவும் விசாரணையை மேற்கொண்டு நடத்த இயலவில்லை என்று கூறி அரசுக்கு அறிக்கை சமர்ப்பித்தார்.

குற்றம் சாட்டப்பட்டவர்கள் கோரிய ஆவணங்கள் அனைத்தும் மைய அரசின் உள்துறையைச் சார்ந்ததாகும். அந்த ஆவணங்களைப் பெற பல முயற்சிகள் மேற்கொண்டும், அவைகளைப் பெற இயலவில்லை. மேலும், குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் தொடர்ந்த வழக்கில், திரு. எம்.ஏ. கையூம் மற்றும் திரு. எஸ். மகாலிங்கம் ஆகிய இருவரும் தங்களுக்குச் சாதகமாக தீர்ப்பாணையினை தமிழ்நாடு நிர்வாக தீர்ப்பாயத்தில் பெற்றுள்ளனர். அதனை ஏற்று அவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட மேல்நடவடிக்கை கைவிடப்பட்டது. திரு. எம். செந்தூர்பாண்டியன் தொடர்ந்த வழக்கில் 17-7-96 அன்று தமிழ்நாடு நிர்வாக தீர்ப்பாயம் தீர்ப்பு வழங்கியது. அத்தீர்ப்பும் அவருக்குச் சாதகமாகவே வழங்கப்பட்டுள்ளது. அத்தீர்ப்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய மேல்நடவடிக்கை குறித்து தனியாக பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

இந்த ஒழுங்கு நடவடிக்கை இனத்தில், குற்றம் 20 ஆண்டுகளுக்கு முன் நடைபெற்றுள்ளதாலும், தமிழ்நாடு நிர்வாக தீர்ப்பாயமும் குற்றம் சாட்டப்பட்டவர்களில் மூன்று பேருக்குச் சாதகமாக தீர்ப்பு வழங்கியுள்ளதாலும் இதர நபர்களுக்கும் இதுபோன்ற தீர்ப்பே தமிழ்நாடு நிர்வாக தீர்ப்பாயத்தால் வழங்கப்படக்கூடும் என்பதாலும், இதர நபர்கள் மீது நிலுவையில் உள்ள ஒழுங்கு நடவடிக்கையினை கைவிடலாமா அல்லது தொடரலாமா என்ற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.



**(ii) 90/83 - சென்னை, மத்திய சிறையிலிருந்து ஆட்டோ சங்கர் மற்றும் நால்வர் தப்பியது குறித்து - ஓய்வு பெற்ற நீதிபதி திரு. மு.மு. இஸ்மாயில் அறிக்கை.**

விசாரணை சிறைவாசி ஆட்டோ சங்கர் மற்றும் இதர 4 சிறைவாசிகள், சென்னை மத்திய சிறையிலிருந்து தப்பியது குறித்து விசாரணை நடத்த சென்னை உயர்நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி மாண்புமிகு திரு. மு.மு. இஸ்மாயில் தனி நபர் விசாரணை கமிஷனாக நியமிக்கப்பட்டார். (அரசு நிலை எண்.1943, உள்துறை (பணி.டி), நாள் 27-8-90) இந்த விசாரணை அலுவலரின் அறிக்கையை அரசு ஆணை எண். எம்.எஸ். 630, உள்துறை, நாள். 10-4-92-ன்படி ஏற்றுக்கொண்டது. இந்த விசாரணை அறிக்கையின் அடிப்படையில் மாண்புமிகு நீதிபதியால் குற்றம் கூறப்பட்ட மேற்க்காணும் தப்பித்தல் சம்பவத்திற்கு காரணமான சென்னை, மத்திய சிறையின் கீழ்க்கண்ட பணியாளர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.—

1. திரு. செல்லதுரை, முன்னாள் சிறை கண்காணிப்பாளர்.
2. திரு. முனிவேலு, முன்னாள் சிறை அலுவலர்.
3. திரு. பாலகிருஷ்ணன், முன்னாள் உதவி சிறை அலுவலர்.
4. திரு. ரஹீம்கான், முன்னாள் முதல் தலைமைக் காவலர்.
5. திரு. கஸ்பர், முன்னாள் முதல் நிலைக் காவலர்.
6. திரு. ஆறுமுகம், முன்னாள் முதல் நிலைக் காவலர்.
7. திரு. சந்திரசேகரன், முன்னாள் இரண்டாம் நிலைக் காவலர்.
8. திரு. கன்னியப்பன், முன்னாள் இரண்டாம் நிலைக் காவலர்.
9. திரு. ஏழுமலை, முன்னாள் இரண்டாம் நிலைக் காவலர்.
10. திரு. பாலசுப்பிரமணியன், முன்னாள் இரண்டாம் நிலைக் காவலர்.
11. திரு. கண்ணன், முன்னாள் இரண்டாம் நிலைக் காவலர்.

முதலில் அவர்கள் மீது குற்றச்சாட்டு குறிப்பாணை கோயம்புத்தூர் சரக சிறைத்துறைத் துணைத் தலைவரால் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டதால் அது சட்ட விதிகளின்படி செல்லத்தக்கது அல்ல எனச் சுட்டிக்காட்டப்பட்டது. எனவே அரசு கடிதம் எம்.எஸ்.எண்.438, உள் (சிறை.I) துறை, நாள் 20-3-95-ல் மேற்க்காணும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் மீது அரசின் சார்பில் மறு குற்றச்சாட்டு

[1997 ஏப்ரல் 30

குறிப்பாணை தயாரித்து குற்றம் சுமத்தப்பட்டவர்களுக்கு வழங்குமாறு சிறைத்துறைத் தலைவர் கேட்டுக்கொள்ளப்பட்டார். அதன்படி திருத்தப்பட்ட குற்றச்சாட்டுக் குறிப்பாணை அளிக்கப்பட்டு சில அலுவலர்களிடமிருந்து விளக்கமும் பெறப்பட்டுள்ளது. சில அலுவலர்களிடமிருந்து இன்னமும் விளக்கம் பெறப்படாமல் அவர்களால் காலங்கடத்தப்பட்டு வருகிறது. இந்த ஒழுங்கு நடவடிக்கை தொடர்புள்ள பல பதிவுருக்கள் மற்றும் ஆவணங்கள் நீதிமன்றத்தில் குற்ற வழக்கு சம்பந்தமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் அவ்வாவணங்களைப்பெற நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. குற்றம் சுமத்தப்பட்டவர்களில் திரு. கே. செல்லத்துரை, கண்காணிப்பாளர், குற்றச்சாட்டுகளுக்கு இதுவரை பதில் அளிக்காததோடு சிறைத்துறைத் தலைவர் தனக்கு அளித்த குற்றச்சாட்டு குறிப்பாணை எண்.49323/ஏபி.1/90, நாள். 5-9-95-ஐ ரத்து செய்யக்கோரி தமிழ்நாடு நிர்வாக தீர்ப்பாயத்தில் ஓ.ஏ. நெம்பர் 894/96-ல் ஒரு வழக்கினைத் தொடர்ந்தார். இதில் 26-6-96 அன்று நிர்வாக தீர்ப்பாயம் இறுதி ஆணைப் பிறப்பித்தது. அதில் மனுதாரரின் கோரிக்கையை நிராகரித்து தீர்ப்பாயம் ஆணைப் பிறப்பித்தது. அத்துடன் நிலுவையில் உள்ள ஒழுங்கு நடவடிக்கையினை மூன்று மாதத்திற்குள் முடிக்க வேண்டும் என்றும் அதற்கு மனுதாரர் ஒத்துழைக்க வேண்டும் என்றும் தமிழ்நாடு நிர்வாக தீர்ப்பாயம் ஆணைப் பிறப்பித்தது. இருப்பினும், அவர் இதுவரை குற்றச்சாட்டுகளுக்கான தன் விளக்கத்தை அளிக்கவில்லை. மாறாக தமிழ்நாடு நிர்வாக தீர்ப்பாயத்தில் பல வழக்குகளைத் தாக்கல் செய்து கொண்டிருக்கிறார். அவைகளுக்கு பதில் மனு தனியாக அரசால் அவ்வப்போது தாக்கல் செய்யப்பட்டுவருகிறது. இந்த வழக்கின் காரணமாக இந்த ஒழுங்கு நடவடிக்கையில் இறுதி முடிவு தாமதமாகிறது. இருப்பினும் இந்நேர்வில் கால தாமதத்தைத் தவிர்க்கும் பொருட்டு திரு. மு. பகவதிமுருகன், சிறைத்துறைத் துணைத் தலைவர் (தலைமையிடம்) விசாரணை அலுவலராக நியமிக்கப்பட்டுள்ளார். நேர்முக விசாரணையை விரைவில் தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவை தவிர சிறை நிர்வாகத்தை மேம்படுத்த சில பரிந்துரைகளும் இந்த அறிக்கையில் அளிக்கப்பட்டுள்ளது. இந்த பரிந்துரைகள் பரிசீலிக்கப்பட்டு ஏற்கப்பட்டவை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.



1997 ஏப்ரல் 30]

## இணைப்பு

| வ. எண். | அலுவலரின் பெயர். | வழக்கு எண். | அரசால் தீர்பாபாயத் திற்கு எதிர் ஆணை உறுதி அனுப்பிய நாள். | வழக்கின் நிலை. | வழக்கின் முடிவு. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. | திரு. கே. வித்யாசாகர் | ஓ.ஏ.எண். 6921/93 | 25-7-95 | தமிழ்நாடு மாநில தீர்ப்பாயத்தில் வழக்கின் மீது எவ்வித ஆணையும் இதுவரை பிறப்பிக் கப்படவில்லை. | - |
| 2. | திரு. எம்.ஏ. கையூம் | ஓ.ஏ.எண். 4083/91 | - | - | குற்றச்சாட்டுக் குறிப்பாணை, தீப்பாயத்தில் ரத்து செய்யப்பட்டு, அனைத்து ஓய்வூதிய பலன்களையும் அளித்திட 6-8-92-ல் ஆணை பிறப்பித்ததின் பேரில் அரசு ஆணை எண். (டி) 620, உள் (சி.2) துறை, நாள் 2-8-93-ல் இவர் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டது. |
| 3. | திரு. எம். செந்தூர் பாண்டியன். | ஓ.ஏ.எண். 5298/92. | 27-2-95 | - | ஒழுங்கு நடவடிக் கையினை ரத்து செய்து அனைத்து பலன்களையும் வழங்கும்படி தமிழ்நாடு மாநில நிர்வாக தீர்ப்பாயத்தால் 17-7-96-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அது அரசின் பரிசீலனையில் உள்ளது. |
| 4. | திரு. ஆர். கருணி ராஜன். | ஓ.ஏ.எண். 5815/92. | 7-11-94 | வழக்கின் மீது திரப்பாயத்தால் எவ்வித ஆணையும் பிறபிக்கப்படவில்லை. | |

[1997 ஏப்ரல் 30

இணைப்பு—தொடர்ச்சி

| வ. எண். | அலுவலரின் பெயர். | வழக்கு எண். | அரசால் தீர்ப்பாயத் திற்கு எதிர் ஆணை உறுதி அனுப்பிய நாள். | வழக்கின் நிலை. | வழக்கின் முடிவு. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 5. | திரு. எஸ். மகாலிங்கம் | ஓ.ஏ.எண் 5604/92 | 7-12-93 | | தமிழ்நாடு மாநில நிர்வாக தீர்ப்பாயத்தின் ஆணை எண். ஓ.ஏ. 5604/92, நாள்.11-1-95-ன் படி, இவர் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையினை ரத்து செய்து அரசு ஆணை நிலை எண். 1846, உள் (சி.1) துறை, நாள் 8-12-95-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. |
| 6. | திரு. எ. ஒபேயதுல்லா | ஓ.ஏ.எண் 5664/92 | 2-11-93 | வழக்கின்மீது தீர்ப்பாயத்தால் ஆணை ஏதும் இதுவரை பிறப்பிக் கப்படவில்லை. | |

**140—**

**எடப்பாடி நகரில் ஒரு உரிமையியல் நீதிமன்றம்.**

**வினா எண் 3225—திரு. இ. கணேசன் (ம) திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:**

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி நகரில் ஒரு உரிமையியல் நீதிமன்றம் துவங்குவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?



1997 ஏப்ரல் 30]

(ஆ) ஆம் எனில், இந்த நிதியாண்டில் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழ வாய்ப்பில்லை.

**141—**

**ஓமலூரில் உரிமையியல் நீதிமன்றம்**

**வினா எண் 3324—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூரில் உரிமையியல் நீதிமன்றம் அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

30-9-96 நாளிட்ட உள்துறை அரசாணை (நிலை) எண் 1460-ல் சேலம் மாவட்டம், ஓமலூரில் இயங்கிவந்த குற்றவியல் நீதிமன்றத்தை உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றமாக மாற்றி அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இந்நீதிமன்றம் 14-10-96 முதல் செயல்பட்டு வருகிறது.

**142—**

**பூந்தமல்லி சார்பு நீதிமன்றம் தாம்பரத்திற்கு மாற்றுதல்**

வினா எண் **3878—திரு. மீ. அ. வைத்தியலிங்கம்:** மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர் மாவட்டம் பிரிக்கப்பட்டுள்ளதால் பூந்தமல்லி சார்பு நீதிமன்றத்தை தாம்பரத்திற்கு மாற்றும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

இல்லை.

**143—**

**சீட்டு நிறுவனங்கள் மீது வரும் புகார்களை கவனிக்க சிறப்பு திட்டம்**

**வினா எண் 4060—திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் தொடங்கப்பட்டு செயல்பட்டு வரும் "சீட்டு நிறுவனங்கள்" மீது வரும் புகார்களைக் கவனிக்க அரசிடம் சிறப்புத் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

**144—**

**மனித உரிமையியல் நீதிமன்றங்கள் துவக்குதல்**

**வினா எண் 4461—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மனித உரிமையியல் நீதிமன்றங்கள் சென்னையிலும், மாவட்டத் தலைமையிடங்களிலும் துவக்கப்பட்டுள்ளனவா?

(ஆ) ஆம் எனில், அவைகள் செயல்படுகின்றனவா?



விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) : மனித உரிமையியல் நீதிமன்றங்கள் சென்னை மற்றும் மாவட்டத் தலைமையிடங்களில் அமைக்கப்பட்டு 29-1-1996 முதல் செயல்பட்டு வருகின்றன.

**145—**

**ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைத்தல்**

**வினா எண் 4536—திரு. கே. மணிவர்மா:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலையில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலையில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைப்பதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**146—**

**செங்கத்தில் முன்சீப் நீதிமன்றம்**

**வினா எண் 4552—திரு. கொ.வி. நன்னன்:** மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கத்தில் முன்சீப் நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): 30-9-96 நாளிட்ட, அரசாணை நிலை எண் 1460-ல் திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், செங்கத்தில் இயங்கி வந்த குற்றவியல் நீதிமன்றத்தை, உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றமாக மாற்றி அரசு ஆணை வெளியிட்டுள்ளது. மேற்சொன்ன நீதிமன்றம் 14-10-96 முதல் செயல்பட்டு வருகிறது.

**147—**

**சென்னையில் உச்சநீதிமன்றத்தின் கிளையை அமைத்தல்**

**வினா எண் 5108—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னையில் உச்ச நீதிமன்றத்தின் கிளையை அமைக்க மத்திய அரசை மாநில அரசு கோருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

சென்னையில் உச்சநீதிமன்றக் கிளையை அமைக்க வேண்டி உச்சநீதிமன்றத்தை மீண்டும் அணுகக்கோரி 10-10-96 அன்று தமிழக அரசு மைய அரசைக் கேட்டுக்கொண்டுள்ளது.

**148—**

**சிறைவாசிகளிடம் 12 மணி நேரம் வேலை வாங்குவதை மாற்றுதல்**

**வினா எண் 5131—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள சிறைகளில் சிறைவாசிகளிடம் 12 மணி நேரம் வேலை வாங்கப்படுவது அரசிற்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதை மாற்றிட அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?



விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**149—**

**தணிக்கை முறையில்லாமல் சிறைவாசிகள் நேரடியாகப் புகார் செய்ய ஏற்பாடு**

**வினா எண் 5135—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறை அதிகாரிகளின் தணிக்கை முறையில்லாமல் (Censor) சிறைவாசிகள் மாநில அரசிற்கு நேரடியாகப் புகார் செய்ய அரசு ஏதேனும் விசேஷ ஏற்பாடு செய்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) அமர்வு நீதிமன்ற நீதிபதியால் பூட்டப்பட்டு அரக்கு முத்திரையிடப்பட்டு, சிறைக்கு, புகார் பெட்டிகள் அனுப்பப்படுகிறது. இப்பெட்டிகள் சிறைகளில் சிறைவாசிகள் எளிதில் அணுகக்கூடிய இடங்களில் வைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு வைக்கப்படும் பெட்டிகளில் சிறைவாசிகள் தங்களது குறைகளை எழுதிப் போட அனுமதிக்கப்படுகிறது. மேலும் தற்போது உயர்நீதிமன்ற ஆணைப்படி மாதத்தில் இருமுறை மாவட்ட அமர்வு நீதிபதி மற்றும் மாவட்ட நீதிபதி ஆகியோர் மத்திய சிறைகளைப் பார்வையிட வரும்பொழுது சிறைவாசிகள் தங்களது குறைகளை தனித்துத் தெரிவிக்க சந்தர்ப்பம் உள்ளது.

**150—**

**சிறைச்சாலைகளிலுள்ள மனநோயாளிகளை மனநோயாளிகள் காப்பகத்தில் சேர்க்க நடவடிக்கை**

**வினா எண் 5265—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறைச்சாலைகளிலுள்ள மனநோயாளிகளை விடுவித்து மனநோயாளிகள் காப்பகத்தில் சேர்க்குமாறு மனித உரிமைக் கமிஷன் மாநில அரசிற்குக் கடிதம் எழுதியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எத்தனை மனநோயாளிகள் மாநிலச் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டனர்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) மனநலமற்ற சிறைவாசிகள் எவரும் மாநில, மத்திய சிறைகளில் இல்லையாதலால் எவரையும் விடுவிக்க வேண்டிய நிலை எழவில்லை.

**151—**

**சிறைச்சாலை சட்டத்தை மாற்றி அமைத்தல்**

**வினா எண் 5267—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தற்போதுள்ள சிறைச்சாலை சட்டத்தைப் பொருத்தமான முறையில் மாற்றி அமைக்குமாறு மாநில அரசுகளை தேசிய மனித உரிமைக் குழு கேட்டுக் கொண்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.



(ஆ) தற்போதுள்ள சிறைச்சாலை சட்டத்தை திருத்தும் பொருட்டு தேசிய மனித உரிமைக்குழு தயாரித்த இந்திய சிறைச்சட்டம், 1995-ன் வரைவு பெறப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**152—**

**கோவை மத்திய சிறை தொழிற்சாலைப் பிரிவில் முறைகேடு**

**வினா எண் 5346—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மத்திய சிறையில் உள்ள தொழிற்சாலைப் பிரிவில் முறைகேடுகள் நடைபெறுவதாக அரசுக்குப் புகார்கள் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**153—**

**காட்டுமன்னார்கோவிலில் நீதிமன்றம் அமைத்தல்**

**வினா எண் 5703—திரு. அ. வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு-வள்ளலார் மாவட்டம், காட்டுமன்னார் கோவிலில் நீதிமன்றம் அமைக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) தென் ஆற்காடு-வள்ளலார் மாவட்டம், காட்டுமன்னார் கோவிலில் நீதிமன்றம் அமைப்பது குறித்த செயற்குறிப்பு தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழ வாய்ப்பில்லை.

**154—**

**திருக்கழுக்குன்றத்தில் சிறைச்சாலை**

வினா எண் **6015—திரு. வீ. தமிழ்மணி:** மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அண்ணா மாவட்டம், திருக்கழுக்குன்றத்தில் ஒரு சிறைச்சாலை கட்ட அரசு முன் வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

அண்ணா மாவட்டம், திருக்கழுக்குன்றத்தில் சிறைச்சாலை கட்டுவதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

**155—**

**திருப்பூர் எஸ்.ஆர்.சி. ஆலையை திறத்தல்**

வினா எண் **177—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் எஸ்.ஆர்.சி. ஆலை நீண்ட நாட்களாக மூடிக் கிடப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைத் திறக்க மாநில அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) ஆலை நிர்வாக பிரதிநிதி, வங்கிகளிடமும், தனியார் நிதி நிறுவனங்களிடமும் நிதி உதவி கோரியுள்ளதாகவும், நிதி உதவி கிடைத்தவுடன் ஆலை திறக்க வாய்ப்பு உள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.



**156—**

**கழிவு நீரின் பாதிப்பை தடுத்தல்**

வினா எண் **582—திரு. துரை. சந்திரசேகரன்:** மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், அம்மாபேட்டை நவீன அரிசி ஆலையிலிருந்து வெளியேறும் கழிவு நீரினால் அங்கு பாதிப்பு ஏற்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இதுகுறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. என். கே. கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தஞ்சை மாவட்டம், அம்மாபேட்டையில் உள்ள நவீன அரிசி ஆலையிலிருந்து வெளியேறும் கழிவுநீர் தொழிற்சாலைகளுக்கு வெளியே விடப்படுகிறது. இத் தொழிற்சாலை முழு அளவிலான கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்து கழிவு நீரை தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் நிர்ணயித்துள்ள தர அளவிற்கேற்ப சுத்திகரிப்பு செய்து வெளியேற்றுமாறு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**157—**

**தொழில் நுட்ப கல்லூரி பவானியில் ஏற்படுத்துதல்**

வினா எண் **841—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இந்தியாவில் புகழ்பெற்ற ஜமுக்காள நெசவுத் தொழிலைப் பாதுகாக்கவும், கால வளர்ச்சிக்கு ஏற்ற முறையில் உற்பத்தி செய்ய தொழில் நுட்பக் கல்லூரி ஒன்று பவானியில் ஏற்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. என். கே. கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

தற்சமயம் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

**158—**

### சுற்றுச் சூழல் மாசுபடுவதை தடுத்தல்

**வினா எண் 964—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீதிமன்ற ஆணைப்படி தோல் தொழிற்சாலை கழிவு நீரை சுத்தப்படுத்தினாலும் சுற்றுச் சூழல் மாசுபடாமல் அதை வெளியேற்ற முடியாது என்று நிபுணர்கள் கருத்து தெரிவித்துள்ளார்களா?

(ஆ) ஆம் எனில், அதற்கு மாற்று ஏற்பாடு என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. என். கே. கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) தோல் பதனிடும் தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் கழிவு நீரானது தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் நிர்ணயித்துள்ள அளவீடுகளுக்குட்பட்டு இருப்பின் சுற்றுச்சூழல் மாசடைவதற்கு வாய்ப்பில்லை.

(ஆ) வினா எழவில்லை.

**159—**

### விசைத்தறிகள் எண்ணிக்கையை அதிகரித்தல்

**வினா எண் 1320—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் எத்தனை விசைத்தறிகள் இயங்கி வருகிறது?

(ஆ) விசைத்தறிகளின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறதா?



விடை—

**மாண்புமிகு திரு. என். கே. கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் 30-6-96 அன்றைய தேதியில் 2,36,915 விசைத்தறிகள் இயங்கி வருகின்றன.

(ஆ) புதியதாக நிறுவப்படும் விசைத்தறிகளின் எண்ணிக்கை குறைந்து வருகிறது.

**160—**

### தொழிலாளர்களுக்கு பணிக்கொடை வழங்குதல்

**வினா எண் 1731—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் தனலட்சுமி மில்ஸ் நிர்வாகத்தினர் ஓய்வு பெற்ற தொழிலாளர்களுக்கு பணிக்கொடை தராமல் நிலுவையில் வைத்துள்ளனரா?

(ஆ) ஆம் எனில், அப்பணிக்கொடையை வழங்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. என். கே. கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) ஆலையின் ஒரு பகுதியான 'பி' பிரிவில் அடங்கியுள்ள நிலத்தை விற்று அதில் வரும் பணத்தைக்கொண்டு அனைத்து தொழிலாளர்களுக்கும் பணிக்கொடை பட்டுவாடா செய்ய நிதி நிர்வாகத்தினர் முன்வந்தனர். இதற்கிடையே, சென்னை உயர்நீதிமன்றம் இந்த ஆலைக்குச் சொந்தமான அந்நிலத்தை விற்கக்கூடாது என தடை ஆணை விதித்துள்ளது. இது தொடர்பாக 19-7-96 அன்று நடைபெற்ற சங்கப் பிரதிநிதிகளின் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவிற்கு இணங்க சங்கப் பிரதிநிதிகள் ஆலையின் கருத்துக்கு முதலில் ஒப்புக்கொண்டபோதும், ஆலோசனைக்குப் பிறகு நிலத்தை விற்க அவர்கள் ஒத்துழைப்புத் தரவில்லை. மேற்கண்ட சூழ்நிலையில் பண

நெருக்கடி காரணமாக திருப்பூர் தனலட்சுமி ஆலை நிர்வாகம் ஒய்வு பெற்ற தொழிலாளர்களுக்குப் பணிக்கொடை வழங்க இயலாத சூழ்நிலையில் உள்ளது.

**161—**

**கிணறு, ஆழ்குழாய்க் கிணறுகள் பாதிக்கப்படுவதை தடுத்தல்**

**வினா எண் 1853—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டுப்பாளையம் வட்டம், தேக்கம்பட்டியிலுள்ள சாயப்பட்டறை மற்றும் பேப்பர் மில்களால் சுற்று வட்டாரக் கிணறுகளும், ஆழ் குழாய்க் கிணறுகளும் பாதிக்கப்படுவது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. என். கே. கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) மேட்டுப்பாளையம் வட்டம், தேக்கம்பட்டியிலுள்ள சாயப்பட்டறை மற்றும் பேப்பர் மில்களால் சுற்று வட்டாரக் கிணறுகளும், ஆழ் குழாய்க் கிணறுகளும் பாதிக்கப்படுவதைத் தடுப்பதற்காக இத் தொழிற்சாலைகள் அமைத்துள்ள கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தை திறம்பட இயக்குமாறு, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் மூலம் அறுவுறுத்தப்பட்டுள்ளன.

**162—**

**இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டம்**

**வினா எண் 1864—திரு. பெ. சு. திருவேங்கடம்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏழை, எளிய மக்களுக்கு இலவச வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தை அரசு செயல்படுத்த உள்ளதா?





(ஆ) ஆம் எனில், அதன் விபரமென்ன?

விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 1996-97-ஆம் ஆண்டிற்கு 60 இலட்சம் வேட்டிகள், 60 இலட்சம் சேலைகள், சுமார் ரூ.65.00 கோடி செலவில், தரமான வேட்டி சேலைகளைக் கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உற்பத்தி செய்து வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

**163—**

**கைத்தறித் துணிகள் தேக்கம்**

**வினா எண் 1993—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் பரமக்குடி-எமனேஸ்வரம் பகுதியில் கைத்தறித் துணி தேங்கி உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு மாநில கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தில் (கோ-ஆப்டெக்ஸ்) ரூ.178 கோடி அளவிற்குத் துணிகள் இருப்பில் உள்ளன. இதில் பரமக்குடி - எமனேஸ்வரம் சேலை இரகங்கள் ரூ.3.70 கோடி அளவில் விற்பனை ஆகாமல் உள்ளன. பரமக்குடி, எமனேஸ்வரம் பகுதிகளில் உள்ள நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் பம்பர் சேலைகள், சுங்குடி சேலைகள், 80-ஆம் நெம்பர் பருத்தி சேலைகள், பருத்தி ஃபயர் பிளை சேலைகள், பனாரஸ் செயற்கைப்பட்டு சேலைகள் ஆகிய இரகங்களை உற்பத்தி செய்து வருகின்றன. இதில், பனாரஸ் செயற்கைப் பட்டு இரக சேலைகள் மட்டுமே தேக்க நிலையில் உள்ளன.

[1997 ஏப்ரல் 30

தற்போது இந்த இரக சேலைகளுக்கு கிராக்கி மிகவும் குறைந்துள்ளதால் தேக்க நிலை ஏற்பட்டுள்ளது. பரமக்குடி, எமனேஸ்வரம் பகுதியில் கடந்த ஜனவரி மற்றும் மார்ச்'96 மாதங்களில் கோ-ஆப்டெக்ஸ் ஏற்கனவே ரூ.51.50 லட்சம் அளவிற்கு நிவாரணக் கொள்முதல் செய்துள்ளது. இருப்பினும், பரமக்குடி, எமனேஸ்வரம் பகுதியில் ஏற்கெனவே ரூ.5.21 கோடி அளவுக்கு சரக்குத் தேக்கம் இருப்பதைக் கருத்தில் கொண்டு தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் ரூ.75.00 லட்சம் பெறுமானமுள்ள சேலைகளைக் கொள்முதல் செய்ய முடிவு செய்து நிவாரணக் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

**164—**

**கொள்முதல் செய்த துணிகளுக்கு செலுத்த வேண்டிய பாக்கித்தொகை**

**வினா எண் 2084—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் கூட்டுறவு சங்கங்களிடம் கொள்முதல் செய்த துணிகளுக்குக் கொடுக்க வேண்டிய பாக்கித் தொகை எவ்வளவு?

(ஆ) அவை எப்போது வழங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. என். கே. கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு 1-8-96 அன்று கொடுக்க வேண்டிய பாக்கித் தொகை ரூ.42.97 கோடி ஆகும். இதில் 21-8-96 வரை வழங்கப்பட்ட தொகை ரூ.15.43 கோடி ஆகும். எனவே மீதம் செலுத்தவேண்டிய தொகை ரூ.27.54 கோடி ஆகும்.

(ஆ) மத்திய மற்றும் மாநில அரசுகளிடமிருந்து பெறவேண்டிய தள்ளுபடி மானியத் தொகை, கடன் விற்பனையில் நிலுவையாக உள்ள தொகையினை வசூல் செய்வதன் மூலமும், தீபாவளி மற்றும் இதர பண்டிகை நாட்களில் செய்ய இருக்கும் விற்பனை மூலமும் நிலுவைத் தொகை கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தால் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு படிப்படியாக வழங்கப்படும்.



1997 ஏப்ரல் 30]

**165—**

**இலாப விகிதத்தினை உயர்த்துதல்**

**வினா எண் 3586—திரு. அ. வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெசவாளர் சங்கங்களிலிருந்து கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் கொள்முதல் செய்யும்போது நிர்ணயிக்கப்படும் இலாப விகிதத்தினை உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. என். கே. கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): நெசவாளர் சங்கங்களிலிருந்து கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் கொள்முதல் செய்யும்போது நிர்ணயிக்கப்படும் இலாப விகிதத்தினை உயர்த்தும் எண்ணம் எதுவும் தற்போது இல்லை.

**166—**

**ஆய்வுக் குழு அமைத்தல்**

**வினா எண் 3589—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவு நூற்பாலைகளின் நிர்வாகத்தை மேம்படுத்த தொழிற்சங்கப் பிரதிநிதிகள் அடங்கிய ஆய்வுக் குழு அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. என். கே. கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவு நூற்பாலைகளின் நிர்வாகத்தை மேம்படுத்த தொழிற்சங்கப் பிரதிநிதிகள் அடங்கிய ஆய்வுக் குழு அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

167—

**அரசுப் பொருட்காட்சிகளில் விற்கப்படும் துணிகளுக்குத் தள்ளுபடி**

**வினா எண் 4027—திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பண்டிகைக் காலங்களிலும், தேசத் தலைவர்களின் நினைவு நாட்களிலும், கைத்தறித் துணிகளுக்குத் தள்ளுபடி வழங்குவது போல், அரசுப் பொருட்காட்சிகளில் வைக்கப்படும் கைத்தறித் துணிகளுக்கும் தள்ளுபடி வழங்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. என். கே. கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

இல்லை.

168—

**சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி**

**வினா எண் 5251—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் சாயம் மற்றும் சலவைப் பட்டறை நிறுவனங்களிடமிருந்து சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணிக்குக் கால நீட்டிப்புக் கோரி அரசுக்கு முறையீடு ஏதும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. என். கே. கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்

(ஆ) திருப்பூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள சலவை மற்றும் சாயத் தொழிற்சாலைகள், பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் கட்டுமானப் பணிகள் முன்னேற்றம் குறித்து 6-11-1996 அன்று வாரியத் தலைமை அலுவலகத்தில் கூட்டம் நடத்தப்பட்டது. இதில் மேற்படி



தொழிற்சாலைகளின் சங்கத்தினர்களும் கலந்து கொண்டனர். பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் நிறுவி இயக்க வாரியம் 31-3-1997 ஆம் தேதி வரை கால அவகாசம் கொடுத்துள்ளது.

169—

**ஸ்டெர்லைட் நிறுவனம் உற்பத்தியைத் தொடங்குதல்**

**வினா எண் 5729—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி ஸ்டெர்லைட் நிறுவனம் தனது உற்பத்தியைத் தொடங்கி விட்டதா?

(ஆ) ஆம் எனில், அதனால் சுற்றுச்சூழல் பாதிக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. என். கே. கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) தூத்துக்குடியில் அமைந்துள்ள ஸ்டெர்லைட் இண்டஸ்ட்ரீஸ் (இந்தியா) லிமிடெட் நிறுவனம் 1-1-1997-லிருந்து உற்பத்தியைத் துவங்கியுள்ளது.

(ஆ) இத்தொழிற்சாலை, நீர், நிலம், காற்று ஆகியவற்றில் மாசுக்கேடு ஏற்படுவதைக் கட்டுப்படுத்தத் தேவையான மாசு கட்டுப்பாடு சாதனங்களை பொருத்தியுள்ளதால் சுற்றுப்புறச் சூழலுக்குப் பாதிப்பு ஏற்பட வாய்ப்பு இல்லை.

170—

**பஞ்சப்படியுடன் கூலி உயர்வு கொடுத்தல்**

**வினா எண் 6033—திரு. வீ. தமிழ்மணி:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கைத்தறி நெசவாளர் சங்க உறுப்பினர்களுக்கு பஞ்சப்படியுடன் கூலி உயர்வு கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) கைத்தறி நெசவாளர் சங்க உறுப்பினர்களுக்கு பஞ்சப்படியுடன் கூலி உயர்வு அளிக்கும் திட்டம் ஏற்கனவே நடைமுறையில் உள்ளது.

(ஆ) 1-7-1995 முதல் அனைத்து பிரதம கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு அடிப்படைக் கூலியில் 10% அகவிலைப்படி உயர்வு வழங்கப்பட்டு வருகிறது. மேலும் இரண்டாம் தவணையாக 1-4-1996 முதல் 10% அகவிலைப்படியும் வழங்கப்பட்டு வருகிறது.

**171—**

**அம்பாசங்கர் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துதல்**

**வினா எண் 3396—திரு. அ. வ. அப்துல் நாசர் மற்றும் திரு. மு. க. ஸ்டாலின்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

அம்பாசங்கர் பிற்பட்டோர் நலக் குழுவினுடைய பரிந்துரைகள் தற்போது எந்த அளவிற்கு அரசால் நடைமுறைப்படுத்தப்படுகின்றன?

விடை—

**மாண்புமிகு திரு. எம். ஆர். கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

விவர அறிக்கை ஒன்று அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

நீதிப் பேராணை மனுக்கள் 4995-4997/1980 மற்றும் 402/1991 ஆகியவற்றின்மீது இந்திய உச்சநீதிமன்றம் பிறப்பித்த ஆணைக்கிணங்க, அப்போது செயலில் இருந்த பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் கணக்கெடுப்பையும், வகைப்பாட்டினையும் மறுஆய்வு செய்யும்





நோக்கத்துடன் தமிழ்நாடு இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் நலக் குழு திரு. ஜே.ஏ. அம்பாசங்கர், இ.ஆ.ப., (ஓய்வு) அவர்கள் தலைமையில் அரசாணை எண். 3078, சமூகநலத் துறை, நாள் 13-12-1982-இல் ஏற்படுத்தப்பட்டது. இக்குழு 1985-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 28-ஆம் நாள் தனது அறிக்கையினை அரசுக்கு அளித்தது. தமிழ்நாடு இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் நலக் குழு பிற்படுத்தப்பட்டோர்/மிகப் பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் பட்டியல்கள் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்குக் கல்வி, வேலைவாய்ப்புகளில் இட ஒதுக்கீடு ஆகியன குறித்த பரிந்துரைகளையும் வழங்கியது. தமிழ்நாடு இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் நலக் குழுத் தலைவரின் அறிக்கை மற்றும் பரிந்துரைகள் மற்றும் அக்குழுவின் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரைகள் ஆகியவற்றை அரசு பரிசீலித்து பிற்படுத்தப்பட்டோர் பட்டியல், பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான இடஒதுக்கீடு ஆகியவற்றின்மீது உச்சநீதிமன்றம் பிறப்பித்த காலவரையைக் கருத்தில் கொண்டு முறையே அரசாங்க நிலை எண்கள் 1564, சமூகநலத் துறை, நாள் 30-7-1985 மற்றும் 1565, சமூக நலத் துறை, நாள் 30-7-1985-இல் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. மேலும், மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியல் மற்றும் சீர்மரபினர் பட்டியல் ஆகியன முறையே அரசாணை (நிலை) எண்கள் 1566 மற்றும் 1567, சமூகநலத் துறை, நாள் 30-7-1985-இல் வெளியிடப்பட்டன. பிற்படுத்தப்பட்டோர் நலவாழ்வுக்கான பரிந்துரைகளை அமல் செய்தால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு ரூபாய் 2232.19 இலட்சம் கூடுதல் செலவினம் ஏற்படும் என்று தெரிவிக்கப்பட்டதால் மாநிலத்தில் நிலவும் கடுமையான நிதி நெருக்கடியில், இப்பரிந்துரைகளை ஒரே நேரத்தில் அமல் செய்வது இயலாது என்றும், இப்பரிந்துரைகளை படிப்படியாக அமல் செய்யலாம் என்றும் முடிவு செய்யப்பட்டது. எனவே, தமிழ்நாடு இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் நலக் குழுவின் நலத் திட்டங்கள் குறித்த பரிந்துரைகளை அவற்றின் முக்கியத்துவம் மற்றும் முன்னுரிமை அடிப்படையில் 1990-91-ஆம் ஆண்டு முதல் பகுதி II திட்டங்களாகப் படிப்படியாகக் கொண்டு வருமாறு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல இயக்குநர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்குநர் ஆகியோர் கேட்டுக்கொள்ளப்பட்டனர். அங்ஙனம் நலவாழ்வுத் திட்டங்களுக்கான பரிந்துரைகள்மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் விவரம் வருமாறு:-

| | பிற்படுத்தப்பட்டோர்நலக் குழு பரிந்துரைகள் (1) | மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் (2) |
|---|---|---|
| 1. | முதலமைச்சரின் சத்துணவுக் கூடங்களை கிண்டர் கார்டன் அல்லது மாண்டிசௌரி மாதிரியான பாலர் பள்ளிகளாக மாற்றுவது | சத்துணவுக் கூடங்களை மாண்டிசௌரி பள்ளிகளாக மாற்றி அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டன. |
| 2. | பட்ட வகுப்புகளில் பயிலும் ஆதிதிராவிடர்/ பழங்குடியின மாணவர்களுக்கு நடத்தப் படுகின்ற தனிப் பயிற்றுவிப்பு வசதிகளைப் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கும் நீட்டிப்பது. | பட்ட வகுப்புகளில் பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் வகுப்பினைச் சேர்ந்த மாணவர்களுக்குத் தனிப் பயிற்சி அளிக்கும் திட்டம் சென்னை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், மதுரை ஆகிய ஐந்து மையங்களில் நடத்துவதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்டது. |
| 3. | (i) பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் படிப்பு உதவித் தொகை பெறுவதற்கான ஆண்டு வருமான வரம்பு ரூபாய் 5,000/-லிருந்து ரூபாய் 10,000/-ஆக உயர்த்துதல். | பிற்படுத்தப்பட்ட வகுப்பினைச் சேர்ந்த மாணவர்கள் படிப்பு உதவித் தொகை பெறுவதற்கான ஆண்டு வருமான வரம்பு ரூ.5000-லிருந்து ரூ.12,000/-ஆக உயர்த்தப்பட்டது. |
| | (ii) தமிழ்நாடு கல்வி விதி 92-ன் கீழ் கல்விக் கட்டணச் சலுகை பெறுவதற்கான ஆண்டு வருமான வரம்பு ரூபாய் 1,500-லிருந்து ரூ.5,000/- ஆக உயர்த்துவது. | கல்வித் துறையின் பரிசீலனையில் இருந்து வருகிறது. |





| | பிற்படுத்தப்பட்டோர்நலக் குழு பரிந்துரைகள் (1) | மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் (2) |
|---|---|---|
| 4. | படிப்புதவித் தொகைகள் நடைமுறையில் வசூலிக்கப்படுகின்ற கல்விக் கட்டணங்களுக்கு இணையாக உயர்த்தப்பட வேண்டும். | மிகப் பிற்படுத்தப்பட்டோருக்கும் சீர்மரபினருக்கும் பத்தாம் வகுப்பில் இருந்து மூன்று ஆண்டு பட்டப் படிப்பு வரை இலவசக் கல்வித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் பள்ளிக் கல்வி இயக்குநர் மற்றும் கல்லூரிக் கல்வி இயக்குநர் ஆகியோர் நிர்ணயிக்கும் வீதத்தில் அனைத்துக் கட்டாயக் கட்டணங்களும் வழங்கப்படுகின்றன. இதேபோன்று அனைத்து தொழில் நுட்பப்பட்டப் படிப்புகளுக்கும் சில நிபந்தனைகளுக்குட்பட்டு இலவச கல்வித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. அரசு உதவி பெறும் பள்ளிகளில் ஆங்கிலப் பயிற்று மொழியில் ஆறு முதல் பனிரெண்டாம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கும் கட்டணச் சலுகை நீட்டிக்கப்பட்டுள்ளது. |
| 5. | மெட்ரிக் படிப்புக்கு முந்தைய நிலையில் அனைத்துப் பாடப் புத்தகங்களையும் வழங்க வேண்டும். | அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் ஒன்று முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் அனைத்து பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பு மாணவர்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து பாடப் புத்தகங்களும் முதலமைச்சர் சத்துணவுத் திட்டத்தின் கீழ் கல்வி மற்றும் சமூகநலத் துறைகளின் வழியாக இலவசமாக வழங்கப்படுகின்றன. மதுரை மற்றும் திண்டுக்கல் அண்ணா |

| | பிற்படுத்தப்பட்டோர்நலக் குழு பரிந்துரைகள் (1) | மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் (2) |
|---|---|---|
| | | மாவட்டங்களில் உள்ள கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில் எட்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களைப் பொறுத்த அளவில் பாடப் புத்தகங்கள் மிகப்பிற் படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்நலத் துறையால் வழங்கப்படுகின்றன. ஒன்பது மற்றும் பத்தாம் வகுப்புகளில் பயிலும் இவ்வகுப்பினைச் சேர்ந்த மாணவர்களுக்கு தமிழ்நாடு பாடநூல் நிறுவனத்தின் மூலம் குறிப்பிட்ட பாடப் புத்தகங்கள் இலவசமாக இத்துறையால் வழங்கப்படுகின்றன. பத்தாம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு குறிப்பிட்ட பாடப்புத்தகங்கள் வழங்குவதற்குப் பதிலாக அனைத்து பாடப் புத்தகங்களையும் வழங்க அரசு முடிவு எடுத்துள்ளது. இதற்கான ஆணை விரைவில் வெளியிடப்பட உள்ளது. |
| 6. | புத்தக செலவுப் பணம் (Book Money) மேல்நிலை வகுப்பு மாணவர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.50/- வீதத்திலும், பட்ட வகுப்பு மாணவர்களுக்கு முதல் ஆண்டில் ரூ.100/-ம் இரண்டு மற்றும் மூன்றாம் ஆண்டுகளில் ரூ.50/-ம் பட்ட மேற்படிப்பு மாணவர்களுக்கு ஆண்டுக்கு ரூ.150/- வீதத்திலும் வழங்க வேண்டுதல். | நிதி நிலை காரணமாக இதற்கான செயற்குறிப்பு அரசால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. |



| | பிற்படுத்தப்பட்டோர்நலக் குழு பரிந்துரைகள் (1) | மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் (2) |
|---|---|---|
| 7. | பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை விடுதிகளில் சேர்க்கைக்கான வருமான வரம்பை உயர்த்துவது. | பிற்படுத்தப்பட்டோர்நலத் துறை விடுதிகளில் சேர்த்துக் கொள்வதற்கான ஆண்டு வருமான வரம்பு ரூ.15,000/- ஆக உயர்த்தப்பட்டது. |
| 8. | விடுதிகளுக்குக் கூடுதல் வசதிகள் செய்வது. | (1) 1987-88-ஆம் ஆண்டில் 12 விடுதிகளுக்கும், 1990-91-ஆம் ஆண்டில் 40 விடுதிகளுக்கும், 1991-92-ம் ஆண்டில் 7 விடுதிகளுக்கும், 1992-93-ஆம் ஆண்டில் 6 மாணவியர் விடுதிகளுக்கும், 1993-94-ஆம் ஆண்டில் 11 மாணவியர் விடுதிகளுக்கும், 1994-95-ஆம் ஆண்டில் 12 மாணவியர் விடுதிகளுக்கும், 1995-96-ஆம் ஆண்டில் 12 விடுதிகளுக்கும் கட்டிடங்கள் கட்ட அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டன.<br><br>(2) 1987-88-ஆம் ஆண்டில் 113 விடுதிகளும், 1989-90-ஆம் ஆண்டில் 25 விடுதிகளும், 1990-91-ஆம் ஆண்டில் 50 விடுதிகளும், 1991-92-ஆம் ஆண்டில் 25 விடுதிகளும், 1992-93-ஆம் ஆண்டில் 13 மாணவியர் விடுதிகளும், 1993-94-ஆம் ஆண்டில் 20 மாணவியர் விடுதிகளும், 1994-95-ஆம் ஆண்டில் 16 விடுதிகளும், 1995-96-ஆம் ஆண்டில் 14 மாணவியர் விடுதிகளும் தொடங்க அரசாணைகள் வெளியிடப்பட்டன.<br><br>(3) மின்சாரம், தண்ணீர், குளியலறை, கழிப்பறை போன்ற கூடுதல் வசதிகள் ஏற்படுத்த தமிழ்நாடு |

| பிற்படுத்தப்பட்டோர்நலக் குழு பரிந்துரைகள் (1) | மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் (2) |
|---|---|
| | பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் 137 விடுதிகளுக்கு ரூபாய் 12.09 இலட்சம் அனுமதிக்கப்பட்டது. |
| | (4) அனைத்து விடுதிகளுக்கும் செய்தித்தாள் வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டது. |
| | (5) ஒரு மாணவருக்கு மாதம் ஒன்றுக்கு வழங்கப்படும் பல்வகைக் கட்டணம் ரூ. 2/-லிருந்து ரூபாய் 5/- ஆக உயர்த்தப்பட்டது. இதனை மேலும் ரூபாய் 10/- ஆக உயர்த்த அரசு முடிவெடுத்துள்ளது. இதற்கான ஆணை விரைவில் வெளியிடப்பட வுள்ளது. |
| | (6) விடுதிகளுக்கு வெட் கிரைண்டர் வழங்க ஆண்டுதோறும் ஆணை பிறப்பிக்கப்படுகிறது. |
| | (7) பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையினால் நடத்தப்படும் உயர்நிலைப்பள்ளி விடுதிகளில் ஆண்டொன்றுக்கு இரண்டு செட் சீருடை வழங்கப்படுகிறது. |
| | (8) இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை பாய் வழங்கப்படுகிறது. |
| | (9) சிறு நூல்நிலையங்கள் (Mini Library) ஏற்படுத்த ஆணை பிறப்பிக்கப்பட்டது. |



| பிற்படுத்தப்பட்டோர்நலக் குழு பரிந்துரைகள் (1) | மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் (2) |
|---|---|
| | (10) இத்துறையினால் நடத்தப்படும் விடுதிகளில் ஒன்பது மற்றும் பத்தாம் வகுப்புகளில் பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் வகுப்பினைச் சேர்ந்த மாணவர்களுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட சில பாடப் புத்தகங்கள் வழங்கப் படுகின்றன. பத்தாம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட சில பாடப் புத்தகங்களுக்குப் பதிலாக அனைத்து பாடப் புத்தகங்களும் வழங்க விரைவில் அரசு ஆணை பிறப்பிக்கப்படவுள்ளது. |
| 9. (i) தனியார் விடுதிகளில் தங்கிப் பயில்வோருக்கான மானியத் தொகையினை உயர்த்துவது. | தனியார் விடுதிகளுக்கான உணவு மானியத் தொகை ஒரு மாணவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 70/- என்று உள்ளதை ரூ. 85/- ஆக 1993-94 கல்வியாண்டு முதல் உயர்த்தி அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. |
| (ii) அரசினர் விடுதிகளில் உணவுக்கட்டண விகிதத்தை உயர்த்துவது. | பள்ளி விடுதிகளுக்கு உணவுக் கட்டணம் 1994-1995-ஆம் கல்வியாண்டு முதல் மாதம் ஒன்றுக்கு ரூபாய் 120/- என்று இருந்ததை ரூபாய் 135/- என்று உயர்த்தியும், சென்னையில் உள்ள கல்லூரி விடுதிகளுக்கு ரூபாய் 180/- என்று இருந்ததை ரூபாய் 198/- என்று உயர்த்தியும், புறநகர்ப் பகுதி கல்லூரி விடுதிகளுக்கு ரூபாய் 175/- என்றிருந்ததை ரூபாய் 193/- என்று உயர்த்தியும் ஆணை பிறப்பிக்கப் பட்டது. |

| | பிற்படுத்தப்பட்டோர் நலக் குழு பரிந்துரைகள் (1) | மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் (2) |
|---|---|---|
| 10. | சீர்மரபினர் வகுப்பினைச் சேர்ந்த விவசாயிகளுக்கு கிணறு வெட்டுவதற்கான கடன் / மானியத் தொகையினை உயர்த்துவது குறித்து. | திட்டம் கைவிடப்பட்டது. |
| 11. | தமிழ்நாடு பிற்படுத்தப் பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக்கழகம் குறைந்த அளவு வட்டி வீதத்தில் தனியாருக்கு மூலதனத் தொகை மற்றும் மானியம் வழங்குவது. | விண்ணப்பதாரர்களிடமிருந்து பெறப்படும் கடன் கோரிக்கைகளுக்கு ஏற்ப மத்திய அரசின் தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகம், தேசிய சிறுபான்மையினர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகம் ஆகிய இரு கழகங்களை அணுகி மிகக் குறைந்த வட்டியில் காலக்கடன் தொகை பெற்று மனுதாரர்களுக்கு தாய்கோ வங்கி மற்றும் தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் மூலமாக கடன் தொகை வழங்கப்படுகிறது. இந்த வகையில் கடந்த இரண்டு ஆண்டுகளில் மேற்குறிப்பிட்ட இரு மத்திய அரசு கழகங்களிடமிருந்து ரூபாய் 16.97 கோடி (ரூபாய் 12.33 கோடி ரூபாய், 4.64 கோடி) பெறப்பட்டது. |
| 12. | சிறப்புப் பயிற்சி திட்டங்கள்: மூன்று பொது நோக்கு பொறியியல் பட்டறைகள், ஒரு தச்சுப் பட்டறை, ஒரு தையல் பயிற்சி நிலையம் ஆகியவற்றை விரிவு படுத்துவது. | மூன்று பொதுநோக்கு பொறியியல் பட்டறைகளும், ஐ.டி.ஐ.ஆக உயர்த்தப்பட்டு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநரின் கட்டுப்பாட்டின்கீழ் மாற்றப்பட்டன. வேப்பூர் பறையர் வகுப்பு தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் |



| | பிற்படுத்தப்பட்டோர் நலக் குழு பரிந்துரைகள் (1) | மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் (2) |
|---|---|---|
| | | சேர்க்கப்பட்டதைத் தொடர்ந்து அஜிஸ் நகர் செட்டில்மெண்ட் பகுதியில் இவ்வகுப்பினருக்காக நடத்தப்பட்டு வந்த தச்சு மற்றும் நெசவுப் பட்டறை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைக்கு மாற்றப்பட்டது.<br><br>தையல் பயிற்சி நிலையங்களில் பயிற்சியாளர்களுக்கு உதவித்தொகையினை உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் இருந்து வருகிறது. |
| 13. | ரூபாய் 5000/- செலவில் 75% மானியம் மற்றும் 25% கடன் அடிப்படையில் சீர் மரபினருக்கு வீடுகள் கட்டித் தரும் திட்டம். | அரசின் நிதி பற்றாக்குறையினால், எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சீர்மரபினருக்கும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் வீடுகள் கட்டுவதற்கு மாநில திட்டக் குழு நிதி ஒதுக்கீடு செய்யவில்லை. ஜவஹர் வேலைவாய்ப்பு திட்டத்தில், "இந்திரா ஆவாஸ் யோஜனா" திட்டத்தின்கீழ் மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினருக்கு 1994-95-ஆம் ஆண்டு முதல் இலவச தொகுப்பு வீடுகள், ஒரு வீடு ரூ. 21,000/-செலவில் கட்டப்பட்டு வருகிறது. |
| 14. | அனைத்து பிற்படுத்தப் பட்ட வகுப்பினருக்கும் வீட்டு மனைகள் வழங்க நிலம் கையகப்படுத்துதல். | இலவச வீட்டுமனை வழங்கும் திட்டத்தினை அனைத்து மிகப் பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் வகுப்பினருக்கும் நீட்டித்து ஆணை பிறப்பிக்கப்பட்டது. இத்திட்டத்திற்காக 1995-96-ஆம் ஆண்டிற்கு ரூபாய் 1.00 கோடி வழங்கப்பட்டது. |

| பிற்படுத்தப்பட்டோர்நலக் குழு பரிந்துரைகள் (1) | மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் (2) |
|---|---|
| 15. நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் சலவைத் துறை கட்டுவதற்கு பாதிக்கடன், பாதி மானியம் என்ற நிலையில் நிதியுதவி வழங்குதல். | 75% மானியம், 20% உள்ளாட்சி நிறுவனங்களில் பங்கு மற்றும் 5% பயனாளிகள் பங்கு என்ற நிலையில் சலவைத் துறைகள் கட்டும் திட்டத்திற்கு அரசு ஏற்பளித்துள்ளது. |
| 16. கம்ப்யூட்டர், பஞ்சகார்டு பயிற்சி, சட்டப் பட்டதாரிகள் போன்ற சிறப்புப் பகுதிகளில் பயிற்சி அளிக்க புதிய விடுதிகள் ஏற்படுத்தும் திட்டம். | கம்ப்யூட்டர் பயிற்சி பெறுவோர்க்கு இரு விடுதிகள், (50 மாணவர்களுக்கு ஒரு விடுதியும், 50 மாணவியர்களுக்கு ஒரு விடுதியும்) சென்னையில் தொடங்கப்பட்டது. |
| 17. வறுமைக்கோட்டின்கீழ் உள்ள பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 'தாட்கோ' மூலம் கிராம வீட்டு வசதி திட்டம். | அரசின் நிதி பற்றாக்குறையினால் மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும் சீர்மரபினருக்கும் வீடுகள் கட்டுவதற்கு எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மாநில திட்டக்குழு நிதி ஒதுக்கீடு செய்யவில்லை. |
| 18. ஆழ்க்குழாய்க் கிணறு திட்டத்தின்கீழ் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த விவசாயிகளுக்கு தமிழ்நாடு பிற்படுத்தப் பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக்கழகம் மூலதனத் தொகை வழங்குவது. | திட்டம் அரசால் கைவிடப்பட்டது. |
| 19. IRDP, TRYCEM போன்ற திட்டங்களின்கீழ் முழுப் பயனைப்பெற பிற்படுத்தப் பட்ட வகுப்பினை பயிற்றுவிப்பது. | இது குறித்து 1989-ஆம் ஆண்டில் அறிவுரைகள் ஏற்கெனவே அரசால் வழங்கப்பட்டன. |



| பிற்படுத்தப்பட்டோர்நலக் குழு பரிந்துரைகள் (1) | மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் (2) |
|---|---|
| 20. கல்வி நிலையங்கள், வேலைவாய்ப்புகளில் இடஒதுக்கீடு அமல் செய்யப்படுவதை கண்காணிக்க ஒரு சிறப்புப் பிரிவினை ஏற்படுத்துதல். | ஒரு புள்ளியியல் உதவி இயக்குநர், 2 புள்ளியியல் ஆய்வாளர்கள், ஒரு தட்டச்சர், ஒரு அலுவலக உதவியாளர் ஆகியோரைக் கொண்ட புள்ளியியல் சிறப்புப்பிரிவு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை இயக்ககத்தில் அனுமதிக்கப் பட்டது. |
| 21. பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படுவது குறித்து இயக்குநர்கள் மற்றும் அரசு ஆய்வு செய்தல். | இத்துறையால் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கு எண்ணிக்கை மற்றும் பொருளாதார இலக்குகள் ஆண்டுதோறும் நிர்ணயம் செய்து ஆணை பிறப்பிக்கப்பட்டது. |
| 22. மாநில அளவிலான ஆலோசனைக் குழுக்களை மீண்டும் ஏற்படுத்த வேண்டும். | அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது. |
| 23. மாவட்ட பிற்படுத்தப் பட்டோர் நல அலுவலர்களின் மாநாட்டினை நடத்துவது. | குறிப்பிட்ட கால இடைவெளியில் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள் கூட்டம் நடத்தப்படுகிறது. அவர்களது செயல்பாடுகள் ஆய்வு செய்யப் படுகின்றன. |
| 24. தனிப்பயிற்சி நிலையத் தினை (Special Training Institute) திருத்தியமைத்தல். | தனிப்பயிற்சி நிலையத்தினை மேம்படுத்த ரூபாய் 8.36 இலட்சம் அனுமதிக்கப்பட்டது. தனிப்பயிற்சி நிலையத்தில் மாணவர்களைச் சேர்ப்பதற்கு பின்பற்றப்பட்டு வந்த வருமான வரம்பு நீக்கப்பட்டது. மேலும் தனிப்பயிற்சி நிலையத்திற்கு சொந்தக் கட்டிடம் கட்டுவதற்கு தகுந்த இடத்தினை ஒதுக்கீடு செய்யுமாறு பொதுப்பணித் துறையிடம் கோரப்பட்டுள்ளது. |

| பிற்படுத்தப்பட்டோர் நலக் குழு பரிந்துரைகள் (1) | மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் (2) |
|---|---|
| 25. கல்வி உதவித் தொகைகள் குறித்து தணிக்கைத் தடைகளை தீர்த்து வைப்பதற் காக தனிப் பிரிவினை ஏற்படுத்துவது. | மாநில அளவிலான தணிக்கைக் குழுவின் பணிகள் அரசாணை எண் 598, நிதி (உநி) துறை, நாள் 3-8-1992-இல் திருத்தியமைக்கப் பட்டதைத் தொடர்ந்து செயற்குறிப்பு கைவிடப்பட்டது. |
| 26. மாணவர் இல்லங்களில் எண்ணிக்கை உயர்ந்து விட்ட காரணத்தால் ஏற்பட்டுள்ள பணிச் சுமையை சமாளிக்கவும், மாணவர் இல்லங்கள், பள்ளிகள் படிப்புதவித் தொகைகள் தொடர்பாக கணக்குகளைத் தணிக்கைச் செய்யவும், இரண்டாவது உள் தணிக்கைக் குழு ஏற்படுத்துதல். | இதற்கான செயற்குறிப்பு ஆய்வு செய்யப்பட்ட பின்னர் அரசால் தள்ளுபடி செய்யப்பட்டது. |
| 27. மாவட்ட பிற்படுத்தப் பட்டோர் நல அலுவலகப் பணியாளர்களை வருவாய்த் துறைக்குப் பதிலாக பிற்படுத்தப் பட்டோர் நலத் துறை இயக்குநர் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருதல். | மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலகப் பணியாளர்களை வருவாய்த் துறைக்குப் பதிலாக பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை இயக்குநரின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வருவது குறித்து அரசின் தீவிர ஆய்விற்குப் பிறகு தற்போதுள்ள நிலையில் மாற்றம் தேவையில்லை யென முடிவு செய்யப்பட்டுள்ளது. |



| பிற்படுத்தப்பட்டோர் நலக்குழு பரிந்துரைகள் (1) | மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் (2) |
|---|---|
| 28. படிப்புதவித் தொகை பணிகளுக்கென போதிய அளவில் முறையான பணியாளர்களை நியமிக்க வேண்டுதல். | படிப்புதவித்தொகை பணிகளுக்கென அனுமதிக்கப்பட்ட பணியாளர்களில் மாற்றம் செய்வது குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது. |
| 29. அரசியலமைப்புச் சட்டத்தின் 15(4) மற்றும் 16(4) பிரிவுகளின் கீழ் அளிக்கப்படும் இட ஒதுக்கீடு திட்டமும், ஏனைய திட்டமும் முறையாக செயல்படுத்தப் படுவதை கண்காணிப் பதற்கு இயக்குநருக்கு உதவியாக புள்ளியியல் துறை இணை இயக்குநர் நியமனம் செய்தல். | புள்ளியியல் பிரிவு ஒன்று பிற்படுத்தப் பட்டோர் நல இயக்குநரகத்தில் ஏற்படுத்தப் பட்டது. |

**172—**

### பதவி உயர்வுகளில் ஒதுக்கீடுமுறை

**வினா எண் 3764—திரு. இ. கணேசன், மற்றும் திரு. அ. மாரிமுத்து:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசுப்பணியாளர்களில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் தாழ்த்தப்பட்டோருக்கு, பதவி உயர்வுகளில் பின்பற்றப்படும் ஒதுக்கீட்டை எல்லா அரசுத் துறைகளிலும் அமலாக்க அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம். ஆர். கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

மண்டல்குழு வழக்குகளில் (இந்திரா சஹானி எதிர் இந்திய அரசு) 16-1-1992-ல் தீர்ப்பினை வழங்கிய இந்திய உச்சநீதிமன்றம், பிறவற்றுடன், பதவி உயர்வுகளில் இடஒதுக்கீடு அனுமதிக்கத் தக்கதல்ல என்றும், தற்போது பதவி உயர்வில் இடஒதுக்கீடு செய்யப்படும் துறைகளில் அதனை ஐந்தாண்டுக் காலத்திற்கு தொடர்ந்து பின்பற்றலாம் என்றும், இந்தக் காலக்கெடுவிற்குள் உரிய விதிகளில் மாற்றம் செய்யப்படவேண்டும் என்றும் உத்தரவிட்டது. 15-11-1997-க்குப் பின்னரும் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கு பதவி உயர்விலும் இடஒதுக்கீடு பொருந்தும் வகையில் மத்திய அரசு 77-வது அரசியலமைப்பு திருத்தச் சட்டம் கொண்டு வந்துள்ளது. தற்போது சில துறைகள்/சார்நிலைப்பணியில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கு இடஒதுக்கீடு செயல்படுத்தப்படுவது தொடரலாமா அல்லது மாநில அரசுப் பணிகள் அனைத்திலும் பதவி உயர்வில் இடஒதுக்கீடு பின்பற்றலாமா என்பது குறித்தும் இதற்காகத் தனியாக ஒரு சட்டம் கொண்டு வரலாமா என்பது குறித்தும் அரசு பரிசிலனை செய்து வருகிறது.

**173—**

### மாணவர்களுக்கு மானியத் தொகையை உயர்த்துதல்

**வினா எண் 4151—திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தனியார் விடுதிகளில் தங்கிப்பயிலும் பிற்படுத்தப்பட்டோர்/மிகப்பிற்படுத்தப்பட்டோர் மாணவர்களுக்கு மானியத் தொகையினை உயர்த்திக் கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம். ஆர். கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

அரசின் தற்போதைய நிதிநிலையைக் கருத்தில்கொண்டு அரசு உணவு மானியம் பெறும் தனியார் விடுதிகளில் தங்கிப் பயிலும்



பிற்படுத்தப்பட்டோர்/மிகப்பிற்படுத்தப்பட்டோர் மாணவர்களுக்கு வழங்கப்படும் உணவு மானியத் தொகையினை உயர்த்திக் கொடுக்க தற்சமயம் வாய்ப்பில்லை.

**174—**

### ஆலோசனைக் குழுக்களை அமைத்தல்

**வினா எண் 4152—திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலன்களைப் பாதுகாக்க மாநில அளவிலான ஆலோசனைக் குழுக்களை மீண்டும் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம். ஆர். கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

மாநில அளவிலான பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலன்களைப் பாதுகாத்திட ஆலோசனைக்குழு மீண்டும் அமைத்திட செயற்குறிப்பு அரசின் பரிசிலனையிலுள்ளது.

**175—**

### பிற்படுத்தப்பட்டோர் நலவிடுதியில் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல்

**வினா எண் 4779—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

(அ) வேலூரில் உள்ள பிற்படுத்தப்பட்டோர் நல விடுதியில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டிய அவசியத்தை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. எம். ஆர். கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): வடஆற்காடு-அம்பேத்கர் மாவட்டம் வேலூரில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி ஏதும் இயங்காததால் இக்கேள்விக்கு இடமில்லை.

**176—**

**இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குதல்**

**வினா எண் 5680—திரு. அ. வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஒன்றியம், மஞ்சக்குழி, ராஜாலிஷாதைக்கால் தெருவில் வசிக்கும் பிற்படுத்தப்பட்ட இஸ்லாமிய சிறுபான்மை மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எம். ஆர். கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): 1997-98-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள கொள்கை முடிவுக்கு இணங்க, புவனகிரித் தொகுதி, பரங்கிப்பேட்டை ஒன்றியம், மஞ்சக்குழி, ராஜாலிஷாதைக்கால் தெருவில் வசிக்கும் பிற்படுத்தப்பட்ட இஸ்லாமிய சிறுபான்மை மக்கள், தங்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டி, தென்னாற்காடு வள்ளலார் மாவட்ட ஆட்சியரை அணுகும் பட்சத்தில், அவர்களுக்குத் தகுதியின் அடிப்படையில், இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.





**177—**

**கல்லூரி மாணவர்களுக்கு விடுதி தொடங்குதல்**

**வினா எண் 6248—திரு. அ. வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஒன்றியம், சி. முட்லூரில் (C. Mutlur) பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை சார்பாக கல்லூரி மாணவர் மற்றும் மாணவியர்களுக்கென விடுதி தொடங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம். ஆர். கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

இல்லை.

**178—**

**பொறியியற் கல்லூரி மற்றும் பல்தொழில் நுட்பப் பயிலகங்கள் அமைத்தல்**

**வினா எண் 6249—திரு. அ. வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பிற்படுத்தபட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பரரா—

பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் சார்பாக தமிழகத்தில் பொறியியற் கல்லூரிகள் மற்றும் பல்தொழில் நுட்பப் பயிலகங்கள் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. எம். ஆர். கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் சார்பாக தமிழகத்தில் பொறியியற் கல்லூரிகள் மற்றும் தொழில் நுட்பப் பயிலகங்கள் அமைக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசிலனையில் இல்லை.

**179—**

**இறைச்சியை அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தல்**

**வினா எண் 1727—திரு. துரை. சந்திரசேகரன்:** மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு இறைச்சி கழகம் அமைத்துள்ள நோயற்ற மண்டலங்களிலிருந்து வரும் பிராணிகளின் இறைச்சியை அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய அரசு ஊக்கம் அளிக்கிறதா?

(ஆ) ஆம் எனில், எந்தெந்த நிறுவனம் மூலம் ஏற்றுமதி செய்யப்படுகிறது?

(இ) அரசு மருத்துவமனைகளுக்கும், பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகளுக்கும் இறைச்சி கழகம் மூலம் இறைச்சி வாங்க அரசு ஆணை பிறப்பிக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி, வனம் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

(இ) தற்போது இல்லை. இது குறித்து பரிசீலனை செய்து கொள்கை அடிப்படையில் அரசால் முடிவெடுக்கப்பட வேண்டும்.

**180—**

**கோழி வளர்ப்புப் பணியை விவசாயத் தொழிலாக அங்கீகரித்தல்**

**வினா எண் 2538—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோழி வளர்ப்புப் பணியை விவசாயத் தொழிலாக அங்கீகரிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?



(ஆ) ஆம் எனில், அதற்கு தனி மின்கட்டண விகிதம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி, வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் :**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**181—**

**கால்நடை மருத்துவமனை அமைத்தல்**

**வினா எண் 2778—திரு. வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணித் தொகுதி, திருச்சிற்றம்பலத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி, வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்:**

தற்போது பிரேரணை ஏதுமில்லை.

**182—**

**கால்நடை மருத்துவமனை ஏற்படுத்துதல்**

**வினா எண் 2926—திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டம், திருத்துறைப்பூண்டி ஒன்றியம், எழிலூர் ஊராட்சிக்கு கால்நடை மருத்துவமனை ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி, வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தற்போது பிரேரணை ஏதுமில்லை.

**183—**

## பூங்காவை விரிவுபடுத்தும் திட்டம்

**வினா எண் 3838—திரு. ஆர். ஆர். சேகரன்:** மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஏற்காடு அடிவாரம் குறுவம்பட்டியில் வனத்துறைக்குச் சொந்தமான பூங்காவை விரிவுபடுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி, வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்:**

சேலம் ஏற்காடு அடிவாரத்தில் வனத் துறைக்குச் சொந்தமான குறுவம்பட்டி பூங்காவினை விரிவுபடுத்தும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை. எனினும் அப்பூங்காவினை பராமரிக்க இயற்கை வனப்பாதுகாப்புத் திட்டத்தின் (Nature Conservation Scheme) கீழ் ஆண்டுதோறும் அரசு நிதி வழங்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது.

**184—**

## மூலிகைப்பண்ணை தொடங்குதல்

**வினா எண் 3854—திரு. கே. மணிவர்மா:** மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—





தண்டராம்பட்டு தொகுதியில் காட்டுப் பகுதியிலுள்ள மூலிகைகளைப் பாதுகாக்க மூலிகைப்பண்ணை தொடங்க அரசிடம் ஏதேனும் திட்டம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி, வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்:**

தண்டராம்பட்டு தொகுதியில் காட்டுப் பகுதியிலுள்ள மூலிகைகளைப் பாதுகாக்க மூலிகைப்பண்ணை அமைப்பதற்கான சாத்தியக்கூறு ஏதுமில்லையாதலால் அது பற்றிய திட்டம் அரசிடம் எதுவுமில்லை.

**185—**

## ஆடு, மாடு, கோழி, மீன் உற்பத்தியை அதிகரித்தல்

**வினா எண் 5048—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆடு, மாடு, கோழி, மீன் ஆகியவற்றின் உற்பத்தியை அதிகரிக்கும் வழிமுறை குறித்து அரசு ஆராய்ந்து வருகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி, வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) ஆடு, மாடு மற்றும் கோழி ஆகியவற்றின் உற்பத்தித் திறனை அதிகரித்திட அரசு தேவையான எல்லா வழிமுறைகளையும் கண்டறிந்து உரிய நடவடிக்கைகளை அவ்வப்போது கால்நடை பராமரிப்புத்துறை மூலமாகவும், மீன் இனப்பெருக்கத்தினை மீன்வளத்துறை மூலமாகவும் மேற்கொண்டு வருகிறது.

2. இந்த வகையில் அக்கால்நடைகளுக்கான நோய்த் தடுப்பு நடவடிக்கை செயற்கை முறையில் கருதரிக்க செய்தல் மற்றும்

தேவையான மருத்துவ சிகிச்சைகளை உடனுக்குடன் அறிந்து கால்நடைகள் நலன் பாதுகாத்திடல் போன்றவற்றுடன் ஊட்ட மிக்க பசுந்தீவன உற்பத்திக்கு தேவையான தரமான தீவனப் பயிர் விதைகள், தீவனப் புல்கரணைகள் ஆகியவை விநியோகம் செய்தல் போன்ற குறிப்பிடத்தக்க பணிகளை அரசு மேற்படி துறை மூலம் மேற்கொண்டு பால் உற்பத்தியினை பெருக்கி வருகிறது. அத்துடன் அவற்றின் பயன்கள் நாட்டின் குக்கிராமங்களிலும் வாழும் அனைத்து தரப்பு மக்களின் கால்நடைகளுக்கும் கிட்டும் வகையில் அரசு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது.

3. தமிழ்நாட்டின் மீன் வளத்தையும் உற்பத்தியையும் பெருக்கிட வேண்டிய செயல்பாடுகளை ஆராய்ந்து பல திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகின்றது. உள்நாட்டு மீன்வளத்தைப் பெருக்க மீன் வளர்ப்பு மேம்பாட்டு முகமைகள் ஒவ்வொரு மாவட்டங்களிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தீவிர உள்நாட்டு மீன்வளர்ப்பு மற்றும் விற்பனைத் திட்டம் மூலம் விழுப்புரம் இராமசாமி படையாட்சி மாவட்டம், தென்னாற்காடு வள்ளலார் மாவட்டம் மற்றும் மதுரை மாவட்டங்களில் உள்நாட்டு மீன்வளத்தைப் பெருக்கவும், மீன் குஞ்சுகள் உற்பத்தி பண்ணைகள் அமைத்தும் உள்நாட்டு மீன்வளத்தை பெருக்க அரசு திட்டம் தீட்டி செயல்படுத்துகின்றது.

4. கடல் மீன்பிடிப்பில் நடப்பு நிதியாண்டில் ரூ.10.9 கோடி ஒதுக்கப்பட்டு நாட்டுப் படகுகளை இயந்திரமயமாக்க ஏற்ற வகையில் மீனவர்களுக்கு இயந்திரம் மற்றும் வலைகளுக்கு மான்யமாக முறையே ரூ.10,000/- மற்றும் ரூ.6,000/- 50 சதவிகிதமாக வழங்க ஒதுக்கப்பட்டு இத்திட்டத்தின் மூலம் சுமார் 5,000 நாட்டு படகுகள் தூர கடல் சென்று கூடுதல் மீன்பிடிக்க வழிவகை காணப்பட்டுள்ளது. 20,000 மீனவர்கள் (படகு ஒன்றுக்கு நால்வர் வீதம்) அதிக மீன்பிடிப்பில் ஈடுபடுவதுடன் கூடுதல் வருவாய் பெறுவர். மற்றுமொரு திட்டத்தின் மூலம் அனைத்து கடல் மீனவர்களும் தாங்கள் தொழிலுக்கு உபயோகிக்க வாங்கும் மீன்பிடி வலை சாதனங்களை கூட்டுறவு சங்கம் / கூட்டுறவு விற்பனை நிலையம் / மாவட்ட கூட்டுறவு இணையம் மூலம் பெறும்போது வலைகளுக்குண்டான விலையில் 10 சதவீத மானியத்துடன் பெற ஏற்பாடு செய்து இத்திட்டத்திற்கு ரூபாய் இரண்டு கோடி ஒதுக்கீடு செய்து சுமார் 10,000 மீனவக் குழுக்கள் பலனடைய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு குழுவும் படகு அல்லது கட்டுமரத்திற்கு அதிகபட்ச மானியம் ரூ.2,000/- பெறுவர்.





இவ்விரண்டு திட்டங்கள் மூலம் சுமார் 50,000 மீனவர்கள் கூடுதலாக மீன்பிடிப்பில் ஈடுபடவும், அதிக மீன் உணவு பெற்றுத் தரவும் சாத்தியக் கூறுகள் காணப்படும்.

5. தமிழ்நாட்டில் திருச்சி மற்றும் அனுப்பங்குளம் ஆகிய இடங்களில் உள்ள டாப்கோ குஞ்சு பொறிப்பகங்களில் உற்பத்தியை அதிகரிப்பதற்கும் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அகஸ்தீஸ்வரத்தில் குஞ்சு பொறிப்பகத்தை கட்டி முடித்து இயக்குவதற்கும் பகுதி-2—1997-98-க்கான திட்டத்தின் கீழ் மாநில திட்டக் குழுவிடம் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டு பரிசீலனையில் உள்ளது. இதற்கு அரசின் அனுமதி கிடைத்ததும் கோழிக் குஞ்சுகளின் உற்பத்தி எண்ணிக்கை அதிகரிக்கும்.

**186—**

## மிருகக்காட்சி சாலை அமைக்கும் திட்டம்

**வினா எண் 5155—திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாநகராட்சிகளிலும் மிருகக்காட்சி சாலை (Zoo) அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு பொங்கலூர் திரு. நா. பழனிச்சாமி, வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்:**

தமிழகத்திலுள்ள அனைத்து மாநகராட்சிகளிலும், விலங்கினக் காட்சி சாலை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**187—**

## திருவள்ளுவர் கோட்டத்தை புதுப்பித்தல்

**வினா எண் 16—திரு. பெ.சு. திருவேங்கடம்:** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளுவர் கோட்டம் மிகவும் பழுதடைந்துள்ளதா?

[1997 ஏப்ரல் 30

(ஆ) ஆமெனில், அதனைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:**

(அ) வள்ளுவர் கோட்ட கட்டடங்களைப் பராமரிக்கப் போதிய நிதி ஒதுக்கீடு இல்லாததாலும் வள்ளுவர் கோட்டத்தைக் காண வருவோர் தவறாகப் பயன்படுத்தி உள்ளதாலும் வள்ளுவர் கோட்டம் பொலிவிழந்துள்ளது.

(ஆ) வள்ளுவர் கோட்டம் பொலிவுடன் விளங்க தேவையான சீரமைப்பு பணிகள் பொதுப்பணித் துறை மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**188—**

**சர்வமத சமரச மண்டபம் கட்டுதல்**

**வினா எண் 229—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மறைந்த தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் நினைவாக "சர்வமத சமரச மண்டபம்" ஒன்றைக் கட்ட அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:**

(அ) பரிசீலிக்க இயலாது.

(ஆ) எழவில்லை.

**189—**

**கேபிள் டி.வி.களுக்கு உரிமம் வழங்குதல்**

**வினா எண் 906—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1997 ஏப்ரல் 30]

(அ) தமிழ்நாட்டில் எத்தனை கேபிள் டி.வி.களுக்கு உரிமம் வழங்கப்பட்டுள்ளது?

(ஆ) உரிமம் வழங்க அரசு வகுத்துள்ள நெறிமுறை என்ன?

(இ) உரிமம் பெறாமல் இயக்குகிறவர்கள் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் இதுவரை 2631 கேபிள் டி.வி.களுக்கு உரிமம் வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) கேபிள் தொலைக்காட்சி மூலமாக திரைப்படங்களை திரையிடுவதை முறைப்படுத்தும் நோக்கத்துடன், தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு வீடியோ கேசட் ரெக்கார்டர்கள் மூலம் தொலைக்காட்சித் திரையில் திரைப்படங்களைக் காட்டுதல் (முறைப்படுத்தல்) திருத்தச் சட்டத்தை 1991-ல் இயற்றியுள்ளது. இத்திருத்தச் சட்டம், 11-11-1991 முதல் நடைமுறைக்கு வந்தது. மாவட்டங்களில், மாவட்ட ஆட்சியரும், சென்னை மாநகரில் காவல்துறை ஆணையரும், உரிமம் வழங்கும் அதிகாரிகளாவர். விண்ணப்பதாரர்களின் தகுதி, அரசுக்கு சேர வேண்டிய வரி செலுத்துவதில் அவரின் நடத்தை, முன் அனுபவம், பொது நலன் ஆகியவற்றை ஆராய்ந்து பிறகே உரிமம் வழங்கப்படுகிறது. இத்திருத்தச் சட்டம் விதி 20-ஏ-ன்படி, தொலைக்காட்சித் திரையில் திரையிடுவதற்கு உரிமங்கள் பெறுவது தொடர்பான வழிமுறைகள் உள்ளன. இதன் அடிப்படையில் உரிமங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

(இ) உரிமம் பெறாமல் கேபிள் டி.வி. இயக்கிய குற்றத்திற்காக தென்னாற்காடு வள்ளலார் மாவட்டத்தை சேர்ந்த ஒருவர் மீது திட்டக்குடி காவல் நிலைய குற்ற எண். 40/95-ல் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கோயம்புத்தூரில் 37 நபர்கள் மீதும், காமராஜர் மாவட்டத்தில் 1 நபர் மீதும், பெரம்பலூர் திருவள்ளுவர் மாவட்டத்தில் 45 நபர்கள் மீதும், திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தில் 2 நபர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

[1997 ஏப்ரல் 30

**190—**

**வள்ளலார் இராமலிங்க அடிகளாருக்கு நினைவுச்சின்னம்**

**வினா எண் 2875—திரு. பி.வி.எஸ். வெங்கடேசன்:** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தென் ஆற்காடு-வள்ளலார் மாவட்டம், வடலூரில் வள்ளலார் இராமலிங்க அடிகளாருக்கு நினைவுச்சின்னம் அமைக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா

விடை—

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:**

அரசின் ஆய்வில் இல்லை.

**191—**

**திரையரங்குகளில் வாகனத்தில் வருபவர்களிடம் கட்டணம் வசூல்**

**வினா எண் 3201—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திரையரங்குகளில் திரைப்படம் காண வாகனத்தில் வருபவர்களிடம் கட்டணம் வசூலிப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இதனை தடுத்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): அரசாணை 1810, உள் (சினிமா-2) நாள் 21-12-1993-ல் திரையரங்குகளில் வாகனங்கள் நிறுத்துமிடத்தைப் பராமரிப்பதில் ஏற்படும் செலவினத்தை கவனத்தில் கொண்டு வாகனங்கள் நிறுத்துவதற்காக உரிமதாரர் வசூல் செய்யப்பட வேண்டிய கட்டணத்தை நிர்ணயிக்க, உரிமம் வழங்கும் அதிகாரிகளுக்கு அதிகாரம் அளித்து ஆணை பிறப்பித்துள்ளது. ஆனால் சில மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியர்கள் திரையரங்கு உரிமதாரர்கள் திரையரங்குகளில் வாகனத்தை நிறுத்த கட்டணம் ஏதும் வசூலிக்கக் கூடாது என சுற்றறிக்கை அனுப்பியதை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்து தடையாணை பெற்றுள்ளார்கள்.



1997 ஏப்ரல் 30 ]

**192—**

**அண்ணா சதுக்கத்தை அழகுபடுத்தும் திட்டம்**

**வினா எண் 3208—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை அண்ணா சதுக்கத்தை மேலும் அழகுபடுத்தும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:**

அரசின் பரிசீலனையில் உள்ளது.

**193—**

**தமிழரசு இதழ் நட்ட விவரம்**

**வினா எண் 3668—திரு. துரை. சந்திரசேகரன், மற்றும் திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 'தமிழரசு' இதழ் நட்டத்தில் இயங்குவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தமிழ் அரசிதழ் ஒன்றின் (தமிழ்) அடக்க விலை ரூ.5.40. ஆனால் ரூ. 2.40-க்கு விற்கப்படுகிறது. இதன் மூலம் ஒரு இதழுக்கு ரூ.3/- நட்டம். இதே அளவில் தான் ஆங்கில வெளியீட்டிற்கும் நட்டம் ஏற்படுகிறது. 1989-90 & 90-91-ம் ஆண்டுகளில் தமிழரசு இதழ்கள் வெளியிட்டதில் நிகர நட்டம் ரூ.51,43,330. 1991-92 முதல் 95-96 வரை ஏற்பட்டுள்ள நிகர நட்டம் ரூ.1,02,04,219 ஆகும்.

தமிழரசு இதழ் அரசின் கொள்கைகளையும் மற்றும் சாதனைகளையும் மக்கள், அரசு ஊழியர்கள் ஆகியோர் அவ்வப்போது அறிய வேண்டும் என்ற உயர் நோக்குடன் தொடங்கப்பட்டது. இப்பணிக்காக தமிழரசு போன்ற ஒரு இதழ் தேவைப்படுகிறது.

**194—**

**அதியமானுக்கு ஆண்டிற்கொரு முறை விழா நடத்துதல்**

**வினா எண் 4145—திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தருமபுரியை ஆண்ட கடையேழு வள்ளல்களில் ஒருவரான அதியமானுக்கு ஆண்டிற்கொரு முறை விழா நடத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:**

தருமபுரியை ஆண்ட கடையேழு வள்ளல்களில் ஒருவரான அதியமானுக்கு ஆண்டிற்கொரு முறை விழா நடத்தும் கருத்துரு அரசிடம் இல்லை.

**195—**

**தந்தை பெரியாரின் சமூகச் சீர்திருத்த கொள்கைகள்**

**வினா எண் 4173—திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—





தந்தை பெரியாரின் சமூகச் சீர்திருத்தக் கொள்கைகளையும் இலட்சியங்களையும் பரப்ப அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:**

தந்தை பெரியாரின் பிறந்த நாள் விழாக்கள் மற்றும் மாவட்டங்களில் நடத்தப்படும் பல்துறைப் பணி விளக்க முகாம்கள் மூலம் தந்தை பெரியார் அவர்களின் சமூகச் சீர்திருத்தக் கொள்கைகளும் இலட்சியங்களும், நாடகங்கள் மற்றும் கருத்தரங்குகள் மூலம் பொது மக்களுக்கு விளக்கப்படுகிறது.

**196—**

**ஆபாச சுவரொட்டிகளைத் தடைசெய்தல்**

**வினா எண் 4495—திரு. குழந்தை. தமிழரசன் மற்றும் டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆபாச சுவரொட்டிகளை பள்ளிக்கூடங்கள், கோவில்கள் பொதுமக்கள் அதிகமாக கூடும் இடங்களில் ஒட்டுவதை அரசு தடை செய்ய ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், இவ்வாறு சுவரொட்டிகளை ஒட்டுபவர்கள் மீது அரசு என்ன நடவடிக்கை எடுக்கும்?

(இ) இதுவரை ஒட்டியவர்கள் வெளியிட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம். ஏற்கெனவே ஆபாச சுவரொட்டி ஒட்டுபவர்கள் மீது இந்திய தண்டனை சட்டத்தின் பிரிவு 292 (ஏ)-வின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டு ஆபாச சுவரொட்டிகள் ஒட்டப்படுவது தடை செய்யப்பட்டு வருகிறது.

(ஆ) ஆபாச சுவரொட்டிகளை ஒட்டுபவர்கள் மீது பிரிவு 292 (ஏ) இந்திய தண்டனை சட்டத்தின்கீழ் மற்றும் தமிழ்நாடு திரைப்பட விளம்பர கட்டாய தணிக்கைச் சட்டம், 1987 பிரிவு 10 (I)-ன்கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(இ) மேற்கண்ட குற்றங்கள் செய்ததாக இரண்டு வழக்குகள் பதிவு செய்யப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டு நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து அபராதம் விதிக்கப்பட்டது.

**197—**

**பாரதியாரின் திருமண நாளை நினைவூட்டும் திருமண மண்டபம்**

**வினா எண் 4517—திரு. கு. ரவி அருணன்:** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், மகாகவி பாரதியின் துணைவியார் செல்லம்மாள் பாரதியின் பிறந்த ஊரான கடையத்தில் அவர்களின் 100-வது ஆண்டு திருமண நாளை நினைவுகூரும் வகையில் திருமண மண்டபம் ஒன்று அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): இயலாது.

**198—**

**சான்றோர் சீசன் பால்கு நினைவுச் சின்னம்**

**வினா எண் 4726—திரு. கோ. மோகனதாசன் மற்றும் திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தரங்கம்பாடியில் தமிழ் வளர்த்த சான்றோர் சீசன் பால்கு அவர்களுக்கு நினைவுச் சின்னம் எழுப்ப அரசு முன் வருமா?



விடை—

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:**

முன் வர இயலாது.

**199—**

**பகுத்தறிவுப் பிரச்சாரம் செய்தல்**

**வினா எண் 5905—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தொலைக்காட்சி மற்றும் வானொலியில் பகுத்தறிவுப் பிரச்சாரம் செய்ய தனி நேரம் ஒதுக்கும்படி மாநில அரசு மத்திய அரசை வலியுறுத்துமா?

விடை—

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:**

மாநில அரசிடமிருந்து மத்திய அரசுக்கு இது குறித்து எவ்வித கோரிக்கையும் அனுப்பப்படவில்லை.

**200 —**

**எம்.ஜி.ஆர். திரைப்பட நகரை லாபத்தில் இயக்குதல்**

**வினா எண் 5955—திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எம்.ஜி.ஆர். திரைப்பட நகரை லாபத்தில் நடத்த அரசு தற்போது எடுத்துவரும் நடவடிக்கைகள் என்ன?

(ஆ) திரைப்பட நகரை தனியார் நடத்துவதற்கு ஏதுவாக அதனைக் குத்தகைக்கு விடும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:**

(அ) எம்.ஜி.ஆர். திரைப்பட நகரில் பல்வேறு பராமரிப்புச் செலவுகளைக் குறைக்கும் சிக்கன நடவடிக்கையாக தோட்டப் பராமரிப்பு மற்றும் துப்புரவுப் பணிகள் யாவும் ஒப்பந்தக்காரர்களை நீக்கி விட்டு நேரிடையாக பணியாளர்களை அமர்த்தி மேற்கொள்ளப்பட்டு வருவதன் மூலம் மாதம் ஒன்றுக்கு ரூ.2,25,000 வரை செலவு குறைக்கப்பட்டிருக்கிறது. தேவையற்ற பணியிடங்களை நீக்கிவிடவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. குழந்தைகள் பூங்காவிலிருக்கும் பல்வேறு விளையாட்டுக் கருவிகளை தனியாருக்கு வாடகைக்கு விட்டு வருவாயைப் பெருக்கும் பொருட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(ஆ) அதுமாதிரி திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.





## பதின்மூன்றாவது பட்டியல்

1—

### பெற்றோர் ஆசிரியர் சங்கம் மூலம் மாணவர்களிடம் நன்கொடை வாங்குதல்

**வினா எண் 774—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெற்றோர் ஆசிரியர் சங்கம் மூலம் மாணவர்களிடம் எவ்வளவு நன்கொடை வேண்டுமானாலும் வாங்கிக் கொள்ளலாம் என்று கல்வித் துறை உத்தரவிட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதற்கு என்ன காரணம்?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): அரசாணை பிறப்பிக்கப்படவில்லை. ஆனால் பள்ளி பெற்றோர் ஆசிரியர் கழக கோட்பாடுகளில் விதிகள் 20 மற்றும் 21-ல் நன்கொடைகள் பெற வழிவகுக்கப்பட்டுள்ளது.

2—

### மூவலூர் அரசு உயர்நிலைப் பள்ளி பெயர் சூட்டுதல்

**வினா எண் 2086—திரு. குத்தாலம், பி. கல்யாணம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், மூவலூர் அரசினர் உயர்நிலைப் பள்ளிக்கு மூவலூர் மூதாட்டி இராமாமிர்தம் அம்மையார் பெயரினைச் சூட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், மூவலூர் அரசினர் உயர்நிலைப் பள்ளிக்கு "மூவலூர் மூதாட்டி இராமாமிர்தம் அம்மையார் அரசு உயர்நிலைப்பள்ளி" எனப் பெயர் மாற்றம் செய்து ஆணை வெளியிடப்பட்டுவிட்டது.

3—

**உயர்நிலைப்பள்ளி விளையாட்டு மைதானம் ஆக்கிரமிப்பு செய்தது**

**வினா எண் 3518—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடஆற்காடு-அம்பேத்கர் மாவட்டம், வேலூர் கஸ்பா நகராட்சி உயர்நிலைப்பள்ளி விளையாட்டு மைதானம் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) கஸ்பா நகராட்சி உயர்நிலைப் பள்ளியிலிருந்து சுமார் 3 கி.மீ. தூரத்தில் உள்ள பள்ளிக்காக ஒதுக்கப்பட்டுள்ள விளையாட்டுத் திடலில் ஒருவர் குடிசை அமைத்து ஆக்கிரமிப்பு செய்துள்ளார்.

(ஆ) ஆக்கிரமிப்பை அப்புறப்படுத்த நகராட்சியில் தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

4—

**இலவச பாடப் புத்தகங்கள் வழங்க கால நிர்ணயம் செய்தல்**

**வினா எண் 3751—திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இலவச பாடப் புத்தகங்கள் வழங்க அரசு கால நிர்ணயம் செய்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்த மாதத்தில் பாடப் புத்தகங்கள் வழங்கப்படுகின்றன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) இல்லை.



(ஆ) ஆண்டுத் துவக்கத்திலேயே இலவச பாட நூல்கள் பள்ளிகளுக்கு விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

5—

**கடலி கிராம நடுநிலைப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துதல்**

**வினா எண் 5793—டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம்-இராமசாமி படையாச்சியார் மாவட்டம், மேல்மலையனூர் தொகுதியில் கடலி கிராமத்தில் உள்ள நடுநிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்றுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

விதிகளின்படி ஏற்கெனவே நடைபெற்று வரும் உயர்நிலைப் பள்ளிகள் மட்டுமே மேல்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்டு வருகிறது. நேரடியாக தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளை மேனிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்த விதிகளில் இடமில்லை.

6—

**பாலரெங்காபுரம் மருத்துவமனைக்கு மருத்துவர்கள் நியமிக்கவும் மருந்துகள் வழங்கவும் செய்தல்**

**வினா எண் 1385—திரு. வ. வேலுசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை பாலரெங்காபுரத்தில் உள்ள மருத்துவமனைக்கு போதிய மருத்துவர்களை நியமிக்கவும் மருந்துகள் வழங்கவும் அரசு ஆவன செய்யுமா?

[1997 ஏப்ரல் 30

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

மதுரை பாலரெங்காபுரம் மருத்துவமனையில் 40 படுக்கைகள் உள்ளன. தற்போது நியமிக்கப்பட்டுள்ள 10 மருத்துவர்கள் போதுமானதாகும். மேலும் மதுரை பாலரெங்காபுரத்தில் உள்ள மருத்துவமனைக்கு போதிய மருந்துகள் அரசால் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.

**7—**

**புதியதாக ஆரம்பிக்க மற்றும் மேம்படுத்தவுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள்**

**வினா எண் 1636—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் புதிதாக திறக்கப்படவுள்ளவை எத்தனை?

(ஆ) எத்தனை ஆரம்ப சுகாதார நிலையங்கள் மேம்படுத்தப்படவுள்ளன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் புதிதாக ஆரம்ப சுகாதார நிலையங்கள் திறக்கும் திட்டம் எதுவும் அரசிடம் பரிசீலனையில் இல்லை.

(ஆ) ஏற்கெனவே தமிழ்நாட்டில் 68 ஆரம்ப சுகாதார நிலையங்கள் சமூக நல மையங்களாக மேம்படுத்தப்பட்டுள்ளன. எனவே, கூடுதலாக சமூக நல மையங்கள் தேவையில்லை. ஆனாலும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் தற்போது 6 படுக்கை வசதிகள் உள்ளன. அதனை அதிகரித்து கூடுதலாக 4 படுக்கை வசதிகளை ஏற்படுத்தவும், வாகன வசதி (ஆம்புலன்ஸ்) ஏற்படுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



1997 ஏப்ரல் 30]

**8—**

**டேனிடா திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட சுகாதார நிலையங்களை பராமரிப்புச் செய்தல்**

**வினா எண் 2565—திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் டேனிடா திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட சுகாதார நிலையங்கள் சரியாக பராமரிக்கப்படாததை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இதுகுறித்து அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தமிழகத்தில் டேனிடா திட்டத்தின்கீழ் கட்டப்பட்டுள்ள சுகாதார நிலையங்கள் சிலவற்றை தவிர்த்து மற்றவைகள் அனைத்தும் நல்லமுறையில் பராமரிக்கப்பட்டு இயங்கி வருகின்றன. பழுதடைந்துள்ள சில கட்டிடங்கள் பராமரிக்கத் தேவையான நிதி ஒதுக்கப்பட்டு, பழுது நீக்கத் தேவையான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

**9—**

**அரசு தலைமை மருத்துவமனைகளில் ரத்த சேமிப்பு வங்கி துவக்குதல் மற்றும் செயல்படுதல்**

**வினா எண் 2569—திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் உள்ள அரசு தலைமை மருத்துவமனைகளில் ரத்த சேமிப்பு வங்கி துவங்கப்படுமா?

(ஆ) தற்போது எத்தனை மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் ரத்த சேமிப்பு வங்கி செயல்படுகிறது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தற்போது 20 அரசு தலைமை மருத்துவமனைகளில் இரத்த வங்கி செயல்பட்டு வருகிறது. மீதமுள்ள 9 அரசு தலைமை மருத்துவமனைகளிலும் இரத்த வங்கி அமைக்கத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகிறது.

**10—**

**ஆரம்ப சுகாதார நிலையங்களில் தேவையான மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களை நியமித்தல்**

**வினா எண் 4917—திரு. ச. இராஜரெட்டி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தளி தொகுதி, தேன்கனிக் கோட்டை வட்டம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் போதுமான மருத்துவர்களையும் செவிலியர்களையும் நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

தளி ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள இரண்டு மருத்துவர் பணியிடங்களில் ஒரு மருத்துவர் 2-5-96 முதல் பணியில் இருக்கிறார். ஒரு இடம் காலியாக உள்ளது. இப்பணியிடத்தை நிரப்புவதற்கு தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் மருத்துவர் தேர்வுச் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தகுதியான மருத்துவர்கள் தேர்வு செய்ததும், இப்பணியிடம் நிரப்பப்படும். ஒரு செவிலியர் 12/96 முதல் பணியமர்த்தப்பட்டுள்ளார்.



**11—**

**பொழிச்சலூர் ஆரம்ப சுகாதார நிலைய படுக்கை வசதி கட்டிடம் கட்டுதல்**

**வினா எண் 6063—திரு. மீ. அ. வைத்தியலிங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாமஸ்மலை ஒன்றியம், பொழிச்சலூரில் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு படுக்கை வசதியோடு கட்டிடம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் கட்டிடம் கட்ட அரசு தயாராக உள்ளது.

(ஆ) பொழிச்சலூர் ஆரம்ப சுகாதார நிலையம் தாமஸ்மலை ஊராட்சி ஒன்றியத்தை சார்ந்ததாகும். ஆரம்ப சுகாதார நிலையம் கட்டிடம் கட்ட நிலம் கிடைக்காததால் நிலம்பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சென்னைக்கு அருகாமையில் உள்ள காரணத்தால் நிலம் பெறுவது கடினமாக உள்ளது. நிலம் கிடைத்த பின்னர் அனைத்து வசதிகளுடனும் கூடிய ஆரம்ப சுகாதார நிலையம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

**12—**

**பணிநீக்கம் செய்யப்பட்ட கிராம அலுவலர்களுக்கு ஓய்வூதியம் வழங்கல்**

**வினா எண் 193—திரு. ச. அழகிரி மற்றும் திரு. வீ. தமிழ்மணி:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் முன்பு பணியாற்றி 14-11-1980 பணி நீக்கம் செய்யப்பட்ட கிராம அலுவலர்களுக்கு ஓய்வூதியம் வழங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

17-7-96 அன்று தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் மாண்புமிகு முதல்வர் அவர்களால் தாக்கல் செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்ட அறிவிப்பின் அடிப்படையில் முன்னாள் கிராம அலுவலர்களுக்கு ஓய்வூதியம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**13—**

**புதிய வட்டாட்சியர் அலுவலகம் கட்டுதல்**

**வினா எண் 4198—திரு. ஆர். சிவானந்தம்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம், ஆரணியில் பழுதடைந்துள்ள வட்டாட்சியர் அலுவலகத்திற்கு புதிய கட்டிடம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்ட ஆரணி வட்டாட்சியர் அலுவலகத்திற்கு புதிதாக கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

**14—**

**புறம்போக்கு நிலத்தில் வீடு கட்டியவர்களுக்கு பட்டா வழங்குதல்**

**வினா எண் 4919—திரு. ச. இராஜரெட்டி:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், தருமபுரி புறநகரில் புறம்போக்கு நிலத்தில் கட்டியுள்ள ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீடுகளுக்கு பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?



விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த்துறை அமைச்சர்:**

தற்போதுள்ள அரசாணையின்படி நகராட்சி மற்றும் புறநகர் பகுதியில் ஆக்கிரமிப்பு செய்துள்ள நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்நேர்வில் உள்ள குடியிருப்புகள் அனைத்தும் தருமபுரி நகராட்சிப் பகுதியில் உள்ளது. எனவே தருமபுரி புறநகர்ப் பகுதியில் ஆக்கிரமிப்பு செய்து கட்டியுள்ள வீடுகளுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாத நிலை உள்ளது.

**15—**

**தலை ஞாயிறை தனி வட்டமாகப் பிரித்தல்**

**வினா எண் 4927—திரு. எஸ். கே. வேதரத்தினம்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகை-காயிதே மில்லத் மாவட்டம், தலைஞாயிறை தனி வட்டமாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

தலைஞாயிறை தனி வட்டமாகப் பிரிக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**16—**

**ஊத்துக்குளிப் பகுதியில் தங்கம் மற்றும் வைரப் புதையல் கண்டெடுத்தல்**

**வினா எண் 5101—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம் பல்லடம் அருகே ஊத்துக்குளி பகுதியில் கடந்த 14-6-1996 அன்று 5 கோடி மதிப்புள்ள தங்கம் மற்றும் வைரப் புதையல் கண்டெடுக்கப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): இல்லை.

**17—**

**தனியார் தரணி சர்க்கரை ஆலை துவங்காததால் விவசாயிகள் பாதிக்கப்படுதல்**

**வினா எண் 10—திரு. பெ. சு. திருவேங்கடம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம், கலசபாக்கம் தொகுதியில் கரப்பூண்டியில் அமைந்துள்ள தனியார் தரணி சர்க்கரை ஆலை கரும்பைப் பதிவு செய்த பின்னரும் ஆலை துவக்கப்படாததால் கரும்பு விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தரணி சர்க்கரை ஆலை போளூர் 1995-96 ஆம் ஆண்டு தொடங்கி தினசரி 2500 டன் பிழி திறனுடன் அமைக்கப்பட்டு தனது முதல் ஆண்டு சர்க்கரை உற்பத்தியை 14-7-96 அன்று துவங்கியது. 1995-96 ஆம் பருவத்தில் இவ்வாலை சுமார் 14,200 ஏக்கரில் பதிவு செய்து அதிலிருந்து விளைந்த 4,25,796 டன் கரும்பில் 3,03,539 டன் கரும்பை 28-12-96 வரை அரைவையினை நடத்தி அரைத்துள்ளது. மீதமுள்ள 1,22,257 டன் கரும்பு விதைக் கரும்பு, வெல்லம் மற்ற வகையில் பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும் கரும்பு நிலுவைத் தொகை முழுவதையும் செலுத்தி விட்டது.



**18—**

**விவசாய விரிவாக்க மையத்திற்குப் போதிய அலுவலர்கள் நியமித்தல்**

**வினா எண் 1462—திரு. கு. ரவி அருணன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், சுரண்டையில் உள்ள விவசாய விரிவாக்க மையத்திற்கென்று போதிய அலுவலர்கள் நியமிக்கப்படாதது குறித்து அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நியமிக்கப்படுவார்கள்?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) அரசு ஆணை எண் 466, வேளாண்மைத் துறை, நாள் 15-6-90-ன்படி துவக்கப்பட்ட 100 தற்காலிக வேளாண்மை விரிவாக்கத் துணை மையங்களில் சுரண்டையும் ஒன்று. இம்மையத்திற்கு கிடங்கு மேலாளர் தரம்-3 பதவி ஒன்றும், இரவுக் காவலர் பதவி ஒன்றும் அனுமதிக்கப்பட்டுள்ளன. அரசு உலக வங்கி உதவியுடன் தமிழ்நாடு வேளாண்மை விரிவாக்கத் திட்டத்தினைச் செயல்படுத்தும்பொழுது, ஏற்றுக் கொள்ளப்பட்ட கொள்கையின்படி வேளாண் இடுபொருட்கள் விற்பனை வேளாண்மைத் துறை மூலம் நடப்பதைப் படிப்படியாகக் குறைத்துக்கொள்ள வேண்டும் என்று ஒப்புக் கொள்ளப்பட்டது. எனவே இம்மையத்திற்கென்று பணியாளர்கள் நியமிக்கப்படாமல், மாற்று ஏற்பாட்டின்படி அருகிலுள்ள விரிவாக்க மையப் பணியாளர்களைக் கொண்டு இம்மையம் இயங்கிக் கொண்டிருக்கிறது.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**19—**

**மேல் செங்கத்தில் வேளாண்மைக் கல்லூரி அல்லது வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் தொடங்குதல்**

**வினா எண் 3068—திரு. கொ. வி. நன்னன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், மேல் செங்கத்தில் உள்ள மத்திய மாநில வேளாண்மைப் பண்ணையில் வேளாண்மைக் கல்லூரி அல்லது வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் தொடங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழாது.

**20—**

**வேலூரில் பழச்சாறு தொழிற்சாலையை மீண்டும் திறந்து தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தல்**

**வினா எண் 4627—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூரில் பழச்சாறு தயாரிக்கும் தொழிற்சாலை மூடப்பட்டுள்ளதால், தொழிலாளர்கள் வேலையின்றி அவதிப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதனைத் திறக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) வேலூரில் வடாற்காடு மாவட்ட நுகர்வோர் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான பழம் பதனிடும் ஆலை தற்போது செயல்படாமல் உள்ளதால், அந்த ஆலையை குத்தகை அடிப்படையில் நடத்த தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



**21—**

**மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்து விடுதல்**

**வினா எண் 2997—திரு. எஸ். என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டூர் அணையிலிருந்து வலதுகரை, இடதுகரை வாய்க்கால்களில் தண்ணீர் திறந்துவிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

ஆம்.

**22—**

**பாமணி ஆற்றில் கீழ்நம்மக்குறிச்சியில் மதகு அமைத்தல்**

**வினா எண் 3781—திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏடி. பன்னீர்செல்வம் மாவட்டம், முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றியம் பாமணி ஆற்றில் கீழ்நம்மக்குறிச்சியில் மதகு (ரெகுலேட்டர்) ஒன்று அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழாது.

[1997 ஏப்ரல் 30

23—

### பெரியாறு அணையில் தண்ணீர் தேக்குதல்

**வினா எண் 5689—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியாறு அணையில் 152 அடி வரை தண்ணீரைத் தேக்கிவைக்கும் திட்டத்திற்கு கேரள அரசு இணக்கம் தெரிவித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): பெரியாறு அணையில் 152 அடி வரை தண்ணீரைத் தேக்கிவைப்பதைப் பற்றி கேரள பாசன அமைச்சருடன் சென்னையில் 28-11-96 அன்றும் மற்றும் கேரள மாநில முதல்வருடன் 24-2-97 அன்றும் பேசப்பட்டது. இந்திய அரசுடனும் நேரிடையாகவும் கடிதம் மூலமும் தொடர்ந்து இதுபற்றி வலியுறுத்தப்படுகிறது.

24—

### பேருந்து இயக்குதல்

**வினா எண் 5—திரு. பி. வெங்கடசாமி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(a) Whether any representation has been received by the Government to operate bus services between Sunmugencodai and Chinnakoolu of Hosur Taluk?

(b) If so, when buses will be operated in this route?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



1997 ஏப்ரல் 30 ]

25—

### பேருந்து நிலையம் திறந்து வைத்தல்

**வினா எண் 57—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கட்டி முடிக்கப்பட்ட சென்னை மகாகவிபாரதிநகர் பஸ் நிலையத்தை உடனடியாக திறக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

ஆம்.

26—

### ஜவ்வாது மலைக்கு சாலை போடுதல்

**வினா எண் 84—திரு. பெ. சு. திருவேங்கடம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம் போளூர் நகரத்தில் இருந்து ஜவ்வாது மலைக்கு சாலை போடும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

(ஆ) அத்திட்டம் எப்பொழுது முடிவுறும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள சாலைப்போடும் சில பகுதிகளில் பணி தேசிய நெடுஞ்சாலைத் துறையால் முடிக்கப்பட்டு நெடுஞ்சாலைத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டு உள்ளது.

மேலும், இத்துறையின் குறைந்த பராமரிப்பு நிதியினைக் கொண்டு அவ்வப்போது தார் ஒட்டுக்கள் போடப்பட்டும், சரிந்த மண்/கற்கள் அப்புறப்படுத்தப்பட்டும், போக்குவரத்துக்கு உகந்தபடி தற்காலிக சீராக்கம் செய்யப்பட்டு வருகின்றது.

[1997 ஏப்ரல் 30

27—

**சாலைகள் செப்பனிடுதல்**

**வினா எண் 96—திரு. பெ. சு. திருவேங்கடம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம், போளூர் நகரிலிருந்து ஆதமங்கலம் புதூர் வழியாக, வீரனூர் செல்லும் சாலையைச் செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள சாலையை செப்பனிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

28—

**பேருந்து கழகம் பிரித்து, புதிய பேருந்துகள் வாங்குதல்**

**வினா எண் 116—திரு. வீ. தமிழ்மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தந்தைப் பெரியார் போக்குவரத்துக் கழகத்தில் இருந்து எம்.ஜி.ஆர். போக்குவரத்துக் கழகம் பிரிந்தபோது ஒப்படைக்கப்பட்ட பேருந்துகள் எத்தனை?

(ஆ) செங்கறபட்டு, கல்பாக்கம் பணிமனைகளுக்கு புதிய பேருந்துகள் வாங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். போக்குவரத்துக் கழகம் 1-4-92 அன்று ஆரம்பிக்கப்பட்டபொழுது தந்தைப் பெரியார் போக்குவரத்துக் கழகத்திலிருந்து 321 பேருந்துகள் ஒப்படைக்கப்பட்டன.

(ஆ) நடவடிக்கை எடுக்கப்படும்.



1997 ஏப்ரல் 30 ]

29—

**தாம்பரம் சானட்டோரியம் பகுதியில் சுரங்கப் பாதை அமைத்தல்**

**வினா எண் 188—திரு. மீ. அ. வைத்தியலிங்கம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை-திண்டுக்கல் நெடுஞ்சாலையில் தாம்பரம் சானடோரியம் பகுதியில் சுரங்கப்பாதை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

இல்லை.

30—

**ஒட்டியாம்பாக்கம் ஓடையில் மேம்பாலம் அமைத்தல்**

**வினா எண் 191—திரு. மீ. அ. வைத்தியலிங்கம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி, ஒட்டியாம்பாக்கம் ஓடையில் மேம்பாலம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): இல்லை.

[1997 ஏப்ரல் 30

31—

## இருப்புப் பாதையைக் கடக்க மேம்பாலம் அமைத்தல்

**வினா எண் 211—திரு. வீ. தமிழ்மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு-கல்பாக்கம் சாலையில் உள்ள இருப்புப் பாதையை கடக்க மேம்பாலம் ஒன்றினை கட்டித்தர முன்வருமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

இல்லை.

32—

## திருக்காட்டுப்பள்ளியில் சோழன் போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைத்தல்

**வினா எண் 254—திரு. துரை. சந்திரசேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், திருக்காட்டுபள்ளியில் சோழன் போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது பணிமனை அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



1997 ஏப்ரல் 30 ]

33—

## டாக்டர் அம்பேத்கர் பேருந்துகளை மாற்றி செப்பனிடுதல்

**வினா எண் 258—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) டாக்டர் அம்பேத்கர் போக்குவரத்துக் கழகத்தின் சார்பாக இயங்குகின்ற பழுதடைந்த பேருந்துகளை மாற்றி புதிதாகச் செப்பனிடும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செய்யப்படும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): டாக்டர் அம்பேத்கர் போக்குவரத்துக் கழகம் சமீபத்தில் 18-1-94 அன்று முதல் தொடங்கப்பட்டது. இக்கழகம் தொடங்கப்பட்ட நாள் முதல் 6 ஆண்டு கால இயக்க நிறைவு பெற்ற பேருந்துகளுக்கான பெரிய அளவிலான செப்பனிடும் பணிகள் படிப்படியாக செய்யத் தொடங்கப்பட்டது. அவ்வாறாக இதுவரை 92 பேருந்துகளுக்கு பெரிய அளவு செப்பனிடும் பணி முடிக்கப்பட்டுள்ளது. இதுபோன்று மீதமுள்ள பேருந்துகளுக்கு, பெரிய அளவிலான செப்பனிடும் பணி படிப்படியாக, குறிப்பிட்ட கால அளவுக்குள் செய்து முடிக்கப்பட்டு விடும்.

34—

## செய்யாறு நகருக்கு புறவழிச் சாலை அமைத்தல்

**வினா எண் 268—திரு. வ. அன்பழகன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், செய்யாறு நகருக்கு புறவழிச் சாலை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

[1997 ஏப்ரல் 30

35—

### செய்யாற்றின் குறுக்கே தரைப்பாலம் கட்டுதல்

**வினா எண் 271—திரு. வ. அன்பழகன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், செய்யாறு தொகுதியில் கொருக்காத்தூர் - வாழப்பந்தல் கிராமங்களை இணைக்க செய்யாற்றின் குறுக்கே தரைப்பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள இடத்தில் பாலம் கட்டும் திட்டம் ஏதும் இல்லை.

36—

### காவிரி ஆற்றின் குறுக்கே பாலம் கட்டும் பணித் துவக்குதல்

**வினா எண் 303—திரு. செ. இராமலிங்கம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர்-வேப்பத்தூர் சாலையை இணைக்க காவிரி ஆற்றின் குறுக்கே பாலம் கட்ட நிர்வாக அனுமதி மற்றும் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்படும் வேலை துவங்கப்படாமல் இருப்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): திருவிடைமருதூர்-கோவிலச்சேரி சாலை கி.மீ. 2/6-ல் காவிரி ஆற்றின் குறுக்கே பாலம் கட்ட ஒப்பந்தப்புள்ளி முடிவாக்கப்பட்டு பணிகள் 7-5-1996 அன்று துவங்கப்பட்டுள்ளன. இப்பால வேலை 18 மாத காலத்திற்குள் செய்து முடிக்கப்பட வேண்டும்.



1997 ஏப்ரல் 30]

37—

### ஒசூர் அதமன்கோட்டை சாலை செப்பனிடுதல்

**வினா எண் 308—திரு. பி. வெங்கடசாமி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(a) Whether there is any proposal to take up the repairs of Hosur Adamankottai road (via) Uddanapalli, Rayakota and Palacode; and

(b) If so, when it will be taken up for execution?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): வினாவில் குறிப்பிட்டுள்ள சாலையில் ஏற்படும் பழுதுகளை காலமுறை பராமரிப்பில் அவ்வப்போது தார் நொடிகள் போட்டு போக்குவரத்துக்கு ஏற்றவாறு நல்வழியில் பராமரிக்கப்பட்டு வருகிறது. எனவே இச்சாலையில் பெரிய அளவில் சீர் செய்தல் பணி தற்சமயம் தேவையில்லை.

38—

### நான்கு வழிச்சாலை அமைத்தல்

**வினா எண் 309—திரு. பி. வெங்கடசாமி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(a) Whether there is any proposal to lay four way road from Attibelle to Krishnagiri (via) Hosur?

(b) If so, when it will be started?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தலைமைப் பொறியாளரின் அறிக்கையின்படி மைய அரசின் ஒப்புதலுக்குப் பிறகு இத்திட்டம் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் எனத் தலைமைப் பொறியாளர் தெரிவித்துள்ளார்.

39—

### அரினா நதிப் பாலம் சீர் செய்தல்

**வினா எண் 330—திரு. கு. ரவி அருணன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கோட்டை நித்திய கல்யாணி அம்மன் கோவில் அரினா நதி பாலம் சீர் செய்யப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) ரூ.30 இலட்சத்திற்கு அரசின் நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மறு ஒப்பந்தப்புள்ளி அளிக்கப்பட்டு மேற்படி பால வேலைகளை ஒப்படைக்க தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

40—

### சென்னை பேருந்துகளை சரியான நிறுத்துமிடத்தில் நிறுத்துதல்

**வினா எண் 387—திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னையில் பேருந்துகளை நிறுத்துமிடத்தில் நிறுத்தாமல் சாலையின் நடுவில் நிறுத்துவது அரசுக்குத் தெரியுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

ஆம். பல்லவன் போக்குவரத்துக் கழகம் மற்றும் டாக்டர் அம்பேத்கர் போக்குவரத்துக் கழக ஓட்டுநர் மற்றும் நடத்துநர்களுக்கு பேருந்து நிறுத்தங்களில் பேருந்துகளை நிறுத்துமாறு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. மேலும், பேருந்து நிறுத்தங்களில் போக்குவரத்து



ஆய்வாளர்களை நியமித்து, நெரிசல் நேரங்களில் கண்காணிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

41—

### சென்னை பேருந்து நிறுத்துமிடங்களில் நிழற்குடை அமைத்தல்

**வினா எண் 388—திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னையில் பேருந்துகள் நிறுத்துமிடத்தில் பல இடங்களில் நிழற்குடைகள் இல்லாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

ஆம்.

42—

### அடையாறு தரைப் பாலத்தை மேம்பாலமாக அமைத்தல்

**வினா எண் 387—திரு. மீ. ஆ. வைத்தியலிங்கம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி, அனகாபுத்தூரையும் குன்றத்தூரையும் இணைக்கும் அடையாற்றில் உள்ள தரைப் பாலத்தை மேம்பாலமாக அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): இல்லை.

43—

**பூம்புகார்-கல்லணை நெடுஞ்சாலையை அகலப்படுத்துதல்**

**வினா எண் 500—திரு. துரை. சந்திரசேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், பூம்புகார்-கல்லணை நெடுஞ்சாலையை அகலப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்பொழுது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

44—

**தோட்டத் தொழிலாளர்களுக்கு பேருந்து வசதி செய்தல்**

**வினா எண் 506—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தலைநாரத் தோட்டத் தொழிலாளர்களுக்கு பேருந்து வசதி கோரி மாநில அரசிற்கு முறையீடு ஏதும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) பேருந்து வசதி அளிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.



45—

**போக்குவரத்து நெரிசலைத் தடுத்தல்**

**வினா எண் 514—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தனியார் பேருந்துகள் சென்ட்ரல், எழும்பூர் போன்ற இடங்களில் இருந்து புறப்படுவதால் அப்பகுதிகளில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு மக்கள் பெரும் அவதிக்குள்ளாவதைத் தடுக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

சென்னை சென்ட்ரல், எழும்பூர் போன்ற இடங்களில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

46—

**விரைவு இரயில்கள் நின்று செல்ல வலியுறுத்துதல்**

**வினா எண் 519—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை, பெரம்பூர் இரயில்வே நிலையம் மார்க்கமாக செல்லும் அனைத்து விரைவு வண்டிகளும் அங்கு நின்று செல்ல மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

சென்னை சென்ட்ரல் நிலையத்திலிருந்து புறப்படும் 3 விரைவு/மெயில் வண்டிகளும், சென்னை சென்ட்ரல் இரயில் நிலையத்தை நோக்கி செல்லும் 7 விரைவு/மெயில் வண்டிகளும் (ஆக மொத்தம் 10 வண்டிகள்) தற்பொழுது பெரம்பூர் இரயில் நிலையத்தில் நின்று செல்கின்றன. எனவே, இரயில் வண்டிகளை பெரம்பூர் இரயில்

நிலையத்தில் நின்று செல்ல மத்திய அரசை வலியுறுத்தும் அவசியம் எழவில்லை.

47—

**சென்னை சாலை விபத்துக்களைத் தடுத்தல்**

**வினா எண் 520—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னையில் சாலை விபத்துக்கள் அதிகமாக ஏற்படுவதை தடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

சென்னை நகர போக்குவரத்து காவல் துறை, போக்குவரத்து தடையில்லாமல் சீராக இயங்குவதற்கும், சாலை விபத்துக்களை தவிர்ப்பதற்கும் அதிக முக்கியத்துவம் அளிக்கின்றது. முக்கியமான சாலை சந்திப்புக்களையும் விபத்துக்கள் அடிக்கடி நிகழும் இடங்களையும் ஆய்வு மூலம் கண்டறிந்து அந்த இடங்களில் விபத்துக்களைத் தவிர்க்க அதிகாரிகள் மற்றும் காவலர்களை நியமனம் செய்தும், பொதுமக்களுக்கும் வாகன ஓட்டிகளுக்கும் சாலைகளைப் பயன்படுத்தும்போது அவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகளையும், நெறிகளையும் உணர்த்தி விபத்துக்களைத் தவிர்க்கும் வகையில் போக்குவரத்து சீராக இயங்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

48—

**கிராமங்களுக்கு சாலை வசதி செய்து தருதல்**

**வினா எண் 540—டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேல்மலையனூர் தொகுதியில் பல கிராமங்களுக்கு சாலை வசதி இல்லாமல் இருப்பதை அரசு அறியுமா?





(ஆ) ஆம் எனில், உடனடியாக சாலை வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) : மேல்மலையனூர் தொகுதியில் பல கிராமங்களுக்கு சாலை வசதிகள் கடந்த ஆண்டுகளில் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. சில சாலைகளில் மேம்பாட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மீதமுள்ள தகுதியுடைய சாலைகளை இனி வரும் ஆண்டுகளில் மேம்பாடு செய்வதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

49—

**சாலைகள் அகலப்படுத்தப்பட்டு தார்ச் சாலையாக்குதல்**

**வினா எண் 600—திரு. தா. உதயசூரியன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கள்ளக்குறிச்சி-சங்கராபுரம், மூங்கில்துறைப்பட்டு சாலை அகலப்படுத்தப்பட்டு தார்ச் சாலையாக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

கள்ளக்குறிச்சி-சங்கராபுரம் மூங்கில்துறைப்பட்டு சாலையினை அகலப்படுத்த தோராயமாக ரூ. 197 இலட்சம் தேவைப்படுவதால் அரசின் தற்பொழுதைய நிதி நெருக்கடி நிலைமையில் அண்மைக் காலங்களில் பெருந்தொகை தேவைப்படும் இப்பணியினை எடுத்துச் செய்யும் சாத்தியக் கூறுகள் இல்லை.

50—

**ரயில்வே மேம்பாலம் அமைத்தல்**

**வினா எண் 604—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1997 ஏப்ரல் 30

(அ) ஓமலூர்-மேட்டூர் நெடுஞ்சாலையில் உள்ள இருப்புப்பாதை கடவினால் சாலை போக்குவரத்து பாதிக்கப்படுவதைத் தடுக்க அங்கு ரயில்வே மேம்பாலம் அமைக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் தற்போதைய நிலை என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள ஓமலூர்-மேட்டூர் நெடுஞ்சாலையில் பாலம் கட்டும் பணி இரயில்வே திட்டப் பணிகளில் முன்னுரிமைப் பட்டியலில் வரிசை எண் 5-ல் ரூ. 400.00 இலட்சம் மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டு, தென்னக ரயில்வேக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

**51—**

**அரசு போக்குவரத்துக் கழகங்களில் விளம்பரப்படுத்துவதைத் தடுத்தல்**

**வினா எண் 778—திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழக அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் தனிப்பட்டவர்கள் ஸ்டிக்கர் மூலம் விளம்பரப்படுத்துவதைத் தடை செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

நடவடிக்கை எடுக்கும்.

**52—**

**சோழன் போக்குவரத்துக் கழகத்தில் புதிய பேருந்துகளை இயக்குதல்**

**வினா எண் 788—திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1997 ஏப்ரல் 30]

நாகப்பட்டினம்-காயிதே மில்லத், தஞ்சாவூர் மாவட்டங்களில் இயங்கிவரும் சோழன் போக்குவரத்துக் கழகத்தின் பழுதடைந்துள்ள பழைய பேருந்துகளை மாற்றி புதிய பேருந்துகளை விட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

சோழன் போக்குவரத்துக் கழகத்தின் நிதிநிலையைக் கருத்தில் கொண்டு ஆண்டுதோறும் அதிக வயதுடைய பழுதடைந்த பேருந்துகள் படிப்படியாக கழிவு செய்யப்பட்டு புதிய பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

**53—**

**வைகையின் குறுக்கே பாலம் கட்டுதல்**

**வினா எண் 859—திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரையில் கிருஷ்ணராஜபுரம் - கண்ணார் தெருவை இணைத்து வைகையின் குறுக்கே பாலம் கட்டும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது வேலை தொடங்கும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

**54—**

**காவேரிப்பட்டினத்தில் புறவழிச் சாலை அமைத்தல்**

**வினா எண் 911—திரு. பே. வே. ஸ்ரீ. வெங்கடேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், காவேரிப்பட்டிணத்தில் போக்குவரத்து நெருக்கடியைத் தவிர்க்க புறவழிச்சாலை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**55—**

**நாகூர், வெட்டாற்றின் குறுக்கே உள்ள பாலத்தினைப் புதுப்பித்தல்**

**வினா எண் 956—திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் தொகுதி-நாகூரில் வெட்டாற்றின் குறுக்கே உள்ள நாகூர் பாலம் பழுதடைந்த நிலையில் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதனைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி போக்குவரத்துத்துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) நாகப்பட்டினம் தொகுதி நாகூரில் வெட்டாற்றின் குறுக்கே உள்ள நாகூர் பாலமும் அதற்கு அணுகு சாலையும் அமைக்க தோராயமாக ரூ. 4.00 கோடிவரை செலவாகும். பகுதி-2 திட்டத்தின்கீழ் மிகக் குறைந்த பணிகளுக்கே அரசு ஒப்புதல் வழங்குவதால் கூடுதல் செலவு ஆகும் இப்பணியை அண்மைக் காலத்தில் எடுத்துச் செய்ய சாத்தியக் கூறுகள் இல்லை.





**56—**

**நாகூர்-நாகப்பட்டினம் புறவழிச்சாலை அமைத்தல்**

**வினா எண் 957—திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகூர்-நாகப்பட்டிணத்திற்கு புறவழிச்சாலை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**57—**

**அரசு அலுவலர்களுக்கு இலவச பஸ்பாஸ் வழங்குதல்**

**வினா எண் 983—திரு. மு. க. ஸ்டாலின்:** மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு அரசு அலுவலர்கள் மற்றும் பொதுத்துறை நிறுவன அலுவலர்கள் தங்கள் அலுவலகங்கள் சென்றுவர இலவச பஸ் பாஸ் வழங்க அரசிடம் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

இல்லை.

**58—**

**அரசு போக்குவரத்து ஊழியர்களுக்கு விடுகள் கட்டுதல்**

**வினா எண் 986—திரு. மு. க. ஸ்டாலின்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு போக்குவரத்துக் கழக ஊழியர்களுக்கு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): அரசு, போக்குவரத்துக் கழகங்கள் ஊழியர்களுக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டத்தை செயற்படுத்தி வருகின்றது.

**59—**

**கமலாபுரத்தில் கட்டப்பட்டுள்ள விமான நிலையத்தை மீண்டும் செயல்படுத்துதல்**

**வினா எண் 1009-திரு. ஆர். ஆர். சேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் ஒன்றியம் கமலாபுரத்தில் கட்டப்பட்டுள்ள விமான நிலையம் செயல்படாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், தனியார் விமானக் கம்பெனிகளுடன் அரசு பேச்சுவார்த்தை நடத்தி மீண்டும் விமானப் போக்குவரத்து நடத்த மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) : 21-3-94-ல் சேலம்-சென்னை இடையே விமானப் போக்குவரத்து துவக்கப்பட்டது. 11-6-94 அன்று விமானப்போக்குவரத்து நிறுத்தப்பட்டது. இதற்கு காரணம் குறித்து சம்பந்தப்பட்ட, விமானதள அதிகாரிகளைக் கேட்டதில் எந்தவிதத் தகவலும் கொடுக்கவில்லை. சென்னை-சேலம் இடையே மீண்டும் விமானப் போக்குவரத்து தொடங்க மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்தி வருகிறது.



**60—**

**பொன்னந்திட்டு இடையே வெள்ளாற்றில் பாலம் கட்டுதல்**

**வினா எண் 1023—திரு. அ. வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை பொன்னந்திட்டு இடையே வெள்ளாற்றில் பாலம் கட்டப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) புவனகிரி தொகுதி பரங்கிப்பேட்டை-பொன்னந்திட்டு இடையே வெள்ளாற்றில் பாலம் கட்டும் திட்டம் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**61—**

**கோவளம் சாலை மற்றும் பாலம் கட்டுதல்**

**வினா எண் 1034-திரு. வீ. தமிழ்மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1994-95 ஆம் ஆண்டில் துவங்கப்பட்ட கோவளம் சாலை மற்றும் பாலம் கட்டும் பணி முடிக்கப் பெற்றதா?

(ஆ) இல்லை எனில், அதன் காரணம் என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) 10-5-96 அன்று ஒப்பந்த உடன்படிக்கை செய்யப்பட்டுள்ளது. அதன்படி, இப்பணி 18 மாதங்களுக்குள் முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு துரிதகதியில் நடைபெற்று வருகிறது.

62—

## எருக்கஞ்சேரி பாலத்தை விரைவில் கட்டுதல்

**வினா எண் 1050—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரம்பூர் தொகுதியை ஒட்டியுள்ள எருக்கஞ்சேரி பாலத்தை விரைவில் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

பெரம்பூர் தொகுதியை ஒட்டியுள்ள எருக்கஞ்சேரியில் பாலம் கட்டும் பணி ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. இப்பணியினை விரைவில் முடிக்கத் தேவையான எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

63—

## குழித்துறை ஆற்றுப்பாலத்தினை புதியதாக கட்டித்தர வேண்டுதல்

**வினா எண் 1073—திரு. டி. மணி, மற்றும் டாக்டர் வே. ஆல்பன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தொகுதி, குழித்துறை ஆற்றுப்பாலம் பழுதடைந்து ஆபத்தான நிலையில் உள்ளதால் புதிய பாலம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், அப்பணி எப்போது ஆரம்பிக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): இப்பணிக்கான மதிப்பீட்டிற்கு மைய அரசால் அங்கீகாரம் வழங்கப்பட்ட பின்பு துவங்கப்படும் வாய்ப்பு உள்ளது.



64—

## சுற்றுலாப் பயணிகள் மூணாறு செல்ல நேரடி சாலை அமைத்தல்

**வினா எண் 1077—திரு. எல். மூக்கையா:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொடைக்கானலுக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் நேரடியாக மூணாறு செல்வதற்கு சாலை அமைக்க அரசிடம் திட்டம் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அப்பணி துவங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): கொடைக்கானலுக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் நேரடியாக மூணாறு செல்வதற்கு சாலை அமைக்கும் பணி, அரசிடம் நிதி நெருக்கடி காரணமாக அண்மைக் காலங்களில் மேற்கொள்ளும் சாத்தியக் கூறுகள் இல்லை.

65—

## கொடைக்கானல் சாலையை இருவழிப்பாதையாக அமைத்தல்

**வினா எண் 1079—திரு. எல். மூக்கையா:** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொடைக்கானலுக்கு செல்லும் சாலை ஒருவழிப்பாதையாக இருப்பதை இருவழிப்பாதையாக அமைக்க அரசிடம் திட்டம் ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்போது நிறைவேற்றப்படும்?

[1997 ஏப்ரல் 30

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) கொடைக்கானலுக்கு செல்லும் சாலை ஒருவழிப்பாதையாக இருப்பதை இருவழிப்பாதையாக அமைக்க அரசிடம் திட்டம் ஏதும் இல்லை. ரூ. 600 இலட்சம் தேவைப்படும் இப்பணிக்கு அரசின் நிதி நெருக்கடி காரணமாக அண்மைக்காலங்களில் இதை எடுத்துக் கொள்ளும் சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**66—**

**பேருந்துகளை அழகப்பபுரத்திற்கு நீட்டித்தல்**

**வினா எண் 1124—திரு. எஸ். வி. கிருஷ்ணன்:** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், அழகப்பபுரத்திற்கு தடம் எண்165, 237, 601 ஆகிய பேருந்துகளை நீட்டித்துத் தரும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆமெனில், அது எப்பொழுது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தடம் எண்.165 திருநெல்வேலி-திசையன்விளை/உவரி பேருந்து மூலம் அழகப்பபுரத்திற்கு 8-7-96 முதல் கூடுதலாக 6 நடைகள் இயக்கப்பட்டு வருகிறது. தற்போதுள்ள பேருந்து வசதிகள் போதுமான அளவில் இருப்பதால் தடம் எண்237 மற்றும் 601 ஆகிய பேருந்துகளை அழகப்பபுரத்திற்கு நீட்டிக்க சாத்தியக்கூறு இல்லை.

**67—**

**நன்னிபுரம் பேருந்தை மீண்டும் இயக்க வேண்டுதல்**

**வினா எண் 1125—திரு. எஸ். வி. கிருஷ்ணன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1997 ஏப்ரல் 30]

(அ) திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், நாங்குனேரி தொகுதி நன்னிகுளம் என்னும் ஊருக்கு இயங்கி வந்த நகரப் பேருந்து நிறுத்தப்பட்டு விட்டதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தற்போது நன்னிகுளம் கிராமத்திற்கு தடம் எண் 165 திருநெல்வேலி-உவரி, திசையன்விளை பேருந்து மூலம் 4 நடைகள் 8-7-96 முதல் இயக்கப்படுகிறது.

**68—**

**உவரிவரை இயங்கிவந்த பேருந்தை மீண்டும் இயக்குதல்**

**வினா எண் 1126—திரு. எஸ். வி. கிருஷ்ணன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலியிலிருந்து முனைஞ்சிப்பட்டி வழியாக உவரிவரை இயங்கி வந்த தடம் எண்138-பி நிறுத்தப்பட்டுவிட்டதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அந்தப் பேருந்தினை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): திருநெல்வேலியிருந்து முனைஞ்சிப்பட்டி வழியாக உவரிவரை இயக்கப்படும் கட்டபொம்மன் போக்குவரத்துக்கழக வழித்தடம் எண்138-பி ஒருபோதும் நிறுத்தப்படவில்லை. சாலை பழுது காரணமாக சில நாட்கள் மாற்று வழித்தடத்தில் இயக்கப்பட்டது. சாலை சீரமைக்கப்பட்டு தற்போது மீண்டும் வழக்கமான தடத்தில் இயக்கப்பட்டு வருகிறது.

[1997 ஏப்ரல் 30

69—

அம்பேத்கர் நகர் பகுதிக்கு பேருந்து

**வினா எண் 1127—திரு. எஸ். வி. கிருஷ்ணன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், நாங்குனேரி தொகுதி, களக்காடு நகர பஞ்சாயத்தில் உள்ள அம்பேத்கர் நகர்ப் பகுதிக்கு பேருந்து இயக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

அம்பேத்கர் நகர் செல்லும் சாலை பேருந்து செல்லவே இயலாத அளவு மிகக் குறுகலாக உள்ளது. எனவே அம்பேத்கர் நகருக்கு பேருந்து இயக்குவதற்கான சாத்தியக் கூறுகள் தற்போது இல்லை.

70—

பழுதடைந்த சாலை செப்பனிடல்

**வினை எண் 1134—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், பூலாம்பட்டி-கூடக்கல்-வடக்காடு சாலை பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைச் செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், பூலாம்பட்டி-கூடக்கல்-வடக்காடு பகுதியில் பழுதடைந்துள்ள சாலையில் குழி பள்ளங்களுக்கு தார் நொடிகள் போட்டு சீரமைக்கப்பட்டுள்ளது.



1997 ஏப்ரல் 30 ]

71—

எடப்பாடி-கோயம்புத்தூர் பேருந்தினை மீண்டும் இயக்குதல்

**வினா எண் 1138—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடியிலிருந்து கோயம்புத்தூருக்கு இயங்கி வந்த பேருந்து நிறுத்தப்பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) பயணிகள் மிகவும் குறைவாக இருந்ததால் அப்பேருந்து இயக்கம் நிறுத்தப்பட்டது. பயணிகள் எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்பு இல்லாத காரணத்தினால் அவ்வழித்தடத்தை மீண்டும் இயக்குவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

72—

பள்ளி மாணவர்களுக்காக பேருந்து இயக்குதல்

**வினா எண் 1150—திரு. வீ. தமிழ்மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டில் இருந்து திருக்கழுக்குன்றம் வரை பள்ளி மாணவர்களுக்காக பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். போக்குவரத்துக்கழக பேருந்துகள் மூலம் செங்கல்பட்டிலிருந்து திருக்கழுக்குன்றம் வரை பள்ளி மாணவர்களுக்காக தினசரி 18 குறுநடைகள் இயக்கப்பட்டு வருகின்றன.

73—

**சுற்றுச்சாலை அமைத்து வாகன நெரிசலைத் தவிர்த்தல்**

**வினா எண் 1286-திரு. பி. வெங்கடசாமி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(a) Is there any proposal to lay a ring road from II SIPCOT Complex to I SIPCOT Complex in Hosur in order to relieve congestion of Lorry Traffic; and

(b) If so, when it will be started?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) இச்சாலைக்கான பணி 10-4-96 முதல் துவங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

74—

**கூக்காலுக்கு சாலை வசதி செய்து தருதல்**

**வினா எண் 1288—திரு. எல். மூக்கையா:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொடைக்கானல் ஒன்றியம், பூம்பாறையிலிருந்து பாரிக்கவை பிரிவு வழியாக கூக்காலுக்கு சாலை வசதி செய்து தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அப்பணி எப்பொழுது துவங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): பூம்பாறையிலிருந்து பாரிக்கவை பிரிவு வரையிலான சாலை அரசுச்சாலையாகும். அதன் தொடர்ச்சியான பாரிக்கவை-கூக்கால் சாலையானது மொத்தம் 8.8 கி.மீ. நீளமாகும்.



இதில் கி.மீ. 0/0-2/0 முடியவுள்ள பகுதியை 1994-95-ம் ஆண்டு கிராமச்சாலைகள் திட்டத்தின்கீழ் மேம்பாடு செய்ய எடுத்துக்கொள்ளப்பட்டு மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு சார்நிலை அலுவலரால் மீண்டும் தலைமைப் பொறியாளர் (நெடுஞ்சாலை) அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அதனை பரிசீலனை செய்த பின்னர் விலை குறைப்புக்காக ஒப்பந்தப்புள்ளி சார்நிலை அலுவலருக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளது. மீதமுள்ள கி.மீ.2/0-8/8 வரையிலுள்ள சாலையை 1996-97-ம் ஆண்டு கிராமச்சாலைகள் திட்டத்தின்கீழ் மேம்பாடு செய்ய அரசு ஆணை பெறப்பட்டுள்ளது. எனவே, இப்பணிக்கு மதிப்பீடு தயாரிக்கும் வேலை சார்நிலை அலுவலரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

75—

**தொப்பூரில் புறவழிச்சாலை அல்லது ஒரு வழிப்பாதை**

**வினா எண் 1357—திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி தொகுதி, தொப்பூர் கணவாய்ப் பகுதியில் போக்குவரத்து நெரிசலால் பல மணி நேரம் போக்குவரத்து தடைபடுவதைத் தடுக்க, அங்கு புறவழிச்சாலை அமைக்கவோ அல்லது அப்பாதையை ஒரு வழிப் பாதையாக மாற்றவோ அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

இச்சாலைப் பகுதி மலைப்பகுதியிலிருப்பதால் இங்கு புறவழிச்சாலை அமைப்பது சாத்தியமல்ல. மேலும், சாலையை ஒட்டியுள்ள பகுதி கடினமான பாறைகளைக் கொண்டுள்ளதால் அதனை அகலப்படுத்துதல் கடினமானதாகும். எனினும், நெரிசலைத் தவிர்க்க வேண்டி "லே-பை" (Lay bye) எனப்படும் வசதியை ஏற்படுத்த திட்டம் ஒன்று மைய அரசின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

[1997 ஏப்ரல் 30

76—

திருப்பூரில் சுற்றுச் சாலை அமைத்தல்

**வினா எண் 1405—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூரில் சுற்றுச்சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) பொருளாதார மற்றும் மாநிலங்களிடையேயான முக்கியத்துவம் வாய்ந்த சாலைகள் திட்டத்தின் கீழ் திருப்பூர் நகரைச்சுற்றி சுற்றுச்சாலை அமைக்க ரூ. 15.00 கோடிக்கான திட்ட மதிப்பீட்டை மைய அரசின் தரைவழி போக்குவரத்துத்துறை கொள்கை அளவில் அங்கீகரித்துள்ளது. இதில் மத்திய அரசின் பங்குத் தொகையான ரூ.7.50 கோடிக்கு மைய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது. ஒப்புதல் கிடைத்த உடன் முறைப்படி பணிகள் மேற்கொள்ளப்படும்.

77—

இரயில்வே மேம்பாலம் கட்டுதல்

**வினா எண் 1408—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர்-ஈச்சவாரி மற்றும் ஒண்டிப்புதூரில் இரயில்வே மேம்பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): இரயில்வே நிர்வாகம் தமிழ்நாட்டில், இருப்புப்பாதை கீழ்/மேல் பாலங்கள் கட்ட ஒப்புதல் அளித்துள்ள



1997 ஏப்ரல் 30]

பணிப் பட்டியலில் ஒண்டிப்புதூர் இரயில்வே மேம்பாலம் கட்டும் பணி இடம் பெறாததால், தற்போது இப்பணியினை மேற்கொள்ள இயலாமல் உள்ளது.

78—

நகரப் பேருந்துகள் இயக்க வேண்டுதல்

**வினா எண் 1460—திரு. கு. ரவி அருணன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், தென்காசி-பாபநாசம் மற்றும் தென்காசி-சுரண்டை இடையே புல்லுக்காட்டு வலசை வழியாக நகரப்பேருந்துகள் இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் இயக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): வினாவில் குறிப்பிட்ட தடங்கள் சுற்று வழித்தடங்களாகும், எனவே, அத்தடத்தில் நகரப்பேருந்துகள் இயக்கும் வாய்ப்பில்லை.

79—

சரபங்கா நதியின் குறுக்கே புதிய பாலம் அமைத்தல்

**வினா எண் 1506—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி நகரில் சரபங்கா நதியின் குறுக்கே உள்ள பாலம் அகலம் குறைவாகவும், பழுதுபட்டும் இருப்பதால் போக்குவரத்து பாதிக்கப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அந்த இடத்தில் புதிய பாலம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) இப்பணி அரசால் அங்கீகரிக்கப்பட்ட திட்டங்கள் எதிலும் இடம் பெறவில்லை. அரசு ஆண்டுதோறும் பகுதி-2 திட்டத்திற்கு குறைந்த அளவே நிதி ஒதுக்கீடு செய்து வருவதால் பெருந்தொகை தேவைப்படும் இப்பணியை அண்மைக்காலங்களில் இத்துறையின் பகுதி-2 திட்டத்தில் மேற்கொள்ளும் சாத்தியக் கூறுகள் இல்லை.

**80—**

**தமிழக எல்லையில் நல்வரவு வளைவு அமைத்தல்**

**வினா எண் 1759—திரு. பி. வெங்கடசாமி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(a) Is there any proposal to construct a Welcome Arch in the Tamil Nadu State Border in National Highways No.7 near Zooguvadi and Attibele in Dharmapuri District?

(b) If so, the details thereof?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழ இடமில்லை.

**81—**

**நேசமணி போக்குவரத்துக் கழக பழுதடைந்த பேருந்துகளை, புதுப்பித்து மீண்டும் இயக்குதல்**

**வினா எண் 1819—திரு. டி. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் நேசமணி போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் 300-க்கு அதிகமானவை ஓடாமல் பணிமனைகளில் நிறுத்தப்பட்டுள்ளமை அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?



(ஆ) ஆம் எனில், அவற்றை மீண்டும் இயக்க என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): கன்னியாகுமரி மாவட்டம் நேசமணி போக்குவரத்துக்கழகத்தை பொறுத்தவரை பேருந்துகள் இயக்கப்படாமல் இருந்த 59 வழித்தடங்களில் தற்போது 56 வழித்தடங்களில் பேருந்துகள் இயக்கப்பட்டுவிட்டன. ஏனைய வழித்தடங்களிலும் கூடிய விரைவில் பேருந்துகளை இயக்கத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் நேசமணி போக்குவரத்துக்கழகம் முனைப்புடன் எடுத்து வருகிறது.

**82—**

**பெருந்துறை சாலைப் போக்குவரத்து பயிற்சிப் பள்ளியின் மருத்துவக் கல்லூரியை அங்கீகாரம் செய்தல்**

**வினா எண் 1869—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், பெருந்துறை, சாலைப் போக்குவரத்து பயிற்சிப் பள்ளியின் மருத்துவக் கல்லூரியை இந்திய மருத்துவக் குழு (IMC) மாநில மருத்துவக் குழு (SMC) ஆகியவை அங்கீகரித்துள்ளனவா?

(ஆ) இல்லை எனில், அங்கீகாரம் பெற அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இப்பொருள் இந்திய மருத்துவ குழுமத்தின் ஆய்வில் உள்ளது.

[1997 ஏப்ரல் 30

83—

**ராஜீவ்காந்தி போக்குவரத்துக் கழக அதிகாரிகள் வேலை நீக்கம்**

**வினா எண் 1884—திரு. பெ. சு. திருவேங்கடம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசுக்குச் சொந்தமான ராஜீவ்காந்தி போக்குவரத்துக் கழகத்தின் அதிகாரிகள் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனரா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) ராஜீவ்காந்தி போக்குவரத்துக் கழக நிர்வாக இயக்குநராகப் பணியாற்றிய திரு. டி. சேதுராமன், அரசு ஆணை எண் 109, போக்குவரத்துத்துறை, நாள் 15-6-96-ன்படி இடைநீக்கம் (suspend) செய்யப்பட்டுள்ளார்.

84—

**கீழாம்பல்-தீயனூர் கிராமங்களுக்குப் பேருந்து வசதி செய்து தருதல்**

**வினா எண் 2035—திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடியிலிருந்து கீழாம்பல்-தீயனூர் கிராமங்களுக்குப் பேருந்து வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



1997 ஏப்ரல் 30]

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): பரமக்குடியிலிருந்து கீழாம்பல்-தீயனூர் கிராமங்களுக்குச் செல்லும் இரு சாலைகளிலும் ஆளில்லாத ரயில்வேகேட் ஒன்று மிகவும் குறுகலான அளவில் பேருந்து செல்ல தகுதியற்ற நிலையில் உள்ளது. எனவே இவ்விரு கிராமங்களுக்கும் பேருந்து இயக்குவதற்கான சாத்தியக்கூறுகள் தற்போது இல்லை.

85—

**திருவள்ளூர் ரயில் நிலையம் அருகே பாலம் அமைத்தல்**

**வினா எண் 2349—திரு. சி. சுப்பிரமணி என்கிற சி.சு. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை திருப்பதி சாலையில், திருவள்ளூர் ரயில் நிலையம் அருகில் ஒரு பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

மேற்படி பணியை 1996-97-ஆம் ஆண்டு இரயில்வே பணிகள் திட்டத்தில் மேற்கொள்ள தென்னக இரயில்வேக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

86—

**திரிசூலம் இரயில் நிலையம் செல்ல சுரங்கப்பாதை அமைத்தல்**

**வினா எண் 2167—திரு. மீ. அ. வைத்தியலிங்கம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1997 ஏப்ரல் 30

சென்னை, மீனம்பாக்கம் விமானத் தளத்திலிருந்து திரிசூலம் இரயில் நிலையம் செல்ல திண்டுக்கல் நெடுஞ்சாலையில் சுரங்கப்பாதை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

இல்லை.

**87—**

**கோயம்பேடு காய்கறி மொத்த விற்பனை அங்காடி திறத்தல்**

**வினா எண் 2415—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை கோயம்பேட்டில் கட்டப்பட்டுள்ள காய்கறி மொத்த விற்பனை அங்காடியைத் திறக்கும் எண்ணம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது திறக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) கோயம்பேட்டில் 295.72 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டு வரும் மொத்த விற்பனை அங்காடி வளாகத்தில், அழுகும் பொருள்களுக்காக (மலர், கனி மற்றும் காய்கறி) மொத்த விற்பனை அங்காடி கட்டி முடிக்கப்பட்டுள்ளது. ஆசியாவிலேயே முதல் முதலாக அமைக்கப்பட்டுள்ள தனிச்சிறப்பு வாய்ந்த இவ்வங்காடி வளாகத்தை, அழுகும் பொருட்கள் மொத்த விற்பனை வியாபாரிகளின் வேண்டுகோளுக்கு இணங்க விரைவில் திறக்க அரசு தீர்மானித்தது.

(ஆ) அவ்வாறே சென்ற ஆகஸ்ட் திங்கள் 28-ஆம் நாள் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாகம் திறந்து வைக்கப்பட்டது.



1997 ஏப்ரல் 30]

**88—**

**சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்கு நிலங்கள் கையகப்படுத்துதல்**

**வினா எண் 2419—திரு. சி. சுப்பிரமணி என்கிற சி. சு. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் தொகுதியில், திருவள்ளூர் ரயில் நிலையம் அருகே சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்கு நிலங்கள் கையகப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

வீடுகட்டும் திட்டத்திற்கு நில எடுப்பு நடவடிக்கை திருவள்ளூர் நகராட்சியில், திருவள்ளூர் ரயில் நிலையத்திற்கு அருகில் உள்ள பெரியகுப்பம் கிராமத்தில் எடுக்கப்பட உள்ளது. இத்திட்டத்திற்காக சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் 22.88 ஏக்கர் தனியார் புஞ்சை நிலத்திற்கு நில எடுப்பின்கீழ் விளம்பல் படுத்தக் கோரியது மற்றும் 1.69 ஏக்கர் நிலம் அரசு நிலத்தை சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. தனியார் நிலம் சம்பந்தமாக நில எடுப்பு சட்டத்தின் பிரிவு 4(1)-ன் கீழ் விளம்பல் அறிவிக்கை, அரசு ஆணை (நிலை) எண் 324 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள்:14-3-1995-ல் செய்யப்பட்டுள்ளது. நில எடுப்புச் சட்டத்தின் பிரிவு 6-ன் கீழ் விளம்பல் அறிவிக்கை அரசு ஆணை (நிலை) எண் 324, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை [நவ.3(1)], நாள். 30-4-96-ல் செய்யப்பட்டுள்ளது.

**89—**

**தனித்தனி பணிமனை அமைத்தல்**

**வினா எண் 2444—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வட ஆற்காடு அம்பேத்கர் மாவட்டம், வேலூரில் ராஜீவ்காந்தி போக்குவரத்துக் கழகம், திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் ஆகியவற்றிற்குத் தனித்தனியே பணிமனைகள் அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தற்போது பரிசீலனையில் இல்லை.

**90—**

**பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழக பழுதடைந்த பேருந்துகளை மாற்றி புதிய பேருந்து இயக்குதல்**

**வினா எண் 2484—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூரில் உள்ள பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் மிகவும் பழமையானவற்றை மாற்றி புதிய பேருந்துகள் விட அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

பழைய பேருந்துகளை மாற்றி புதிய பேருந்துகளை இயக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**91—**

**அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் பெண் நடத்துநர்களை அதிகப்படுத்துதல்**

**வினா எண் 2519—திரு. டி. இராஜேந்தர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் பெண் நடத்துநர்களின் எண்ணிக்கை எவ்வளவு?





(ஆ) இந்த அளவை அதிகப்படுத்திட அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் தற்போது மொத்தம் 6 பெண் நடத்துநர்கள் பணிபுரிகின்றனர்.

(ஆ) தற்போது பெண் நடத்துநர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதற்கான செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை.

**92—**

**மாநில நெடுஞ்சாலையை தேசிய நெடுஞ்சாலையாக மாற்றிட மத்திய அரசுக்கு பரிந்துரைத்தல்**

**வினா எண் 2567—திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர்-சித்தூர் மாநில நெடுஞ்சாலையை தேசிய நெடுஞ்சாலையாக மாற்றிட தமிழக அரசு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): கடலூர்-சித்தூர் மாநில நெடுஞ்சாலையை தேசிய நெடுஞ்சாலையாக மாற்றிட மைய அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டது. ஆனால் மைய அரசானது தொடர்ச்சியான நிதி நெருக்கடி காரணமாக எந்த சாலையையும் புதிய தேசிய நெடுஞ்சாலையாக தற்போது அறிவிக்க இயலாது என தெரிவித்துள்ளது.

**93—**

**கட்டயங்காடு பாலம் கட்டுதல்**

**வினா எண் 2634—திரு. வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணித் தொகுதி, பேராவூரணி-பட்டுக்கோட்டையை இணைக்கும் கட்டையங்காடு பாலத்தை நடப்பு நிதியாண்டிலேயே கட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, பேராவூரணி-பட்டுக்கோட்டையை இணைக்கும் கட்டையங்காடு பாலம் அமைக்கும் பணி, மைய சாலை நிதித்திட்டத்தில் மேற்கொள்ள மாநில அரசால் மைய அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. மைய அரசின் ஒப்புதல் கிடைக்கப் பெற்றதும் பணி செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

**94—**

### நகரப் பேருந்துகளின் தூரத்தை நீட்டித்தல்

**வினா எண் 2710—திரு. எஸ். ஆர். சிவலிங்கம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நகரப் பேருந்து நிலையத்தில் இருந்து 30 கிலோ மீட்டர் உள்ள வழித் தடங்களை 35 கிலோ மீட்டராக நீட்டித்துத் தர அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், பனமரத்துப்பட்டியிலிருந்து 35 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள கிராமங்களுக்கு உடனடி நகரப் பேருந்து வசதி கிடைக்க வாய்ப்புண்டா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) பேருந்து இயக்கப்படாத, மற்றும் 1981-ஆம் ஆண்டு மக்கட்தொகை கணக்கெடுப்பின்படி மக்கட்தொகை 1000-க்குக் குறையாது





உள்ள கிராமங்களுக்குப் போக்குவரத்துப் வசதி அளிக்க நகரப் பேருந்து வழித்தடங்களின் தூரத்தை 30 கிலோ மீட்டரில் இருந்து 35 கிலோ மீட்டர் வரை நீட்டித்து அரசு ஏற்கெனவே 5-8-93 நாளிட்ட உள் துறை அரசு ஆணை நிலை எண் 1206-ல் ஆணை வெளியிட்டுள்ளது.

(ஆ) மேற்சொன்ன நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் கிராமங்களுக்கு நகரப் பேருந்து வசதி கிடைக்க வாய்ப்புண்டு.

**95—**

### கும்மிடிப்பூண்டி இருப்புப்பாதை வாயிலுக்கருகில் மேம்பாலம் அமைத்தல்

**வினா எண் 2760—திரு. கே. வேணு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கும்மிடிப்பூண்டி இருப்புப்பாதை வாயிலுக்கருகில் (Railway Gate) மேம்பாலம் அமைக்க மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

இப்பணியை அண்மைக் காலங்களில் மேற்கொள்ளும் வாய்ப்புகள் இல்லை.

**96—**

### சென்னை-பிச்சாவரம் சுற்றுலா மையத்திற்குப் பேருந்து இயக்குதல்

**வினா எண் 2879—திரு. அ. வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையிலிருந்து பிச்சாவரம் சுற்றுலா மையத்திற்கு நேரடியாகப் பேருந்து மீண்டும் இயக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சென்னையிலிருந்து பிச்சாவரம் சுற்றுலா மையத்திற்கு நேரடி பேருந்து மீண்டும் இயக்குவதற்கான சாத்தியக் கூறு இல்லை.

**97—**

**காட்டுமன்னார்குடியில் பணிமனை அமைத்தல்**

**வினா எண் 2888—திரு. அ. வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார்குடியில் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) பொருத்தமான நிலம் கிடைக்கப் பெற்றவுடன் பணிமனை அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**98—**

**பெண் நடத்துனர்கள் நியமனம்**

**வினா எண் 3052—திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசுப் பேருந்துகளில் பெண் நடத்துநர்கள் நியமிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?





(ஆ) ஆம் எனில், அவர்களை மகளிர்-சிறுவர் பேருந்துகளில் பணியமர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): அரசுப் பேருந்துகளில் பெண் நடத்துநர்கள் நியமிக்க அரசிடம் தற்போது செயற்குறிப்பு இல்லை.

**99—**

**சென்னை நகரில் டீசல் ஆட்டோ கட்டணம்**

**வினா எண் 3124—திரு. வெ. அ. ஆண்டமுத்து:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரில் டீசலில் ஆட்டோக்கள் ஓட்டுபவர்களும், பெட்ரோல் ஆட்டோ ஓட்டுபவர்கள் போல் கட்டணம் வசூலிப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இதை மாற்ற அரசிடம் ஏதேனும் திட்டம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): கிலோ மீட்டருக்குத்தான் கட்டணம் நிர்ணயிக்கப்படுகிறதே தவிர எந்த எரிபொருளில் ஆட்டோ ரிக்ஷாக்கள் இயக்கப்படுகின்றன என்பதை பொருத்ததல்ல. எனவே இக்கேள்வி எழ வாய்ப்பில்லை.

**100—**

**இருப்புப்பாதை கடவில் மேம்பாலம் அமைத்தல்**

**வினா எண் 3135—திரு. கு. ரவி அருணன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



218441

(அ) திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், நெல்லை-தென்காசி சாலையில் பாவூர்சத்திரம் இருப்புப்பாதை கடவில் மேம்பாலம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சட்டமன்ற வினாவில் குறிப்பிடும் சாலையின் சரியான பெயர் தூத்துக்குடி-திருநெல்வேலி-செங்கோட்டை செல்லும் சாலையாகும். மேற்படி சாலையில் இரயில்வே வாகன இலக்கு ஒரு இலட்சத்திற்கும் குறைவாக உள்ளபடியால் இந்த இருப்புப்பாதை கடவில் மேம்பாலம் கட்டுவதற்கான தகுதியை அடையவில்லை. எனவே, இவ்விடத்தில் இரயில்வே மேம்பாலம் கட்டுவது அண்மைக் காலங்களில் இயலாது.

**101—**

### தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே பாலம் அமைத்தல்

**வினா எண் 3144—திரு. க. சிவராஜ்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தியாகதுருக்கத்தையும், மணலூர்பேட்டையையும் இணைக்கும் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே பாலம் கட்டும் பணி மீண்டும் எப்போது துவங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தியாகதுருக்கத்தையும் மணலூர்பேட்டையையும் இணைக்கும் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே பாலம் கட்டும் பணியை விரைவில் துவக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.



**102—**

### அம்பத்தூர்-வில்லிவாக்கம் வரை கொரட்டூர் வழியாக மாற்றுப்பாதை அமைத்தல்

**வினா எண் 3307—திரு. ஜே. எம். ஆருண் ரஷீத்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை-திருவள்ளூர் நெடுஞ்சாலையில் அம்பத்தூரிலிருந்து வில்லிவாக்கம் வரை போக்குவரத்து நெரிசல் மிக அதிகமாக இருப்பதால் அம்பத்தூரிலிருந்து வில்லிவாக்கம் வரை கொரட்டூர் வழியாக ஒரு மாற்றுப்பாதை (Bye-pass Road) அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

பெருந்தொகை தேவைப்படும் இப்பணியை அண்மைக் காலங்களில் இத்துறையின் பகுதி-2 திட்டத்தில் மேற்கொள்ளும் வாய்ப்புகள் இல்லை.

**103—**

### அம்பத்தூர் டி.ஐ. சைக்கிள் கம்பெனி அருகில் உள்ள பாலத்தை விரிவுபடுத்துதல்

**வினா எண் 3308—திரு. ஜே. எம். ஆருண் ரஷீத்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை அம்பத்தூர் டி.ஐ. சைக்கிள் கம்பெனிக்கு அருகாமையில் அமைந்திருக்கும் பாலத்தை விரிவுபடுத்த அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

இல்லை.

104—

## ஓமலூர் நகரில் புறவழிச்சாலை அமைத்தல்

**வினா எண் 3318-திரு.ஆர்.ஆர்.சேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் நகரத்தில் போக்குவரத்து நெரிசல் அதிகமாக உள்ளதால், புறவழிச்சாலை (Bye Pass Road) புளியம்பட்டி-காடவாபுரம் வழியாக அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

மைய அரசு சிறு நகரங்களில் தேசிய நெடுஞ்சாலைகளில் புறவழிச்சாலை அமைக்கும் திட்டத்திற்கு முக்கியத்துவம் தரவில்லையாதலால் வினாவில் கூறப்பட்டுள்ள புறவழிச்சாலை அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

105—

## கோவை-ஊட்டி சாலையில் புறவழிச்சாலை அமைத்தல்

**வினா எண் 3364—திரு. பா. அருண்குமார்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டுப்பாளையம் நகரில் போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்த கோவை-ஊட்டி சாலையில் ஒரு புறவழிச் சாலை (Bye-Pass Road) அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது சாலை அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): மேட்டுப்பாளையம் நகரில் போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்த கோவை-ஊட்டி சாலையில் புறவழிச்சாலை அமைக்கும் பணியினை அரசின் நிதி நெருக்கடியின் காரணமாக அண்மைக்காலத்தில் மேற்கொள்ளும் வாய்ப்புகள் இல்லை.



106—

## மூன்று சக்கர வண்டிகளை மோட்டார் வாகனச்சட்டத்தின் கீழ் கொண்டுவருதல்

**வினா எண் 3413—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரில் ஓடும் இயந்திரம் பொருத்திய வழக்கமாக மீன் ஏற்றி செல்லப் பயன்படுத்தும் மூன்று சக்கர வண்டிகளை மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் கொண்டு வர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): அரசின் பரிசீலனையில் உள்ளது.

107—

## சோழன் போக்குவரத்துக் கழகத்தின் "டெப்போ" ஆடுதுறையில் தொடங்குதல்

**வினா எண் 3422—திரு.செ.இராமலிங்கம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணம் சோழன் போக்குவரத்துக் கழகத்தின் (depot) ஆடுதுறையில் தொடங்க அரசிடம் செயற்குறிப்பு ஏதேனுமுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

[1997 ஏப்ரல் 30

**108—**

**பட்டுக்கோட்டை-முத்துப்பேட்டை நகரப் பேருந்தை சரிவர இயக்குதல்**

**வினா எண் 3462—திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஏ.டி.பன்னீர்செல்வம் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதி, பட்டுக்கோட்டையிலிருந்து முத்துப்பேட்டை வழியாக தில்லை விளாகம் செல்லும் நகரப் பேருந்தை சரிவர இயக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

பட்டுக்கோட்டை நகரத் தடம் எண் 30-ன் மூலம் பட்டுக்கோட்டை-தில்லைவிளாகம் தடத்தில் 4 நடைகளும், பட்டுக்கோட்டை தில்லைவிளாகம் - தெற்குகாடு தடத்தில் 6 நடைகளும், பட்டுக்கோட்டை - முத்துப்பேட்டை தடத்தில் 2 நடைகளும் தினசரி இயக்கப்படுகின்றது. இந்நடைகள் உரிய கால அட்டவணைப்படி இயக்கப்படுகின்றன.

**109—**

**செங்கம் நகரில் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்து கழகப் பணிமனை அமைத்தல்**

**வினா எண் 3502—திரு. கொ. வி. நன்னன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் நகரில் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்து கழகப் பணிமனை அமைக்க அரசு பரிசீலித்து வருகிறதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?



1997 ஏப்ரல் 30]

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): செங்கம் நகரில் கடந்த 15-7-1996 முதல் துணை பணிமனை அமைத்து, பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

**110—**

**சென்னை-திருச்சி-திண்டுக்கல் மீட்டர்கேஜ் இரயில் பாதையை அகல இரயில் பாதையாக மாற்றியமைத்தல்**

**வினா எண் 3543—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை-திருச்சி-திண்டுக்கல் மீட்டர்கேஜ் இரயில் பாதையை அகல இரயில் பாதையாக மாற்றியமைக்க மத்திய அரசை மாநில அரசு கோரியுள்ளதா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

ஆம்.

**111—**

**சென்னை-அரக்கோணம் இரயில்பாதையில் இயக்கப்படும் அனைத்து புறநகர் இரயில்களையும் திருவள்ளூர்வரை இயக்குதல்**

**வினா எண் 3574—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை-அரக்கோணம் இரயில் பாதையில் ஆவடி வரை இயக்கப்படும் அனைத்து புறநகர் இரயில்களையும் திருவள்ளூர் வரை இயக்க மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தற்சமயம் சாத்தியமில்லை.

112—

**நான்காவது இரயில் பாதையை திருவள்ளூர் வரை அமைத்தல்**

**வினா எண் 3576—திரு. ஜி. கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை-அரக்கோணம் இரயில் பாதையில் நான்காவது இரயில் பாதையை திருவள்ளூர் வரை அமைக்க மாநில அரசு மத்திய அரசை வலியுறுத்துமா?

(ஆ) நடப்பு நிதியாண்டில் அப்பணி தொடங்க ஆவன செய்யப்படுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) பட்டாபிராமிலிருந்து நான்காவது இரயில் பாதையை அரக்கோணம் வரை நீட்டிப்பது குறித்து முதற்கட்ட தொழில்நுட்பப் போக்குவரத்து குறித்து ஆய்வுக்கு அனுமதிக்கப்பட்டு முன்னேற்றத்தில் உள்ளது.

(ஆ) நடப்பு நிதியாண்டில் மேற்படி பணிக்கு ஒப்புதல் அளிக்கப்படவில்லை. மேலும் இப்பணி தொடங்க இரயில்வே வாரியம் ஒப்புதல் அளித்த பிறகே மேற்கொள்ளப்படும்.

113—

**போக்குவரத்துக் கழகங்கள் நடத்தும் தொழிற்கல்லூரிகள்**

**வினா எண் 3638—திரு. வி. கே லட்சுமணன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

போக்குவரத்துக் கழகங்கள் நடத்தும் தொழிற் கல்லூரிகளை தனியார் கல்லூரி அல்லது அரசு கல்லூரி என்று எப்படிக் கருதுவது?





விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

அரசு போக்குவரத்து கழகங்கள் நடத்தும் தொழிற் கல்லூரிகளை அரசு கல்லூரிகள் என்றோ அல்லது தனியாரால் நடத்தப்படும் சுயநிதி கல்லூரிகள் என்றோ வகைப்பாடு செய்ய முடியாது. இவைகள் அரசு கட்டுப்பாட்டில் இயங்கும் சாலைப் போக்குவரத்து நிறுவனத்தால் நடத்தப்படும் சிறப்பு நிலைக் கல்லூரிகளாகும்.

114—

**பாவூர்-சுரண்டை சாலையிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்**

**வினா எண் 3699—திரு. கு. ரவி அருணன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், தென்காசி தொகுதி, பாவூர்சத்திரம்-சுரண்டை சாலையிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி சாலை விரிவுபடுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சாலையிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இச்சாலையை அண்மைக் காலத்தில் விரிவுபடுத்தும் சாத்தியக் கூறுகள் இல்லை.

115—

**கொற்றலை ஆற்றுப்பாலம் புதியதாக அமைத்தல்**

**வினா எண் 3700—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டம், பெரியபாளையம் அருகே கொற்றலை ஆற்றுப்பாலம் புதிதாக கட்டப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): பெரியபாளையம் அருகே கொற்றலை ஆற்றுப்பாலம் அமைக்கும் ஆரம்பப்பணிகள் செய்யப்பட்டு, பாலம் கட்டும்பணி விரைவில் முடிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**116—**

**புதிய மேம்பாலம் கட்டுதல்**

**வினா எண் 3705—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாணியம்பாடி-செட்டியப்பனூர் அருகே தேசிய நெடுஞ்சாலையில் பழுதடைந்துள்ள பாலத்தை இடித்து புதிய மேம்பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) புதிய பாலம் கட்டுவதற்கான மதிப்பீட்டிற்கு மைய அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டதும் பணி துவங்கப்படும்.

**117—**

**பெரம்பலூர் தொகுதியில் பாலம் அமைத்தல்**

**வினா எண் 3710—டாக்டர் மு. தேவராஜன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பலூர் தொகுதி, நெடுஞ்சாலையில் தழுதாழை-அரும்பாவூர் வெண்கலத்தையும் இணைப்பதற்கு பெரியபாலம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**118—**

**கிராமங்களுக்குப் பேருந்து இயக்குதல்**

**வினா எண் 3753—திரு. ஆர். ஆர். சேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதியில் அனைத்துக் கிராமங்களுக்கும் அரசுப் பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

கிராமத்தின் மக்கள் தொகை சம்பந்தப்பட்ட வழித்தடப்பகுதியில் சாலையின் தன்மை பொது மக்களின் தேவை போன்றவற்றைப் பொருத்து அப்பகுதிகளுக்கு பேருந்து இயக்குவதற்கான நடவடிக்கைகளை அண்ணா போக்குவரத்துக் கழகம் எடுத்து வருகிறது.

**119—**

**தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு இடஒதுக்கீடு**

**வினா எண் 3775—திரு. வி. கே. லட்சுமணன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரியார் மாவட்டத்தில், அரசு போக்குவரத்துக் கழகங்களால் நடத்தப்பட்டுவரும் பொறியியல், மருத்துவக்கல்லூரி மற்றும் தொழில் நுட்பப் பயிலகங்களில் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கென ஒதுக்கப்படும் 40% இடங்களுக்கு மாணவர் சேர்ப்பதில் இட ஒதுக்கீடு முறை அமல்படுத்தப்படுகிறதா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தொழிலாளர்களின் குழந்தைகளுக்காக ஒதுக்கப்பட்ட இடங்களுக்கு அதிக மதிப்பெண்கள் அடிப்படையில் மட்டும்தான் அரசின் அனுமதி பெற்று ஆண்டுதோறும் மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள்.

**120—**

**சாலையை மேம்படுத்துதல்**

**வினா எண் 3783—திரு. பெ. சு. திருவேங்கடம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாண்டிச்சேரி, கிருஷ்ணகிரி சாலையில் 113/8-ல் மேல்பாப்பம்பாடி அருகில் சாலை பழுதுபார்க்கும் பணியும், சிறுபாலம் கட்டும் பணியும், நிறைவு பெறாமல் இருந்து வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): பாண்டிச்சேரி-கிருஷ்ணகிரி சாலையில் 113/6-ல் மேல்பாப்பம்பாடி அருகில் சாலை பழுதுபார்க்கும் பணிக்கும் சிறுபாலம் கட்டும் பணிக்கும் சேர்த்து ரூ. 286 இலட்சத்திற்கு தொழில் நுட்ப அங்கீகாரம் அளிக்கப்பட்டு இப்பணியை விரைவில் முடிக்கும் பொருட்டு 11 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, பணிகளை விரைவில் முடிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



**121—**

**உணவு விடுதிகள் ஏற்படுத்துதல்**

**வினா எண் 3813—திரு. செ. இராமலிங்கம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளுவர், ராஜீவ் காந்தி போக்குவரத்துக் கழகத் தொலைதூரப் பேருந்துகள் நிறுத்தும் இடமும், உணவு விடுதிகளும் சுகாதார மற்றவையாகவும், தரம் குறைந்ததாகவும் இருப்பதனை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அவ்விடங்களில் போக்குவரத்துத் துறையே நல்ல தரமுள்ள உணவு விடுதிகள் ஏற்படுத்த உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): போக்குவரத்து கழகங்களின் பேருந்துகள் அங்கீகரிக்கப்பட்ட தரமான உணவு விடுதிகளில்தான் நிறுத்தப்படுகின்றன.

**122—**

**பச்சங்குப்பம் இருப்புப் பாதைக் கடவில் மேம்பாலம் அமைத்தல்**

**வினா எண் 3907—திரு. வி. கோவிந்தன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வடஆற்காடு அம்பேத்கர் மாவட்டம், பச்சங்குப்பம் இருப்புப் பாதைக் கடவில் மேம்பாலம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

வட ஆற்காடு அம்பேத்கர் மாவட்டத்தில், பச்சங்குப்பம் அருகே உள்ள இருப்புப் பாதைக் கடவில் மேம்பாலம் கட்டுவதற்கான பணியை கட்டி, இயக்கி, பின்னர் ஒப்படைத்தல் (BOT) திட்டத்தின் கீழ் செயல்படுத்த மைய அரசு முடிவு செய்துள்ளது. மைய அரசின்

ஒப்புதல் பெற்றவுடன் இப்பணி மேற்கொள்ளப்படும் என தலைமைப் பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலை) அவர்கள் கூறியுள்ளார்.

**123—**

### தலைக்கவசம் அணிவதைக் கட்டாயமாக்குதல்

**வினா எண் 3923—டாக்டர் இ. எஸ். எஸ். இராமன் மற்றும் திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இருசக்கர வாகனங்களை ஓட்டுபவர்கள் தலைக்கவசம் (Helmet) அணிவதைக் கட்டாயமாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

இருசக்கர வாகனங்களை ஓட்டுபவர்கள் தலைக்கவசம் (Helmet) அணிவதைக் கட்டாயமாக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

**124—**

### நாகப்பட்டினத்திலிருந்து புதிய வழித்தடங்களில் பேருந்துகள் இயக்குதல்

**வினா எண் 4022—திரு. ஜி. நிஜாமுதின்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் நாகப்பட்டினத்திலிருந்து புதிய வழித்தடங்களில் பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

நாகப்பட்டினத்திலிருந்து முக்கியமான இடங்களுக்கு ஏற்கெனவே திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் இயக்கப்படுவதால் அங்கிருந்து புதிய வழித்தடங்களில் பேருந்துகள் இயக்குவதற்கான தேவை தற்போது எழவில்லை.



**125—**

### பதவி உயர்வில் இட ஒதுக்கீடு

**வினா எண் 4055—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு அரசுப் பணியாளர் நியமனத்தில் பின்பற்றப்படும் இட ஒதுக்கீட்டுக் கொள்கையை அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் பதவி உயர்வு வழங்கப்படும்போது பின்பற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் போக்குவரத்து பணியாளர்களுக்கான பொது விதிகளின்படி (Common Service Rules) பணிமூப்பு மற்றும் தகுதிகளின் அடிப்படையில் பதவி உயர்வு வழங்கப்படுகிறது. பதவி உயர்வின்போது இட ஒதுக்கீட்டுக் கொள்கை பின்பற்ற செயற்குறிப்பு எதுவும் அரசிடம் தற்பொழுது இல்லை.

**126—**

### தேன்கனிக்கோட்டையிலிருந்து கிராமங்களுக்குக் கூடுதல் பேருந்துகள்

**வினா எண் 4169—திரு. ச. இராஜரெட்டி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், தளிதொகுதி, தேன்கனிக்கோட்டையிலிருந்து மூலக்குண்டா, சாவரபத்தம், பெட்டமுகுலாளம், நாட்டராம்பாளையம், உரிகம் ஆகிய கிராமங்களுக்கு அதிக எண்ணிக்கையில் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

பேருந்து வசதியற்ற கிராமங்களுக்கு பேருந்து வசதி அளித்த பின்னர் வினாவில் குறிப்பிட்டுள்ள கிராமங்களுக்குக் கூடுதல் பேருந்துகள் இயக்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

[1997 ஏப்ரல் 30

127—

**வேலூரில் சுரங்கப்பாதை அமைத்தல்**

**வினா எண் 4261—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூரில் சி. எம். சி. மருத்துவமனைக்கு அருகில் காட்பாடி சாலையில் சுரங்கப்பாதை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சுரங்கப்பாதை அமைக்க மத்திய அரசு நிதியுதவி கிடைக்காது. மாநில அரசின் நிதி நெருக்கடி காரணமாக அண்மைக்காலங்களில் எடுத்துச்செய்யும் சாத்தியக் கூறுகள் இல்லை.

128—

**மண்டல வளர்ச்சித் திட்டம் உருவாக்குதல்**

**வினா எண் 4278—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

டில்லியில் "தேசிய தலைநகர மண்டல வளர்ச்சித் திட்டம்" (National Capital Regional Plan) உள்ளது போன்று தமிழகத்தின் தலைநகருக்கும் 'மண்டல வளர்ச்சித் திட்டம்' உருவாக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

இல்லை.



1997 ஏப்ரல் 30]

129—

**சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம்**

**வினா எண் 4279—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை பெருநகர் வளர்ச்சிக்காகத் தயாரிக்கப்பட்ட இரண்டாம் "பெரும் திட்டத்திற்கு" (Master Plan) அரசு ஒப்புதல் வழங்கிவிட்டதா?

(ஆ) ஆம் எனில், அதை நடைமுறைப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட இருக்கும் திட்ட நடவடிக்கைகள் பற்றிய விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

130—

**சென்னை எல்லையை விரிவுபடுத்துதல்**

**வினா எண் 4282—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாராளமயமாக்கப்பட்ட தொழிற்கொள்கையினால் உருவாகும் தொழிற்சாலைகள், அதைச் சார்ந்த வளர்ச்சியினால் ஏற்பட்டுள்ள நகரமயமாதல் (Urbanisation) காரணமாக சென்னைப் பெருநகரத்தின் (Chennai Metropolitan Area) எல்லையை விரிவுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் முதலாவது முழுமைத் திட்டத்தில் போதுமான அளவு தொழிற்சாலைப் பகுதிகள் ஒதுக்கீடு

செய்யப்பட்டு உள்ளதால் சென்னைப் பெருநகர் பகுதி எல்லையை தாராளமயமாக்கப்பட்ட தொழிற்கொள்கையை முன்னிட்டு விரிவாக்கம் செய்ய தற்போது உத்தேசமில்லை. இருப்பினும் கடற்கரைப் பகுதியின் சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்க தற்போதைய சென்னைப் பெருநகர் பகுதி எல்லையிலிருந்து மாமல்லபுரம் வரை அமைந்துள்ள பதினொன்று (11) கடற்கரையோர கிராமங்கள் சென்னைப் பெருநகர் பகுதியுடன் இணைக்க வரைவு அறிவிக்கை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

**131—**

**மறைமலைநகர் வளர்ச்சித்திட்டத்தை விரிவுபடுத்துதல்**

**வினா எண் 4283—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னைப் பெருநகர் குழுமத்தால் உருவாக்கப்பட்ட மறைமலை நகரில் தொழிற்சாலைகள் அந்நிய முதலீட்டில் பெருகி வருவதைக் கருத்திற்கொண்டு மறைமலை நகர் புதுநகர் வளர்ச்சித் திட்டத்தை மேலும் விரிவுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

ஏறத்தாழ 2060 ஏக்கர் நிலப்பரப்பில் மறைமலைநகர் என்ற ஒரு துணை நகரத்தை சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் உருவாக்கி அபிவிருத்தி செய்து வருகிறது. இதில் 1115 ஏக்கர் நிலத்தில் குடியிருப்பு மற்றும் தொழிற்சாலைப் பகுதியாக வளர்ச்சி செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள நிலங்கள் நீதிமன்றத் தடைகளினால் பாதிக்கப்பட்டுள்ளது. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், நீதிமன்ற நிலுவையில் உள்ள மீதமுள்ள நிலங்களைப் பெறவும், அவற்றை தொழிற்சாலை, மற்றும் குடியிருப்புப் பகுதியாகவும் ஆக்கவும், உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. மேலும் தொழிற்பேட்டை ஒன்று அமைப்பதற்காக நிலங்களைக் கையகப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது.



**132—**

**பாலத்தை அகலப்படுத்தும் திட்டம்**

**வினா எண் 4318—திரு. அ. வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேத்தியாத்தோப்பு வெள்ளாறுராஜன் பாலத்தை அகலப்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) சேத்தியாத்தோப்பு வெள்ளாறுராஜன் பாலத்தை அகலப்படுத்தும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழ இடமில்லை.

**133—**

**சென்னை வெளிவட்டச் சாலை அமைத்தல்**

**வினா எண் 4377—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை வெளிவட்டச் சாலை அமைக்கும் பணி எந்த நிலையில் உள்ளது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

வெளிவட்டச் சாலைத் திட்டம் அரசினால் அரசாணை நிலை எண்:235, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள்:2-4-1996-ல் ஒப்புதல் அளிக்கப்பட்டது. மேலும் இத்திட்டத்தின் நில எடுப்புப் பணிகளுக்காக அரசாணை நிலை எண்:303, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள்:2-7-1996-ல் நில

எடுப்புப் பணியாளர்களை அமர்த்த அனுமதித்து ஆணை வெளியிடப்பட்டது. அதன்படி நான்கு சிறப்பு வட்டாட்சியாளர்களும் அமைச்சுப் பணியாளர்களும் பணியில் சேர்ந்து பணியை ஆரம்பித்து விட்டார்கள்.

உத்தேசிக்கப்பட்டுள்ள வெளிவட்டச் சாலையின் ஓரங்களில் குறியீட்டுக் கம்புகளை நடும் வேலை அரசு நிறுவனமான பல்லவன் போக்குவரத்து ஆலோசனைக் கழகத்திடம் கொடுக்கப்பட்டுள்ளது. குறியீட்டுக் கம்பு நடும் வேலை நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது.

**134—**

**பேருந்துக் கட்டண முரண்பாடுகளைப் போக்குதல்**

**வினா எண் 4405—திரு. ரா. சேதுநாதன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகச் சொகுசுப் பேருந்துகளில் திருச்சி-சென்னை பயணக் கட்டணம் ரூ.65/-, திருச்சி - திண்டிவனம் பயணக் கட்டணம் ரூ.33/-, திண்டிவனம் - சென்னை பயணக் கட்டணம் ரூபாய் 22/- என்று உள்ள கட்டண முரண்பாடுகளைப் போக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தற்பொழுது வசூலிக்கப்பட்டுவரும் கட்டணத்தில் எந்தவித முரண்பாடும் இல்லை.

**135—**

**புதிய பாலம் அமைத்தல்**

**வினா எண் 4408—திரு. கோ. மோகனதாசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி நாகப்பட்டிணம் சாலையில் சூரக்காடு என்ற இடத்தில் கூப்பிடுவான் ஆற்றின் குறுக்கே புதிய பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?





விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்ட பாலப் பணி அரசு அனுமதி வழங்கப்பட்டுள்ள எந்தத் திட்டத்திலும் இடம் பெறவில்லை. பகுதி-2 திட்டப் பணிகளுக்கு குறைந்த அளவே நிதி ஒதுக்கீடு செய்வதால் இப்பால கட்டுமான பணியினை அண்மைக்காலங்களில் திரும்ப கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.

**136—**

**சேந்தங்குடியில் இரயில்வே மேம்பாலம் அமைத்தல்**

**வினா எண் 4409—திரு. கோ. மோகனதாசன் மற்றும் திரு. மு. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம், சீர்காழி-சென்னை நெடுஞ்சாலையில் சேந்தங்குடி என்ற ஊரில் இரயில்வே மேம்பாலம் அமைக்க அரசு முன் வருமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

இந்த சந்திக்கடவில் இரயில் வாகன ஊர்தி அலகு ஒரு லட்சத்திற்கும் குறைவாக உள்ளதால் இப்பணியை அண்மைக் காலத்தில் மேற்கொள்ளும் வாய்ப்புகள் இல்லை.

**137—**

**சென்னை-திருவண்ணாமலைக்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து**

**வினா எண் 4500—திரு. கொ. வி. நன்னன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையிலிருந்து திருவண்ணாமலைக்கு திருவள்ளுவர் போக்குவரத்துக்கழகப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல், எத்தனை பேருந்துகள் இயக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சென்னை-திருவண்ணாமலை 200 கி.மீ-க்கு குறைவான தூரமாக இருப்பதால் திருவள்ளுவர் போக்குவரத்து கழகப் பேருந்து இயக்க இயலாது. 250 கி.மீ-க்கு மேல் உள்ள தடத்தில் மட்டுமே திருவள்ளுவர் போகக்குவரத்துக் கழகம் பேருந்து இயக்க இயலும். இந்த வழித்தடத்தில் தந்தைப் பெரியார் போக்குவரத்துக் கழகம் போதுமான அளவு பேருந்துகளை இயக்கி வருகிறது.

**138—**

**தென்காசியில் மேம்பாலம் கட்டுதல்**

**வினா எண் 4580—திரு. கு. ரவி அருணன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், தென்காசி-மதுரை சாலையில், தென்காசி வட்ட அலுவலகம் அருகில் இருப்புப்பாதைக் கடவில் ஒரு மேம்பாலம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**139—**

**நெடுஞ்சாலையைச் செப்பனிடுதல்**

**வினா எண் 4605—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) எடப்பாடியிலிருந்து ஜலகண்டபுரம் நெடுஞ்சாலை (பெரிய மாவட்ட சாலை) பழுதுபட்டு இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைச் செப்பனிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

எடப்பாடி-ஜலகண்டபுரம் சாலை தற்போது நல்ல நிலையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

**140—**

**விபத்துக்களில் பாதிக்கப்பட்டோருக்கு உதவித்தொகை**

**வினா எண் 4931—திரு. ரா. சேதுநாதன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் வாகன விபத்து வழக்குகளில் பாதிக்கப்பட்டோருக்கு நீதிமன்ற உத்தரவினால் வழங்கப்படும் நஷ்ட ஈட்டுத் தொகையை மூன்று ஆண்டுகளுக்கு கட்டாய வைப்பு நிதியாக தேசிய வங்கியில் வைக்கப்படுகின்ற முறையை மாற்றி பாதிக்கப்பட்டோர்கள் உடனடியாக நஷ்ட ஈடு பெற அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தற்போது நடைமுறையில் உள்ள விதிகளின்படி விபத்துக்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி மன்றத்தால் அளிக்கப்படும் நஷ்ட ஈடு எந்தவித நிபந்தனையும் இல்லாமல் நேரடியாக வழங்க இயலாது.

**141—**

**மதுரைக்குப் பேருந்துகள் இயக்குதல்**

**வினா எண் 4991—திரு. கு. ரவி அருணன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம்-செங்கோட்டையிலிருந்து ஆயக்குடி, சுரண்டை, சங்கரன்கோவில், சிவகாசி வழியாக மதுரைக்கு இயங்கி வந்த பேருந்துகளையும், ஆலங்குளத்திலிருந்து சுரண்டை, சங்கரன்கோவில், ராஜபாளையம் வழியாக மதுரைக்குச் சென்று கொண்டிருந்த பாண்டியன் போக்குவரத்துக் கழகப் பேருந்தையும் மீண்டும் இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது இயக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): செங்கோட்டையிலிருந்து மதுரைக்கும் மற்றும் ஆலங்குளத்திலிருந்து மதுரைக்கும் இயக்கப்பட்ட பேருந்துகளில் பயணிகள் விகிதாச்சாரம் குறைவாக இருந்ததால் பேருந்து நிறுத்தப்பட்டது. தற்போது மதுரை-சுரண்டை (வழி) இராஜபாளையம், சங்கரன்கோவில் தடத்தில் இரண்டு பேருந்துகள் 14-12-1996 முதல் இயக்கப்பட்டு வருகின்றன.

**142—**

## பாபநாசம்-சென்னைக்குப் பேருந்து இயக்குதல்

**வினா எண் 4993—திரு. கு. ரவி அருணன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம் - பாபநாசத்திலிருந்து ஆலங்குளம் சுரண்டை - சங்கரன்கோவில் வழியாக சென்னைக்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் இயக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தற்போது செங்கோட்டையிலிருந்து சுரண்டை, சங்கரன்கோவில் வழியாக சென்னைக்கு இயக்கப்படும் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் பேருந்து வசதியை அப்பகுதி வாழ் மக்களுக்குப் பயன்படுத்திக் கொள்ள வாய்ப்பு உள்ளது. பாபநாசத்திலிருந்து ஆலங்குளம், சுரண்டை, சங்கரன்கோவில் வழியாக சென்னைக்குப் புதியதாக திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து இயக்கும் சாத்தியக்கூறு இல்லை.





**143—**

## அப்புக்கல்-சென்னை பேருந்து இயக்குதல்

**வினா எண் 5014—திரு. சி. கோபு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வடஆற்காடு-அம்பேத்கர் மாவட்டம், அணைக்கட்டு தொகுதி அப்புக்கல்லிலிருந்து சென்னைக்கு அரசுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

அப்புக்கல் கிராமத்திலிருந்து 3 கி.மீ. தூரத்திலேயே உள்ள அணைக்கட்டு வழியாக, ஒடுக்கத்தூரிலிருந்து சென்னைக்கு 4 பேருந்துகள் மூலம் 8 நடைகள் தினசரி இயக்கப்பட்டு வருவதால், அப்புக்கல் கிராமத்திலிருந்து சென்னைக்கு நேரடியாகப் பேருந்துகள் இயக்குவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

**144—**

## போக்குவரத்து நெரிசலை ஒழுங்குபடுத்துதல்

**வினா எண் 5016—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போக்குவரத்து நெரிசலை ஒழுங்குபடுத்த புதிய தொழில் நுட்ப அணுகுமுறை ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): போக்குவரத்து நெரிசலை ஒழுங்குபடுத்த புதிய தொழில் நுட்ப அணுகுமுறைப்படி சாலையின் முக்கியமான இடங்களில் தானியங்கி மின் விளக்குகளும், சாலையின் மத்தியில் இரும்புக் கம்பிகளும், இரவு நேரங்களில் போக்குவரத்து வசதிக்காக உயரக் கம்ப மின் விளக்குகளும் பொருத்தப்பட்டு வருகின்றன.

**145—**

**தனியார் மினி வேன்கள் இயக்குதல்**

**வினா எண் 5018—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை சென்ட்ரல் இரயில் நிலையத்திலிருந்து நகரின் பல்வேறு பகுதிகளுக்குச் செல்ல தனியார் மினிவேன்கள் (Mini Vans) இயக்க அரசு அனுமதியளிக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) சென்னை மாநகரை உள்ளடக்கிய சென்னைப் பெருநகர்ப் பகுதியில் பயணிகளின் தேவைக்கேற்ப அரசுப் போக்குவரத்துக் கழகங்களினால் பயணப் பேருந்துகளை இயக்க சென்னைப் பெருநகர் பகுதித் திட்டத்திற்கு (Metropolitan Area Scheme) ஏற்பளிக்கப்பட்டுள்ளதால் சென்னை சென்ட்ரல் இரயில் நிலையத்திலிருந்து நகரின் பல்வேறு பகுதிகளுக்குச் செல்ல தனியார் மினிவேன்களை இயக்க அரசு அனுமதி அளிக்க இயலாது.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.



**146—**

**கோயம்புத்தூரில் மின்சார இரயில் போக்குவரத்து**

**வினா எண் 5043—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னையைப் போல் கோயம்புத்தூரிலும் சுற்றுப்புறங்களை இணைக்க இரயில் போக்குவரத்து உருவாக்க மாநில அரசு பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொண்டு மத்திய அரசை வலியுறுத்துமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தற்சமயம் கோயம்புத்தூரில் மின்சார இரயில் போக்குவரத்து (Electrical Motor Unit) அறிமுகப்படுத்தும் திட்டம் ஏதுமில்லை. இருப்பினும் இனிவருங்காலங்களில் இத்திட்டம் பற்றி குறித்துக் கொள்ளப்படும்.

**147—**

**இருப்புப்பாதைக் கடவில் மேம்பாலம் கட்டுதல்**

**வினா எண் 5124—திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி தொகுதி, அதியமான்கோட்டை அருகே தேசிய நெடுஞ்சாலை-7 இன் குறுக்கேயுள்ள இரயில்வே லெவல் கிராசிங் இருப்புப் பாதைக் கடவில் மேம்பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

மேம்பாலம் கட்டும் செயற்குறிப்பு இல்லை.

[1997 ஏப்ரல் 30

148—

## சேத்தியாத்தோப்பு-சென்னை பேருந்து இயக்குதல்

**வினா எண் 5174—திரு. அ. வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு-வள்ளலார் மாவட்டம், சேத்தியாத் தோப்பிலிருந்து சென்னைக்கு புதிய விரைவுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சேத்தியாத்தோப்பு வழியாக சென்னைக்கு போதிய பேருந்துகள் இயக்கப்படுகின்றன. எனவே புதிய விரைவு பேருந்துகள் இயக்குவதற்கான அவசியம் எழவில்லை.

149—

## தருமபுரி நகரில் அறிவிப்புக் குறி விளக்கு அமைத்தல்

**வினா எண் 5191—திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி நகரின் முக்கிய சாலைகளில் போக்குவரத்து நெரிசலைத் தடுக்க அறிவிப்புக் குறி (Signal) விளக்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தருமபுரி நகரில் தற்போது உள்ள போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க, சேலம் பெங்களூர் நெடுஞ்சாலையில் தருமபுரி நான்கு ரோடு சந்திப்பில், காவலர்களால் இயக்கப்படும் போக்குவரத்து சமிக்ஞை விளக்குகள் (Signal) இயங்கி வருகின்றன.



1997 ஏப்ரல் 30 ]

150—

## பெருந்துறை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அங்கீகாரம் வழங்குதல்

**வினா எண் 5367—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறை மருத்துவக்கல்லூரி மருத்துவமனையை இந்திய மருத்துவக் கழகம் அங்கீகரிக்க மறுப்பதன் காரணம் என்ன?

(ஆ) அங்கீகாரம் பெற அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) இந்திய மருத்துவக் கழகம் சில குறைபாடுகளை சுட்டிக்காட்டியதால் அங்கீகாரம் பெறுவதில் காலதாமதம் ஆகிறது.

(ஆ) பெருந்துறை மருத்துவக் கல்லூரியின் குறைபாடுகளை நிவர்த்தி செய்து அறிக்கை டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகத்தின்மூலம் அனுப்பி வைக்கப்பட்டு அங்கீகாரம் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

151—

## பேருந்துகளை தைக்கால் வரை இயக்குதல்

**வினா எண் 5495—திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஒன்றியம், கிள்ளை பேரூராட்சிக்குட்பட்ட கிள்ளை கிராமம் வரை இயங்கும் பேருந்துகளை தைக்கால் வரை நீட்டிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தைக்கால் கிராமம், பேருந்து வசதிபெற்றுள்ள சிதம்பரம் - கிள்ளை சாலையிலிருந்து ஒரு கி. மீக்கும் குறைவான

தூரத்திலேயே அமைந்திருப்பதாலும், தைக்கால் கிராமத்திற்குச் செல்லும் சாலை குறுகலாக பேருந்து இயக்கத்திற்கு ஏற்றதாக இல்லையென்பதாலும் தைக்கால் கிராமத்திற்கு தற்போது பேருந்து இயக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**152—**

## போக்குவரத்து தொழிலாளர்களிடம் நிதி பிடித்தம்

**வினா எண் 5517—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாலைப் போக்குவரத்துத் துறையின் மூலம் நடத்தப்படும் பொறியியல் மற்றும் மருத்துவக் கல்லூரி நிர்வாகச் செலவிற்காக போக்குவரத்துத் தொழிலாளர்களிடம் நிதி பிடித்தம் செய்யப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சாலைப் போக்குவரத்து நிறுவனம் நடத்தும் பொறியியல் மற்றும் மருத்துவக் கல்லூரிகளின் நிர்வாகச் செலவிற்காக, பொறியியல் கல்லூரிக்காக ரூபாய் 740/-ம், மருத்துவக் கல்லூரிக்காக ரூ.1760/- மொத்தமாக இத்திட்டத்தில் சேர விரும்பும் ஒவ்வொரு போக்குவரத்துக் கழக தொழிலாளர்களிடமிருந்து பிடித்தம் செய்யப்படுகின்றது.

**153—**

## செவிலியர்களின் பணி நேரம்

**வினா எண் 5520—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறை சாலைப் போக்குவரத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் போதுமான அளவில் செவிலியர்கள் உள்ளனரா?

(ஆ) அவர்களின் பணி நேரம் எவ்வாறு நிர்ணயிக்கப்பட்டுள்ளது?



விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்

(ஆ) மூன்று வகையான ஷிப்ட்களில் அவர்களின் பணிநேரம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**154—**

## பெருந்துறை மருத்துவக் கல்லூரிக்கு அங்கீகாரம்

**வினா எண் 5521—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறை, சாலைப் போக்குவரத்து மருத்துவக் கல்லூரி அங்கீகாரம் பெறும் பொருட்டு இந்திய மருத்துவக் குழுமத்தால் ஆய்வுக்காக பார்வையிடப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அங்கீகாரம் எப்போது கிடைக்கும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) விரைவில் அங்கீகாரம் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**155—**

## மருத்துவமனை ஊழியர்களுக்குக் குடியிருப்பு வசதி

**வினா எண் 5522—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறை சாலைப் போக்குவரத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனை ஊழியர்களுக்கு குடியிருப்பு வசதியில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அவர்களுக்கு குடியிருப்பில்லங்கள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): பெருந்துறை சாலைப் போக்குவரத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் அடிப்படை ஊழியர்கள் போன்றவர்கட்கு ஏற்கெனவே உள்ள 104 குடியிருப்புகளுடன் 36 புதிய குடியிருப்புகள் கட்டி அளிக்கப்பட்டுள்ளது. மேலும் பெருந்துறையில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் மூலம் கட்டவிருக்கும் குடியிருப்பில் பெருந்துறை மருத்துவக் கல்லூரி ஊழியர்களுக்கு வீடுகள் ஒதுக்கித் தருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**156—**

**திருப்பூர்-கோவைக்கு புதிய வழித்தடத்தில் பேருந்துகள்**

**வினா எண் 5531—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர்-கோவைக்கு வஞ்சிபாளையம், சாமந்தங்கோட்டை தேக்கனூர் வழியாகப் பேருந்து விடும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): ஏற்கெனவே இவ்வழித்தடத்தில் போதிய பேருந்து வசதியுள்ளதால் கூடுதல் பேருந்து இயக்கும் திட்டம் ஏதும் தற்சமயம் பரிசிலனையில் இல்லை.



**157—**

**மானாமதுரை தொகுதியில் மேம்பாலம் அமைத்தல்**

**வினா எண் 5557—திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்பாசேத்தி-படமாத்தூர் சர்க்கரை ஆலை இரண்டிற்கும் இடையில் வைகையில் மேம்பாலம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது வேலை தொடங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): மானாமதுரை தொகுதி திருப்பாசேத்தி-படமாத்தூர் சர்க்கரை ஆலை இரண்டிற்கும் இடையில் வைகையில் மேம்பாலம் அமைக்கும் திட்டம் தற்போது ஏதும் இல்லை.

**158—**

**சாலைகளை அகலப்படுத்தும் திட்டம்**

**வினா எண் 5651—திரு. எஸ். என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பவானி-கவுந்தப்பாடி மற்றும் பவானி-அந்தியூர் ஆகிய நெடுஞ்சாலைத் துறை சாலைகளை அகலப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

பவானி-கவுந்தப்பாடி சாலை அமைக்க ரூ. 25.00 இலட்சமும், மற்றும் பவானி-அந்தியூர் சாலை அமைக்க ரூ. 40.00 இலட்சமும் ஆக மொத்தம் ரூ. 65.00 இலட்சம் செலவில் இவ்விருசாலைகளும் மேம்பாடு செய்ய வேண்டிய இத்திட்டத்தை, அண்மைக் காலங்களில் மேற்கொள்ளும் சாத்தியக்கூறுகள் இல்லை.

[1997 ஏப்ரல் 30

159—

**சிதம்பரத்திலிருந்து பிற மாநிலங்களுக்குப் பேருந்து இயக்குதல்**

**வினா எண் 5682—திரு. அ. வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் நகரில் இருந்து, திருப்பதிக்கும், பெங்களூருக்கும் விரைவுப் பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): ஆந்திரம் மற்றும் கர்நாடக மாநிலங்களுடன் ஒப்பந்தம் ஏற்படும்போது, இவ்வழித் தடங்களில் விரைவுப் பேருந்துகள் இயக்குவது பற்றிப் பரிசீலித்து முடிவு எடுக்கப்படும்.

160—

**சிதம்பரம் நகரில் பணிமனை அமைத்தல்**

**வினா எண் 5683—திரு. அ. வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் நகரில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சிதம்பரத்தில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைக்க சாத்தியக் கூறு இல்லை.



1997 ஏப்ரல் 30]

161—

**ஆட்டோவில் எலக்ட்ரானிக் மீட்டர் பொருத்துதல்**

**வினா எண் 5709—திரு. பெ. சு. திருவேங்கடம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆட்டோ பயணியர்கள் சங்கம் தமிழக அரசுக்கு ஆட்டோவில் எலக்ட்ரானிக் மீட்டர் பொருத்த வேண்டுமென கோரிக்கை வைத்துள்ளனவா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

162—

**மது அருந்தி வாகனங்கள் ஓட்டுபவர்களுடைய உரிமம் ரத்து**

**வினா எண் 5852—டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மது அருந்திய நிலையில் வாகனங்களை ஓட்டுபவர்களுடைய ஓட்டுநர் உரிமம் அந்த இடத்திலேயே ரத்து செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

மது அருந்திய நிலையில் வாகனங்களை ஓட்டுபவர்களுடைய ஓட்டுநர் உரிமத்தை குற்றம் கண்டுபிடிக்கப்பட்ட இடத்திலேயே ரத்து செய்ய தற்பொழுது சட்டத்தில் இடமில்லை. அப்படிச் செய்வதாயின் மத்திய அரசின் மோட்டார் வாகனச் சட்டம், 1988-க்கு சட்டத் திருத்தம் கொண்டு வருதல் வேண்டும்.

[1997 ஏப்ரல் 30

**163—**

**கும்மிடிப்பூண்டியில் பேருந்து நிலையம் அமைத்தல்**

**வினா எண் 6213—திரு. கே. வேணு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எம்.ஜி.ஆர். மாவட்டம், கும்மிடிப்பூண்டியில் பேருந்து நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) செங்கல்பட்டு மண்டல நகர் ஊரமைப்பு துணை இயக்குநரால் அங்கீகரிக்கப்பட்ட வடிவமைப்பின்படி கும்மிடிப்பூண்டியில் வணிக வளாகத்துடன் இணைந்த பேருந்து நிலையத்தை ஏற்படுத்துவதற்கான திட்ட அறிக்கை 1997-98-ம் நிதியாண்டில் ஐ.டி.எஸ்.எம்.டி. அல்லது ஐ.யு.டி.பி. திட்டத்தில் செயல்படுத்த காஞ்சிபுரம் மண்டல பேரூராட்சிகள் உதவி இயக்குநர் மூலம் கருத்துரு பெற்று நகர் ஊரமைப்பு இயக்குநருக்கு அனுப்பி, மத்திய அரசு/மாநில நகர் ஊரமைப்பு திட்டக்குழு கூட்டத்தில் நிர்வாக அனுமதியைப் பெற்று கும்மிடிப்பூண்டி பேரூராட்சியில் பேருந்து நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**164—**

**பெண்ணாகரத்தில் நீதிமன்றங்கள் துவங்குதல்**

**வினா எண் 2314—திரு. ஜி. கே. மணி:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம்; பெண்ணாகரம் வட்டம், பெண்ணாகரத்தில் குற்றவியல், உரிமையியல் நீதிமன்றங்கள் துவங்க இடம் கொடுக்கப்பட்டும் இதுவரையில் துவங்கப்படாமலிருப்பது அரசுக்குத் தெரியுமா?



1997 ஏப்ரல் 30 ]

(ஆ) ஆம் எனில், நடப்பு ஆண்டில் துவங்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) நடப்பு ஆண்டில் துவக்கப்பட வாய்ப்பில்லை.

**165—**

**தமிழ்நாடு உயர்நீதிமன்றம் என மாற்றுதல்**

**வினா எண் 2398—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன், திரு. துரை சந்திரசேகரன், மற்றும் திரு. அ. லெ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பல மாநிலங்களில் உள்ள உயர்நீதிமன்றங்கள் அந்தந்த மாநிலங்களின் பெயர்களிலேயே அழைக்கப்படுவதால், சென்னை உயர்நீதிமன்றத்தின் பெயரும் தமிழ்நாடு உயர்நீதிமன்றம் என மாற்றி அழைக்கப்பட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

சென்னை உயர்நீதிமன்றத்தின் பெயரினைத் "தமிழ்நாடு உயர்நீதி மன்றம்" என மாற்றி அழைக்கப்படும் செயற்குறிப்பு எதுவும் உயர்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இல்லை என உயர்நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

**166—**

**தாம்பரத்தில் நீதிமன்றங்களுக்குக் கட்டிடம் கட்டுதல்**

**வினா எண் 3879—திரு. மீ. அ. வைத்தியலிங்கம்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரத்தில் உரிமையியல், குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களுக்கு அரசுக் கட்டிடம் கட்டும் திட்டம் அரசிடமுள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழும் வாய்ப்பில்லை.

**167—**

**மயிலாடுதுறையில் நீதிமன்றம் அமைத்தல்**

**வினா எண் 4925—திரு. குத்தாலம், பி. கல்யாணம்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகை காயிதே மில்லத் மாவட்டத்தில் அமைய இருக்கும் மாவட்ட இணை நீதிமன்றம்/தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம் மற்றும் குடியுரிமை பாதுகாப்பு நடுவர் நீதிமன்றம் (P.C.R. Court) ஆகியவற்றை மயிலாடுதுறையில் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): இல்லை.

**168—**

**பவானிசாகர் அணை நீர் மாசுபடுவதைத் தடுத்தல்**

**வினா எண் 1839—திரு. வெ. அ. ஆண்டமுத்து, திரு. பா. அருண்குமார், மற்றும் திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சௌத் இந்தியன் ரேயான் ஆலையிலிருந்து (விஸ்கோஸ்) வெளிவரும் கழிவு நீரினால் பவானிசாகர் அணையின் நீர் மாசுபடுவது அரசுக்குத் தெரியுமா?



(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. என். கே. கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) கோவை மாவட்டம், சிறுமுகை கிராமத்தில் அமைந்திருக்கும் திருவாளர்கள் எஸ்.ஐ.வி. இண்டஸ்ட்ரீஸ் நிறுவனம் வெளியேற்றும் சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரால் பவானி ஆறு மாசுபடுவது குறித்து தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தால் தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்பட்டும், தொடர்ந்து கண்காணித்தும் வரப்படுகிறது.

**169—**

**நெசவாளர் சங்கப் பணியாளர்களின் ஊதியத்தை மாற்றுதல்**

**வினா எண் 3481—திரு. லி. அய்யலுசாமி:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சங்கப் பணியாளர்களின் ஊதியத்தை மாற்றம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. என். கே. கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) இப்பொருள் தொடர்பான கருத்துரு கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநரிடமிருந்து தற்போது பெறப்பட்டுள்ளது.

(ஆ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

[1997 ஏப்ரல் 30

170—

**நூற்பாலை ஏற்படுத்துதல்**

**வினா எண் 3482—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் ஒரு நூற்பு ஆலை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. என். கே. கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம் எடப்பாடி தொகுதியில் ஒரு நூற்பு ஆலை ஏற்படுத்தும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

171—

**பருத்தி மற்றும் பட்டு உற்பத்தி**

**வினா எண் 6039—திரு. வீ. தமிழ்மணி:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பருத்தி துணி உற்பத்தி செய்யும் கூட்டுறவு நெசவாளர் சங்கங்களில் பருத்தியுடன் பட்டும் உற்பத்தி செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், காஞ்சிபுரம் சரகத்தில் எத்தனை சங்கங்கள் பருத்தி மற்றும் பட்டு உற்பத்தி செய்ய அனுமதி கேட்டுள்ளன?

(இ) எத்தனை சங்கங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. என். கே. கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) பருத்தி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் பருத்தி ரகத்துடன் பட்டு ரகங்களையும் உற்பத்தி செய்வதற்கு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது.



1997 ஏப்ரல் 30]

(ஆ) காஞ்சிபுரம் சரகத்தில் தற்பொழுது எட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அனுமதி கோரி விண்ணப்பித்துள்ளன.

(இ) மேலே கூறியுள்ள எட்டு சங்கங்களுக்கு அனுமதி வழங்குவது பற்றி ஆய்வில் உள்ளது.

172—

**கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம் திறத்தல்**

**வினா எண் 6192—திரு. என். பாண்டுரங்கன்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம், பெரணமல்லூர்-பேரூரில் புதியதாக கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம் திறக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. என். கே. கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

173—

**இலவச வீடு கட்டும் திட்டம்**

**வினா எண் 1326—திரு. எல். மூக்கையா:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இலவசமாக வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது கட்டிக் கொடுக்கப்படும்?

[1997 ஏப்ரல் 30

விடை—

**மாண்புமிகு திரு. எம். ஆர். கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): ஆண்டு வருமானம் ரூ. 12,000-க்குட்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பினருக்கு இத்துறை மூலமாக இலவச வீட்டுமனை நிலம் கையகப்படுத்தி வழங்கப்படுகிறது. அவ்வாறு வீட்டுமனை வழங்கப்பட்டவர்களுக்கு "இந்திரா ஆவாஸ் யோஜனா" திட்டத்தின் கீழ் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இலவச தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுப்பது ஊரக வளர்ச்சித் துறை மூலமாகச் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

**174—**

**கன்னியாகுமரி மாவட்ட மறவர் சமுதாயத்தை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்தல்**

**வினா எண் 4493—திரு. டி. மணி:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்ட 'மறவர்' சமுதாயத்தை மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கக்கோரி அரசுக்கு மனு ஏதேனும் வரப்பெற்றுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. எம். ஆர். கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): ஆம். ஒரு சாதியை பிற்படுத்தப்பட்டோர்/ மிகப்பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கக்கோரும் கோரிக்கைகளை பரிசிலனை செய்து அரசுக்குப் பரிந்துரை செய்வதற்காக தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையம் என்ற நிரந்தர ஆணையம் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. எனவே, குமரி மாவட்ட



1997 ஏப்ரல் 30]

மறவர் சமுதாயத்தை மிகப்பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கக்கோரும் மனு தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையத்திற்கு தக்க நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டுள்ளது. அவ்வாணையத்தின் பரிந்துரை கிடைக்கப்பெற்றதும் அதன் மீது அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

**175—**

**சலவைக் கருவிகள் வழங்குதல்**

**வினா எண் 4771—திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சலவைக் கருவிகள் வழங்கியதில் சலவையாளர் பயன் பெறுவதில் உள்ள இடையூறு குறித்து அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளதா?

(ஆ) விண்ணப்பங்களுக்கு ஏற்ப கூடுதல் சலவைக் கருவிகள் வழங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம். ஆர். கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) பல்வேறு சலவையாளர் சங்கங்கள் மாவட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் சலவைப் பெட்டிகளின் எண்ணிக்கை போதுமானதாக இல்லையென்பதாகவும், சலவையாளர்கள் சலவைப் பெட்டி கோரி விண்ணப்பித்து பல ஆண்டு காலம் காத்திருக்க வேண்டியிருப்பதாகவும் தெரிவித்துள்ளதால், மாவட்டங்களில் நிலுவையிலுள்ள மனுக்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதைக் கருத்திற் கொண்டு ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வரும் 4000 பித்தளை சலவைப் பெட்டிகளுடன் கூடுதலாக 2000 பித்தளை சலவைப் பெட்டிகள் வாங்கி வழங்கிட தேவையான நிதி ஒதுக்கீடு செய்து நடப்பாண்டில் அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

[1997 ஏப்ரல் 30

176—

### உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்குதல்

**வினா எண் 4790—திரு. பி. என். வல்லரசு:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதியில், விக்கிரமங்கலம் கள்ளர் உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. எம். ஆர். கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): இல்லை.

177—

### வேலைவாய்ப்புகளில் இடஒதுக்கீடு

**வினா எண் 6095—திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள சிறுபான்மை முஸ்லீம்களுக்கு கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் தகுந்த இடஒதுக்கீடு செய்ய அரசு ஆணை பிறப்பிக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எம். ஆர். கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) தமிழகத்தில் உள்ள முஸ்லீம் சமுதாயத்தின் பெரும்பான்மை பிரிவுகள் பிற்படுத்தப்பட்ட வகுப்புகளாக அங்கீகரிக்கப்பட்டுள்ளதால் அப்பிரிவுகள் கல்வி மற்றும் வேலை வாய்ப்புகளில் பிற்படுத்தப்பட்ட



1997 ஏப்ரல் 30]

வகுப்பினருக்கான 30 சதவிகித இடஒதுக்கீட்டின் கீழ் பயன் பெற்று வருகின்றனர். இது தவிர முஸ்லீம் சமுதாயத்திற்கு கல்வி, வேலைவாய்ப்புகளில் தனியாக இடஒதுக்கீடு செய்வது குறித்து அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

178—

### கனிவகை மரங்களை நடுதல்

**வினா எண் 1994—திரு. பே. வே. ஸ்ரீ. வெங்கடேசன்:** மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சமூக நலக்காடுகள் வளர்க்கும் திட்டத்தின் கீழ், கனிவகை மரங்களை நடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி, வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்:**

சமூக நலக்காடுகள் வளர்க்கும் திட்டத்தின் கீழ் தனியாக கனிவகை மரங்கள் நடும் செயற்குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை.

179—

### கால்நடை துணை நிலையம் அமைத்தல்

**வினா எண் 1997—திரு. அ. வெங்கடாசலம்:** மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குடி தொகுதி, திருவரங்குளத்தில் குளமங்கலம் வடக்குப் பகுதியில் கால்நடை துணை நிலையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இந்த ஆண்டு துவக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

[1997 ஏப்ரல் 30

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி, வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**180—**

**செம்மறி ஆட்டை மேய்ப்பதற்கான வசூலைக் குறைத்தல்**

**வினா எண் 4713—திரு. ரா. சேதுநாதன்:** மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு வனத் துறை காடுகளில் ஒரு செம்மறி ஆட்டை மேய்ப்பதற்காக ரூ. 2 வசூலிக்கப்படுவதைக் குறைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி, வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு வனத் துறை காடுகளில் ஒரு செம்மறி ஆட்டை மேய்ப்பதற்காக ரூ. 2 வசூலிக்கப்படுவதைக் குறைக்கும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**181—**

**'டாப்கோ' கழகத்தை லாபத்தில் இயக்குதல்**

**வினா எண் 4782—திரு. மு. க. ஸ்டாலின்:** மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகம் "டாப்கோ" நட்டத்தில் இயங்கி வருவது அரசுக்குத் தெரியுமா?



1997 ஏப்ரல் 30]

(ஆ) ஆம் எனில், இக்கழகத்தை இலாபத்தில் இயக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி, வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) நலிவுற்ற நிலையில் இருக்கும் தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகத்திற்குப் புத்துயிர் கொடுக்க அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் சத்துணவுத் திட்டத்தின்கீழ் முட்டைகள் விநியோகிக்கும் பணியை பற்றிய கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. மாநிலம் முழுவதும் டாப்கோவிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும், மேலும் இப்பணி டாப்கோவிடம் ஒப்படைக்கப்பட்டால்தான் நிரந்தரமாக இக்கழகத்தை இலாபத்தில் இயக்க முடியும்.

**182—**

**கால்நடை மருத்துவமனை அமைத்தல்**

**வினா எண் 6188—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஏ. டி. பன்னீர் செல்வம் மாவட்டம், மன்னார்குடி நகரின் மேற்குப் பகுதியான காளாவைக் கரையில் கால்நடை மருத்துவமனை அமைத்து தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி, வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்:**

சாத்தியக்கூறு இல்லை.

**183—**

**கால்நடை மருத்துவ பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு**

**வினா எண் 6426—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் கால்நடை மருத்துவ பட்டம் பெற்ற (பி.வி.எஸ்ஸி., எம்.வி.எஸ்ஸி) வேலை இல்லா பட்டதாரிகளுக்குக் கடந்த 1992-க்குப் பிறகு வேலை வாய்ப்பு அளிக்கப்படவில்லை என்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், கால்நடை மருத்துவப் பட்டதாரிகளுக்கு இந்த நிதி ஆண்டில் வேலை வாய்ப்பு அளிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி, வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்:**

(அ) 1991-92-ம் ஆண்டுக்கு தமிழ்நாடு அரசுப்பணி தேர்வாணையத்தால் தேர்வு செய்யப்பட்டு, 1993 ஆம் ஆண்டு மே மாதம் கால்நடை பராமரிப்புத் துறைக்கு 151 கால்நடை மருத்துவப் பட்டதாரிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அவர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டது. அதற்கு பிறகு கால்நடை பராமரிப்புத் துறைக்கு ஒப்பளிக்கப்பட்ட அனைத்து திட்டங்களுக்கான கால்நடை உதவி மருத்துவர் பதவிகள் புதியனவாகத் தோற்றுவிக்க ஆணைகள் வழங்கப்படவில்லை. திட்டங்களுக்கான பதவிகள் பதவி மாற்றம் மூலமே (Redeployment of the existing sanction) நிரப்ப ஆணை வழங்கப்படுவதால், வேலையில்லா கால்நடை மருத்துவப் பட்டதாரிகளுக்குக் கால்நடை உதவி மருத்துவர் பதவி வழங்க இயலவில்லை.

(ஆ) பணியிலிருந்து ஓய்வு பெறுவதாலும்/பதவி உயர்வு பெறுவதாலும் ஏற்படும் காலியிடங்களுக்கு 1997-98 (ஜூலை 1997 முதல் ஜூன் 1998 முடிய)-க்கு 222 கால்நடை உதவி மருத்துவர்கள் பணி இடத்தை நிரப்புவதற்கு உயர்மட்டக் குழுவால் அங்கீகரிக்கப்பட்டபின், 222 கால்நடை உதவி மருத்துவர்களை



தேர்வுசெய்வதற்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தைக் கேட்டுக்கொள்வதற்கான நடவடிக்கை தொடரப்பட்டுள்ளது.

**184—**

**தன்னிறைவு வீட்டுமனைத் திட்டம்**

**வினா எண் 4841—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை வேளச்சேரி பகுதியில் வீட்டுவசதி வாரியத்தால் சென்னை பெருநகர் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ்உலக வங்கி உதவியுடன் தன்னிறைவு வீட்டு மனைத் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், உலக வங்கி விதித்துள்ள நிபந்தனைகளுக்கேற்ப வசதிகள் செய்யப்பட்டுள்ளனவா?

விடை—

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) ஆம்.

**185—**

**காலதாமதமின்றி சாதிச் சான்றிதழ் வழங்குதல்**

**வினா எண் 1036—திரு. வீ. தமிழ்மணி மற்றும் திரு. மீ. அ. வைத்தியலிங்கம்:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காட்டுநாயக்கன் மற்றும் பழங்குடி இனத்தவர் (இருளர்)களுக்கு சாதிச் சான்றிதழ் வழங்க காலதாமதமாவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

விடை-

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

ஆம்.

**186—**

**தலித் மக்கள் என்ற சொல்லைப் பயன்படுத்துதல்**

**வினா எண் 1724—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 'ஆதி திராவிடர்' என்ற சொல்லிற்குப் பதிலாகத் 'தலித் மக்கள்' என்ற சொல்லைப் பயன்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நடவடிக்கை மேற்கொள்ளப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): இல்லை.

**187—**

**வீட்டுமனைக்காக நிலம் கையகப்படுத்துதல்**

**வினா எண் 1854—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதி திராவிடர்களின் வீட்டுமனைக்காக திருப்பூர் முதலிபாளையம் க. சி.414/1ஏ 18 காலையில் 5.15 ஏக்கர் நிலம் கையகப்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**188—**

**சாதிச் சான்றிதழ் விரைவில் வழங்குதல்**

**வினா எண் 1952—திரு. பெ. சு. திருவேங்கடம்:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம், போளூர், செங்கம் வட்டங்களில் ஜவ்வாது மலைப்பகுதிகளில் வாழும் மலைவாழ் வகுப்பினருக்குச் சாதிச் சான்றிதழ் கொடுப்பதில் மிகவும் காலதாமதம் ஏற்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், விரைவில் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்

(ஆ) தற்சமயம் 1-6-1996-க்குப் பிறகு எல்லா கோப்புகளிலும் ஒழுங்காகவும் விரைவாகவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு மேற்படி மலைவாழ் மக்களுக்குச் சாதிச் சான்றுகள் உடனுக்குடன் வழங்கப்பட்டு வருகின்றன.

**189—**

**பதவி உயர்விலும் இடஒதுக்கீடு**

**வினா எண் 2111—திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1997 ஏப்ரல் 30

(அ) தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு கல்வியில், வேலை வாய்ப்பில் இட ஒதுக்கீடு உள்ளது போல், அரசுத் துறை நிறுவனங்களில், பதவி உயர்விலும் இட ஒதுக்கீடு அளிக்கப்படுமா?

(ஆ) வணிகவரித் துறை, வருவாய்த் துறை மற்றும் பதிவுத் துறை ஆகிய துறைகளில் இட ஒதுக்கீடு உள்ளது போல் அனைத்து அரசு நிறுவனங்களிலும் தரப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): அரசின் ஆய்வில் உள்ளது.

**190—**

**மலை வேளாளர் இனத்தவரை பழங்குடியினர் பட்டியலில் சேர்த்தல்**

**வினா எண் 3424—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், குத்தியாலத்தூர் பகுதி மலை வேளாளர் இனத்தவர் தங்களை பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று அரசுக்கு விண்ணப்பித்துள்ளனரா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்து வரும் நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை

(ஆ) கேள்வி எழ வாய்ப்பில்லை.



1997 ஏப்ரல் 30]

**191—**

**தேனீ வளர்ப்புத் தொழிலுக்கு நிதியுதவி**

**வினா எண் 3855—திரு. கே. மணிவர்மா:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தண்டராம்பட்டு தொகுதி, மலைவாழ் மக்களின் மேம்பாட்டிற்காக தேனீ வளர்ப்புத் தொழிலுக்காக நிதியுதவி அளிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

இல்லை.

**192—**

**இலவச விட்டுமனைப்பட்டா வழங்குதல்**

**வினா எண் 4083—திரு. அ. வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரங்கிப்பேட்டை ஒன்றியம், வசப்புத்தூரில் வசிக்கும் மக்களுக்கு இலவச வீட்டுமனைப்பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தென்னாற்காடு வள்ளலார் மாவட்டம், பரங்கிப்பேட்டை ஒன்றியம், சிதம்பரம் வட்டம், வசப்புத்தூர் கிராமத்தில் உள்ள வீடற்ற

[1997 ஏப்ரல் 30

ஆதிதிராவிடர்களுக்கு இலவச வீட்டுமனைப்பட்டா வழங்க ரி.ச.66/8 பி-ல் 0.41.5 ஹெக்டேர் நிலமும் ரி.ச.66/9பி-ல் 0.40.0 ஹெக்டேர் ஆக மொத்தம் 0.81.5 ஹெக்டேர் நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இந்த நிலங்களுக்கான நில எடுப்பு முன்மொழிவுகளை சிதம்பரம் தனிவட்டாட்சியர் (ஆதிந) அவர்களிடமிருந்து மாவட்ட ஆட்சித்தலைவர் பெற்று, தகுதியின் அடிப்படையில் பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு வீட்டுமனைகள் வழங்கப்படும்.

**193—**

### ஆதிதிராவிடர்களுக்கு வீடுகள் கட்டுதல்

**வினா எண் 4455—திரு. பி. வெங்கடசாமி:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(a) Whether there is any proposal with the Government to acquire land for construction of houses for Adi Dravidars at Muduguruki in Hosur Taluk, and

(b) If so, when it will be constructed.

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

*(அ)* ஹோசூர் வட்டம், முடுகுருக்கியில் வாழும் ஆதி திராவிடர்களுக்கு வீடுகட்டுவதற்காக நிலம் கையகப்படுத்த செயற்குறிப்பு ஏதும் நிலுவையில் இல்லை.

*(ஆ)* இவ்வினாவிற்கு இடமில்லை.

**194—**

### வடுகர் இனமக்களைப் பழங்குடியினர் பட்டியலில் சேர்த்தல்

**வினா எண் 5142—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1997 ஏப்ரல் 30]

*(அ)* நீலகிரி மாவட்ட மலைப்பகுதியிலுள்ள வடுகர் இன மக்கள், பழங்குடியினர் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டுமென்று மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்தியுள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை-

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)*: இல்லை.

**195—**

### ஓட்டல் கட்டும் திட்டம்

**வினா எண் 13—திரு. பெ. சு. திருவேங்கடம்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தில் சுற்றுலாத் துறை மூலமாக ஓட்டல் கட்டும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. எஸ். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

*(அ)* திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தின் தலைநகரான திருவண்ணாமலையில் சுற்றுலாத் துறை மூலமாக ஓட்டல் கட்டும் திட்டம் மத்திய மாநில அரசினரின் நிதியுதவியுடன் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

*(ஆ)* திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தில் சுற்றுலாத் துறையின் மூலமாக ஓட்டல் கட்டுவதற்கு மத்திய அரசு பங்குத் தொகையாக ரூ. 39.10 இலட்சம் அனுமதித்துள்ளது. மேலும் மாநில அரசு பங்குத் தொகையாக ரூ. 5.00 இலட்சம் அனுமதித்துள்ளது.

196—

**கரூரில் தமிழ்நாடு ஓட்டல் கட்டுதல்**

**வினா எண் 987—திரு. மு. க. ஸ்டாலின்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கரூர் தீரன் சின்னமலை மாவட்டம், கரூரில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் தமிழ்நாடு ஓட்டல் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறதா?

விடை—

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

கரூரில் தமிழ்நாடு உணவு விடுதி கட்ட 1996-97 மத்திய அரசு நிதி உதவித் திட்டத்தில் நிதி கோரப்பட்டுள்ளது. இன்னும் மத்திய அரசு இதுகுறித்து முடிவு ஏதும் மேற்கொள்ளப்படவில்லை. எனினும் இதுகுறித்து தொடர்ந்து வலியுறுத்தப்படும்.

197—

**பூங்கா அமைக்கும் திட்டம்**

**வினா எண் 4146—திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி தொகுதி, தொப்பையாறு அணைக்கட்டில் பூங்கா அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

தருமபுரி தொகுதி, தொப்பையாறு அணைக்கட்டில் பூங்கா அமைக்கும் திட்டம் ஏதும் சுற்றுலாத் துறையின் பரிசீலனையில் இல்லை.

198—

**தங்கும் விடுதி அமைத்தல்**

**வினா எண் 4573—திரு. கே. மணிவர்மா:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) திருவண்ணாமலை சுற்றுலா வளர்ச்சித் துறையின் மூலம் உணவகத்தோடு தங்கும் விடுதி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): திருவண்ணாமலையில் உணவகத்துடன் கூடிய 10 அறைகள் கொண்ட சுற்றுலா விடுதி (யாத்ரி நிவாஸ்) கட்டுவதற்கு ரூ. 44.10 இலட்சம் மதிப்பீட்டில், மத்திய பொதுப்பணித் துறையினால் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. இத்திட்டத்திற்கு 1994-95-ஆம் ஆண்டு மத்திய அரசு நிதி உதவித் திட்டத்தின்கீழ் மைய அரசு ரூ. 39.10 இலட்சம் நிதி ஒப்புதல் அளித்துள்ளது. மேலும், இத் திட்டத்திற்கு, தமிழக அரசின் பங்காக ரூ. 5.00 இலட்சம் வழங்கப்படும், நில மாற்றம் பெற்று பணிகள் விரைவில் மேற்கொள்ளப்படும்.

199—

**பிச்சாவரத்தை அழகுபடுத்துதல்**

**வினா எண் 5189—திரு. அ. வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பிச்சாவரம் சுற்றுலா மையத்தை அழகுபடுத்தும் பணியின் தற்போதைய நிலை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

பிச்சாவரம் சுற்றுலா மையத்தை அழகுபடுத்துவது குறித்து இத்துறையில் செயற்குறிப்பு தற்போது ஏதுமில்லை.

200—

**சாத்தனூரை சுற்றுலாத் தலமாக்குதல்**

**வினா எண் 5292—திரு. அ. வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி மாவட்டம், சாத்தனூர் தேசியப் பூங்காவிலுள்ள வரலாற்றுச் சிறப்பு மிக்க மரப்படிமங்களைப் புதுப்பித்து சாத்தனூரை சுற்றுலாத் தலமாக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் சாத்தனூர் தேசிய பூங்காவில் உள்ள வரலாற்றுச் சிறப்பு மிக்க மரப்படிமங்களைப் புதுப்பிக்கும் திட்டம் ஏதும் தற்சமயம் இத்துறையின் பரிசீலனையில் இல்லை.

## பதினான்காவது பட்டியல்

1—

**சென்னை மேம்பாட்டுக்குப் புதிய திட்டம்**

**வினா எண் 37—திரு. பெ. சு. திருவேங்கடம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகராட்சி மேம்பாட்டுக்கு புதிய திட்டம் ஏதேனும் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.



(ஆ) சென்னை மாநகராட்சி, நடப்பு நிதியாண்டில் (1996-97) ரூ. 50 கோடி அளவிற்கு, சென்னை நகரின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்குத் திட்டப்பணிகளைச் செயல்படுத்தும்.

2—

**திருப்பூர் நகருக்கு அடிப்படை வசதிகள் செய்ய நடவடிக்கை**

**வினா எண் 133—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் நகரின் அடிப்படைத் தேவைகளான சாக்கடை வசதி, குடிநீர் வசதி மற்றும் சாலை வசதிகளைச் செய்து தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருப்பூர் நகரில் பாதாள சாக்கடை அமைக்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் ஆய்வுப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம் ரூ. 20.34 கோடி செலவில் செயல்முறைப்படுத்தப்பட்டு முடிவுற்றது. சாலை வசதிகளைப் பொறுத்தவரை 1996-97-ம் நிதியாண்டிற்கு ரூ. 90 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ரூ. 81 லட்சம் மதிப்பீட்டில் 11.84 கி.மீ. சாலைப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், நகராட்சி நகர்ப்புற அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் 20 கி.மீ. நீளச்சாலை அபிவிருத்திப் பணி ரூ. 171.51 லட்சம் மதிப்பீட்டில் நடைபெறுகிறது. இப்பணிகள் இவ்வாண்டு இறுதிக்குள் முடிவடையும்.

3—

**பெருந்துறை தொகுதிக்கு குடிநீர் வசதி**

**வினா எண் 138—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், பெருந்துறை தொகுதிக்கு குடிதண்ணீர் வசதி செய்து தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): பெருந்துறை சட்டமன்றத் தொகுதியின் மொத்த குடியிருப்புகள் 800. இதில் 446 குடியிருப்புகள் முழுமையான குடிநீர் வசதி பெற்றுள்ளன. எஞ்சியுள்ள 354 குடியிருப்புகள் பகுதியளவு குடிநீர் வசதி பெற்றுள்ளன. குடிநீர் வசதி இல்லாத கிராமங்களே இல்லை.

**4—**

## துப்புரவுத் தொழிலாளர்கள் நியமனம்

**வினா எண் 141—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஊராட்சி, பேரூராட்சி, நகராட்சிகளில் பணிபுரிய துப்புரவுத் தொழிலாளர்களை மக்கள் தொகைக்கு ஏற்ப நியமனம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஊராட்சிகளில் பணிபுரிய துப்புரவுத் தொழிலாளர்களை நியமனம் செய்வது அந்தந்த ஊராட்சிகளின் நிர்வாக வரம்புக்குட்பட்டதாகும். பேரூராட்சிகளில் மக்கள் தொகை அடிப்படையில் துப்புரவுப் பணியாளர்கள் நியமனம் செய்யப்படுவதில்லை. நகராட்சிகளில் பொது சுகாதாரப் பிரிவில் மக்கள் தொகைக்கு ஏற்ப, துப்புரவுத் தொழிலாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.



**5—**

## ஜம்பு நதி குடிநீர்த் திட்டம்

வினா எண் 153—**திரு. கு. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தென்காசி வட்டம், பாவூர்சத்திரம் பகுதியில் குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக ஜம்பு நதி குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்ற அரசு துரித நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

திட்ட வேலைகள் நடைபெற்று வருகின்றன.

**6—**

## தென்காசி நகராட்சியிலுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள்

வினா எண் 155—**திரு. கு. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி நகராட்சி, சிந்தாமணி மற்றும் கீழப்பாவூர் ஒன்றியம், பனையடிப்பட்டியில் கட்டப்பட்டுள்ள மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள் செயல்படாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அவை செயல்படுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

(அ) ஆம்.

(ஆ) தென்காசி நகராட்சியில், ஒரு ஆழ்குழாய் கிணற்றிலிருந்து தண்ணீரை சிறிய நீர்த் தேக்கத் தொட்டிக்கு ஏற்றி, அத்தொட்டியிலிருந்து

குடிநீர் விநியோகிக்கப்பட்டு வந்தது. தற்பொழுது, இந்த ஆழ் கிணறு தூர்ந்து, செயல்படாமல் உள்ளது. தென்காசி நகராட்சியால் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு பராமரிக்கப்பட்டு வருவதால், இத்திட்டத்தைச் சீரமைத்துச் செயல்படுத்தும் நடவடிக்கை இந் நகராட்சியால் மேற்கொள்ளப்பட்டு உள்ளது.

**7—**

**திருப்பத்தூர் தொகுதியில் குடிநீர் வழங்கல்**

வினா எண். 217—**திரு. கோ. சண்முகம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் தொகுதியில் உள்ள குடிநீர் பிரச்சனையைத் தீர்க்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

ஆம்.

**8—**

**காவிரி ஆற்றிலிருந்து தருமபுரி மாவட்டத்திற்குக் குடிநீர் வழங்கும் திட்டம்**

வினா எண் 225—**திரு. பி. வெங்கடசாமி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவிரி ஆற்றிலிருந்து (ஒகேனக்கல்) தர்மபுரி மாவட்டத்திற்குக் குடிநீர் வழங்க திட்டம் ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ): காவிரி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு "ஒகேனக்கல்" குடிநீர் திட்டம் என்ற ஒரு ஒருங்கிணைந்த மாபெரும் திட்டம், 2 நகராட்சிகள், 14 பேரூராட்சிகள் மற்றும் 13 ஒன்றியங்களிலுள்ள 4,152 குடியிருப்புகள் பயன் பெறும் வகையில் ரூ. 572.00 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு, வெளிநாட்டு நிதி உதவி கோரும் வகையில் (O.E.C.E.) மத்திய அரசிற்கு அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்டம் தற்போது மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது.

**9—**

**இரவியதர்மபுரத்தில் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி மூலம் குடிநீர் வழங்கல்**

வினா எண் 226—**திரு. கு. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கோட்டை தாலுக்கா, புதூர் பேரூராட்சி, இரவியதர்மபுரத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

(அ) ஆம். நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(ஆ) நீராதாரம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணி முடிவுற்றவுடன் திட்ட மதிப்பீடு தயார் செய்து தொழில் நுட்பக் குழு, வாரியக் குழு ஆகியவற்றின் ஒப்புதல் பெறப்பட்டு, நிதி ஒதுக்கீடு கிடைக்கப் பெற்றவுடன் திட்டம் செயலாக்கப்படும்.

[1997 ஏப்ரல் 30

10—

**பிரம்மதேசம் புதூர்—ஒச்சேரி மாமண்டூர் கிராமங்களை இணைக்க தரைப்பாலம்**

வினா எண் 272—**திரு. வ. அன்பழகன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வட ஆற்காடு-அம்பேத்கர் மாவட்டம், பிரம்மதேசம் புதூர்-ஒச்சேரி மாமண்டூர் கிராமங்களை இணைக்க பாலாற்றின் குறுக்கே தரைப்பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இப்பணியினை நிறைவேற்றத் தேவையான நிதி ஆதாரம் ஊராட்சி ஒன்றியத்திடம் இல்லை.

11—

**பெருந்துறை—கருமாண்டி, செல்லி பாளையம் ஆகியவற்றை இணைத்து நகராட்சியாக்குதல்**

வினா எண் 351—**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெருந்துறை-கருமாண்டி செல்லிபாளையம் ஆகிய இரண்டு பேரூர்களையும் இணைத்து நகராட்சி ஆக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இல்லை.



1997 ஏப்ரல் 30 ].

12—

**புதிய பாலாறு—வேலூர் குடிநீர்த் திட்டம்**

வினா எண் 368—**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் நகரில் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க புதிய பாலாறு-வேலூர் குடிநீர் திட்டம் எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வேலூர் நகராட்சிக்கு பாலாற்றை நீர் ஆதாரமாகக் கொண்ட வேலூர் நகராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டம் ரூ. 953.31 இலட்சங்களுக்குத் தயாரிக்கப்பட்டுள்ள செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

13—

**சத்துவாச்சாரி வீட்டுவசதி வாரிய குடியிருப்புப் பகுதிகளுக்கு பாலாறு குடிநீர்**

வினா எண் 370—**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் வட்டம், சத்துவாச்சாரி பேரூராட்சி, பகுதி-1, பகுதி-3 மற்றும் பகுதி-4 வீட்டு வசதி வாரியக் குடியிருப்புப் பகுதிகளுக்கு பாலாறு குடிநீர் எப்போது வழங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

மேற்காணும் திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

[1997 ஏப்ரல் 30

**14—**

**கோப்பகாட்டுக்கும் கோவேரிபட்டிக்கும் இடையே குறுக்குப் பாலம் அமைத்தல்**

வினா எண் 405—**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், கோப்பகாட்டுக்கும் கோவேரிபட்டிக்கும் இடையே குறுக்குப் பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இச்சாலை, ஊராட்சி சாலையாகவும் இல்லாமல், ஊராட்சி ஒன்றிய சாலையாகவும் இல்லாமல், சில இடங்களில் புறம்போக்கிலும், சில இடங்களில் பட்டா நிலங்களிலும் செல்கிறது. நிலத்தைக் கையகப்படுத்தித் தர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. நிலம் கையகப் படுத்தப்பட்டவுடன் பாலம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**15—**

**அணைக்கட்டு தொகுதியில் சாலை வசதிகள் செய்தல்**

வினா எண் 412—**திரு. சி. கோபு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு-அம்பேத்கர் மாவட்டம், அணைக்கட்டு தொகுதி, பாலாம்பட்டு ஜார்ந்தான் கொல்லை மற்றும் பீஞ்சமந்தை ஊராட்சிகளுக்கு சாலை வசதிகள் செய்துதர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?



1997 ஏப்ரல் 30 ]

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிட்ட சாலைகளின் மிகப்பெரும் பகுதி வனச் சாலையாக உள்ளது. இச்சாலைகள் அமைக்க ரூபாய் ஒரு கோடியே, எண்பத்தைந்து இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. நிதி நிலைமையினை கருத்தில் கொண்டு இந்த சாலைப் பணியினை வரும் ஆண்டுகளில் செய்து கொடுக்க பரிசீலிக்கப்படும்.

**16—**

**எருமைப்பட்டி கிராம ஆதிதிராவிடர்களுக்குக் காலனி கட்டுதல்**

வினா எண் 424—**திரு. இ. கணேசன் :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, எருமைப்பட்டி கிராமத்திலுள்ள ஆதிதிராவிட மக்களுக்கு காலனி கட்டும் நீண்ட நாள் கோரிக்கை நிலுவையில் உள்ளது அரசுக்கு தெரியுமா?

(ஆ) அப்படி நிலுவையிலிருப்பின், அதை விரைவுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) விரைவுபடுத்தப்பட்டுள்ளது.

## 17—

### சிதம்பரம் நகராட்சிக்கு குப்பைகள் அள்ள லாரிகள் வழங்கல்

வினா எண் 435—**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிதம்பரம் நகராட்சிக்கு குப்பைகள் அள்ள மேலும் ஒரு லாரி வழங்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சிதம்பரம் நகராட்சிக்கு குப்பைகள் அள்ள மேலும் ஒரு லாரி வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

## 18—

### ஓமலூர் அருகிலுள்ள கிராமங்களுக்கு மேட்டூர் குடிதண்ணீர் திட்டம் மூலம் தண்ணீர் வழங்கல்

வினா எண் 436—**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் பேரூராட்சியில் தற்போது செயல்பட்டு வரும் மேட்டூர் குடிதண்ணீர் திட்டம் மூலம் வழங்கப்படும் நீர் அருகில் உள்ள கிராமங்களுக்கும் கொடுக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்ட சேலம் குடிநீர் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ஓமலூர் ஒன்றியத்தில் உள்ள 49 கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றது. எஞ்சியுள்ள கிராமங்களுக்கு குடிநீர் வழங்குவதற்கான சாத்தியக் கூறுகள் பற்றி ஆய்வு செய்யப்படும்.



## 19—

### பட்டுக்கோட்டை ஒன்றிய கிராமங்களில் உள்ள குடிநீர் மேல்நிலைத் தொட்டிகள்

வினா எண் 438—**திரு. ப. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை தொகுதி, பட்டுக்கோட்டை ஒன்றியம், தம்பிக்கோட்டை, மேலக்காடு கிராமத்தில் இயங்காமல் உள்ள குடிநீர் மேல்நிலைத் தொட்டியை இயங்க வைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், தம்பிக்கோட்டை, மேலக்காடு குடியிருப்பில் 60,000 லிட்டர் கொள்ளளவு உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி உள்ளது. இயங்காமல் உள்ள இந்நீர்த்தேக்கத் தொட்டியின் குறைகளை சீர்செய்து பயனுக்குக் கொண்டுவர, பழுதுபட்ட விசைப்பம்பு புனரமைப்புத் திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

## 20—

### பட்டுக்கோட்டையில் ஆழ்குழாய் கிணறுகள் அமைக்கும் திட்டம்

வினா எண் 447—**திரு. ப. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டையில் ஆழ்குழாய்க்கிணறுகள் அமைக்கும் திட்டமிருந்தும், அது செயல்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டத்தை உடனே செயல்படுத்த அரசு துரித நடவடிக்கை எடுக்குமா?

[1997 ஏப்ரல் 30

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): பட்டுக்கோட்டை நகராட்சியின் மக்கள் தொகை 57,909 (1991 மக்கள் தொகை கணக்கின்படி) ஆகும். இந்நகராட்சிக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டம் 1977-ஆம் ஆண்டு முதல் ஜி.ஏ. வாய்க்கால் மற்றும் ராஜாமடம் வாய்க்காலை நீர் ஆதாரமாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றது. இதன் மூலம் பட்டுக்கோட்டை நகராட்சிக்கு ஜூலை முதல் ஜனவரி வரை காவிரியில் நீர் வரத்து உள்ள காலங்களில் குடிநீர் வழங்கப்படுகின்றது. ஜனவரி முதல் ஜூன் வரை உள்ள காலத்துக்குத் தேவையான குடிநீர் ஏழு ஆழ்துளைக் கிணறுகள் மூலம் வழங்கப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் மூலம் நாள் ஒன்றுக்கு 18.00 இலட்சம் லிட்டர் குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகின்றது. இதனால், நாள் ஒன்றுக்கு, நபர் ஒன்றுக்கு 31 லிட்டர் வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் மூலம் வழங்கப்படும் குடிநீரின் அளவு போதுமானதாக இல்லாத காரணத்தால், பட்டுக்கோட்டை நகராட்சிக்கு மேலும் ஒரு குடிநீர் அபிவிருத்தி திட்டம், 9 ஆழ்துளைக் கிணறுகளை நீர் ஆதாரமாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டது.

மேற்படி அபிவிருத்தித் திட்டத்திற்கு ரூ. 4.25 கோடிக்கு அரசின் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டது. இத்திட்டத்திற்கு நடப்பு ஆண்டில் ரூ. 50 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு உள்ளது. இந்த அபிவிருத்தித் திட்டம் நடப்பு ஆண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. மூன்று ஆண்டுகளில் திட்டம் நிறைவேற்றப்பட்டு மக்கள் பயனுக்குக் கொண்டுவரப்படும்.

**21—**

**வைகுந்தம் கிராம மேல்நிலை தண்ணீர் தொட்டியிலிருந்து குடிநீர் வழங்கல்**

வினா எண் 454—**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1997 ஏப்ரல் 30]

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், வைகுந்தம் கிராமம் அக்கிரகாரத்தில் உள்ள மேல்நிலை தண்ணீர் தொட்டியிலிருந்து பட்டகாரன்வளவு, கல்குத்திவளவு, கொரட்டிவளவு, கனகச்சிபாளையம் ஆகிய ஊர்களுக்கு குடிநீர் கொடுக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், வைகுந்தம் கிராமம், அக்கிரகாரத்தில் உள்ள மேல்நிலை தண்ணீர் தொட்டியிலிருந்து பட்டகாரன் வளவு, கல்குத்திவளவு, கொரட்டிவளவு, கனகச்சிபாளையம் ஆகிய ஊர்களுக்கு குடிநீர் வழங்கும் செயற்குறிப்பு தற்போதைக்கு ஏதுமில்லை. இக்குடியிருப்புகளின் மக்கள் தொகை நீர்த் தொட்டி கட்டும் அளவுக்கு இல்லை.

**22—**

**ராயணம்பட்டி—பாச்சாலியூர் சாலை ஏரி வாய்க்கால் தண்ணீரால் போக்குவரத்து பாதிப்பு**

வினா எண் 474—**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம் வெள்ளாளபுரம் ஊராட்சி, ராயணம்பட்டி—பாச்சாலியூர் சாலை கி.மீ. 3-ல் ஏரி வாய்க்கால் தண்ணீர் குறுக்கே போவதால் போக்குவரத்து பாதிக்கப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அங்கு சிறு பாலம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): கொங்கணாபுரம் ஒன்றியம், வெள்ளாளபுரம் ஊராட்சியில் ராயணம்பட்டி-பாச்சாலியூர் சாலையில் இறவை

வாய்க்காலின் குறுக்கே பாலம் கட்ட ரூ. 5 இலட்சம் செலவில் பரவலாக்கப்பட்ட திட்டத்தின் கீழ் எடுத்து செய்வது குறித்து 1996-97ஆம் ஆண்டில் ஆராயப்படும்.

**23—**

### தஞ்சாவூர் ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்தல்

வினா எண் 555—**திரு. துரை சந்திரசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரிக்க செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): இல்லை.

**24—**

### நகராட்சி கட்டண கழிவறைகள், சைக்கிள் நிறுத்துமிடம் ஆகியவற்றிற்கு ஒப்பந்தப்புள்ளி

வினா எண் 588—**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நகராட்சி கட்டண கழிவறைகள், சைக்கிள் நிறுத்துமிடம் ஆகியவற்றிற்கு மீண்டும் ஒப்பந்தப்புள்ளி கோரும் முறை அமலாக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

நகராட்சி கட்டண கழிப்பறைகள், சைக்கிள் நிறுத்துமிடம் ஆகியவற்றுக்கு மீண்டும் ஒப்பந்தப்புள்ளி கோரும் முறை குறித்து





அரசாணை (பத்தாண்டு) எண் 296, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 20-7-1996-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதன்படி, ஏலத்தில் கிடைக்கப்பெறும் தொகை முந்தைய வருமானத்தைவிடக் குறைவாக இருந்தால், துறை மூலமாகவே தொடர்ந்து நடத்தவும் அரசு ஆணையிட்டுள்ளது.

**25—**

### உள்ளாட்சித் தேர்தலுக்காக அனைவர் பெபரும் இடம் பெறச் செய்தல்

வினா எண் 762—**திரு. வி.கே. லட்சுமணன் :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வாக்களிக்கும் தகுதியுள்ள அனைவர் பெயரும் உள்ளாட்சித் தேர்தல்களுக்கான வாக்காளர் பட்டியலில் தவறாது இடம் பெறும் வண்ணம், வாக்காளர் சேர்க்கும் பணியில் சீர்திருத்தம் மேற்கொள்ள அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சட்டமன்ற வாக்காளர் பட்டியல்களை, அவ்வப்போது மேற்கொள்ளும் திருத்தங்களுடன், மாறுதல் செய்யாமல் உள்ளாட்சித் தேர்தல்களுக்கான வாக்காளர் பட்டியல்களாக அச்சிட்டு வெளியிடப்படுவதால், புதிய சீர்திருத்தங்கள் எதுவும் அரசு எடுக்கவில்லை.

**26—**

### ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் சுடுகாட்டுக் கொட்டகை கட்டுதல்

வினா எண் 822—**திரு. செங்கை சிவம் :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதிதிராவிட மக்களுக்கு ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ், மதுரை மாவட்டத்தில் சுடுகாட்டுக் கொட்டகை கட்டுவதில் மட்டும் ஊழல் நடந்துள்ளதா அல்லது மற்ற மாவட்டங்களிலும் ஊழல் நடைபெற்று உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு அதன் மீது எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): மதுரை மாவட்டத்தில் ஆதிதிராவிட மக்களுக்கு ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் சுடுகாட்டிற்கு கொட்டகை கட்டுவதில் ஊழல் நடந்துள்ளது குறித்து, உச்ச நீதிமன்றத்தின் ஆணைக்கிணங்க, மத்திய புலனாய்வுத் துறையின் விசாரணையில் உள்ளது. மத்திய புலனாய்வுத் துறை (C.B.I.) மதுரை மாவட்டத்தைத் தவிர மற்ற மாவட்டங்களில் நடந்த முறைகேடுகள் பற்றிய விசாரணையையும் செய்து வருகிறது. உச்ச நீதிமன்றத்தில் இவ்விசாரணைக்கான அறிக்கை தாக்கல் செய்யப்படும்.

**27—**

### மானாமதுரை தேர்வுநிலை பேரூராட்சியை நகராட்சியாக மாற்றுதல்

வினா எண் 837—**திரு. கே. தங்கமணி** : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தேர்வுநிலை பேரூராட்சியை நகராட்சியாக மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?





விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

**28—**

### கோயம்புத்தூர் புலியகுளத்தில் கட்டப்பட்டுள்ள மேல்நிலைத் தண்ணீர் தொட்டி

வினா எண் 856— **திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் புலியகுளத்தில் குடிநீர் வடிகால் வாரியத்தால் கட்டப்பட்டுள்ள மேல்நிலைத் தண்ணீர்த் தொட்டியிலிருந்து எப்பொழுது தண்ணீர் விநியோகிக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கோவை மாநகராட்சிக்குட்பட்ட புலியகுளம் குடிநீர்த் தொட்டிக்கு, உலக வங்கித் திட்டத்தின் கீழ் பில்லூர் அணையிலிருந்து வழங்கப்படும் குடிநீருக்காக குழாய் இணைப்புகள் அனைத்தும் முடிக்கப்பட்டு 31-7-1996 அன்று முதல் புலியகுளம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் நீர் ஏற்றி பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

**29—**

### நகராட்சிகளை மாநகராட்சிகளாக மாற்றும் திட்டம்

வினா எண் 966—**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1997 ஏப்ரல் 30

தமிழ்நாட்டில் உள்ள எந்தெந்த நகராட்சிகளை மாநகராட்சிகளாக மாற்ற அரசு திட்டம் வைத்துள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தற்சமயம் ஏதுமில்லை.

**30—**

**சாலையோரங்களில் கூடுதல் மரக்கன்றுகளை நடுவதற்கான நடவடிக்கை**

வினா எண் 969—**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எழில்மிகு சென்னை 2000 திட்டத்தின் கீழ் சாலையோரங்களில் கூடுதலாக மரக்கன்றுகளை நட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

எழில்மிகு சென்னை 2000 திட்டத்தின் கீழ், 1996-97-ம் ஆண்டில் சாலையோரங்களில் 50,000 மரக்கன்றுகளை நடவேண்டும் என மத்திய அரசு, தமிழ்நாடு அரசு மற்றும் வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை குறியீடு நிர்ணயித்து, அதன்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, சாலை ஓரங்களில் மரக்கன்றுகள் நடப்பட்டு வருகின்றன.

**31—**

**சென்னை மாநகரில் மழைநீர்க் கால்வாய்களை தூர் எடுத்தல்**

வினா எண் 973—**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1997 ஏப்ரல் 30]

(அ) சென்னை மாநகரில் தூர்ந்து கிடக்கும் மழை நீர்க் கால்வாய்களைத் தூர் எடுக்கவும், மழைநீர்க் கால்வாய்கள் இல்லாத இடங்களில் விரைவில் கட்டவும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சென்னை மாநகரிலுள்ள மழை நீர் வடிகால்களில் தூர் எடுக்க கால அட்டவணை தயாரிக்கப்பட்டு, அதன்படி மண்டல அலுவலர்கள் கட்டுப்பாட்டில் தூர் வாரும் பணி தீவிரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. சுமார் 40 கி.மீ. நீளத்திற்கு மழைநீர் வடிகால்கள் கட்ட திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. திட்டப்பணி இந்த நிதி ஆண்டுக்குள் முடிக்கப்பெறும்.

**32—**

**சிந்தாமணியூரிலிருந்து குழாய் அமைத்து குடிதண்ணீர் வழங்கல்**

வினா எண் 980—**திரு. ஆர். ஆர். சேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர்-ஆத்தூர் குடிதண்ணீர் திட்டத்தில் காடையாம்பட்டி ஒன்றியம், சிந்தாமணியூரிலிருந்து குழாய் அமைத்து ஒன்றியத்திலுள்ள 18 ஊராட்சிகளுக்கு குடிதண்ணீர் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): உலக வங்கி திட்டத்தின் கீழ் செயலாக்கப்பட்ட மேட்டூர்-ஆத்தூர் குடிநீர் திட்டத்தின் மூலம் காடையாம்பட்டி

ஒன்றியம், சிந்தாமணியூரிலிருந்து குடிநீர் குழாய் அமைக்க தொழில்நுட்ப ரீதியாக சாத்தியக் கூறுகள் இல்லை.

33—

**சென்னை புறநகர் பேருந்து நிலையத்தைச் சீரமைத்தல்**

வினா எண் 1044—**திரு. வ. அன்பழகன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் உள்ள புறநகர் பேருந்து நிலையத்தைச் சீரமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சென்னையில் உள்ள புறநகர் பேருந்து நிலைய இடத்தில் பல மாடி அலுவலக மற்றும் வணிக வளாகமும் பேருந்து நிற்குமிடமும் சேர்த்து கட்டுவதற்கு சென்னை மாநகராட்சி நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

34—

**நாகப்பட்டினம் மற்றும் கீழையூர் ஒன்றிய கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கும் திட்டம்**

வினா எண் 1046—**திரு. ஜி. நிஜாமுதீன் :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மற்றும் கீழையூர் ஒன்றியங்களில் குடிநீர் வசதி இல்லாத கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?





விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) நாகப்பட்டினம் ஒன்றியத்திலுள்ள 7 குடியிருப்புகளுக்கு ரூ. 21.90 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர்த் திட்டங்கள் செயல் படுத்தப்படவுள்ளது. தற்போது செயல்படாமல் உள்ள 7 திட்டங்கள் ரூ. 22.747 இலட்சம் மதிப்பீட்டில் புனரமைக்கப்படவுள்ளன. அதேபோன்று, கீழையூர் ஒன்றியத்திலுள்ள 5 குடியிருப்புகளுக்கு ரூ. 10.24 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளது. செயல்படாமல் உள்ள 14 திட்டங்கள் ரூ. 52.406 இலட்சம் மதிப்பீட்டில் புனரமைக்கப்படவுள்ளன.

35—

**நாகப்பட்டினத்தில் குடிநீர்த் தட்டுப்பாட்டைத் தீர்க்கும் திட்டம்**

வினா எண் 1049—**திரு. ஜி. நிஜாமுதீன் :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினத்தில் நிலவும் குடிநீர்த் தட்டுப்பாட்டைத் தீர்க்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) நாகப்பட்டினம் நகராட்சிக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க 1962-ல் ஒரு மேம்பாட்டுத் திட்டம் நிறைவேற்றப்பட்டது. இதன் மூலம் நாள் ஒன்றுக்கு 24 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் வழங்கும் குடிநீர் அளவு குறைவாக உள்ளதாலும், மக்கள் தொகை பெருக்கத்தைக் கணக்கிற்கொண்டும் நாகப்பட்டினம் நகராட்சி குடிநீர் அபிவிருத்தித்

திட்டம் ரூ. 8.80 கோடிக்கு அரசு நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்திற்காக 3/96 வரை ரூ. 1.97 கோடி செலவிடப்பட்டுள்ளது. 1996-97-ஆம் ஆண்டுக்காக ரூ. 2.45 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் 3/98-க்குள் பயனுக்குக் கொண்டுவரத் திட்டமிடப்பட்டுள்ளது.

**36—**

**ஓமலூர் பேருந்து நிலையத்தை விஸ்தரிக்கும் திட்டம்**

வினா எண் 1069—**திரு. ஆர்.ஆர். சேகரன் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூரில் உள்ள பேருந்து நிலைய விஸ்தரிப்புத் திட்டம் எப்போது முழுமையாக நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஓமலூரில் உள்ள பேருந்து நிலைய விரிவாக்கத் திட்டப்பணி இன்னும் எடுத்துக்கொள்ளப்படவில்லை. இப்பணிக்காகத் தேவைப்படும் நிதியைப் பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. நிதி உதவி கிடைக்கப்பெற்றதும், விரைவில் வேலைகள் துவங்கப்படும்.

**37—**

**குளச்சல் தொகுதியில் குடிநீர் பிரச்சனையைத் தீர்க்கும் திட்டம்**

வினா எண் 1070—**திரு. இரா. பொன்னார்டு :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம் குளச்சல் தொகுதியில் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க ஒரு நிரந்தரத் திட்டம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?



(ஆ) ஆம் எனில், மிக விரைவில் அதை செயற்படுத்துமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) : இல்லை.

**38—**

**நெருப்பூர் தொகுதியில் குடிநீர் பஞ்சத்தைப் போக்குதல்**

வினா எண் 1099—**திரு. ஜி.கே. மணி :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெண்ணாகரம் தொகுதி, நெருப்பூர் குடியிருப்பின் கடுமையான குடிநீர் பஞ்சத்தைத் தீர்க்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியில் உள்ள நெருப்பூர் ஊரகக் குடியிருப்பிற்கு, முழுமையான குடிநீர் வசதி செய்ய உத்தேசிக்கப்பட்டு, நடப்பாண்டில் (1996-97) விசை இறைப்பான் திட்டம் சேர்க்கப்பட்டுள்ளது. இத்திட்டம் மார்ச் 1997-க்குள் முடிக்கப்பட்டு, பொதுமக்கள் பயனுக்குக் கொண்டு வரப்படும்.

**39—**

**பெரியகுப்பம் கிராமத்தில் பள்ளிக்கூடக் கட்டிடம் கட்டுதல்**

வினா எண் 1119—**திரு. அ.வ. அப்துல் நாசர் :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புவனகிரி தொகுதி, புவனகிரி ஒன்றியம், பெரியகுப்பம் கிராமத்தில் பள்ளிக்கூடக் கட்டிடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தென்னாற்காடு வள்ளலார் மாவட்டம், புவனகிரி தொகுதி, மேல்புவனகிரி ஊராட்சி ஒன்றியம், பெரியகுப்பம் கிராமத்தில் உள்ள ஆரம்பப் பள்ளிக்குச் சொந்தமான கட்டிடத்திற்கு கூடுதல் அறைகள் கட்டும் பணி, மாவட்ட பரவலாக்கப்பட்ட திட்டத்தின் கீழ் 16-8-1996-ல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**40—**

**வெள்ளாண்டிவலசை—கவுண்டம்பட்டி மாற்றுச் சாலை அமைத்து தாம்போகி பாலம் கட்டுதல்**

வினா எண் 1135—**திரு இ. கணேசன் :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி நகராட்சி, வெள்ளாண்டிவலசை-கவுண்டம்பட்டி மாற்றுச் சாலை அமைத்து, தாம்போகி பாலம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**41—**

**கன்னியாகுமரி மாவட்டத்தில் வருவாய் இல்லாத பேரூராட்சிகளை ஊராட்சிகளாக மாற்றுதல்**

வினா எண் 1245—**திரு. டி. மணி :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் ஊதியம் வழங்கக்கூட வருவாய் இல்லாத பேரூராட்சிகளை ஊராட்சிகளாக மாற்ற ஏதேனும் பரிந்துரை அரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அடுத்த உள்ளாட்சித் தேர்தலுக்கு முன்னால் அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**42—**

**பென்னாகரம் ஒன்றிய கிராமங்களிலுள்ள குடிநீர்த் தட்டுப்பாட்டைத் தீர்க்கும் நடவடிக்கை**

வினா எண் 1244—**திரு. ஜி.கே. மணி :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் ஒன்றியம், சின்னப்பநல்லூர், மோட்டுப்பட்டி, சிகரலஹள்ளி, பெல்லூர் ஆகிய கிராமங்களில் மிகுந்த குடிநீர்த் தட்டுப்பாடு உள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், குடிநீர்த் தட்டுப்பாட்டை நீக்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சின்னப்பநல்லூர் மற்றும் மோட்டுப்பட்டியில் கையிறைப்பான்கள் மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது. சிகரலஹள்ளி முழுமையாக குடிநீர் வசதி பெற்ற குடியிருப்பு. தற்சமயம் ஆழ்குழாய்க்

கிணறு தூர் நீக்கம் செய்யும் பணி நடைபெறுகிறது. இப்பணி முடிவுற்றதும், மீண்டும் முழுமையான அளவு குடிநீர் வழங்கப்படும். பெல்லூரில் நடப்பாண்டில் புனரமைப்புத் திட்டத்தின்கீழ் திட்டம் எடுத்துக் கொள்ளப்பட்டு பணிகள் துவங்கப்படவுள்ளன. இப்பணிகள் விரைவில் முடிக்கப்பட்டு மக்கள் பயனுக்குக் கொண்டு வரப்படும்.

**43—**

**பரங்கிமலை ஒன்றியப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட குடிநீர்த் திட்டங்கள்**

*வினா எண் 1252*—**திரு. மீ.அ. வைத்தியலிங்கம் :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி, பரங்கிமலை ஒன்றியப் பகுதியில் 1995-96ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட குடிநீர்த் திட்டங்கள் எத்தனை?

(ஆ) அவற்றின் இன்றைய நிலை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தாம்பரம் தொகுதி, பரங்கிமலை ஒன்றியத்தில் 1995-96ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட குடிநீர்த் திட்டங்கள் 6 ஆகும். அத்திட்டங்களில் 5 திட்டங்கள் முழுமையாக நிறைவேற்றப்பட்டன. ஒரு திட்டம், நீதிமன்ற வழக்கினால் நிறைவேற்றப்பட இயலாமல் உள்ளது.

**44—**

**கோயமுத்தூர் ஸ்ரீஅம்மன் மினரல் வாட்டர்ஸ் நிறுவனம்**

*வினா எண் 1263*—**திரு. கே. சுப்பராயன் :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) கோயமுத்தூர் ஸ்ரீஅம்மன் மினரல் வாட்டர்ஸ் (Pvt. Ltd.) நிறுவனம் சிறுவாணித் தண்ணீரை அனுமதியின்றி பாட்டில்களில் அடைத்து வியாபாரம் செய்து வருவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): கோவை ஸ்ரீஅம்மன் மினரல் வாட்டர் என்ற நிறுவனம் தனது நிலங்களில் ஆழ்குழாய்க் கிணறு அமைத்து மினரல் வாட்டர் தயாரித்து விற்பனை செய்கிறது. மேலும், அந்நிறுவனத்திற்கு சிறுவாணி குழாய் இணைப்பு வழங்கப்படாததால் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

**45—**

**தருமபுரி நகர் புதிய பேருந்து நிலையத்திலுள்ள கடைகளை ஏலம் விடுதல்**

*வினா எண் 1267*—**திரு. கு. மனோகரன் :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தர்மபுரி நகரில் புதிய பேருந்து நிலையத்திலிருக்கும் கடைகளை முறைப்படி ஏலம் விட்டு, நகராட்சியின் வருவாயை உயர்த்த அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தர்மபுரி நகரில் புதிய பேருந்து நிலையத்தில் பழைய குத்தகைதாரர்கள் 18 பேருக்கு அரசாணைப்படி மாத வாடகை நிர்ணயித்து கடைகள் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளன. நீதிமன்ற

வழக்குகள் தொடர்பான கடைகள் தவிர மற்றைய கடைகள் முறைப்படி ஏலம் விடப்பெற்றுள்ளன.

**46—**

**ஊராட்சி ஒன்றிய ஈப்பிற்கு ஒதுக்கீடு செய்யப்படும் டீசலை அதிகரித்தல்**

வினா எண் 1318—**திரு. இ. கணேசன் :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதி சுற்றுப்பயணத்தின் போது, ஊராட்சி ஒன்றிய ஈப்பிற்கு ஒதுக்கீடு செய்யப்படும் 50 லிட்டர் டீசலை உயர்த்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதி சுற்றுப்பயணத்தின் போது, ஊராட்சி ஒன்றிய ஈப்பிற்கு ஒதுக்கீடு செய்யப்படும் 50 லிட்டர் டீசலை உயர்த்துவது தொடர்பாக செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**47—**

**திருப்பூர் நகராட்சி மருத்துவமனை**

வினா எண் 1322—**திரு. கே. சுப்பராயன் :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் டவுன் ஹால் அருகிலுள்ள நகராட்சி மருத்துவமனை தற்போது இயங்கி வருகிறதா?

(ஆ) இல்லை எனில், அதற்கான காரணம் யாது?



விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) திருப்பூர் குமரன் சாலையில் டவுன் ஹால் அருகில் உள்ள நகராட்சி மருந்தகம் தற்போது இயங்கவில்லை.

(ஆ) டவுன் ஹால் அருகில் இயங்கி வந்த நகராட்சி மருந்தகம் அருகில் வியாபாரம் மற்றும் அலுவலகங்கள் சூழ்ந்து இருந்ததால், நகராட்சி மருந்தகத்திற்கு வருகை தந்த நோயாளிகளின் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருந்தது. நகரின் வடக்குப் பகுதியில் பொது மருந்தகம் எதுவும் இல்லையாதலால், மேட்டுப்பாளையம் மற்றும் நெசவாளர் குடியிருப்புப் பகுதிவாழ் மக்கள் பயன்பெறும் வகையில், பெருமாநல்லூர் சாலையில், நகராட்சிக்குச் சொந்தமான இடத்தில் கட்டப்பட்ட கட்டிடத்திற்கு, மேற்படி மருந்தகம் மார்ச் 1996-ல் மாற்றம் செய்யப்பட்டு, நன்கு இயங்கி வருகின்றது.

**48—**

**ஒகேனக்கல்லை நகராட்சியாக மாற்றும் திட்டம்**

வினா எண் 1345—**திரு. ஜி.கே. மணி :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, ஒகேனக்கல்லை நகராட்சியாக மாற்றும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

**49—**

**பெண்ணாகரம் தொகுதியில் ஏழைப் பெண்களுக்கு காளான் வளர்க்கும் பயிற்சி அளித்தல்**

வினா எண் 1347—**திரு. ஜி.கே. மணி** : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியில் வாழும் ஏழைப் பெண்களுக்கு டிரைசம் திட்டத்தின் கீழ் உதவித் தொகையுடன் காளான் வளர்க்கும் பயிற்சி அளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியில் வாழும் ஏழைப் பெண்களில் 10 நபர்களுக்கு, 1996-97-ஆம் ஆண்டு டிரைசம் திட்டத்தின்கீழ் பயிற்சி அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேற்படி பயிற்சியின் காலம் 3 மாதம். பயிற்சியின்போது பயிற்சி பெறும் பெண்களுக்கு உதவித் தொகையாக, பிரதி மாதம் ரூ. 350 வழங்கப்படுகின்றது. இனி வரும் காலங்களில் ஆண்டுத் திட்டம் தயாரிக்கும்போது காளான் வளர்ப்புத் திட்டத்திற்கு முன்னுரிமை அளித்து, பயிற்சியில் சேரும் பெண்களுக்குப் பயிற்சி அளிப்பதோடு, பயிற்சிக்குப் பின், அரசுக் கடன் பெற்று, இத்தொழில் நடத்தவும் தக்க ஏற்பாடுகள் செய்து தர நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**50—**

**முன்னாள் கிராம நிர்வாகப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் தொகுப்பு ஊதியத்தை அதிகரித்தல்**

வினா எண் 1493—**டாக்டர் ஆ. ஞானசேகரன்** : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முன்னாள் கிராம நிர்வாகப் பணியாளர்களுக்கு தொகுப்பு ஊதியமாக ரூ. 500 வழங்கப்படுவதை உயர்த்திக் கொடுக்க அரசு முன் வருமா?



விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

முன்னாள் கிராம நிர்வாகப் பணியாளர்களுக்கு தொகுப்பு ஊதியம் வழங்கப்படுவதில்லை. 1980 ஆம் ஆண்டு, அவசரச் சட்டத்தின் மூலம் பணி நீக்கம் செய்யப்பட்ட கிராம நிர்வாகப் பணியாளர்களில் 1-1-1991 அன்று 60 வயதைக் கடக்காதவர்களில் விருப்பம் தெரிவித்தவர்களும், அந்நாளில் பணியில் இருந்த ஊராட்சி எழுத்தர்களும் 1-1-1991 முதல் ஊராட்சி உதவியாளர்களாகப் பணி அமர்த்தப்பட்டு மாதம் ரூ. 400 மதிப்பூதியமாக வழங்கப்பட்டு வந்தது. இதனை ரூ. 650 ஆக உயர்த்தி வழங்க ஏற்கெனவே ஆணையிடப்பட்டுள்ளது.

**51—**

**கேசவபுரத்தில் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அமைத்தல்**

வினா எண் 1510—**திரு. கு. ரவி அருணன்** : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், செங்கோட்டை தாலுகா, கேசவபுரத்தில் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): கேசவபுரம், எஸ். புதூர் பேரூராட்சிக்குள் அடங்கிய கிராமங்களில் ஒன்று. நடப்பு நிதியாண்டில் எஸ். புதூர் கிராமப் பேரூராட்சிக்கு குடிநீர்த் திட்டம் அமைக்கும் பொருட்டு நீராதாரம் அமைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. நீராதாரம் அமைக்கும் பணிகள் நடப்பு ஆண்டிலேயே முடிவு பெறும். நீராதாரம் உருவாக்கப்பட்ட பின்பு எஸ். புதூர் பேரூராட்சிக்கு உட்பட்ட கிராமங்களுக்கு (கேசவபுரம் உள்பட) குடிநீர் வழங்க திட்ட மதிப்பீடு

தயாரிக்கப்படும். எஸ். புதூர் பேரூராட்சிக்குக் குடிநீர்த் திட்டம் தயாரிக்கும்போது கேசவபுரம் குடியிருப்புக்கும் வரும் காலங்களில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து குடிநீர் வழங்க ஏற்பாடு செய்யப்படவுள்ளது.

**52—**

**சென்னை மாநகரில் கழிவுநீர்க் குழாய்களை மாற்றி அமைக்கும் திட்டம்.**

வினா எண் 1521—**டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை மாநகரில் உள்ள மக்கள் தொகையின் அடிப்படையில் கழிவுநீர்க் குழாய்களை மாற்றி அமைக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சென்னை மாநகரில், கி.பி. 2011-ல் எதிர்பார்க்கப்படும் மக்கட் தொகையினைக் கருத்தில் கொண்டு, கழிவுநீர்க் குழாய்களை மாற்றி அமைக்கவும், தேவைக்கேற்ற பெரிய குழாய்கள் அமைக்கவும், தற்போது சென்னைக் குடிநீர் வாரியத்தினால் ஆய்வுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இதனை நிபுணர் குழு தற்போது கவனித்து வருகிறது. இவ்வாய்வுகளின் அறிக்கை 1997 ஆம் ஆண்டு மார்ச் மாத இறுதியில் கிடைக்கப் பெறும். இவ்வாய்வுகளின் பரிந்துரைப்படி, சென்னை நகரில் மக்கட் தொகையின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் விதத்தில் கழிவுநீர்க் குழாய்கள் வடிவமைத்து நிர்ணயிக்கப்பட்டு, அமைக்கப்படும்.

**53—**

**எடப்பாடி தொகுதியில் கிராமப் பகுதிகளில் குடிநீர்ப் பற்றாக்குறை.**

வினா எண் 1531—**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், ஏகாபுரம் கிராமம் மற்றும் தைலம்பட்டி பகுதிகளில் குடிநீர்ப் பற்றாக்குறை உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், ஏகாபுரம் கிராமம் மற்றும் தைலம்பட்டி பகுதிகளில் குடிநீர்ப் பற்றாக்குறை இல்லை.

**54—**

**உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்தல்**

வினா எண் 1593—**திரு. கே. சுந்தர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியம் எப்பொழுது இரண்டாகப் பிரிக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இல்லை.

**55—**

**வாலாஜாபாத் ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்தல்**

வினா எண் 1603—**திரு. கே. சுந்தர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1997 ஏப்ரல் 30

செங்கற்பட்டு-அண்ணா மாவட்டம், உத்திரமேரூர் தொகுதி வாலாஜாபாத் ஊராட்சி ஒன்றியம் இரண்டாகப் பிரிக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இல்லை.

**56—**

**ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவரை நேரிடையாகத் தேர்ந்தெடுக்க சட்டத்தைத் திருத்தல்**

வினா எண் 1608—**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர், நேரிடையாகத் தேர்ந்தெடுக்கப்படும் வகையில் சட்டம் திருத்தப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இல்லை.

**57—**

**பேரூராட்சிகளில் பணிபுரியும் தற்காலிக தினக்கூலிப் பணியாளர்களை நிரந்தரம் செய்யும் திட்டம்**

வினா எண் 1620—**திரு. மீ.அ. வைத்தியலிங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேரூராட்சிகளில் நார்ம்ஸ் கமிட்டி பரிந்துரையின் பேரில் நியமிக்கப்பட்டு, பணியாற்றி வரும் அனைத்து தற்காலிக தினக்கூலிப் பணியாளர்களையும் நிரந்தரம் செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?



1997 ஏப்ரல் 30]

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பேரூராட்சிகளில் தினக்கூலி அடிப்படையில் பணியாளர்களை நியமனம் செய்ய, நார்ம்ஸ் கமிட்டியால் பரிந்துரை செய்யப்படவில்லை. பேரூராட்சிகளில் தற்போது பணிபுரியும் தினக்கூலிப் பணியாளர்களை நிரந்தரம் செய்யும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் உள்ளது.

**58—**

**செங்கை-எம்.ஜி.ஆர் மாவட்டத்தில் ஒன்றாகக் குறைக்கப்பட்ட கோட்டங்களை மீண்டும் மூன்று கோட்டங்களாகப் பிரித்தல்**

வினா எண் 1621—**திரு. மீ.அ. வைத்தியலிங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டத்தில், 3 கோட்டங்களாக இருந்த குடிநீர் வடிகால் வாரியக் கோட்டம் ஒன்றாகக் குறைக்கப்பட்டது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், மீண்டும் 3 கோட்டமாக்கும் செயல்திட்டம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்

(ஆ) 1-7-1996 முதல் ஐந்து கோட்டங்கள் இயங்கிக் கொண்டு இருக்கின்றன.

[1997 ஏப்ரல் 30

**59—**

**சென்னை மாநகரில் சாலைகளில் வெள்ள நீர் தேங்குவதைத் தடுத்தல்**

வினா எண் 1681—**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மழைக்காலத்தில் சென்னை மாநகரில், சாலைகளில் வெள்ளநீர் தேங்குவதைத் தடுக்க அரசு ஏதேனும் திட்டம் வகுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சென்னை மாநகரில் அமைக்கப்பட்டுள்ள மழைநீர் வடிகால்களின் மொத்த நீளம் 649 கி.மீ. கால அட்டவணையிட்டு 550 தூர் எடுக்கும் தொழிலாளர்களைக்கொண்டு, 10 மண்டல அலுவலர்களின் கட்டுப்பாட்டில் அனைத்து மழைநீர் வடிகால்களிலிருந்தும் தூர் எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், மழைக்காலத்துக்கு முன்பாகவே தற்காலிக தூர்வாரும் தொழிலாளர்களைக்கொண்டும் மழைநீர் வடிகால்களில் தீவிர தூர்வாரும் பணியைச் செயல்படுத்தி, மழைநீர் தேங்காவண்ணம் உறுதி செய்யப்படுகிறது.

**60—**

**நகர்ப்புற ஏழை மக்களுக்கான அடிப்படை வசதித் திட்டத்தில் பணிபுரிவோர்**

வினா எண் 1686—**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1997 ஏப்ரல் 30]

(அ) நகர்புற ஏழை மக்களுக்கான அடிப்படை வசதித் திட்டத்தில் (UBSP) எத்தனை பேர் பணியாற்றுகிறார்கள்?

(ஆ) அவர்களுக்கு வழங்கப்படும் ஊதியம் எவ்வளவு?

(இ) அவர்கள் பணியை நிரந்தரமாக்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை யாது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) 29 சமுதாய அமைப்பாளர்கள் பணியாற்றுகிறார்கள்.

(ஆ) ரூ. 2000/- தொகுப்பூதியமாக வழங்கப்படுகிறது.

(இ) பணியை நிரந்தரமாக்க தற்சமயம் நடவடிக்கை ஏதும் இல்லை.

**61—**

**கடையம் ஒன்றிய கிராமங்களில் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள் கட்டுதல்**

வினா எண் 1752—**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதிக்குட்பட்ட கடையம் ஒன்றியத்தில், தெற்கு மடத்தூர், மடத்தூர், கோவிலூத்து, வெங்கடாம்பட்டி, ஐந்தாம் கட்டளை ஆகிய கிராமங்களுக்குக் கூட்டுக் குடிநீர்த் திட்டம் மூலம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழாது.

62—

**வானூர் தொகுதி கிராமங்களிலுள்ள குடிநீர் தட்டுப்பாடு**

வினா எண் 1804—**திரு. அ. மாரிமுத்து:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வானூர் தொகுதியிலுள்ள புளிச்சம்பள்ளம், வி.புதுப்பாக்கம், கிளியனூர், பெரும்பாக்கம் ஆகிய கிராமங்களின் குடிநீர் தட்டுப்பாடு குறித்து அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அவற்றைப் போக்க அரசு உரிய நடவடிக்கையினை உடனடியாக எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) புளிச்சம்பள்ளம் மக்கள் தொகைக்கேற்ப குடிநீர் தேவையைக் கருத்திற்கொண்டு, 15 குதிரைத்திறன் உள்ள நீர்மூழ்கி மோட்டார் புனரமைப்புத் திட்டத்தின் கீழ் அமைக்க ஆவன செய்யப்பட்டு வருகிறது. அதேபோன்று, வி.புதுப்பாக்கத்தில் தற்போது இயங்கிவரும் மின்மோட்டாரை புனரமைப்புத் திட்டத்தின் கீழ் மாற்றிப் பொருத்த ஆவன செய்யப்பட்டு வருகிறது. கிளியனூர், பெரும்பாக்கம் ஆகிய குடியிருப்புகளுக்கும் புனரமைப்புத் திட்டத்தின் கீழ் பொருத்த ஆவன செய்யப்பட்டு வருகிறது.

63—

**குழித்துறை நகராட்சிக்கு குடிநீர் திட்டம்**

வினா எண் 1806—**திரு. டி. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறை நகராட்சியில் குடிநீர்த் திட்டம் எப்போது செயல்படத் துவங்கும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

குழித்துறை நகராட்சி குடிநீர்த் திட்டப் பணிகள் தற்போது முடிவுற்று பயனில் உள்ளது.

64—

**பவானிசாகர் தொகுதியில் கூட்டுக் குடிநீர் திட்டத்தில் குடிநீர் குழாய்களை மாற்றி அமைத்தல்**

வினா எண் 1837—**திரு. வெ.அ. ஆண்டமுத்து:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானிசாகர் தொகுதியில், கூட்டுக் குடிநீர் திட்டத்தில் பழுதடைந்துள்ள குடிநீர் குழாய்களை மாற்றி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): இல்லை.

65—

**திருப்பூர் ஊராட்சி ஒன்றிய ஊராட்சிகளில் பணியாற்றும் துப்புரவுத் தொழிலாளர்கள்**

வினா எண் 1889—**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்தின் கீழ் உள்ள ஊராட்சிகளில் பணியாற்றும் துப்புரவுத் தொழிலாளர்கள் எத்தனை பேர்?

(ஆ) மக்கள் தொகையில் அவர்கள் எத்தனை சதவீதம்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஊராட்சிகளில் மொத்தம் 10 (பத்து) துப்புரவுப் பணியாளர்கள் பணிபுரிகின்றனர்.

(ஆ) அவர்கள் மக்கள் தொகையில் 0.01% ஆகும்.

**66—**

**பரமக்குடி தொகுதி காலனி வீடுகளில் வசிக்கும் மக்களுக்கு அடிப்படை வசதிகள்**

வினா எண் 2036—**திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பரமக்குடி தொகுதியில் உள்ள காலனி வீடுகளில் வசிக்கும் மக்களுக்கு அடிப்படை வசதிகள் செய்துதர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பரமக்குடி தொகுதியில் இளையான்குடி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள கோடானூர், வாணியங்குடி மற்றும் சிறுகநேந்தல் கிராமங்களிலும், மானாமதுரை ஊராட்சி ஒன்றியத்திலுள்ள சோமாத்தூர் மற்றும் மானங்காத்தான் கிராமங்களிலும் உள்ள ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் அடிப்படை வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன.



**67—**

**சென்னை புறநகர் பகுதிகளுக்கு கிருஷ்ணா நதிநீர் வழங்கல்**

வினா எண் 2079—**திரு. மீ.அ. வைத்தியலிங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணா நதி நீர் சென்னையை ஒட்டியுள்ள புறநகர் பகுதிகளுக்கு வழங்கப்பட உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்தெந்த கிராமங்களுக்கு வழங்கப்பட உள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) கிருஷ்ணா குடிநீர் திட்டத்தின் கீழ், முதல் கட்டமாக, சென்னைப் பெருநகரின் அண்மையிலுள்ள 20 உள்ளாட்சி அமைப்புகளுக்கும் கிருஷ்ணா நதி நீரை வழங்க சென்னைக் குடிநீர் வாரியத்திற்கு அரசு ஏற்கனவே அனுமதி வழங்கியுள்ளது.

(ஆ) கிருஷ்ணா நதி நீர் வழங்கப்படவுள்ள 20 உள்ளாட்சி அமைப்புகளில் கொட்டிவாக்கம், ராமாபுரம், நெற்குன்றம் மற்றும் அயனம்பாக்கம் ஆகிய நான்கு கிராமங்களும் அடங்கும்.

**68—**

**பேரூராட்சிகளை இணைத்து நகராட்சியாக்கும் திட்டம்**

வினா எண் 2080—**திரு. மீ.அ. வைத்தியலிங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பம்மல், அனகாபுத்தூர், திருநீர்மலை ஆகிய பேரூராட்சிகளை இணைத்து நகராட்சியாக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ): உள்ளாட்சி மன்றங்களுக்கான தேர்தலை விரைவில் நடத்த அரசு முடிவு எடுத்துள்ளதால், பேரூராட்சிகளை நகராட்சியாக்கும் திட்டம் அரசால் தற்போது பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் சூழ்நிலையில் இல்லை.

69—

**குறியாமங்கலம் கிராம குளத்திற்கு தடுப்புச் சுவர் கட்டுதல்**

வினா எண் 2104—**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு வள்ளலார் மாவட்டம், புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஒன்றியம், குறியாமங்கலம் கிராமத்திலுள்ள குளத்திற்குத் தடுப்புச்சுவர் மற்றும் படித்துறை கட்டப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) தென்னாற்காடு வள்ளலார் மாவட்டம், புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஒன்றியம், குறியாமங்கலம் கிராமத்திலுள்ள குளத்திற்கு தடுப்புச் சுவர் மற்றும் படித்துறை கட்டுவதற்கான திட்டம் தற்சமயம் ஏதுமில்லை.

(ஆ) வினா எழ இடமில்லை.

70—

**கடையம் ஊராட்சி ஒன்றிய கிராமங்களுக்கு தாமிரபரணி ஆற்றிலிருந்து குடிநீர் வழங்கல்**

வினா எண் 2109—**திரு. இரா. ஆவுடையப்பன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—





அம்பாசமுத்திரம் தாலுக்கா, கடையம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள அனைத்துக் கிராமங்களுக்கும் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் கீழ் தாமிரபரணி ஆற்றிலிருந்து குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

அம்பாசமுத்திரம் தாலுக்கா, கடையம் ஒன்றியத்தில் உள்ள அநேக குடியிருப்புகள் சிறு கிராமங்களாக உள்ளன. தாமிரபரணி ஆறு வெகு தொலைவிலுள்ளது.

எனவே, கடையம் ஒன்றியத்தில், அனைத்து கிராமங்களுக்கும் தாமிரபரணி ஆற்றிலிருந்து குடிநீர் வழங்கும் திட்டம் ஏதும் நடப்பு நிதியாண்டில் ஆய்வில் இல்லை.

71—

**சள்ளி கொளத்தான் வளவில் ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல்**

வினா எண் 2122—**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, இடங்கண சாலை பேரூராட்சியிலுள்ள சள்ளி கொளத்தான் வளவில் குடிநீர் பற்றாக்குறையைத் தீர்க்க ஒரு ஆழ் குழாய்க் கிணறு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஆம். சள்ளிகொளத்தான் வளவு பகுதிக்கு ஒரு திறந்தவெளிக் கிணறு மற்றும் ஒரு கையிறைப்பான் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. கோடை காலத்தில் இவைகளில் குடிநீர் குறைந்து விடுகிறது. எனவே, இப்பிரச்சினையைக் கருத்திற் கொண்டு, அப்பகுதிக்கு ஒரு ஆழ்குழாய் கிணறு, இடங்கண சாலை பேரூராட்சியின் மூலம் அமைக்கப்பட்டு வருகிறது.

72—

### அரியலூர் ஊராட்சி ஒன்றிய வளர்ச்சிப் பள்ளி

வினா எண் 2236—**திரு. டி. அமரமூர்த்தி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், அரியலூர் தொகுதியில் 1994 முதல் 1996 வரை கல் குவாரிகள் செலுத்த வேண்டிய உள்ளூர் வரிகள் வசூலிக்கப்பட்டும், அரியலூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு அளிக்கப்படாததால், ஒன்றிய வளர்ச்சிப் பள்ளி பாதிக்கப்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அப்பணத்தை ஊராட்சி ஒன்றியத்திற்கு உடனடியாக ஒதுக்கீடு செய்ய அரசு முன் வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) பெரம்பலூர் திருவள்ளுவர் மாவட்டம், அரியலூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட அரியலூர் ஊராட்சி ஒன்றிய எல்லைக்குள் கல்குவாரிகள் 1994-96 ஆம் ஆண்டுகளில் குத்தகைக்கு விடப்படவில்லை. ஆதலால், தலவரி, தலமேல்வரி ஏதும் வசூலிக்கப்படவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

73—

### தருமபுரி ஒன்றியத்தில் ஜீவன்தாரா கிணறுகள் அமைத்தல்

வினா எண் 2239—**திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி ஒன்றியத்தில் மீண்டும் ஜீவன்தாரா கிணறுகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?



விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தருமபுரி, அரூர், மத்தூர், பர்கூர், பாலக்கோடு, கிருஷ்ணகிரி பாப்பிரெட்டிப்பட்டி ஆகிய ஊராட்சி ஒன்றியங்கள் கருமை நிற (Dark Blocks) ஒன்றியங்களாக தெரிவு செய்யப்பட்டதனால் ஜீவன்தாரா கிணறுகள் இவ்வொன்றியப் பகுதிகளுக்கு வழங்கப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

74—

### சென்னை அல்லிக்குளம் பகுதியில் கட்டப்பட்டுள்ள புதிய மூர்மார்க்கெட் கட்டிடம்

வினா எண் 2416—**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை அல்லிக்குளம் பகுதியில் புதியதாகக் கட்டப்பட்டுள்ள மூர் மார்க்கெட் கட்டிடத்தைத் திறந்து வியாபாரிகளுக்கு கடைகளை ஒதுக்கீடு செய்ய அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): அல்லிக்குளம் வளாகத்தில் 857 கடைகளில் 527 கடைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டும், ஒதுக்கீடுதாரர்கள் கடைகளை திறக்க முன் வரவில்லை. மீதமுள்ள 330 கடைகளை ஒதுக்கீடு செய்வது குறித்து செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**75—**

### திருப்புவனம் நகரில் புதிய பேருந்து நிலையம் கட்டுதல்

*வினா எண் 2421*—**திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பசும்பொன் மாவட்டம், திருப்புவனம் நகரில் புதிய பேருந்து நிலையம் கட்டுவதற்கான நடவடிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) திருப்புவனம் பேரூராட்சி வசம் போதிய நிலம் இல்லாததால், தனியார் நிலம் கையகப்படுத்தியபின் திட்டம் தயார் செய்து புதிய பேருந்து நிலையம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**76—**

### செங்கோட்டையில் குடிநீர் தட்டுப்பாட்டை போக்க நடவடிக்கை

*வினா எண் 2423*—**திரு. கு. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கோட்டையில் நிலவிவரும் குடிநீர் பிரச்சினையைப் போக்க, கருங்கல் ஓடையிலிருந்து குடிநீர் கொண்டுவர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): கருங்கல் ஓடையிலிருந்து செங்கோட்டைக்கு குடிநீர் கொண்டுவரும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**77—**

### இணைபிரியாள் வட்ட ஆதிதிராவிடர் பகுதிக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கல்

*வினா எண் 2428*—**திரு. டி. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணம் இணைபிரியாள் வட்டம், ஆதிதிராவிடர் பகுதியில் குடிநீர்த் தேக்கத் தொட்டி இருந்தும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படவில்லையென புகார் அரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) இக்குடியிருப்பில் உள்ள குடிநீர்த் திட்டத்தில் மின் இறைப்பான் பழுதடைந்துள்ளதால் தற்போது குடிநீர் வழங்குவது தடைப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மின் இறைப்பான் பழுதினை நிவர்த்தி செய்ய நடப்பு நிதியாண்டு (1996-97) பழுதுபட்ட மின் விசைத் திட்டங்கள் புனரமைப்புத் திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. செப்டம்பர் 1996-க்குள் புதிய மின் இறைப்பான் மாற்றியமைத்து, இத்திட்டம் மக்கள் பயனுக்குக் கொண்டு வரப்படும்.

78—

**செந்துறையில் பேருந்து நிலையம் அமைத்தல்**

வினா எண் 2463—**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆண்டிமடம் தொகுதி செந்துறையில் பேருந்து நிலையம் அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பெரம்பலூர் திருவள்ளுவர் மாவட்டம், ஆண்டிமடம் தொகுதி செந்துறையில் பேருந்து நிலையம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

79—

**ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றியத்தை நான்காம் நிலை அட்டவணைக்கு மாற்றல்**

வினா எண் 2514—**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இரண்டாம் நிலை அட்டவணையில் உள்ள ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றியத்தை நான்காம் நிலை அட்டவணைக்கு மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.



80—

**வடவூர் மற்றும் கருவேலங்கடை பஞ்சாயத்துக்களுக்கு வடுகச்சேரியிலிருந்து குடிநீர்**

வினா எண் 2536—**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் தொகுதி வடவூர், கருவேலங்கடை பஞ்சாயத்துக்களுக்கு வடுகச்சேரியிலிருந்து குடிநீர் கொண்டு வரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கருவேலங்கடை குடியிருப்பில் ஏற்கனவே செயல் படுத்தப்பட்டு தற்சமயம் இயங்காமல் உள்ள திட்டத்தினை வடக்கு பொய்கை நல்லூரிலிருந்து குடிநீர் கொண்டு வருவதற்கான பணிகள் நடப்பு நிதியாண்டில் புனரமைப்புத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதேபோன்று வடவூர் ஊராட்சியில் உள்ள வடவூர், நீத்தாமங்கலம் ஆகிய குடியிப்புகளில் மேல்நிலைத் தொட்டி கட்டப்பட்டு உள்ளது. சேரைக்காரன்தோப்பு, மேல அரிசன தெரு, வடவூர் தென்பாதி ஆகிய குடியிருப்புகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க எதிர்வரும் நிதி ஆண்டில் திட்டம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

81—

**விக்கிரவாண்டியில் பேருந்து நிலையம் அமைத்தல்**

வினா எண் 2542—**திரு. ச. அழகுவேலு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விக்கிரவாண்டியில் பஸ்நிலையம் அமைக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

அமைக்கப்படும்.

**82—**

**நடைபாதை கடைகளுக்கு தனியாக இடம் ஒதுக்கித் தருதல்**

வினா எண் 2691—**திரு. டி. இராஜேந்தர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை மாநகரில் நடைபாதைகளில் கடைகள் வைத்திருப்பவர்களுக்கு தனியாக இடம் ஒதுக்கித்தர அரசு முன் வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சென்னை மாநகரில் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் சாலையிலுள்ள நடைபாதைகளில் கடை வைத்திருந்தவர்களுக்கு உயர்நீதி மன்ற உத்தரவின்படி ஜார்ஜ் டவுன் பகுதியில் உள்ள சாலையோர நடைபாதைகளில் இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதைத் தவிர நடைபாதையில் கடை நடத்த எவ்வித இட ஒதுக்கீடும் தற்போது செய்யப்படுவதற்கில்லை.

**83—**

**சென்னை மாநகராட்சி மற்றும் குடிநீர்-கழிவுநீர் வாரிய பணியாளர்கள்**

வினா எண் 2697—**திரு. டி. இராஜேந்தர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



சென்னை மாநகராட்சிப் பணியாளர்களும், குடிநீர்-கழிவுநீர் வாரியத்தைச் சார்ந்த பணியாளர்களும் ஒருங்கிணைந்து பணியாற்றுவதில் இருக்கும் இடையூறுகளைக் களைய அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஆம்.

**84—**

**பூங்காநகர் தொகுதி வட்டங்களுக்கு குடிநீர்**

வினா எண் 2699—**திரு. டி. இராஜேந்தர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பூங்காநகர் தொகுதி 48 மற்றும் 49-வது வட்டங்களில் குடிதண்ணீரை தொட்டிகளில் தேக்கி வைத்து குழாய்கள் மூலம் வழங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பூங்கா நகர் தொகுதி 48 மற்றும் 49-வது வட்டங்களில் உள்ள அனைத்து தெருக்களுக்கும் தற்போது குழாய்கள் மூலம் தினமும் குடிநீர் வழங்கப்படுகிறது. ஆகவே, தொட்டிகளில் குடிநீரைத் தேக்கி வைத்து வழங்கத் தேவையில்லை.

**85—**

**மானாமதுரையில் புதிய பேருந்து நிலையம் அமைத்தல்**

வினா எண் 2717—**திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பசும்பொன் முத்துராமலிங்க தேவர் மாவட்டம், மானாமதுரையில் புதிய பேருந்து நிலையம் அமைக்க துரித நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): நடவடிக்கை மேற்கொள்ளப்படும். புதிய பேருந்து நிலையம் கட்ட இடத்தினைப் பெற்று விரைவில் பேருந்து நிலையம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

**86—**

**மதுரை திருச்சிராப்பள்ளி சாலையில் புதிதாகக் கட்டப்படும் ஒருங்கிணைந்த பேருந்து நிலையம்**

வினா எண் 2786—**திரு. வ. வேலுசாமி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை மாநகர் திருச்சிராப்பள்ளி சாலையில் புதிதாக கட்டப்பட்டு வரும் ஒருங்கிணைந்த பேருந்து நிலையப் பணி. எப்போது முடிவடையும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

மதுரை-திருச்சிராப்பள்ளி சாலை மதுரை நகரில் மேலூர் சாலை என அழைக்கப்படுகிறது. மேலூர் சாலையில் ஒருங்கிணைந்த புதிய பேருந்து நிலையம் அமைக்க ரூ. 15 கோடி தேவைப்படும் என்று மதிப்பிட்டு முதல் கட்டமாக ரூ. 6.18 கோடியில் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. 1994-ம் ஆண்டு மே மாதம் ரூ. 6.18 கோடி மதிப்பீட்டில் ஆரம்பிக்கப்பட்ட முதல் கட்ட வேலை பாதி அளவு முடிந்துள்ளது. மீத வேலைகளைத் தொடர்ந்து துரிதமாக செய்து முடிக்க ரூபாய் 3 கோடி தேவைப்படும் என



உத்தேசிக்கப்பட்டு இத்திட்டத்திற்கு தேவையான முழு நிதியும் மாநகராட்சி பொது நிதியிலிருந்து பெற்று செய்து முடிக்க தீர்மானிக்கப்பட்டது. பின் மற்ற செலவினம் பெருகிவிட்ட நிலையில் திட்டமிட்டபடி முதல் கட்ட தொகை முழுவதையும் வழங்க இயலவில்லை. இந்நிலையில் மாநகராட்சி பொது நிதியிலிருந்து மிகக் குறைந்த அளவே மதுரை மேலூர் பேருந்து நிலைய வேலைக்கு வழங்க உள்ள இந்நிலையில் முதல் கட்ட வேலைகளை முடிக்கவே இன்னும் இரண்டு வருடம் ஆகும்.

**87—**

**பாச்சாலியூரில் மேல்நிலை நீர்த் தேக்கத்தொட்டி மூலம் குடிநீர் வழங்கல்**

வினா எண் 2813—**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், வெள்ளாலபுரம் கிராமம் பாச்சாலியூரில் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்டி குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், வெள்ளாலபுரம் ஊராட்சியைச் சார்ந்த பாச்சாலியூர் குடியிருப்பின் மக்கள் தொகை 1425 ஆகும். இக்குடியிருப்பில் தற்போது பயனிலிருந்து வரும் ஒரு கைஇறைப்பானில் கோடை காலத்தில் நீர் வறண்டு விடுகிறது. மேலும் ஊராட்சி ஒன்றியத்தால் அமைக்கப்பட்டுள்ள 5000 லிட்டர் கொள்ளளவு கொண்ட தரைமட்ட நீர்த் தேக்கத் தொட்டிக்கு ஒரு ஆழ் குழாய்க் கிணற்றிலிருந்து 5 குதிரைத் திறன் கொண்ட ஏர்கம்ப்ரசர் பம்பு மூலம் நீரேற்றப்பட்டு மூன்று பொதுக் குழாய்கள் வாயிலாக நீர் வழங்கப்பட்டு வருகிறது. இக்குடியிருப்பிற்கு நபருக்கு அதிகபட்சமாக 17 லிட்டர், குறைந்தபட்சமாக 13 லிட்டர் குடிநீரும் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது அரசு கொள்கைப்படி நபருக்கு நாளொன்றுக்கு அதிகபட்சமாக 10 லிட்டர் குடிநீர் வழங்கக்கூடிய நிலையில் உள்ள

குடியிருப்புகளுக்கும் மற்றும் அறவே குடிநீர் வசதியில்லாத குடியிருப்புகளுக்கு மட்டுமே வாரியத்தில் முன்னுரிமை கொடுக்கப்பட்டு திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருவதால், நடப்பு நிதியாண்டில் மேற்குறிப்பிட்ட குடியிருப்புக்கு குடிநீர்த் திட்டம் செயற்படுத்த உத்தேசமில்லை. வரும் நிதியாண்டுகளில் முன்னுரிமை அடிப்படையில் திட்டம் செயற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**88—**

**ஸ்டான்லி மருத்துவமனை அருகில் இருப்புப்பாதை ஓரத்தில் மேம்பாலம் கட்டும் திட்டம்**

வினா எண் 2817—**திரு. இரா. மதிவாணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* ஸ்டான்லி மருத்துவமனை அருகிலுள்ள இருப்புப்பாதை வாயில் ஓரத்தில் மேம்பாலம் அல்லது சுரங்கப்பாதை கட்டும் திட்டம் அரசில் பரிசீலனையில் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், இது குறித்து மத்திய அரசுக்கு மாநில அரசு பரிந்துரை செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* சுரங்கப்பாதை பணியை 1997-98-ஆம் ஆண்டில் இரயில்வே துறையுடன் பங்கீட்டு முறையில் செய்யும் திட்டம் சென்னை மாநகராட்சியில் உள்ளது.

*(ஆ)* இதுகுறித்து அத்துறையின் 1997-98-ஆம் ஆண்டு பணித்திட்டத்தில் சேர்க்க இரயில்வே துறைக்கு பரிந்துரை செய்யப்படவுள்ளது.

**89—**

**கிருஷ்ணகிரியில் பேருந்து நிலையம் கட்டுதல்**

வினா எண் 2819—**டாக்டர் காஞ்சனா கமலநாதன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





*(அ)* தருமபுரி மாவட்டம், கிருஷ்ணகிரியில் பேருந்து நிலையம் கட்ட அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

*(ஆ)* ஆம் எனில், அதற்கான நிதி ஒதுக்கீடு செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* ஆம்.

*(ஆ)* நகர்மன்றம் புதிய இடம் தேர்ந்தெடுத்து பின் அனுப்பும் திட்டப் பிரேரணை மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**90—**

**உரியூர் கிராமத்தில் நிலையான பாதை அமைத்தல்**

வினா எண் 2872—**திரு. ஆர். தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரக்கோணம் தொகுதியில், ஆற்றோரம் உள்ள உரியூர் கிராமத்தில் வெள்ளக் காலங்களில் பாதையில் அரிப்பு ஏற்படுவதால் நிலையான பாதை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

1996-97-ஆம் ஆண்டில், இப்பணியை எடுத்துச் செய்ய நிதிவசதி இல்லை.

**91—**

**ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களுக்கு டிராக்டர்கள் வழங்கல்**

வினா எண் 2881—**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள அனைத்து ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களுக்கும் டிராக்டர்களை வழங்கி, அவற்றைக் குறைந்த வாடகையில் விவசாயிகளுக்கு அளிக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) : தமிழ்நாட்டிலுள்ள அனைத்து ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களுக்கும் டிராக்டர்களை வழங்கி அவற்றைக் குறைந்த வாடகையில் விவசாயிகளுக்கு அளிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

**92—**

**ஊராட்சி ஒன்றியங்களில் மின்சார பிண எரிப்பு அறை அமைத்தல்**

வினா எண் 2893—**திரு. கொ.வி. நன்னன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருநகரங்களில் உள்ளதுபோல் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் மின்சார பிண எரிப்பு அறை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் செயல்படுத்தப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மின்சார பிண எரிப்பு அறைகள் அமைக்கத் தேவைப்படும் அடிப்படை வசதிகள் அனைத்தும் ஒருங்கே கிடைப்பதற்கு வாய்ப்பில்லையென்பதாலும், பராமரிப்புச் செலவு கூடுதல் என்பதாலும், பெருநகரங்களில் உள்ளதுபோல் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் மின்சார பிண எரிப்பு அறை அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) கேள்வி எழ இடமில்லை.





**93—**

**ஆலந்தூர், அம்பத்தூர், பல்லாவரம், தாம்பரம் மற்றும் திருவொற்றியூர் நகராட்சிகளை சென்னை மாநகராட்சியுடன் இணைத்தல்**

வினா எண் 2919—**திரு. செ. இராமலிங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மகாநகர் (Mega Chennai) திட்டத்தின் மூலம் சென்னை பெருநகரைச் சுற்றியுள்ள ஆலந்தூர், அம்பத்தூர், பல்லாவரம், தாம்பரம், திருவொற்றியூர் நகராட்சிகளை சென்னை மாநகராட்சியுடன் இணைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): அம்பத்தூர் நகராட்சியைப் பொறுத்த மட்டில் சில பகுதிகளைச் சென்னை மாநகராட்சியுடன் இணைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. உள்ளாட்சித் தேர்தல் முடிந்த பிறகு இறுதி முடிவு எடுக்கப்படும். ஆலந்தூர், பல்லாவரம், தாம்பரம் மற்றும் திருவொற்றியூர் நகராட்சிகளை சென்னை மாநகராட்சியுடன் இணைக்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

**94—**

**திருத்துறைப்பூண்டி நகராட்சியிலுள்ள பாதாள சாக்கடைகள்**

வினா எண் 2923—**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டம், திருத்துறைப்பூண்டி நகராட்சியில், பாதாள சாக்கடைகள் சரிவர இயங்காமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதனைச் செப்பனிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): திருத்துறைப்பூண்டி நகராட்சியில், பாதாள சாக்கடைத் திட்டம் எதுவும் அமலில் இல்லை.

**95—**

**நாங்குநேரி தொகுதியில் பேருந்து நிலையங்கள் அமைத்தல்**

வினா எண் 2946—**திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், நாங்குநேரி தொகுதி, மூலைகரைப்பட்டி, களக்காடு, திருக்குறுங்குடி ஆகிய இடங்களில் பேருந்து நிலையங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் நாங்குநேரி தொகுதி, மூலைகரைப்பட்டி மற்றும் திருக்குறுங்குடியில் பேருந்து நிலையம் அமைக்க எவ்வித கருத்துருவும் தற்போது பரிசீலனையில் இல்லை. களக்காட்டில் பேருந்து நிலையம் அமைக்க கருத்துரு பரிசீலனையில் உள்ளது. களக்காட்டில் பேருந்து நிலையத்திற்கு இடம் தேர்வு செய்தபின் பேருந்து நிலையம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.



**96—**

**சென்னை சட்டக் கல்லூரி எதிரில் சுரங்கப்பாதை அமைத்தல்**

வினா எண் 2992—**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை டாக்டர் அம்பேத்கர் சட்டக்கல்லூரி எதிரில் நான்கு சாலைகளும் சந்திக்கும் இடத்தில் சுரங்கப்பாதை (Subway) அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சென்னை டாக்டர் அம்பேத்கர் சட்டக் கல்லூரி எதிரில் நான்கு சாலைகளும் சந்திக்கும் இடத்தில் சுரங்கப்பாதை (Subway) அமைக்கும் திட்டம் தயாரிக்கப்பட்டு பின்பு கைவிடப்பட்டது.

**97—**

**நகரப் பஞ்சாயத்துக்களின் வருமானத்தைப் பெருக்க திட்டம்**

வினா எண் 3049—**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நகரப் பஞ்சாயத்துக்களின் வருமானத்தைப் பெருக்க அரசிடம் திட்டம் ஏதேனும் ஆய்வில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஆம். பேரூராட்சிகளின் வருவாயைப் பெருக்க உரிய வழிமுறைகளை பரிந்துரை செய்ய மாநில நிதிக்குழு அமைக்கப்பட்டு, இக்குழு தனது அறிக்கையை சமர்ப்பித்துள்ளது. அதன் பரிந்துரைகள் அரசின் ஆய்வில் உள்ளன.

[1997 ஏப்ரல் 30

98—

**எழில்மிகு சென்னை 2000 திட்டத்தின்கீழ் முக்கிய சாலைகளை சீர்செய்தல்**

வினா எண் 3194—**திரு. ந. கருப்பண்ண உடையார்**: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எழில்மிகு சென்னை 2000 திட்டத்தின்கீழ் முக்கியமான சாலைகள் சீர் செய்யப்படுமா?

(ஆ) ஆம் எனில், மழைக்காலத்திற்கு முன்னர் சரி செய்யப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) எழில்மிகு சென்னை 2000 திட்டத்தின் கீழ் சென்னை மாநகராட்சிக்கு எந்தவிதமான நிதியுதவியும் தரப்படவில்லை. முக்கியமான சாலைகள் சீரமைக்கும் பணிகள் கடந்த ஆண்டுகளில் சென்னை மாநகராட்சியின் நிதி நிலையின் கீழ் ஒதுக்கீடு செய்த நிதியின் மூலம் செய்யப்பட்டு வந்தன. அது போன்றே நடப்பு நிதி ஆண்டிலும் பழுதுபட்ட சாலைகளை முன்னுரிமை அடிப்படையில் தேர்வு செய்து சீரமைக்கும் பணி மேற்கொள்ளப்படும்.

(ஆ) அவ்வாறு சாலைகள் சீரமைக்கும் அனைத்துப் பணிகளையும் மழைக்காலத்திற்கு முன்னால் முடிக்க இயலாது.

99—

**கோரணம்பட்டி சந்தைக்கருகில் கிராம மருந்தகம் ஏற்படுத்தல்**

வினா எண் 3223—**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியம், கோரணம்பட்டி சந்தைக்கருகில் ஒரு கிராம மருந்தகம் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?



1997 ஏப்ரல் 30 ]

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியம், கோரணம்பட்டி ஊராட்சியில் இயங்கிவந்த சித்த மருத்துவ மனையில் மருத்துவர் மருத்துவமனைக்கு சரியாக வராததின் காரணமாகவும், இம்மருத்துவமனையில் பொது மக்களுக்கு பயன்கிடைக்காமல் இருந்து வந்ததால் மருந்தகம் மூடப்பட்டது. ஒன்றிய நிதிநிலை பற்றாக்குறை காரணமாக புதிய மருத்துவர் நியமனம் செய்யப்படவில்லை. எனவே கோரணம்பட்டி சந்தைக்கு அருகில் கிராம மருந்தகம் ஏற்படுத்த இயலாது.

100—

**பூசாரிப்பட்டி கிராமத்திலுள்ள கிராம மருத்துவமனை**

வினா எண் 3316—**திரு. ஆர். ஆர். சேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி பூசாரிப்பட்டி கிராமத்தில் செயல்படாத கிராம மருத்துவமனையை செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியம், பூசாரிப்பட்டி ஊராட்சி கிராம மருந்தகம், பகுதிநேர கிராம மருந்தகமாக பிற்பகல் 2 மணிவரை செயல்பட்டு வருகிறது.

**101—**

**தண்டராம்பட்டு தொகுதி கிராமங்களுக்கு மின்வசதி அளித்தல்**

வினா எண் 3384—**திரு. கே. மணிவர்மா:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், தண்டராம்பட்டு தொகுதி, அக்கரைப்பட்டி, கீழ்வலசை, மேல்வலசை ஆகிய கிராமங்களுக்கு மின்வசதி அளிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், தண்டராம்பட்டு தொகுதி, அக்கரைப்பட்டி, கீழ்வலசை, மேல்வலசை ஆகிய கிராமங்களுக்கு மின்பாதை எடுத்துச்செல்ல பாதை வசதி இல்லாததால் மலைக் கிராமங்களுக்கு மின்வசதி செய்துதர இயலாது.

**102—**

**அவினாசி பேருந்து நிலையத்தை புதிய இடத்திற்கு மாற்றுதல்**

வினா எண் 3247—**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், அவினாசி பேருந்து நிலையத்தை புதிய இடத்திற்கு மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) புதிய பேருந்து நிலையத்திற்கான இடம் ஒப்படைக்கப்பட்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு முதற்கட்ட பணிகள் துவங்கும் நிலையில் உள்ளன.

**103—**

**கலையனூரில் குடிநீர் தட்டுப்பாடு**

வினா எண் 3441—**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, சித்தூர் கிராமம், கலையனூரில் குடிநீர் தட்டுப்பாடு உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அங்கு ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி மின் இயந்திரம் வைத்து குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சித்தூர் கிராமம், கலையனூரில் குடியிருப்புப் பதிவேடுகள் மற்றும் பேச்சு வழக்கில் உள்ளபடி. இக்கிராமத்தின் மக்கள் தொகை 1991 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 240 ஆகும். இங்கு ஒரு கையிறைப்பான் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றது. வாரிய விதிகளின்படி மேற்கண்ட மக்கள் தொகைக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. இக்கிராமத்திற்கு முழுமையான குடிநீர் வசதி வழங்கும் பொருட்டு வரும் நிதியாண்டுகளில் முன்னுரிமை அடிப்படையில் குடிநீர்த் திட்டம் மேற்கொள்ளப்பட பரிசீலிக்கப்படும்.

**104—**

**அம்பத்தூர் நகராட்சி துப்புரவுப் பணியாளர்கள் எண்ணிக்கையை அதிகரித்தல்**

*வினா எண் 3492*—**திரு. ஜே. எம். ஆரூண் ரஷீத்:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*அம்பத்தூர் நகராட்சி துப்புரவுப் பணியாளர்களின் எண்ணிக்கையை மக்கள் தொகைக்கு ஏற்ப அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*விடை—*

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

அம்பத்தூர் நகராட்சிக்குக் கூடுதலாக துப்புரவுப் பணியாளர் பணியிடங்கள் தோற்றுவிப்பது தொடர்பான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**105—**

**அம்பத்தூர் நகராட்சிப் பகுதிகளில் குப்பைகளை அகற்ற தனியார் ஒப்பந்தக்காரர்களை நியமிக்கும் திட்டம்**

*வினா எண் 3494*—**திரு ஜே. எம். ஆரூண் ரஷீத்:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*அம்பத்தூர் நகராட்சிப் பகுதிகளிலுள்ள குப்பைகளை அகற்ற தனியார் ஒப்பந்தக்காரர்களை நியமிக்கும் திட்டம் அரசின் பரிசீல்னையில் உள்ளதா?*

*விடை—*

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இல்லை.



**106—**

**அம்பத்தூர் நகராட்சி அலுவலகத்திற்கு கூடுதல் கட்டிடம்**

*வினா எண் 3497*—**திரு. ஜே. எம். ஆரூண் ரஷீத்:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*அம்பத்தூர் நகராட்சி அலுவலகத்திற்குப் போதிய இட வசதி இல்லாததால் கூடுதல் கட்டிடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*விடை—*

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

அம்பத்தூர் நகராட்சி அலுவலகத்தில் போதிய இடவசதி இல்லாததால், ரூ. 11.00 லட்சம் செலவில் கூடுதல் கட்டிடங்கள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**107—**

**அம்பத்தூர் நகராட்சிப் பகுதியில் மின்சார தகனக்கூடம் அமைத்தல்**

*வினா எண் 3500*—**திரு ஜே. எம். ஆரூண் ரஷீத்:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*அம்பத்தூர் நகராட்சிப் பகுதியில், மின்சார தகனக்கூடம் அமைக்க அரசு முன்வருமா?*

*விடை—*

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

மின்சார தகனக்கூடம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் நிலுவையில் இல்லை.

[1997 ஏப்ரல் 30

108—

**பெரம்பலூர் பேரூராட்சியை நகராட்சியாக உயர்த்தல்**

வினா எண் 3584—**டாக்டர் மு. தேவராஜன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பலூர் பேரூராட்சியை நகராட்சியாக உயர்த்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

109—

**கண்ணம்மாபேட்டை மின்சார எரியூட்டுக் கருவிகளைப் பழுதுபார்த்தல்**

வினா எண் 3597—**திரு. மு. க. ஸ்டாலின்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை, தியாகராயநகர் கண்ணம்மாபேட்டை மயானத்தில் பழுதடைந்துள்ள மின்சார எரியூட்டுக் கருவிகளைப் பழுதுபார்த்து, இயங்கச் செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கண்ணம்மாபேட்டை மயானத்தில் மின்சார எரியூட்டுச் சாதனங்கள் எதுவும் இல்லை. இந்த மயானத்தில் மின்சாரத்தினால் எரியூட்டும் கருவி புதியதாக அமைத்திட நடப்பு நிதியாண்டில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



1997 ஏப்ரல் 30]

110—

**சென்னை பெசன்ட் நகர் மின்சார மயானம்**

வினா எண் 3598—**திரு. மு. க. ஸ்டாலின்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை, பெசண்ட் நகர் மின்சார மயானத்தில் தகனம் செய்ய அதிக நேரமாவதால் தற்போது அளிக்கப்படும் 440 வோல்ட் மின்சாரத்தைக் கூடுதலாக்கி, 33 KV/11KV 6.6 KV மின்திறனுடன் செயல்படும் அருகிலுள்ள துணைமின் நிலையத்திலிருந்து 11KV/6.6KV திறனுள்ள மின்சாரம் வழங்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பெசன்ட் நகர் மின்சார மயானத்தில் தற்பொழுது தமிழ்நாடு மின்சார வாரியம் புதிய டிரான்ஸ்பார்மர் நிறுவி மின்சார வோல்ட்டேஜை மேம்படுத்தி உள்ளதால் தற்போது இறந்த உடலை தகனம் செய்ய சுமார் 2 முதல் 2 மணி 15 நிமிடங்களாகிறது. மேலும் மின்சாரத்தின் மூலம் தகனம் செய்யும் கருவி 440 வோல்ட்டேஜ் இயங்குவதால் 11kv/6.6kv. திறனுள்ள மின்சாரம் இதற்கு பயன்படுத்த இயலாது.

111—

**நகராட்சிகளிலுள்ள மயானங்களுக்கு நவீன மின் எரியூட்டுச் சாதனங்கள் அமைத்தல்**

வினா எண் 3599—**திரு. மு. க. ஸ்டாலின்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1997 ஏப்ரல் 30

மும்பை போன்ற பெருநகரங்களில் உள்ளது போன்று, தமிழ்நாட்டில் நகராட்சிகளிலுள்ள மயானங்களுக்கு நவீன மின் எரியூட்டுச் சாதனங்கள் அமைத்து, அவை விரைவில் செயல்பட, அதிக திறனுள்ள மின்சாரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வாய்ப்புள்ள நகராட்சிகளில் நிதிவசதி போதுமானதாக இருந்து, அச்சாதனம் நிறுவுவதற்கு போதுமான மற்ற வசதிகள் இருந்தால் அமைக்கலாம் என அனைத்து நகராட்சி ஆணையர்களுக்கும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

**112—**

### பெண்ணாகரம் பேருந்து நிலையத்தை நகரின் புறப்பகுதிக்கு மாற்றல்

வினா எண் 3607—**திரு. ஜி. கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் பேருந்து நிலையம் சிறிய இடத்தில் அமைந்துள்ளதால், அதனை நகரின் புறப்பகுதிக்கு மாற்ற அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பெண்ணாகரம் பேருந்து நிலையத்தை வேறு இடத்திற்கு மாற்றம் செய்ய தற்போது சாத்தியக் கூறுகள் இல்லை.



1997 ஏப்ரல் 30 ]

**113—**

### ஊரக வளர்ச்சித் துறை கிராம சித்த மருத்துவ அலுவலர்களுக்கு ஊதிய உயர்வு

வினா எண் 3645-**திரு. ஜி. கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு முழுவதும் ஊரக வளர்ச்சித் துறையில் கிராம சித்த மருத்துவ அலுவலர்களாக (R.M.O.) பணிபுரிபவர்களுக்கு கடந்த 20 ஆண்டுகளாக ரூ.400/-தொகுப்பூதியமாக வழங்கப்பட்டு வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அவர்களுக்கு ஊதிய உயர்வு வழங்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஊரக மருத்துவ அலுவலர்களுக்கு 1-6-1988-ஆம் நாளிலிருந்து மாதம் ரூ.400/- தொகுப்பு ஊதியமாக வழங்கப்பட்டு வருகின்றது.

(ஆ) அவர்களுக்கு பல்வேறு நாள்கள் முதல் ரூ.20/-வீதம் மொத்தம் ரூ.140/-கூடுதலாக வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

**114—**

### சித்தொரகடம் ஏரியை தூர்த்து பேருந்து நிலையம் அமைத்தல்

வினா எண் 3663-**திரு. ஜே. எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா.—

பாசனத்திற்குப் பயன்படாத அம்பத்தூர் மேனாம்பேடு அருகேயுள்ள சித்தொரகடம் ஏரியைத் தூர்த்து பேருந்து நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பொதுப்பணித் துறைக்குச் சொந்தமான சித்தொரகடம் ஏரியை அம்பத்தூர் நகராட்சிக்கு நிலமாற்றம் செய்து பேருந்து நிலையம் அமைக்க மாவட்ட ஆட்சியருடன் கலந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**115—**

**எடப்பாடி நகரம் சின்ன ஏரிக்கருகிலுள்ள மயானத்திற்கு வசதிகள்**

வினா எண் 3665—**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி நகரம், சின்ன ஏரிக்கருகிலுள்ள மயானத்திற்கு பாதை, கழிவுநீர் வடிகால் அமைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

எடப்பாடி நகராட்சியின் நிதிநிலை பற்றாக்குறையாக உள்ளதால் நகராட்சி நிதியிலிருந்து மயானத்திற்கு பாதை, கழிவுநீர் வடிகால் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**116—**

**பெரம்பலூர் தொகுதிக்கு கொள்ளிடம் கூட்டுக் குடிநீர்த் திட்டம்**

வினா எண் 3821—**டாக்டர் மு. தேவராஜன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) பெரம்பலூர் தொகுதி மக்களுக்கு குடிநீர் கிடைக்க கொள்ளிடம் கூட்டுக்குடிநீர்த் திட்டத்தினை செயல்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம், எனில் எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) பெரம்பலூர் நகரப் பேரூராட்சிக்கு ரூ.26.40 கோடி மதிப்பீட்டில் கொள்ளிடத்திலிருந்து குடிநீர் வழங்கும் திட்டம் தீட்டப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**117—**

**கோயம்புத்தூர் அருகிலுள்ள இந்திய அரசினர் அச்சகம் மற்றும் காரமடை நகரப் பஞ்சாயத்து பெறப்படும் குடிநீர்**

வினா எண் 3829—**திரு. பா. அருண்குமார்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் அருகிலுள்ள இந்திய அரசினர் அச்சகம் மற்றும் காரமடை நகரப் பஞ்சாயத்து ஆகிய இரண்டும் முறையே அத்திக்கடவு குடிநீர் திட்டம் மற்றும் காரமடை குடிநீர் திட்டம் இவற்றின் மூலம் குடிநீர் பெற்று வருவது அரசு அறியுமா?

(ஆ) ஆமெனில், இந்த இரண்டுக்கும் ஏற்கெனவே மேட்டுப்பாளையம் நகராட்சியால் வழங்கப்பட்ட குடிநீரை நிறுத்தி மேட்டுப்பாளையம் நகராட்சியே அந்த நீரைப் பயன்படுத்துவதற்கு அரசு அனுமதி வழங்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) : அத்திக்கடவு/பில்லூர் திட்டத்திலிருந்து மத்திய அரசு அச்சகத்திற்கும் காரமடை பேரூராட்சிக்கும் குடிநீர்

வழங்கப்படவில்லை. காரமடை பேரூராட்சிக்கு தற்சமயம் புதிய தனி குடிநீர் திட்டம் மூலம் பவானி ஆற்று நீர் குளோரினேற்றம் செய்யப் பட்டு விநியோகிக்கப்படுகிறது. இந்திய அரசு அச்சகம், காரமடை பேரூராட்சி மற்றும் மேட்டுப்பாளையம் நகராட்சி ஆகியவற்றின் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் நிறுவனச் செலவினை விகிதாச்சார அடிப்படையில் அந்தந்த உள்ளாட்சியும் மத்திய அரசு அச்சகமும் ஏற்றுள்ளன. வழங்கப்படும் தண்ணீருக்கு தண்ணீர்க் கட்டணமும், மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு அவைகள் செலுத்துகின்றன. எனவே மேற்படி யோசனையை நகராட்சி நிர்வாக ஆணையரும் பேரூராட்சிகளின் இயக்குநரும் மத்திய அரசு அச்சக நிர்வாகமும் சேர்ந்து கொள்கை முடிவு செய்ய வேண்டும்.

**118—**

### திண்டிவனம் நகர் மீன் அங்காடி கட்டிடம்

வினா எண் 3867—**திரு. ரா. சேதுநாதன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டிவனம் நகர் மீன் அங்காடியிலுள்ள பழுதடைந்த கட்டிடத்தை அப்புறப்படுத்தி, ஒரு சமுதாயக்கூடம் கட்ட அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) சமுதாயக்கூடம் கட்ட உத்தேசம் ஏதும் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை

**119—**

### புதுமண்ணியாற்றின் குறுக்கே பாலம் கட்டுதல்

வினா எண் 4113—**திரு. கோ. மோகனதாசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) சீர்காழி ஊராட்சி ஒன்றியத்தையும் மயிலாடுதுறை ஒன்றியத்தையும் இணைக்க புதுமண்ணியாற்றின் குறுக்கே மேலத்தேனூரில் பாலம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மேலத்தேனூரில் ஏற்கெனவே ஒரு பாலம் உள்ளது. மேலும் ஒரு பாலம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**120—**

### ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் பணிபுரியும் நடத்தாட்டிகளுக்கு வழங்கப்படும் ஊதியம்

வினா எண் 4187—**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் பணிபுரியும் நடத்தாட்டிகளுக்கு (Conductresses) வழங்கப்படும் ஊதியம் ஒன்றியத்திற்கு ஒன்றியம் வேறுபடுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதனை ஒரே அளவில் மாநிலம் முழுவதும் சீரமைக்க அரசு முன் வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள பள்ளி நடத்தாட்டிகள் அனைவருக்கும் காலச்சம்பள ஏற்றமுறையில் ஊதியம் நிர்ணயித்து வழங்க அரசு ஏற்கெனவே ஆணையிட்டுள்ளது.

**121—**

**திருநெல்வேலி சந்திப்பு பெரியார் பேருந்து நிலையத்திலுள்ள ஆக்கிரமிப்புகள்**

வினா எண் 4235—**திரு. இரா. ஆவுடையப்பன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி சந்திப்பு பெரியார் பேருந்து நிலையத்தில் ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி சந்திப்பு மத்திய பேருந்து நிலையத்தில் அனுமதியற்ற ஆக்கிரமிப்புகள் ஏதும் செய்யப்படவில்லை. அவ்வப்போது ஆக்கிரமிப்பு செய்து வருகின்றவர்களை மாநகராட்சி அலுவலர்கள் மூலம் அப்புறப்படுத்தி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

**122—**

**நகராட்சி ஊழியர்களை அரசு ஊழியர்களாக்கும் திட்டம்**

வினா எண் 4246—**திரு. இ. கணேசன், திரு. அ. சுடலைமுத்து மற்றும் திரு. கு. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நகராட்சி ஊழியர்களையும் அரசு ஊழியர்களாக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.



(ஆ) நகராட்சி மற்றும் நகரியங்களில் பணிபுரியும் பொது சுகாதார ஊழியர்கள் உட்பட அனைத்து ஊழியர்களையும் அரசு ஊழியர்களாக ஏற்கெனவே அரசு அறிவித்து அரசாணை (நிலை) எண் 600 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 14-9-1989-ல் ஆணையிட்டுள்ளது. ஆனால் இதுவரை அதற்கான சட்ட விதித் திருத்தங்கள் செய்யப்படவில்லை. தற்போது உள்ளாட்சித் தேர்தல்கள் நடந்து முடிந்து மக்கள் பிரதிநிதிகள் 25-10-1996 முதல் நகராட்சிகளில் பொறுப்பேற்றுள்ளதால், நகராட்சி மன்றங்களின் கருத்தினையறிந்து இது மேலும் பரிசீலிக்கப்படும்.

**123—**

**தருமபுரி நகரப் பேருந்து நிலையம்**

வினா எண் 4248—**திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தர்மபுரி நகரில் புதிதாக அமைந்துள்ள நகரப் பேருந்து நிலையத்திற்கு மறைந்த தியாகி தீர்த்தகிரியார் பெயர் சூட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தர்மபுரி நகரில் புதிதாய் அமைந்துள்ள நகரப் பேருந்து நிலையத்திற்கு மறைந்த தியாகி தீர்த்தகிரியார் பெயர் சூட்டல் பற்றி பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

**124—**

**பவானி நகர் பழைய பேருந்து நிலையம்**

வினா எண் 4251—**திரு. ஜி. பி. வெங்கிடு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பவானி நகர் பழைய பேருந்து நிலையத்தை நகரப் பேருந்து நிலையமாக மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பவானி நகர் பழைய பேருந்து நிலையத்தை நகரப் பேருந்து நிலையமாக மாற்றும் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

**125—**

**சென்னை மாநகராட்சி—ஆங்கிலத்தில் பெயர்ப் பலகை வைத்தல்**

வினா எண் 4253—**திரு. மு. க. ஸ்டாலின்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை ரிப்பன் கட்டிடத்தில் சென்னை மாநகராட்சி என்றுள்ளதை Corporation of Chennai என்று ஆங்கிலத்தில் பெயர்ப் பலகை வைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சென்னை மாநகராட்சி, ரிப்பன் கட்டிடத்தில் Corporation of Chennai என்று ஆங்கிலத்தில் பெயர் பலகை 3-10-1996 அன்று வைக்கப்பட்டுள்ளது.

**126—**

**சென்னை மாநகரை சென்னை மகா நகரமாக்குதல்**

வினா எண் 4254—**திரு. மு. க. ஸ்டாலின்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகரம் என்றிருப்பதை மாற்றி, சென்னை மகாநகரம் ஆக்கும் (கிரேட்டர் சிட்டி) செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?





(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): இது குறித்து கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**127—**

**திருவாரூர் பேருந்து நிலையத்தை விரிவாக்கும் திட்டம்**

வினா எண் 4371—**திரு. அ. அசோகன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவாரூர் பேருந்து நிலையத்தை விரிவாக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருவாரூர் பேருந்து நிலையத்தை விரிவாக்கும் திட்டம் அரசிடம் தற்போது இல்லை.

**128—**

**நகராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள்—தேர்தல்—பணிக்கென உதவியாளர் மற்றும் இளநிலை உதவியாளர் நியமனம்**

வினா எண் 4419—**திரு. எம். ஆண்டி அம்பலம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நகராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்களில் தேர்தல் பணிக்கென உதவியாளர், இளநிலை உதவியாளர் பணியிடங்கள் நிரப்பப்பட அரசு ஆணை பிறப்பித்தும், இதுவரை பணியிடங்கள் நிரப்பப்படாததன் காரணம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

மாநிலத்திலுள்ள ஊராட்சி அமைப்புகளுக்குத் தேர்தல் பணிகளுக்கென தோற்றுவிக்கப்பட்ட அனைத்து தற்காலிகப் பணியிடங்களும் நிரப்பப்பட்டுவிட்டன. ஆனால் ஊராட்சி ஒன்றிய அளவில் அனுமதிக்கப்பட்ட ஒரு இளநிலை உதவியாளர்—தட்டச்சர் பணியிடம் மட்டும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் கட்டுப்பாட்டின் கீழ் வருவதால் அவற்றை உடனடியாக நிரப்பப்பட முடியவில்லை. பின்னர் தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையம் மூலம் பட்டியல் பெறப்பட்டு ஆய்வு செய்யும் நிலையில் தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டதால் குறுகிய காலத்தில் மேற்குறிப்பிட்ட இளநிலை உதவியாளர்-தட்டச்சர் பணியிடம் நிரப்பப்படுவதால் பயனேதும் கிடைக்காது என அரசு முடிவெடுத்ததாலும், இப்பணியிடம் மட்டும் நிரப்பபட்டவில்லை.

**129—**

**புவனகிரி வெள்ளாற்றுப் பாலத்தில் சோடியம் ஆவி விளக்கு அமைத்தல்**

வினா எண் 4452—**திரு. அ. வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா?

புவனகிரி வெள்ளாற்றுப் பாலத்தில் சோடியம் ஆவி விளக்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஆம். 1996-97-ஆம் ஆண்டு அடிப்படை வசதித் திட்டத்தின்கீழ் அமைக்கப்பட உள்ளது.



**130—**

**வேளச்சேரி மாநகரநாட்சி நடுநிலைப்பள்ளிக் கூரைக்கட்டிடம்**

வினா எண் 4464—**திரு. மீ.அ. வைத்தியலிங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாம்பரம் தொகுதி, 153-5வது வட்டம் வேளச்சேரி மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில் பழைய கூரைக்கட்டிடத்தை ஆர்.சி.சி. தளமாக மாற்றிட அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தாம்பரம் தொகுதி 153-5-வது வட்டம் வேளச்சேரியில் மாநகராட்சி நடுநிலைப்பள்ளி ஏதும் இல்லை. மாநகராட்சி தொடக்கப்பள்ளி ஒன்றுதான் செயல்படுகிறது. வரும் கல்வியாண்டில் பழைய கூரைக் கட்டிடத்தை மாற்றி புதிய கட்டிடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

**131—**

**நாகப்பட்டினம் நகராட்சியில் கட்டப்பட்டுள்ள கழிப்பிடங்கள்**

வினா எண் 4472—**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் நகராட்சியில் அரசால் கட்டப்பட்டுள்ள கழிப்பிடங்கள் எத்தனை?

(ஆ) அவைகளில் தண்ணீர் வசதிக்காக மின் மோட்டார்கள் உள்ளனவா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) நாகப்பட்டினம் நகராட்சியில் அரசு நிதியுதவியுடன் 14 கழிப்பிடங்கள் கட்டப்பட்டுள்ளன.

(ஆ) அவைகளில் 3 கழிப்பிடங்களில் தண்ணீர் வசதிக்காக மின் மோட்டார்கள் பொருத்தப்பட்டுள்ளன.

**132—**

**நாட்றாம்பள்ளி தொகுதி ஆதிதிராவிடர்களுக்கு இலவச விடுகள்**

வினா எண் 4557—**திரு. ஆர். மகேந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்றாம்பள்ளி தொகுதி, சோலையார்பேட்டை ஒன்றியம், புத்தகரம், கந்திலி ஒன்றியம் பேராம்பட்டு ஆதிதிராவிட மக்களுக்கு இலவச வீடுகள் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) நடப்பாண்டில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**133—**

**சேலம் மாநகரத்தைச் சுற்றி வட்டச்சாலை அமைக்கும் திட்டம்**

வினா எண் 4711—**திரு. ஆர். ஆர். சேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) சேலம் மாநகரத்தைச் சுற்றி வட்டச் சாலை (Ring Road) அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?





விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சேலம் மாநகரத்தைச் சுற்றி வட்டச் சாலை (Ring Road) அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

**134—**

**நகராட்சிகளில் பணிபுரியும் தற்காலிக ஓட்டுநர்கள்**

வினா எண் 4724—**திரு. குத்தாலம். பி. கல்யாணம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நகராட்சிகளில் தற்காலிக (என்.எம்.ஆர்.) ஓட்டுநர்களாகப் பணிபுரியும் நபர்களை நிரந்தரம் செய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

நகராட்சிகளில் பணிபுரியும் ஓட்டுநர்கள் உள்ளிட்ட தினக்கூலி பணியாளர்களை நிரந்தரம் செய்ய பொதுவான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**135—**

**வேலூர் அம்மை நோய் மருத்துவமனைக்கருகில் பயணியர் விடுதி கட்டுதல்**

வினா எண் 4759—**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் நகராட்சியின் அம்மை நோய் மருத்துவமனைக்கு அருகில் உள்ள காலியிடத்தில் பயணியர் விடுதி கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) வேலூர் நகராட்சியின் அம்மைநோய் மருத்துவமனைக்கு அருகில் காலியிடத்தில் பயணியர் விடுதி கட்ட திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) எழவில்லை.

**136—**

**வாடிக்கோட்டை கிராமத்திற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் குடிநீர் வழங்கல்**

வினா எண் 4799—**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சங்கரன்கோயில் ஒன்றியம், வாடிக்கோட்டை கிராமத்திற்கு குடிநீர் வழங்க ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சங்கரன் கோவில் ஒன்றியம், வாடிக்கோட்டை கிராமத்தில், மூன்று கையிறைப்பான்கள் பயனில் உள்ளன. இதன்மூலம் இப்பகுதிக்கு நாள் ஒன்றிற்கு நபர் ஒருவருக்கு கிடைக்கப்பெறும் குடிநீர் அளவு குறைந்தபட்சமாக 8 லிட்டரும், அதிகபட்சமாக 25 லிட்டருமாகும்.

மேலும், 1996-97-ஆம் ஆண்டிற்கான திட்டப் பட்டியலில் இக்கிராமம் இடம் பெறாத காரணத்தால் அடுத்த நிதியாண்டில் (1997-98-ல்) விசைப்பம்பு திட்டம் நிறைவேற்ற, திட்டப் பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்படும்.



**137—**

**சேலம் சந்திப்பு அருகேயுள்ள பேருந்து நிலையத்தை இடம் மாற்றுதல்**

வினா எண் 4806—**திரு. ஆர். ஆர். சேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகராட்சிக்குட்பட்ட சேலம் சந்திப்பு அருகே உள்ள பேருந்து நிலையத்தை சூரமங்கலம் காவல் நிலையம் அருகில் மாற்றும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.**

(அ) ஆம்.

(ஆ) சேலம் மாநகராட்சிக்குட்பட்ட சேலம் சந்திப்பு அருகே உள்ள பேருந்து நிலையத்தை சூரமங்கலம் காவல் நிலையம் அருகில் மாற்றம் செய்யக் கோரும் திட்டம் தேர்ந்தெடுக்கப்பட்ட மாமன்றத்தின் பரிசீலனையில் உள்ளது.

**138—**

**எடப்பாடி நகர் பேருந்து நிலையத்தில் நவீன வசதியுள்ள தினவாடகை விடுதி கட்டுதல்**

வினா எண் 4839—**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி நகரில் பேருந்து நிலையத்தில் பயணிகள் தங்கிச் செல்ல நவீன வசதி உள்ளடங்கிய தினவாடகை விடுதி கட்ட அரசு பரிசீலிக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): எடப்பாடி நகரில் பேருந்து நிலையத்தில் பயணிகள் தங்கிச் செல்ல நவீன வசதி உள்ளடக்கிய தினவாடகை விடுதி கட்டுவது குறித்து பரிசீலித்ததில், எடப்பாடி நகரில் தங்கும் அளவிற்கு பயணிகளின் வருகை மிகவும் குறைவு. பயணிகள் தங்குவதற்கு அறைகள் கட்டினால் இலாபகரமாக இருக்காது. மேலும், நகராட்சியின் நிதிநிலை மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளதால், பயணிகள் விடுதி கட்டுவதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை.

**139—**

**தருமபுரி நகரில் கலையரங்கம் அல்லது திருமண மண்டபம் கட்டுதல்**

வினா எண் 4846—**திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி நகரில் ஒரு கலையரங்கமோ அல்லது ஒரு திருமண மண்டபமோ கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தருமபுரி நகரில் நகராட்சியால் திருமண மண்டபம் ஒன்று கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**140—**

**திண்டிவனம் நகரத்திலுள்ள மாடுவெட்டும் இடத்தை ஊருக்கு வெளியே அமைத்தல்**

வினா எண் 4853—**திரு. ரா. சேதுநாதன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—





திண்டிவனம் நகரத்தில் கிடங்கல்-2 பகுதியிலுள்ள மாடு வெட்டும் இடத்தை ஊருக்கு வெளியே அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பரிசீலனையில் இல்லை.

**141—**

**நிதிநிலைமை நலிவுற்ற நகராட்சிகளுக்கு வழங்கப்பட்டு வந்த "வழிவகைகள் முன் பணம்"**

வினா எண் 4863—**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிதி நிலைமை நலிவுற்ற நகராட்சிகளுக்கு வழங்கப்பட்டு வந்த "வழிவகைகள் முன்பணம்" தற்பொழுது வழங்கப்படுவதில்லையா?

(ஆ) ஆம் எனில், அதனை மீண்டும் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) நிதிநிலை நலிவுற்ற நகராட்சிகளுக்கு "வழிவகைகள் முன்பணம்" தற்பொழுதும் வழங்கப்பட்டு வருகிறது.

(ஆ) வினாவிற்கு இடமில்லை

[1997 ஏப்ரல் 30

**142—**

**ஊராட்சிகளில் பணியாற்றும் சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் குடிநீர் விசைப்பம்பு இயக்குவோருக்கு ஊதியம் வழங்கல்**

வினா எண் 4974—**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சிகளில் பணியாற்றும் சுகாதாரப் பணியாளர்கள், குடிநீர் விசைப்பம்பு இயக்குவோர்களுக்கு 1977-ம் ஆண்டு அரசாணைப்படி ஊதியம் வழங்கப்படுவதில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம். [வினாவில் குறிப்பிடப்பட்டுள்ளது தொழிலாளர் நலன் மற்றும் வேலை வாய்ப்புத் துறையின் 449 எண்ணிட்ட 6-6-77 நாளிட்ட (நிலை) அரசாணை ஆகும்.]

(ஆ) ஊராட்சிகளிலுள்ள சுகாதாரப் பணியாளர்கள்/துப்புரவுப் பணியாளர்களும், விசைப்பம்பு இயக்குவோர்களும் பகுதி நேரப் பணியாளர்கள் ஆவார்கள். இந்த அரசாணை அவர்களுக்குப் பொருந்தாது. அவர்களுக்கு ஊரக வளர்ச்சித் துறையின் 66 எண்ணிட்ட 3-2-90 நாளிட்ட (நிலை) அரசாணையில் ஊதியம் நிர்ணயித்து அரசு ஏற்கெனவே ஆணையிட்டுள்ளது.

**143—**

**அணைக்கட்டு மலைக் கிராமங்களுக்கு தெரு மின்விளக்கு வசதி**

வினா எண் 4997—**திரு. சி. கோபு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1997 ஏப்ரல் 30 ]

வடஆற்காடு அம்பேத்கர் மாவட்டம், அணைக்கட்டு தொகுதியிலுள்ள மலைக் கிராமங்களுக்கு தெரு மின்விளக்கு வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வடஆற்காடு-அம்பேத்கர் மாவட்டம் அணைக்கட்டு ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள மலைக் கிராமங்களில் மொத்தம் 124 தெருவிளக்குகள் எரிந்து கொண்டிருக்கின்றன. இன்னும் 45 தெருவிளக்குகள் பொருத்த, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

**144—**

**திருப்பூர் பேருந்து நிலையங்கள் மற்றும் மிதிவண்டி நிறுத்தும் இடங்களில் கட்டண வசூல் ஏலம் விடல்**

வினா எண் 5054—**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகரிலுள்ள இரண்டு பேருந்து நிலையங்களிலும் மிதிவண்டி நிறுத்துமிடத்திலும் கட்டண வசூல் ஏலம் விடப்படாமல் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தற்போது ஒரு பேருந்து நிலையம்தான் இயங்கி வருகிறது. மிதிவண்டி நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமையை நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் பொது ஏலம் மூலம் எடுத்தவர், பொது ஏலம் விடக்கூடாது என்றும் 15% குத்தகை தொகையில் உயர்வு செய்து கொடுக்க வேண்டும் என்றும் 1-4-92 முதல், முதலில்

இடைக்கால உத்தரவும் பின்னர் 19-8-96 ஆம் நாளிட்ட இறுதித் தீர்ப்பின்படி நிரந்தர உறுத்துக் கட்டளையும் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் பெற்றுள்ளார். இத்தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்ய திருப்பூர் நகராட்சி நடவடிக்கை எடுத்து வருகிறது.

**145—**

**வீராணம் திட்டத்தில் மாறுதல்**

வினா எண் 5096—**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

(அ) சென்னைக்குக் குடிநீர் கொண்டு வரும் வீராணம் திட்டத்தில் அரசு மாறுதல் செய்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) வீராணம் தண்ணீரை குழாய் மூலம் சென்னைக்குக் கொண்டுவரும் திட்டப் பகுதிக்குப் பதிலாக, சென்னை நகரின் குடிநீர் விநியோகப் பணிகளை மேம்படுத்தும் பொருட்டும் மற்றும் முதலாவது சென்னைக் குடிநீர் பகுதித் திட்டத்தில் முடிக்கப்படாத சில பணித் திட்டங்களைச் சேர்த்துக் கொள்ளும் பொருட்டும் வீராணம் திட்டத்தை அரசு மாற்றியமைத்துள்ளது.

**146—**

**கோயம்புத்தூரில் சுற்றுச்சாலை அமைத்தல்**

வினா எண் 5140—**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—





(அ) கோயம்புத்தூரில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க சுற்றுச்சாலை (Ring Road) அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): கோவை மாநகராட்சி எல்லைக்குள் சுற்றுச்சாலை (Ring Road) அமைக்கும் உத்தேசம் இல்லை.

**147—**

**கூத்தாநல்லூர் நகர் பேருந்து நிலையப் பணிகள்**

வினா எண் 5234—**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

(அ) ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டம், கூத்தாநல்லூர் நகரில் பேருந்து நிலையப் பணிகளை விரைவுபடுத்தி கட்டி முடிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): புதிய பேருந்து நிலைய கட்டுமானப் பணி முடிக்கப்பட்டு உட்புறச்சாலைகள் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

[1997 ஏப்ரல் 30

148—

**மன்னார்குடி நகராட்சி மூலம் கார், ஆட்டோக்கள் நிறுத்த வசதி செய்தல்**

வினா எண் 5236—**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டம், மன்னார்குடி நகராட்சியின் அருகில் நகராட்சி மூலம் கார், ஆட்டோக்கள் நிறுத்த வசதி செய்ய அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

நிரந்தர இடம் தேர்வு செய்து நகராட்சி நிதியில் இருந்து, கார், ஆட்டோக்கள் நிறுத்துமிடம் அமைக்க நகர்மன்றத்தின் ஒப்புதல் பெற்று வசதி செய்து தர நடவடிக்கை எடுக்கப்படும்.

149—

**திருப்பூர் நகர் 48-வது பிரிவில் கழிவு நீர் வடிகால் வசதி செய்தல்**

வினா எண் 5252—**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகர், 48-வது பிரிவு (Ward), என்.பி. காலனி மற்றும் வீரபாண்டி ஊராட்சி, பாரதிநகர் பகுதிகளில் சாக்கடைக் கழிவுநீர் வீதியில் தேங்குவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், கழிவுநீர் வடிகால் வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.



1997 ஏப்ரல் 30]

(ஆ) அங்கீகரிக்கப்படாமல் மனைப்பிரிவில் காலனி உருவாகியுள்ளதால் இக்காலனியின் கழிவு நீர் வெளியேறும் வகையில் சாக்கடை அமைக்க நகராட்சி செலவில் மேற்கொள்ள இயலாது.

150—

**பெரியகுமட்டியில் சமுதாயக் கூடம் அமைத்தல்**

வினா எண் 5295—**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புவனகிரி தொகுதி, பறங்கிப்பேட்டை ஒன்றியம், பெரியகுமட்டியில் சமுதாயக்கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

புவனகிரி தொகுதி, பறங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், பெரியகுமட்டியில் சமுதாய நலக்கூடம் கட்ட நடப்பு நிதியாண்டில் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

151—

**மேயர் பதவிக்கான தங்க ஆபரணங்கள் போன்றவற்றை நீக்குதல்**

வினா எண் 5328—**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஜனநாயக மரபுகளுக்கு முற்றிலும் புறம்பான தங்க ஆபரணங்கள், அணிகலன்கள், வெள்ளிச் செங்கோல் போன்ற முறைகளை மேயர் பதவியிலிருந்து எடுத்துவிட அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தற்சமயம் ஏதுமில்லை.

**152—**

**பேரூராட்சிகளுக்கு மக்கள் தொகை அடிப்படையில் நிதி ஒதுக்கீடு**

வினா எண் **5378—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்**: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூராட்சிகளுக்கு மக்கள் தொகை அடிப்படையில் நிதி ஒதுக்கீடு செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) பேரூராட்சிகளுக்கு தற்போது மக்கள் தொகை அடிப்படையில் 50% நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

**153—**

**ஒன்றியங்களில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஒதுக்கப்படும் தொகுப்பு வீடுகள்**

வினா எண் 5379—**திரு. எஸ். என். பாலசுப்பிரமணியன் மற்றும் திரு. மு. பெ. சாமிநாதன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒவ்வொரு ஒன்றியத்திலும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு 100 தொகுப்பு வீடுகள் ஒதுக்குவதை 500 வீடுகளாக அதிகப்படுத்தி கொடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.



(ஆ) வினா எழவில்லை.

**154—**

**ஊராட்சி ஒன்றியக் குழுவின் செயல்முறை அதிகாரங்கள்**

வினா எண் 5452—**திரு. கே. சுப்பராயன்** : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சி ஒன்றியக் குழுவின் செயல்முறை அதிகாரங்கள் வரையறுத்து அறிவிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் அதிகாரங்களை மேலும் விரிவாக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) :ஆம்.

**155—**

**ஊராட்சி மன்றங்களின் அதிகாரத்தையும் நிதி வசதியையும் அதிகரித்தல்**

வினா எண் 5453—**திரு. கே. சுப்பராயன்** : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஊராட்சி மன்றங்களின் அதிகாரத்தையும் நிதி வசதிகளையும் மேலும் அதிகரிக்க மாநில அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

ஆம்.

[1997 ஏப்ரல் 30

156—

உள்ளாட்சி அமைப்புகளுக்கான அதிகாரங்கள் மற்றும் செயல்முறைகள் குறித்த பயிற்சி முகாம்

வினா எண் 5454—**திரு. கே. சுப்பராயன்** : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கான அதிகாரங்கள் மற்றும் செயல்முறைகள் குறித்த மாவட்ட வாரியாகப் பயிற்சி முகாம் நடத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

ஆம். தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சித் தலைவர்களுக்கு உள்ளாட்சி அமைப்புகளுக்கான உரிமைகள் மற்றும் செயல்முறைகள் பற்றி பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. வட்டார ஊராட்சித் தலைவர்களுக்கும் பயிற்சி அளிக்கப்படும்.

157—

பலவஞ்சிப்பாளையம் ஜெ.ஜெ. நகரில் கட்டப்படும் தொகுப்பு வீடுகள்

வினா எண் 5547—**திரு. கே. சுப்பராயன்**: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் தொகுதி, பலவஞ்சிப்பாளையம் ஜெ.ஜெ. நகரில் கட்டப்பட்டு வந்த தொகுப்பு வீடுகள் தரமற்ற நிலையில் பாதிவேலையில் நிறுத்தப்பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?



1997 ஏப்ரல் 30 ]

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) நடவடிக்கை எடுக்கப்பட்டு வேலை நடைபெற்று வருகிறது.

158—

நல்லூர் பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு மயானவசதி

வினா எண் 5594—**திரு. கே. சுப்பராயன்** : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் நல்லூர் பேரூராட்சிக்குட்பட்ட செரங்கோடு, ஆர்.வி. நகர், சி.டி.சி. காலனி, அமர்ஜோதி நகர் பகுதிகளுக்கு மயான வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

நல்லூர் பேரூராட்சிக்குட்பட்ட செரங்கோடு, ஆர்.வி. நகர், சி.டி.சி. காலனி, அமர்ஜோதி நகர் ஆகிய பகுதிகளுக்கு அருகில் மயானம் ஏற்படுத்த புறம்போக்கு நிலங்கள் தற்போது ஏதும் இல்லை. எனவே, இதுகுறித்த பிரேரணை ஏதும் பரிசிலனையில் இல்லை.

159—

நகராட்சிகள் மூலம் வசூலிக்கப்படும் வீட்டு வரி மற்றும் நூலக வரி

வினா எண் 5601—**திரு. கே. சுப்பராயன்**: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நகராட்சிகள் வசூலிக்கும் வீட்டு வரியோடு நூலக வரியும் சேர்த்து வசூலிக்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அந்தத் தொகை நூலகப் பணிகளுக்கு மட்டுமே பயன்படுத்தப்படுகிறதா ?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) நகராட்சிகளிலிருந்து நூலகத் துறைக்கு செலுத்தப்பட்டபின் நூலகப் பணிகளுக்கு மட்டுமே நூலகத் துறையால் பயன்படுத்தப்படுகிறது.

**160—**

**வருமானம் அதிகம் இல்லாத பேரூராட்சிகளை ஊராட்சிகளாக்கும் திட்டம்**

வினா எண் 5658—**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வருமானம் அதிகம் இல்லாத பேரூராட்சிகளை ஊராட்சிகளாக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) இது குறித்து அனைத்து பேரூராட்சிகளின் தலைவர்களும் மன்ற தீர்மானம் பெற்று அரசுக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்கள்.



**161—**

**தாம்பரம் நகரத்தை மெகா நகரமாக உயர்த்துதல்**

வினா எண் 5734—**திரு. பெ.சு. திருவேங்கடம் :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் நகரம் மெகா சிட்டி அந்தஸ்துக்கு உயர்ந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**162—**

**அதம்பார் மற்றும் செருகளத்தூர் ஊராட்சிகளை இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு**

வினா எண் 5945—**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி குடவாசல் ஊராட்சி ஒன்றியத்தில் பெரிய ஊராட்சியான அதம்பார் ஊராட்சியை அதம்பார், பல்லவநத்தம் எனவும் செருகளத்தூர் ஊராட்சியை சித்தாடி, செருகளத்தூர் எனவும் இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா ?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலாம் தொகுதி, குடவாசல் ஊராட்சி ஒன்றியத்தில் அதம்பார் ஊராட்சியை அதம்பார்,

பல்லவநந்தம் எனவும், செருகளத்தூர் ஊராட்சியை சித்தாடி, செருகளத்தூர் எனவும் இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசிடம் இல்லை.

**163—**

**ஒன்றுக்கு மேற்பட்டு உள்ள வருவாய் கிராமங்களைக் கொண்ட ஊராட்சிகளை இரண்டாகப் பிரித்தல்**

வினா எண் 6079—**திரு. வீ. தமிழ்மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒன்றுக்கு மேற்பட்டு உள்ள வருவாய் கிராமங்களை உள்ளடக்கிய ஊராட்சிகளை நிர்வாக வசதிக்காக இரண்டு ஊராட்சிகளாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

(அ) ஒன்றுக்கு மேற்பட்டு உள்ள வருவாய் கிராமங்களை உள்ளடக்கிய ஊராட்சிகளை, நிர்வாக வசதிக்காக இரண்டு ஊராட்சிகளாகப் பிரிக்கும் செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசிடம் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**164—**

**செங்கோட்டை நகராட்சிப் பகுதியில் பாதாள சாக்கடைத் திட்டம்**

வினா எண் 6219—**திரு. கு. ரவி அருணன் :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கோட்டை நகராட்சிப் பகுதியில் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?



(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

(அ) செங்கோட்டை நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்திட திட்டம் ஏதும் நடவடிக்கையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**165—**

**தெள்ளார் ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்தல்**

வினா எண் 6306—**திரு. என். பாண்டுரங்கன் :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம், தெள்ளார் ஒன்றியத்தை, நிர்வாக வசதியை முன்னிட்டு இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

(அ) திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம், தெள்ளார் ஒன்றியத்தை, நிர்வாக வசதியை முன்னிட்டு இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசிடம் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

[1997 ஏப்ரல் 30

**166—**

**காய்கறி வகைகளை உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு விதை, கன்று போன்றவற்றை இலவசமாக அளித்தல்**

வினா எண் 1151—**திரு. வீ. தமிழ்மணி :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காய்கறி, கனிகள் மற்றும் கிழங்கு வகைகளை உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு விதை, கன்று, உரம், பூச்சிமருந்து போன்றவற்றை இலவசமாக அளிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

விதை, கன்று, உரம் மற்றும் பூச்சிமருந்துகள், விவசாயிகளுக்கு இலவசமாக அளிக்கப்படுவதில்லை. ஆனால் தோட்டக்கலைத் துறையின் சில திட்டங்கள் மூலமாக 50 சதவிகிதம் மானிய விலையில் வழங்கப்படுகிறது. மேலும், ஆதிவாசிகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், நபருக்கு, ஒரு ஏக்கருக்கு மட்டும் பழக்கன்றுகள் இலவசமாக தரப்படுகிறது. கல்ராயன்மலை, பச்சைமலை, அறுநூற்றுமலை, கொல்லிமலை, சித்தேரிமலை மற்றும் ஜவ்வாது, ஏலகிரி மலைகளில் வசிக்கும் ஆதிவாசிகளுக்கு இத்திட்டத்தின் மூலம் பழக்கன்றுகள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

**167—**

**கரும்பு கொள்முதல் விலையை உயர்த்துதல்**

வினா எண் 1875—**திரு. பெ.சு. திருவேங்கடம் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசு விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று கரும்பு கொள்முதல் விலையை உயர்த்தித் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன?



1997 ஏப்ரல் 30]

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) : விவசாயிகளின் கோரிக்கையை பரிசிலித்து அரசு 1996-97 ஆம் ஆண்டு அரவைப் பருவத்திற்கான 8.5% சர்க்கரை கட்டுமானத் திறன்கொண்ட ஒரு டன் கரும்பிற்கு மாநில அரசு பரிந்துரை செய்யும் விலை ரூ.599/- என அரசு கடித (நிலை) எண் 66, நாள் 14-2-97-ல் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

**168—**

**செந்துறை பகுதியில் முந்திரி ஆராய்ச்சி மற்றும் விவசாயப் பண்ணை அமைத்தல்**

வினா எண் 2248—**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆண்டிமடம் தொகுதி, செந்துறை பகுதியில் உள்ள முந்திரி விவசாயிகளை மேம்படுத்தும் வகையில் முந்திரி ஆராய்ச்சி மற்றும் விவசாயப் பண்ணை அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

இல்லை.

**169—**

**சவுத் இந்தியா விஸ்கோஸ் தொழிற்சாலையின் கழிவு நீரைப் பயன்படுத்தியுள்ள மாதிரிப் பண்ணை**

வினா எண் 3553—**திரு. பா. அருண்குமார் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

(அ) சவுத் இந்தியா விஸ்கோஸ் தொழிற்சாலை வெளியேற்றும் கழிவுநீரைப் பயன்படுத்தியுள்ள மாதிரிப் பண்ணையில் என்ன பயிர் சாகுபடி செய்யப்பட்டது?

(ஆ) எதிர்பார்த்தபடி பயிர் விளைச்சல் உள்ளதா?

(இ) இதனால் மண்ணின் தன்மை பாதிக்கப்பட்டுள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர் :**

(அ) சவுத் இந்தியா விஸ்கோஸ் தொழிற்சாலை வெளியேற்றும் கழிவுநீரைப் பயன்படுத்தி மாதிரிப் பண்ணையில் கீழ்க்காணும் பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டன :

| | | | |
|---|---|---|---|
| (1) | மிளகாய் | - | சுமார் 1 ஏக்கர் |
| (2) | புகையிலை | - | சுமார் 5 ஏக்கர் |
| (3) | பருத்தி | - | சுமார் 8 ஏக்கர் |
| (4) | சோயாபீன்ஸ் | - | சுமார் 4 ஏக்கர் |
| (5) | வாழை மற்றும் வாழையில் சோயா பீன்ஸ் ஊடுபயிராக | - | சுமார் 5 ஏக்கர் |

(ஆ) இதுவரை தரிசு நிலமாக இருந்து, இப்போது சாகுபடி செய்ய மிகுந்த பொருட்செலவில் இப்பண்ணை சீரமைக்கப்பட்டுள்ளது. சாகுபடி செலவை ஒப்பிடுகையில் செலவை விட வருமானம் இலாபகரமாக இருக்காது எனத் தெரிகிறது.

(இ) நேரிடையாக மண்ணில் மாற்றம் அல்லது பாதிப்பு இருப்பதாக அறிய இயலவில்லை என்றும் இந்த ஆண்டு பயிர் அறுவடைக்குப்பின், இந்த நிலத்தில் மண் மாதிரிகள் எடுத்து மண் பரிசோதனை நிலையத்தில் ஆய்வு செய்து விவரம் அறியலாம். மேலும், பாசனத்திற்காகப் பயன்படுத்தப்படும் ஆலைக் கழிவு நீரையும் அரசுத் துறை ஆய்வகம் மூலம் பரிசோதனை செய்யலாம்.

**170—**

**தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் கழகத்தின் மொத்த முதலீடு**

வினா எண் 3774—**திரு. வி.கே. லட்சுமணன்** : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் கழகத்தின் மொத்த முதலீடு எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு வேளாண் தொழில்கள் கழகத்தின் மொத்த முதலீடு ரூ.400 இலட்சங்களாகும்.

**171—**

**பருத்தி விளைச்சலை அதிகரிக்க விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கும் திட்டம்**

வினா எண் 5507—**திரு. கே. சுப்பராயன்** : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பருத்தி விளைச்சலை அதிகரிக்க விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) பருத்தி விளைச்சலை அதிகரிக்க விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கும் திட்டம் ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டு வருகிறது.

(ஆ) மத்திய அரசின் நிதி உதவியுடன் தமிழக அரசின் வேளாண் துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் பருத்தி அபிவிருத்தித் திட்டங்களின் கீழ், பருத்தி சாகுபடித் தொழில் நுட்பங்கள் பற்றிய பயிற்சி, உழவர் பயிற்சி நிலையம் மூலமும் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு பற்றிய பயிற்சிகள், ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு பயிற்சியாளர்கள் மூலமும் விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

172—

**மேல்மலையனூர் தொகுதியில் விவசாயப் பண்ணை அமைத்தல்**

வினா எண் 5797—**டாக்டர் ஆ. ஞானசேகரன் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம்-இராமசாமி படையாச்சியார் மாவட்டம் மேல்மலையனூர் தொகுதியில் ஒரு விவசாயப் பண்ணை அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

பண்ணை அமைக்க தொழில்நுட்ப அளவில் சாத்தியக் கூறுகள் இல்லை.

173—

**மாநில அரசுக்கு மத்திய அரசு மூலம் விற்பனை செய்யப்படும் உரங்கள்**

வினா எண் 5910—**திரு. இ. கணேசன் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மத்திய அரசு மாநில அரசுக்கு விற்பனை செய்யும் வெவ்வேறு உரங்களின் விலை என்ன ?

(ஆ) உழவர்களுக்கு இவ்வரசு விற்பனை செய்யும் இந்த உரங்களின் விலை என்ன ?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மத்திய அரசு மாநில அரசுக்கு உரங்கள் ஏதும் விற்பனை செய்வதில்லை. எனினும் யூரியா உரத்தினை மட்டும் இன்றியமையாச் சட்டத்தின் கீழ் மத்திய அரசு மாநிலங்களுக்குப் பிரித்தளிக்கிறது. யூரியா விலை 21-2-97 முதல் டன் ஒன்றுக்கு ரூ.3660 மற்றும் 4% விற்பனை வரி என மத்திய அரசு நிர்ணயித்துள்ளது.





(ஆ) யூரியா தவிர இதர கட்டுப்பாடு நீக்கம் பெற்ற உரங்களுக்கு மத்திய அரசு சலுகைத் தொகையினை வழங்குகிறது. தமிழக அரசு சலுகைத் தொகை போக ஒவ்வொரு உரத்திற்கும் ஒவ்வொரு பருவத்திற்கும் விலை நிர்ணயம் செய்து அரசாணை வழங்குகின்றது. 1996-97-ஆம் ஆண்டு ராபி பருவத்திற்கான உரங்களின் விலை பின் வருமாறு :—

சலுகைக்குப் பின்னர்

| வ.எண் | உரத்தின் பெயர் | மத்திய அரசு வழங்கும் சலுகை (ரூ) | டன் ஒன்றுக்கு (ரூ) விற்பனை விலை | 50 கிலோ மூட்டை ஒன்றுக்கு (ரூ) விற்பனை விலை |
|---|---|---|---|---|
| 1. | டி.ஏ.பி. | 3000 | 8866 | 443.30 |
| 2. | டி.ஏ.பி. (இறக்குமதி) | 1500 | 3866 | 443.30 |
| 3. | எம்.ஓ.பி. | 1500 | 4345 | 217.25 |
| 4. | சூப்பர் பாஸ்பேட் (பவுடர்) | 500 | 2990 | 149.50 |
| 5. | சூப்பர் பாஸ்பேட் (குருணை) | 500 | 3191 | 159.55 |
| 6. | 17 :17: 17 காம்ப்ளக்ஸ் | 1584 | 7958 | 397.90 |
| 7. | 15 :15 :15 காம்ப்ளக்ஸ் | 1353 | 6352 | 317.60 |
| 8. | 10 :26 :26 காம்ப்ளக்ஸ் | 2346 | 8359 | 417.95 |
| 9. | 20 :20 (அ.பா) காம்ப்ளக்ஸ் | 1304 | 7256 | 362.80 |
| 10. | 20 :20 (என்.பா) காம்ப்ளக்ஸ் | 1304 | 7256 | 362.80 |
| 11. | 16 :20 காம்ப்ளக்ஸ் | 1304 | 7054 | 352.70 |
| 12. | 14 :28:14 காம்ப்ளக்ஸ் | 2176 | 8059 | 402.95 |

[1997 ஏப்ரல் 30

**174—**

**சர்க்கரை ஆலைகள் மூலம் இயந்திரங்கள் வாங்கி விவசாயிகளுக்கு வாடகைக்கு விடல்**

வினா எண் 6283—**திரு. கு. மனோகரன் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கரும்பு விவசாயிகளின் நலன் கருதியும், விவசாய கூலி ஆட்களின் தட்டுப்பாட்டின் காரணமாகவும் கரும்புவெட்ட வெளிநாடுகளில் உபயோகப்படுத்துவதுபோல், நமது மாநிலத்தில் சர்க்கரை ஆலைகள் மூலமாக இயந்திரம் வாங்கி விவசாயிகளுக்கு வாடகைக்கு விட அரசு ஆவன செய்யுமா ?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

கரும்பு வெட்ட வெளிநாடுகளில் உள்ளது போல் இங்குள்ள சர்க்கரை ஆலைகள் இயந்திரங்கள் வாங்கி விவசாயிகளுக்கு வாடகைக்கு விட சாத்தியக்கூறுகள் தற்போது இல்லை.

**175—**

**வட பாதிமங்கலத்தில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் துவங்குதல்**

வினா எண் 6308—**திரு. என். பாண்டுரங்கன் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், சேத்துப்பட்டு ஒன்றியம், வடபாதிமங்கலத்தில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் துவக்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.



1997 ஏப்ரல் 30 ]

**176—**

**சங்கராபுரத்தில் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைத்தல்**

வினா எண் 536—**திரு. தா. உதயசூரியன் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரத்தில் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும் ?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

**177—**

**மயிலாடுதுறையிலிருந்து சன்னநல்லூர் செல்லும் சோழன் போக்குவரத்துக் கழகப் பேருந்து**

வினா எண் 1143—**டாக்டர் பத்மா :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாடுதுறையிலிருந்து நாகப்பட்டினம் வழியாக சன்னநல்லூர் வரை செல்லும் சோழன் போக்குவரத்துக் கழகப் பேருந்து நிறுத்தப்பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) : மயிலாடுதுறை - நாகப்பட்டினம் (வழி - சன்னநல்லூர்) வழித்தடத்தில் இயக்கப்பட்டு வந்த பேருந்து போதிய மக்கள் பயன்பாடு இல்லாததால் நிறுத்தப்பட்டது. இத்தடத்தில் தற்பொழுது தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் 6 பேருந்துகள் மூலம் 12 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன.

**178—**

**சென்னையிலிருந்து பெண்ணாகரம் மற்றும் ஒகேனக்கல் செல்லும் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து**

வினா எண் 1346—**திரு. ஜி. கே. மணி :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, சென்னையிலிருந்து பெண்ணாகரம் மற்றும் ஒகேனக்கல்லுக்கு இயக்கப்பட்ட திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்தை மீண்டும் இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் இயக்கப்படும் ?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) : ஒகேனக்கல்லிலிருந்து சென்னைக்கு பெண்ணாகரம், பாலக்கோடு, கிருஷ்ணகிரி, வாணியம்பாடி, ஆம்பூர் மற்றும் வேலூர் வழியாக 1-12-96 முதல் அன்னை சத்யா போக்குவரத்துக் கழகம் ஒரு புறநகர் பேருந்தை இயக்கி வருகிறது. இந்தத் தடம் பயணிகள் விகிதாச்சாரம் குறைவாக இருந்ததால், திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தால் நிறுத்தப்பட்ட தடம் ஆகும். எனவே, சென்னையிலிருந்து பெண்ணாகரம் மற்றும் ஒகேனக்கல்லுக்கு மீண்டும் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் பேருந்துகள் இயக்குவதற்கான சாத்தியக்கூறுகள் தற்போது இல்லை.



**179—**

**பரமக்குடியிலிருந்து சென்னைக்கு மருது பாண்டியர் போக்குவரத்துக் கழகப் பேருந்து**

வினா எண் 2033—**திரு. உ. திசைவீரன் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடியில் இருந்து சென்னைக்கு மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகப் பேருந்து இயக்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) : அரசு ஆணைப்படி மாவட்டத் தலைநகரங்களிலிருந்தும், போக்குவரத்துக் கழக தலைமையிடத்திலிருந்தும் சென்னைக்கு இரண்டு பேருந்துகள் இயக்க அனுமதிக்கப்பட்டுள்ளது. மற்ற இடங்களிலிருந்து 250 கி.மீக்கும் கூடுதலான தொலைவு உள்ள தடங்களில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் மட்டுமே பேருந்து இயக்க அனுமதி உள்ளது. பரமக்குடி சென்னை வழித்தடத்தின் தூரம் 498.2 கி.மீ. எனவே மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகத்தினால் பரமக்குடியிலிருந்து சென்னைக்குப் பேருந்து இயக்க இயலாது.

**180—**

**போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் திருக்குறள் மற்றும் திருவள்ளுவர் படங்களை வைத்தல்**

வினா எண் 2255—**திரு. ஜி. பி. வெங்கிடு :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அனைத்து போக்குவரத்துக் கழகப் பேருந்துகளிலும் திருக்குறளும், திருவள்ளுவர் படமும் வைக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

பெரும்பாலான போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் திருக்குறளும், திருவள்ளுவர் படமும் வைக்கப்பட்டுள்ளன. இல்லாத பேருந்துகளில் பொருத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**181—**

**சென்னையிலிருந்து பெண்ணாகரத்துக்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து**

வினா எண் 2285—**திரு. ஜி.கே. மணி :** மாண்புமிகு போத்துவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரத்துக்கு சென்னையிலிருந்து திருப்பத்தூர்-மத்தூர்-போச்சம்பள்ளி தருமபுரி வழியாக திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து விடப்படுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

ஒகேனக்கல்லிலிருந்து சென்னைக்கு பெண்ணாகரம், பாலக்கோடு, கிருஷ்ணகிரி, வாணியம்பாடி, ஆம்பூர் மற்றும் வேலூர் வழியாக 1-12-96 முதல் அன்னை சத்யா போக்குவரத்துக்கழகம் ஒரு புறநகர் பேருந்தை இயக்கி வருகிறது. இத்தடம் பயணிகள் விகிதாச்சாரம் குறைவாக இருந்ததால் திருவள்ளுவர் போக்குவரத்துக்கழகத்தால் நிறுத்தப்பட்ட பேருந்தின் மீள் இயக்கம் ஆகும். எனவே, பெண்ணாகரத்துக்கு சென்னையிலிருந்து திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் இயக்குவதற்கான சாத்தியக்கூறுகள் தற்போது இல்லை. தற்போது தருமபுரியிலிருந்து போச்சம்பள்ளி, திருப்பத்தூர், வழியாக ஒரு விரைவுப் பேருந்தை திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் இயக்கி வருகிறது.



**182—**

**இராமேஸ்வரத்திலிருந்து சென்று கொண்டிருந்த திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள்**

வினா எண் 2544—**திரு. சுப. தங்கவேலன் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தற்சமயம் சாலைகள் சீரமைக்கப்பட்டுவிட்டதால், இராமேஸ்வரத்திலிருந்து இராமநாதபுரம், சிக்கல், சாயல்குடி, தூத்துக்குடி வழியாக முன்பு சென்று கொண்டிருந்த திருவள்ளுவர் போக்குவரத்துக்கழகப் பேருந்துகளை மீண்டும் அதே தடங்களில் சாயல்குடி வழியாக இயக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

கன்னியாகுமரியிலிருந்து திருச்செந்தூர், தூத்துக்குடி வழியாக இராமேஸ்வரத்திற்கு வழித்தடம் எண் 520 என்ற பேருந்து 11-9-96 முதல் இயக்கப் பெற்று வருகின்றது.

**183—**

**நீண்ட தூரம் செல்லும் சாதாரண கட்டண அரசுப் பேருந்துகள்**

வினா எண் 2906—**திரு. ஜி. பி. வெங்கிடு :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நீண்ட தொலைவு செல்லும் சாதாரண கட்டண அரசுப் பேருந்துகளில் குடிநீர், முதலுதவிப் பெட்டி போன்றவை வைத்திட ஆவன செய்யுமா ?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

எல்லா பேருந்து நிலையங்களிலும் நின்று போவதால், பேருந்தில் குடிநீர் வசதி செய்துத் தரவேண்டிய அவசியம் எழவில்லை. ஆனால்,

[1997 ஏப்ரல் 30

திருவள்ளுவர், ராஜீவ்காந்தி போக்குவரத்துக் கழகங்கள் இயக்கும் விரைவுப் பேருந்துகளில் குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளது. மேலும் நீண்ட தூரம் செல்லும் பேருந்துகளில் முதலுதவிப் பெட்டி வைக்கப்பட்டுள்ளது.

**184—**

**உளுந்தூர்ப்பேட்டை-சேலம் நெடுஞ்சாலையை தேசிய நெடுஞ்சாலையாக மாற்றும் திட்டம்**

வினா எண் 2976—**திரு. இரா. மூக்கப்பன் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உளுந்தூர்பேட்டை-சேலம் நெடுஞ்சாலையை தேசிய நெடுஞ்சாலையாக மாற்றும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உளுந்தூர்பேட்டை-சேலம் நெடுஞ்சாலையை தேசிய நெடுஞ்சாலையாக மாற்றும் திட்டம் மைய அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டது. ஆனால் மைய அரசு தொடர்ச்சியாக நிதி நெருக்கடி காரணமாக எந்த சாலையையும் புதிய தேசிய நெடுஞ்சாலையாக தற்போது அறிவிக்க இயலாது என தெரிவித்து விட்டது.

**185—**

**விபத்துக்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு நேரடியாக வழங்கல்**

வினா எண் 3736—**திரு. இரா. ஆவுடையப்பன் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விபத்துக்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதிமன்றத்தால் அளிக்கப்படும் நஷ்ட ஈடு எந்தவித நிபந்தனையும் இல்லாமல் நேரடியாக வழங்க அரசு முன்வருமா ?



1997 ஏப்ரல் 30 ]

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தற்போது நடைமுறையில் உள்ள விதிகளின்படி விபத்துக்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதிமன்றத்தால் அளிக்கப்படும் நஷ்டஈடு எந்தவித நிபந்தனையும் இல்லாமல் நேரடியாக வழங்க இயலாது.

**186—**

**குத்தாலம் பகுதி சாலைகளை முன்னுரிமை அடிப்படையில் செப்பனிடல்**

வினா எண் 3758—**திரு. குத்தாலம் பி. கல்யாணம் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலத்தில் எண்ணெய் இயற்கை எரிவாயுக் கழகத்தின் மூலம் எரிவாயுக்கிணறு கண்டுபிடிக்கப்பட்டுள்ளதால் குத்தாலம் பகுதி சாலைகள் முன்னுரிமை அடிப்படையில் செப்பனிட்டுச் சீர் செய்யப்படுமா ?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலைகளின் ஒரு பகுதியை 'நபார்டு' திட்டத்தின் மூலம் சீர் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள சாலைப்பகுதிகளைச் சீர் செய்ய மொத்தம் ரூ.165 லட்சம் தேவைப்படும். நிதி ஆதாரத்தைப் பொறுத்து சாலைகள் சீர் செய்யப்படவுள்ளன.

[1997 ஏப்ரல் 30

**187—**

**கண்டமாலை மற்றும் உளுந்தூர்பேட்டை அருகில் இரயில்வே மேம்பாலங்கள் அமைத்தல்**

வினா எண் 4586—**திரு. குழந்தை. தமிழரசன் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேசிய நெடுஞ்சாலை எண் 45-ல் விழுப்புரம் அருகே கண்டமாலையிலும் மற்றும் உளுந்தூர்பேட்டை அருகிலும் இரயில்வே மேம்பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) பிரேரணைகள் மத்திய அரசின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன.

**188—**

**பேரணாம்பட்டில் போக்குவரத்துப் பணிமனை அமைக்கும் திட்டம்**

வினா எண் 4877—**திரு. வி. கோவிந்தன் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு அம்பேத்கர் மாவட்டம், பேரணாம்பட்டில் போக்குவரத்துப் பணிமனை அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.



1997 ஏப்ரல் 30 ]

(ஆ) பணிமனை கட்டுவதற்குத் தகுந்த நிலம் தேர்வு செய்யப்பட்டு அதனை விலைக்கு வாங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**189—**

**குடியாத்தத்திலிருந்து இயக்கப்பட்டு வந்த நகரப் பேருந்துகள்**

வினா எண் **5011—திரு. சி. கோபு :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வடஆற்காடு-அம்பேத்கர் மாவட்டம், அணைக்கட்டு தொகுதி, குடியாத்தத்திலிருந்து கீழ்கொத்தூர், கெங்கசாணிகுப்பம் ஆகிய ஊர்களுக்கு புதிதாக நகரப் பேருந்துகள் இயக்கவும், பாக்கம்பாளையத்திற்கு இயக்கப்பட்டு நிறுத்தப்பட்ட நகரப் பேருந்தை மீண்டும் இயக்கவும் அரசு ஆவன செய்யுமா ?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம் குடியாத்தத்தில் இருந்து கெங்கசாணிக்குப்பம் (வழி) ஒடுக்கத்தூர் தடத்தில் நகரப் பேருந்து ஒன்றின் மூலம் தினசரி 4 நடைகள் இயக்கி வருகிறது.

கீழ்க்கொத்தூர் கிராமம், வேலூரிலிருந்து அணைக்கட்டு வழியாக தினசரி 12 நடைகள் பேருந்து வசதி பெற்றுள்ளது. தற்போதுள்ள வசதிகள் தேவைக்கேற்ப உள்ளதால் புதிதாக பேருந்துகள் இவ்வழித்தடங்களில் இயக்குவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

குடியாத்தம்-பாக்கம்பாளையம் (வழி) உள்ளி, மாதனூர் தடம் பயணிகள் அடர்வு குறைவாக இருந்ததன் காரணமாக அத்தடத்தில் இயக்கப்பட்ட பேருந்து மாற்று தடத்தில் இயக்கப்பட்டு வருகிறது. தனியார் பேருந்துகளும் இத்தடத்தின் வழியே இயக்கப்பட்டு வருவதால் நிறுத்தப்பட்ட நகரத்தடத்தை மீண்டும் இயக்க வாய்ப்பு இல்லை.

**190—**

### போடிநாயக்கனூரிலிருந்து சென்னைக்கு போக்குவரத்துக் கழகங்களின் சொகுசுப் பேருந்துகள்

வினா எண் 5957—**திரு. அ. சுடலைமுத்து:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகம் மற்றும் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் போடிநாயக்கனூலிருந்து சென்னை வரை புதிய சொகுசுப் பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) : போடி நாயக்கனூர் - சென்னை வழித்தட தூரம் 250 கி.மீ-க்கும் அதிகமாக உள்ளதால் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் மட்டுமே இத்தடத்தில் பேருந்து இயக்க இயலும். தற்போது திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக வழித்தடம் எண் 163 போடிநாயக்கனூரில் இருந்து சென்னைக்கு இரண்டு சாதாரண பேருந்துகள் மூலம் இரண்டு ஒரு வழிப்பயணமாக இயக்கப்பட்டு வருகிறது. எனவே புதிய சொகுசுப் பேருந்து இயக்க உத்தேசம் இல்லை.

**191—**

### இந்தியாவின் பிற தேசிய மொழிகளில் தமிழ்நாட்டின் விடுதலைப் போராட்ட வரலாறு மொழிபெயர்ப்பு செய்து விற்பனை

வினா எண் 4831—**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இந்தியாவிலுள்ள பிற தேசிய மொழிகளில் தமிழ்நாட்டின் விடுதலைப் போராட்ட வரலாறு மொழிபெயர்ப்பு செய்யப்பட்டு விற்பனை செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?



விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர்:**

இல்லை.

**192—**

### நெல்லுக்கு வழங்கப்பட்ட ஊக்கத்தொகை

வினா எண் 512—**திரு. பி. இராசமாணிக்கம்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெல்லுக்கு வழங்கப்பட்ட ஊக்கத்தொகையை மீண்டும் வழங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

ஏகபோகக் கொள்முதல் திட்டம் 15-9-1996 முதல் காவிரி பாசனப் பகுதிகளில் குறுவை 1996 பருவத்தில் மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டு, கொள்முதல் செய்யும் நெல்லுக்கு மத்திய அரசால் நிர்ணயிக்கப்பட்ட விலையைவிட கூடுதலாக ஒரு குவிண்டாலுக்கு ரூ. 40/- என விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை அளிக்கப்பட்டது. தற்போது சம்பா 1997 பருவத்தில் இந்த ஊக்கத்தொகை ஒரு குவிண்டாலுக்கு ரூ. 50/- ஆக உயர்த்தியளிக்கப்பட்டுள்ளது.

**193—**

### வேளாண்மை சங்கங்களில் தனி அதிகாரிகளால் நியமிக்கப்பட்ட அலுவலர்கள்

வினா எண் 1887—**திரு. பெ.சு. திருவேங்கடம்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1997 ஏப்ரல் 30

(அ) 1995-96-ஆம் ஆண்டில் திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், திருவண்ணாமலை வட்டத்தில் வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்களில் தனி அதிகாரிகளால் அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனரா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :**

(அ) ஆம்

(ஆ) 1995-96-ஆம் ஆண்டில் திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், திருவண்ணாமலை வட்டம், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளில் மொத்தம் 16 (பதினாறு) பணியாளர்கள் வெவ்வேறு பதவிகளில் வெவ்வேறு தேதிகளில் முறையற்ற வகையில் தனி அலுவலர்களால் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் இருவரைத் தவிர மற்ற அனைவரும் பல்வேறு தேதிகளில் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

**194—**

**தருமபுரியில் மாவட்ட நுகர்வோர் நீதிமன்றம் தொடங்குதல்**

வினா எண் 4357—**திரு. கு. மனோகரன் :** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரியில் மாவட்ட நுகர்வோர் நீதிமன்றத்தினைத் தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :**

(அ) தருமபுரி மாவட்ட நுகர்வோர் நீதிமன்றம் ஏற்கெனவே 23-8-90 முதல் துவங்கப்பெற்று செயல்பட்டு வருகிறது.



1997 ஏப்ரல் 30]

(ஆ) தருமபுரி மாவட்டத்தில் உள்ள நுகர்வோர் குறைதீர் மன்றத்தின் தற்போதைய ஆண் உறுப்பினர் 30-7-95-ல் நியமனம் செய்யப்பட்டுள்ளார். பெண் உறுப்பினர் பதவி நிரப்பப்பட உள்ளது. எனினும், தலைவர் மற்றும் ஒரு உறுப்பினரைக் கொண்டு நுகர்வோர் குறைதீர் மன்றம் செயல்பட்டு வருகிறது.

**195—**

**ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம்**

வினா எண் 6047—**திரு. வீ. தமிழ்மணி :** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோழிப்பண்ணைகள், மீன்வளர்ப்பு, பன்றிவளர்ப்பு, கைவினைஞர் தொழில் போன்ற ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டங்களை அண்ணா மாவட்டத்தில் செயல்படுத்த அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :**

ஆம்.

**196—**

**சென்னை பிராட்வேயிலுள்ள செங்கற்பட்டு மாவட்ட கூட்டுறவுச் சங்கத் தலைமையகம்**

வினா எண் 6151—**திரு. வீ. தமிழ்மணி :** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு, எம்.ஜி.ஆர். மற்றும் அண்ணா மாவட்டங்களாக பிரிக்கப்பட்டுள்ளதால் சென்னை பிராட்வேயில் உள்ள செங்கற்பட்டு மாவட்ட கூட்டுறவுச் சங்கத் தலைமையகத்தையும் இரண்டாகப் பிரித்து, அண்ணா மாவட்டம் செங்கற்பட்டில் அம்மாவட்டத் தலைமையகம் செயல்பட அரசு ஆவன செய்யுமா?

[1997 ஏப்ரல் 30

விடை—

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :**

சென்னை பிராட்வேயில் உள்ள செங்கற்பட்டு மாவட்ட கூட்டுறவுச் சங்கத் தலைமையகத்தை இரண்டாகப் பிரிக்கும் அவசியம் தற்பொழுது எழவில்லை.

**197—**

**பென்னாகரத்தில் ஆவின் பால் வழங்கு நிலையம்**

வினா எண் 2474—**திரு. ஜி.கே. மணி** : மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரத்தில் ஆவின் பால் வழங்கு நிலையம் திறக்கப்படுமா ?

விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால் வளத் துறை அமைச்சர் :**

தருமபுரி மாவட்டம் பெண்ணாகரத்தில் தற்சமயம் தருமபுரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் பால் வழங்கு நிலையம் அமைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு 1-12-96 முதல் விற்பனை துவக்கப்பட்டு உள்ளது.

**198—**

**அம்பத்தூர் நகராட்சிப் பகுதியில் தானியங்கி பால் நிலையம் அமைத்தல்**

வினா எண் 3495—**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்** : மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அம்பத்தூர் நகராட்சிப் பகுதியில், தானியங்கி பால் நிலையம் அமைக்க அரசு முன்வருமா ?



1997 ஏப்ரல் 30 ]

விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால் வளத் துறை அமைச்சர் :**

அம்பத்தூர் நகராட்சிப் பகுதியில் தானியங்கிப் பால் வழங்கும் நிலையம் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**199—**

**பழுதடைந்த வீடுகளுக்குப் பதிலாகப் புதிய வீடுகள் கட்டும் திட்டம்**

வினா எண் 5080—**திரு. செங்கை சிவம்** : மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையிலுள்ள குடிசைமாற்று வாரியத்திற்குச் சொந்தமான மிகப் பழுதடைந்த வீடுகளுக்குப் பதிலாக புதிய வீடுகள் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர் :**

(அ) ஆம்.

(ஆ) சென்னை நகரில் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் 31-3-96 வரை 56,662 குடியிருப்புகளைக் கட்டியுள்ளது. மாறுபட்ட தட்பவெப்ப நிலை, குடியிருப்புகளைத் தவறாக பிரயோகித்தல், கடலோர சுற்றுப்புற சூழலில் அதிகம் உப்பு கலந்த காற்று போன்றவை காரணமாக குடியிருப்புகள் பழுதடைந்துள்ளன. கீழ்க்காணும் திட்டப் பகுதிகளில் உள்ள குடியிருப்புகள் மிகவும் பழுதடைந்துள்ளதால், இக்குடியிருப்புகளை இடித்து திரும்பக் கட்ட திட்டமிடப்பட்டு பணிகள் துவங்கப்பட்டுள்ளன :

| வரிசை எண் | திட்டத்தின் பெயர் | இடிக்கப்பட உள்ள குடியிருப்புகள் |
|---|---|---|
| 1. | பி.எஸ். மூர்த்தி நகர் | 100 |
| 2. | வியாசர்பாடி | 90 |
| | | 190 |

மேலும் குடியிருப்புகளின் தற்போதைய தன்மை மற்றும் குடியிருப்புதாரர்களின் பாதுகாப்பினை கருத்தில் கொண்டு மிகவும் வலுவற்ற குடியிருப்புகளை இடித்து மீண்டும் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**200—**

**திருமணங்கள் பதிவுசெய்வதைக் கட்டாயமாக்கும் சட்டம்**

வினா எண் 5105—**திரு. கே. சுப்பராயன் :** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமணங்கள் முழுவதையும் பதிவு செய்வதைக் கட்டாயமாக்கும் சட்டம் கொண்டு வரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர் :**

(அ) ஆம்.

(ஆ) தனித் திருமணச் சட்டத்தின் (Special Marriage Act) கீழான தனித் திருமணங்கள் ஒரு உரிமையியல் திருமணம் (Civil Marriage) ஆகும். அவைகள் அனைத்தும் கட்டாயமாகப் பதிவு செய்யப்படுகின்றன. இந்திய கிறிஸ்துவ திருமணங்கள் அனைத்தும் கட்டாயமாகப் பதிவு செய்யப்படுகின்றன. அனைத்து இந்து திருமணங்களையும் கட்டாயமாகப் பதிவு செய்வதற்கு இந்து திருமணச் சட்டத்தில் மாநில அரசுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ் இந்து திருமண விதிகளுக்கு ஒரு திருத்தம் வெளியிட செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.



## பதினைந்தாவது பட்டியல்

**1—**

**சேவைக் கட்டணம் வசூலித்தல்**

வினா எண் 1956—**திரு. பெ.சு. திருவேங்கடம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1994-95, 1995-96-ல் சேவைக் கட்டணம் வசூலிக்காமல் மொலாசஸ் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) ஆம்

(ஆ) இம்மாநிலத்திலிருந்து வெளி மாநிலங்களுக்கும் அயல் நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படும் கருப்பஞ்சாற்றுக் கசண்டின் (Molasses) மீது மெட்ரிக் டன் ஒன்றுக்கு ரூ.200/- நிர்வாகச் சேவைக் கட்டணமாக அரசு வசூலிக்கப்பட வேண்டும் என்ற ஆணை 8-7-96-இல் பிறப்பிக்கப்பட்டு நடைமுறைக்கு வந்துள்ளது. இதற்கு முன்பு 1994-95 மற்றும் 1995-96-ஆம் ஆண்டுகளில் கருப்பஞ்சாற்றுக் கசண்டு இம்மாநிலத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட போதிலும் ஏற்றுமதிக்கு சேவைக் கட்டணம் ஏதும் வசூலிக்கப்படவில்லை. 8-7-96 முதல் ஏற்றுமதி செய்யப்படும் கருப்பஞ்சாற்றுக் கசண்டு மீது நிர்வாகச் சேவைக் கட்டணம் மெட்ரிக் டன் ஒன்றுக்கு ரூ.200/- வசூலிக்கப்பட்டு வருகிறது.

**2—**

**பொறியியற் கல்லூரிகளில் புதிய பாடப்பிரிவுகள்**

வினா எண் 7304—**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு பொறியியற் கல்லூரிகளில் வேதியியல் தொழில் நுட்பம் (Chemical Technology) தொழில் நுட்பக் கருவியாக்கம் மற்றும் கட்டுப்பாடு (Instrumentation and Control) ஆகிய பாடப் பிரிவுகள் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) "இன்ஸ்ட்ருமென்டேஷன் அண்டு கன்ட்ரோல் இன்ஜினியரிங்" (தற்போது எலக்ட்ரானிக்ஸ் அண்டு இன்ஸ்ட்ருமென்டேஷன் என்ற பெயரில் நடைபெற்று வருகிறது) என்ற பாடப் பிரிவு அரசினர் பொறியியற் கல்லூரி, கோவையிலும், "கெமிக்கல் டெக்னாலஜி" என்ற பாடப் பிரிவு அரசு மானியம் பெறும் பொறியியற் கல்லூரியான "கோயம்புத்தூர் இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜி" கோவையிலும் நடைபெற்று வருகிறது. இப்பாடப் பிரிவுகளில் சேர மாணவர்களுக்கு அதிக அளவில் விருப்பம் இல்லாததால் மற்ற அரசினர் பொறியியற் கல்லூரிகளில் அப்பிரிவுகள் ஆரம்பிக்கப்படவில்லை.

(ஆ) மாணவர்களின் தேவையைப் பொறுத்து, மற்ற அரசுப் பொறியியற் கல்லூரிகளில் தொடங்குவது குறித்து அரசு ஆய்வு செய்யும்.

3—

### வடமதுரை ஒன்றியத்தில் மருத்துவமனை கட்டுதல்

வினா எண் 314—**திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடமதுரை ஒன்றியம், அய்யலூர் மலைப்பகுதி கிராம மக்கள் பயன்பெற அரசு மருத்துவமனை கட்டப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) அய்யலூர் மலைப்பகுதி கிராம மக்களுக்காக புதிய மருத்துவமனை துவங்கும் திட்டம் ஏதுமில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.





4—

### துணை மின் நிலையம் அமைத்தல்

வினா எண் 4540—**திரு. கோ. மோகனதாசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வைத்தீஸ்வரன் கோவிலில் 110/11 கே.வி. துணை மின் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) இத்துணை மின் நிலையத்திற்குத் தேவையான நிலம் கையகப்படுத்தப்பட்டவுடன் நடவடிக்கை எடுக்க ஆவன செய்யப்படும்.

5—

### மின் கட்டணத்தைக் குறைத்தல்

வினா எண் 4924—**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நகராட்சி, ஊராட்சி மற்றும் குடிநீர் வாரியம் பராமரித்து வரும் குடிநீர் மின் மோட்டார்களுக்கு வசூலிக்கப்படும் மின் கட்டணம் அதிகமாக உள்ளதால், நிதிநிலைப் பற்றாக்குறை உள்ள துறைகளில் மின் கட்டணம் செலுத்த இயலாத நிலையில் உள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், குடிநீர் வசதி, அடிப்படை வசதி என்பதால், கட்டணத்தைக் குறைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

[1997 ஏப்ரல் 30

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) இல்லை.

**6—**

**தீக்காயம் அடைந்தோருக்குத் தனிப்பிரிவு அமைத்தல்**

வினா எண் 5623—**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு அரசு மருத்துவமனையில் தீக்காயம் அடைந்தோருக்காக தனிப்பிரிவு (வார்டு) அமைக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

இல்லை. தீக்காயம் அடைந்தவர்களுக்கு உரிய சிகிச்சையளிக்க தேவையான அனைத்து வசதிகளும் தற்போது இம்மருத்துவமனையில் உள்ளது.

**7—**

**ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்டிடம் கட்டுதல்**

வினா எண் 6877—**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி ஒன்றியம், செட்டிமாங்குறிச்சி ஆரம்ப சுகாதார நிலையம் வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதற்கு நிரந்தர கட்டிடம் கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?



1997 ஏப்ரல் 30]

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்

(ஆ) 1997-98 ஆம் ஆண்டில் 300 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குக் கட்டிடங்கள் கட்டப்படவுள்ளன. இதில் செட்டிமாங்குறிச்சி ஆரம்ப சுகாதார நிலையமும் சேர்க்கப்பட்டு கட்டிடப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**8—**

**ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்டிடம்**

வினா எண் 6884—**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, இடங்கணசாலை பேரூராட்சியில் உள்ள இ. காட்டூர் என்ற இடத்தில் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சொந்தக் கட்டிடம் கட்டித் தரப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் :**

அரசு கட்டிடம் இல்லாத அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் இந்த ஆண்டிற்குள் கட்டிட வசதிகள் செய்திட அரசு முடிவெடுத்துள்ளது. இ. காட்டூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்டிடம் கட்டுவதற்கான நிலம் கிடைக்கப்பெற்றதும் கட்டிடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும். தேவையான நிலம் பெறுவதற்கும் தனியே நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**9—**

**நில நடுக்கம் ஏற்படக் காரணங்கள்**

வினா எண் 6571—**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1997 ஏப்ரல் 30

(அ) தருமபுரி, வடாற்காடு அம்பேத்கர் மாவட்டங்களில் நில நடுக்கம் ஏற்பட்டதா?

(ஆ) ஆம் எனில், அதன் காரணங்கள் ஆராயப்பட்டதா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தருமபுரி மாவட்டத்தில், அரூர், ஊத்தங்கரை வட்டங்களில், வட்டத் தலைமையிடத்திலும் மற்றும் சுற்றுப்புறக் கிராமங்களிலும் 31-1-1997 அன்று இரவு 11-50 முதல் 12-10 வரை சுமார் 4 அல்லது 5 முறை லேசான நில நடுக்கம் ஏற்பட்டது.

வடாற்காடு அம்பேத்கர் மாவட்டத்தில் திருப்பத்தூர் மற்றும் வாணியம்பாடி பகுதிகளில் 31-1-1997, 1-2-1997, 2-3-1997 மற்றும் 4-4-1997 ஆகிய நாட்களில் நில நடுக்கம் ஏற்பட்டது.

இந்நில நடுக்கத்தால் எவ்வித உயிர்ச்சேதமோ, பொருட்சேதமோ ஏற்படவில்லை. நில நடுக்கத்திற்கான காரணங்களை ஆராய விஞ்ஞான ரீதியான புவியியல் வல்லுநர்களைக் கொண்டு ஆய்வுப் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. புவியியல் வல்லுநர்கள் ஆராய்ந்து வருகின்றனர்.

**10—**

### கழிவுநீர்க் கால்வாய் கட்டுதல்

வினா எண் 152—**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் நகரில் கழிவுநீர்க் கால்வாய் கட்டித் தர அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.



1997 ஏப்ரல் 30]

(ஆ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

**11—**

### தென்பெண்ணை ஆற்றில் கிணறு தோண்டுதல்

வினா எண் 427—**திரு. பே. வே. ஸ்ரீ. வெங்கடேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், காவேரிப்பட்டினம் தொகுதியில் காவேரிப்பட்டினம் பேரூராட்சியில் தண்ணீர்த் தட்டுப்பாடு நீங்க மீண்டும் தென்பெண்ணை ஆற்றில் கிணறு தோண்டப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) : காவேரிப்பட்டினம் பேரூராட்சி குடிநீர்த் திட்டத்தினை விரைவுபடுத்தப்பட்ட நகரக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் ரூ.63 இலட்சம் செலவில் செயற்படுத்த தமிழ்நாடு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்திட்டத்தின் அனைத்துப் பணிகளும் 3/97-ல் முடிக்கப்பட்டு குடிநீர் விநியோகம் இப்பேரூராட்சிக்கு அதிகரித்து வழங்கப்படும்.

**12—**

### பன்றிகள் வளர்ப்பைக் கட்டுப்படுத்துதல்

வினா எண் 504—**திரு. துரை. சந்திரசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டத்தில் தனியார்கள் வளர்த்து வரும் பன்றிகளின் நடமாட்டத்தினால் மூளைக் காய்ச்சல் போன்ற தொற்று நோய் பரவுவதால் பன்றிகளைக் கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டத்திற்குட்பட்ட நகராட்சிப் பகுதிகளில், பன்றிகளை ஒழிப்பதற்கு தினசரி பத்திரிகைகளில் அறிவிப்புச் செய்தும், பன்றிகளைக் கொல்வதற்கு விலைப்புள்ளி கோரியும், பன்றிகளை வளர்ப்பவர்களுக்கு பன்றிகளை நகரப் பகுதிகளிலிருந்து அப்புறப்படுத்த நோட்டீஸ் அனுப்பியும் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**13—**

**கோவில்பட்டி குடிநீர்த் திட்டம்**

வினா எண் 839—**திரு. லி. அய்யலுசாமி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டி குடிநீர்த் திட்ட அபிவிருத்திப் பணிகள் எப்போது முடிவடையும்?

(ஆ) அதற்காக ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

(அ) கோவில்பட்டி குடிநீர்த் திட்ட அபிவிருத்திப் பணிகள் 3/97-க்குள் முடிவடையும்.

(ஆ) கோவில்பட்டி குடிநீர் அபிவிருத்திப் பணிகள் திட்டத்திற்காக நடப்பு நிதி ஆண்டில் ஒதுக்கப்பட்ட தொகை ரூ.105.00 இலட்சங்கள்.

**14—**

**பாப்பாரப்பட்டிக்குக் குடிநீர் வசதி**

வினா எண் 1251—**திரு. ஜி.கே. மணி** : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பஞ்சப்பள்ளியிலிருந்து குடிநீர் வழங்கும் திட்டத்தின்கீழ் பாப்பாரப்பட்டியையும் இணைத்து அப்பகுதி மக்களுக்கும் குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அத்திட்டம் செயற்படுத்தப்படும் ?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

(அ) இல்லை.

(ஆ) எழாது.

**15—**

**குடிநீர்ப் பற்றாக்குறையைத் தீர்த்தல்**

வினா எண் 1259—**திரு. எல். மூக்கையா:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியகுளம் ஒன்றியம், சருத்துப்பட்டி, லட்சுமிபுரம், சல்லிப்பட்டி, ஜி. கல்லுப்பட்டி ஆகிய ஊராட்சிகளிலுள்ள குடிதண்ணீர்த் தட்டுப்பாடு பற்றி அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், குடிதண்ணீர்ப் பற்றாக்குறையைத் தீர்க்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

(அ) ஆம்.

(ஆ) குடிநீர்ப் பற்றாக்குறையைத் தீர்க்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

16—

## தார்ச் சாலை அமைத்தல்

வினா எண் 1287—**திரு. எல். மூக்கையா:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொடைக்கானல் ஒன்றியம், பூம்பாறையிலிருந்து பழம்புத்தூர் வரை சாலையைச் செப்பனிட்டு, தார்ச்சாலை அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அப்பணி துவங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) : கொடைக்கானல் ஒன்றியம், பூம்பாறையிலிருந்து பழம்புத்தூர் வரை சாலையின் நீளம் 12.80 கி.மீ. ஆகும். இதில் ஒரு பகுதி 1995-96-இல் வேலை உறுதியளிப்புத் திட்டத்தில் ரூ.7.50 இலட்சம் மதிப்பீட்டில் அகலப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் இரு தாம்போகிகள் கட்டவும், ரூ.9 இலட்சம் மதிப்பீட்டில் 30 சிறு குழாய்ப் பாலங்கள் கட்டவும், ரூ.8.25 இலட்சம் செலவில் ஒரு அடுக்கு கருங்கல் சாலை பரத்தும் வேலையும் நடைபெற்று வருகிறது. இந்நிலையில் தற்போது தார்ச் சாலையாக மாற்ற வழிவகை இல்லை.

17—

## கிராமங்களுக்குக் குடிநீர் வசதி செய்தல்

வினா எண் 1569—**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், கச்சுப்பள்ளி, எலவம்பாளையம், ராஜகோவில்காடு ஆகிய கிராமங்களுக்குக் குடிநீர் வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?



விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

சேலம் மாவட்டத்தில், எடப்பாடி தொகுதியில், கச்சுப்பள்ளி குடியிருப்புக்கு மூன்று கையிறைப்பான்கள், இரண்டு திறந்தவெளிக் கிணறுகள் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எலவம்பாளையம் குடியிருப்புக்கு இரண்டு கையிறைப்பான்கள் மற்றும் ஒரு திறந்தவெளிக் கிணறு மூலமும், ராஜகோவில்காடு குடியிருப்புக்கு ஒரு கையிறைப்பான் மூலமும் பகுதியளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. நடப்பு நிதியாண்டில் இக்கிராமங்களுக்கு மின்னிறைப்பான் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்பட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

18—

## திருவள்ளூர் நகராட்சியில் பாதாளச் சாக்கடைத்திட்டம்

வினா எண் 2468—**திரு. சி. சுப்பிரமணி என்கிற சி.சு. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டம், திருவள்ளூர் நகராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் கொண்டு வரப்படுமா ?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டம், திருவள்ளூர் நகராட்சியில், பாதாள சாக்கடைத் திட்டம் கொண்டு வருவது பற்றிய செயற்குறிப்பு தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

19—

## சென்னையில் சாலைகளுக்கு தமிழ்ப் பெயர்களைச் சூட்டுதல்

வினா எண் 2695—**திரு. டி. இராஜேந்தர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1997 ஏப்ரல் 30

சென்னை நகரில் ஆங்கிலேயர் பெயர்களைத் தாங்கியுள்ள சாலைகளுக்கு தமிழ்ப் பெயர்களைச் சூட்ட அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

இதுகுறித்து கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**20—**

**பம்பிங் ஸ்டேஷன் அமைத்தல்**

வினா எண் 2702—**திரு. டி. இராஜேந்தர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பூங்கா நகர் தொகுதியில் அடிக்கடி கழிவுநீர் ஓடும் சாக்கடையில் அடைப்பு ஏற்படுவதை நீக்க தனியாக பம்பிங் ஸ்டேஷன் அமைக்க அரசு முன் வருமா ?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

பூங்கா நகர் தொகுதியில் ஏற்கெனவே பம்பிங் ஸ்டேஷன்கள் இயங்கி வருகின்றன. எனவே, கூடுதலாக பம்பிங் ஸ்டேஷன் அமைக்க வேண்டிய அவசியம் இல்லை.

**21—**

**நகராட்சி தினக்கூலி பணியாளர்களை நிரந்தரமாக்குதல்**

வினா எண் 2731—**திரு. ஜி.பி. வெங்கிடு** : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நகராட்சியில் தினக்கூலிப் பணியாளர்களாக ஐந்து ஆண்டுகள் பணிபுரிந்தவர்களை நிரந்தரப் பணியாளர்களாக நியமனம் செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?



1997 ஏப்ரல் 30]

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

இல்லை.

**22—**

**ஜெனரேட்டர் அமைத்து குடிநீர் வழங்குதல்**

வினா எண் 2816—**திரு. தா. உதயசூரியன்** : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சங்கராபுரம் பேரூராட்சியில், மின்சாரத் தடை ஏற்படும்போது ஜெனரேட்டர் அமைத்து குடிநீர் வழங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

சங்கராபுரம் பேரூராட்சியில் போதுமான நிதி வசதி இல்லாததால் ஜெனரேட்டர் வாங்கும் திட்டம் கைவிடப்பட்டது.

**23—**

**பெண்ணாகரம் தொகுதியில் குடிநீர் வழங்குதல்**

வினா எண் 3608—**திரு. ஜி.கே. மணி** : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதி, இராமகொண்டஹள்ளி, சோளப்பாடி , மோட்டுக்குடி, ஆனைக்கல்லானூர் ஆகிய கிராமங்களுக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைத்து குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) : தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரம் ஒன்றியம், இராம கொண்டஹள்ளியில் ஒரு கையிறைப்பான் உள்ளது. இக்குடியிருப்பிற்கு ஒரு திறந்தவெளிக் கிணறு தோண்டும் பணி நடந்து வருகிறது. பணி முடிவடைந்ததும் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அடுத்த நிதியாண்டில் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்படும். சோளப்பாடி மற்றும் ஆனைக்கல்லானூர் கிராமங்களில் தலா ஒரு கையிறைப்பான் உள்ளது. இவைகளுக்கு வரும் நிதியாண்டு நிதிநிலையைப் பொறுத்து திட்டம் மேற்கொள்ளப்படும். மோட்டுக்குடியில் இரண்டு கையிறைப்பான்கள் உள்ளன. இதற்கு வரும் நிதியாண்டு நிதிநிலையைப் பொறுத்து திட்டம் மேற்கொள்ளப்படும்.

**24—**

**குடிநீர்த் திட்டத்திற்கு சிறப்பு மானியம்**

வினா எண் 3831—**திரு. பா. அருண்குமார்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டுப்பாளையம் நகராட்சியில் 2-வது கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு சிறப்பு மானியம் வழங்கி நகர மக்களின் குடிநீர்ப் பஞ்சத்தைப் போக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

மேட்டுப்பாளையம் நகராட்சிக் குடிநீர் அபிவிருத்தித் திட்டம், பவானி ஆற்றை நீர் ஆதாரமாகக் கொண்டு ரூ.950.65 இலட்சங்களுக்குத் தயாரிக்கப்பட்டு, தற்சமயம் அரசின் பரிசீலனையில் உள்ளது.



**25—**

**சேலம் நகரில் பாதாளச் சாக்கடை அமைக்கும் பணி**

வினா எண் 4219—**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் நகரில் பாதாளச் சாக்கடை அமைக்கும் பணி எப்போது முடிவு பெறும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உல்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் நகரில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கத் தேவையான நிலத்தைக் கையகப்படுத்துவது தொடர்பான வழக்கு நீதிமன்றத்தில் நடைபெற்றுக் கொண்டு இருப்பதால் இந்தப் பணி ஆரம்பிக்கப்படாமல் உள்ளது.

**26—**

**சேலம் நகரில் பாதாளச் சாக்கடை அமைக்கும் பணி**

வினா எண் 5059—**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர், அத்திக்கடவு குடிநீர்த் திட்டப் பணிகளில் பயன்படுத்தப்பட்ட குழாய்கள் அடிக்கடி உடைந்து விடுவது அரசிற்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், குழாய்களைச் சரி செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): ஆரம்ப காலத்தில் திட்டம் பயனுக்குக் கொண்டு வரப்பட்டபொழுது அவ்வப்பொழுது குழாய்களில் கசிவுகள்

ஏற்பட்டு அவைகள் உடனுக்குடன் சரி செய்யப்பட்டன. தற்பொழுது திட்டம் நிலைப்படுத்தப்பட்டுச் சீராக குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

27—

**திருப்பூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம்**

வினா எண் 5333—**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் கிராமப்புற கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகளைத் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) பணிகள் எப்போது முடிவுறும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) திருப்பூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து 412 வழியோரக் கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு ரூ.3,150 இலட்சங்களுக்கு அரசு ஆணை எண்: 220, நாள்: 3-11-1995-ல் ஆட்சி ஒப்பளிப்பு அனுமதி வழங்கப்பட்டு தற்போது பணிகள் முன்னேற்றத்திலுள்ளன.

(ஆ) அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டு 3/98-க்குள் மக்களின் பயனுக்குக் கொண்டு வரும் பொருட்டு திட்டமிடப்பட்டு பணிகள் முன்னேற்றத்திலுள்ளன.

28—

**மயானத்திற்குக் கொட்டகை அமைத்தல்**

வினா எண் 5499—**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஒன்றியம், காந்தி நகர் ஆதிதிராவிடர் மயானத்திற்குக் கொட்டகை அமைக்க அரசு ஆவன செய்யுமா?



(ஆ) ஆம் எனில் எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

29—

**மாவட்ட ஊராட்சிக் குழுக் கூட்டம்**

வினா எண் 6092—**திரு. மீ.அ. வைத்தியலிங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்ட வளர்ச்சி மன்றக் குழு கலைக்கப்பட்டு விட்டதால் ஒன்றியக் குழுத் தலைவர்களையும், நகராட்சித் தலைவர்களையும் மாவட்ட ஊராட்சிக் குழுக் கூட்டத்தில் கலந்து கொள்ளச் செய்யும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இன்றைய நிலை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

30—

**கங்கை-காவிரி இணைப்புத் திட்டம்**

வினா எண் 167—**திரு. கே. சுப்பராயன், திரு. இ. கணேசன் மற்றும் திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கங்கை-காவிரி இணைப்புத் திட்டத்தைச் செயல்படுத்த, மாநில அரசு மைய அரசை வற்புறுத்தி நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

கங்கையைக் காவிரியோடு இணைப்பதான ஒரு திட்டம் மத்திய அரசிடம் இல்லை என்பதால் அதை நிறைவேற்றும்படி வலியுறுத்தும் அரசியமில்லை.

**31—**

### ஏரியை ஆழப்படுத்துதல்

வினா எண் 609—**திரு. வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவா சத்திரம் ஒன்றியம், பெருமகளூர் பெரிய ஏரியை ஆழப்படுத்தவும், அதில் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கவும் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

இல்லை.

**32—**

### வைகை அணை நீர்ப் பங்கீட்டு முறை

வினா எண் 2210—**திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வைகையாற்றிலிருந்து இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் ஆகிய மாவட்டங்களுக்கு, வைகை அணையிலிருந்து கிடைக்க வேண்டிய அளவிற்குத் தண்ணீர் கிடைப்பதில்லை என்பதை இந்த அரசு அறியுமா?





விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

வைகை அணையில் அந்தந்த ஆண்டுகளில் பெய்யும் மழையைப் பொறுத்து, சேமிக்கப்படும் வைகைப் பங்கீட்டுத் தண்ணீர் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களுக்கு விதிமுறைகளின்படி உரிய விகிதாச்சாரத்தில் பகிர்ந்தளிக்கப்படுகிறது.

**33—**

### ஆரம்பள்ளிப்பாறை நீர்த்தேக்கம்

வினா எண் 2325—**திரு. எல். மூக்கையா:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கொடைக்கானல் ஒன்றியம், கவுஞ்சிக்கு அருகில் ஆரம்பள்ளிப் பாறை நீர்த்தேக்கத் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

திண்டுக்கல் மன்னர் திருமலை மாவட்டம், கொடைக்கானல் வட்டம், கவுஞ்சிக்கு அருகில் ஆரம்பள்ளிப்பாறை நீர்த்தேக்கம் அமைப்பதற்கு ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு முதல் நிலை அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

**34—**

### விவசாயிகளுக்குத் தண்ணீர் வசதி

வினா எண் 2764—**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, மஹாராஜசமுத்திரம் காட்டாற்றின் குறுக்கே நீரேற்று நிலையம் அமைத்து அப்பகுதி விவசாயிகளுக்குத் தண்ணீர் வசதி செய்துதர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

[1997 ஏப்ரல் 30

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

தற்பொழுது இல்லை.

**35—**

**நிலச்சரிவு ஏற்படுவதைத் தடுத்தல்**

வினா எண் 5313—**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மழைக்காலங்களில் ஊட்டியில் நிலச்சரிவு ஏற்படுவதைத் தடுக்க சிறப்புத் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) உதகமண்டலம் வட்டத்திலுள்ள பாலாடா மற்றும் குன்னூர் வட்டத்திலுள்ள காட்டேரி ஓடைகள் ஓடும் பாதையில் கரையோரப் பகுதிகளைப் பலப்படுத்தி, தடுப்புச் சுவர்கள் அமைத்து, நிலச்சரிவுகளைத் தடுக்கும் திட்டம் தலைமைப் பொறியாளரின் ஆய்வில் உள்ளது.

**36—**

**பாலாற்றில் பாலம் கட்டுதல்**

வினா எண் 1591—**திரு. கே. சுந்தர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உத்திரமேரூர் வட்டம், ஓரக்காட்டுப் பேட்டையிலிருந்து பழத்தோட்டம் வரை பாலாற்றின் குறுக்கே பாலம் கட்டும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?



1997 ஏப்ரல் 30]

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

செங்கை அண்ணா மாவட்டம், உத்திரமேரூர் வட்டம், ஓரக்காட்டுப் பேட்டையிலிருந்து பழத்தோட்டம் வரை பாலாற்றின் குறுக்கே தரைப்பாலம் கட்டும் பணி, தமிழ்நாடு கட்டுமானக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டு, பணி தண்ணீர் மட்டம் வரை முடிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு கட்டுமானக் கழகம் குறித்த நேரத்திற்குள் ஒப்பந்தப்படி வேலை செய்யாத காரணத்தினால் வேலை ரத்துச் செய்யப்பட்டு மீதமுள்ள தேவைகளுக்கு மறு ஒப்பந்தம் அழைக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**37—**

**முதியோர்களுக்குப் பேருந்துகளில் பயணக் கட்டணச் சலுகை**

வினா எண் 4407—**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

65 வயதிற்கு மேற்பட்ட முதியோர் இரயிலில் பயணம் செய்ய, மத்திய அரசு, பயணக் கட்டணத்தில் சலுகை வழங்குவது போல, அரசுப் பேருந்துகளிலும் பயணக் கட்டணத்தில் சலுகை வழங்க மாநில அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

இல்லை.

**38—**

**மாணவர்களுக்கு பஸ் பாஸ் சலுகை வழங்குதல்**

வினா எண் 4996—**திரு. ரா. சேதுநாதன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பஸ் பாஸ் பெறும் மாணவர்கள் பள்ளிக்குச் செல்ல 30 கி.மீ.க்குள் இரண்டு பஸ்களில் பயணம் செய்துதான் பள்ளிக்குச் செல்ல வேண்டுமென்றால் அவர்களுக்கு இரண்டு பஸ்களில் செல்ல அரசு அறிவித்த பஸ் பாஸ் சலுகை வழங்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

மாணவ மாணவியர் வீட்டிலிருந்து பள்ளிக்குச் செல்லும் தடத்தில் பேருந்துகளின் எண்ணிக்கை 8 (எட்டு) குறைவாக இருந்தாலும், நேரடி பேருந்து வசதி இல்லாவிட்டாலும் மாணவ, மாணவியர்கள் இரண்டு அல்லது மூன்று பேருந்துகள் மாறி செல்ல சலுகை வசதிகள் வழங்கப்பட்டுள்ளது.

**39—**

**சென்னை - தலைஞாயிறுக்குப் பேருந்து இயக்குதல்**

வினா எண் 5015—**திரு. எஸ். கே. வேதரத்தினம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையிலிருந்து தலைஞாயிறுக்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து இயக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் இயக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**40—**

**நோயாளிகளிடம் கட்டணம் வசூலித்தல்**

வினா எண் 5516—**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறை சாலைப் போக்குவரத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெறும் நோயாளிகளிடம் கட்டணம் வசூலிக்கப்படுகிறதா?



(ஆ) ஆம் எனில், அதனைத் தளர்த்தி இலவசமாக வைத்தியம் செய்ய அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): நுழைவுக் கட்டணம் ரூ. 5 பெறுவது 9-11-1996 முதல் விலக்கப்பட்டு, 50 சதவீத நோயாளிகளுக்கு இலவச சிகிச்சை அளிக்கப்படுகிறது.

**41—**

**மருத்துவமனையில் குழந்தைகள் பாதுகாப்பு**

வினா எண் 5518—**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம் பெருந்துறை சாலைப் போக்குவரத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரேடியாலஜி அறை குழந்தைகள் பிரிவுக்கு அருகிலேயே உள்ளதா?

(ஆ) அதனால் குழந்தைகளுக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளதா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) குழந்தைகள் பிரிவிற்கும் ரேடியாலஜி அறைக்கும் 6 மீட்டர் இடைவெளி உள்ளது

(ஆ) குழந்தைகளுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்பட வாய்ப்பில்லை

**42—**

**மொழிப்போர் தியாகிகளுக்கு தாமிரப் பட்டயம்**

வினா எண் 4391—**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1971-இல் மொழிப்போர் தியாகிகளுக்கு தாமிரப் பட்டயம் வழங்க அறிவிக்கப்பட்டு இன்னும் வழங்கப்படவில்லை என்பதை அரசு அறியுமா?

[1997 ஏப்ரல் 30

(ஆ) ஆம் எனில், எப்போது வழங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு.தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): 20-10-1975 வரை இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டவர்களில் 1494 தியாகிகளுக்கு தாமிரப் பட்டயம் வழங்கப்பட்டுள்ளது.

**43—**

**தேசிய மொழிகளின் விடுதலைப் போராட்ட வரலாறு மொழி பெயர்ப்பு**

வினா எண் 4831—**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இந்தியாவிலுள்ள பிற தேசிய மொழிகளில் தமிழ்நாட்டில் விடுதலைப் போராட்ட வரலாறு மொழி பெயர்ப்பு செய்யப்பட்டு விற்பனை செய்யும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர்:**

இல்லை.

**44—**

**தமிழில் இந்திய ஆட்சிப் பணித் தேர்வு எழுதும் மாணவர்களை ஊக்குவித்தல்**

வினா எண் 5057—**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழில் இந்திய ஆட்சிப் பணித் தேர்வு எழுதி வெற்றி பெற மாணவர்களை ஊக்குவிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?



1997 ஏப்ரல் 30]

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர்:**

தமிழில் இந்திய ஆட்சிப் பணித் தேர்வு எழுத உறுதுணையாகக் கருவி நூல்கள் வெளியிடும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளது.

**45—**

**புதிய குடும்ப அட்டைகள் வழங்குதல்**

வினா எண் 396—**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடஆற்காடு-அம்பேத்கர் மாவட்டத்தில் குடும்ப அட்டை வேண்டி விண்ணப்பித்துள்ளோர் எத்தனை பேர்?

(ஆ) அவர்களுக்கு எப்போது குடும்ப அட்டைகள் வழங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) 30-6-1996 வரை 40,386 பேர் விண்ணப்பித்துள்ளனர்.

(ஆ) அவைகளில், இதுவரை 23,503 மனுக்கள் விசாரணை செய்யப்பட்டு அவற்றுள், 9,697 மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டன. மீதம் உள்ள 13,806 தகுதியான இனங்களுக்கு குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள 16,883 மனுக்கள் விசாரணையில் உள்ளன. விரைவில் தகுதியான இனங்களுக்கு குடும்ப அட்டைகள் வழங்கப்படும்.

**46—**

**விவசாயக் கடன்களைத் தள்ளுபடி செய்தல்**

வினா எண் 2886—**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு உணவு, பொதுவிநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் வட்டம் விவசாயிகளின் விவசாயக் கடன்களை முழுமையாகத் தள்ளுபடி செய்ய அரசு முன்வருமா?

(ஆ) அது இயலாதெனில் வட்டியை மட்டுமாவது தள்ளுபடி செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, உணவு, பொதுவிநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) வறட்சியால் பாதிக்கப்பட்ட சிதம்பரம் வட்டத்தில், நெற்பயிர் சாகுபடிக்கு வழங்கப்பட்ட குறுகிய கால கடன்களை மத்திய கால கடன்களாக மாற்றி அரசு நிவாரணம் அளித்துள்ளது. நாபார்டு வங்கி வழங்கியுள்ள அறிவுரையின்படி கடன்களை முழுமையாகத் தள்ளுபடி செய்ய இயலாது.

(ஆ) அவ்வாறே வட்டியையும் தள்ளுபடி செய்ய இயலாது.

**47—**

## கூட்டுறவு வங்கியில் மோசடி

வினா எண் 3450—**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு உணவு, பொதுவிநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் செங்கோட்டை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் சுமார் ரூ.24 லட்சம் மோசடி செய்யப்பட்டு உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

(இ) அவ்வங்கியை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கே.என்.நேரு, உணவு, பொதுவிநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.



(ஆ) இவ்வங்கியில் முறைகேடுகள் நடைபெற்றுள்ளதாக 30-5-1995 தேதியிட்ட மேற்படி வங்கியின் தனி அலுவலரின் அறிக்கை மற்றும் தென்காசி கூட்டுறவுச் சார் பதிவாளரது 21-6-1995-ம் நாளிட்ட அறிக்கையின் பேரில் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் 1983 பிரிவு 81-ன் கீழ் விசாரணை நடைபெற்று வருகிறது.

(இ) இவ்வங்கியில் நடைபெற்ற முறைகேடுகளுக்குக் காரணமான பணியாளர்கள் நிரந்தரப் பணிநீக்கம் செய்யப்பட்டமையால் இவ்வங்கியின் அருகிலுள்ள தேன்பொத்தை தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியின் செயலாளர் பொறுப்பில் நியமனம் செய்யப்பட்டு இவ்வங்கி செயல்பட்டு வருகிறது.

**48—**

## பயிர்க்கடனை உயர்த்துதல்

வினா எண் 3649—**திரு. ஆர். ஆர். சேகரன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் பயிர்க்கடனாக வழங்கப்படும் அதிகபட்சத் தொகை ரூ.25,000/-ஐ ரூ.50,000/-ஆக உயர்த்த அரசு முன் வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கே. என். நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் கொடுக்கப்படும் பயிர் கடனில் உச்சவரம்பினை ரூ.25,000/-லிருந்து ரூ.35,000/-ஆக இவ்வரசு உயர்த்தியுள்ளது. அவ்வுயர்வு 26-8-1996 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. உயர்த்தப்பட்டுள்ள உச்சவரம்பினை மேலும் ரூ.50,000/- ஆக உயர்த்தித்தர தற்போது வாய்ப்பில்லை.

**49—**

## பதவி உயர்வில் ஒதுக்கீட்டு முறை

வினா எண் 4712—**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1997 ஏப்ரல் 30

(அ) தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கு பதவி உயர்வு, ஒதுக்கீட்டு முறையில் வழங்கப்படுவது போல தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கியில் பதவி உயர்வில் ஒதுக்கீட்டு முறை கடைப்பிடிக்கப்படுகின்றதா?

(ஆ) இல்லையெனில், அரசு எடுக்கும் நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு.கே. என். நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) 1983-ம் ஆண்டின் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் மற்றும் 1988-ஆம் ஆண்டின் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகளில் நேரடி நியமனங்களுக்கு மட்டுமே ஒதுக்கீட்டு முறை வரையறுக்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்டுள்ள சட்டம் மற்றும் விதிகளின் அடிப்படையில் வங்கியில் ஏற்படுத்தப்பட்ட சிறப்பு துணை விதிகளின்படி பணியாளர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்படுவதால் இதில் அரசு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை ஏதும் இல்லை.

**50—**

### தொழிற்சாலையைத் திறக்க நடவடிக்கை

வினா எண் 5510—**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் கற்பகம் கூட்டுறவுச் சிறப்பங்காடிக்குச் சொந்தமான பழம் பதனிடும் தொழிற்சாலை மூடப்பட்டுள்ளது அரசிற்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதனைத் திறக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?



1997 ஏப்ரல் 30]

விடை—

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): வடாற்காடு மாவட்ட பழம் பதனிடும் கூட்டுறவுச் சங்கத்தின், பழம் பதனிடும் ஆலை, தற்பொழுது, செயல்படாமல் உள்ளது. மீண்டும் தொழிற்சாலையை ஏற்று நடத்திட இயலாத நிலை உள்ளதால், அவ்வாலையை குத்தகை அடிப்படையில் தமிழ்நாடு வேளாண் தொழில்கள் கழகத்திற்கு அளிக்கும் செயற்குறிப்பு ஆய்வில் உள்ளது.

**51—**

### புதிய குடும்ப அட்டைகள் வழங்கும் விவரம்

வினா எண் 5676—**திரு. பெ. சு. திருவேங்கடம்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1997 ஜனவரியில் தமிழக அரசு மக்களுக்குப் புதிய குடும்ப அட்டைகள் வழங்க முடிவெடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கே. என். நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 1997-ஆம் ஆண்டு தமிழ்நாட்டிலுள்ள அனைத்து குடும்பங்களுக்கும் புதிய குடும்ப அட்டைகள் வழங்கலாம் என அரசு முடிவெடுத்துள்ளது. வறுமைக்கோட்டிற்கு கீழே இருக்கிற குடும்பங்களுக்கு சிவப்பு வண்ண அட்டையும், வசதி படைத்த குடும்பங்களுக்கு பச்சை வண்ண அட்டையும், இவை இரண்டிலும் சேராத இடைப்பட்ட மத்திய தரக் குடும்பங்களுக்கு மஞ்சள் வண்ண அட்டையும் குடும்பத் தலைவரின் புகைப்படத்துடன் வழங்கப்படும்.

**52—**

## மண்ணெண்ணெய் சிறு விற்பனை நிலையங்கள் திறத்தல்

வினா எண் 6394—**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூட்டுறவுப் பண்டகசாலை மூலமாக மண்ணெண்ணெய் சிறு விற்பனை நிலையங்களை திறக்கும் எண்ணம் அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கே. என். நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ: விவர அறிக்கை தனியே வைக்கப்பட்டுள்ளது.

**விவர அறிக்கை**

மாநிலத்தில் சுமார் 1.5 கோடி குடும்ப அட்டைதாரர்களுக்கு இன்றியமையாப் பண்டங்களான அரிசி, சர்க்கரை, மண்ணெண்ணெய், கோதுமை, ரவை மற்றும் மைதா முதலிய பொருட்கள் வழங்கப்படுகின்றன. தமிழகம் எங்கும் பொது விநியோக முறையின் கீழ் 1.5 கோடி குடும்ப அட்டைதாரர்களுக்கு 23,125 அங்காடிகள் மூலமாக இன்றியமையாப் பண்டங்கள் வழங்கப்படுகின்றன. இதில் 18,242 கடைகள் கிராமப் பகுதிகளிலும், 4,883 கடைகள் நகர்ப்புறங்களிலும் அமைந்துள்ளன. ஒவ்வொரு வருவாய் கிராமத்திலும் குறைந்தது ஒரு அங்காடியாவது செயல்பட்டு வருகிறது. மாதந்தோறும் மத்திய அரசு 73,035 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் பொது விநியோக முறையில் வழங்க அனுமதிக்கிறது.

2. மண்ணெண்ணெய், மைய அரசின் எண்ணெய் நிறுவனங்களின் வழங்கு முனைகளில் இருந்து மாநிலத்தில் செயல்படும் 508 தனியார் மண்ணெண்ணெய் மொத்த வணிகர்களால் கொண்டு வரப்பட்டு, பொது விநியோக அங்காடிகளுக்கு வழங்கப்படுகிறது. பொது விநியோக



அங்காடிகளுக்கு மண்ணெண்ணெய் பேரல்களில் டிரக் வண்டிகள் மூலமாகவோ வேறு வாகனங்கள் மூலமாகவோ மற்றும் சில இடங்களில் கைவண்டிக்காரர்கள் மூலமாகவோ அனுப்பப்படுகின்றன. இதனால் அனைத்து அங்காடிகளுக்கும் தினமும் மண்ணெண்ணெய் அனுப்பும் வாய்ப்பு இல்லாமல் போவதால், எல்லா நாட்களிலும் அங்காடிகளில் மண்ணெண்ணெய் இருப்பு இருக்கும் நிலை இல்லை. மேலும் மண்ணெண்ணெய் இதர உணவுப்பொருட்களில் சிதறி பாதிக்கப்படக் கூடாது என்ற காரணத்தால் மண்ணெணெய் அங்காடியின் ஒரு பகுதியிலோ அல்லது அங்காடியின் வெளிப் பகுதியிலோ வைத்து விநியோகம் செய்யப்படுவதால் கணிசமாக மண்ணெண்ணெய் இருப்பு வைப்பதிலும் இடையூறுகள் உள்ளன. இந்த இடையூறுகளினால் குடும்ப அட்டைதாரர்கள் அங்காடிகளுக்கு 2 அல்லது 3 முறை செல்ல வேண்டிய நிலையும் மண்ணெண்ணெய் வழங்கப்படும்போது நீண்ட வரிசையில் காத்திருக்கும் நிலையும் ஏற்படுகிறது. எனவே, போதிய மண்ணெண்ணெய் ஒதுக்கீடு வழங்கப்பட்டும், செயற்கையான தட்டுப்பாடு ஏற்படும் சூழ்நிலை நிலவுகிறது. இது போன்று மொத்த வணிகர்கள் நியாயவிலை அங்காடிகளுக்கு பேரல்கள் மூலம் மண்ணெண்ணெய் அனுப்பும்போது அளவு குறைவாக அனுப்புவதால் குடும்ப அட்டைதாரர்களுக்கு அளவு குறைத்து வழங்கப்படுவதாகவும் புகார்கள் பெறப்படுகின்றன.

3. பொது விநியோகத் திட்டத்தின் முக்கிய பிரச்சினையாக உள்ள மண்ணெண்ணெய் விநியோகத்தினை சீரமைக்க ஒரு நிரந்தர தீர்வு காணும் அவசியம் ஏற்பட்டதால் மண்ணெண்ணெயை பொது விநியோக அங்காடிகளில் இருந்து பிரித்து மண்ணெண்ணெய் விநியோகத்திற்கென தனியே மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

4. மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்களில் 15 கிலோ லிட்டர் கொள்ளளவு கொண்ட கீழ்நிலைத்தொட்டி அமைத்து பெட்ரோல் மற்றும் டீசல் நிலையங்களில் அமைக்கப்பட்டுள்ளதுபோல் பம்பு வசதி மூலமாக குடும்ப அட்டைதாரர்களுக்கு நேரடியாக வழங்கப்படும் மண்ணெண்ணெய் வழங்கு நிலையத்திற்கு அருகாமையில் உள்ள ஐந்து அல்லது ஆறு கடைகளின் குடும்ப அட்டைகளை இணைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கு இந்நிலையங்களில் இருந்து நேரடியாக

மண்ணெண்ணெய் வழங்கப்படும். எண்ணெய் நிறுவனங்களில் வழங்கு முனைகளின்று தங்கள் லாரி மூலம் நேரடியாக மண்ணெண்ணெய் இந்த நிலையங்களுக்கு கொண்டுவரப்படும் என்பதால் முறைகேடுகள் நடக்க வாய்ப்பிருக்காது என்பதுடன் எல்லா நாட்களிலும் மண்ணெண்ணெய் விநியோகம் செய்திடவும் இயலும்.

5. சென்னை மாநகரில் கோபாலபுரத்தில் ஒன்றும், அண்ணா நகரில் ஒன்றுமாக இரண்டு மண்ணெண்ணெய் மட்டும் வழங்கும் நிலையங்களை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நடத்தி வருகிறது. அரசின் 1997-98-ஆம் ஆண்டு பகுதி இரண்டு திட்டமாக 20 மண்ணெண்ணெய் மட்டும் வழங்கும் நிலையங்கள் அமைக்கப்படவிருக்கின்றன. அதேபோல் 1996-97-ம் ஆண்டு இடைக்காலத் திட்டமாக சென்னையில் மட்டும் 10 மண்ணெண்ணெய் மட்டும் விநியோகிக்கும் நிலையங்கள் அமைக்க ஒரு நிலையத்திற்கு ரூபாய் 1.3 இலட்சம் வீதமாக ரூபாய் 13 இலட்சம் அரசு மானியம் அனுமதித்துள்ளது. ஒரு நிலையம் அமைக்க ரூபாய் 2.6 இலட்சம் செலவு பிடிக்கும். ஆகையால் மீதமுள்ள ரூபாய் 13 இலட்சத்தை இந்நிலையங்கள் நிறுவும் துறைகள் ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்நிலையங்களை திறக்கும் பொறுப்பு கூட்டுறவுச் சங்கங்களுக்கும் கொடுக்கப்படும்.

**53—**

**மண்ணெண்ணெய் விநியோகிக்க உரிமம் வழங்குதல்**

வினா எண் 6409—**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு உணவு மற்றும் பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மண்ணெண்ணெய் கிடைக்காத பகுதிகளுக்கு விநியோகிக்கும் வகையில் 100 லிட்டர் வரை மண்ணெண்ணெய் விநியோகிக்க உரிமம் வழங்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், இந்த நடைமுறை பற்றி அரசுக்குப் புகார் ஏதும் வந்துள்ளதா?





(இ) இதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு கே. என். நேரு, உணவு பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) பொது விநியோகத் திட்டத்தின் கீழ் நியாயவிலைக் கடைகளில் குடும்ப அட்டைகளுக்கு அரசு நிர்ணயித்துள்ள வழங்கல் அளவுகளின்படி மண்ணெண்ணெய் வழங்கப்படுகிறது. மேலும், குடும்பங்களின் கூடுதல் தேவைக்குப் பயன்படும் வண்ணம் சென்னை மற்றும் மாவட்டங்களில் அரசால் உரிமம் வழங்கப்பட்ட மண்ணெண்ணெய் கைவண்டிக்காரர் மூலம் சென்னை நகரத்தில் தினசரி 100 லிட்டர் என்ற அளவிலும், மாவட்டங்களில் 50 லிட்டர் என்ற அளவிலும் மாதத்தில் 25 நாட்களுக்கு மிகாமல் மண்ணெண்ணெய் வழங்கப்படுகிறது. இதனை ஒரு குடும்பத்துக்கு 2 லிட்டர் என்ற அளவுக்கு மிகாமல் சம்பந்தப்பட்ட கைவண்டிக்காரருக்கு ஒதுக்கீடு செய்துள்ள பகுதியில் மட்டும் விநியோகம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) மற்றும் (இ): மண்ணெண்ணெய் கைவண்டி வணிகர் செயல்பாடு குறித்து புகார்கள் வந்து நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மாவட்டங்களில் சம்பந்தப்பட்ட மாவட்ட விநியோக அலுவலர்களும் சென்னை நகரில் சம்பந்தப்பட்ட உதவி ஆணையாளர்கள் ஆகியோர் பெறப்பட்ட புகார்களின் மீது உரிய ஆய்வு மேற்கொண்டு நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப் பட்டுள்ளனர். குற்றம் நிரூபிக்கப்படும் இனங்களில் தமிழ்நாடு மண்ணெண்ணெய் (வாணிபத்தை முறைப்படுத்துதல்) ஆணை, 1973-ன் கீழ் உரிமத்தை ரத்து செய்யவும்/காப்புத்தொகையினை அரசுக்கு பறிப்பிழப்பு செய்யவும் அல்லது முறைகேடாக பயன்படுத்திய மண்ணெண்ணெய்யின் 5 மடங்கு மதிப்புத் தொகை வரை அபராதம் விதிக்கவும் வகை செய்யப்பட்டுள்ளது. அதன்படி குற்றத்தின் தன்மையைப் பொறுத்து சம்பந்தப்பட்ட அலுவலரால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

**54—**

**பாலின் விலையை உயர்த்துதல்**

வினா எண் 1266—**திரு. கே. மனோகரன்; திரு. நா. பெரியசாமி மற்றும் திரு. எஸ். என். பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாலின் விலையை உயர்த்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:**

ஆவின் நிறுவனம் அனுப்பிய கருத்துருவின்பேரில், பாலின் விலையை உயர்த்த அரசு அனுமதியளித்தது. அதன்படி ஆவின் நிறுவனம் 24-10-1996 முதல் பால் கொள்முதல் விலையை லிட்டருக்கு ரூ.1/-ம், பாலிதின் பை (3% கொழுப்புச் சத்து) மற்றும் தானியங்கி நிலையம் (4.5% கொழுப்புச் சத்து) மூலம் விற்பனை செய்யும் பாலின் விலையை லிட்டருக்கு ரூ.1.50-ம் உயர்த்தியுள்ளது.

**55—**

**தினக்கூலித் தொழிலாளர்களை பணி நிரந்தரம் செய்தல்**

வினா எண் 2733—**திரு. நா. பெரியசாமி :** மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம் லிமிடெட் நிர்வாகத்தில் பணிபுரியும் தினக்கூலி தொழிலாளர்கள் எத்தனைபேர்?

(ஆ) அவர்கள் பணி நிரந்தரம் செய்யப்படுவார்களா?

விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:**

(அ) பெரியார் மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்தில் மொத்தம் 73 தற்காலிக தினக் கூலி நபர்கள் உள்ளனர்.

(ஆ) இவர்கள் அனைவரையும் மொத்தமாக பணி நிரந்தரம் செய்யும் சாத்தியக்கூறுகள் தற்போது இல்லை.



**56—**

**பால் குளிரூட்டும் நிலையத்தை மேம்படுத்துதல்**

வினா எண் 5238—**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேத்தியாத்தோப்பிலுள்ள பால் குளிரூட்டும் நிலையத்தை மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): : சேத்தியாத்தோப்பு பால் குளிரூட்டும் நிலையத்தின் கொள்ளளவு திறனான நாளொன்றுக்கு 10,000 லிட்டரில் பாதி அளவு மட்டும் (சராசரி நாளொன்றுக்கு 5,000 லிட்டர் பால்) பால் பெறப்பட்டு குளிரூட்டப்படுவதால், அதனை மேம்படுத்த நடவடிக்கை எடுக்க தற்போது இயலாத நிலை உள்ளது.

**57—**

**பால் விநியோகம் செய்ய ஒப்பந்த அடிப்படையில் வாகனங்கள்**

வினா எண் 5322—**திரு. கே. சுப்பராயன் :** மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பால் விநியோகம் செய்யும் வாகனங்கள் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் காரணம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) வாகனங்கள் வாங்குவதற்கான நிதி, எரிபொருள், பராமரிப்பு, ஓட்டுநர்கள் மற்றும் சுத்தம் செய்யும் பணியாளர்கள் ஊதியம் முதலான செலவுகள் மற்றும் தொழிலாளர் பிரச்சினைகளைக்

கருத்தில் கொள்ளும்போது பால் விநியோகம் செய்யும் வாகனங்களை ஒப்பந்த அடிப்படையில் நியமிப்பதே இலாபகரமாக உள்ளது.

58—

**சேலம் மாவட்டக் கூட்டுறவு பால் பண்ணை**

வினா எண் 5782—**திரு. இ. கணேசன் :** மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டக் கூட்டுறவு பால் பண்ணையில் பலகோடி ரூபாய்க்கு மோசடி நடந்துள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்தில் நடைபெற்ற முறைகேடுகள் குறித்து அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பெற்று சம்பந்தப்பட்டவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

59—

**மதுரை மீனாட்சி ஆலையைத் திறத்தல்**

வினா எண் 2605—**திரு. வ. வேலுசாமி:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மூடிக்கிடக்கும் மதுரை மீனாட்சி ஆலையை மீண்டும் திறக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): மதுரை மீனாட்சி மில்ஸ் குருப்பைச் சார்ந்த மதுரை 'ஏ' யூனிட் பரவை மற்றும் மணப்பாறையில் உள்ள அதன்



ஆலைகள் மார்ச் 1996-ல் இருந்து முழுவதுமாக இயங்க ஆரம்பித்து தொடர்ந்து இயங்கி வருகின்றன. மதுரை 'பி' யூனிட் நெசவுப் பிரிவும் தற்பொழுது இயங்கி வருகிறது.

60—

**தொழிற்பயிற்சி நிலையம் தொடங்குதல்**

வினா எண் 3332—**திரு. ஜி. கே. மணி:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியத்தில் தொழிற் பயிற்சி நிலையம் தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் தொழிற் பயிற்சி நிலையங்கள் இல்லாத 218 ஊராட்சி ஒன்றியங்களில், 1997-98-ம் ஆண்டிலிருந்து மூன்று ஆண்டுகளில் படிப்படியாக தனியார் தொழிற் பயிற்சி நிலையங்கள் அமைக்க 19-9-1996-ம் நாளிட்ட தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறையின் அரசாணை (நிலை) எண்.135-ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியத்தில் தொழிற் பயிற்சி நிலையம் எதுவும் இல்லாத காரணத்தினால், அங்கு தனியார் தொழிற் பயிற்சி நிலையம் துவங்கவும், அவ்வாறு தனியார் துவங்க முன்வராத நேர்வில் மத்திய அரசின் நிதியுதவியைக் கொண்டு அரசு தொழிற் பயிற்சி நிலையம் துவக்கப்படவும் வாய்ப்புள்ளது.

61—

**வடசேரி கிங் கெமிக்கல்ஸ் நிர்வாகம்**

வினா எண் 3374—**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

விடை—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், வடசேரி கிங் கெமிக்கல்ஸ் நிர்வாகம் குறித்து அரசிற்கு ஏதேனும் புகார் வந்துள்ளதா?

(ஆ) ஆமெனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) மேற்படி நிர்வாகத்தில் பணிபுரிந்த 120 தொழிலாளர்களின் வேலை நீக்கம் குறித்த தொழிற் தாவா எழுப்பப்பட்டு, தஞ்சாவூர் தொழிலாளர் அலுவலர் முன்பு, 20-11-96 அன்று நடைபெற்ற இறுதி சமரசப் பேச்சுவார்த்தை முறிவடைந்தது. தஞ்சாவூர் தொழிலாளர் அலுவலரின் சமரச முறிவறிக்கைமீது தொழிலாளர் ஆணையரும் தன்னுடைய பரிந்துரையை 18-2-97 அன்று அரசுக்கு அனுப்பி இதனை அரசு பரிசீலனை செய்து, இத்தாவா நீதிமன்றத் தீர்ப்பிற்கு விடப்பட்டுள்ளது.

**62—**

**விவசாயத் தொழிலாளர்களுக்கு ஊதிய நிர்ணயம்**

வினா எண் 4646—**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயத் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் எப்போது இறுதியாக அறிவிக்கப்பட்டது.

(ஆ) அதை மாற்றி புதிய விலைவாசிக்கேற்ப உயர்த்தி அறிவிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) விவசாயத் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் இறுதியாக அரசாணை (2டி) எண். 15, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 6-4-1993-ன் மூலம் அறிவிக்கப்பட்டது.

(ஆ) சமீபத்தில் அரசாணை (2டி) எண். 50, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை நாள் 13-9-1996-ல் குறைந்தபட்ச ஊதியம் மறுநிர்ணயம் செய்து முதனிலை ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.



**63—**

**தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் சட்டத்தை முறைப்படுத்துதல்**

வினா எண் 4674—**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் நலத் திட்ட வரம்பிற்குள் சுமை தூக்கும் தொழிலாளி ரிக்ஷா தொழிலாளர்களையும் கொண்டு வரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு உடலுடழைப்புத் தொழிலாளர் (வேலைவாய்ப்பு மற்றும் பணிநிலைகளை முறைப்படுத்துதல்) சட்டத்தின் கீழான அட்டவணையில் உடலுழைப்புத் தொழில்கள் முறைப்படுத்தப் பட்டுள்ளன. இத்தொழிலில் சுமை தூக்கும் தொழிலும் சேர்க்கப்பட்டுள்ளது. ரிக்ஷா தொழிலாளர்கள் மேற்படி சட்டத்தின் அட்டவணையில் சேர்க்கப்படவில்லை.

**64—**

**தொழிற்சங்கம் அமைத்தல்**

வினா எண் 4937—**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசியல் சாசன ரீதியான, உரிமையான தொழிற்சங்கம் அமைத்துக் கொள்ளும் உரிமை தமிழ்நாட்டில் சிறு தொழிற்சாலைகளில் மறுக்கப்படுவது அரசிற்குத் தெரியுமா?

(ஆ) ஆமெனில், அதற்கு அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

[1997 ஏப்ரல் 30

விடை—

**மாண்புமிகு திரு அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) இதுவரை, இம்மாதிரிப் புகார் அரசின் கவனத்திற்கு வரவில்லை.

(ஆ) எழாது.

**65—**

**பனியன் தொழிலாளர்களுக்கு மலிவு விலையில் விடுகட்டுதல்**

வினா எண் 5567—**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மாநில அரசு திருப்பூர் பனியன் தொழிலாளர்களுக்கு மலிவு விலையில் வீடு கட்டி சொந்தமாக்கும் திட்டத்தை அமுலாக்க முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

திருப்பூர் பனியன் தொழிலாளர்களுக்கு மலிவு விலையில் வீடுகட்டி சொந்தமாக்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**66—**

**நோயாளிகளுக்கு முறையாக மருந்துகள் வழங்குதல்**

வினா எண் 5834—**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், சிங்கநல்லூரிலுள்ள இ.எஸ்.ஐ. மருத்துவமனையில், சிகிச்சைபெறும் நோயாளிகளுக்கு இரவு நேரங்களில் தேவையான மருந்து வழங்கப்படுவதில்லை என்பதும் அங்கு நோயாளிகளுக்கு ஊழியர்களே மதுபானம் வாங்கித் தருவதாகக் கூறப்படுவது பற்றியும் அரசுக்குத் தெரியுமா?



1997 ஏப்ரல் 30 ]

(ஆ) ஆம் எனில், அது குறித்து நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) கோயமுத்தூர் சிங்கநல்லூரிலுள்ள, தொ.அ.ஈ. மருத்துவ மனையைப் பொருத்தமட்டில், உள்தங்கும் நோயாளிகளுக்கான மருந்துகள் இரவு 7.00 மணிக்கு முன்பாகவே வழங்கப்பட்டு வருகிறது. இரவு 8.00 மணிக்கு பின்பு நோயாளிகளுக்கு மருந்துகள் தேவைப்படின் இரவுப் பணி செவிலியர் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. அத்துடன் இரவுப் பணி மருத்துவர்கள் தனது இரவுப்பணி சுற்று வரும்போது நோயாளிகளைப் பார்வையிட்டு அத்தியாவசிய அவசர மருந்துகளை நோயாளிகளுக்குக் குறித்துத்தரும்போது இரவுப்பணி செவிலியர் வார்டுகளில் அவசரத் தேவைக்காக வைத்திருக்கும் மருந்துப் பெட்டியிலிருந்தும் அவ்வாறு இல்லாத பட்சத்தில் அவசர சிகிச்சைப் பிரிவு அல்லது தீவிர சிகிச்சை பிரிவிலிருந்தும் மருந்தினைப் பெற்று நோயாளிகளுக்கு வழங்கி வருகின்றனர்.

(ஆ) நோயாளிகளுக்கு ஊழியர்களே மதுபானம் வாங்கித்தருவது தொடர்பான புகார் மறுக்கப்படுவது மட்டுமின்றி உள்நோயாளிகளை அடிக்கடி "திடீர் சோதனைகள்" செய்தும் மேற்படி புகார் ஏதும் பெறாதவகையில் பாதுகாத்து இம்மாதிரி புகார்கள் ஏற்படாவண்ணம் பார்த்துக்கொள்ளப்படுமெனவும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. சில உள்தங்கு நோயாளிகளின் பாதுகாப்பாளர்கள் (உடனிருப்பவர்கள்) போதைநிலையில் இருந்ததாக ஓரிருமுறை கவனிக்கப்பட்டு அவர்கள் வெளியேற்றம் செய்யப்பட்டு உள்தங்கு நோயாளிகளுக்கான இடையூறுகள் தவிர்க்கப்பட்டது. உள்நோயாளிகளின் பாதுகாப்பாளர்களும் அடிக்கடி கண்காணிக்கப்பட்டு இவ்வாறான புகார் ஏதும் பெறாதவாறு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

**67—**

**குழந்தைத் தொழிலாளர் கல்விக்கு நிதி உருவாக்குதல்**

வினா எண் 5874—**திரு. கே. சுப்பராயன் :** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குழந்தைத் தொழிலாளர் கல்வி பெற ஒரு நிதி உருவாக்கப்பட வேண்டுமென்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதற்கான நிதி தமிழ்நாட்டில் எப்போது உருவாக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) உச்சநீதிமன்றம் 10-12-96-ல் குழந்தைத் தொழிலாளர் முறையை நீக்குதல் தொடர்பாக பிறப்பித்துள்ள கட்டளைகளின் அடிப்படையில் "குழந்தைத் தொழிலாளர் மறுசீரமைப்பு மற்றும் நலநிதியை" உருவாக்குவதற்கான ஆணைகள் 12-3-97-ல் வெளியிடப்பட்டுள்ளன.

**68—**

### பிற்படுத்தப்பட்டோர் நல விடுதி அமைத்தல்

வினா எண் 2442—**திரு. கு. ரவி அருணன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், பாவூர் சத்திரத்தில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர்/மாணவியர் விடுதி அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. எம். ஆர். கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், பாவூர் சத்திரத்தில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி ஒன்றினை துவக்குவதற்கு அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.





**69—**

### வேலை வாய்ப்புகளில் வயது வரம்பினை உயர்த்துதல்

வினா எண் 4352—**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

கல்வி, வேலை வாய்ப்புகளில் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்களுக்கு வயது வரம்பினை 35 ஆக உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

நேரிடை நியமனப்பதவிகளுக்கு எஸ்.எஸ்.எல்.சி. குறைந்தபட்ச கல்வித்தகுதி (Minimum General Educational Qualification) அல்லது அதற்குக் குறைவான கல்வித் தகுதி வரையறுக்கப்பட்டிருந்தால், ஒரு நபர் எஸ்.எஸ்.எல்.சி. அதற்கு குறைவான கல்வித் தகுதி பெற்றிருப்பின் அவர் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சார்ந்தவராக இருப்பின் வயது வரம்பினை 30-லிருந்து 32-ஆக உயர்த்தி அரசாணை (நிலை) எண்.71, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, நாள் 20-10-1993-ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இந்த ஆணை கடந்த 20-10-1993-லிருந்து நடைமுறையில் இருந்து வருகிறது.

**70—**

### ஒகேனக்கல்லில் உயிரியல் பூங்கா அமைத்தல்

வினா எண் 3601—**திரு. ஜி.கே.மணி** : மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இயற்கை வளம் நிறைந்த சுற்றுலாத்தலமான ஒகேனக்கல்லில் கூண்டுகளில் அடைக்காத வகையில் உயிரியல் பூங்கா ஒன்று அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

[1997 ஏப்ரல் 30

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி, வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தர்மபுரி மாவட்டத்திலுள்ள சுற்றுலாத் தலமான ஒகேனக்கல்லில் உயிரியல் பூங்கா அமைப்பதற்குரிய சாத்தியக்கூறுகளும், நிதிவசதியும் இல்லாத காரணத்தால் அரசிடம் இத்தகைய திட்டம் எதுவும் இல்லை.

**71—**

**கால்நடை மருத்துவ நிலையம் ஏற்படுத்துதல்**

வினா எண் 5933—**திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி தொகுதியிலுள்ள கிருஷ்ணாபுரம், ஜருகு சோலைக்கொட்டாய், அதகபாடி, தொம்பரகாம்பட்டி, கம்மம்பட்டி ஆகிய ஊர்களுக்கு கால்நடை மருத்துவ நிலையம் - மருந்தகம் ஏற்படுத்த அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி, வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்:**

கிருஷ்ணாபுரம்:—

இங்கு இயங்கி வரும் கால்நடைக் கிளை நிலையத்தை கால்நடை மருந்தகமாக தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் உள்ளன.

ஜருகு:—

இங்கு கால்நடைக் கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

சோலைகொட்டாய்:—

இக்கிராமத்திலிருந்து 3 கிலோ மீட்டர் தூரத்தில் செட்டிக் கரையில் கால்நடை மருந்தகம் அமைந்துள்ளதால் இங்கு கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அவசியமில்லை.



1997 ஏப்ரல் 30 ]

அதகபாடி :—

இக்கிராமத்திலிருந்து 1 கி.மீ. தூரத்தில் ஏ. செக்காரப்பட்டி என்ற இடத்தில் ஓர் கிளை நிலையமும் 4 கி.மீ. தூரத்தில் இண்டூரில் ஓர் கால்நடை மருந்தகமும் இயங்குவதால் அதகபாடி கிராமத்தில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அவசியம் இல்லை.

தொம்பரகாம்பட்டி :—

இக்கிராமத்திலிருந்து 1/2 கி.மீ. தூரத்தில் பாளையம் புதூர் என்ற இடத்தில் ஓர் கால்நடைக் கிளை நிலையமும் 6 கி.மீ. தூரத்தில் நல்லம்பள்ளியில் ஒரு கால்நடை மருந்தகமும் இயங்கி வருவதால் தொம்பரகாம்பட்டி கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் அமைக்க அவசியமில்லை.

கம்மம்பட்டி :—

நல்லாம்பள்ளி ஊராட்சி ஒன்றியம் கம்மம்பட்டி கிராமத்திற்கு அருகில் 4 கி.மீ. தூரத்தில் தொப்பூரில் கால்நடை மருந்தகம் இயங்கி வருவதால், கம்மம்பட்டி கிராமத்தில் தற்போது புதியதாக கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அவசியமில்லை.

**72—**

**பாம்புகளைப் பிடிப்பதற்கு தடையை ரத்து செய்தல்**

வினா எண் 6030—**டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிராமப்புறங்களில் விஷப் பாம்புகளின் எண்ணிக்கை அதிகமாகப் பெருகி வருவதால், இருளர்கள் பாம்புகளைப் பிடிப்பதற்கு தடை விதிக்கப்பட்டிருப்பதை ரத்து செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி, வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்:**

1972-ம் ஆண்டு வன உயிரினச் சட்டத்தின்படி பாம்புகளைப் பிடித்தல் தடை செய்யப்பட்டுள்ளது. இருப்பினும் பாம்பு நச்சிலிருந்து

[1997 ஏப்ரல் 30

உயிர்காக்கும் மருந்துகள் தயாரிக்கத் தேவைப்படும் மூலப்பொருட்கள் கிடைக்கின்ற காரணத்தால், சில குறிப்பிட்ட இனப்பாம்புகளை குறிப்பிட்ட அளவு பிடிக்க செங்கல்பட்டு அண்ணா மாவட்டத்திலுள்ள வடநெமேலியிலிருக்கும் இருளர் பாம்புகள் பிடிப்போர் கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு மட்டும் அவ்வப்போது அரசு அனுமதி வழங்கி வருகிறது.

**73—**

**கால்நடை மருந்தகம் அமைத்தல்**

வினா எண் 6196—**திரு. என். பாண்டுரங்கன்:** மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், சேத்துப்பட்டு ஒன்றியம், மன்குராபாத்தில் புதியதாக கால்நடை மருந்தகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தற்போது செயற்குறிப்பு ஏதும் இல்லை

**74—**

**கால்நடை மருந்தகங்கள் கட்டுதல்**

வினா எண் 6360—**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெள்ளக்கோவில் தொகுதி, மூலனூர் ஒன்றியம், கன்னிவாடியிலும், பிச்சைக்கல்பட்டியிலும் கால்நடை மருந்தகங்கள் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?



1997 ஏப்ரல் 30]

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி, வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தற்போது செயற்குறிப்பு ஏதும் நிலுவையில் இல்லை.

**75—**

**வண்டலூர் மிருகக் காட்சிச் சாலையை மேம்படுத்துதல்**

வினா எண் 6837—**திரு. ஜே. எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வண்டலூர் மிருகக் காட்சிச் சாலையை மேம்படுத்தி, சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வண்ணம், அபிவிருத்தி செய்ய அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சென்னையை அடுத்துள்ள வண்டலூரில் உள்ள அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் மாநில அரசுத் திட்டங்களின் கீழும் மைய உயிரினக் காட்சிச் சாலைக் குழும உதவிபெறும் திட்டங்களின் கீழும் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் நிறைவேற்றப்பட்டு அதனை சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. இனிவரும் காலங்களிலும் இத்தகைய பணிகள் இங்கு தொடர்ந்து மேற்கொள்ளப்பட உள்ளன.

**76—**

**கிண்டி தேசிய சிறுவர் பூங்காவை அபிவிருத்தி செய்தல்**

வினா எண் 6841—**திரு. ஜே. எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிண்டியிலுள்ள தேசிய சிறுவர் பூங்காவை அபிவிருத்தி செய்ய அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி, வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்;**

(அ) மற்றும் (ஆ): கிண்டி தேசிய சிறுவர் பூங்காவில் ஆண்டுத் திட்டங்களின் கீழ் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இனி வருங்காலங்களிலும் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

**77—**

### சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் குடியிருப்பு கட்டுதல்

வினா எண் 1057—**திரு. மு.க. ஸ்டாலின், திரு. அ.வ. அப்துல் நாசர் மற்றும் திரு. ஆர்.ஆர். சேகரன் :** மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அவரவர்களின் தொகுதிகளில் குடியிருப்பு கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி, வீட்டுவசதித் துறை அமைச்சர்:**

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அவரவர்களின் தொகுதிகளில் குடியிருப்பு கட்டும் திட்டம் எதுவும் தற்சமயம் பரிசீலனையில் இல்லை.

**78—**

### பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தை உருவாக்குதல்

வினா எண் 3023—**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னையைப் போல கோயம்புத்தூரிலும் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தை உருவாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?



விடை—

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி, வீட்டுவசதித் துறை அமைச்சர்:**

இல்லை.

**79—**

### தருமபுரி தொகுதியில் வீடு கட்டுதல்

வினா எண் 4485—**திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், ஏ. ஜெட்டி அள்ளி ஊராட்சியில் வீட்டுவசதி வாரியம் மூலமாக 1996-97 நிதியாண்டில் வீடு கட்ட அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி, வீட்டுவசதித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தருமபுரி தொகுதி, ஏ.ஜெட்டி அள்ளி கிராமத்தில் முதற்கட்டமாக 100 நடுத்தர மற்றும் உயர் வருவாய் பிரிவு வீடுகள் கட்டுவதற்கான திட்டம் வீட்டு வசதி வாரியத்தில் தீட்டப்பட்டு வருகிறது.

**80—**

### சிறுதொழில் மேம்பாட்டு நிறுவனத்தைத் திருத்தியமைத்தல்

வினா எண் 74—**திரு. பெ. சு. திருவேங்கடம்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் சிறுதொழில் மேம்பாட்டு நிறுவனத்தைத் திருத்தியமைக்க அரசுக்கு முறையீடு ஏதும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத்தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**81—**

**சத்துணவு மையம் அமைத்தல்**

வினா எண் 1984—**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஒன்றியம், கே. பஞ்சங்குப்பத்தில் புதியதாக சத்துணவு மையம் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத்துறை அமைச்சர்:**

(அ) இல்லை. அங்கு ஏற்கனவே ஒரு மையம் இயங்குகிறது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**82—**

**தொழிற்பேட்டை அமைத்தல்**

வினா எண் 2201—**திரு. பே.வேஶ்ரீ. வெங்கடேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய பகுதியான கிருஷ்ணகிரியிலிருந்து சூளகிரி இடையில் உள்ள அரசு நிலத்தில் மூன்றாவது தொழிற்பேட்டை அமைக்கப்படுமா?



விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

இல்லை.

**83—**

**முந்திரி தொழிற்சாலை அமைத்தல்**

வினா எண் 2296—**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆண்டிமடம் பகுதியில் முந்திரி நிலத்தோப்புகள் அதிகமாக உள்ளதால், அப்பகுதியில் முந்திரித் தொழிற்சாலை அமைத்து தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத்தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

ஆண்டிமடம் பகுதியில் முந்திரித் தொழிற்சாலை அமைக்கும் திட்டப் பிரேரணை ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**84—**

**சிட்கோ தொழிற்பேட்டை அமைத்தல்**

வினா எண் 3386—**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எம்.ஜி.ஆர். மாவட்டம், பள்ளிப்பட்டு தொகுதி, பொதட்டூர் பேட்டையில் சிட்கோ தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத்தொழில்துறை மற்றும் பதிவுத்துறை அமைச்சர்:**

எம்.ஜி.ஆர். மாவட்டம், பள்ளிப்பட்டு தொகுதி, பொதட்டூர் பேட்டையில் சிட்கோ தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் தற்போது பரிசீலனையில் இல்லை.

**85—**

**சார்பதிவாளர் அலுவலகம் அமைத்தல்**

வினா எண் 4551—**திரு. கொ.வி. நன்னன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதி, புதுப்பாளையத்தில் சார்பதிவாளர் அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத்துறை அமைச்சர்:**

(அ) செங்கம் தொகுதி, புதுப்பாளையத்தில் சார்பதிவகம் திறப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**86—**

**அரசு மூலம் பெரிய தொழில் தொடங்குதல்**

வினா எண் 4650—**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், பெருந்துறையில் அமையவிருக்கும் தொழிற்பேட்டையில், அரசு மூலம் பெரிய தொழில் தொடங்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத்தொழில் துறை மற்றும் பதிவுத்துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): பெரியார் மாவட்டத்தில், பெருந்துறையில் தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

**87—**

**சத்துணவுக் கூடம் கட்டுதல்**

வினா எண் 5239—**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஒன்றியம், வில்லியநல்லூர் கிராமத்தில் சத்துணவுக்கூடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத்தொழில் துறை மற்றும் பதிவுத்துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**88—**

**புளிக்கூழ் தயாரிக்கும் தொழிற்சாலை நிறுவுதல்**

வினா எண் 6484—**திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரியில் புளியைப் பதப்படுத்தி புளிக்கூழ் (புளிஜாம்) தயாரிக்கும் தொழிற்சாலை நிறுவ அரசு ஆவன செய்யுமா?

விடை—

[1997 ஏப்ரல் 30

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத்தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

தருமபுரியில் புளியைப் பதப்படுத்தி புளிக்கூழ் (புளிஜாம்) தயாரிக்கும் தொழிற்சாலை நிறுவும் திட்டம் ஏதும் இத்துறையின் பரிசீலனையில் இல்லை.

89—

**சத்துணவுக் கூடங்களில் கூடுதல் நாட்களுக்கு முட்டை வழங்குதல்**

வினா எண் 6694—**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

சத்துணவுக் கூடங்களில் மாதத்திற்கு 2 நாட்கள் வழங்கப்பட்டு வரும் முட்டைகளை, மேலும் கூடுதல் நாட்களுக்கு அளிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத்துறை அமைச்சர்:**

இல்லை.

90—

**பருவ இதழ்களுக்கு அங்கீகார அட்டை வழங்குதல்**

வினா எண் 3796—**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பருவ இதழ்கள் (Periodicals) அனைத்திற்கும் அரசு அங்கீகார அட்டை (Accreditation) வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது வழங்கப்படும்?

விடை—



1997 ஏப்ரல் 30 ]

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:**

(அ) பருவ இதழ்கள் (Periodicals) அனைத்திற்கும் அரசு அங்கீகார அட்டை வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை. ஆனால் பருவ இதழ்கள் மற்றும் தனியார் தொலைக்காட்சி நிறுவனத்தாருக்கு அடையாள அட்டை (Press Pass) வழங்குவது குறித்து அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

(ஆ) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கேற்ப பருவ இதழ்களுக்கும், தனியார் தொலைக்காட்சி நிறுவனத்தாருக்கும் அடையாள அட்டை (Press Pass) வழங்க ஒரு குழு அமைக்கப்பட்டு, அக்குழுவின் பரிந்துரையின்படி பருவ இதழ்கள் மற்றும் தனியார் தொலைக்காட்சியினருக்கு அடையாள அட்டை (Press Pass) வழங்கப்படும்.

91—

**மங்கலங்கிழாருக்கு அரக்கோணத்தில் நினைவுச் சின்னம்**

வினா எண் 4240—**திரு. ஆர். தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ் வளர்த்த வடவெல்லை மீட்டப் பெரியார் மங்கலங்கிழாருக்கு அரக்கோணத்தில் நினைவுச் சின்னம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:**

செயற்குறிப்பு இல்லை.

[1997 ஏப்ரல் 30

92—

**பெருந்தலைவர் காமராஜர் பிறந்த தினத்தை அறிவொளி தினமாக்க கொண்டாடுதல்**

வினா எண் 4359—**திரு. கு. ரவி. அருணன்:** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்தலைவர் காமராசர் பிறந்த தினத்தை "அறிவொளி" தினமாகக் கொண்டாட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் நடைமுறைப்படுத்தப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன் செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): பெருந்தலைவர் காமராஜர் பிறந்த தினத்தை "அறிவொளி" தினமாகக் கொண்டாடுதல் பற்றிய கருத்துரு அரசிடம் இல்லை.

93—

**விளையாட்டுப் போட்டிகள், செய்தித் திரைப்படங்களை திரையிடுதல்**

வினா எண் 6630—**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விளையாட்டுப் போட்டிகள் பற்றிய செய்தித் திரைப்படங்களை திரையரங்குகளில் திரையிட அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:**

அவ்வவ்போது தமிழகத்தில் நடைபெறும் முக்கிய விளையாட்டுப் போட்டிகளை ஒளிப்பதிவு செய்து இத்திரைப்படப் பிரிவு தயாரிக்கும் செய்தி மலரில் இணைத்து திரையரங்குகளில் திரையிடப்படுகின்றன. முக்கிய விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும் போது, தமிழ்நாடு திரைப்படப் பிரிவுக்குத் தெரியப்படுத்தப்படுமானால் வீடியோ படமாக எடுத்து தொலைக்காட்சியில் வெளியிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.



1997 ஏப்ரல் 30 ]

94—

**கோயில்களுக்கு மின்சார வசதி**

வினா எண் 616—**திரு. துரை. சந்திரசேகரன்:** மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1-5-96 அன்றுள்ளபடி தமிழகத்தில் இந்து சமய அறநிலையத்துறை நிர்வாகத்தின்கீழ் உள்ள கோயில்களில் மின்சார வசதி இல்லாத கோயில்கள் எத்தனை?

(ஆ) கோயில்களுக்கு மின்சார வசதி செய்ய அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ. ம. செங்குட்டுவன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் மின்சார வசதி இல்லாத திருக்கோயில்களின் எண்ணிக்கை 6,182

(ஆ) பெரும்பாலான திருக்கோயில்களில் நிதிவசதி இல்லாத காரணத்தினால் மின்சார வசதி செய்யப்படவில்லை. எனினும் நன்கொடை மூலம் மின் இணைப்பு ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

95—

**பழனி முருகன் சிலை சேதப்படுவதைத் தடுத்தல்**

வினா எண் 902—**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பழனி முருகன் சிலை தொடர் பூஜைகளால் கடுமையாக சேதப்பட்டுள்ளதைத் தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

பழனி முருகன் மூலவர் சிலையின் பாதுகாப்புக் கருதி கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு உள்ளன:

1. தங்க கவசம் மற்றும் இதர கவசங்கள் மூலவருக்கு சாத்துப்படி செய்வதில்லை.

2. பக்தர்களால் கொண்டு வரும் அபிஷேகப் பொருட்கள் அனைத்தும் மூலவருக்கு அபிஷேகம் செய்வதில்லை. கொண்டுவரும் பொருட்கள் அனைத்தும் உற்சவருக்குத்தான் அபிஷேகம் செய்யப்படுகின்றது.

3. திருக்கோயில் நித்யப்படி பூஜை திட்டத்தின்படி, பொருட்கள் அனைத்தும் ஆலய சிப்பந்திகளான பேஷ்கார்களால் ஆய்வு செய்யப்பட்டு இதன் பின்னரே மூலவருக்கு ஆறுகால பூஜைக்கு மட்டும் அபிஷேகம் செய்ய அளிக்கப்படுகிறது எனவும், திருக்கோயிலாரால் நடத்தப்படும் 'கோசாலாவில்' பசுமாடுகளை வளர்த்து, இந்தப் பசுக்களின் வாயிலாக கிடைக்கும் பால் மட்டும் அபிஷேகத்திற்கு பயன்படுத்தப்படுகிறது.

4. கனமான பொருட்களான மாலைகள், பரிவட்டங்கள் மற்றும் நகைகள் போன்றவை மூலவருக்கு சாத்துப்படி செய்வதில்லை.

**96—**

## தேவஸ்தானக் காவலர்களுக்கு கூடுதல் ஊதியம்

வினா எண் 2305—**திரு. ஜி.கே. மணி :** மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

அருள்மிகு பழனி தண்டாயுதபாணி தேவஸ்தானத்தில் காவலராக பணிபுரியும் முன்னாள் ராணுவ வீரர்களின் ஊதியம் ரூ. 750-ல் இருந்து கூடுதலாக வழங்க அரசு ஆணை செய்யுமா?



விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர் :**

அருள்மிகு பழனி தண்டாயுதபாணி தேவஸ்தானத்தில் காவலராக பணிபுரியும் முன்னாள் ராணுவ வீரர்களின் ஊதியம் ரூ. 750-ல் இருந்து கூடுதலாக வழங்கும் செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை.

**97—**

## தொட்டில் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்

வினா எண் 1054—**திரு. மு.க. ஸ்டாலின், திரு. டி. இராஜேந்தர், திரு. இ. கணேசன் மற்றும் திரு. சி. ஞானசேகரன்**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தொட்டில் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டப்படி தமிழகம் முழுவதும் எத்தனைக் குழந்தைகள் 1991-ம் ஆண்டு முதல் 1995-ம் ஆண்டு முடிய தொட்டிலில் போடப்பட்டுள்ளன?

(ஆ) அக்குழந்தைகளைப் பாதுகாக்க அரசு என்ன நடவடிக்கை மேற்கொண்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) 1991-ஆம் ஆண்டு முதல் 1995-ஆம் ஆண்டு முடிய 133 குழந்தைகள் தொட்டிலில் போடப்பட்டுள்ளன.

(ஆ) மேற்படி பெறப்பட்ட குழந்தைகளை கீழ்க்கண்டபடி தன்னார்வு/அரசு நிறுவனங்களின் பராமரிப்பில் விடப்பட்டுள்ளன:

| நிறுவனத்தின் பெயர். | குழந்தைகளின் எண்ணிக்கை. |
|---|---|
| 1. எஸ்.ஓ.எஸ். குழந்தைகள் இல்லம் (ம) கர்ணபிரியாக் டிரஸ்ட், சென்னை. | 40 |
| 2. கில்ட் ஆப் சர்வீஸ், சென்னை. | 26 |
| 3. அன்னை தெரசா இல்லம், சேலம். | 5 |

| | | |
|---|---|---|
| 4 | பெத்தேல், டானிஷ்பட், சேலம். | 6 |
| 5. | டோனாபூர், திருநெல்வேலி. | 5 |
| 6. | ராஜராஜேஸ்வரி மஹிளாசமாஜம். | 2 |
| 7. | அரசு கூர்நோக்கு இல்லம், சேலம். | .. |
| 8. | பாலவிஹார், சென்னை | 1 |
| | | 85 |
| | பெற்றோர்களிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டவை | 10 |
| | | 95 |
| | பிறப்பு நோயினால் பாதிக்கப்பட்டு இறந்த குழந்தைகள் எண்ணிக்கை | 38 |
| | மொத்தம் .. | 133 |

மேற்படி பெறப்பட்ட தொட்டில் குழந்தைகள், குழந்தைகள் இல்லாத இந்தியப் பெற்றோர்களுக்கு தத்து கொடுக்கப்பட்டுள்ளனர். இதுவரை அதுபோல் 38 குழந்தைகள் கொடுக்கப்பட்டுள்ளன.

**98—**

**மறுவாழ்வு இல்லங்களில் உணவுக்கான தொகையை உயர்த்துதல்**

வினா எண் 1861—**திரு. பெ. சு. திருவேங்கடம் மற்றும் திரு. கொ. வி. நன்னன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு மறுவாழ்வு இல்லங்களில் உள்ளவர்களுக்கு நாள் ஒன்றுக்கு உணவுக்காகத் தரப்படும் தொகையை உயர்த்தித் தர அரசுக்குக் கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) அரசு மறுவாழ்வு இல்லத்தில் உள்ள இல்லவாசிகளுக்கு நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ. 15 வீதமும், இல்லவாசியைச் சார்ந்தவர்கள் மற்றும் 12 வயதிற்குட்பட்ட சிறியவர்களுக்கு நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ. 10 வீதமும் உணவு வழங்குவதற்கான தொகையை உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.



**99—**

**நோயாளிகளுக்கு வழங்கப்படும் தினப்படியை அதிகரித்தல்**

வினா எண் 1865—**திரு. வெ. அ. ஆண்டமுத்து:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பவானிசாகர் தொகுதி, விண்ணப்பள்ளியில் அரசு தொழுநோய் மறுவாழ்வு இல்லத்தில் உள்ள நோயாளிகளுக்கு வழங்கப்படும் தினப்படியை மேலும் அதிகரிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:**

அரசு தொழுநோய் மறுவாழ்வு அனைத்து இல்லத்திலுள்ள இல்லவாசிகளுக்கும் உணவுப்படியை உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**100—**

**மாதர்களுக்கு சிறுதொழில் கடன் வழங்குதல்**

வினா எண் 2797—**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வறுமைக் கோட்டிற்குக் கீழ் வசிக்கும் அனைத்து மாதர்களுக்கும் சிறுதொழில் செய்வதற்குக் கடன் வழங்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது வழங்கப்படும்?

[1997 ஏப்ரல் 30

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம் மூலம் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள கிராமப்புற மாதர்கள் சிறுதொழில் செய்ய நிதி நிறுவனங்களின் மூலமாகக் கடன் வழங்கும் வகையில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டம் செயல்பட்டு வருகிறது. இத்திட்டம் 1989-ஆம் ஆண்டில் தருமபுரி மாவட்டத்தில் தொடங்கப்பட்டு தற்போது சேலம், தென் ஆற்காடு வள்ளலார், விழுப்புரம் இராமசாமி படையாச்சி, மதுரை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் செயல்பட்டு வருகிறது. கடந்த ஆண்டில் இத்திட்டம் மூலம் 16,100 பெண்கள் பயனடைந்துள்ளனர். இத்திட்டம் நடப்பு ஆண்டிலிருந்து 10 மாவட்டங்களுக்கு நீட்டிக்கப்படவுள்ளது.

**101—**

## உடல் ஊனமுற்றோருக்கு உதவிகள்

வினா எண் 4222—**திரு. ஆர். ஆர். சேகரன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்திலிருந்து உடல் ஊனமுற்றோருக்கான கருவிகள் வேண்டி வந்துள்ள விண்ணப்பங்கள் எத்தனை?

(ஆ) அவற்றின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) 1994-95 முதல் 31-10-1996 வரை பெறப்பட்ட விண்ணப்பங்கள் 1740.

(ஆ) 1350 விண்ணப்பங்கள் மீது நடவடிக்கை எடுத்து உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. மற்றவை பரிசீலனையில் உள்ளன.

**102—**



1997 ஏப்ரல் 30]

## மகளிருக்கு கடனுதவி வழங்க வங்கி துவங்குதல்

வினா எண் 4223—**திரு. ஆர். ஆர். சேகரன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூரில் மகளிருக்கான கடனுதவி வழங்கும் வங்கி துவங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், ஓமலூரில் மகளிர்களுக்கான கடனுதவி வழங்கும் வங்கி துவங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இப்போது இல்லை. எனினும், வங்கிகள் மூலம் ஓமலூரில் 549 மகளிர்க்குக் கடனுதவி தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

**103—**

## தொட்டில் குழந்தைகள் இல்லம் கட்டுதல்

வினா எண் 4224—**திரு. ஆர். ஆர். சேகரன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் ஜப்பானிய நாட்டு உதவியுடன் தொட்டில் குழந்தைகள் இல்லம் கட்டும் பணி எந்நிலையில் உள்ளது?

(ஆ) அது எப்போது கட்டி முடிக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் அரசு கூர்நோக்கு இல்லத்தில் கட்டப்பட்டு வரும் இக்கட்டிடம் மாடியில் நான்கு புறமும் சுவர் எழுப்பப்பட்டு, ஜன்னல், கதவுகள் பொருத்துதல் முடிவு பெற்றுள்ளது. மேலும் தார் போடப்பட்டு உள் மற்றும் வெளி பூச்சு வேலை முடிவடைந்துள்ளது. ஆனால் குளியல் மற்றும் கழிவறை வேலை முடிவு பெறவில்லை. மாடியில் தரை சிமெண்ட் போடப்பட வேண்டும். இதைத் தவிர மின் இணைப்பு பொருத்தப்பட்டு பூச்சு வேலைகள் செய்ய வேண்டும்.

(ஆ) கட்டிடப்பணி முழுமையாக நிறைவு பெற்ற பிறகு 1997-ஆம் ஆண்டு காப்பகம் செயல்படத் துவங்கும்.

**104—**

### பாய் பின்னும் தொழில் துவங்குதல்

வினா எண் 4225—**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் ஓமலூர் தொகுதியில் பாய் பின்னும் தொழில் துவங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:**

ஓமலூர் தொகுதியில் வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் பெண்கள் குழுக்கள் அமைத்து தொண்டு நிறுவனங்களின் மூலம் பாய் பின்னும் தொழிலில் பயனடைய முன்வருவார்களானால் அரசு அவர்களுக்கு அனைத்து உதவிகளையும் அளிக்கும். இதுவரை 6 பெண்களுக்குப் பாய் பின்னும் தொழிலுக்கு உதவி அளிக்கப்பட்டுள்ளது.

**105—**

### பணிபுரியும் மகளிருக்கான விடுதி நிறுவுதல்

வினா எண் 4226—**திரு. ஆர். ஆர். சேகரன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் 'பணிபுரியும் மகளிருக்கான' விடுதி ஒன்றை நிறுவ அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டத்தில் தன்னிச்சை நிறுவனங்களின் மூலம் 3 பணிபுரியும் மகளிர் விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. அரசு பணிபுரியும் மகளிர் விடுதி செயல்படவில்லை. அரசு பணிபுரியும் மகளிர் விடுதி துவக்குதல் பற்றிய கோரிக்கை ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.





**106—**

### மாவட்ட இளைஞர் நல குழுமங்கள்

வினா எண் 4228—**திரு. ஆர். ஆர். சேகரன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்டங்களில் இளைஞர் நல குழுமங்களில் எந்த அடிப்படையில் உறுப்பினர்கள் நியமிக்கப்படுகின்றனர்?

(ஆ) அந்தெந்த மாவட்டங்களிலுள்ள இளைஞர் அமைப்புகளை இக்குழுவில் சேர்த்திட அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மாவட்ட இளைஞர் நல குழுமங்களில் தலைவர் மற்றும் உறுப்பினர்களாக நியமிக்கப்படுபவர்கள் கீழ்க்கண்ட தகுதி பெற்றவராக இருத்தல் வேண்டும். உளவியல், சமூகவியல், சமூகப்பணி, கல்வி அல்லது மனையியல் போன்றவற்றில் தேர்ந்த நல்ல மதிப்பிற்குரிய குடிமகனாக இருத்தல் வேண்டும். அல்லது இளைஞர்கள் சம்பந்தப்பட்ட பணிகளில் ஈடுபாடுடைய ஆசிரியர், மருத்துவர் அல்லது ஓய்வு பெற்ற அரசு ஊழியராகவோ அல்லது குழந்தைகள் நலனில் நேரடியாக சம்பந்தப்பட்ட சமூக சேவகராகவோ இருத்தல் வேண்டும். மாவட்டங்களிலுள்ள இளைஞர் நலக்குழுமத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் நியமனம் சம்பந்தப்பட்ட பரிந்துரை மாவட்ட ஆட்சித் தலைவர்களாலும், சென்னை நகரிலுள்ள இளைஞர் நல குழுமத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள், சமூக பாதுகாப்புத் துறை இயக்குநராலும் பரிந்துரை செய்யப்பட்டு அரசினருக்கு அனுப்பப்பட்டு அரசின் ஆணை பெறப்பட்டு பணியாற்றி வருகின்றனர்.

(ஆ) இளைஞர் அமைப்புகளை இளைஞர் நல குழுமத்தில் சேர்ப்பதற்கு இடமேதுமில்லை.

## 107—

### காலனி கூட்டுறவுச் சங்கங்களுக்கு கடனுதவி

வினா எண் 4389—**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காலனி கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசு வழங்கிய தொகை எவ்வளவு?

(ஆ) தொகை பெற்ற சங்கங்கள் காலனிகளைத் தயாரித்து அளிக்காமல் உள்ளதை அரசு அறியுமா?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கீழ் செயல்படும் காலனி கூட்டுறவுச் சங்கங்களுக்கு இலவச காலனி வழங்கும் திட்டத்தின் கீழ் காலனிகள் தயாரிப்பதற்காக 1992-93-ஆம் ஆண்டில் ரூ.159.75 இலட்சமும், 1993-94-ஆம் ஆண்டில் ரூ. 1,73,06,250-ம் முன்பணமாக வழங்கப்பட்டது.

(ஆ) அறியும்.

## 108—

### தொட்டில் குழந்தைத் திட்டத்தை மாற்றி அமைத்தல்

வினா எண் 4723—**திரு. மு. க. ஸ்டாலின்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசின் தொட்டில் குழந்தைத் திட்டத்தை மாற்றி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். பி. சற்குணபாண்டியன், சமூக நல துறை அமைச்சர்:**

(அ) தமிழக அரசின் தொட்டில் குழந்தைத் திட்டத்தை மாற்றி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் ஏதுமில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



## 109—

### சத்துணவுக் கூடங்களில் பணியாளர்கள் ஊதிய வித்தியாசம்

வினா எண் 6113—**திரு. மீ. அ. வைத்தியலிங்கம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சத்துணவுக் கூடங்களில் அங்கன்வாடி-1, அங்கன்வாடி-2 என்று இருவருக்கு ஊதிய வித்தியாசம் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) அங்கன்வாடிகளில் இரண்டாம் நிலை அங்கன்வாடிப் பணியாளர்கள் மாநில அரசு திட்டத்தின்படி நியமிக்கப்பட்டதால் மாநில அரசு வழங்கும் இடைக்கால நிவாரணம் பெற்று வருகின்றனர். முதல் நிலை அங்கன்வாடி பணியாளர்கள் மத்திய அரசின் திட்டப்படி நியமிக்கப்பட்டதால் அவர்களுக்கு இடைக்கால நிவாரணம் வழங்கப்படவில்லை. இவர்களுக்கும் இடைக்கால நிவாரணம் வழங்கும் கருத்துரு தீவிர பரிசீலனையிலுள்ளது.

## 110—

### சமையல் கலைஞர்களுக்கு ஓய்வூதியம் வழங்குதல்

வினா எண் 6179—**திரு. மீ. அ. வைத்தியலிங்கம் மற்றும் திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வயதான ஆதரவற்ற சமையல் கலைஞர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை—

[1997 ஏப்ரல் 30

**மாண்புமிகு திருமதி எஸ். பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

**111—**

**பாலர் சீர்திருத்தப் பள்ளிகள் அமைத்தல்**

வினா எண் 6712—**திரு. ஜே.எம். ஆரூண் ரஷித்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்டந்தோறும், பாலர் சீர்திருத்தப்பள்ளிகள் (Correctional Homes) அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) ஒன்பதாவது ஐந்தாண்டு திட்டத்தில், தற்போது கூர்நோக்கு மற்றும் இளைஞர் இல்லங்கள் இல்லாத மாவட்டங்களில் நான்கு இள்ளஞர் இல்லத்தினை துவங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(ஆ) முதற்கட்டமாக, 1997--98-ஆம் ஆண்டு முதல் கீழ்க்கண்ட நான்கு இடங்களில் இளைஞர் நலக்குழுமங்களும், அரசு சாரா அமைப்புகளின் கீழ் நான்கு கூர்நோக்கு இல்லங்களும் ரூ. 6.72 இலட்சம் செலவில் துவங்கவும் வகை செய்யப்பட்டுள்ளது.

1. தூத்துக்குடி .. சிதம்பரனார் மாவட்டம்
2. விருதுநகர் .. காமராஜர் மாவட்டம்
3. திண்டுக்கல் .. மன்னர் திருமலை மாவட்டம்
4. நாகப்பட்டினம் .. நாகை-காயிதே மில்லத் மாவட்டம்



1997 ஏப்ரல் 30]

**112—**

**தொழிற்பயிற்சி தொடங்கும் திட்டம்**

வினா எண் 6823—**திரு. ஜே. எம். ஆரூண் ரஷித்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசு மறுவாழ்வு இல்லங்களில் தங்கியுள்ளவர்களுக்கு தொழிற்பயிற்சி தொடங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விபரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு அரசு மறுவாழ்வு இல்லங்களில் தங்கியுள்ள இல்லவாசிகளுக்கு துணிநெசவு, பாய்நெசவு, தையற் தொழில், காலணி தயாரிப்பு ஆகியவைகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது. தயாரிக்கப்பட்ட பொருட்கள் அவர்களுடைய தேவைகளுக்கு பயன்படுத்தப்படுகின்றன.

**113—**

**பெரும் பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் அமைத்தல்**

வினா எண் 2912—**திரு. நா. பெரியசாமி :** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம் அந்தியூர் ஒன்றியம் மலைவாழ் மக்களுக்கான பெரும் பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் (Lamp Society) அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர்**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

[1997 ஏப்ரல் 30

**114—**

**கிராமத் தொழில் வாரியம் அமைத்தல்**

வினா எண் 4239—**திரு. கு. ரவி அருணன்** : மாண்புமிகு கதர் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு கிராமத் தொழில் கதர் வாரியத்திலிருந்து கிராமத் தொழிலைப் பிரித்து தனி வாரியம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

… திரு. மு. … சாமிநாதன்: மாண்புமிகு ஊரக

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியத்திலிருந்து கிராமத் தொழிலைப் பிரித்து தனி வாரியம் அமைப்பது சாத்தியமில்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

**115—**

**பனை ஏறும் தொழிலாளர் இறந்தால் நிவாரணம்**

வினா எண் 6808—**திரு. எஸ். எஸ். மணி நாடார்** : மாண்புமிகு கதர் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பனை ஏறும் தொழிலாளர் பனையிலிருந்து கீழே விழுந்து இறக்க நேரிட்டால் அவர்களுக்கு வழங்கப்படும் நிவாரணம் எவ்வளவு?

(ஆ) நிவாரணத் தொகையை அதிகமாக்க அரசு உத்தேசித்து உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

(அ) பனை ஏறும் தொழிலாளர் பனையிலிருந்து கீழே விழுந்து இறக்க நேரிட்டால் அவர்களின் குடும்பத்திற்கு விபத்து நிவாரணமாக



1997 ஏப்ரல் 30 ]

ரூ. 15,000 அரசால் வழங்கப்படுகிறது. மேலும் உடல் ஊனமுற்றவருக்கு காயத்தின் தன்மையின் அடிப்படையில் ரூ. 5,000லிருந்து ரூ. 10,000 வரையில் நிதியுதவி வழங்கப்படுகிறது.

(ஆ) விபத்து நிவாரணத் தொகையை உயர்த்தும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**115-அ—**

**பனையேறும் தொழிலாளர்களின் கடன்களை தள்ளுபடி செய்தல்**

வினா எண் 6809—**திரு. எஸ். எஸ். மணி நாடார்** : மாண்புமிகு கதர் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வறட்சியின் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள பனையேறும் தொழிலாளிகள் பெற்ற கடன்களை தள்ளுபடி செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

1987-ஆம் ஆண்டு பூரண மதுவிலக்கு அமுல்படுத்தப்பட்டதால் வேலை இழப்பு ஏற்பட்ட, கள் இறக்கும் தொழிலில் ஈடுபட்டிருந்த 30,000 பனைத் தொழிலாளர்களுக்கு புனர் வாழ்வு வழங்கும் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ரூ. 3.00 கோடி கடன் தொகையில் வசூலிக்கப்பட வேண்டிய தொகையான ரூ. 2,95,53,577-ஐ தள்ளுபடி செய்வது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

## பதினாறாவது பட்டியல்

**1—**

**உள்ளாடைகளுக்கு விற்பனை வரி வலக்கு அளித்தல்**

வினா எண் 505—**திரு. எஸ்.என். உபயதுல்லா:** மாண்புமிகு வணிக வரிகள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஏழைப் பெண்கள் தைத்து விற்பனைக்கு வரும் பெண்கள் உள்ளாடைகளுக்கு விற்பனை வரி விலக்கு அளிக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. வே. தங்கபாண்டியன், வணிக வரிகள் துறை அமைச்சர்:**

தற்பொழுது ரூ. 3 இலட்சத்திற்கும் குறைவாக உள்ள மொத்தத வணிக தொகையுடைய வணிகர் அனைவருக்கும் விற்பனை வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இது விற்பனைக்குரிய அனைத்து பொருட்களுக்கும் பொருந்தும். இந்நிலையில் ஏழைப் பெண்கள் தைத்து விற்பனைக்கு வரும் பெண்களுக்கான உள்ளாடைகளுக்கும் இவ்விற்பனை வரி விலக்கு பொருந்தும். மேலும் தற்பொழுது ஆயத்த ஆடைகளுக்கு (பெண்கள் உள்ளாடை உட்பட) வரிவிகிதம் 5% (மொத்த வரி விகிதம் 8%) லிருந்து 4 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

**2—**

**நிலுவையிலுள்ள நில ஒதுக்கீட்டிற்கான விண்ணப்பங்கள் பற்றிய விவரம்**

வினா எண் 1746—**திரு. பி. வெங்கடசாமி** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(*a*) What are the industries which have applied for allotment of plots in SIPCOT Industral Complex, Phase II, Hosur and when allotment will be made?

(*b*) Whether any applications are pending for the allotment of plots in Sipcot Industrial Complex Phase II, Hosur?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) (1) தொழிற்சாலைகள் ஒதுக்கப்பட்ட எண்ணிக்கை— 70

| | | |
|---|---|---|
| (அ) இரசாயனம்/மருந்தகம் | .. | 5 |
| (ஆ) பொறியியல் | .. | 17 |
| (இ) ஊர்தி உதிரிபாகங்கள் | .. | 5 |
| (ஈ) நூற்பாலைகள் | .. | 2 |



| | | |
|---|---|---|
| (உ) மின் அணு | .. | 4 |
| (ஊ) பிளாஸ்டிக் | .. | 2 |
| (எ) மின்சாரம் | .. | 1 |
| (ஏ) ஏனையன | .. | 34 |
| மொத்தம் | .. | **70** |

| | | | |
|---|---|---|---|
| (2) விற்பனைக்குள்ள இடத்தின் பரப்பளவு | .. | 394.75 | ஏக்கர் |
| (3) ஒதுக்கப்பட்ட பரப்பளவு | .. | 392.96 | ஏக்கர் |
| (4) மீதியுள்ள நிலம் | .. | 1.79 | ஏக்கர் |

(ஆ) நிலுவையிலுள்ள நில ஒதுக்கீட்டிற்கான விண்ணப்பங்கள் பற்றிய விவரங்கள் பின்வருமாறு:-

| வ. எண். (1) | தொழிற்சாலையின் பெயர் (2) | விண்ணப்பம் பெறப்பட்ட தேதி (3) | தேவையான பரப்பளவு (ஏக்கரில்) (4) | நிலை (5) |
|---|---|---|---|---|
| 1. | பிரபா ஆட்டோ பொருட்கள் (பி.லிட்) | 4-9-1995 | 2.50 | ஒசூர் இரண்டாம் பகுதி விரிவாக்கப்படும் பகுதியில் ஒதுக்கப்படுவதற்கு முன்னுரிமை தரப்பட்டு வைக்கப்பட்டுள்ளது. |
| 2. | டி. கணேசன் | 25-3-1996 | 0.25 | பரிசீலனையில் உள்ளது. |
| 3. | வி. சரவணன் | 25-3-1996 | 0.50 | பரிசீலனையில் உள்ளது. |
| 4. | ஹி. டெக் டூல்ஸ் | 17-5-1996 | 0.50 | ” |
| 5. | ஸ்ரீமான் பொறியியல் | 22-6-1996 | 0.50 | ” |
| 6. | டைனாஸ்பெட் இண்டக்கிரேட் ஸிஸ்டம்ஸ் (பி) லிட் | 28-6-1996 | 5.00 | ” |
| 7. | சி.எ.ஐ. தொழிற்சாலை லிட் | 18-7-1996 | 0.25 | ” |

மேற்குறிப்பிட்ட நிலுவையிலுள்ள விண்ணப்பங்கள், தகுந்த விவரங்கள் நிதி ஏற்பாடு பற்றிய விவரங்கள் தந்தவுடன் பரிசீலிக்கப்படும்.

3—

**தீயணைப்பு நிலையங்களுக்கு சொந்தக் கட்டிடம்.**

வினா எண் 6510—**திரு. அ. மாரிமுத்து:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் இராமசாமி படையாச்சியார் மாவட்டம் வானூர் தொகுதியிலுள்ள மரக்காணம் மற்றும் வானூர் தீயணைப்பு நிலையங்களுக்கு சொந்தக் கட்டிடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

ஆம், கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

4—

**சீர்காழி தீயணைப்பு நிலையத்திற்கு சொந்தக் கட்டிடம்**

வினா எண் 6513—**திரு. மு. பன்னீர் செல்வம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகை காயிதே மில்லத் மாவட்டம், சீர்காழி தொகுதியிலுள்ள சீர்காழி தீயணைப்பு நிலையத்திற்கு சொந்தக் கட்டிடம் இல்லாமல் இருப்பது குறித்து அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், சொந்தக் கட்டிடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சீர்காழி தீயணைப்பு நிலையம் தற்போது வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வருகிறது. இந்தத் தீயணைப்பு நிலையத்திற்கு நிரந்தரக் கட்டிடம் கட்டுவதற்காக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

5—

**காலியாக உள்ள ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்படுதல்**



வினா எண் 2045—**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டம், திருத்துறைப்பூண்டி கல்விச் சரகம், முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், முத்துப்பேட்டை அரசு மேல்நிலைப் பள்ளி, நாச்சிக் குளம் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி ஆகியவற்றில் காலியாக உள்ள ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்படுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

மேற்காணும் பள்ளிகளில் காலியாக இருந்த முதுகலைத் தமிழ் ஆசிரியர் பணியிடமும், கணிதப் பட்டதாரி ஆசிரியர் பணியிடமும் மற்றும் இரண்டு இடைநிலை ஆசிரியர் பணியிடங்களும் நிரப்பப்பட்டு விட்டன.

6—

**பள்ளிகளுக்குக் கட்டிடம் கட்டுதல்**

வினா எண் 2940—**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் தொகுதியிலுள்ள பள்ளிகளுக்குப் போதிய கட்டிடம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

1996-97-ஆம் ஆண்டிற்கான பகுதி-2 திட்டத்தின் கீழ் அரசு உயர்நிலைப் பள்ளி/மேல்நிலைப் பள்ளிகளுக்கு கூடுதல் வகுப்பறைகள் கட்டிக் கொடுக்க ரூ. 4 கோடி அரசு ஒதுக்கியிருந்தது. ரூ. 3.01 லட்சம் செலவில் இரண்டு வகுப்பறைகள் 64 உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் கட்டவும், ரூ. 6.03 லட்சம் செலவில் 3 வகுப்பறைகள் 34 உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் கட்டவும் அரசாணை நிலை எண் 718 கல்வி, நாள் 4-10-1996-ல் அரசு ஆணை வழங்கியுள்ளது. ரூ. 6.03 லட்சம் செலவில் 3 வகுப்பறைகள் கட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட

பள்ளிகளில் அரசினர் மகளிர் உயர்நிலைப் பள்ளி, பாபநாசமும் ஒன்றாகும்.

7—

**அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளி துவங்குதல்**

வினா எண் 3532—**திரு. ஆர். தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர், கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

வட ஆற்காடு–அம்பேத்கர் மாவட்டம், அரக்கோணம் வட்டம், பனப்பாக்கத்தில் அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளி துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

வட ஆற்காடு–அம்பேத்கர் மாவட்டம், பனப்பாக்கத்தில் ஏற்கெனவே அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளி செயல்பட்டு வருகிறது. இப்பள்ளியை 1997-98-ஆம் கல்வியாண்டில் மேனிலைப் பள்ளியாக உயர்த்தக் கோரி கருத்துருக்கள் பெறப்பட்டுள்ளன. இது விதிகளுக்குட்பட்டு அரசால் பரிசீலிக்கப்படும்.

8—

**எடப்பாடி தொகுதி பள்ளிகளுக்கு கல்வி மேம்பாட்டுத் திட்டத்தில் இலவசப் புத்தகங்கள் வழங்குதல்**

வினா எண் 6651—**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி, எடப்பாடி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, கொங்கணாபுரம் அரசு மேல்நிலைப்பள்ளி, மகுடஞ்சாவடி அரசு மேல்நிலைப்பள்ளி ஆகிய பள்ளிகளுக்கு மத்திய அரசின் அறிவியல் கல்வி மேம்பாட்டுத் திட்டத்தில் இலவசமாகப் புத்தகங்கள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

மேற்கண்ட நான்கு மேல்நிலைப் பள்ளிகள் ஒவ்வொன்றுக்கும்



ரூ.15,000 மதிப்புள்ள நூலகப் புத்தகங்கள் மத்திய அரசின் அறிவியல் கல்வி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 1990-ஆம் ஆண்டு முதல் 1992-ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்டுள்ளன.

9—

**நூலகத்திற்குச் சொந்தக் கட்டிடம்**

வினா எண் 7095—**திரு. வெ. ஆ. ஆண்டமுத்து:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரியார் மாவட்டம், பவானிசாகர் தொகுதி, நம்பியூரில் உள்ள நூலகத்திற்கு சொந்தக் கட்டிடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

பெரியார் மாவட்டம், பவானி சாகர் தொகுதி, நம்பியூரில் உள்ள கிளை நூலகத்திற்கு 2,175 சதுர அடி காலிமனை பெறப்பட்டு, கட்டிடம் கட்ட மாவட்ட நூலக அலுவலரால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

10—

**கட்டளைக் குடியிருப்பு கிராமத்திற்கு ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்**

வினா எண் 338—**திரு. கு. ரவி அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கோட்டை தாலுகா, கட்டளைக் குடியிருப்பு கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எபோது?

[1997 ஏப்ரல் 30

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் :**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**11—**

**எடப்பாடி அரசு மருத்துவனையில் தேவையான பணியாளர்கள் நியமித்தல்**

வினா எண் 3227—**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி அரசு மருத்துவமனையின் வெளிப்புற, உள் நோயாளிகளின் எண்ணிக்கைக்கேற்ப மருத்துவ அலுவலர்கள், மருந்தாளுநர்கள், செவிலியர், துப்புரவுப் பணியாளர்கள் இல்லையென்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், தேவையான பணியாளர்களை நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் :**

(அ) எடப்பாடி அரசு மருத்துவமனை 26 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகும். பெண்களுக்கு 13, ஆண்களுக்கு 13 என்ற கணக்கில் படுக்கைகள் ஒதுக்கப்பட்டுள்ளன. இங்கு 1 சிவில் மருத்துவர் மற்றும் 3 உதவி மருத்துவர்களும், 3 செவிலியர்களும், 2 மருந்தாளுநர்களும், 1 துப்புரவாளர் ஆக மொத்தம் 10 பணியாளர்கள் பணி புரிகின்றனர். உள்நோயாளி மற்றும் வெளிநோயாளிகளின் எண்ணிக்கைக்கேற்ப மருத்துவ அலுவலர்கள் மற்றும் அனைத்துப் பணியாளர்களும் போதுமான அளவுடன் இம்மருத்துவமனை செயல்பட்டு வருகிறது.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.



1997 ஏப்ரல் 30 ]

**12—**

**போலியோ தாக்கியதால் ஊனப்பட்டவர்களுக்கு அரசு உதவி**

வினா எண் 5757—**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர், கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் போலியோ தாக்கியதால் ஊனப்பட்டு வாழ்ந்து வருவோர் எத்தனை பேர்?

(ஆ) அவர்களுக்கு உதவ அரசு ஏதேனும் சிறப்புத் திட்டம் தயாரித்துள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் :**

(அ) போலியோ நோயினால் பெரும்பாலும் 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளே பாதிக்கப்படுகின்றனர். 1981-ஆம் ஆண்டு முதல் 1996-ஆம் ஆண்டு வரை இந்நோய் தாக்கியதால் ஊனமுற்ற குழந்தைகளின் எண்ணிக்கை 32,167 ஆகும்.

(ஆ) மேற்கண்ட குழந்தைகளுடன் ஏற்கெனவே போலியோ நோயினால் தாக்கப்பட்ட பெரியவர்களுக்கும் சேர்த்து சிகிச்சை அளித்து ஊனத்தைச் சரிசெய்வதற்காக "ஆப்ரேஷன் போலியோ" என்ற திட்டத்தை அரசு சமூக நலத்துறை மூலம் செயல்படுத்தி வருகிறது. இதன்மூலம் மூன்று சக்கர சைக்கிள்கள், சக்கர நாற்காலி, உதவி உபகரணங்கள் அக்குள் கட்டை ஆகிய துணைக் கருவிகளும் வழங்கப்படுகின்றன. இவர்களுக்கு மேலும் சிறப்புப் பள்ளிகளில் சேர்த்தல், கல்வி உதவித் தொகை அளித்தல், தொழிற்பயிற்சி அளித்தல் வேலைவாய்ப்பு அளித்தல், சுயவேலைவாய்ப்புக்கு அரசு மானியத்துடன் வங்கிக் கடனுக்கு பரிந்துரைத்தல், முதியோர் ஓய்வூதியம் வழங்குதல் மற்றும் பராமரிப்பு உதவித் தொகை வழங்குதல் ஆகிய உதவிகளும் செய்யப்படுகின்றன. இவர்களுக்கு அறுவைச் சிகிச்சையும் அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் 1989-90 முதல் 1994-95 வரை பயனடைந்தோர் எண்ணிக்கை பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1. | ஊன்றுகோல் வழங்கப்பட்டவர்கள் (பெரியவர்கள் உட்பட) | 34,614 பேர்கள் |
| 2. | இதர உதவிகள் மூலம் மறுவாழ்வு பெற்றவர்கள் | 36,303 பேர்கள் |

3. அறுவைச் சிகிச்சை மூலம் சரிப்படுத்தப்பட்டோர் 16,447 பேர்கள்

**13—**

## ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு நிரந்தரக் கட்டிடம்

வினா எண் 6536—**திரு. செ. இராமலிங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம் திருவிடைமருதூர் ஒன்றியம், முருக்கங்குடி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு நிரந்தரக் கட்டிடம் கட்டுவது குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் :**

திருவிடைமருதூர் ஊராட்சி ஒன்றியத்தில் முருக்கங்குடி ஆரம்ப சுகாதார நிலையம் 8-10-1961 முதல் செயல்பட்டு வருகிறது. இதில் பொதுச் சுகாதாரக் கட்டிடம் மற்றும் குடும்பநலத் திட்டக் கட்டிடம் உள்ளன. இதில் பொதுச் சுகாதார கட்டிடம் முழுவதும் பழுதுபட்டுள்ளதால் குடும்பத் திட்டக் கட்டிடத்தில் 1-7-1995 முதல் இயங்கி வருகிறது. இக்கட்டிடம் 1960-ஆம் ஆண்டில் கட்டப்பட்டது. எனவே, பொதுச் சுகாதாரத் துறை கட்டிடத்தை முழுவதுமாக இடித்துவிட்டு அந்த இடத்தில் புதிய கட்டிடம் கட்ட பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. 3.65 ஏக்கர் நிலப்பரப்பு உள்ளதால் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் புதிய கட்டிடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

கட்டிடங்கள் இல்லாத அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் கட்டிடம் கட்ட வேண்டும் என்ற அரசின் முடிவுக்கிணங்க 1997-98 ஆம் ஆண்டில் ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடங்கள் கட்டும் திட்டத்தில் முருக்கங்குடி ஆரம்ப சுகாதார நிலையத்தினையும் சேர்த்துக் கட்டிடம் கட்டித்தர நடவடிக்கை எடுக்கப்படும்.



**14—**

## ஆரம்ப சுகாதார நிலையம் பழுதுபார்த்தல்

வினா எண் 6561—**திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், தருமபுரி ஒன்றியம், கொண்டம்பட்டி ஊராட்சி, டி. துரிஞ்சிப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தைப் பழுதுபார்க்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் :**

தர்மபுரி ஊராட்சி ஒன்றியத்தில் டி. துரிஞ்சிப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையக் கட்டிடங்கள் 1993-94-ஆம் ஆண்டில் கட்டப்பட்டது. இதில் உள்ள மருத்துவ அலுவலர் குடியிருப்புக் கட்டிடங்களில் ஜன்னல், செப்டிக் டாங்க், மின்சார ஒயர் பழுதுபார்ப்புப் பணி, ஓடு மாற்றம் செய்தல், ஆகிய பழுதுபார்க்கும் பணிகளும் மற்றும் பணியாளர் குடியிருப்புக் கட்டிடங்களில் கதவுகள், மின்சாரக் கம்பி பழுதுபார்ப்பு, ஆகிய பழுதுபார்க்கும் பணிகளையும் மேற்கொள்ள பொதுப்பணித் துறை செயற்பொறியாளர் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

துரிஞ்சிப்பட்டி ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அலுவலர் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் ரூ. 50,000-ம் செலவில் ஆரம்ப சுகாதார நிலையத்தின் முன்பக்கக் கதவினை (Gate) பழுதுபார்க்கவும், ரூ. 40,000 செலவில் தண்ணீர் மற்றும் கழிப்பறை வசதிகள் செய்யவும், ரூ. 45,000 செலவில் குடியிருப்புக் கட்டிடங்களுக்கு மின் பழுதுபார்ப்புகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மும்முனை மின்சார இணைப்பு வழங்குவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இவ்வனைத்து பழுதுபார்ப்புப் பணிகளும் விரைவில் நிறைவேற்றப்பட உள்ளன.

[1997 ஏப்ரல் 30

**15—**

**கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் புதிய கட்டிடம் கட்டுதல்**

வினா எண் 6747—**டாக்டர் வே. ஆல்பன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், திருவெட்டார் தொகுதிக்குட்பட்ட கண்ணனூர், திருவெட்டார் ஆகிய இடங்களில் செயல்பட்டு வரும் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் புதிய கட்டிடம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் :**

திருவெட்டார் ஊராட்சி ஒன்றியத்தில் திருவெட்டார் ஆரம்ப சுகாதார நிலையம் ஊராட்சி ஒன்றியக் கட்டிடத்தில் செயல்பட்டு வருகிற கண்ணனூர் ஆரம்ப சுகாதார நிலையம் தனியார் கட்டிடத்தில் செயல்பட்டு வருகிறது. திருவெட்டார் மற்றும் கண்ணனூர் ஆரம்ப சுகாதார நிலையங்களில் நிலம் பெறப்படாததால் கட்டிடங்கள் கட்ட இயலவில்லை. புதியக் கட்டிடங்கள் கட்டுவதற்கு நிலம் ஒதுக்கிட சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய அலுவலர்கள் மற்றும் தனியார் மூலமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் கட்டிட வசதி செய்திட அரசு முடிவு செய்துள்ளது. 1996-97-ம் ஆண்டில் 300 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு கட்டிடம் கட்ட அரசு உத்தரவிட்டுள்ளது. மீதமுள்ள 300 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு 1997-98-ம் ஆண்டில் கட்டிடம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. எனவே, இச்சுகாதார நிலையங்களுக்கு நிலம் பெறப்பட்டவுடன் கட்டிடம் கட்டித்தரப்படும்.

**16—**

**வெள்ள நிவாரணப் பணிகளின் விவரம்**

வினா எண் 6054—**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1997 ஏப்ரல் 30 ]

புவனகிரி தொகுதியில், 1996-ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் வெள்ளத்தால் ஏற்பட்ட சேதத்தின் நிவாரணப் பணிகள் இதுவரை எந்த அளவிற்கு நடைபெற்றுள்ளன?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த்துறை அமைச்சர்:**

1996-ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் பெய்த பெருமழையின் காரணமாக தென்னாற்காடு-வள்ளலார் மாவட்டத்திலுள்ள புவனகிரி தொகுதி பாதிக்கப்பட்டது.

இம் மழையினால் பாதிக்கப்பட்ட 41,430 வீடுகளுக்கு நிவாரணமாக ரூ. 2,23,41,250 வழங்கப்பட்டுள்ளது. மேலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 40,435 வேட்டிகள், 40,435 சேலைகள், 40,435 லிட்டர் மண்ணெண்ணெய் மற்றும் 2,01,725 கிலோ அரிசி வழங்கப்பட்டுள்ளது. இப்பெருமழையினால் இறந்துபோன 7 கால்நடைகளுக்கு ரூ. 19,000 நிவாரணத் தொகை வழங்கப்பட்டுள்ளது. மழையின் காரணமாக இறந்துபோன இருவரின் குடும்பத்தினருக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ. 15,000 வீதம் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு ரூ. 1,11,61,607 நிவாரணமாக 12,227 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. இத்தொகுதியில் உள்ள பேரூராட்சிகளில் பழுதடைந்த சாலைகள், வடிகால், சிறு பாலங்கள் ஆகியவைகளைச் சீர் செய்வதற்காக ரூ. 11.95 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு சீர் செய்யும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. மற்றும் ரூ. 1,35,000 மதிப்பீட்டு செலவில் கட்டிடங்கள் பழுதுபார்க்கும் பணிகள் பொதுப் பணித்துறையால் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித்துறையால் ரூ. 63.36 இலட்சம் செலவில் சாலைகள் பராமரிப்புப் பணிகள் செய்யப்பட்டுள்ளன.

**17—**

**பட்டாக்கள் வழங்க நிபந்தனைகளைத் தளர்த்துதல்**

வினா எண் 6265—**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஏழை மக்களுக்கு பட்டாக்கள் வழங்குவதில் உள்ள நிபந்தனைகளைத் தளர்த்திடும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

தடை விதிக்கப்பட்டுள்ள அரசுப் புறம்போக்கு நிலங்களில் உள்ள ஆக்கிரமணங்களை நேரில் ஆய்வு செய்து அரசுக்கு பரிந்துரை செய்வதற்காக சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் தலைமையில் ஒரு குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அக்குழுவின் பரிந்துரையினைப் பெற்று ஏழை மக்களுக்குப் பட்டாக்கள் வழங்கப்படும்.

**18—**

## விவசாயக் கூலிகளுக்கு வீட்டு மனைப் பட்டா

வினா எண் 6901—**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், எடப்பாடி, பூலாம்பட்டி, கொங்கணாபுரம் பிர்காவில் வசிக்கும் விவசாயக் கூலிகளுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த்துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.



**19—**

## இலவச வீட்டுமனைப் பட்டா

வினா எண் 6903—**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், எர்ணாபுரம் பிர்காவில் இலவச வீட்டுமனைப் பட்டா கோரி வந்துள்ள மனுக்கள் எத்தனை?

(ஆ) அதில் பட்டா வழங்கப்பட்டது எத்தனை?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த்துறை அமைச்சர்:**

(அ) மனுக்கள் ஏதும் நிலுவையில் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**20—**

## ஆதிதிராவிட மக்களுக்கு வீடு கட்டுதல்

வினா எண் 577—**திரு. ஆர். மகேந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

நாட்ராம்பள்ளி தொகுதியில், புலாலூர் மற்றும் மேட்டூரில் ஆதி திராவிட மக்களுக்கு வீடுகட்டித்தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஆம்.

[1997 ஏப்ரல் 30

21—

### பனையடிப்பட்டியில் குடிநீர் வசதி ஏற்படுத்துதல்

வினா எண் **1515—திரு. கு. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம், கல்லூரணி ஊராட்சி, பனையடிப்பட்டியில் குடிநீர் வசதி ஏற்படுத்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): கீழப்பாவூர் ஒன்றியம், பனையடிப்பட்டி கிராமம் 1992-ம் ஆண்டு மறு ஆய்வில் கல்லூரணி பஞ்சாயத்துக்கு உட்பட்ட சில குடியிருப்புகளுடன் செட்டியூர் குடிநீர்த் திட்டத்தில் சேர்க்கப்பட்டு, நடப்பு நிதியாண்டில் (1996-97) நிறைவேற்ற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு நீராதாரம் உருவாக்கி, பனையடிப்பட்டியில் அமைந்துள்ள மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டியில் நீர் ஏற்றி பனையடிப்பட்டி, வேலுமயில்பட்டி ஆகிய கிராமங்களை உள்ளடக்கிய செட்டியூர் கிராமத்திற்கு குடிநீர் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

22—

### தெரு மின் விளக்கு அமைத்தல்

வினா எண் **2056—திரு. வெ. அ. ஆண்டமுத்து:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரியார் மாவட்டம், பவானி சாகர் தொகுதி, நம்பியூர் ஊராட்சி, புளியம்பட்டி ஊராட்சிப் பகுதிகளில் தெரு மின் விளக்குகள் நன்கு எரியச் செய்ய அரசு ஆவன செய்யுமா?



1997 ஏப்ரல் 30]

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பெரியார் மாவட்டம், நம்பியூர் ஊராட்சிப் பகுதிகளில் தற்போது பழுதடைந்துள்ள தெரு மின் விளக்குகளை பழுது நீக்கம் செய்து தெருவிளக்குகள் நன்கு எரிகின்றன.

23—

### ஊராட்சி ஒன்றியங்களின் மருத்துவமனைகள், மருத்துவர்கள் பணியாளர்கள் விவரம்

வினா எண் **2497—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சி ஒன்றியங்களின்கீழ் எத்தனை மருத்துவமனைகள் இருக்கின்றன?

(ஆ) அங்கு பணியாற்றும் மருத்துவர்கள் மற்றும் பணியாளர்கள் எத்தனை பேர்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஊராட்சி ஒன்றியங்களின்கீழ் இயங்கும் மருத்துவமனைகள் 451.

(ஆ) அங்கு பணியாற்றும் மருத்துவர்கள் மற்றும் இதர பணியாளர்கள் 844.

24—

### சாலை செப்பனிடுதல்

வினா எண் **3557—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றிய சாலைகள் வைகுந்தம் கொங்கணாபுரம் சாலை கி.மீ. 2/2-லிருந்து (மூலக்கடை)—மாங்குட்டப்பட்டி வழியாக எடப்பாடி-மகுடஞ்சாவடி சாலையில் இணைக்கவும் பட்டக்காரன் வளவு சாலையில் இருந்து பெருமாகவுண்டன் வளவு வரை செப்பனிட்டுத் தரவும் அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வைகுந்தம் கொங்கணாபுரம் சாலை கி.மீ. 0/0-லிருந்து 1/8 வரையிலான சாலை மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றிய சாலையாகும். இச்சாலையில் கி.மீ. 0/0 முதல் 0/8 வரையிலான சாலை கிராமச்சாலை திட்டத்தின்கீழ் வேலை நடைபெறுகிறது.

2. கரையானூர் சாலை கி.மீ. 0/8-லிருந்து மாங்குட்டப்பட்டி சாலை வரையுள்ள 1 கி.மீ சாலை ஊராட்சி ஒன்றிய சாலையாகும். மாங்குட்டப்பட்டி முதல் கண்ணந்தேரி எல்லை வரை கி.மீ. 0/0-0/4 அ. தாழையூர் ஊராட்சி சாலையாகும். கண்ணந்தேரி எல்லையிலிருந்து எடப்பாடி-மகுடஞ்சாவடி சாலை வரை கி.மீ. 0/0-2/4 வரை கண்ணந்தேரி ஊராட்சி சாலையாகும். மேற்காணும் 3.80 கி.மீ. நீளமுள்ள சாலையினை மேம்பாடு செய்ய ரூ. 8.36 இலட்சம் தேவைப்படுகிறது. ஆனால் சம்பந்தப்பட்ட ஊராட்சிகளிலோ, மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியத்திலோ இப்பணியினை மேற்கொள்ள போதிய நிதியின்மையால் இப்பணியினை 1996-97 ஆம் ஆண்டில் மேற்கொள்ள இயலவில்லை. 1997-98 ஆம் ஆண்டின் ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் இவ்வேலைகள் முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

**25—**

## தார்ச் சாலை அமைத்தல்

வினா எண் **3561—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியச் சாலைகளை அ. தாழையூர் புறவழிச் சாலை முதல் சுண்டாக்கல் காடுவரை தார் போட்டு, ஆச்சாம்பாளி காடு முதல் ஊஞ்சக்காடு பள்ளி வரை





ஜல்லிபோட்டு, எடப்பாடி மகுடஞ்சாவடி சாலையிலிருந்து கி.மீ 13/6-லிருந்து அழகப்பம்பாளையம் செல்லும் சாலையை தார்ச் சாலையாக அமைத்து செப்பனிட்டுத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வினாவில் குறிப்பிட்டுள்ள சாலையில் எடப்பாடி-மகுடஞ்சாவடி சாலை கி.மீ. 13/6-லிருந்து அழகப்பம்பாளையம் செல்லும் சாலையை தார்ச் சாலையாக்கும் பணி ரூ. 3.52 இலட்சம் மதிப்பீட்டில் தற்போது நடைபெற்று வருகிறது. ஆச்சாம்பள்ளிகாடு முதல் ஊஞ்சக்காடு வரையிலான கி.மீ. 0/0 முதல் 1/4 வரையிலான சாலை அ. தாழையூர் ஊராட்சி சாலையாகும். இதனை தார்ச் சாலையாக மாற்றிட ரூ. 3.10 இலட்சம் தேவைப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி ஊராட்சி மற்றும் மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியத்திலும் போதிய நிதிவசதி இல்லாததால் இப்பணியினை நடப்பாண்டில் செய்ய இயலாது. இப்பணி 1997-98 ஆம் ஆண்டு ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

**26—**

## எடப்பாடி தொகுதியில் சாலை செப்பனிடல்

வினா எண் **3562—திரு இ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம் கரையானூர்-சுண்டாக்கல்காடு (வழி) சின்ன ஊஞ்சக்காடு, அத்திமரப்பட்டி, ஆச்சாம் பள்ளிக்காடு முதல் ஊஞ்சக்காடு பிள்ளையார் கோயில்வரை (வழி) கவுண்டடப்பன் காடு, ஊஞ்சக்காடு பள்ளிக்கூடம் முதல் பச்சியம்மன் கோயில் வரை செப்பனிட்டு சீர்செய்ய அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியம், கரையானூர்-சுண்டாக்கல்காடு (வழி) சின்ன ஊஞ்சக்காடு

அத்திமரத்துப்பட்டி, ஆச்சாம்பாளையம் முதல் ஊஞ்சக்காடு பிள்ளையார் கோவில் வரை (வழி) கவுண்டப்பன்காடு, ஊஞ்சக்காடு பள்ளிக்கூடம் முதல் பச்சியம்மன் கோவில் வரை செப்பனிட்டுச் சீர் செய்ய கேட்கப்பட்டுள்ளது. இப்பணியினை மேற்கொள்ள தேவையான நிலங்களில் 75 சதவிகிதம் தனியாருக்குச் சொந்தமானதாக உள்ளது. இந்த நிலங்களை ஆர்ஜிதம் செய்து வேலை மேற்கொள்ளப்பட வேண்டும். 1996-97 நிதியாண்டில் இப்பணியினைச் செய்ய இயலாது. 1997-98 ஆம் ஆண்டில் நில ஆர்ஜிதப் பணி மேற்கொள்ளப்பட்டு முன்னுரிமை அடிப்படையில் இப்பணி மேற்கொள்ளப்படும்.

**27—**

**ஒன்றியச் சாலைகளைச் செப்பனிடல்**

வினா எண் **3563—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஊராட்சி வைகுந்தம் சந்தைப்பேட்டை முதல் பட்டக்காரன் காடு வரை, வைகுந்தம் ஆதிதிராவிடர் குடியிருப்பு சாலை 0/0-1/0 தேசிய நெடுஞ்சாலையிலிருந்து மொட்டாண்டிபாளையம் செல்லும் ஒன்றியச் சாலைகளை செப்பனிட்டுத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வைகுந்தம் சந்தைப்பேட்டை முதல் பட்டக்காரன்காடு வரை, வைகுந்தம் ஆதிதிராவிடர் குடியிருப்பு சாலையான கி.மீ. 0/0-1/0 வரையிலான தேசிய நெடுஞ்சாலையிலிருந்து மொட்டாண்டிப் பாளையம் செல்லும் மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றிய சாலையாகும். மேற்படி சாலையினை மேம்பாடு செய்ய ரூ. 11.20 இலட்சம் செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியத்திடம் போதிய நிதி வசதி இல்லாததால் 1996-97 ஆம் ஆண்டில், இப்பணியினை மேற்கொள்ள இயலாது. 1997-98 ஆம் ஆண்டில் இவ்வேலை ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.



**28—**

**சாலை செப்பனிடல்**

வினா எண் **3565—திரு இ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றிய சாலைகள் செல்லியம்மன் கோயில் ஏரி அருகிலுள்ள விநாயகர் கோயிலிலிருந்து வெள்ளையம்பாளையம் மூலக்கடை வரையிலும், (வழி) கனகச்சிப்பாளையம், வைகுந்தம் கொங்கணாபுரம் சாலை 0/8-லிருந்து அத்திமரத்துப்பட்டி வரையிலும் (வழி) மணியகாரன் காடு ஆகியவைகளை செப்பனிட்டுத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சட்டமன்றப் பேரவை வினாவில் குறிப்பிட்டுள்ள சாலைகள் அ. தாழையூர் மற்றும் கண்ணந்தேரி ஊராட்சிகளுக்கு சம்பந்தப்பட்ட சாலைகளாகும். ஊராட்சிகளிலும் மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியத்திலும், போதிய நிதி வசதி இல்லையாகையால், மேற்படி பணியினை 1996-97 ஆம் ஆண்டில் செய்ய இயலவில்லை. 1997-98ஆம் ஆண்டில் ஜே.வி.வி.டி. திட்டத்தின் கீழ் முன்னுரிமை அடிப்படையில் இந்த வேலை செய்து முடிக்கப்படும்.

**29—**

**சோழம்பட்டுக்கு தார்ச் சாலை**

வினா எண் **4164—திரு. தா. உதயசூரியன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் தொகுதி, சங்கராபுரம்-கள்ளக்குறிச்சி ஒன்றியங்களில் தாவரப்பட்டியிலிருந்து சோழம்பட்டுக்கு தார்ச் சாலை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): 1996-97-ஆம் ஆண்டு ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் சங்கராபுரம் ஊராட்சி ஒன்றியப் பகுதியில் உள்ள சோழம்பட்டு சாலையின் ஒரு பகுதி, அதாவது 2.2 கி.மீ. தூரம் தார்ச் சாலையாக அமைக்க நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. கள்ளக்குறிச்சி ஒன்றியப் பகுதியில் உள்ள தாவடிப்பட்டு-சோழம்பட்டு 200 மீட்டர் சாலையை தமிழ்நாடு வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் தார்ச்சாலையாக அமைக்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

**30—**

**புதியதாக மின் விளக்குகள் அமைத்தல்**

வினா எண் **5169—திரு. அ. வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி, தொகுதி, பரங்கிப்பேட்டை, அகரம் திரௌபதி அம்மன்கோவில் தெரு சந்தில் புதியதாக மின் விளக்குகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) : 1996-97-ஆம் ஆண்டில் புதிய தெரு விளக்குகள் அமைக்க இந்த கிராமத்திற்கு ரூ. 18,200/- ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்தொகையில் தெரு மின் விளக்குகள் அமைத்தல் திட்டத்தின் கீழ் 4 மின் விளக்குகள் அமைத்துத் தர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



**31—**

**தார்ச்சாலை அமைத்தல்**

வினா எண் **5218—திரு. சீ. வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னர்-திருமலை மாவட்டம், வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை முதல் சூலப்புரம், உல்லியக்கோட்டை வழியாக தார்ச்சாலை அமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) : வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை முதல் சூலப்புரம் வரை உல்லியக்கோட்டை பெருமாள்பட்டி, வழியாக செல்லும் சாலையின் மொத்த நீளம் 6 கி.மீ. ஆகும். இதில் 2 கி.மீ. நீள சாலை கிராவல் சாலையாகவும், மீதமுள்ள 4 கி.மீ. சாலை கற் சாலையாகவும் உள்ளது. இதில் பேருந்து போக்குவரத்து ஏதும் தற்போது இல்லை. நடப்பு நிதியாண்டில் பேருந்து செல்லும் சாலைகளையே தார்ச் சாலையாக அமைக்க முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிடப்பட்டுள்ள சாலையை தற்போது தார்ச்சாலையாக அமைக்க இயலாது.

**32—**

**தார்ச்சாலை அமைத்தல்**

வினா எண் **5219—திரு. சீ. வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னர்-திருமலை மாவட்டம், வேடசந்தூர் தொகுதி, கூடலூர் கோட்டா நத்தம் தார்ச்சாலை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): வேடசந்தூர் தொகுதி, டி. கூடலூரிலிருந்து கோட்டாநத்தத்திற்கு திண்டுக்கல்-கரூர் சாலையில் பால்வார்பட்டி அருகில் பூசாரிப்பட்டி, சேர்வைக்காரன்பட்டி வழியாக ஏற்கனவே நெடுஞ்சாலைத்துறை மூலம் தார்ச் சாலை அமைக்கப்பட்டுள்ளது. டி. கூடலூரிலிருந்து கோட்டாநத்தத்திற்கு திருமக்கம்பட்டி வழியாக ஊராட்சி சாலை செல்கிறது. இச்சாலையில் பேருந்து போக்குவரத்து இல்லை. நடப்பு நிதியாண்டில் பேருந்து செல்லும் சாலைகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு தார்ச் சாலையாக அமைக்கப்பட்டு வருவதால் மேற்குறிப்பிட்ட சாலையை தற்போது தார்ச் சாலையாக அமைக்க இயலாது.

**33—**

**புதிய தெருவிளக்குகள் அமைத்தல்**

வினா எண் **5228—திரு. சீ. வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதியில் வடுகம்பாடி ஊராட்சி, கோட்டாநத்தம் ஊராட்சி, ஒல்லியக்கோட்டை ஊராட்சி, கரிக்காலி ஊராட்சியிலுள்ள கிராமங்களுக்கு புதிய தெருவிளக்குகள் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) : வேடசந்தூர் தொகுதியில் வடுகம்பாடி ஊராட்சி, கோட்டாநத்தம் ஊராட்சி, உல்லியக்கோட்டை ஊராட்சி, கரிக்காலி





ஊராட்சிகளிலுள்ள கிராமங்களுக்குக் கீழ்க்கண்டவாறு தெருவிளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன:

| ஊராட்சி பெயர். | தெருவிளக்குகள் எண்ணிக்கை. |
|---|---|
| 1. வடுகம்பாடி | 169 |
| 2. கோட்டாநத்தம் | 132 |
| 3. உல்லியக்கோட்டை | 75 |
| 4. கரிக்காலி | 93 |

இந்த ஊராட்சிகளில் தற்போதுள்ள தெருவிளக்குகள் போதுமானது.

**34—**

**நீர்த்தேக்கத் தொட்டி பவர் ஆபரேட்டர்கள் கோரிக்கை மனு மீது அரசு நடவடிக்கை**

வினா எண் **5246—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள ஊராட்சி ஒன்றிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி பவர் ஆபரேட்டர்கள் (Power Operators) சார்பில் அரசுக்கு ஏதேனும் கோரிக்கை மனு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தென்னாற்காடு-வள்ளலார் மாவட்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி விசைப்பம்பு இயக்குநர்கள் சங்கத்திலிருந்து காலமுறை ஏற்றச் சம்பள விகிதம், பொங்கல் போனஸ், குடும்ப நல நிதி போன்ற சலுகைகள் கேட்டு மனு வந்துள்ளது. பொங்கல் கருணைத் தொகை

ஒவ்வொருவருக்கும் ரூ. 200/- வீதம் வழங்க ஆணையிடப்பட்டது. ஏனைய கோரிக்கைகள் ஏற்கப்படவில்லை.

35—

**கிராம பள்ளிக்கூட கட்டிடம் பழுதடைந்துள்ளதை செப்பனிடல்**

வினா எண் **5497—திரு. அ. வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஒன்றியம், மஞ்சக்குழி மதுரா சம்பந்தம் கிராம பள்ளிக்கூடக் கட்டிடம் பழுதடைந்துள்ளதை செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், மஞ்சக்குழி மதுரா சம்பந்தம் கிராம பள்ளிக்கூடக் கட்டிடம் கல்வி நிதியில் 1996-97-ஆம் ஆண்டில் பழுது நீக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

36—

**அயோத்யா நகர் மக்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து தருதல்**

வினா எண் **5506—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் வட்டம், மண்ணரை ஊராட்சி, அயோத்யா நகர் மக்களுக்குத் தெருவிளக்கு, சாலை, கழிவுநீர்க் கால்வாய் போன்ற அடிப்படை வசதிகள் செய்துதர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?



விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): திருப்பூர் ஊராட்சி ஒன்றிய மண்ணரை ஊராட்சிக்குட்பட்ட அயோத்யா நகர் புதியதாகத் தோன்றியுள்ள குடியிருப்புப் பகுதியாகும். இங்கு நான்கு தெரு விளக்குகள் அமைக்க மின் வாரியத்திற்கு விண்ணப்பிக்கப்பட்டு கட்டணமும் செலுத்தப்பட்டுள்ளது. மதிப்பீடுகளுக்கு அங்கீகாரம் பெற்ற பின்னர் தெரு விளக்குகள் அமைக்கப்படும். பாதை மற்றும் சாக்கடைகள் அமைக்கும் பணி 1997-98-ஆம் நிதியாண்டில் நிறைவேற்ற பரிசீலிக்கப்படும்.

37—

**காய்கறி நாளங்காடியை விரிவுபடுத்துதல்**

வினா எண் **5588—திரு. அ. வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் நகரிலுள்ள காய்கறி நாளங்காடியை விரிவுபடுத்தும் நோக்குடன் இடமாற்றம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சிதம்பரம் நகரில் உள்ள காய்கறி தினசரி அங்காடியை விரிவுபடுத்துவதற்கு நகரளவு எண்கள் 615/6,7,8,9,22 மற்றும் 23-ல் உள்ள இடத்தை நில 'ஆர்ஜிதம் செய்ய சிதம்பரம் நகர்மன்றத் தீர்மானம் எண் 357, நாள் 25-6-85-ல் தீர்மானம் நிறைவேற்றி நடவடிக்கை எடுக்கப்பட்டு நிதிப் பற்றாக்குறையினால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

38—

**ஊராட்சிகளுக்குச் சொந்த அலுவலகக் கட்டிட வசதி**

வினா எண் **5813— திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* பெரியார் மாவட்டத்தில் சொந்த அலுவலகக் கட்டிடம் இல்லாத ஊராட்சிகள் உள்ளனவா?

*(ஆ)* ஆம் எனில், அவைகள் எத்தனை?

*(இ)* அவைகளுக்கு கட்டிட வசதி ஏற்படுத்தித் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ), (ஆ)* மற்றும் *(இ)* : பெரியார் மாவட்டத்தில் உள்ள 340 ஊராட்சிகளுக்கும் சொந்த அலுவலகக் கட்டிடம் உள்ளது.

39—

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் (I.R.D.P.) மூலம் வழங்கும் கடனுதவி.

வினா எண் **6696—திரு. மு.பே. சாமிநாதன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் (I.R.D.P.) மூலம் வழங்கும் கடனுதவித் திட்டத்தை பேரூராட்சிகளில் வாழும் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் வழங்க அரசிடம் திட்டம் உள்ளதா?



விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலம் வழங்கும் கடனுதவி திட்டம் தற்போது ஊராட்சிகளில் மட்டுமே நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் பேரூராட்சிகளில் செயல்படுத்தப்படுவதில்லை.

40—

**ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களுக்குப் புதிய கட்டிடம்.**

வினா எண் **7297—திரு. கொ.வி. நன்னன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், செங்கம் தொகுதி, செங்கம், புதுப்பாளையம் ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களுக்கு புதிய கட்டிடம் கட்டித்தர அரசிடம் திட்டம் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)*: திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், செங்கம் தொகுதி, புதுப்பாளையம் ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களுக்கு புதிய கட்டிடம் கட்டும் திட்டம் ஏதுமில்லை.

41—

**ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்குக் கட்டிடம் அமைத்தல்**

வினா எண் **6142—திரு. என். பாண்டுரங்கன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ் காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், பெரணமல்லூர் ஊராட்சி ஒன்றியம், பேரூரில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு நிரந்தரக் கட்டிடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், பெரணமல்லூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் ரூ. 150/- மாத வாடகையில் இயங்கி வருகிறது. மேற்படி விற்பனைக் கூடத்தின் வரத்து மற்றும் வருவாய் நாளுக்கு நாள் குறைந்தும், செலவினம் நாளுக்கு நாள் மிகக் கூடுதலாகவும் நிர்வாகச் செலவினத்தைக் கூட ஈடுசெய்ய முடியாத நிலை உள்ளது. இவ்விற்பனைக் கூடத்திற்கு தற்போதைய நிதி நிலைமையை கருத்தில் கொண்டால் நிலம் வாங்குவது, நிரந்தரக் கட்டிடம் கட்டுவது என்பது உசிதமாக இருக்காது. மேற்படி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு வரத்து மற்றும் வருவாய் அதிகரிக்க நடவடிக்கைகள் மேற்கொண்டு பிறகு சொந்தமாக நிலம் வாங்கவும், நிரந்தரக் கட்டிடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**42—**

**ஆழ்குழாய்க் கிணறுகள், புதிய விசைத்துறைக் கருவிகள் விவரம்**

வினா எண் **6244—திரு. பி. வெங்கடசாமி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேளாண்மைப் பொறியியல் துறையில் எத்தனை ஆழ்குழாய்க் கிணறுகள் நல்ல இயங்கும் நிலையில் உள்ளன?

(ஆ) தமிழ்நாட்டில் உள்ள பாறைப்படிவ நிலங்கள் மற்றும் மணல் படிவு நிலங்களுக்கு புதிய விசைத்துறைக் கருவிகள் வழங்க பிரேரணை எதுவும் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள்?





விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) வேளாண்மைப் பொறியியல் துறையின் கட்டுப்பாட்டில் குழாய்க் கிணறுகள் எதுவும் இல்லை. எனினும் துறையில் உள்ள துளைக் கருவிகள் விவசாயிகளுக்கு வாடகைக்கு அளிக்கப்பட்டு குழாய்க் கிணறுகள் விவசாயிகளின் நிலங்களில் அமைக்கப்படுகின்றன.

(ஆ) இல்லை. ஆனால் ஏற்கெனவே வேளாண் பொறியியல் துறையில் கீழ்க்கண்ட சிறுபாசனக் கருவிகள் உள்ளன:-

| | |
|---|---|
| 1. ரோட்டரி டிரில் | 55 எண்கள் |
| 2. பெர்குசன் டிரில் | 42 எண்கள் |
| 3. காலிக்ஸ் டிரில் | 1 எண் |
| 4. ஹாமர் டிரில் | 5 எண்கள் |
| 5. இன்வெல் டிரில் | 39 எண்கள் |
| 6. பாறைவெடிக் கருவிகள் | 82 எண்கள் |
| 7. நீள்துளைக் கருவிகள் | 43 எண்கள் |
| 8. கைத்துளைக் கருவிகள் | 371 எண்கள் |
| 9. நில ஆய்வுக் கருவிகள் | 22 எண்கள் |

(இ) கேள்விக்கு இடமில்லை.

**43—**

**குளத்தின் கரை செப்பனிடல்**

வினா எண் **1454—திரு. கு. ரவி அருணன்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், செங்கோட்டை வட்டம், பூலாங்குடியிருப்பு அருகில் உள்ள கரடிப்பாறை குளத்தில் கரை இடிந்துள்ளதைச் செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

1992-ல் ஏற்பட்ட புயல் வெள்ளத்தின் காரணமாக இக்குளத்தின் கரையில் ஏற்பட்ட உடைப்பு தற்காலிகமாக சரி செய்யப்பட்டு பாசனம் நடைபெற்று வருகிறது. மேற்படி குளத்திற்கு நிரந்தர மராமத்துப் பணிகள் செய்ய ரூ. 1.60 லட்சத்திற்கு மதிப்பீடு பொதுப்பணித் துறை தள அலுவலர்களால் தயாரிக்கப்பட்டு பரிசீலனையில் உள்ளது. நிதி நிலைக்கேற்ப இப்பணி மேற்கொள்ளுவது பற்றி முடிவெடுக்கப்படும்.

**44—**

**பாலாற்றுப்படுகை நிலங்களில் கிணறுகள் நிவாரண நடவடிக்கை**

வினா எண் **3706—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாணியம்பாடி வட்டம், அம்பலூர், எக்லாஸ்புரம் கிராமங்களுக்கு அருகில் பாலாற்றில் ராட்சதக் கிணறுகள் வெட்டப்பட்டு திருப்பத்தூர், வாணியம்பாடி, ஜோலார்பேட்டை, ஆம்பூர், பேரணாம்பட்டு ஆகிய இடங்களுக்கு நீர் எடுப்பதால் பாலாற்றுப்படுகையில் நிலங்களில் கிணறுகள் 6 மாதங்களுக்கு நீர் இல்லாததை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், நிவாரண நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) வாணியம்பாடி வட்டம், அம்பலூர், எக்லாஸ்புரம் கிராமத்திற்கு அருகில் பாலாற்றில் கிணறுகள் வெட்டப்பட்டு திருப்பத்தூர், வாணியம்பாடி, ஜோலார்பேட்டை, ஆம்பூர், பேரணாம்பட்டு நகர மக்களின் குடிநீர்த் தேவைக்காக முன்னுரிமையாக தண்ணீர் எடுக்கப்படுகிறது. பாலாற்றில் ஒவ்வொரு வருடமும் பருவ மழை தவறுங்காலங்களில் ஆற்றில் தண்ணீர் வரத்து இல்லாமையினால் பாலாறு படுகைப் பகுதிகளில் உள்ள கிணறுகளில் நீர் வரத்து குறைவாகிவிடுகிறது. இவ்வருடம் பாலாற்றில் நீர்வரத்து அதிகமாக உள்ளதால் பாலாற்றுப் படுகையில் உள்ள கிணறுகளில் நீர் ஊற்று அதிகமாக உள்ளது. எனவே, நிவாரண நடவடிக்கை ஏதும் தற்போது தேவைப்படவில்லை.



**45—**

**ஆற்றில் அணை கட்டுதல்**

வினா எண் **4118—திரு தா. உதயசூரியன்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சங்கராபுரம் ஒன்றியம், லக்கிநாயக்கன்பட்டி ஆற்றில் மீண்டும் அணை கட்ட அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

விழுப்புரம்-இராமசாமி படையாச்சியார் மாவட்டம், சங்கராபுரம் வட்டம், லக்கிநாயக்கன்பட்டி கிராமம் கொடியனூர் சிற்றாரின் அருகே முசுகுந்தா நதியின் குறுக்கே ஒரு புதிய நீர்த்தேக்கம் அமைக்கும் திட்டத்திற்கு ரூ. 426 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு முதல்நிலை அறிக்கை தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்) அனுப்பியுள்ளார். இத்திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. இதனால் ஏற்படும் பயன், தொழில்நுட்ப ஆய்வு மற்றும் நிதி நிலைக்குட்பட்டு இதன் மீது முடிவு எடுக்கப்படும்.

**46—**

**பழுதுபட்டுள்ள கால்வாயைச் செப்பனிடுதல்**

வினா எண் **4520—திரு. கு. ரவி அருணன்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கோட்டை வட்டம், கட்டளைக் குடியிருப்பு நீலி அம்மன்கோவில் தெருவில் பழுதுபட்டுள்ள கால்வாயைச் செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

[1997 ஏப்ரல் 30

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

வெள்ளத்தால் சேதமடைந்த நீலியம்மன் கால்வாயின் கரைகள் தற்காலிகமாக சரி செய்யப்பட்டு பாசனம் நடைபெற்று வருகிறது. சேதமடைந்த கரைகளை நிரந்தரமாக சரி செய்ய பொதுப்பணித் துறை தள அலுவலர்களால் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது. நிதி நிலைக்கேற்ப இப்பணிகள் மேற்கொள்ளப்படும்.

**47—**

**கால்வாயில் தூர் எடுத்தல்**

வினா எண் **4538—திரு. கே. மணிவர்மா:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செய்யாறு ஆற்றின் குறுக்கே எறையூரிலிருந்து கால்வாய் தூர்ந்திருப்பதை அரசு அறியுமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

ஆம். நீர் ஆதார ஒருங்கிணைப்புத் திட்டத்தில் உலக வங்கியின் உதவியுடன் முதல் கட்டமாக செய்யாறு ஆற்றின் மேம்பாட்டு திட்டத்தில் எறையூர் கால்வாயினை எறையூர் ஏரிவரை தூர்வாரி ஆழப்படுத்தும் பணியும் சேர்க்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி மேற்படி எறையூர் ஏரிக்கால்வாய் முழுவதும் தூர் வாரப்படும்.

**48—**

**ஓடை ஆக்கிரமிப்புகள் அகற்றுதல்**

வினா எண் **4912—திரு. அ. மாரிமுத்து:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம்-இராமசாமி படையாச்சியார் மாவட்டம், மரக்காணம் பகுதியிலுள்ள புளியங்கால் ஓடையிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி அகலப்படுத்தி மீண்டும் நீர்ப்பாசனத்திற்கு பயன்படுத்துமாறு செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?



1997 ஏப்ரல் 30]

(ஆ) ஆம் எனில், அப் பணியை இந்த நிதியாண்டிலேயே துவங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

(அ) ஆக்கிரமிப்புகளின் தன்மையை கண்டறிய வருவாய்த் துறையினருடன் தள ஆய்வு செய்து அவைகளை அகற்றிடவும் ஓடையை பாசனத்திற்குரியதாக மாற்றுவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்தும் ஆய்வு செய்யப்படும்.

(ஆ) இக்கட்டத்தில் செயல்திட்ட காலத்தை குறிக்க இயலாது.

**49—**

**மேம்பாலம் அகலப்படுத்துதல்**

வினா எண் **4628—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூரில், ஜோதி ஆனந்தா திரையரங்கு எதிரிலுள்ள மேம்பாலம் குறுகியதாக உள்ளதால், அதனை அகலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

வேலூர் ஜோதி ஆனந்தா திரையரங்கு எதிரிலுள்ள குறுகிய பாலமானது தேசிய நெடுஞ்சாலை-46-ல் கிருஷ்ணகிரி-இராணிப்பேட்டை சாலை கி.மீ 116/8-ல் உள்ளது. இப்பாலமானது வேலூர் நகராட்சி எல்லைக்கு உட்பட்டதாகும். வேலூர் நகருக்கென புறவழிச்சாலை மத்திய அரசால் அங்கீகாரம் செய்யப்பட்டு சாலை அமைக்கப்பட்டு போக்குவரத்து செல்கின்றது. இந்நிலையில் பாலத்தை அகலப்படுத்தும் பணிக்கு மத்திய அரசு நிதி அளிக்காது. நகர்ப்புற சாலை மேம்பாட்டு பணிக்கு மாநில அரசு நிதி உதவியில் பகுதி-2 திட்டத்தின் கீழ் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அரசின் நிதி நெருக்கடி காரணமாக இப்பணியை தற்பொழுது எடுத்துக் கொள்ள இயலாது.

50—

### சாலை செப்பனிடுதல்

வினா எண் **4980—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அம்பத்தூர் அம்பேத்கர் சிலையிலிருந்து அயப்பாக்கம் வழியாக திருவேற்காடு செல்லும் பழுதடைந்துள்ள சாலையைச் செப்பனிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

இச்சாலையானது "சென்னை-திருத்தணி-ரேணிகுண்டா சாலையில்" இருந்து பிரிந்து செல்லும் கோலடி சாலையாகும். இதன் நீளம் கி.மீ. 0/0-7/0 (7.00கி.மீ) ஆகும். இச்சாலையில் 0/0-1/0 வரையிலான சாலை கடந்த 11/96-ல் பெய்த மழையின் காரணமாக சேதமடைந்தது. மேலும் கி.மீ. 0/10-ல் குடி தண்ணீர் எடுக்கும் லாரிகளால் சாலைகளில் தண்ணீர் தேங்கி சாலை மிகவும் மோசமாக பழுதடைந்திருந்தது. தற்போது சாலைப் பராமரிப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இச்சாலையில் குழிப்பள்ளங்கள் மூடப்பட்டு தற்காலிகமாக பழுதுபார்க்கப்பட்டுள்ளது. மேலும் இச்சாலையில் வெள்ள நிவாரணப் பணியின் கீழ் வேலைகள் எடுத்து செய்யப்பட்டு வருகின்றன. இப்பணி கூடிய விரைவில் முடிக்கப்பட்டுவிடும். மேலும் தண்ணீர் டேங்குகள் மூலம் ஏற்படும் சாலைப் பாதிப்புகளைத் தடுத்து நிறுத்துவதற்கு வருவாய்த் துறையினருக்கு தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

51—

### பயணிகள் விடுதிக்குப் புதிய கட்டிடம்

வினா எண் **5561—திரு கே. தங்கமணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையில் உள்ள பழுதடைந்த நெடுஞ்சாலை துறைக்குச் சொந்தமான பயணிகள் விடுதிக்குப் பதிலாக புதிய விடுதி கட்டப்படுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): மானாமதுரையில் உள்ள பயணிகள் விடுதி 1947-ல் கட்டப்பட்டதாகும். இந்த விடுதியின் மேற்கூரை சீரமைத்துப் பழுது பார்க்க ரூ.80,000/- தேவைப்படும். எனவே நிதி ஆதாரத்தைப் பொறுத்து, பழுதுபார்க்கும் பணி செயல்படுத்தப்படும். புதிய விடுதி கட்டும் சாத்தியக்கூறுகள் அண்மைக் காலத்தில் இல்லை.

52—

### சாலை சீரமைத்தல்

வினா எண் **5650—திரு. எஸ். என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பவானி அத்தானி சாலையில் ஓரிச்சேரி பிரிவில் இருந்து வேலாமரத்தூர் வழியாக நாரபாளையம் வரை உள்ள சாலை சீரமைக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

பவானி அத்தானி சாலை, பவானி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த கீழ்க்காணும் ஊராட்சி ஒன்றிய சாலைகளாகவுள்ளது:

1. ஓரிச்சேரி-வேலாமரத்தூர் சாலை கி.மீ. 0/0-3/2 (ஊராட்சி சாலை)

2. நல்லாநாயக்கனூர்-நாரபாளையம் சாலை கி.மீ 2/0-3/8 (ஊராட்சி ஒன்றிய சாலை)

இச்சாலைகளை வியாபார மையங்களை நோக்கிச் செல்லும் "நபார்டு" திட்டம் 1996-97-ல் ஓரிச்சேரியிலிருந்து வேலாமரத்தூர் செல்லும்

சாலை கி.மீ. 0/0-5/0 என்ற பெயரில் ரூ. 27.50 இலட்சத்திற்கு எடுத்து மேம்பாடு செய்வதற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. விதிமுறைகளுக்கிணங்க மதிப்பீடு தயாரித்து, ஒப்புதல் பெறப்பட்ட பின்னர், ஒப்பந்தப்புள்ளிகள் கோரி இச்சாலையில் மேம்பாட்டுப் பணிகள் விரைவாக தொடங்கப்படும்.

**53—**

### நெடுஞ்சாலையில் இருபக்கமும் புளியமரக் கன்றுகள் நடுதல்

வினா எண் **6266—திரு. ஜி. கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், தருமபுரியிலிருந்து பெண்ணாகரம் வரை செல்லும் நெடுஞ்சாலையில் பெண்ணாகரம்- நாகமரை பெண்ணாகரம்-தாசம்பட்டி, ஏரியூர்-பூச்சூர் பி. அக்ரஹாரத்திலிருந்து வண்ணாத்திப்பட்டி வரையில் நெடுஞ்சாலையில் இருபக்கமும் புளியமரக் கன்றுகள் நடுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள சாலைகள் கீழ்க்காணும் மூன்று அரசுச் சாலைகள் அடங்கி உள்ளன:

1. தர்மபுரி-ஒகேனக்கல் சாலை கி.மீ. 0/0-46/4 (பெரிய மாவட்டச் சாலை)

2. பெண்ணாகரம்- நாகமரை சாலை கி. மீட்டர் 0/0-29/6 (இதர மாவட்டச் சாலை)

3. பெண்ணாகரம்-தாசம்பட்டி சாலை கி.மீட்டர் 0/0-10/0 (இதர மாவட்டச் சாலை)

முதலாவது சாலையின் கி.மீட்டர் 21/0-ல் பி. அக்ரஹாரம் கிராமமும் கி. மீட்டர் 26/0-ல் வண்ணாத்திப்பட்டி கிராமமும் அமைந்துள்ளது. இவ்விரு கிராமங்களுக்கும் இடைப்பட்ட 5 கி.மீட்டர் தொலைவு உள்ள பகுதியின் இருபுறங்களிலும் இடைவெளிவிட்டு மரங்கள்





உள்ளமையால் இப்பகுதியில் 1997-98-ஆம் ஆண்டில் மரக்கன்றுகள் நடப்படும். இரண்டாவது சாலையானது, சாலைக்காக மட்டும் நிலம் பெறப்பட்டு உள்ளதால் மரங்கள் நட இடம் இல்லை. எனவே மரம் நட ஏதுவான சூழ்நிலை இல்லை. ஆனாலும், தகுந்த இடங்களில் மரம் நட வழிவகைகள் செய்யப்படும். மூன்றாவது சாலையில் முதல் இரண்டு கிலோ மீட்டர் (அதாவது 0/0-2/0) வரை நீளத்திற்குட்பட்ட பகுதியில் சாலையோர மரங்கள் நடப் போதுமான இடமில்லை. மீதமுள்ள எட்டுகிலோ மீட்டர் (அதாவது 2/0-10/0 வரை) வனத் துறையினரின் கட்டுப்பாட்டிலுள்ள வனப்பகுதியில் செல்லும் சாலையாதலால் நெடுஞ்சாலைத் துறையினால் மரங்கள் நடுவதற்கு இயலாது.

**54—**

### நியாயவிலைக் கடைகளில் பொருட்கள் கிடைக்க வசதி

வினா எண் **4497—டாக்டர் அ. மணி:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உளுந்தூர்பேட்டை தொகுதி, காட்டுச்செல்லூர் நியாயவிலைக் கடைகளில் எல்லாப் பொருள்களும் ஒரே சமயத்தில் கிடைக்க ஆவன செய்யப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கே. என். நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

1. விழுப்புரம் மாவட்டத்தில் செயல்படும் அனைத்து நியாயவிலைக் கடைகளும் அனைத்து வேலை நாட்களிலும் வேலை நேரத்தில் திறந்து செயல்பட வேண்டும் என்றும், அனைத்து அத்தியாவசியப் பொருட்களும் ஒரே நேரத்தில், புகார்களுக்கு இடமின்றி குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்றும், சுற்றறிக்கையின் மூலமாகவும் மற்றும் விற்பனையாளர்களின் திறனாய்வுக் கூட்டத்தின்போதும் அனைத்து நியாயவிலைக் கடைப் பணியாளர்களுக்கும் கூட்டுறவுச் சங்கங்களின் இணைப் பதிவாளரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட காட்டுச் செல்லூர் நியாயவிலைக் கடை ஜி. அரியூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் செயல்படுகிறது. இதன் தலைவர் மற்றும்

செயலாளர் ஆகியோருக்கு இதுகுறித்து தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், அத்தியாவசியப் பொருட்கள் ஒரே நேரத்தில் வழங்கப்படுவதை ஊர்ஜிதம் செய்து கண்காணிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. மேலும், இக்கடையினைச் சிறப்பாக கண்காணிக்கும்படி உளுந்தூர்பேட்டை கூட்டுறவுச் சார் பதிவாளருக்கு (பொது விநியோகத் திட்டம்) தக்க அறிவுரைகள் அளிக்கப்பட்டுள்ளன.

2. அரசளவில், குடும்ப அட்டைதாரர்களுக்கு எப்போது தேவையோ அப்போது அத்தியாவசியப் பண்டங்களை அவர்கள் வாங்கிக் கொள்ளலாம் என ஆணையிடப்பட்டுள்ளது.

**55—**

## நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்குப் புதிய கட்டிடம்

வினா எண் **6123—திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி, கொக்கூரில் இயங்கிவரும் நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்குப் புதியதாகக் கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விரைவில் கட்டித் தரப்படுமா?

விடை—

**மாண்புமிகு கே. என். நேரு, உணவு பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) நாகை-காயிதே மில்லத் மாவட்டம், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மண்டலம் குத்தாலம் தொகுதியில் கொக்கூர் கிராமத்தில் நேரடி கொள்முதல் நிலையத்திற்குப் புதிதாக கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

(ஆ) எழவில்லை.





**56—**

## புதிய ரேஷன் கார்டுகள் விவரம்

வினா எண் **6393—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இதுவரையில் ரேஷன் கார்டுகளே இல்லாதவர்களுக்கு புதிய ரேஷன் கார்டு வழங்கப்படுமா?

(ஆ) புதிய ரேஷன் கார்டு வேண்டி விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கை எவ்வளவு?

(இ) இதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கே. என். நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) தமிழகத்திலுள்ள அனைத்து மக்களுக்கும் புதிய குடும்ப அட்டை கொடுக்கும் பணிகள் நடந்து வருகின்றன. அனைவருக்கும் குடும்ப அட்டைகள் வழங்கப்படும்.

(ஆ) முதல் கட்டமாக சென்னை மாநகரம் உட்பட ஆறு மாநகராட்சிப் பகுதிகளில் வசிக்கும் ஏற்கெனவே குடும்ப அட்டை வைத்திருப்போரிடமிருந்து, 21,60,706 விண்ணப்பங்களும், குடும்ப அட்டை இல்லாதோரிடமிருந்து 6,78,847 விண்ணப்பங்கள் மற்றும் மனுக்களும் புதிய அட்டை கோரி வரப்பெற்றுள்ளன.

(இ) இவ்வாறு பெறப்பட்ட விண்ணப்பங்கள்/மனுக்கள், கோட்டம், வார்டு, தெரு மற்றும் கதவிலக்கங்கள் வாரியாகப் பிரிக்கப்பட்டு பிற துறைப் பணியாளர்களால், விண்ணப்பங்களில் அளிக்கப்பட்டுள்ள விவரங்கள், வீடுதோறும் சென்று சரிபார்க்கப்படவுள்ளன. சரிபார்க்கும் அலுவலர்களால் சமர்ப்பிக்கப்படும் பரிந்துரைகளின் அடிப்படையில் குடும்பங்களுக்கு குடும்பத்தலைவரின் புகைப்படத்துடன் கூடிய புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்படவுள்ளன.

[1997 ஏப்ரல் 30

57—

**ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்ட நலன்கள் பற்றிய விவரம்**

வினா எண் **6645—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தை (I.C.D.P.) செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) இத்திட்டம் செயல்படுத்தப்பட்ட மாவட்டங்களில் மக்கள் பெற்ற நலன்கள் பற்றிய விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கே. என். நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) தமிழகத்தில் கூட்டுறவுத் துறையில், புதுடில்லியில் உள்ள தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழக நிதியுதவிடன், விவசாய மற்றும் தொடர்புடைய பிரதம கூட்டுறவுகளில் வணிக அளவை பன்முகப்படுத்தி பெருக்க, ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒரு குறிப்பிட்ட சங்கத்தின் வளர்ச்சியை மட்டும் அடிப்படையாகக் கொள்ளாமல் அந்த மாவட்டத்தில் கூட்டுறவு இயக்கத்தின் மொத்த வளர்ச்சிக்கு வழி காண்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். மேலும் கூட்டுறவுகளின் உள்ளமைப்பு வசதிகளை செம்மைப்படுத்துவதும் இதன் நோக்கமாகும்.

காமராஜர், தென்னாற்காடு, கோயம்புத்தூர், தர்மபுரி மற்றும் திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டங்களில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தைச் செயல்படுத்த அரசு இதுவரை ஒப்பளித்துள்ளது. சேலம் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தைச் செயல்படுத்த அரசு ஒப்பளிக்கவில்லை.

(ஆ) ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம், காமராஜர் மாவட்டத்தில், ரூ.861.36 இலட்சங்கள் மொத்தச் செலவில் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விளிம்புத் தொகை உதவி ரூ.226..00 இலட்சங்கள் வழங்கப்பட்டுள்ளது.



1997 ஏப்ரல் 30 ]

மேலும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 102 கிட்டங்கிகள், 128 இட்டு வைப்பு முகப்புகள், 116 பாதுகாப்பு அறைகள், 128 இரும்புப் பெட்டகங்கள், 24 இயந்திர உழுவைகள், 5 பொது விநியோகத் திட்ட கடை விற்பனை முகப்புகள், 5 பார ஊர்திகள், 6 ஊர்திகள், 5 அடை காட்சியறைகள், 3 பணிக் கொட்டில்கள் ஆகியவை அமைக்க நிதயுதவி அளிக்கப்பட்டது.

தென்னாற்காடு மாவட்டத்தில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் ரூ. 1508.207 இலட்சங்கள் திட்ட மதிப்பளவுடன் 1992-93-ஆம் ஆண்டு முதல் 31-3-1997 வரை செயல்பட்டது.

இம்மாவட்டத்திலுள்ள கூட்டுறவு நிறுவனங்களில் 179 இரும்புப் பெட்டகங்கள், 152 பாதுகாப்பு அறைகள், 299 இட்டு வைப்பு முகப்புகள், 59 புதிய கிட்டங்கிகள், 191 கூடுதல் கிட்டங்கிகள், 1685 எண்ணெய் பீப்பாய்கள், 44 இயந்திர உழுவைகள், 20 காப்புப் பெட்டக நிலவறைகள், 40 விசைத் தெளிப்பான்கள், 2 பவர் டில்லர்கள், 1 விற்பனைத் தளம், 1 உலர் தளம் ஆகியவைகளும் நெசவாளர் சங்கங்களுக்கு 2 பாவு மற்றும் கஞ்சி பசையிடும் அலகுகள், 6 சாயப்பட்டறைகள் மற்றும் 2 கிட்டங்கிகளை அமைக்கவும் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது. மீன்துறை கூட்டுறவுகளின் உறுப்பினர்கள் திட்ட முடிவில் 544 கட்டுமரங்கள் மற்றும் 1905 நைலான் வலைகள் ஆகியவற்றை உதவியாகப் பெறுவார்கள். மேலும், ரூ.280.62 இலட்சங்கள் கூட்டுறவுகளுக்கு பங்குத் தொகை உதவி அளிக்கப்பட்டது.

கோயம்புத்தூர் மற்றும் தருமபுரி மாவட்டங்களில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தை முறையே ரூ.1081.07 இலட்சங்கள் மற்றும் ரூ.1160.25 இலட்சங்கள் மதிப்பளவில் செயல்படுத்த 1995 மார்ச் திங்களில் அரசு ஒப்பளித்தது. திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தில் ரூ.816.580 இலட்சங்கள் மதிப்பளவில் செயல்படுத்த 1996 மார்ச் திங்களில் அரசு ஒப்பளித்தது. இத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தற்போது அண்ணா மாவட்டம் மற்றும் எம்.ஜி.ஆர் மாவட்டம் என இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ள முந்தைய ஒருங்கிணைந்த செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டம் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களுக்கு இந்த ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தை விரிவுபடுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினால் கூட்டுறவு நிறுவனங்களில் மூலாதார வசதிகள் அதிகரிப்பதன் மூலம் அந்தப் பகுதியிலுள்ள மக்கள் இத்திட்டத்தினால் பயன் அடைகின்றனர்.

58—

## பகுதிநேர கிராம அங்காடி

வினா எண் **7948—திரு. பி. இராசமாணிக்கம்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பகுதிநேர கிராம அங்காடி தொடங்கும் செயற்குறிப்பு அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விதிமுறைகள் என்ன ?

விடை—

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) : தற்போது தமிழகத்தில் 1,852 பகுதிநேர நியாய விலைக் கடைகள் இயங்கி வருகின்றன. சென்ற ஆண்டு உணவு மானியத்தின் மீதான விவாதத்தின்போது அறிவித்ததற்கிணங்க நியாய விலைக் கடைகள் தொடங்குவதற்கான திருத்தியமைக்கப்பட்ட வழிகாட்டிக் குறிப்புகள் தற்போது நிர்ணயிக்கப்பட்டுள்ளன. இவற்றின் சிறப்பியல்கள் வருமாறு :-

1. தற்போதுள்ள நியாய விலைக் கடைகள் எவையும் மூடப்படக்கூடாது.

2. மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளில் தற்போதுள்ள நியாய விலைக் கடைகள் ஒவ்வொன்றும் 1,000 குடும்ப அட்டைகளுக்கு மிகாமலும், 800 அட்டைகளுக்குக் குறையாமலும் அட்டைகளுக்கு திருத்தி அமைக்கப்படும். இவ்வாறு திருத்தி அமைக்கும்போது தற்போது இயங்கிக் கொண்டிருக்கும் கடைகள் மூடப்படக்கூடாது. மேலும், ஒவ்வொரு வார்டிலும் குறைந்தது ஒரு நியாய விலைக் கடையாவது இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

3. ஊரகப் பகுதிகளில் 800 குடும்ப அட்டைகளுக்குமேல் இணைக்கப்பட்டுள்ள நியாயவிலைக் கடைகள், அவற்றில் 500-க்கும் குறையாமலும், 800-க்கும் மிகாமலும், குடும்ப அட்டைகள் இருக்குமாறு திருத்தி அமைக்கப்படும். இவ்வாறு திருத்தி அமைக்கும்போது தற்போது இயங்கிக் கொண்டிருக்கும் கடைகள் மூடப்படக்கூடாது.



4. மேற்கண்டவாறு கடைகளைத் திருத்தி அமைக்கும்போது எந்த ஒரு குடும்ப அட்டைதாரரும் நியாய விலைக் கடையை அடைய 2 கிலோ மீட்டருக்குமேல் செல்ல வேண்டியிராமல் பார்த்துக் கொள்ளப்பட வேண்டும்.

5. மேலே கண்ட வழிகாட்டிக் குறிப்புகளின்படி, புதிய நியாய விலைக் கடைகள் திறக்க மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாதமும் புதியதாக திறக்கப்பட்ட கடைகள் குறித்த தகவலை அவர்கள் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளருக்குத் தெரிவிக்க வேண்டும்.

6. மேலே கூறப்பட்டுள்ள வழிகாட்டிக் குறிப்புகள் நிறைவு செய்யப்பட முடியாமலும், ஆனால், நியாய விலைக் கடை திறப்பது அவசியம் என்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கருதும் பட்சத்தில் திறக்கவிருக்கும் கடைகளைப் பொறுத்து கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரையோ அல்லது உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளரையோ அணுகி அவர்களின் முன் அனுமதியைப் பெற்ற பின் கடைகளைத் திறக்கலாம்.

7. பழங்குடியினர் வசிக்கும் பகுதிகள் மற்றும் இனக்கலவரங்களால் பாதிக்கப்படக்கூடிய பகுதிகளில் ஏற்படும் சட்டம்-ஒழுங்கு நிலைமையையொட்டி புதிய கடைகள் திறப்பதற்கு அவசியம் ஏற்படுமேயானால் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அங்குள்ள நிலைமைகளைப் பொறுத்த தமக்குள்ள விருப்பதிகாரங்களைப் பயன்படுத்தி புதிய நியாயவிலைக் கடைகளைத் திறக்கலாம்.

59—

## தானியங்கி பால் வழங்கும் நிலையங்கள்

வினா எண் **4427—திரு. மீ. அ. வைத்தியலிங்கம்:** மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதியில் கட்டப்பட்டு இயங்காமல் உள்ள தானியங்கி பால் வழங்கும் நிலையங்கள் எத்தனை ?

(ஆ) அவைகளை உடனடியாக இயங்க வைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(இ) 1996-ஆம் ஆண்டு இத்தொகுதியில் புதியதாகக் கட்டப்படவுள்ள தானியங்கி பால் வழங்கும் நிலையங்கள் எத்தனை?

விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) : இத்தொகுதியில் 12 தானியங்கி பால் வழங்கும் நிலையங்களின் கட்டிடப் பணிகள் முடிக்கப்பட்டு, இந்நிலையங்களுக்குத் தேவையான எலக்ட்ரானிக் மற்றும் இயந்திர சாமான்கள் நிறுவுவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்பணிகள் முடிவுற்றதும், இத்தானியங்கி பால் வழங்கும் நிலையங்கள் இயங்கும்.

(இ) ஒன்று. இத்தானியங்கி பால் வழங்கும் நிலையம் கட்டி முடிக்கப்பட்டு, இயந்திரங்கள் நிறுவுவதற்கு நடவடிக்கைகள் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**60—**

**திருப்பூர் நகர குடிசைப் பகுதிகள் விவரம்**

வினா எண் **5394—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகரத்திற்குள் எத்தனை குடிசைப் பகுதிகள் இருக்கின்றன?

(ஆ) அவற்றில் வாழும் மக்கள் தொகை எவ்வளவு ?

(இ) அவர்களுக்கு வீடு கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?



விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் 1988-ஆம் ஆண்டு நடத்தப்பட்ட கணக்கெடுப்பின்படி, திருப்பூரில் மொத்தம் 158 குடிசைப்பகுதிகள் உள்ளன.

| | | |
|---|---|---|
| திருப்பூர் நகரம் | ... | 88 |
| திருப்பூர் புறநகர் | ... | 70 |
| | | 158 |

(ஆ) திருப்பூரில் குடிசைப் பகுதிகளில் மக்கட்தொகை விவரம் பின்வருமாறு:—

| | | |
|---|---|---|
| திருப்பூர் நகரம் | .. | 32,353 |
| திருப்பூர் புறநகர் | .. | 22,886 |
| | | 55,239 |

(இ) ஆம்.

திருப்பூர் நகரில் உள்ள செல்லாண்டியம்மன் கோவில் பகுதியில் 240 அடுக்குமாடி குடியிருப்புகளை ரூ.217.52 இலட்சம் செலவில் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டப்பணிகளுக்காக ரூ.168.00 இலட்சம் "அட்கோவிடம்" கடனாகப் பெறப்படும். இதற்கான முயற்சிகள் நடந்து வருகின்றன.

திருப்பூரில் உள்ள குடிசைப்பகுதிகளுக்கு மேம்பாட்டுப் பணிகள் அமைத்து குத்தகை மற்றும் விற்பனைப் பத்திரங்கள் வழங்கும்பணி தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 1,096 குடும்பங்களுக்கு மேம்பாட்டுப்பணிகள் ரூ.35.46 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளன. 465 குடும்பங்களுக்கு குத்தகை மற்றும் விற்பனை பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

**61—**

**தொழிற்சாலைகளில் ஏற்பட்ட விபத்துக்கள் விவரம்**

வினா எண் **4594—திரு. வி. கே. லட்சுமணன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1997 ஏப்ரல் 30

1994-95, 1995-96 ஆகிய ஆண்டுகளில் தமிழகத்தில் பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகளில் ஏற்பட்ட விபத்துக்கள், விபத்துக்களில் வழக்குத் திரும்பப் பெறப்பட்டவை ஆகியவற்றின் எண்ணிக்கை எவ்வளவு ?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(1) தொழிற்சாலைகளில் ஏற்படும் மரண விபத்துக்களுக்கு மட்டுமே வழக்குகள் தொடரப்படுகின்றன. மரணம் இல்லாத விபத்துக்களுக்கு வழக்குகள் தொடரப்படுவதில்லை. அவைகள் எச்சரிக்கையில் முடிவு பெறுகின்றன.

(2) 1994-95-ஆம் ஆண்டில் தொழிற்சாலைச் சட்டத்தின் கீழ் ஒன்பதாயிரத்து எண்பத்தி மூன்று (9083) விபத்துக்கள் ஏற்பட்டுள்ளன.

விபரம்

இவற்றில் 1994-95-ஆம் ஆண்டில் வழக்குத் தொடரப்பட்டவை இருபத்தைந்து (25)

வழக்குத் திரும்ப பெறப்பட்டவை ஐந்து (5). எஞ்சியவை மரணம் சாரா விபத்துக்கள் ஆகும்.

(3) 1995-96-ஆம் ஆண்டில் ஆறாயிரத்து இருநூற்று முப்பத்தி ஆறு (6236) விபத்துக்கள் ஏற்பட்டுள்ளன. இவற்றில் வழக்கு தொடரப்பட்டவை ஆறு (6).

திரும்பப் பெறப்பட்ட வழக்கு ஒன்று (1) எஞ்சியவை மரணம் சாரா விபத்துக்கள் ஆகும்.

**62—**

**பிற்படுத்தப்பட்டோர் மாணவ விடுதி கட்டிடம் கட்டுதல்**

வினா எண் **5932—திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1997 ஏப்ரல் 30 ]

தருமபுரி தொகுதிக்குட்பட்ட அதியமான்கோட்டை கோணங்கிநாயக்கன் அள்ளி, பாளையம்புதூர் ஆகிய ஊர்களுக்கு அரசினர் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி கட்டிடம் கட்ட அரசு ஆவன செய்யுமா ?

விடை—

**மாண்புமிகு திரு. எம். ஆர். கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

1. தருமபுரி தொகுதிக்குட்பட்ட அதியமான் கோட்டையில் மிகப்பிற்பட்டோர் நல மாணவர் விடுதி கட்ட அரசு ஆணையிட்டுள்ளது.

2. கோணங்கி நாயக்கன் அள்ளி விடுதி கட்டுதல் தொடர்பாக செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

3. பாளையம்புதூர் என்ற இடத்தில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் துறைகளின் கீழும் மாணவர் விடுதி எதுவும் இயங்கவில்லை. எனவே, மேற்கூறிய இடத்தில் விடுதி கட்டுதல் என்ற வினாவே எழவில்லை.

**63—**

**சத்துணவுக் கூடங்களுக்கு கட்டிடம் கட்டுதல்**

வினா எண் **6911—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி நகராட்சிப்பகுதியில், வாடகைக் கட்டிடத்தில் இயங்கும் சத்துணவுக் கூடங்களுக்கு கட்டிடங்கள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா ?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத்தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி நகராட்சியில் மூன்று சத்துணவு மையங்கள் வாடகைக்கட்டிடத்தில் இயங்கி வருகின்றன. அவற்றில் மைய எண் 9-க்கு புதிய கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது. மற்ற இரண்டு மையங்களுக்கு சொந்தக் கட்டிடம் கட்ட நிதி நிலைக்குட்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

[1997 ஏப்ரல் 30

### பனை ஏறும் தொழிலாளர்களுக்கு மாத ஊதியம் வழங்கல்

**64—**

வினா எண் **6808—திரு. எஸ்.எஸ். மணி நாடார்:** மாண்புமிகு கதர் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பனை ஏறும் தொழிலாளர்களுக்கு மாதா மாதம் ஊதியம் வழங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

பனை ஏறும் தொழிலாளர்களுக்கு மாதா மாதம் ஊதியம் வழங்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

### தமிழ்நாட்டிலுள்ள இறால் பண்ணைகள்

**65—**

வினா எண் **5398—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை உயர் நீதிமன்ற ஆணையின்படி தமிழ்நாட்டில் மூடப்பட்டுள்ள இறால் பண்ணைகள் எத்தனை ?

(ஆ) இறால் பண்ணைகளால் பாதிக்கப்பட்டுள்ள நிலங்களின் மதிப்பு எவ்வளவு ?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன்வளத் துறை அமைச்சர்.**

(அ) மற்றும் (ஆ): சென்னை உயர்நீதிமன்றம் தனது 8-11-96-ம் நாளிட்ட உத்தரவில் தமிழ்நாட்டிலுள்ள இறால் பண்ணைகள் மற்றும் பொரிப்பகங்களை மூடும்படி ஆணை பிறப்பித்தது. இது குறித்து சில தொண்டு நிறுவனம் மற்றும் இறால் பண்ணை உரிமையாளர்கள்





கொடுத்துள்ள நீதிப்பேராணை மனுக்களை பரிசீலித்த பின்னர், சென்னை உயர் நீதிமன்றம் தனது 15-11-96 நாளிட்ட உத்தரவில் இப்பொருள் பற்றி 8-11-96 அன்று பிறப்பித்த ஆணையை தற்காலிகமாக நிறுத்தி வைத்து ஆணை பிறப்பித்துள்ளது. மேற்படி வழக்கு விசாரணை 25-2-97-ல் முடிவுற்றது. இதற்கிடையில், இந்திய உச்ச நீதிமன்றம் 11-12-96-ல் பிறப்பித்துள்ள உத்தரவின்படி கடல் எல்லைப்பகுதிளில் 500 மீட்டர் (H.T.L.) பகுதிக்குள் இயங்கும் இறால் பண்ணைகள் அனைத்தும் 31-3-97 வரை மட்டுமே செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளன. 11-12-96-ல் பிறப்பித்த உத்தரவினை மறுபரிசிலனை செய்யக்கோரி, மத்திய அரசின் வேளாண்துறை அமைச்சகம் புதுதில்லியிலுள்ள இந்திய உச்ச நீதிமன்றத்தில் சீராய்வு மனுதாக்கல் செய்துள்ளது. மேற்படி மனு இந்திய உச்ச நீதிமன்றத்தின் பரிசிலனையில் உள்ளது. இந்த நிலையில், நீதிமன்ற ஆணையின்படி, தமிழ்நாட்டில் மூடப்பட்டுள்ள இறால் பண்ணைகள் ஏதுமில்லை. பெரும்பாலும், உப்புத்தன்மையால் பாதிக்கப்பட்டு, விவசாயத்திற்குப் பயனற்ற நிலங்கள், இறால் பண்ணைகளாகச் செயல்பட்டு வருகின்றபடியால், அவ்வாறு இறால் பண்ணை அமைக்கப்பட்டதனால் பாதிக்கப்பட்ட நிலங்களின் மதிப்பு குறித்து, இந்திய உச்ச நீதிமன்றமும், சென்னை உயர் நீதிமன்றமும் தீர்ப்பளித்த பிறகு, வருவாய்த் துறையினரால் மட்டுமே விவரங்கள் அளிக்க முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றன.

(குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.)

[1997 ஏப்ரல் 30

முற்பகல் 10-35

## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு

### காவிரி நதிநீர்ப் பங்கீடு பிரச்சினை தொடர்பாக கர்நாடக பாசனத்துறை அமைச்சரின் பேச்சு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, சிறப்புக் கவன ஈர்ப்பு. காவிரி பேச்சுவார்த்தை தோல்வி அடைவதற்கு, தமிழகமே காரணம் என்று கர்நாடக பாசனத் துறை அமைச்சர் கூறியிருப்பது குறித்து, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சோ. பாலகிருஷ்ணன், திரு. சி. ஞானசேகரன், திரு. ஆ இராசேந்திரன் என்கிற தீரன், திரு. ஜி. பழனிசாமி, திரு. ப. ரங்கநாதன், டாக்டர் க. கிருஷ்ணசாமி, திரு. எல். சந்தானம், திரு. இ. கணேசன் ஆகியோர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரையில், காவிரி என்பது, நம்முடைய உயிர்நாடியான ஒரு கொள்கையாகும். நம்முடைய முதலமைச்சர் அவர்கள், பலதடவை முயற்சி செய்து, பேசிப் பார்த்துங்கூட, கர்நாடக அரசு, கொஞ்சங்கூட கீழே இறங்கி வரவில்லை என்ற செய்திகள் நமக்கெல்லாம் வந்து கொண்டிருக்கின்றன.

அதோடு, மத்தியில் நம்மால் உருவாக்கப்பட்ட தேவகவுடா அரசு, நமக்கு இந்தக் காவிரிப் பிரச்சினையில், ஓரளவுக்காவது உதவும் என்று நம்பினோம். அந்த நம்பிக்கை, ஓராண்டுக் காலம் ஆகியும் வீணாகிவிட்டது. அதுமட்டுமல்லாமல், இப்போது நம்முடைய அரசு மீதே பழி சொல்கின்ற வகையில், கர்நாடகாவில் இருக்கிற பாசனத் துறை அமைச்சர் திரு. நாகே கவுடா அவர்கள், ஏராளமான குற்றச்சாட்டைச் சொல்லி, தமிழக முதலமைச்சர் அவர்கள் பேச்சு வார்த்தையைக் கெடுத்து விட்டார் என்று சொல்லும் ஒரு முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார் என்ற செய்தியும் பத்திரிகையிலே வந்திருக்கிறது. காவிரிப் பிரச்சினையில், இதுவரை நாம் கடைப்பிடித்த முறை என்ன, இனிமேல் நாம் என்ன செய்யப் போகிறோம் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்த அவையில் அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். இன்று இருக்கின்ற சூழ்நிலையில், தமிழகத்தைப் பொறுத்தவரையில், நம்முடைய விவசாயத் துறைகள் அனைத்தும், தண்ணீர் பற்றாக்குறையின் காரணமாக, எல்லா இடங்களிலும், வறட்சி நிலவுகின்ற ஒரு கொடுமையான சூழ்நிலையில்



காவிரியிலாவது நமக்குச் சேரவேண்டிய நம்முடைய பங்கு, கண்டிப்பாக வந்தாக வேண்டும். அதற்கு நாம் என்ன விலை கொடுத்தாவது, காவிரியில் நமக்குக் கிடைக்க வேண்டிய தண்ணீரைப் பெற வேண்டிய ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று நம்முடைய முதலமைச்சர் அவர்களைக் கேட்டு, புதிதாக ஏற்பட்டிருக்கிற மத்திய அரசில் முழுமையாக நம்முடைய அரசு ஈடுபட்டு, இந்தப் பிரச்சினையில் ஒரு சுமுகமான தீர்வு ஏற்படுவதற்கு, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொண்டு அமைகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவின் மீது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இரண்டு தினங்களுக்கு முன்பாக அளித்த பதிலை, திரித்துக் கூறுகின்ற வகையில், கர்நாடகத்தினுடைய பாசனத் துறை அமைச்சர் அவர்கள், கர்நாடக முதலமைச்சரைக் குறை கூறுவதாகக் கருதி, அவர்களுடைய கண்டனத்தையும், பதிலையும் இன்றைய தினத்திலே தந்திருக்கிறார். இதிலிருந்து, காவிரி நதிநீர்ப் பிரச்சினையான உயிர்நாடிப் பிரச்சினை குறித்து கடந்த காலங்களில் கர்நாடக அரசு, அணுகிய முறைக்கு இது ஒரு எடுத்துக்காட்டாகவும், அவர்களின் முரண்பட்ட நிலையையும் நம்மால் காணமுடிகிறது.

திராவிட முன்னேற்றக் கழகம், 1989-ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்புக்கு வந்தபோது, மத்தியிலே திரு.வி.பி.சிங் அவர்கள் பிரதமராகப் பொறுப்பேற்றதற்குப் பின்னாலே, பல ஆண்டுகளுக்குப் பிறகு, பல தடவை பேச்சுவார்த்தை நடத்தி நடத்தி, எப்படியாவது இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காண வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்துக் கொண்ட முன்முயற்சியின் பேரில், அது நடுவர்மன்றத் தீர்ப்பிற்கு விட வேண்டுமென்று தாக்கல் செய்ததன்பேரில், அன்றைக்குப் பிரதமராக இருந்த திரு. வி. பி. சிங் அவர்கள், அதை ஏற்றுக்கொண்டார். அதற்குப் பிறகும், பல தடவை பேச்சுவார்த்தைகள். அதற்குப் பின்னாலும் தீர்வு காணமுடியாத நேரத்தில் மீண்டும் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பின்னால் தமிழகத்திலே இருக்கிற அனைத்துக் கட்சிகளின் வேண்டுகோளுக்கிணங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஐந்து தடவை அன்றையதினத்திலே பேச்சுவார்த்தை நடத்தினார்கள். அந்தப் பேச்சுவார்த்தையினால்கூட சரியான தீர்வு காண முடியும் என்ற அடிப்படையில்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்

பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார். உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பை, நடுவர் மன்றத்தினுடைய இடைக்காலத் தீர்ப்பை மீறியதோடு, கர்நாடக அரசு இந்தியாவினுடைய ஒருமைப்பாடு, இந்தியாவினுடைய அரசியல் சட்டத்தை மீறுகிற வகையில், கர்நாடகம் ஒரு தனி மாநிலமாக இருந்து செயல்படக்கூடிய விதத்தில், தமிழகத்தினுடைய, இந்தியாவினுடைய ஒருமைப்பாட்டைச் சீர்குலைக்கக்கூடிய விதத்தில் அந்த அரசு செயல்பட்டது எல்லாம் கடந்த காலத்தில் இருந்திருக்கிற நிலை.

*முற்பகல் 10-40*

அதேபோல மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே பல்வேறு உறுப்பினர்கள் எழுப்பிய வினாக்களுக்கு, விரைந்து தீர்வு காணுவதற்கான முயற்சியிலே ஈடுபட்டிருப்பதாக மிகுந்த பொறுப்புணர்வோடு பதிலளித்திருந்தார்கள். ஆனால் கர்நாடக மாநிலத்தில் மாண்புமிகு பாசனத் துறை அமைச்சரான திரு. நாகே கவுடா அவர்கள் அந்த மாநிலத்திலே தான் நற்பெயர் எடுக்க வேண்டுமென்பதற்காக நம் முதலமைச்சருடைய வார்த்தைகளைத் திரித்துக் கூறுகிற விதத்தில் இப்படிப்பட்ட செய்திகளை வெளியிட்டிருக்கிறார்கள். கர்நாடகத்தில் இருக்கும் பத்திரிகையாளர்கள் கொடுத்த தவறான செய்தியின் காரணமாகத்தான் அவர் இப்படிப்பட்ட செய்தியைத் தந்திருப்பார் என்று நான் கருதுகிறேன். அப்படி கர்நாடகத்திலிருந்து பத்திரிகையாளர்கள் யாராவது இங்கே வந்திருப்பார்களேயானால், இப்படிப்பட்ட ஒரு நதிநீர்ப் பிரச்சினையில், நம்முடைய தேசத்தின், நம்முடைய தமிழகத்தினுடைய உயிர்நாடிப் பிரச்சினையில் அவர்கள் பொறுப்புணர்வோடு நடந்து கொள்ள வேண்டும் என்பதனை நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள், அவர்களுக்கு உணர்த்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் இன்றைக்கு வந்திருக்கக்கூடிய மத்திய அரசை அணுகி, காவிரி நதிநீர்ப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காண்பதற்கான முயற்சியை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி நதிநீர்ப் பிரச்சினையிலே இந்தப் பேச்சுவார்த்தை தோல்வியடைந்ததற்கு நம்முடைய தமிழக அரசின்



மீது குற்றஞ்சாட்டி கர்நாடக அரசானது வெளியிட்டிருக்கிற இந்தக் கருத்தினைப் பாட்டாளி மக்கள் கட்சியினுடைய சார்பிலே நான் மிக வன்மையாகக் கண்டிப்பதோடு, ஒருமைப்பாட்டு நிலைப்பாட்டின் கீழே இயங்கிக் கொண்டிருக்கிற ஒரு மாநில அரசானது இப்படி ஒரு பொதுவான பிரச்சினையிலே தான் கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகளைக் கொஞ்சம்கூட பொறுப்பாக எடுத்துக் கொண்டு நிறைவேற்றாமல், அதாவது இந்த நடுவர் மன்ற இடைக்கால தீர்ப்பு வழங்கப்பட்டதைக் கொஞ்சம்கூட பொருட்படுத்தாமல், இன்றைக்கு அடாவடித்தனமாக அதனை நிறைவேற்ற மறுத்துவருகிற சூழ்நிலையிலே, பெருந்தன்மையோடு நம்முடைய தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் நம்மாலே பிரச்சினை வரக்கூடாது, நம் பக்கம் நியாயம் இருக்கிறது என்று வலிமையை உணர்ந்த காரணத்தினாலே அவர்கள் பேச்சுவார்த்தைக்குச் சென்றதற்குப் பின்னாலும்கூட, இப்படி ஒரு அபாண்டமான பழியை நம்முடைய தமிழக அரசின்மீதும், நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் மீதும், கர்நாடக அரசு சுமத்தி இருப்பதாகவே நான் வேதனையோடு இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

இன்றைக்கு 7 நாடுகளின் வழியாகப் பாய்கிற நைல் நதிநீர்ப் பிரச்சினைகூட தீர்க்கப்பட்டிருக்கிறது. அண்மையிலேகூட கங்கை நதிநீர்ப் பிரச்சினையிலே இந்திய அரசாங்கமானது வங்க தேசத்திற்கு அந்த நதிநீரை வழங்குகிறபோது மேற்கு வங்காள மாநிலமானது அதை ஒப்புக்கொள்ளவில்லை. ஆனால் அன்றைக்குப் பிரதமராக இருந்த தேவ கவுடா அவர்களும், வெளியுறவுத் துறை அமைச்சராக இருந்தவரும், இன்றைய பிரதமராக இருப்பவருமாகிய இவர்கள் எல்லாம் வற்புறுத்தி நம்முடைய இந்தியாவில் இருக்கக்கூடிய மேற்கு வங்காள மாநிலத்தைச் சம்மதிக்க வைத்து அந்த ஒப்பந்தத்தைப் போட வைத்தார்கள்.

ஒரு அண்டை அயல் நாடான வங்காள தேசத்திற்கே இவ்வளவு அக்கறை எடுத்துக் கொண்டு ஆடுகிற மத்திய அரசு இந்தத் தமிழகத்தினுடைய காவிரி நதிநீர்ப் பிரச்சினையில், அந்த இடைக்காலத் தீர்ப்பை அமல்படுத்த வேண்டும் என்று கர்நாடக அரசை வற்புறுத்த ஏன் தயங்குகிறது என்பது தான் எங்களுக்கு விளங்கவில்லை. அந்த இடைக்காலத் தீர்ப்பை அமலாக்க வேண்டும் என்று சொன்னால் - ஏற்கெனவே ஒருமுறை வட இந்திய நதிகளிலே ஒரு பிரச்சினை வந்தபோது, அந்த நதிநீர்ப் பிரச்சினையினுடைய ஒப்பந்தத்தை அரசிதழிலே-கெசட் நோட்டிபிகேஷனிலே வெளியிட்டதற்குப்

பின்னாலேதான் அதனை அமலாக்குகிற ஒரு 'அக்கவுண்ட்டபிளிட்டி' அதாவது பொறுப்பாக்குகிற தன்மை உருவாயிற்று. ஆகவேதான் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை நாங்கள் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்ள விரும்புவது என்ன என்று சொன்னால், இந்தக் காவிரி நதிநீர்ப் பிரச்சினை தொடர்பாக வெளியிடப்பட்டிருக்கிற அந்த நடுவர்மன்ற இடைக்கால தீர்ப்பை அதாவது 205 டி.எம்.சி. தண்ணீரை தமிழகத்திற்கு வழங்க வேண்டும் என்ற அந்தத் தீர்ப்பை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் மத்திய அரசாங்கத்திடம் உள்ள தன்னுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி, அந்த அரசிதழிலே கெசட் நோட்டிபிகேஷனிலே வெளியிடுவதற்கு ஆவன செய்திடல் வேண்டும் என்று நான் வற்புறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அப்போதுதான் நமக்கு இந்த இடைக்காலத் தீர்ப்பாவது சரியாகக் கிடைக்கும். இல்லையென்று சொன்னால், ஏதோ அடாவடிச் செயலைச் செய்கிற அவர்கள், ஆவேசமான சில நடவடிக்கைகளில் ஈடுபடுவதுபோல இந்த இடைக்கால தீர்ப்பை எதிர்த்தால்தான் முழுத் தீர்ப்பு வருகிறபோது தமிழகத்திற்கு பாதகமாகவும், கர்நாடகத்திற்கு சாதகமாகவும் கிடைக்கும் என்கிற நோக்கத்தோடு, உள் நோக்கத்தோடு-இன்னும் சொல்லப்போனால் கெட்ட உள்நோக்கம் என்றுகூட நான் குறிப்பிட விரும்புகிறேன்-செயல்படுகின்ற கர்நாடக அரசை வற்புறுத்துகின்ற வகையிலே மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் இந்தக் காவிரி நதிநீர்ப் பிரச்சினையிலே உறுதியாக நின்று தமிழகத்தினுடைய பங்கை மீட்டுத் தருவார்கள் என்ற நம்பிக்கையைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

*முற்பகல் 10-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, திரு. எல். சந்தானம் (குறுக்கீடு) உறுப்பினர்கள் உட்கார்ந்து கொண்டு கருத்துப் பரிமாற்றம் செய்யக்கூடாது.

**திரு. எல். சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குக் கர்நாடக மாநிலத்தின் நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்கள் காவிரிப் பிரச்சினையிலே தமிழகம் அக்கறை காட்டவில்லை என்று கூறியிருப்பதை நான் எனது இயக்கத்தின் சார்பாக கண்டிப்பதோடு, தமிழகத்தின் முதல்வராக இருக்கின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கடந்த 1989-லே ஆட்சிப் பொறுப்பிலே



இருந்த நேரத்திலேதான் அன்றைக்கு இருந்த இந்தியப் பிரதமர் திரு. வி.பி.சிங் அவர்களோடு தொடர்பு கொண்டு, இந்த நடுவர் மன்றத் தீர்ப்பாகிய 205 டி.எம்.சி. தண்ணீரை பெற்றுத் தந்தவர்கள் என்பதை தமிழக மக்கள் நன்கே உணர்வார்கள். அதற்குப் பின்னால், நீதிமன்ற ஆணை என்பது அனைவராலும் மதிக்கப்பட வேண்டிய ஒன்று என்கின்ற நிலையைக்கூட மறுத்து, கர்நாடக அரசு கடந்த காலங்களிலே அந்த நீதிமன்ற ஆணையின்படி ஒரு தடவைகூட 205 டி.எம்.சி. தண்ணீரை வழங்கவில்லை என்பது தமிழகம் அறிந்த உண்மை. கடந்த காலத்தில் நமது தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களும், கர்நாடக மாநிலத்தின் முதல்வர் திரு. பட்டேல் அவர்களும் இங்கே சென்னையிலே பேச்சுவார்த்தை நடத்தி, சுமூகமான ஒரு தீர்வைக் கண்டோம் என்று குறிப்பிட்டிருந்த நிலையிலே, இங்கு அந்தப் பேச்சுவார்த்தை முடிவுற்று அந்த முதல்வர் திரும்பிச் சென்ற உடனே, அங்கே நடந்த சட்டமன்ற கூட்டத்திலே சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் தமிழகத்திற்கு நீங்கள் எப்படி இந்தத் தண்ணீரைக் கொடுப்பதற்கு ஒத்துக்கொண்டு வரலாம் என்கின்ற வினாவை எழுப்புகின்ற நேரத்திலே அன்றைக்கு அந்த முதலமைச்சர் என்ன பதில் அளித்திருக்கிறார் என்பதெல்லாம் பத்திரிகைகளிலே செய்தியாக வந்திருக்கிறது. "நான் உண்மையாக இங்கே இருக்கின்ற தண்ணீரை வழங்கவில்லை, ஏற்கனவே அதிகமாக மழை பெய்ததின் காரணமாக, கூடுதலாக தண்ணீர் வரத்து வரப்பெற்று அணைகள் நிரம்பி வழிகின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டதனால்தான் அந்த அதிகப்படியான Excess water, over flow water என்று சொல்லுகின்ற அளவுக்கு வெளிப்படுகின்ற தண்ணீரைத்தான் நான் கொடுப்பதற்கு ஒத்துக்கொண்டு வந்திருக்கிறேன்" என்பதைச் சட்டமன்றத்திலே அந்த முதலமைச்சர் சொல்லியிருக்கிறார். அப்படி இருக்கின்ற நிலையிலே கர்நாடகத்தைப் பொறுத்த அளவிலே நமக்கு மனப்பூர்வமாகத் தண்ணீர் வழங்கவில்லை, அந்த நீதிமன்றம் அளித்த ஆணையின்படி 205 டி.எம்.சி. தண்ணீரைத் தமிழகத்திற்கு இதுவரை வழங்கவில்லை என்பதுதான் உண்மை.

ஆனால், நமது முதலமைச்சர் அவர்களைப் பொறுத்த அளவிலே, தமிழக மக்களுக்கு காவிரி நீர்ப் பிரச்சினை உயிர்நாடிப் பிரச்சினை என்பதை ஆரம்ப காலத்திலிருந்தே உணர்ந்து இருக்கிறவர் என்கின்ற காரணத்தால், இதுகுறித்து மத்திய அரசோடு வலுவாக வாதிட்டு— இன்றைக்கு நமது தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிடும்போதுகூட சொன்னார்கள். முதல்வர் அவர்கள் வாதிட்டு இந்தத் தண்ணீரைப் பெறவேண்டுமென்று

சொன்னார்கள். இன்றைக்கு வந்திருக்கின்ற செய்திகள் மூலமாக தமிழ்
மாநில காங்கிரசும் மத்திய அரசிலே பங்குபெறுகின்ற ஒரு இயக்கமாக
இருக்கின்ற காரணத்தால்-இருவருமாகச் சேர்ந்து வருகின்ற காலத்திலே
இந்தக் காவிரி நதிநீர்ப் பிரச்சினையை நல்ல விதத்திலே அணுகி,
தமிழக மக்களுக்கு ஒரு விடிவெள்ளியாக விளங்குகின்ற தமிழக
முதல்வர்தான் ஒரு விடிவை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு கர்நாடக அரசு சொல்லியிருக்கின்ற
கூற்றானது தமிழக மக்களுக்கு மாறுபட்ட கருத்தாக இருக்கிறது.
ஆகவே, தமிழக முதல்லர் அவர்கள் இதிலே மிகுந்த அக்கறையோடு
செயல்படுவார்கள், நிச்சயமாக இதிலே வெற்றி காண்பார்கள் என்று
கூறி அமைகிறேன்.

*முற்பகல் 10-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இன்றைய செய்தித் தாட்களில் காவிரிப் பேச்சு வார்த்தை
தோல்வியடைய தமிழகமே காரணம் என கர்நாடக மாநில
அரசினுடைய பாசனத் துறை அமைச்சர் அவர்கள்
குற்றஞ்சாட்டியுள்ளார்கள். அது மட்டுமல்ல, அவர் தமிழக அரசு
மீதும், தமிழ்நாட்டினுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்
மீதும் சேற்றை வாரி வீசியிருக்கிறார்கள். தமிழகத்தின் தரப்பில் ஒவ்வாத
நிலை கடைப்பிடிக்கப்பட்டதே பேச்சுவார்த்தை தோல்விக்குக் காரணம்
என்கின்ற ஒரு காரணத்தையும் சொல்லியிருக்கிறார்கள். அது மட்டும்
அல்ல, மூத்த தலைவரும், தமிழக முதல்வருமான டாக்டர் கலைஞர்
அவர்கள் கர்நாடக முதல்வரைக் குறை கூறியதாகவும் அவர்கள்
சொல்லியிருக்கிறார்கள். ஆனால் தமிழக முதலமைச்சர் அவர்கள்
இரண்டு நாட்களுக்கு முன்பு பதில் அளித்தபோது கர்நாடக
முதலமைச்சரைக் குற்றஞ்சாட்டியதாக எனக்குத் தெரியவில்லை.
இப்படிப்பட்ட நிகழ்ச்சி இங்கு நடக்கவில்லை. ஆனால் இதிலிருந்து
என்ன தெரிகிறது என்றால் கர்நாடகத்தினுடைய உள்நோக்கம் எல்லாம்
சட்டத்தை மீறுவதும், பேச்சு வார்த்தை, பேச்சு வார்த்தை என்று
காவிரிப் பிரச்சினையைத் தள்ளிக் கொண்டு போவதும்தான் என்று
தெரிகிறது. இது வேதனைக்குரிய விஷயம். மத்திய அமைச்சரவையில்
தி.மு.க. மட்டுமல்ல, த.மா.கா.வைச் சேர்ந்தவர்கள் நான்கு பேரையும்
சேர்த்து மொத்தம் எட்டு அமைச்சர்கள் இருக்கிறார்கள், எனவே,
தி.மு.க. மட்டும் பொறுப்பல்ல, த.மா.காக்கும் இதிலே தலையான



பங்கு இருக்கிறது என்றே நான் கருதுகிறேன். த.மா.கா. இப்போது
வேண்டுமானால் மாநிலக் கட்சியாக இருக்கலாம், ஆனால், இதற்கு
முன்பு மத்திய அமைச்சரவையில் இருந்து, அகில இந்திய காங்கிரஸ்
கட்சியாகவும் இருந்தது. எனவே, ஒருமைப்பாட்டினை வலியுறுத்தக்கூடிய
வகையிலே ஒரு முயற்சியினை எடுத்து இந்த விஷயத்தில் த.மா.கா.வும்
இணைந்து ஒரு தீர்க்கமான முடிவினை எடுப்பதற்கு முயற்சிகளை
எடுக்க வேண்டுமென்று நான் வலியுறுத்திக் கூறக்
கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால், தஞ்சையிலே வாடக்கூடிய
ஏழை எளிய விவசாயத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அங்கே
நிலச்சுவான்தாரர்களும், பண்ணையார்களும் வேண்டுமானால் இடம்
பெயர்ந்து வேறு தொழிலுக்குப் போய் விடலாம். ஆனால், ஏழை
எளிய மக்களால் அப்படிப் போய்விட முடியாது. எனவே,
இயற்கையாகக் கிடைக்கக்கூடிய நீரை எப்படி பரஸ்பரமாகப் பகிர்ந்து
கொள்வது என்பது தான் பிரச்சினையே தவிர ஒரு மாநிலத்திற்கு
எதிராக ஒரு மாநிலத்தை நிறுத்துவதோ அல்லது ஒரு கட்சிக்கு
எதிராக ஒரு கட்சியை நிறுத்துவதோ கூடாது....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** கடந்த அ.இ.அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில்,
அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள், இங்கே காவிரிப் பிரச்சினை
தோல்விக்குக் காரணம் தி.மு.க. தான் என்று
குற்றஞ்சாட்டியிருக்கிறார்கள். என்னைப் பொருத்தவரையில் நான்
வேண்டிக்கொள்வது கட்சிக்கு அப்பாற்பட்டு, மொழிக்கு அப்பாற்பட்டு,
தமிழகத்தினுடைய நலனைக் கருத வேண்டும். ஏற்கெனவே,
நீதிமன்றத்தின் மூலமாக அது முற்றுப்பெறவில்லை, நடுவர் மன்றத்தின்
மூலமாகத் தீரவில்லை. பேச்சுவார்த்தையிலே தீரவில்லை, எனவே,
ஏழை விவசாயிகளுடைய பிரதிநிதிகளைக் கொண்ட 100 பேர்
தமிழகத்திலிருந்தும், கர்நாடகாவிலிருந்தும் ஒரு குழுவைப் போட்டு
பேச்சுவார்த்தைகளை தொடங்குவது கூட, நன்றாக இருக்கும். மக்கள்
மத்தியிலேயிருந்து அப்படிப்பட்ட ஒரு முயற்சி நல்ல விளைவை
உண்டாக்கும் என்று நான் கருதுகிறேன். அதேபோல தமிழக
முதலமைச்சர் அவர்கள், இதிலே தங்களுடைய சாதுர்யத்தைக்
காட்டக்கூடிய வகையில், இதிலே நளினமாகச் செல்லாமல் 'சாது
மிரண்டால், காடு கொள்ளாது' என்ற வகையிலே ஒரு கடுமையான
நடவடிக்கையினை எடுக்க வேண்டும். காவிரி நீர் தமிழகத்திற்குக்
கிடைக்க ஒரு கடுமையான நடவடிக்கையில் இறங்க வேண்டுமென்று
கேட்டு விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட நெடுங்காலமாக தமிழகத்தினுடைய நீர்வள வாய்ப்புக் கூறு கெடுகின்ற அளவிற்கு கர்நாடக மாநிலத்திலே தொடர்ந்து கட்டப்பட்டு வருகின்ற அணைகள் காரணமாக உருவாகியுள்ள பிரச்சினை குறித்து 1968-ஆம் ஆண்டு முதல், அறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த காலந்தொட்டு பேச்சுவார்த்தைகள் பலமுறை, சற்றொப்ப 27 தடவைகளுக்கு மேல் நடைபெற்று அதிலே வெற்றி காணமுடியாத காரணத்தால், மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் இங்கே எடுத்துக்காட்டியதைப் போல, பிரதமராக திரு. வி. பி. சிங் அவர்கள் பொறுப்பேற்றிருந்த காலகட்டத்தில் நடுவர் மன்றம் ஒன்றைத் தவிர, வேறு வழியில்லை என்ற தீர்மானத்தை இந்த அவையிலே நிறைவேற்றி அனுப்பி வைத்ததின் அடிப்படையில் தீர்ப்பும் வழங்கப்பட்டு, அந்தத் தீர்ப்பைத் தொடர்ந்து, திரு. வி. பி. சிங் அவர்கள் உடனடியாக நடுவர் மன்றத்தையும் அமைத்து, அந்த மன்றம் வெளியிட்ட இடைக்கால ஆணையை நிறைவேற்ற கர்நாடக மாநில அரசு முன்வராமல், தொடர்ந்து தமிழகம் வலியுறுத்தியதன் காரணமாக மத்திய அரசு அந்த இடைக்காலத் தீர்ப்பை 'கெசட்டில்' வெளியிட வேண்டும் என்று சொல்லி, கெசட்டிலும் வெளியிட்ட பிறகும்கூட கர்நாடகத்தினுடைய பிடிவாதம் இன்னும் நீங்கியபாடில்லை.

முற்பகல் 10-55

இந்தக் காலகட்டத்திலேதான் உச்சநீதிமன்றத்தை இந்த அரசு நாடி தன்னுடைய வழக்கை வலியுறுத்தியபோது, உச்சநீதிமன்றம் ஒரு தாக்கீது தந்தது. அதாவது 'கருத்துத் தாக்கீது'. அந்த அடிப்படையிலே மீண்டும் ஒருமுறை தமிழகத்தினுடைய உடனடி தண்ணீர்த் தேவை குறித்து தமிழக அரசும், கர்நாடக அரசும் பேசுவது நல்லது, எனவே பேசுங்கள் என்று உச்சநீதிமன்றம் கூறியது. அதற்கேற்பத்தான், கர்நாடக மாநில அரசோடு, தமிழக அரசு பேச்சுவார்த்தை நடத்தியது. நான் அன்றைக்கு இந்த அவையிலே குறிப்பிட்டதைப்போல, பேச்சுவார்த்தைக்கு மீண்டும் செல்லலாமா என்று தமிழகத்திலே ஒரு குரல் எழுந்தபோது, நான் அளித்த விளக்கம், 'நடுவர் மன்றத்தினுடைய வரையறைக்கு உட்பட்டுத்தான் பேச்சுவார்த்தை நடைபெறும், அதிலிருந்து இம்மியும்



விலகாமல் பேச்சுவார்த்தை நடைபெறும்' என்று நான் சொன்னேன். அந்த வெளிப்படையான அறிவிப்புக்குப் பிறகு தமிழக அரசின் சார்பிலும், கர்நாடக மாநில அரசின் சார்பிலும் ஐந்து முறை பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. கர்நாடகத்திற்கு நாங்கள் சென்று அங்கே பேச்சுவார்த்தை நடத்தினோம். அவர்களும் தமிழகத்திற்கு வந்து பேச்சுவார்த்தை எல்லாம் நடைபெற்றது. பிறகு டெல்லி மாநகரத்திலே பேச்சுவார்த்தை நடைபெற்றது. இப்படி ஐந்து முறை நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் வெற்றி காணவில்லை. அதைக் குறிப்பிட்டு இங்கே இந்த அவையிலே நான் நிதி ஒதுக்கீடு சட்டமுன்வடிவை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிற அந்த உரையில் சொன்னேன். இறுதியாக அவர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்ற மேகதாது அணைக்கட்டுத் திட்டத்தை வலியுறுத்திய காரணத்தால் பேச்சுவார்த்தையை மீண்டும் தொடர முடியவில்லை. அத்துடன் முறிந்துவிட்டது என்று குறிப்பிட்டேன்.

இங்கே நம்முடைய உறுப்பினர்கள் எல்லாம் எடுத்துக்காட்டியதைப் போலவும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எடுத்துக்காட்டியதைப் போலவும், கர்நாடக முதலமைச்சரைப் பற்றி எந்த ஒரு வார்த்தையும் இங்கே சொல்லவில்லை. அவர் இந்த அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு, இந்த காவிரிப் பிரச்சினையிலே தன்னுடைய மாநிலத்திற்காக வாதாடுகிறார் என்ற அந்த உணர்வுக்கு அப்பாற்பட்டு—நானும், கர்நாடக மாநில முதலமைச்சர் திரு. பட்டேல் அவர்களும் நெருங்கிய நண்பர்கள்தான். நண்பர்கள் என்பதற்காக அவரும் விட்டுத்தரத் தயாராக இல்லை. நானும், தமிழகத்தினுடைய உரிமையை விட்டுத்தரத் தயாராக இல்லை—அந்த அளவிலே ஏற்பட்டுவிட்ட முடிவைத்தான் அன்றைக்கு நான் இங்கே எடுத்துக்காட்டினேனேயல்லாமல், கர்நாடக முதலமைச்சரைப் பற்றி ஒரு வார்த்தைகூட நான் இங்கே பேசவில்லை. ஆனால், எந்த பத்திரிகை அப்படிச் செய்தியை வெளியிட்டது என்று எனக்குத் தெரியாது. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. பழனிசாமி அவர்கள் குறிப்பிட்டதைப்போல, ஏதாவது ஒரு பத்திரிகை அப்படி ஒரு செய்தியை வெளியிட்டிருக்கலாம் அல்லது வெளியிலேகூட கர்நாடக மாநிலத்தினுடைய நீர்ப்பாசனத் துறை அமைச்சர் திரு. நாகே கவுடா அவர்கள், நான் கர்நாடக முதலமைச்சரைத் தாக்கிப் பேசியதாகக் கற்பனை செய்துகொண்டு, அறிக்கை வெளியிட்டிருக்கலாம் அல்லது மறுமொழி கூறியிருக்கலாம். நான் இப்போதும் சொல்லுகிறேன், கர்நாடக முதலமைச்சரைப் பற்றிய பேச்சே அன்றைக்கு வரவில்லை,

பேசவும் இல்லை. எழுந்திருக்கிற தாவா, கர்நாடக முதலமைச்சருக்கும், தமிழ்நாட்டினுடைய முதலமைச்சருக்கும் இடையே உள்ள தாவா அல்ல. எழுந்துள்ள பிரச்சினைகளுக்கு அவர் பிரதிநிதித்துவமாக வந்து வாதாடுகிறார். தமிழ்நாட்டினுடைய பிரச்சினைகளுக்காக; முதலமைச்சர் என்ற முறையிலே நான் வாதாடுகிறேன். தனிப்பட்ட முறையிலே, இருவருக்கும் எந்த தகராறும் கிடையாது. ஆரம்பத்திலேயிருந்து, என்னுடைய எண்ணமெல்லாம், இந்தப் பிரச்சினையை வைத்து, கர்நாடக மாநிலத்திலே உள்ள தமிழர்களுக்கும், தமிழகத்திலே உள்ள கன்னட மொழி பேசுகின்றவர்களுக்கும் இடையிலே குழப்பங்கள் வந்துவிடக்கூடாது. ஏனென்றால் ஒரு முறை குழப்பம் ஏற்பட்டு, கர்நாடகத்திலே வாழுகின்ற தமிழ்ப்பெருங்குடி மக்கள் பல பேர் பெரும் அவதிக்கு உள்ளானார்கள் என்பதை நாம் மறந்துவிடுவதற்கில்லை. எனவேதான், இந்தச் சிக்கலைத் தீர்ப்பதிலே நிதானமாக ஒவ்வொரு அடியாக எடுத்து வைக்க வேண்டும் என்று நான் கருதுகிறேன். அவ்வாறேதான் நடந்து கொண்டேன். இருந்தாலும்கூட அவர்கள் கடைசிப் பேச்சு வார்த்தையின்போது, முத்தாய்ப்பாக மேகதாதுவைப் பற்றிச் பேசினார்கள். அதற்கு முன்பு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. துரை முருகன் அவர்கள் அந்த மாநிலத்தினுடைய நீர்ப்பாசனத் துறை அமைச்சர் திரு. நாகே கவுடா அவர்களோடும், மற்ற அதிகாரிகளோடும் பேசும்போது, அதைப்பற்றிச் சொன்னார்கள். பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் அதை மறுத்துவிட்டார்கள். என் முன்னிலையிலேயும் அந்தப் பேச்சு மீண்டும் வந்தபோதும், நானும் மறுத்துவிட்டேன். மறுத்தது மாத்திரம் அல்ல, அன்றைக்குப் பிரதமராக இருந்த திரு. தேவ கவுடா அவர்களுடைய இல்லத்தில் இந்தப் பேச்சு வார்த்தையைப் பற்றி ஒரு விமர்சனம் வந்தபோது நான் அவர்களிடத்திலே விளக்கமாகச் சொன்னேன். அப்போது நம்முடைய அரசின் தலைமைச் செயலாளரும் என்னுடனே இருந்தார். நானும் அவரும் விளக்கங்களைத் தந்தோம். இந்த மேகதாதுத் திட்டம் நிறைவேற்றப்படுமேயானால், இப்போது நடுவர் மன்றம் அளித்திருக்கிறதே *205* டி.எம்.சி. தண்ணீர் அதற்குப் பதிலாக *70* டி.எம்.சி. தண்ணீர்தான் கிடைக்கும்.

அவர்கள் என்னதான் முயன்றாலும், அதற்குமேல் தண்ணீர் விட முடியாது. எனவே மேகதாதுத் திட்டம் தீமையானது. மேட்டூருக்கு மேலே அவர்களுடைய பகுதியிலே, கர்நாடகப் பகுதியிலே அமைக்கப்படுகிற திட்டத்தால் எங்களுக்குப் பாதகம் ஏற்படும். ஆகவே ஏற்க முடியாது என்று திட்டவட்டமாகச் சொன்னேன். இப்போது



மாத்திரம் அல்ல, நாம் எப்போதுமே எதிர்க்கவில்லை என்று கர்நாடக அமைச்சர் சொல்லியிருக்கிறார். தொடர்ந்து எதிர்த்து வருகிறோம்.

*முற்பகல் 11-00*

கடந்த காலத்திலே அருமை நண்பர் எம்.ஜி.ஆர். முதலமைச்சராக இருந்தபோதும், மேகதாதுத் திட்டத்தை, தமிழக அரசு எதிர்த்து இருக்கிறது. அதையே பின்பற்றி நானும் அதை எதிர்த்துக் கடிதங்கள் எழுதியிருக்கிறேன். பிரதமர் அவர்களிடத்திலே நேரடியாகவும் எதிர்ப்பை காட்டினேன். அப்போது அவர் சொன்னார், மழை பெய்து வெள்ளம் பெருகுகிற நேரத்திலே வருகிற தண்ணீரைத் தேக்கி வைத்தால் தானே மறுபடியும் விடமுடியும் என்ற ஒரு அருமையான தத்துவத்தை அவர் என்னிடத்திலே சொன்னார். நான் சொன்னேன், அப்படி தேக்கி வைக்கலாம். தேக்கி வைக்கின்ற இடத்தை நீங்கள் தேர்ந்தெடுத்து இருக்கிறீர்களே அதுதான் தவறான இடம். எனவே அதற்கு பதிலாக ஒகேனக்கல் தமிழ்நாட்டுப் பகுதியிலே இருக்கிறது. அங்கே தேக்கி வையுங்கள்; மின்சாரமும் அங்கே உற்பத்தி செய்து கொள்ளலாம். அந்த மின்சாரத்திலே வேண்டுமானால் கர்நாடகத்திற்கு ஓரளவு பங்குகூட தருகிறோம். எனவே, ஒகேனக்கல் திட்டம் அல்லது ராசிமால்-திட்டம்—இந்தத் திட்டங்களை நிறைவேற்றுங்கள், நிச்சயமாக மேகதாதுவுக்கு நாங்கள் ஒப்புதல் அளிக்கவே முடியாது என்று கூறிவிட்டேன். அவரும் ஓரளவு ஒகேனக்கல் அல்லது ராசிமால் திட்டத்தைப் பற்றிப் பரிசீலிக்கிற அளவிலே தான் எங்களிடத்திலே அன்றைக்கு ஒப்புக்கொண்டுப் பேசினார். வேடிக்கை என்னவென்றால் அப்படி பிரதமர் சொன்ன மறுநாள்—அதாவது மறுநாள் மீண்டும் கர்நாடக மாநில அரசோடு நாங்கள் பேசும்போது, முதலமைச்சரும் மற்றவர்களும், அதிகாரிகளும் இருந்த அந்த நேரத்தில் நம்முடைய அதிகாரிகளும் நாங்களும் கலந்துகொண்ட நேரத்தில் மீண்டும், மேகதாதுத் திட்டத்தை வற்புறுத்தினார்கள். முடியாது என்று சொல்லிவிட்டோம். எல்லாம் முடிந்தது. ஆனால் கடைசியிலே தமிழ்நாடு அரசுதான் விலகிப் போய்விட்டது என்று சொல்வது சரியல்ல. படிப்படியாக பல பிரச்சினைகள் எங்கே தண்ணீரின் அளவை எடுப்பது, எந்த இடத்திலே அளவு செய்வது, அது மேட்டூரிலா அல்லது இன்னோரு பகுதியிலா, பட்லுகொண்டா என்கிற இடத்திலா அல்லது அதற்குக் கீழே ஒரு வியர் ஏற்படுத்தி அங்கேயா என்ற பிரச்சினைகள் எல்லாம் பேசப்பட்டன. அதிலே ஓரளவுக்கு அவர்களும் நாமும் ஒத்துக்கொள்ளக்கூடிய சூழ்நிலைகள் எல்லாம் உருவாயிற்று.

ஆனால் எத்தனை டி.எம்.சி. தண்ணீர் என்பதுதான் பிரச்சினை. அந்தப் பிரச்சினையிலே மேகதாதுவைக் கட்டிவிட்டால்-இன்றைக்கு வேண்டுமானால், மேகதாதுவைக் கட்டிக்கொண்டிருக்கும்போது 200 டி.எம்.சியோ 210 டி.எம்.சியோ தண்ணீர் கொடுப்பார்கள்-மேகதாதுவைக் கட்டிவிட்டப்பிறகு இன்னும் 10 ஆண்டுகளுக்குப் பிறகு ஆள வருகின்றவர்கள் யாரோ நமக்குத் தெரியாது. ஆகவே, தமிழ்நாட்டு மக்களைச் சந்தியிலே விட்டுவிட்டுப் போக நாங்கள் சம்மதிக்க முடியாது என்று நான் அழுத்தந்திருத்தமாக (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களிடத்திலே சொன்னேன். அதற்குப் பிறகு தான் இந்தப் பேச்சு வார்த்தை பயன்படாது என்று மீண்டும் உச்ச நீதிமன்றத்திற்கே நாம் சென்று பேச்சு வார்த்தை பயன் அளிக்கவில்லை, உங்களுடைய தீர்ப்பை வழங்குங்கள் என்று கேட்டு, வாதாடிக்கொண்டிருக்கிறோம், உச்ச நீதிமன்றத்திலே. நடுவர் மன்றம் வேறு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதற்கு இடையிலே உச்ச நீதிமன்றத்திற்குச் சென்று, உங்களுடைய உத்தரவுபடி பேச்சு வார்த்தை நடத்தினோம். பயன் இல்லை என்று வழக்கைத் தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கிறோம்.

*முற்பகல் 11-05*

உச்சநீதிமன்றத்திலே ஐவர் கொண்ட கான்ஸ்டிடியூஷனல் பெஞ்ச் ஒன்று அமைக்கப்பட்டு, அது இன்றைக்கு விசாரணை நடத்துகிறது. அந்த பெஞ்சில், அன்றைக்கு நான் குறிப்பிட்டதைப்போல, இந்த வழக்கை விசாரித்து மைய அரசு நிலையை கேட்டு அறிந்து மைய அரசின் சார்பாக 'அட்டர்னி ஜெனரல் ஆப் இந்தியா' 8 வார கால அளவிற்குள் நடுவர் நீதிமன்றம் கொடுத்த இடைக்கால ஆணையை நிறைவேற்றுவதற்கு வரைவுத் திட்டம் தருவதாக உச்ச நீதிமன்றத்திலே ஒப்புக்கொண்டு இருக்கிறார்கள். இப்பொழுதே 2 வாரம் ஆகிவிட்டது என்று கருதுகின்றேன்; இன்னும் 5,6 வாரம் தான் பாக்கி இருக்கிறது. அவர்கள் என்ன வரைவுத் திட்டத்தை கொடுக்கப் போகிறார்கள் என்பதை எல்லாம் பார்த்திருந்து, அதற்குப்பிறகு நமக்கு நீதி கிடைத்தும், அதை நிறைவேற்றுகின்ற நிலை ஏற்படாமல் போகுமேயானால் நாம், பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டு என்ற அந்தப் பழமொழியை ஞாபகத்திலே வைத்துக்கொண்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதைத் தவிர தமிழக அரசுக்கு வேறு வழி இல்லை; ஆனால், நிச்சயமாக நியாயமான தீர்ப்பு நமக்குச் சாதகமான தீர்ப்பு—அல்லது அவர்களுக்கு பாதகமான தீர்ப்பு என்று சொல்லமாட்டேன்–நடுநிலையான தீர்ப்பு கர்நாடக மாநில மக்களுக்கும் பாதகம் இல்லாமல் தமிழ்நாட்டிலே



உள்ள மக்களுக்கும் பாதகம் இல்லாமல், அங்குள்ள விவசாயிகளுக்கும் இங்குள்ள விவசாயிகளுக்கும் பாதகம் இல்லாமல் ஒரு நடுநிலையான தீர்ப்பு வழங்கப்படும் என்றே நான் எதிர்பார்க்கின்றேன்.

இதற்கிடையிலே தேவை இல்லாமல், இரண்டு மாநிலங்களுக்கு இடையே சர்ச்சையை உருவாக்குகின்ற வகையில், பேசாத விஷயங்களை பேசியதாக கற்பனை செய்துகொண்டு கர்நாடக மாநிலத்தினுடைய நீர்ப்பாசனத் துறை அமைச்சர் பேசி இருப்பது அலலது அறிக்கை விட்டு இருப்பது வருத்தத்துக்கு உரியது; இங்கே பேசியவர்கள் எல்லாம்கூட கண்டனத்திற்குரியது என்று சொன்னார்கள்; கண்டனத்திற்குரியது என்று கூட கூறமாட்டேன்;வேதனைக்குரியது, வருத்தத்திற்குரியது. இதிலே இன்னொரு வேடிக்கை என்னவென்றால், நம்முடைய டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் பேசும்பொழுது குறிப்பிட்டார்கள். இங்கே உள்ளவர்கள் எல்லாம் ஒற்றுமையாக இருந்து செயல்படுத்த வேண்டும் என்று சொன்னார்கள். இதிலே எந்தவிதமான இருவேறு கருத்துக்களுக்கும் இடம் இல்லை. காவிரிப் பிரச்சினையைப் பொறுத்தவரையிலே ஏற்கெனவே இதே அவையில் அன்றைக்கு முதலமைச்சராக இருந்த எம்.ஜி.ஆர். அவர்கள், திராவிட முன்னேற்றக் கழக அரசு கடந்த காலத்திலே காவிரிப் பிரச்சினையில் என்ன நிலை எடுத்ததோ, அதே நிலை தான் அ.இ.அ.தி.மு.க. அரசின் நிலை என்று அழுத்தந்திருத்தமாக அவர்கள் குறிப்பிட்டு இருக்கின்றார்கள். அதைப்போல, அ.இ.அ.தி.மு.க அரசு எம்.ஜி.ஆர். காலத்தில் எடுத்த நிலையை திராவிட முன்னேற்றக் கழக அரசு திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கட்சியாக இருந்து ஏற்றுக்கொண்டு இருந்தது என்பதையும் நீங்கள் அனைவரும் நன்றாக அறிவீர்கள். இங்கே இருக்கின்ற பல்வேறு கட்சி சார்புடைய உறுப்பினர்கள் யாருக்கும் இதிலே எந்த கருத்து மாறுபாடும் கிடையாது; நாங்கள் எல்லாம் ஒன்றாகத்தான் இருக்கிறோம். ஆனால், வேண்டுமென்றே, ஏதோ நான் துரோகம் செய்து விட்டேன், துரோகம் செய்துவிட்டேன் என்கின்ற ஒரு கூற்றை, பொருந்தாக்கூற்றை, பொய்க் கூற்றை வெளியிலே இருக்கின்ற முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா அவர்கள் தொடர்ந்து கூறி வருகின்றார்கள். அதற்கான பதில் அளிக்கும்போதுதான் இந்தப் பிரச்சினைகள் எல்லாம் அன்றைக்கு வந்தது என்பதையும் நீங்கள் அறிவீர்கள்.

1924-ஆம் ஆண்டு இந்த ஒப்பந்தம் ஏற்பட்டது, காவிரிப் பிரச்சினைக்கான ஒப்பந்தம். 1974-ஆம் ஆண்டு இந்த ஒப்பந்தத்தை, உபரித் தண்ணீரை எப்படிப் பகிர்ந்து கொள்வது என்ற அளவிலே

இந்த ஒப்பந்தத்தைப் பற்றி நாம் மறுஆய்வு செய்ய வேண்டும் என்ற அளவிலேதான், 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தம் இருக்கிறது. ஆனால், சில பேர், 1974-ஆம் ஆண்டோடு ரத்து ஆகிவிட்டது என்றே கருதியோ அல்லது வேண்டுமென்றோ பிரச்சாரம் . செய்தார்கள். இன்னும் வேடிக்கை, நம்முடைய முன்னாள் ஜனாதிபதி திரு. ஆர். வெங்கட்ராமன் கூட அவர் எழுதிய அவருடைய வாழ்க்கை வரலாற்றில் 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தம் 1974-ஆம் ஆண்டோடு காலாவதி ஆகிவிட்டது என்று குறிப்பிட்டு இருந்தார். உடனடியாக தி.மு.க. சார்பில் ஒரு கண்டனக் கூட்டத்தை ஏற்பாடு செய்து, திரு. வெங்கட்ராமன் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுக்கப்பட்டது. அதற்குப் பிறகு அவரே அவர் தவறை உணர்ந்து அந்தப் புத்தகத்திலே உள்ள அந்த வாசகத்தை மாற்றிக்கொள்கிறேன் என்று அறிக்கை விட்டார் என்பது உங்களுக்கு எல்லாம் தெரியும். ஆனால், தொடர்ந்து என் மீது குற்றம் சாட்டுவதற்காக, தமிழ்நாட்டு நலனைக் காட்டிக் கொடுக்கின்ற அளவிற்கு சில பேர் ஆகிவிட்டார்கள். 1974-ஆம் ஆண்டோடு காலாவதி ஆகிவிட்டது என்று சொன்னால்-அதுதான் கர்நாடகத்தினுடைய வாதமே; அதை ஒத்துக்கொண்டதாக ஆகிவிடுகிறது; நாம் சொல்வது எல்லாம், 1974-ஆம் ஆண்டோடு அந்த ஒப்பந்தம் காலாவதி ஆகவில்லை, தொடருகிறது; உபரித் தண்ணீரை எப்படிப் பகிர்ந்துகொள்வது; ஏற்கெனவே ஒப்பந்தம் ஏற்படும்போது இருந்த தண்ணீரை விட உபரியாக வருகின்ற தண்ணீரை எப்படிப் பகிர்ந்து கொள்வது என்பதுதான் 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தம் என்று குறிப்பிட்டு, 1974-ஆம் ஆண்டு ஒப்பந்தம் முடிவடையவில்லை; காலாவதி ஆகவில்லை என்று சொன்னோம். வேடிக்கை, திரு. வி.பி. சிங் அவர்களிடத்திலே கொண்டுபோய் நடுவர் மன்றம் அமைக்க வேண்டும் என்று நாம் முறையீடு கொடுத்தபோதுகூட அ.இ.அ.தி.மு.க. சார்பிலே கொடுக்கப்பட்ட வேறு ஒரு முறையீட்டில்—திரு. வி. பி. சிங்கிடம் கொடுத்த முறையீட்டில் 1974-ஆம் ஆண்டோடு ஒப்பந்தம் காலாவதி ஆகிவிட்டது என்றே குறிப்பிட்டுக் கொடுத்தார்கள். அது எவ்வளவு ஆபத்தான வாசகம் என்பது அன்றைக்கே இந்த அவையில் சுட்டிக் காட்டப்பட்டு, அன்றைக்கு அவையிலே இருந்த அ.இ.அ.தி.மு.க உறுப்பினர்கள் எல்லாம்கூட பதில் சொல்ல முடியாமல், நாங்கள் சொன்ன விளக்கத்தை ஏற்றுக்கொள்ளக்கூடிய சூழ்நிலை இருந்தது என்பதையும் நாடு மிக நன்றாக அறியும்.

1974-ஆம் ஆண்டோடு ஒப்பந்தம் ஒன்றும் முடிந்துவிடவில்லை.



முற்பகல் 11-10

முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா அவர்கள் காவிரிப் பிரச்சினையில் ரொம்ப அக்கறை உள்ளவர்கள், உண்ணாவிரதம் எல்லாம் இருந்தார்கள். அவர்கள் சொல்லியிருக்கிறார்கள், 80 மணி நேரம் உண்ணாவிரதம் இருந்தேன், என்னைப் பார்த்தா துரோகி என்கிறாய் என்றெல்லாம் கேட்டார்கள். நாங்கள் கூட அப்படி உண்ணாவிரதம் இருக்கமுடியும்— திண்டு, திம்மாசு எல்லாம் போட்டுக்கொண்டு. காந்தியடிகளுடைய உண்ணாவிரதத்தைப் பார்த்திருக்கின்றோம். ஒரு கயிற்றுக் கட்டிலில் அவர் படுத்திருப்பார். கடைசியாக எலுமிச்சைச் சாறு கூட தகரக் குவளையில் சாப்பிட்டு, அப்படிப்பட்ட எளிமையான உண்ணாவிரதம் இருந்ததைப் பார்த்திருக்கின்றோம். தமிழ்நாடு என்று பெயர் வைக்கவேண்டுமென்பதற்காக, 60 நாட்களுக்கு மேல் உண்ணாவிரதம் இருந்து உயிர் நீத்த சங்கரலிங்க நாடாருடைய உண்ணாவிரதத்தையும் நாம் பார்த்திருக்கின்றோம். ஆனால் இந்த உண்ணாவிரதம் எல்லோருக்கும் வழிகாட்டக்கூடிய ஒரு உண்ணாவிரதம். அகில உலகத்திலும் உள்ள மக்களுக்கெல்லாம், உண்ணாவிரதிகளுக்கெல்லாம் வழிகாட்டக்கூடிய ஒப்பற்ற உண்ணாவிரதம் அந்த உண்ணாவிரதம்.

கட்டில், கட்டில் மீது மெத்தை, மெத்தைக்கு இருபுறமும் தலையணைகள், மேலே ஒரு தலையணை, கீழே ஒரு தலையணை, பாதுகாப்புக்கு ஐயாயிரம் போலீசார். பக்கத்திலே கடற்கரை ஓரத்திலே ஒரு வேன். சிறுநீர் கழிக்கச் செல்வதற்கோ அல்லது சிற்றுண்டி அருந்துவதற்கோ அந்த வேன் அடிக்கடி பயன்படுத்தப்பட்டது. அப்படிப்பட்ட ஒரு உண்ணாவிரதத்தை இருந்துவிட்டுத்தான் பெரிய தியாகம் செய்துவிட்டேன் என்றெல்லாம் அந்த அம்மையார் பேசுவது மாத்திரம் அல்ல, ஒரு பெரிய தவறான தகவலை என்மீது அல்லது அரசு மீது பழி சொல்வதற்காக வெளியிட்டிருக்கின்றார்கள். அதைப் பத்திரிகைகளும் வெளியிட்டிருக்கின்றன. பத்திரிகைகாரர்கள் நம்மைவிட நன்றாகச் சிந்திக்கக்கூடியவர்கள். பல வரலாறுகளைத் தெரிந்தவர்கள். இப்படிப்பட்ட செய்திகள் வரும்போது, அவர்களே இதை ஒப்பிட்டுப் பார்த்து, சரிதானா என பார்த்து போட்டிருந்தால் நன்றாக இருந்திருக்கும். அதை விட்டுவிட்டு அவர்களே முதல் பக்கத்தில் அல்லது இரண்டாம் பக்கத்தில் பெரிய பேனராக்கி, செய்திகளை வெளியிடுகிறார்கள். மற்ற செய்திகளை வெளியிடவில்லை என்ற

ஆத்திரத்தோடு சொல்லவில்லை. ஆனால் தவறான செய்திகளை வெளியிட்டு, தமிழ்நாட்டை தங்களையறியாமலேயே காட்டிக்கொடுத்து விடக்கூடாது என்பதற்காகச் சொல்கின்றேன்.

நான் குறிப்பிட்ட குற்றச்சாட்டில், 9-6-1992-ல் மத்திய அமைச்சர் திரு.சுக்லா, காவிரிப் பிரச்சினைக்காக எழுதிய கடிதம், 18-7-1992-ல் அதைப் பார்த்து, 21-7-1992-ல் பதில் தயாரித்து, 14-12-1992-ல் ஒப்புதல் அளித்து, 30-3-1993-ல் ஃபேர் காப்பியில் கையெழுத்துப் போட்டு, 14-4-1993-லே அந்தக் கடிதம் டெஸ்பாட்ச் செய்யப்பட்டிருக்கிறதே, இது நியாயமா என்றுதான் கேட்டிருந்தேன். அதற்குப் பதிலளித்த முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா அவர்கள் சொல்கிறார்கள். என்னுடைய காலத்திலே-கழக ஆட்சிக் காலத்திலே, கடந்த காலத்தில்தான் எல்லா அணைகளும் கர்நாடகத்திலே காவிரியில் கட்டப்பட்டன என்று ஒரு உண்மைக்கு முற்றிலும் மாறான தகவலை அவர்கள் குறிப்பிட்டிருக்கின்றார்கள். ஆண்டுக் கணக்கையெல்லாம் வெளியிட்டு குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆண்டுக் கணக்கை எல்லாம் போட்டவுடன் அது உண்மையாக இருக்கும் என்று நம்பி, பத்திரிகைகளும் வெளியிட்டுவிட்டனபோலும் என்று நான் கருதுகிறேன்.

அவருடைய அறிக்கையிலே சொல்கின்றார். சொர்ணாவதி அணை 1973-ல் நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்கிறார். அதாவது கழக ஆட்சிக் காலத்தில் நிறைவேற்றப்பட்டது என்று சொல்கிறார். உண்மை என்னவென்றால், சொர்ணாவதி அணை ஆரம்பிக்கப்பட்டது 1965-ஆம் ஆண்டு. முடிக்கப்பட்டது 1984-ஆம் ஆண்டு, அப்போது இருந்த காங்கிரஸ் அரசு அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும்கூட, அந்த எதிர்ப்பைப் பொருட்படுத்தாமல், ஆரம்பிக்கப்பட்டது 1965ஆம் ஆண்டு முடிக்கப்பட்டது 1984-ஆம் ஆண்டு. கபினி அணை கட்டும் பணி 1975-ல் நிறைவேற்றப்பட்டது என்று ஜெயலலிதா கூறியிருக்கிறார் ஆனால் அந்த அணை கட்ட ஆரம்பிக்கப்பட்டது 1959-ல், 1978-79-ல் அந்த அணை கட்டி முடிக்கப்பட்டது. ஹேமாவதி அணை 1976-ல் நிறைவேற்றப்பட்டது என்று ஜெயலலிதா கூறுகிறார். அது ஆரம்பிக்கப்பட்டது 1968-ஆம் ஆண்டு. கட்டி முடிக்கப்பட்டது 1979-80-ல். 1976-ல் முடிந்ததாக ஜெயலலிதா அறிக்கையில் சொல்லியிருக்கிறார். இல்லை. ஹேரங்கி அணை கட்ட ஆரம்பிக்கப்பட்டது 1964-ஆம் ஆண்டு முடித்தது 1979-80-ம் ஆண்டில்.

இப்படி கழக அரசு தமிழகத்திலே ஏற்படுவதற்கு முன்பே, காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலேகூட இந்த அணைகள் எல்லாம்



தொடங்கப்பட்டுவிட்டன. அப்போது எதிர்த்தும்கூட 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தப்படி அன்றைக்கிருந்த அரசு தங்களுடைய எதிர்ப்பை காட்டியும்கூட கர்நாடக அரசு அதை மீறி அந்தக் காலத்திலிருந்தே செயல்பட்டிருக்கின்றது. மத்திய திட்டக்குழு, கர்நாடகத்தின் திட்டங்களுக்கெல்லாம் அனுமதி கொடுக்கவில்லை என்பது இங்கே முக்கியமாகக் குறிப்பிடத்தக்கது. கர்நாடகத்தின் எந்தவொரு அணைக்கும் மத்திய திட்டக் குழு அனுமதி கொடுக்கவேயில்லை. மத்திய திட்டக் குழுவின் ஒப்புதல் பெறாமல் கர்நாடக அரசு இந்த அணைக்கட்டுத் திட்டங்களையெல்லாம் நிறைவேற்றியிருப்பது, ஐந்தாண்டுகள் இங்கே முதலமைச்சராக இருந்த ஜெயலலிதாவுக்குத் தெரியாமல் போவது ஆச்சரியம்தான். தெரியாமல் போகவில்லை. தெரிந்த உண்மைகளுக்கு மாறான விஷயங்களைச் சொல்லலாம் என்று முடிவு எடுத்துக் கொண்டவர்களைப் பற்றி நான் என்ன சொல்ல முடியும்? அதைத்தான் அவர்கள் இன்றைக்குச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். மத்திய அரசு அணைக்கட்டுத் திட்டங்களை நிறைவேற்ற எந்த நிதியும் தரவில்லை. ஒரு பெரிய அணைக்கட்டு என்றால் மத்திய அரசு நிதி தரும். அந்த நிதியும்கூட அவர்கள் தரவில்லை. ஏனென்றால், தமிழ்நாடு அரசு, காங்கிரஸ் கட்சி ஆட்சிக் காலத்திலே இருந்து, பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே இருந்து இந்த அணைகளையெல்லாம் கட்டக் கூடாதென்று தடுத்து வருகின்ற காரணத்தால், எதிர்த்து வருகின்ற காரணத்தால், இதுவரையிலும் மத்திய அரசு இந்த அணைகளைக் கட்டுவதற்கு எந்த நிதியுதவியும் செய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இப்போதுதான், மேகதாது அணைக்கட்டுத் திட்டத்திற்குத் தான் ஏதோ மத்திய அரசு நிதியுதவி கொடுப்பதாக இருந்தது. ஆனால், நல்ல வேளை... அவ்வளவுதான் நான் சொல்ல முடியும்.(மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-15

எப்பொழுதும், காவிரி நதித் தண்ணீரால் பயனடையக்கூடிய மாநிலங்களின் ஒப்புதலைப் பெற்ற பிறகுதான் ஒரு மாநில அரசு இதுபோன்ற அணைக் கட்டுக்களைக் கட்ட வேண்டுமென்று ஒரு ஒப்பந்தம் இருக்கிறது. அதையும் மீறித்தான் கர்நாடக அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. எனவே, யாருடைய ஒப்புதலும் இல்லாமலேயே முறைப்படி பெறவேண்டிய ஒப்புதலைப் பெறாமலேயே கர்நாடக அரசு அணைகளைக் கட்டி வருவதன் காரணமாக தமிழகம் தவிப்புக்கு ஆளாகி இருக்கின்றது. அந்தத் தவிப்பை எடுத்துச் சொல்லக்கூட நமக்கு உரிமையில்லையென்று அதை திசை திருப்பி, கர்நாடக முதலமைச்சரைத்

தாக்கிப் பேசியதாக அறிக்கை விடுவது, நாகரீகமான செயல் அல்ல என்பதைத்தான் இப்போது நான் பயன்படுத்துகின்ற கடுமையான சொல்லாகக் கருதி அந்தச் சொல்லைப் பயன்படுத்தி, இந்த அளவில் என்னுடைய விளக்கத்தை நிறைவு செய்கின்றேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

## 3. கவன ஈர்ப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விதி 55-ன் கீழ் அனுமதிக்கப்பெற்று அவைமுன் வைக்கப்பெற்ற கவன ஈர்ப்பு (1 முதல் 27 வரை)

*(இவை 923 முதல் 966 ஆம் வரையுள்ள பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளன)

## 4. அறிக்கைகள் அளித்தல்

### (அ) மதிப்பீட்டுக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கைகளை அளித்தல், மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் திரு.என்.எஸ். ராஜ்குமார் மன்றாடியார்.

**திரு. என். எஸ். ராஜ்குமார் மன்றாடியார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் ஆகிய நான் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மதிப்பீட்டுக் குழுவின் கிராமக் குடிநீர் வழங்கல் குறித்த 7-வது அறிக்கை மற்றும் மருத்துவமனைகளும் மருந்தகங்களும் குறித்து 8-வது அறிக்கை ஆகிய 2 அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

### (ஆ) பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் திரு. சுப. தங்கவேலன்,

**திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் சார்பாகக் குழுவின் 34 மற்றும் 35 ஆகிய 2 அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன். மேற்படி அறிக்கைகள் போதிய அவகாசம் இல்லாமையால், அச்சிட்ட பிரதிகளுக்குப் பதிலாகப் படியெடுத்த பிரதிகளாக அளிக்கப்பட்டுள்ளன. இவ்வறிக்கைப் பிரதிகள் சட்டமன்ற நூலகத்தில் மாண்புமிகு உறுப்பினர்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன. அச்சிட்ட பிரதிகள் கிடைத்தவுடன் அவை பேரவை உறுப்பினர்களுக்குத் தனியாக அனுப்பி வைக்கப்படும்.

* 923 முதல் 966 வரையுள்ள பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளன.



## 5. அறிவிப்புகள்

### (அ) பேரவைக் குழுக்களுக்கு உறுப்பினர்கள் தேர்வு

### (1) மதிப்பீட்டுக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு, 1997-98-ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவிற்கு (Committee on Estimates) பேரவையின் 16 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். கீழ்க்காணும் 16 உறுப்பினர்களிடமிருந்து முறைப்படியான வேட்பு மனுத் தாள்கள் வரப்பெற்றன.

1. திரு. இரா. ஆவுடையப்பன்
2. திரு. ஆர். சிவானந்தம்
3. திரு. கோ. மோகனதாசன்
4. திரு. செங்கை சிவம்
5. திரு. பி.என். சுப்பிரமணி
6. திரு. ரா. சேதுநாதன்
7. திரு. செ. இராமலிங்கம்
8. திரு. தி.ப. மாயவன்
9. திரு. எஸ்.ஆர். சிவலிங்கம்
10. திரு. எம்.எம்.எஸ். அபுல்ஹசன்
11. திரு. க.வெ.வீ. இராசமாணிக்கம்
12. திரு. கு. ரவி அருணன்
13. திரு. ஜி. நிஜாமுதீன்
14. திரு. டி. மணி
15. திரு. ஆ இராசேந்திரன் என்கிற தீரன்.
16. திரு. கே. சுப்பராயன்.

எனவே, 1997-98-ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டதாக நான் அறிவிக்கின்றேன். நிதியமைச்சர் என்கின்ற முறையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் பொதுக் கணக்குக் குழு தலைவர் மற்றும் பொது நிறுவனங்கள் குழுத் தலைவர் ஆகியோரும் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்கள் ஆவார்கள். பேரவை விதி 196-ன் கீழ் திரு. இரா. ஆவுடையப்பன் அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமனம் செய்கின்றேன்.

## (2) பொதுக்கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, பொதுக் கணக்குக் குழு, 1997 -98 ஆம் ஆண்டிற்கான பொதுக்கணக்குக் குழுவிற்கு (Committee on public Accounts) பேரவையின் 16 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். கீழ்க்காணும் 16 உறுப்பினர்களிடமிருந்து முறைப்படியான வேட்பு மனுத் தாள்கள் வரப்பெற்றன.

1. திரு. கே.ஆர். இராமசாமி
2. திரு. ப. ரங்கநாதன்
3. டாக்டர் அ. செல்லக்குமார்.
4. திரு.. எஸ்.எஸ். மணி நாடார்
5. டாக்டர் க. கிருஷ்ணசாமி
6. திரு. ஜி. பழனிசாமி
7. திரு.. ஜி.கே. மணி
8. திரு. ஏ. இராமலிங்கம்
9. திரு. ஜி. சொக்கலிங்கம்
10. திரு. பா. பரணிகுமார்
11. திரு.. மு. பன்னீர்செல்வம்
12. திரு.. குழந்தை. தமிழரசன்
13. திரு. நா.பூ. இராமஜெயம்





14. திருமதி. சுப்புலட்சுமி ஜெகதீசன்
15. திரு. அ.ல. தங்கவேலன்.
16. திரு. கு. மனோகரன்.

முற்பகல் 11-20

எனவே 1997-98 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கிறேன். நிதியமைச்சர் என்ற முறையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மதிப்பீட்டுக் குழுத் தலைவர் மற்றும் பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் ஆகியோர் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்கள் ஆவார்கள்.

பேரவை விதி 204-ன் கீழ் திரு. கே.ஆர். இராமசாமி அவர்களை இக்குழுவினுடைய தலைவராக நான் நியமனம் செய்கிறேன்.

## (3) பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1997-98-ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவிற்கு (Committee on Public Undertakings) பேரவையின் 16 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். கீழ்க்கண்ட 16 உறுப்பினர்களிடமிருந்து முறைப்படியான வேட்பு மனுத்தாள்கள் வரப்பெற்றன.

1. திரு .சி.டி. தண்டபாணி
2. திரு. வ. அன்பழகன்
3. திரு. .ச. நாகரத்தினம்
4. திரு. எஸ்.எஸ். பொன்முடி
5. திரு.இரா. மூக்கப்பன்
6. திரு.ஆர். சக்ரபாணி
7. திருமதி ஆர். சரஸ்வதி
8. திரு. மு.பெ. சாமிநாதன்
9. திரு. ஆமு. முனிரத்தினம்

10. திரு. மு. அப்பாவு

11. திரு. சு. சிவராஜ்

12. திரு. வெ. சின்னையா

13. திரு. எல். சந்தானம்

14. திரு. வை. சிவபுண்ணியம்

15. திரு. இ. கணேசன்

16. திரு. பே. வே. ஸ்ரீ. வெங்கடேசன்

எனவே, பொது நிறுவனங்கள் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டதாக நான் அறிவிக்கிறேன்.

மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் மற்றும் பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் ஆகியோர் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்கள் ஆவார்கள்.

பேரவை விதி 213-ன்கீழ் திரு. சி.டி. தண்டபாணி அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமனம் செய்கிறேன்.

### (4) அவை உரிமைக்குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவை உரிமைக்குழு, 1997-98ஆம் ஆண்டிற்கான அவை உரிமைக்குழுவிற்கு (Committee on Privileges) பேரவையின் 14 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். கீழ்க்காணும் 14 உறுப்பினர்களிடமிருந்து முறைப்படியான வேட்பு மனுத்தாள்கள் வரப்பெற்றன.

1. திரு. வ. வேலுசாமி

2. டாக்டர் காஞ்சனா கமலநாதன்

3. திரு. பெ.சு. திருவேங்கடம்

4. திரு. அன்பில் பொய்யாமொழி

5. திரு. தா. உதயசூரியன்

6. திரு. பெ. ஆசையன்



7. திரு. வி.ஜி. தனபால்

8. திரு. த. நடராஜன்

9. டாக்டர் மு. தேவராஜன்

10. திரு. ஆ. ஜெ. மணிக்கண்ணன்

11. திரு. ஆர். சொக்கர்

12. திரு. கே. மணிவர்மா

13. திரு. ப. கோவிந்தன்

14. திரு. நா. பெரியசாமி

எனவே, 1997-98 ஆம் ஆண்டிற்கான அவை உரிமைக் குழுவிற்கு இவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கிறேன்.

மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள், பேரவை எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் பேரவைத் துணைத்தலைவர் ஆகியோர் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்கள் ஆவார்கள்.

பேரவை விதி 227 (3) ன் கீழ் மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்கள் இக்குழுவின் தலைவராக இருப்பார்கள்.

### (5) அலுவல் ஆய்வுக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அலுவல் ஆய்வுக் குழு. (Business Advisory Committee)

1. மாண்புமிகு பேரவைத் தலைவர்

2. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்

3. மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்

4. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்

5. மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்

6. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்

7. அரசுத் தலைமைக் கொறடா

8. திரு. ஆர். சொக்கர்
9. திரு. ஜி. பழனிசாமி
10. திரு. ம. அப்துல் லத்தீப்
11. திரு. எஸ். திருநாவுக்கரசு
12. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்
13. திரு. எல். சந்தானம்
14. திரு. சி. வேலாயுதன்
15. திரு. டி. மணி
16. டாக்டர் க. கிருஷ்ணசாமி
17. திரு. பி. வெங்கடசாமி

பேரவை விதி 231(1)ன் கீழ் பேரவைத் தலைவர் இக்குழுவின் தலைவராக இருப்பார்

### (6) பேரவை விதிகள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதிகள் குழு: (Committee on Rules)

*1. மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி,
முதலமைச்சர்.
2. மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்,
பேரவை முன்னவர்.
3. மாண்புமிகு திரு. ஆலடி அருணா,
சட்டத் துறை அமைச்சர்.
4. மாண்புமிகு திரு. பரிதி. இளம்வழுதி,
பேரவைத் துணைத் தலைவர்.
5. திரு. சோ. பாலகிருஷ்ணன்,
எதிர்க்கட்சித் தலைவர்.
6. திரு. பா.மு. முபாரக்,
அரசு தலைமைக் கொறடா.
7. திரு. குத்தாலம் பி. கல்யாணம்



8. திரு. பா. கோபால்
9. திரு. ஜி. பி. வெங்கிடு
10. திரு. ஓ. ஆர். இராமச்சந்திரன்
11. டாக்டர் பத்மா
12. திரு. பா. வேல்துரை
13. திரு. ந. கருப்பண்ண உடையார்
14. திரு. கே. தங்கமணி
15. திரு. சொ. கருப்பசாமி
16. திரு. பி. என். வல்லரசு

1997 -98-ஆம் ஆண்டுக்கான பேரவை விதிகள் குழுவிற்கு இவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கிறேன்.

பேரவை விதி 256(1)-ன் கீழ் பேரவைத் தலைவர் அவர்களே, இக்குழுவின் தலைவராக இருப்பார்.

### (7) சட்ட விதிகள் ஆய்வுக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்ட விதிகள் ஆய்வுக்குழு. (Committee on Delegated Legislation)

1. திரு. ம. அப்துல் லத்தீப்
2. திரு. ச. அழகுவேலு
3. திரு. கோ. சண்முகம்
4. திரு. கே. ஆர். ஜி. தனபாலன்
5. திரு. வி. பெருமாள்
6. திரு. என். பாண்டுரங்கன்
7. திரு. கே. வேணு
8. திரு. இரா. மதிவாணன்
9. திரு. எஸ். எஸ். முகம்மது இஸ்மாயில்
10. திரு. ஜே .எம். ஆரூண் ரஷீத்
11. திரு. ர. நா. ஈஸ்வரன்
12. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்

பேரவை விதி 240-ன்கீழ் திரு. ம. அப்துல் லத்தீப் அவர்கள் இக்குழுவின் தலைவராக இருப்பார்.

## (8) அரசு உறுதிமொழிகள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசு உறுதிமொழிகள் குழு. (Committee on Government Assurances)

1. திரு. ச. அழகிரி
2. திரு. பால. ஆனந்தன்
3. திரு. வை. இராமசாமி
4. திரு. கோ. இளங்கோ
5. திரு. கொ.வி. நன்னன்
6. திருமதி கோமதி சீனிவாசன்
7. திரு. செ. மதிவாணன்
8. திரு. மீ.அ. வைத்தியலிங்கம்
9. திரு. ஆர். ஆர். சேகரன்
10. திரு. ப. மோகன் கந்தசாமி
11. திரு. சி. வேலாயுதன்
12. திரு. பி. வெங்கடசாமி

பேரவை விதி 249(1)-ன் கீழ் திரு. ச. அழகிரி அவர்களை இக்குழுவின் தலைவராக நியமிக்கிறேன்.

## (9) அவைக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவைக் குழு. (House Committee)

1. திரு. மா. இராமச்சந்திரன்
2. திரு. டி. கருப்புசாமி
3. திரு. சீ. வெ. கிருஷ்ணன்
4. திரு. இரா. மணிமாறன்
5. திரு. ஏ. கோதண்டம்
6. திரு. கோ. சண்முகம்
7. திரு. சி. சந்திரசேகரன்
8. திரு. டி. செல்வராஜ்
9. திரு. க. துரை
10. திரு. துரை. சந்திரசேகரன்



11. திருமதி வாசுகி முருகேசன்
12. திரு. பா. துரைசாமி
13. திரு. பி. ஆர். சுந்தரம்
14. திரு. வி. கே. லட்சுமணன்
15. திரு. ந. சுந்தரம்
16. திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்
17. டாக்டர் எம். மோசஸ்
18. திரு. வி. அய்யலுசாமி

பேரவை விதி 253(1)-ன் கீழ் திரு. மா. இராமச்சந்திரன் அவர்களை இக்குழுவின் தலைவராக நியமிக்கின்றேன்.

முற்பகல் 11-25

## (10) மனுக்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மனுக்கள் குழு. (Committee on petitions)

1. திரு. பா. மு. முபாரக்
2. திரு. இ.ஏ.பி. சிவாஜி
3. திரு. வீ. தமிழ்மணி
4. திரு. ச. சு. வெங்கடேசன்
5. திரு. சி. இரா. இராமச்சந்திரன்
6. திரு. இ. ஜி. சுகவனம்
7. திரு. ஏ. ஆர். ஆர். சீனிவாசன்
8. திரு. டி. சுதர்சனம்
9. திரு. சி. ஞானசேகரன்
10. திரு. ஆர். தமிழ்ச் செல்வன்
11. திரு. சொ. கருப்பசாமி

பேரவை விதி 263(3)-ன் கீழ் திரு. பா. மு. முபாரக், அரசுத் தலைமைக் கொறடா அவர்களை இக்குழுவின் தலைவராக நியமிக்கின்றேன்.

## 11. நூலகக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை நூலகக் குழு.(Library Committee)

1. டாக்டர் அ. மணி
2. திரு. பே. மாரி அய்யா
3. திரு. வி. முத்து
4. திரு. அ. மாரிமுத்து
5. திரு. த. பூவேந்தன்
6. திரு. எஸ். புரட்சிமணி
7. திரு. வி. திருஞானசம்பந்தம்
8. திருமதி. ஆன் டி' மான்டி
9. திரு. எஸ். வி. கிருஷ்ணன்.

பேரவை விதி 264(3)-ன் கீழ் பேரவைத் தலைவர் இக்குழுவின் தலைவர் ஆவார்.

## 12. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள் குழு. (The Committee on Papers laid on the Table of the House)

1. திரு. கே. எம். விஜயகுமார்
2. திரு. டி. ராஜேந்தர்
3. திரு. பொ. முருகேசன்
4. திரு. எஸ். கே. ராஜேந்திரன்



5. திரு. டி. சி. விஜயன்
6. திரு. ஜி. எல். வெங்கடாசலம்
7. திரு. ஏ. எம். ராமசாமி
8. திரு. முகம்மது கோதர் மைதீன்
9. திரு. இரா. பெர்னார்டு
10. திரு. எஸ். என். பாலசுப்பிரமணியன்
11. திரு. டி. அமரமூர்த்தி

பேரவை விதி 268(2)-ன்கீழ் திரு. கே. எம். விஜயகுமார் அவர்களை இக்குழுவின் தலைவராக நியமிக்கின்றேன்.

### (ஆ) குழுத் தலைவர்கள் பேரவைத் தலைவரைச் சந்தித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இப்போது நியமிக்கப்பட்ட குழுவின் தலைவர்களை நாளை என்னுடைய அறையிலே சந்திக்க வேண்டுமென்று நினைத்தேன். நாளை கூட்டம் நடந்தால் பேரவைத் தலைவர் ஒருவர்தான் இருப்பார் என்று எனக்குத் தகவல் சொன்னார்கள். ஆகவே, சில நிமிடங்களில் நான் என்னுடைய அறைக்குச் செல்ல இருக்கிறேன். குழுவின் தலைவர்கள் என்னுடைய அறைக்கு வரவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

## 6. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

### தந்தை பெரியார் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 1997

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்தல். 1997ஆம் ஆண்டு தந்தை பெரியார் பல்கலைக்கழகச் சட்ட முன்வடிவு. மாண்புமிகு கல்வி அமைச்சர்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997 ஆம் ஆண்டு தந்தை பெரியார் பல்கலைக்கழகச் சட்ட முன்வடிவினைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

[1997 ஏப்ரல் 30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

### (அ) கட்டாயத் தொடக்கக் கல்வி (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு, 1997

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்ட முன்வடிவுகள் ஆய்வு செய்தல். 1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டாயத் தொடக்கக் கல்வி (திருத்த) சட்டமுன்வடிவு. (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.45/1997) மாண்புமிகு கல்வி அமைச்சர்.

* **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டாயத் தொடக்கக் கல்வி(திருத்த) சட்டமுன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 45/1997) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதிலே பேச விரும்புபவர்கள் யாராக இருந்தாலும் பேசலாம். யாரும் இல்லை.

---

@29-4-1997 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பற்றுள்ளது.



1997 ஏப்ரல் 30 ]

மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3 திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டாயத் தொடக்கக் கல்வி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண்.45/1997) நிறைவேற்றப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

முற்பகல் 11-30

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

## (5) அறிவிப்புகள்-தொடர்ச்சி

### (இ) நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்டமுன்வடிவு, 1997 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1997ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்டமுன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 38/1997) பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## (6) அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)-தொடர்ச்சி

### (ஆ) நகர்ப்புற நிலவரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1997

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்டமுன்வடிவு, (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 38/1997), மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

* **மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நிலவரி (திருத்த) @ சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.38/1997) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்" எனக் கோருகிறேன்.

---

@ 26-4-1997 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் யாராவது கருத்துத் தெரிவிப்பதாக இருந்தால் தெரிவிக்கலாம். யாரும் இல்லை.

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2, 3 மற்றும் 4 திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2, 3 மற்றும் 4 ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

**மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்ட முன்வடிவு, (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 38/1997) நிறைவேற்றப்பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

**(இ) நகர் சார்ந்த பரப்பிடங்களிலுள்ள விலங்குகள் மற்றும் பறவைகள் கட்டுப்பாடு செய்தல் மற்றும் முறைப்படுத்துதல் சட்ட முன்வடிவு, 1997.**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் சார்ந்த பரப்பிடங்களிலுள்ள விலங்குகள் மற்றும் பறவைகள் கட்டுப்பாடு செய்தல் மற்றும் முறைப்படுத்துதல் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்37/1997), மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,



"1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் சார்ந்த பரப்பிடங்களிலுள்ள விலங்குகள் மற்றும் பறவைகள் கட்டுப்பாடு செய்தல் மற்றும் முறைப்படுத்துதல் சட்டமுன்வடிவு@ (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 37/1997) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1997 ஆம் ஆண்டு நகர்ப்புற விலங்குகள் கட்டுப்பாடு சட்டத்தின் கீழ் ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சில விலங்குகளை வளர்ப்பதன் மூலம் தொத்து நோய் வருவது இயல்புதான். அத்தகைய விலங்குகளை நகர்புறத்தில் வளர்க்கக்கூடாது என்பதற்குக் கடுமையான சட்டங்களைப் பயன்படுத்தி அரசு நகருக்குள் அந்த விலங்குகளை வளர்க்காமல் இருக்க ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு மனிதனுடைய வாழ்க்கையோடு அன்றாடம் கலந்துவிட்ட மிருகங்கள் மூலம் எந்தவிதமான தொற்று நோயும் வராது என்று சொல்லக்கூடிய பால் தரக்கூடிய பிராணிகளை நகரத்தில் வளர்க்கக்கூடாது என்று சொல்லும்போது, பால் கறந்து அதன்மூலம் அந்த மிருகங்களைப் பராமரிக்கக்கூடிய வகையில் கிட்டத்தட்ட ஒரு லட்சம் மக்களுக்கு மேல் சென்னை நகரில் வாழ்கின்றார்கள். அந்த மக்களுடைய பிழைப்பு இதனால் பாதிக்கப்படும். அவர்கள் முழுக்க முழுக்க ஏழைகள். வேறு எந்தப் பிழைப்பையும் இதுவரையில் தெரிந்து கொள்ளாமல் வாழக்கூடியவர்கள். எனவே ஒரு குறிப்பிட்ட கால அவகாசம் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கிராமப்புறங்களில் அவிழ்த்தடி மாடுகள் என்று சொல்வார்கள். விவசாயிகள் நிலங்களில் மேயக்கூடிய மாடுகளை சம்பந்தப்பட்ட நபர்கள் பிடித்துச் சென்று பவுண்டு என்று சொல்லக்கூடிய அரசாங்கத்தினுடைய இடத்தில் அடைத்துவிட்டால், அதற்குத் தக்க பைன், ரூபாய் கட்டித்தான் அவர்கள் கொண்டு வரவேண்டும். இப்படிப்பட்ட ஒரு முறையைக் கடைப்பிடிக்கலாம். அல்லது யாராவது அந்த மாடுகளைக் கட்டி வளர்க்காமல் அவிழ்த்தடித்து விடுகிறார்கள்

---

@25-4-1997 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[திரு. சி. வேலாயுதன்] [1997 ஏப்ரல் 30

என்றால், அத்தகைய மாடுகளை நகர்மன்றத்திலே வேலை பார்க்கக்கூடிய ஊழியர்கள் மூலம் அரசாங்கம் கைப்பற்றலாம். இதுபோன்றுதான் ஏதாவது செய்யவேண்டுமே தவிர, ஒரேயடியாக நகருக்குள் மாடுகள், பால்தரக்கூடிய பசு போன்ற மாடுகளை வளர்க்கக்கூடாது என்று அரசாங்கம் உறுதியான கடுமையான சட்டத்தைக் கொண்டு வருவதன் மூலம் ஏராளமான மக்கள் பாதிக்கப்படுவார்கள் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 11-35

இன்னொன்று கூட, பண்டைக் காலத்தில் தொற்று நோய் பரவாமல் இருப்பதற்கு பசும் சாணங்களை தங்களுடைய வீட்டிற்கு முன்னால் தெளிப்பது, வீடுகளை மெழுகுவது இதுபோன்ற பழக்கங்கள் எல்லாம் இருந்துவந்தது. இப்போதுகூட கிராமங்களில் அந்த முறை இருக்கின்றது. எனவே, பயன்தரக் கூடிய பிரயாணிகள், குறைந்தபட்சம் பசு மாடுகளையாவது கிராமங்களில் வளர்க்க அனுமதிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தச் சட்டத்தைக் கடுமையாக்கினால் கிட்டத்தட்ட இலட்சக்கணக்கான மக்கள் பாதிக்கப்படுவார்கள். உடனே அவர்களுக்கு மாற்று வேலை கிடைக்காது. இதுபோன்ற கஷ்டம் அவர்களுக்கு ஏற்படும். எனவே, அவர்களுக்கு மாற்று வேலை கிடைக்கக்கூடிய வகையில் கால அவகாசம் கொடுக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் சட்ட முன்வடிவைச் சரியாகப் படிக்கவில்லை என்று நினைக்கிறேன், மொத்தத்தில் தடைசெய்யவில்லை, குறிப்பிட்ட இடங்களில் அதை முறைப்படுத்துவதுதான் இது. மாண்புமிகு அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்னும் 2, 3, பேர் பேசுவார்கள் என்று எதிர்பார்க்கிறேன். அதற்குப் பொதுவாகவே ஒரு பதிலை நான் சொல்லிவிடுகிறேன். பொதுவாக சென்னை பெருநகருக்கும், தேவைப்படுமானால் மற்ற நகராட்சிகள், பேரூராட்சிகளுக்கும் விஸ்தரிக்கின்ற வகையில் இந்தச் சட்டத்தை நாங்கள் கொண்டு வந்திருக்கிறோம். அதன் அடிப்படையில் இப்போது உங்களுக்கான நகலும் தரப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் மாடே வளர்க்கக் கூடாது என்பதல்ல, எந்தெந்த பகுதிகளில் வளர்க்கக்கூடாது என்பதை அரசு நிர்ணயம் செய்து அறிவிக்கும். அதற்குப் பிறகும், நாதியற்ற முறையில் கோயில் மாடுகள் என்று சொல்வதும், இன்னும் யாருக்கும் சம்பந்தம்



1997 ஏப்ரல் 30 ] [திரு. கோ.சி. மணி]

இல்லாத மாடுகள் பலவும் அண்ணாசாலையில், மற்ற மற்ற பகுதிகளில் போக்குவரத்திற்கு எவ்வளவு இடைஞ்சல் செய்கிறது என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். அப்படிப்பட்ட மாடுகளைக் கட்டுப்படுத்துவதற்காகவும், அதுபோல் சில மிருகங்களைக் கட்டுப்படுத்துவதற்காகவும், தேவையற்ற முறையில் வளர்க்கப்படுகிற பறவைகளை கட்டுப்படுத்துவதற்காகவும், அதனால் தீங்கு வராதவண்ணம் பாதுகாப்பதற்குத்தான் இந்தச் சட்டமே தவிர, விவசாயிகளை பாதிக்க அல்ல. கிராமப்புறங்கள் என்றே நம்முடைய மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்கிறார். இது கிராமப்புறத்திற்கே வராது. கிராமப்புறத்திற்குத் தேவையான சட்டமும் இல்லை. நகர்ப் புறத்தை ஒட்டிய சட்டம். இப்போது மாநகராட்சிகளுக்குத் துவங்குகிறோம். தேவைப்படுகிறபோது அந்தந்த நகராட்சிகளுக்கு விஸ்தரிக்கிற அதிகாரத்தை இப்போது பெறுகிறோம். அதுதானே தவிர, வேறு ஒன்றும் இல்லை. அதனாலே இதுபற்றி விவாதிக்க வேண்டிய அவசியமே இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விலங்குகளையும் பறவைகளையும் முறைப்படுத்துகின்ற இந்தச் சட்டத்திலே ஒரு சில கருத்துக்களை எடுத்து வைக்கலாம் என்று ஆசைப்படுகிறேன்.

குறிப்பாக சென்னை நகரம் உருவாகி சுமார் 70, 80 ஆண்டுகளுக்கு மேலாகியிருக்கிறது. சென்னை நகரத்தினுடைய பாதாள சாக்கடை அமைப்பை உருவாக்கியது 60, 62 ஆண்டுகளுக்கு முன்புதான். அதற்கு முன்பிருந்தே மாடுகளையும், மற்றும் அதையொட்டிய விலங்குகளையும் சென்னை மாநகரத்திலே வளர்த்து வந்தார்கள். ஆனால் இன்றைய சூழ்நிலையில் பெருகி வருகின்ற நெருக்கடியும், உருவாகியிருக்கின்ற இந்த நகர வளர்ச்சியையும் பார்க்கின்றபோது இந்த மாடுகளால் தொல்லைகள் உருவாகிறது என்று பலதரப்பட்ட மக்களும் பல்வேறு நிலைகளில் பத்திரிகைகளில் புகைப்படங்களை எடுத்து நாள்தோறும் பிரசுரிக்கிறார்கள், விளம்பரப்படுத்துகிறார்கள். இதையெல்லாம் கருத்திலே கொண்டு, நடந்து முடிந்த மாநகராட்சிமன்றத் தேர்தல் முடிவுபெற்ற பின்பு, புதியதாக பொறுப்பேற்ற மேயர் அவர்கள் சென்னை நகரத்திலே நல்ல செயல்பாட்டுத் திட்டங்களை உருவாக்கவேண்டும், சென்னையை சிங்காரச் சென்னையாக உருவாக்கவேண்டுமென்று நல்ல எண்ணத்தோடு அனைத்துக்

கட்சிகளுடைய கூட்டத்தைக் கூட்டினார்கள். அந்தக் கூட்டத்திலே சென்னையிலே இருக்கின்ற அனைத்து பிரதான கட்சிகள், சிறிய கட்சிகள் என்று அனைத்து தரப்பட்ட மக்களும் கலந்துகொண்டு சென்னையிலே வீதிகளிலே திரிகின்ற மாடுகளையும், அல்லது அளவிற்கு அதிகமான மாடுகளை வைத்துக் கொண்டு இருப்பவர்கள், அல்லது நல்ல நிலையில் அதற்குக் கொட்டகைகளை உருவாக்கி தரத்தோடு வைத்துக்கொள்ளாதவர்களைக் கட்டுப்படுத்தவேண்டும் அல்லது அவர்களுக்கு மாற்று இடம் தர வேண்டுமென்று ஆலோசனை நடத்தினார்கள். அதாவது 1989-ஆம் ஆண்டு இப்போது இருக்கின்ற இந்த அரசு அன்றைக்கு சென்னையை ஒட்டியுள்ள மாதவரத்திற்கு சென்னை நகரிலே இருக்கின்ற மாடுகளை மாற்றவேண்டுமென்ற ஒரு திட்டத்தை வகுத்தார்கள். ஆனால், இடையிலே அந்தத் திட்டத்தை கைவிட்ட காரணத்தினால், எப்படி இந்த மாடுகளை சென்னையிலேயிருந்து அகற்றுவது என்று அனைத்துக் கட்சி கூட்டத்திலேயும் மேயர் அவர்கள் ஆலோசனை நடத்தினார்கள். அதிலே, அனைத்துக் கட்சித் தலைவர்களுமே சென்னையை விட்டு மாடுகளை அகற்ற வேண்டுமென்ற ஒருமித்த கருத்தை வலியுறுத்தினோம். அந்தக் கருத்தின் அடிப்படையில், இன்றைக்கு இந்தச் சட்டத்தின் மூலமாக நீங்கள் நடைமுறைக்குக் கொண்டு வந்திருக்கிறீர்கள். நீண்ட நாட்களாக அந்தத் தொழிலை செய்து வருகின்ற மக்களுக்கு எந்தவிதமான இடையூறும் இல்லாமல், அதே நேரத்தில் அவர்கள் தொடர்ந்து தொழில் செய்கின்ற வகையிலே ஒரு நல்ல திட்டத்தை நீங்கள் வகுத்துத்தர வேண்டும். மற்றொன்று, மாடுகளைச் சென்னை நகரத்தை விட்டு எடுக்கின்ற நேரத்தில், சென்னையையொட்டி புறநகர் பகுதிகளிலேயோ, அதையொட்டியுள்ள பகுதியிலேயோ அவர்களுக்குத் தரமான மாட்டுத் தொழுவங்களையும், கொட்டகைகளையும் அமைத்துத்தர வேண்டும்.

*முற்பகல் 11-40*

அடுத்து ஒரு மாடு, இரண்டு மாடுகள் என்று வீட்டு உபயோகத்திற்காக வைத்துக்கொண்டு இருப்பவர்களையெல்லாம் நீங்கள் அப்படியே விட்டுவிடுவதுதான் நல்லதாகப்படுகிறது. ஏனென்றால், பொது இடங்களிலே இருக்கின்ற மாடுகளை, வீதிகளிலே திரிகின்ற, கோயில் இடங்களிலே சுற்றித் திரிகின்ற — அமைச்சர் அவர்கள் சொன்னது போல — பீச்சிலோ, அண்ணாசாலையிலோ திரிகின்ற மாடுகளை நீங்கள் கட்டுப்படுத்தினால் போதும். மற்ற இடங்களில் 6 மாதம் என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். 6 மாத கால அவகாசம்



என்பது மிகவும் குறைவானது. ஒரு ஆண்டு என்று நீங்கள் தர வேண்டும். சென்னை நகரத்திலே இருக்கின்ற இந்த மாடுகளை அடிப்படையாக வைத்து தொழில் நடத்துகின்ற ஏறத்தாழ 2 லட்சம் குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றார்கள். ஆகவே, இவற்றையெல்லாம் நீங்கள் கருத்தில்கொண்டு, இந்த மாடுகளை சென்னையை விட்டு அகற்றுவதற்கு ஒரு மாற்றுத் திட்டத்தைத் தர வேண்டும். அதே நேரத்தில் 10 ஆண்டுகளுக்கு முன்பு அலமாதி திட்டம் என்று ஒரு திட்டம் இருந்தது. கறவை மாடுகள் பால் கறப்பது நின்றுவிட்டால், அதை அலமாதிக்குக் கொண்டுபோய் விடுவார்கள். அந்தத் திட்டம் இப்போது செயல்படவில்லை. அதையும் நீங்கள் செயல்படுத்த வேண்டும். சென்னை நகரிலே மற்றொரு பெரிய பிரச்சினை பன்றிகள் தொல்லைதான். அதனால் பலவிதமான நோய்கள் உருவாகின்றன.

**மாண்புமிகு பேரவை துணைத் தலைவர்:** மூளைக்காய்ச்சல் நோய்கூட அதனால்தான் உண்டாகிறது.

**திரு. ப. ரங்கநாதன்:** பலவிதமான நோய்கள், மூளைக்காய்ச்சல் நோய்கூட அதனால்தான் வருகின்றன. பெரிய பிரச்சினையாக இருக்கின்றது. பன்றிகளைப் பிடியுங்கள் என்று சென்னை மாநகராட்சியைக் கேட்டால், உயர்நீதிமன்றத்திலே போய் தடை உத்தரவு பெற்றிருக்கிறார்கள். ஆகையால், பன்றிகளைச்சுட முடியாது. பிடிக்க முடியாது என்று சொல்கிறார்கள். அதற்காக நீங்கள் உடனடியாக நடவடிக்கை எடுத்து, அந்தத் தடை உத்தரவை நீக்குவதற்கும், பன்றிகளை அகற்றுவதற்கும் தேவையான நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டு, இந்தச் சட்டத்தை வரவேற்று, அமர்கிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாடே சென்னை நகரத்திலே வளர்க்கக்கூடாது என்பதற்கு அல்ல இந்தச் சட்டம். எங்கெங்கே மாடுகளை வளர்ப்பது, அதை எப்படி வளர்ப்பது என்பதை முறைப்படுத்தத்தான் இந்தச் சட்டம். ஆனால், எல்லா இடங்களிலும் வளர்ப்பதற்கு அனுமதியளித்துவிட்டால் இந்தச் சட்டமே தேவையில்லை. ஆகையால், சில குறிப்பிட்ட இடங்களில் வளர்க்கலாம், எந்தெந்த இடங்களிலே வளர்க்கக் கூடாது, இதிலே நாதியற்ற மாடுகளை, கண்டபடி திரியவிடக் கூடாது என்பதற்கும், சொந்தக்காரர்கள் மாட்டை பொது இடங்களில் போக்குவரத்திற்கு இடையூறாகக் கட்டக்கூடாது என்பதற்கும்தான் இந்தச் சட்டம். இதுபோன்ற, பல சங்கடங்களை உருவாக்குபவர்களுக்குத்தான்

இந்தச் சட்டம் பாதிப்பை ஏற்படுத்துமே தவிர, வேறு யாருக்கும் இல்லை. உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன். ஏழைகள்தான் மாடுகள் ஒன்றிரண்டு வைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னார். எழும்பூர் புகைவண்டி நிலையத்திற்கு நாம் வந்து சேரும்போது, ஏறத்தாழ 150 மாடுகளை வளர்க்கிற ஒரு பண்ணையை நான் காலை 5 மணிக்குச்சென்று, சென்றமுறை பார்த்தேன். அப்படிப் பார்க்கிறபோது, மாடுகள்தான் கொட்டகையிலே இருக்கிறதே தவிர அதனுடைய சாணம் பூராவும் நமக்குச் சொந்தமான சாக்கடையிலே இருக்கிறது. அதனால், எப்படி சாக்கடையைச் சுத்தம் செய்ய முடியும்? தினசரி சுத்தம் செய்தால்கூட தினசரி இந்தச் சாணம் அங்கு வந்துகொண்டுதான் இருக்கும். ஆகையால், நான் குறிப்பிட்டுச் சொல்வது, பன்றிகளைச் சுடுவதற்கு சட்டம் தடையாக இருந்தால் அதை நீக்குவோம், நிச்சயமாக அதற்கான நடவடிக்கை எடுப்போம், அதிலே ஒன்றும் தப்பு இல்லை. ஆனால் யாரும் பாதிக்கப்படக் கூடாது என்பதில் எந்தவிதமான மாற்றுக் கருத்தும் இல்லை. ஆனால், மாட்டை வளர்ப்பதால் இந்த நகரில் பல தொல்லைகள், பல எதிர்ப்புகள், பல சங்கடங்கள், பல விபத்துக்கள் ஏற்படுவதை தவிர்த்தே ஆகவேண்டும். எனவே, அவகாசம் கொடுக்கவில்லை என்று சொல்வது தவறு. இந்தச் சட்டம் அமலுக்கு வந்தப் பிறகு, இந்த நோட்டிபிகேஷனுக்குப் பிறகு, 6 மாத காலம் அவகாசம் கொடுக்கிறோம். ஒரு வருடம் கொடுத்தால் இந்தச் சட்டத்தினுடைய நிலையே கெட்டுப்போய்விடும்.

*முற்பகல் 11-45*

அதற்கு ஒரு நியதியே இருக்காது. அதற்குப் பிறகு சட்டம் இருக்கிறதா என்பதே யாருக்கும் தெரியாது. ஆகவே நான் இந்த நேரத்திலே உங்களுக்குத் தெரிவித்துக்கொள்வது அப்படிப்பட்ட நேரங்களில், அவரவர்களுக்கு ஏதாவது சங்கடங்கள் வந்தால் அவர்கள் உள்ளபடியே அதைவைத்துத்தான் வாழ்க்கையை நடத்துகிறார்கள் என்று சொன்னால் இந்த அரசு அவர்கள் மீது அக்கறை கொண்டு அதற்குரிய நடவடிக்கைகளும் அந்த நேரத்தில் எடுக்கப்படும் என்பதை நான் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ரங்கநாதன் அவர்களுக்கு தெளிவாகத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு வருடம் காலம் அவகாசம் கொடுத்தால் இந்த சட்டமே மறந்து போகும்; அதிகாரிகளுக்கும் மறந்து போகும்; நமக்கும் மறந்து போகும்; மாடு வளர்ப்பவர்களுக்கும் மறந்து போகும்; மாடும் இந்த இடத்திலே வரும், நின்ற இடத்திலே





நிற்கும்; பழைய நிலை மீண்டும் வரும். அதிலே எந்தவிதமான சந்தேகமும் இல்லை. எனவே இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இந்தச் சட்டமுன்வடிவு எதற்காகக் கொண்டுவரப்பட்டது என்பதைக் காரண காரிய நோக்கத்தில் மிக, மிகத் தெளிவாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இரண்டு முறை சொல்லிவிட்டார்கள். எனவே, இனிமேல் பேசுகின்ற உறுப்பினர்கள் அதன் அடிப்படையில் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்தால் போதும்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவகாசம் 6 மாதம் என்று சொல்லுகிறார், அதை ஒரு ஆண்டாகத் தந்தால் நன்றாக இருக்கும். ஒரு வருடம் தரவேண்டுமென்று நான் மீண்டும் மாண்புமிகு அமைச்சர் அவர்களை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமே 6 ஆண்டுகளுக்குப் பிறகு துவங்குகிறோம். 1990-91-ஆம் ஆண்டில் இந்தச் சட்டம் வரவேண்டுமென்று விரும்பினோம். இதுகுறித்து பல மாநிலங்களில் இருக்கிற சட்டங்களை எல்லாம் கேட்டு அவர்களுடைய சட்டங்களை எல்லாம் தொகுத்து நம் மாநிலத்திற்கு ஒத்துவரத்தக்க வகையில் இந்தச் சட்டத்தை நாம் இப்போது கொண்டு வந்து இருக்கிறோமே தவிர இன்னும் ஒரு ஆண்டு காலம் கொடுத்தால் நான் ஆரம்பத்தில் சொன்னது போல் இந்தச் சட்டம் செயல்படாது. அதை அதிகாரிகள் விட்டு விடுவார்கள், நாமும் மறந்து விடுவோம், எனவே, 6 மாதம் என்பதே என்னைப் பொறுத்தவரையில் அதிகம் அவகாசம் என்று கருதுகிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** கிளாரிபிகேஷன் சார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்களுடைய கட்சி உறுப்பினர் பேசிவிட்டார். இதிலே கிளாரிபிகேஷன் என்ன என்பதைச் சொல்லுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பன்றிகளைச் சுடுவதற்கு

தடை உத்தரவு இருக்கிறது என்று சொன்னார்கள். பன்றிகளைச் சுடுவதற்குத் தான் தடை உத்தரவு இருக்கிறே ஒழிய அகற்றுவதற்கு தடை உத்தரவு இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. மு.க. ஸ்டாலின்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பன்றிகளைச் சுடுவதற்கு நீதிமன்றத்தில் எந்தத் தடையும் இல்லை என்றுதான் மாநகராட்சி மூலமாக நாங்கள் அறிந்து கொண்டிருக்கிறோம். ஆனால் பன்றிகளைச் சுடக்கூடாது என்று காவல்துறை ஒரு கட்டளை பிறப்பித்திருக்கிறது என்பதை நான் தங்கள் கவனத்திற்குத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தடை உத்தரவு உண்மையிலேயே இருக்கிறதா, இல்லையா, என்பதை நன்கு ஆராய்ந்து தடை உத்தரவு இல்லை என்று சொன்னால் நிச்சயமாக எல்லா பன்றிகளையும் எல்லா நகராட்சிகளிலும் சுடுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. செங்கை சிவம்.

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட திருத்தத்தை நான் மிகவும் வரவேற்கிறேன். ஆகவே, இதை உடனடியாக அமல்படுத்த வேண்டும் என்பதுதான் என்னுடைய மிக முக்கியமான அழுத்தந்திருத்தமான வேண்டுகோள் ஆகும். குறிப்பாக ஆடு, மாடு, பன்றிகளை அகற்றுவதற்கு ஏற்கனவே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ரங்கநாதன் அவர்கள் கூறியது போல் மாநகராட்சியில் சர்வ கட்சித் தலைவர்களை அழைத்து நம்முடைய வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் பேசியபோது எல்லோரும் வரவேற்றார்கள். அதை உடனடியாகச் செய்யவேண்டுமென்று தான் வற்புறுத்தினார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. மு. க. ஸ்டாலின்.



**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரசைத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள்கூட அதைத்தான் வலியுறுத்தி, வற்புறுத்திப் பேசினார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் கவனப்படுத்துகிறேன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் சட்டம் கொண்டுவரவேண்டுமென்று அங்கே பேசினீர்கள். இங்கே வந்து ஒரு வருடம் பொறுத்து, கொண்டுவாருங்கள் என்று சொல்லுகிறீர்கள்.

**திரு. ப. ரங்கநாதன்;** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் அப்போதும் அவசரமாக எடுக்கக்கூடாது, கொஞ்சம் கால அவகாசம், கால தாமதம் வேண்டும் என்றுதான் அந்தக் கூட்டத்திலும் சொன்னேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உயர்நீதிமன்றத்தில் பன்றிகளைப் பற்றி சுடக்கூடாது என்று தடை ஆணை இருக்கிறதோ, இல்லையோ. மிருகங்களைப் பற்றிய சட்டம் இது. மிருகங்களைக் கட்டுப்படுத்துகிறோம். மக்களுக்கு விரோதமாக இருக்கிற மிருகங்களைக் கட்டுப்படுத்துகிறோம். இந்தச் சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்கலாம். நீதிமன்றத்தில் தடை ஆணை இருந்தாலும் அதை நீக்குவதற்கான நடவடிக்கையை இந்த அரசு மேற்கொள்ளும். அதைப் பற்றி கவலை இல்லை. அதனால் இன்று இதற்கு ஆண்டு, ஆண்டுகளாக கால அவகாசம் தரவேண்டும் என்ற நிலை எல்லாம் எடுத்தால் அதற்கு இந்தச் சட்டமே கொண்டுவரவேண்டிய அவசியம் இல்லை என்றே நான் சொன்னேன். என்ன காரணம் என்றால் 6 வருட காலமாக முயற்சித்து இப்போதுதான் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். இதற்குப் பிறகு விதிகள் எல்லாம் போட்டு வருவதற்கு 6 மாத காலத்தைக்கூட தாண்டி விடலாம். எனவேதான் இந்தச் சட்டத்தினை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று நான் நிச்சயமாகச் சொல்கிறேன். மக்களுக்கு விரோதமாக எந்த மிருகங்கள் இருந்தாலும் அதை இந்தச் சட்டத்திற்குள் உட்படுத்தலாம். அந்த அளவுக்கு இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். எனவே, ஏற்றுக் கொள்ளலாம் என்று வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எந்தெந்த விலங்குகள் என்று இணைப்புப் பட்டியலில் தெளிவாக இருக்கிறது, திரு. செங்கை சிவம் பேசுங்கள்.

*முற்பகல் 11-50*

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த மாடுகளைப் பற்றி, மிகப்பெரிய சிரமம் என்னவென்று சொன்னால், எல்லாத் தொகுதிகளிலும், சென்னையிலே இருக்கிற ஒவ்வொரு வீட்டிலும் 20,30 மாடுகளை...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்கை சிவம் அவர்கள் பேசுகின்றபோது "இந்த மாடுகள்" என்று ஆரம்பித்தார்களே, அது எந்த மாடுகள் என்று தெளிவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இந்தச் சட்டமுன்வடிவு எதற்காகக் கொண்டு வரப்படுகிறதோ அந்த மாடுகள். திரு. செங்கை சிவம்.

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவை துணைத் தலைவரவர்களே, சென்னை கழிவு நீர் கால்வாய்களில் ஒவ்வொரு வீடுகளிலும் 20,30,40,50, 60 மாடுகளைக்கூட வளர்க்கிறார்கள். ஆகவே அந்த சாணங்கள் பூராவாகவும் அதிலே கரைத்து விடுகிறார்கள். தினம் தினம் என்னதான் அதிலே கழிவுநீர்த் துறை வேலை செய்தாலும்கூட அந்த அடைப்பை நீக்க முடியவில்லை. சென்னையை சிங்காரச் சென்னையாக ஆக்க வேண்டுமென்பது நம்முடைய சென்னையிலே இருக்கிற உறுப்பினர்கள் அனைவர்களுக்கும் ஏற்புடைய கொள்கையாகும். அதிலே மேயரும் உறுதியாக இருக்கிறார்கள்.

ஆகவே, இந்த மாடுகள், குறிப்பாக என்னுடைய தொகுதியிலே கூட மூலக்கொத்தளம் பகுதிகளில் ஒரு பெரிய கொட்டகை இருக்கிறது. அதிலே 200 மாடு வளர்க்கலாம். இதில் நம்முடைய அமைச்சரவர்கள் மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆக, மாடுகளை அறவே சென்னையைவிட்டு வெளியேற்றவில்லை. அதை முறைப்படுத்த வேண்டுமென்பதுதான் இந்தச் சட்டத்தினுடைய நோக்கம். ஆகவேதான்



நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன், என்னுடைய தொகுதியிலேகூட இருக்கிறது, மாட்டு கொட்டைகைகளை ஆங்காங்கு போதுமான இடம் உள்ள மாநகராட்சியின் காலியிடங்களில் நீங்கள் அமையுங்கள். அங்கேயே எப்படி நீங்கள் இந்த லெதர் பிராசசிற்கு ட்ரீட்மெண்ட் பிளான்டை வைக்கிறீர்களோ அதைப்போல அங்கேயே அந்தச் சாணங்களைச் சேகரித்து, வெறும் தண்ணீரை மட்டும் கழிவு நீர்க் குழாய்களில் விடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பன்றிகள் குறித்த நிலை. நம்முடைய மேயர் அவர்கள்கூடத் தெளிவாகச் சொன்னார்கள். போலீசில்தான் சுடுவதற்குச் சட்டம் இருக்கிறதே தவிர, தடை இருக்கிறதே தவிர, மாநகராட்சி ஊழியர்கள் சுடுவதற்குத் தடை கிடையாது. ஆகவே, மாநகராட்சி ஊழியர்கள் உடனடியாக, இந்தப் பன்றிகளை அகற்றுவதற்கான உரிய நடவடிக்கையை நீங்கள் மேற்கொள்ள வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன். ஆகவே, இந்தச் சட்டத்தை மிகவும் வெகுவாக நான் வரவேற்று விடைபெறுகிறேன், நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. நிஜாமுதீன். (குறுக்கீடு) திரு. ரங்கநாதன், இன்னும் இரண்டு பேர் பேச வேண்டும். இன்னும் 12 சட்டமுன்வடிவுகள் இருக்கின்றன. (குறுக்கீடு) அதெல்லாம் முடியாது. திரு. ரங்கநாதன், நீங்கள் உட்காருங்கள். அடுத்து திரு. நிஜாமுதீன், சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டம் கொண்டுவருவதைப் பற்றி முழுமையாக ஆதரித்து என்னுடைய சில கருத்துக்களைக் கூற விரும்புகின்றேன். அமைச்சரவர்கள் இந்தச் சட்டத்தைப் பற்றி மிகத் தெளிவான விளக்கத்தைக் கூறியிருக்கின்றார்கள். அதே சமயத்தில் அமைச்சரவர்களின் கவனத்திற்கு ஒருசில விஷயங்களைக் கொண்டு வருகின்றேன்.

நான் குறிப்பிடுவது, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் குறிப்பிட்டதைப்போல கால அவகாசம் போதாது என்பதுதான். காரணம் என்னவென்றால், மாடுகள் இந்தக் குறிப்பிட்ட காலத்தில் அப்புறப்படுத்தப்படுவதால் நகரத்தில் பால் தட்டுப்பாடு ஏற்படும்; பால் விலை உயர்வு ஏற்படும். இந்த மாடுகளை வைத்துப் பிழைப்பு நடத்துபவர்களுக்கு வேலைவாய்ப்பு இல்லாமல் போகும். உடனடியாக

மாடுகளை அப்புறப்படுத்தி விற்பது என்றால் மாடுகளின் விலை குறைந்து அவர்கள் நஷ்டம் அடைய வாய்ப்பாக அமையும்.

ஆகவே, இதுபோன்ற சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டு, குறைந்தது ஓராண்டு காலம் அவகாசமாவது அவர்களுக்கு வழங்கப்பட வேண்டுமென்று கூறிக்கொள்கிறேன்.

பன்றிகளைச் சுடுவதற்குத் தடையிருந்தால், அந்தப் பன்றிகளைப் பிடித்துக் கருத்தடை செய்து விட்டு விட்டால், அந்தப் பன்றி இனம் பெருகாமல் இருப்பதற்கு ஒரு வாய்ப்பாக அமையும். ஆகவே, அதையாவது மாநகராட்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாநகராட்சி, நகராட்சி போன்ற பகுதிகளுக்கு இந்தச் சட்ட முன்வடிவு பொருத்தமானதாக இருப்பதற்கான வகையிலே வகை செய்திருப்பதாக அமைச்சரவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதிலே எனக்கு மாறுபட்ட கருத்து கிடையாது.

ஆனாலும், பால் வழங்குவதற்கான நிலையில்—குறிப்பாக சென்னை நகரத்திற்குத் தனியார் மூலமாக, 40 சதவீதம் பால் சென்னை நகரத்திற்கு வழங்கப்படுவதாக ஒரு தகவல் இருக்கிறது. குறிப்பாக 25,000-க்கும் மேற்பட்ட அந்தப் பால் வியாபாரிகள் இந்தத் தொழிலை நம்பி இருக்கக் கூடியவர்களாக இருக்கிறார்கள்.

*முற்பகல் 11-55*

இன்னொன்று, இந்த நகரத்திற்குப் பால் வழங்குவதை வைத்துப் பார்த்தால், இருக்கின்ற கால அவகாசம் மிக முக்கியமானது. குறிப்பாக, சென்னை நகரத்திலிருந்து வெளியே அவர்களை அனுப்பிவிட்டால், குறிப்பிட்ட நேரத்திற்குள்ளாக, விடியற்காலை 4 அல்லது 5 மணிக்குள்ளாக அந்தப் பாலைக் கொடுக்க முடியுமா என்பது சந்தேகத்திற்குரிய ஒன்று. வெகு தூரத்திலிருந்து அவர்களாலே அதை வழங்க முடியாத நிலை ஏற்படுமென்று கருதுகிறோம். ஆகவே, இந்தச் சட்டம் தேவையானது என்று சொன்னாலும்கூட, இந்தப் பால் மாடுகளை அப்புறப்படுத்துகின்ற முயற்சி, அந்த மாடுகள் வெகுதூரம் சென்றுவிடாமல் நகரத்திற்குள்ளேயே அரசாங்கத்தின் சார்பில்





கொட்டகை அமைத்து அதற்கான முயற்சிகளை மேற்கொள்வது பொருத்தமாக இருக்குமென்று நான் கருதுகிறேன். ஏற்கெனவே அரசு சார்பிலே இப்படிப்பட்ட கொட்டகைகள் அமைத்து அவை மூடப்பட்டிருப்பதாக தகவல் இருக்கிறது. அவற்றைச் செயல்படுத்துவதற்குரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அதோடு சாணி, இதன் காரணமாக சாக்கடை அடைப்பு ஏற்பட்டு கொசுத் தொல்லை ஏற்படுகிறது, இப்படிப்பட்ட பிரச்சினைகள் இருக்கின்றன என்பது உண்மைதான். ஆகவே, அவற்றை நீக்குவதற்கு 'டயாபாரம் சேம்பர்' என்ற நவீன கருவிகளைப் பயன்படுத்தி, இந்தத் தண்ணீரை வடிகட்டி அதைச் சாக்கடையிலே அனுப்புவதற்குரிய முயற்சிகளை மேற்கொள்ளலாம் என்ற கருத்து இருக்கிறது. அப்படி செய்வதற்கான முயற்சிகள் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன். ஆகவே, இந்தக் காரியங்களைச் செய்வதோடு, அவர்களை வெளியேற்றுகின்றபோது, அவர்களுக்குரிய மாற்று இடம், மாற்றுக் கொட்டகை அமைப்பதற்கான முயற்சிகளை எடுத்து, அங்கு வைப்பதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டு முடிக்கிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஆரம்பத்திலேயே எடுத்துச் சொன்னேன். மாடுகளே வளர்க்கக் கூடாது என்பதல்ல. மாடுகளை வளர்ப்பதை வரன்முறைபடுத்த வேண்டும். அதுதான் சட்டத்தினுடைய நோக்கம். இன்னின்ன இடங்களில் மாடுகளை வளர்க்கக்கூடாது என்று தடை விதிப்பது, மற்றபடி வளர்க்கின்ற பகுதிகளில் யார் யார் எங்கெங்கே மாடு வளர்க்கிறார்கள் என்ற தகவல் சம்பந்தப்பட்ட இலாகாவிற்குத் தெரிய வேண்டும். அதற்கு உரிமம் பெற்றுக்கொள்ள வேண்டும். அப்படி உரிமை பெற்றவர்கள் மாட்டுக் கொட்டைகைகளைச் சரியாக சுகாதார முறைப்படி பேணிக் காக்கிறார்களா என்பதை மாநகராட்சி கண்காணிக்க வேண்டும். அதிலே தவறுகள் இருந்தால், அதற்கான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அப்படி மேற்கொண்டதில் கட்டுப்படாமல் போனால், பிறகு அதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். நாதியில்லாமல் போகின்ற பல மாடுகளை எடுத்துச்சென்று அடைத்து வைத்து, உரியவர்களிடம் அதற்கான விளக்கங்களை கேட்டு, அபராதங்களைப் போட்டு, மீண்டும் இப்படி விடாமல் தடுப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறதே தவிர, சென்னை நகரத்திலேயே மாடுகள் வளர்க்கக் கூடாது என்பதற்காக இந்தச் சட்டம் வரவில்லை. வளர்க்கப்படுவதில் வரன்முறை வேண்டும். வளர்க்கப்படுவது

[திரு. கோ. சி. மணி] [1997 ஏப்ரல் 30

சம்பந்தப்பட்ட மாநகராட்சிக்குத் தெரிய வேண்டும். அவர்கள் சரியாக வளர்க்கிறார்களா, சுகாதாரக் கேடு இல்லாமல் வைத்துக் கொள்கிறார்களா என்பதைப் பார்க்க வேண்டும். இல்லாதவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்தச் சட்டம். உள்ளபடியே நான் மாடு வளர்க்கிறேன், பால் விற்கிறேன், சுகாதாரத்திற்கு இடையூறு இல்லாமல் நடந்து கொள்கிறேன் என்று நடந்துகொள்கிறவர்கள் இந்தச் சட்டத்தைப் பற்றி அஞ்ச வேண்டாம் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் நேற்றைக்கு முந்தைய நாள் சந்தித்த நண்பர்களுக்கு இன்றைக்குச் சொல்ல வேண்டுமென்று கேட்டு, இதை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். கறவை வற்றிய மாடுகளுக்கு அலமாதி திட்டம் என்ற ஒரு திட்டம் இருந்தது. பத்து வருடங்களுக்கு முன்புவரை செயல்படுத்தப்பட்டுக் கொண்டிருந்தது. அதாவது, கறவை வற்றி, பால் கறப்பது நின்றுவிட்டால், கறவை வற்றிய மாடுகளை, கன்றுகளையெல்லாம், அங்கே எடுத்துக்கொண்டு போய்விட்டோம் என்று சொன்னால், திரும்ப கறவைக்கு வரும்போது, இங்கு சென்னைக்கு வரும் அந்த மாடுகள். அந்தத் திட்டம் நடைமுறையில் உள்ளதா? இல்லையென்றாலும், அரசு மறுபரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டத் திருத்தத்திற்கும் அதற்கும் சம்பந்தமில்லை. அது வருகிறபோது எங்கெங்கே வைப்பது என்பதை அப்போது கூடி ஆலோசித்து தேவைப்படுகின்ற இடங்களில் நிர்ணயித்து வைப்பதற்கு இந்த அரசு உதவி செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.



1997 ஏப்ரல் 30 ] [பேரவைத் துணைத் தலைவர்]

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2 திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 3

பிரிவு 3, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. வெங்கடசாமி தமது திருத்தத்தை மொழியலாம்.

*** THIRU B. VENKATASAMY:** Hon. Deputy Speaker Sir, I move the following amendment to Clause 3 :-

''After clause 3, <u>add</u> the following as sub-clause (2)

'Any person aggrieved shall report to the Licencing Authority about disturbing or scaring of any animal or bird in any manner without licence, roaming alone, obstructing flow of traffic, vehicular or pedestrian, making noise, creating pollution problems and found sick and unattended and any other reasons'."

திருத்தம் முறைப்படி வழிமொழியப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருத்தம் வலியுறுத்தப் படுகிறதா என அறிய விரும்புகிறேன்.

**திரு. பி. வெங்கடசாமி :** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

பிரிவு 3, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

[பேரவைத் துணைத் தலைவர்] [1997 ஏப்ரல் 30

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவுகள் 4 முதல் 9 வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 4 முதல் 9 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

*பிரிவு 10*

பிரிவு 10, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தம் திருத்தத்தை மொழியலாம்.

நண்பகல் 12-00

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:

"(i) in sub-clause (1)., in item (i), for the expression 'any notified animal or bird found straying', fully substitute the expression 'any notified animal or bird found straying or tethered in any public place'.

(ii) in sub-clause (3), for the expression 'feeding charges' substitute the expression 'feeding and maintenance charges'.

(iii) in the proviso to sub-clause (4), for the expression 'feeding charges', substitute the expression 'feeding and maintenance charges'."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



1997 ஏப்ரல் 30 ] [பேரவைத் துணைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், திருத்தம் ஏற்கப்பட்டது.

பிரிவு 10 திருத்தப்பெற்றபடி சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 11 திருத்தங்கள் இல்லை.

பிரிவு 11 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

*பிரிவு 12*

பிரிவு 12, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. வெங்கடசாமி தமது திருத்தத்தை மொழியலாம்.

**THIRU B. VENKATASAMY:** Hon. Deputy Speaker Sir, I move the following amendment to Clause-12 :

" After the proviso in Clause 12(C), the following provisos may be added :

'Provided that any person who have been penalised for more than three times either by fine or by imprisonment shall be awarded rigorous

[திரு. பி. வெங்கடசாமி] [1997 ஏப்ரல் 30

imprisonment for a period of not less than 3 months and for every successive offences, the punishment shall be increased to one month each time,

Provided further that the total punishment shall not exceed for more than one year at a time,

Provided also that every time the person commits the offence, each time he shall be punished,.''

திருத்தம் முறைப்படி வழிமொழியப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருத்தம் வலியுறுத்தப் படுகின்றதா என அறிய விரும்புகிறேன்.

**திரு. பி. வெங்கடசாமி :** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

பிரிவு 12 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 13 திருத்தங்கள் இல்லை.

பிரிவு 13 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.



1997 ஏப்ரல் 30 ] [பேரவைத் துணைத் தலைவர்]

பிரிவு 14.

பிரிவு 14, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தம் திருத்தத்தை மொழியலாம்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன் :

" (i) Renumber Clause 14, as sub-clause (1) of that clause ;

(ii) after sub-clause (1) of clause 14 as so renumbered, insert the following as sub-clause (2), namely :

'(2) Save as otherwise provided in sub-section (1), the provisions of this Act shall be in addition to and not in derogation of, any other Act'.''

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், திருத்தம் ஏற்கப்பட்டது.

பிரிவு 14 திருத்தப்பெற்றபடி சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 15 முதல் 17 வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவு 15 முதல் 17 வரை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

## பிரிவு 18

பிரிவு 18, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தம் திருத்தத்தை மொழியலாம்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:

" In Clause 18, *for* the expression' 'such provisions of this Act', *Substitute* the expression 'such provisions not inconsistent with the provisions of this Act'".

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், திருத்தம் ஏற்கப்பட்டது.

பிரிவு 18 திருத்தப்பெற்றப்படி சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவுகள் 19 மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 19 மற்றும் இணைப்புப் பட்டியல், சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

''1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் சார்ந்த பரப்பிடங்களிலுள்ள விலங்குகள் மற்றும் பறவைகள் கட்டுப்பாடு செய்தல் மற்றும் முறைப்படுத்துதல் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 37/1997) திருத்தியவாறு நிறைவேற்றப்பெற வேண்டும் ''
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு திருத்தப்பெற்றவாறு ஏற்கப்பட்டது.

**(ச) தகவல் பெறுவதற்கான உரிமைச் சட்டமுன்வடிவு, 1997**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** 1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு தகவல் பெறுவதற்கான உரிமைச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 26/1997), மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

''1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு தகவல் பெறுவதற்கான உரிமைச் சட்டமுன்வடிவு @(சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 26/1997) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்''

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. சி.டி. தண்டபாணி.

**திரு. சி.டி. தண்டபாணி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு தகவல் பெறுவதற்கான உரிமையை வழங்குகின்ற வகையில் ஒரு சட்டத்தை இங்கே கொண்டு வந்திருப்பது, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய ஜனநாயகப் பண்புக்கு எடுத்துக்காட்டாக விளங்கக்கூடிய ஒரு சட்டமாகும். அரசியலிலே ஜனநாயக முறையும், அதே நேரத்தில் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேசிக் கொண்டிருக்கின்ற உறுப்பினர்களுக்கும், பேரவைத் தலைவருடைய இருக்கைக்கும் இடையிலே உறுப்பினர்கள் நடமாடக்கூடாது, உறுப்பினர்கள் எல்லோரும் அவரவர்களுடைய இருக்கைகளில் உட்கார வேண்டும்.

**திரு. சி.டி. தண்டபாணி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசியலில் மட்டுமே ஜனநாயகம் என்பது முழுமை பெறாது என்ற வகையில், சமுதாயத்திலும் ஜனநாயக முறைகள் இருக்க வேண்டும் என்று இந்த அரசு பல்வேறு துறைகளிலே பணியாற்றிக் கொண்டிருக்கக்கூடிய அதே சந்தர்ப்பத்தில், நிர்வாகத்திலேயும் ஜனநாயக முறை வரவேண்டும் என்ற வகையில் இந்தச் சட்டம் இங்கே கொண்டு வரப்பட்டிருக்கின்றது.

---

@ 17-4-1997-ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



பிற்பகல் 12- 05

வழக்கமாக அரசாங்கத்திலே பணியாற்றிக் கொண்டிருக்கக் கூடியவர்கள், எந்த அளவுக்கு மக்களுக்குப் பொறுப்பு ஏற்றிருக்கிறார்கள் என்பதெல்லாம் ஒரு கேள்விக்குறியாக இருந்தாலும்கூட, சட்ட ரீதியாக பொதுமக்கள் அந்த உரிமைகளையெல்லாம் பெறவேண்டுமென்ற வகையில் இதை இங்கே கொண்டு வந்திருப்பதற்காக நான் உள்ளபடியே வரவேற்கின்றேன். தமிழ்நாடு சட்டமன்ற வரலாற்றில் இது ஒரு மைல் கல் என்பதையும் நான் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில், ஜனநாயக உணர்வுகளுக்கு அது எந்த அளவுக்கு மதிப்பு அளிக்கிறது என்பதைக் கடந்த காலங்களிலே நாமெல்லாம் பார்த்திருக்கிறோம். இந்தியத் திருநாட்டில் ஜனநாயகம் பட்டுப்போகக் கூடாது என்பதற்காக, திராவிட முன்னேற்றக் கழகம், அதனுடைய அரசையே பணயமாக வைத்திருக்கிறது என்பதையும் நாமெல்லாம் அறிந்திருக்கிறோம். திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில், ஜனநாயகம் என்பது ஒரு தத்துவம் என்று எடுத்துக்கொள்ளவில்லை. அது ஒரு Way of life, வாழ்க்கை நெறிமுறை என்ற அளவுக்குத் தான் அதை நாங்கள் இன்றைக்கு எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

இந்திய அரசியல் சட்டத்தில் அடிப்படை உரிமைகள் என்று சொல்கின்ற வகையில், கிட்டத்தட்ட Fundamental rights என்ற அந்தத் தலைப்பிலே வரக்கூடிய 12-லிருந்து 35 வரைக்கும் இருக்கக் கூடிய பிரிவுகளில் எல்லா வகையான உரிமைகளும் வழங்கப்பட்டிருக்கின்றன. அதில் பேசுவதற்கு, எண்ணுவதற்கு, சந்தேகங்களை எழுப்புவதற்கு, கூட்டங்கள் நடத்துவதற்கு கிட்டத்தட்ட அடிப்படை உரிமைகள் என்று வழங்கப்பட்டிருந்தாலும்கூட, அரசியல் சட்டத்தில் 19-வது பிரிவில் அந்த உரிமைகள் வழங்கப்பட்டிருந்தாலும்கூட, அதையும் மீறி சாதாரண உரிமை என்று ஒன்று வழங்கப்பட்டிருக்கிறது. இந்த உரிமைகள் வழங்கப்பட்டு இருந்தாலும்கூட, Right to information Act என்ற உரிமை அரசியல் சட்டத்தில் வழங்கப்படவில்லை. நம்முடைய மாநில அரசு இன்றைக்கு முதல் முறையாக இதற்காக ஒரு மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறது. இது ஏற்கெனவே ஓரிரு மாநிலங்களில் கொண்டுவரப்பட்டிருக்கின்றது. என்றாலும்கூட, தமிழகத்தைப் பொறுத்தவரையில் முதல் முறையாக இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. 1994-ல் இராஜஸ்தானில் கொண்டுவரப்பட்டது, 1995-ல் மத்தியப் பிரதேசத்தில் கொண்டு வரப்பட்டது. பின்னர் 1996-ல் கோவாவில் கொண்டு வரப்பட்டது.

இருந்தாலும்கூட, தமிழகத்தில் முதல் முறையாக திராவிட முன்னேற்றக் கழக அரசு இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது என்பதுதான் நமக்குப் பெருமை தரத்தக்க விஷயமாகும். இதில் நான் என்னுடைய கருத்துக்களைச் சொல்கின்ற வேளையில், மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இதில் பொதுமக்கள் எந்தத் தகவலையும் அதிகாரியிடமிருந்து பெறலாம் என்ற அளவுக்கு சொல்லப்பட்டிருக்கிறது. ஆக, பொதுமக்களுக்கு உரிமை வழங்கப்படுகின்ற வகையில் இந்த மசோதா கொண்டுவரப்பட்டு இருக்கிறது. பொதுமக்கள்தான் இதில் முக்கியம். பொதுமக்கள் யாரிடத்தில் தகவல் பெறமுடியும் என்று சொன்னால், Competent Authority - Deputy Collector அந்தஸ்துக்குச் சமமாக உள்ள அதிகாரியிடத்தில்தான் அந்த விவரங்களைப் பெறமுடியும் என்று கூறப்பட்டிருக்கிறது. ஆனால், சாதாரண மக்கள் அவர்களிடம் சென்று அந்த விவரங்களைப் பெற முடியுமா என்பதையும் நாம் யோசித்துப் பார்க்க வேண்டும். ஆகவே, Deputy Collector என்று இருப்பதை மாற்றி, ஆங்காங்கே இருக்கக்கூடிய, பஞ்சாயத்து யூனியனில் இருக்கக் கூடிய அதிகாரிகள், தாலுக்கா அலுவலகத்தில் இருக்ககூடிய தாசில்தார்கள், முனிசிபாலிடியில் இருக்கக்கூடிய கமிஷனர்கள் போன்ற இவர்களிடம் விவரங்களைப் பெறலாம் என்று சொன்னால், பொதுமக்களுக்குக் கொஞ்சம் வசதியாக இருக்கும் என்பதையும், அவர்கள் கேட்கக்கூடிய அந்த விவரங்களை உடனடியாக அந்த அதிகாரிகள் தரமுடியும் என்பதையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, எப்போதுமே ஒரு மசோதாவைக் கொண்டு வருகின்ற நேரத்தில் the spirit of the Bill என்பது defeat ஆகாத அளவுக்கு நாம் நிச்சயமாகப் பார்த்துக் கொள்ளவேண்டும். இதிலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால், 2-வது பக்கம், 3-வது பிரிவில் `Information to whose disclosure would harm public safety or public order என்ற வகையில் சொல்லப்படும் விவரத்தால் பொதுமக்களுக்கு ஏதாவது பாதிப்பு என்ற அளவுக்கு இருந்தால், அந்த விவரத்தைத் தெரிவிக்க வேண்டிய அவசியம் இல்லை என்ற அளவுக்கு சொல்லப்பட்டிருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது) ஆகவே இதை முடிவெடுப்பது யார் என்று சொன்னால் அதிகாரிகள்தான். எந்த அதிகாரிகளிடத்தில் ஒரு வேலையைக் கொடுக்கிறோமோ அந்த அதிகாரியே இதுகுறித்து ஒரு முடிவு எடுக்கும்படியிருந்தால், நிச்சயமாக



பொதுமக்களுக்கு அப்படிப்பட்ட விவரங்கள் கிடைப்பது சிரமமாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

பிற்பகல் 12- 10

அதைப்போல, சட்டமுன்வடிவின் 4-வது பக்கத்தில் 3(4)(ஏ)-ல், சொல்லப்பட்டிருப்பது "If in the opinion of the competent authority any information, if disclosed, is likely to cause breach of the peace or cause violence, or disharmony among the section of the people on the basis of religion, language, caste, creed, community or if it is prejudicial to public interest, the competent authority shall refuse to give information.'' இதைக்குறித்தும் நீங்கள் மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எனவே சட்டம், ஒழுங்கு சம்பந்தப்பட்ட விவரங்கள் தரப்பட முடியாது; தர வேண்டிய அவசியம் இல்லை என்று சொல்கின்றபோது, அதையே ஒரு காரணமாக வைத்துக்கொண்டு பல அதிகாரிகள்—இந்த மசோதா இன்றைக்கு மட்டும் இருக்கக் கூடியதல்ல; நிரந்தரமாக இருக்கக் கூடியது—இதைக் காரணமாகக் காட்டி நிறுத்தக்கூடிய கட்டாயம் வரும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர்கள் அனைவரும் அவரவர்களுடைய இடத்தில் உட்கார வேண்டும்.

**திரு. சி. டி. தண்டபாணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நான் கூறியவற்றை பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு பெரிய, சிறப்பான முயற்சி என்ற அளவிலே இங்கே இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருந்தாலும், பொதுமக்களுக்கு இப்படிப்பட்ட சிரமங்கள் எதிர்காலத்திலே வராமல் இருப்பதற்கு ஏதாவது வழிவகை செய்ய முடியுமா என்பதையும் அமைச்சர் அவர்கள் ஆலோசிக்க வேண்டுமென்று கேட்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி.

* **THIRU B. VENKATASAMY**: Hon. Deputy Speaker, Sir, I welcome this Bill because anybody who wants to get information regarding the activities of any Government and offices, he can get now. Previously, it was not there. Now, the Hon. Minister has brought forward this Bill enabling the public to get any information required. But, there are lot of

restrictions in this Bill. For example, if a man wants to go to the Court, he can write a letter to the Court and get information from the legal aid Board or Consumers Court. But through this Bill, we will have to write a letter to an Officer not less than a rank of D.R.O., and if he wants to give the information, he can give or he may not give. The right to Information must be there. When you want to accept this seriously, then information should be given to the people.

From the British Parliamentary System, I want to refer one paragraph:—"I want to refer to the inquiry undertaken by Lord Frank in England on the question of right to information, openness in government transactions. Frank had reported that there can be no secret in democracy and the people should know what is going on in the Governent and every citizen should be provided all the information he seeks."

So, this Bill should also be like that. Then, why are lot of restrictions there? I therefore want to say that this Bill is not 'Tamil Nadu Right to Information Bill', but it is something other than that. There should not be any restriction to get the required information. I request the Hon. Minister to refer this Bill to a Committee of the House to get opinion from the public, the Press and the lawyers, etc. Then, it will be a very good Bill and Right to information will be given to everybody.

Thank you.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

*பிற்பகல் 12-15*

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மாநிலத்தில் தகவல் பெறுவதற்கான உரிமையைப் பெறுவதற்கும், அது தொடர்பான கட்டுப்பாடுகளை வகை செய்வதற்கும் கொண்டு வரப்பட்டுள்ள இந்தச் சட்டமுன்வடிவை வரவேற்கின்ற அதே நேரத்தில், அதில் சொல்லப்பட்டிருக்கின்ற கட்டுப்பாடுகள் என்பதுதான் ஏற்றுக் கொள்ளத் தக்க வகையில் இல்லை. முதல் பக்கத்தில் அந்த அதிகாரம் படைத்தவர், துணை ஆட்சியர் அல்லது அந்த நிலைக்குக் குறையாத, அல்லது அரசினால் அதிகாரம் அளிக்கப்பட்ட அந்நிலைக்குச் சமமானதொரு அதிகாரி என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. என்னைப் பொறுத்தவரையில், இன்னும்



கல்வி அறிவு பெறாத மக்கள், இங்கு நூற்றுக்கு ஐம்பது சதவிகிதம் இருக்கக்கூடிய இந்த நாட்டில், ஒரு துணை ஆட்சியரை அணுகுவது அவ்வளவு எளிதான காரியம் அல்ல. எனவே, இன்னும் கீழ் நிலை அதிகாரிகளுக்கு அந்தப் பொறுப்புகளை ஒப்படைக்கலாம். 50 ஆண்டு கால வரலாற்றில் நாம் கண்டது என்னவெனில், 'கொடு' என்று சொன்னாலே அதிகாரிகள் கொடுக்க மாட்டார்கள். ஆனால், கொடுக்கக்கூடாது என்று பல கட்டுப்பாடுகளை வைத்தால், அவர்கள் கொடுக்காததற்குப் பல காரணங்களைச் சுட்டிக் காட்டுவதற்கு வாய்ப்பு இருக்கின்றது. இங்கே, தகவல் பெறுவதற்கான உரிமை என்று வந்துவிட்ட பிறகு, ஏறக்குறைய 20-க்கும் மேற்பட்ட கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருக்கின்றன. அதன் காரணமாக எந்தத் தகவலைப் பெற முடியும் என்றே தெரியவில்லை. இதிலே என்னென்ன தகவல்களைப் பெறமுடியும் என்று சுட்டிக்காட்டியிருந்தால்கூட நன்றாக இருந்திருக்கும். எனவே, இதனுடைய நோக்கம் முறியடிக்கப்பட்டுவிடுமோ என்று நான் அஞ்சுகிறேன். எனவே, இந்த மசோதா நிறைவேற்றப்படுவதற்கு முன்பாக பத்திரிகையாளர்கள், சமூக நல இயக்கங்கள், பொது நல இயக்கங்கள் ஆகியவைகளுடன் ஒரு ஆய்வு நடத்தி, விமர்சனங்கள் பெற்று, எல்லோருடைய கருத்துக்களையும் பெற்று, இதனை நிறைவேற்றுவதிலும், ஏற்றுக் கொள்வதிலும்தான் அதனுடைய உண்மையான நோக்கத்தை நிறைவேற்றமுடியும் என்று நான் என்னுடைய கருத்தினைக் கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தகவல் பெறுவதற்கான உரிமைச் சட்டத்தை இந்த அரசு கொண்டு வந்திருப்பதைத் தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியின் சார்பாக நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இது மிக அற்புதமானதொரு சட்டம். தகவல் பெறுவதற்கான உரிமைகளைத் தரும்பொருட்டு இந்தச் சட்டம் இங்கே கொண்டு வரப்படுகின்ற அதே நேரத்தில், இதிலே பல நிபந்தனைகளை நாம் வைத்திருக்கின்ற காரணத்தினால், அலுவலர்கள், கொடுக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது என்று சொல்லி ஏமாற்றிவிடக்கூடிய வாய்ப்புகளும் அதிகமாக இருக்கின்றன. இதுபோன்ற நிபந்தனைகளை, 'கன்டிஷன்'களை அதிகமாகப் போட்டிருக்கின்ற காரணத்தினாலே, திருமணத்தைச் செய்து விட்டு, முதலிரவிற்கு அனுமதிக்காத ஒரு நிலைமைதான் இதிலேயும் வந்து

சேரும். ஆகவே, நிபந்தனைகளைக் குறைப்பதற்கு இந்த அரசு ஓரளவிற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். எவ்வளவோ சிறப்பானதொரு சட்டத்தைக் கொண்டுவந்தாலும்கூட, ஒரு அலுவலரிடம் மனுதாரர் மனுவொன்றைக் கொடுக்க வேண்டுமென்று சொல்கிறீர்கள். மனுவைக் கொடுத்தால், அந்த மனுவை மனுதாரர் கொடுக்கவில்லை என்றுகூட சொல்லக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன. அப்படிப்பட்ட நிலைமைகளைத் தவிர்க்க வேண்டுமென்றால், அரசு எல்லா அதிகாரிகளுக்கும், கம்ப்யூட்டர்களையாவது கொடுத்து, அந்த கம்ப்யூட்டர்களில் அதனை 'ஃபீட்' செய்தாலும்கூட, அந்த அதிகாரிகள் தப்பிக்க முடியாத அளவிற்கு நாம் செய்ய முடியும். ஆகவே, ஒவ்வொரு மனுவையும் கொடுக்கின்றபோதும், அது கம்ப்யூட்டரிலே பதிவாக வேண்டும். அப்படிப் பதிவானால், மனுதாரர் மனுவைக் கொடுக்கவில்லை என்று சொல்ல முடியாது. ஆகவே, அதற்காக ஒரு வழிமுறையை அரசு கையாள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஒரு மாத காலத்திற்குள் பதிலை அளிக்க வேண்டுமென்று சொல்கிறோம். மனுவை எந்த முறையில் அளிப்பது; மனுவைப் பெற்றுக் கொண்டதற்கான ரசீதினை எப்படி நாம் கொடுக்கப்போகிறோம்; ஒரு மாத காலத்திற்குள் அவர்கள் பதிலைத் தருவார்களா என்பதைக் கண்டுபிடிப்பதற்காக ஒரு குழுவையாவது இந்த அரசு நியமிக்க வேண்டும். ஒருவேளை, அந்த அரசு அலுவலர் ஒரு மாத காலத்திற்குள் பதிலைக் கொடுக்கத் தவறினால், அவர்கள் மீது என்ன நடவடிக்கையினை நாம் எடுக்கப் போகிறோம் என்பதையும் நாம் ஆராய வேண்டும். ஏனென்றால், அப்பீல் செய்யலாம் என்று மட்டும் சொல்லியிருக்கிறோம். 30 நாட்களுக்குள் பதில் கொடுக்கவில்லை என்றால், அப்பீல் செய்யலாம் என்று மட்டும் இதிலே வகை செய்யப்பட்டிருக்கின்றது. ஆனால், தகவலைத் தர மறுத்த அந்த அலுவலர்களுக்கு ஏதாவது தண்டனையை நாம் கொடுத்தாக வேண்டும். இல்லையென்றால், அவர்கள் ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லி ஏமாற்றிக் கொண்டிருப்பார்கள். ஆகவே, ஒரு வழிமுறையைக் கண்டுபிடிப்பதற்கு இந்த அரசு முன்வர வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) இன்னும் ஒரேயொரு நிமிடத்தில் முடித்து விடுகிறேன். அதேபோல, ஒவ்வொரு 'டிபார்ட்மெண்ட்'டிலும் இது நடைமுறைப்படுத்தப்படவேண்டும். டிரான்ஸ்போர்ட் டிபார்ட்மெண்ட் என்று சொன்னால், அங்கே என்னென்ன ஒப்பந்தம் யாருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது, எவ்வளவு விலைப்புள்ளிகள்



கொடுக்கப்பட்டிருக்கிறன என்ற விவரங்களையெல்லாம் அவர்கள் உடனடியாக அளிக்க வேண்டும்.

*பிற்பகல் 12-20*

நகராட்சிப் பணிகள், அங்கே என்னென்ன எடுக்கப்பட்டன; டெண்டர்கள் எவ்வளவுக்கு விடப்பட்டன என்ற தகவலைக் கொடுக்க வேண்டும். ஒரு மருத்துவமனைக்குச் சென்றால், எத்தனை படுக்கைகள் அங்கே இருக்கின்றன; எவ்வளவு இரத்தம் அதனிடம் இருப்பு இருக்கிறது என்பதை எல்லாம் சொல்லக்கூடிய அளவுக்கு, ஒவ்வொரு துறையிலும், எல்லாது துறைகளிலுமே இருந்தால், அதனால் ஊழலை நாம் ஓரளவுக்கு இந்தச் சட்டத்தின் மூலமாகத் தடுக்க முடியும்; முறைகேடுகளைக் குறைக்க முடியும். ஆனால், எப்படி அதை அலுவலர்கள் செயல்படுத்தப் போகிறார்கள் என்பதிலிருந்துதான், நாம் இதிலே எந்த அளவுக்கு வெற்றி அடையப்போகிறோம் என்பது தெரியும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள்—இது எல்லா அமைச்சர்களையுமே சாரும்; எல்லா அமைச்சர்களுமே—தங்களுடைய துறைக்கு இதுபோன்று மனுக்கள் வருமேயானால், அவற்றை உடனடியாகப் பெற்றுக் கொண்டு, அதற்கான இரசீது கொடுத்து, உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கும், தகவலைத் தர மறுத்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுப்பதற்கும் நீங்கள் தயாராக இருக்க வேண்டும்; அவர்களுக்குத் தண்டனை வழங்க வேண்டுமென்று கேட்டு, இந்தச் சட்டமுன்வடிவை வரவேற்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ். திருநாவுக்கரசு.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தகவல் பெறுவதற்கான உரிமை வழங்குவது தொடர்பான ஒரு சட்டமுன்வடிவை இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தச் சட்டமுன்வடிவு, வெளித் தோற்றத்திலே பார்க்கிறபோது, ஏதோ, பொதுமக்களுக்குத் தேவையான எல்லாவிதமான தகவல்களையும் அப்படியே வழங்குவதற்காகக் கொண்டு வருவதைப்போல, ஒரு புறத்தோற்றமாக இருக்கிறதே தவிர, உண்மையிலேயே, உள்ளே இந்த சட்டமுன்வடிவைப் படித்துப் பார்த்தால், நாற்பதுக்கும் மேற்பட்ட 'சப்-கிளாஸ்' எல்லாவற்றையும் சேர்த்துப் பார்ப்போமேயானால், ஏராளமான நிபந்தனைகளை, உள்ளே விதித்திருக்கிற உட்பிரிவுகளையெல்லாம் பார்க்கிறபோது, மொத்தத்தில், இந்தச் சட்டமுன்வடிவிலே, எதையெல்லாம் தரக்கூடாது என்பதற்குப் பதிலாக,

எதையெல்லாம் தருவோம் என்று கொண்டு வந்திருந்தால்கூட, அது பொதுமக்களுக்குப் பயனுடையதாக இருந்திருக்கும். நோக்கம், சரியான நோக்கமாக இருந்தாலும், அந்த நோக்கத்தை, இந்தச் சட்டமுன்வடிவின் வாயிலாக, இந்தச் சட்டம் நிறைவேற்றப்படுவதன் வாயிலாக, நிறைவேற்ற முடியாத அந்தச் சூழல்தான் இந்த ஷரத்துக்களின்படி ஏற்படும். அதிகாரிகள், எதையாவது சொல்லி, சாக்குபோக்கு சொல்லி, அதைத் தட்டிக் கழிக்கலாம் என்று கருதக்கூடிய மனோபாவம் உள்ளவர்கள், இதிலே இருக்கிற நிபந்தனைகளில் உள்ள ஒரு ஷரத்தைக் குறிப்பிட்டு, இந்த விதி, இத்தனையாவது ஷரத்தின்படி நாங்கள் தகவலைத் தரவேண்டியதில்லை; தர முடியாது, என்று எழுதி, இரண்டே வரியிலே கொடுத்து விடுவார்கள்.

அதேபோல், இதிலே குறிப்பிட்ட அதிகாரிகள் என்பதைப் பொறுத்தவரையில், மற்ற மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துக்காட்டியதைப் போல, ‘சப்-கலெக்டர்’ அல்லது ஆர்.டி.ஓ. அந்தஸ்திலே உள்ள அலுவலர்கள் என்று போட்டிருக்கிறீர்கள். ஆர்.டி.ஓ.-வோ, அல்லது ஆர்.டி.ஓ-க்குச் சமமான அதிகாரிகளோ என்பதற்குப் பதிலாக, `Taluk level Chief Officers' என்று எடுத்துக் கொள்ளலாம். ஆர்.டி.ஓ. என்றால், அவர் டிவிஷனல் லெவல் ஆபிஸர். `Taluk level' என்றால், தாசில்தார் அளவிலான மற்றும் அவருக்கு இணையான அதிகாரிகளிடத்திலே இருந்து தகவலைப் பெற்றுக் கொள்ளலாம் என்று இதனைப் எளிமைப்படுத்துவது, பாமர மக்கள் நிறைந்திருக்கிற, தமிழகத்திலே, பயனுள்ளதாக அமையும் என்பது என்னுடைய கருத்தாகும்.

அதேபோல், நான் ஏற்கெனவே சொன்ன மாதிரி, இந்த சட்டமுன்வடிவின் நோக்கம் சரியானதாக இருந்தாலும், இந்த நோக்கம் முழுமையானதாக நிறைவேற வேண்டுமென்று சொன்னால், உள்ளபடியே, பொதுமக்களுக்கு, எல்லாவிதமான தகவல்களையும் அவர்கள் அறிந்து கொள்கிற உரிமையை வழங்கக்கூடிய விதத்திலே, இது அமைய வேண்டுமென்று சொன்னால், இந்தச் சட்டமுன்வடிவை, அவசரக் கோலத்திலே கொண்டுவந்து நிறைவேற்றாமல், ‘செலக்ட் கமிட்டி’-க்கு அனுப்பி, இன்னும் நீங்கள் போட்டிருக்கிற நிபந்தனைகளை எல்லாம் எந்தெந்த விதத்திலே குறைக்கலாம்; பொதுமக்கள் எந்தெந்த விதத்திலே அதிகமான தகவல்களைப் பெறுவதற்கான வாய்ப்புகளை அதிகரித்துத் தரலாம் என்பதையெல்லாம் மறு ஆய்வு செய்து, அதற்குப் பின்னாலே, இந்தச் சட்டமுன்வடிவைக் கொண்டு வந்து





நிறைவேற்றுவதுதான் உகந்ததாக இருக்கும் என்கிற என் கருத்தைச் சொல்லி, அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் தகவல் பெறுகின்ற சட்டம் என்பதை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக, கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சி புரிந்த சோவியத் நாட்டில், மக்கள், தங்களுக்குத் தாங்களாகவே காசைப் போட்டுவிட்டு — ‘ரூபிளை’ போட்டுவிட்டு — பொருள்களை எடுத்துச் செல்கின்ற அந்த மக்கள் ஜனநாயக ஆட்சி உள்ள நாட்டில், இதுபோன்ற சட்டங்கள் மிகமிகப் பொருத்தமாக இருக்கும்.

*பிற்பகல் 12-25*

அந்தமாதிரி இடங்களிலேகூட ஏதாவது குறை ஏற்பட்டால் அதிகாரிகளிடத்திலே சென்று விவரங்கள் தெரிந்துகொள்வதற்கு, விளக்கம் பெறுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. ஒரு மக்களாட்சித் தத்துவம் என்கிற அடிப்படையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தச் சட்டமுன்வடிவைக் கொண்டு வந்திருப்பதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்றாலும், அதற்குப் பின்னாலும் அந்தத் தகவலைப் பெறாமல் இருப்பதற்கு என்னென்ன விதிகள் இருக்கின்றனவோ அந்த 22 விதிகளையும் இதில் கொடுத்திருப்பது சரியல்ல. நீங்கள் எந்த அளவுக்கு மக்கள் தங்களுடைய தகவலைப் பெறுவதற்கு வசதியாக எளிதான சட்டத்தை உருவாக்க வேண்டும் என்று எண்ணினீர்களோ அதற்கு மாறான நிலையில் இந்தச் சட்டம் அமைந்திருக்கிறது. அதற்கான காரணங்களைச் சொல்லக்கூடிய அதிகாரம், அந்த அதிகாரிகளுக்கு அளிக்கப்பட்டிருக்கிறதே தவிர மக்களை அலையவிட்டு அவர்கள் எதையும் பெறமுடியாமல் இந்த அரசின் மீது அவர்களுக்கு வெறுப்புணர்வு ஏற்படக்கூடிய விதத்தில் உள்ளடக்கங்கள் இதில் இருப்பதை நீங்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல இதை அவசரக் கோலத்தில் நிறைவேற்ற வேண்டிய அவசியம் இல்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்கூட்டியே இதுபோன்ற தகவல்களை மாண்புமிகு உறுப்பினர்களிடத்தில் கொடுத்து ஆழ்ந்த பரிசீலனைக்குப் பிறகு இதை நிறைவேற்றுவது என்பது சரியாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

அதோடு மட்டுமல்ல தகவல்களைப் பெறுகிற அதிகாரங்களைக் கொண்டு இந்தச் சட்டத்திலே, தமிழகத்திலே ஆர்.டி.ஓ. அல்லது சப்-கலெக்டர் போன்றவர்களிடம்தான் விவரங்களைக் கேட்க வேண்டுமென்று இருக்கிறது. அதைவிட பல உறுப்பினர்கள் சொல்லிய கருத்துக்களைப் போல ஊராட்சி ஒன்றிய அலுவலர், வட்டாட்சி அலுவலர் இதுபோன்ற அதிகாரிகளுக்கு அந்த அதிகாரத்தை வழங்குவது என்பது சரியாக இருக்கும். அப்போதுதான் பாமர மக்கள், ஏழை, எளிய மக்கள் தங்களுடைய தகவலைப் பெறுவதற்கு முடியும். இல்லையென்று சொன்னால், சப்-கலெக்டர், ஆர்.டி.ஓ.-யிடத்தில் போய் தகவல் பெறுவது என்பது சாதாரண காரியம் அல்ல. அப்படிப்பட்ட நிலைகளுக்கு இடம் அளித்திருக்கக்கூடாது. இதே சட்டத்தைப் பயன்படுத்தி சமூக விரோத சக்திகள் மிரட்டக்கூடிய, உருட்டக்கூடிய; அதிகாரிகளைக் கூட பயமுறுத்தக்கூடிய அளவுக்கு இதில் வாய்ப்புகள் இருக்கின்றன. சாதாரண நுகர்பொருட்களான அரிசி, மண்ணெண்ணெய் போன்றவற்றை வழங்கக்கூடிய கடைகள் எல்லாம் இருக்கின்றன. அனைவருக்கும் தகவல் தெரிவிக்க வேண்டுமென்று சொல்லி இந்தச் சட்டத்திலே இடமளிக்கப்பட்டிருக்கிறது. அமுதம் அங்காடி இருக்கிறது, கூட்டுறவு அங்காடி இருக்கிறது, ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் என்று இருக்கிறது. அவைகளிடத்தில் சென்று ஒரு சமூக விரோதி இங்கே கொள்ளை நடந்திருக்கிறது. நீ திருடி இருக்கிறாய், பணம் எடுத்திருக்கிறாய், இதிலே மோசடி நடந்திருக்கிறது என்று எங்களுக்குத் தகவல் வந்திருக்கிறது என்று ஒரு பெட்டிஷனைத் தயார் செய்து கொண்டு பிளாக் மெயில் பண்ணுவதற்கான வாய்ப்புகள்கூட இந்தச் சட்டத்திலே இருக்கின்றன. இதையெல்லாம் சரியாக ஆராய்ந்து, சரிசெய்து இந்தச் சட்டத்தைக் கொண்டு வருவதுதான் சரியாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். இந்தச் சட்டத்தினுடைய நோக்கம் நல்ல நோக்கம். எனவே இந்த வகையிலே இந்தச் சட்டத்தைப் பற்றி என்னுடைய கருத்தைச் சொல்லி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இந்தச் சட்டமுன்வடிவில் விவரிக்கப்பட்டுள்ள பல்வேறு ஷரத்துக்கள் குறித்து விரிவாகப் பேச விரும்பவில்லை. ஆனால் ஒன்றை மட்டும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்தச் சட்டம் மிக அடிப்படையான பல பிரச்சினைகளைக் கொண்டிருக்கக்கூடிய ஒரு சட்டமாகும். சமுதாயத்தில் இதை





நடைமுறைப்படுத்தும்போது பல்வேறு பிரச்சினைகள் உருவாகும்.
தனிப்பட்டவர்கள் பலர் பாதிக்கப்படக்கூடும். அதிகார
துஷ்பிரயோகத்திற்கு இது வழி வகுக்கக்கூடியதாக அமைந்திருக்கிறது.
எனவே, நான் அதுகுறித்து எல்லாம் விவரமாகப் பேசாமல் தயவுசெய்து
இது கூட்டாய்வுக் குழுவுக்கு விடப்பட்டு, கூட்டாய்வுக் குழுவிலே
ஆய்வு செய்த பிறகு நாம் இதைச் சட்டமாக ஆக்குவதுதான்
ஜனநாயகத்திற்கு ஏற்புடையதாக இருக்கும். வரவிருக்கிற பிரச்சினைகளை
எல்லாம் தடுப்பதற்கு ஏற்புடையதாக இருக்கும்.

*பிற்பகல் 12-30*

It requires lot of serious consideration because various provisions of
this Bill as they have been incorporated have serious implications for
individual liberty. Therefore, there is an ample scope for misuse of the
authority as has been proposed by this Bill. Therefore, without dwelving
deep into various provisions of this Bill, I only submit that it would be
appropriate and in tune with the Legislative procedure that we send to the
Select Committee for serious consideration. So, I submit that the Hon'
Minister should accede to the demand for referring the Bill to the Select
Committee for a detailed discussion. Otherwise, I do not think that it will
stand the legal scrutiny in any judicial Tribunal. At the very first stage, it
may face a very challenging stage in the Courts. Therefore, I request the
Hon'Minister who is piloting the Bill not to go in haste. Of late, I feel that
Bills are rushed through like anything. They are not in tune with the
democratic procedure. So far as this Bill is concerned, I demand that this
be referred to the Select Committee for a serious and detailed consider-
ation so that the difficulties that I now foresee should not arise. With this
proposal, I resume my seat. Thank you very much.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்ட அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, தகவல் பெறும் உரிமைச் சட்டத்தைப் பற்றி
மாண்புமிகு உறுப்பினர்கள் நல்ல பல கருத்துக்களை நல்கியிருக்கிறார்கள்,
அரிய ஆலோசனைகளையும் தந்திருக்கிறார்கள். நம்மை எல்லாம்
வழிநடத்திச் செல்கின்ற டாக்டர் கலைஞர் தமிழக முதல்வர் அவர்கள்
நிதிநிலை அறிக்கையை இந்த மாமன்றத்திலே சமர்ப்பித்தபோது Right

[திரு. ஆலடி அருணா] [1997 ஏப்ரல் 30

to Information தகவல் பெறும் உரிமைச் சட்டத்தை நாங்கள் உடனடியாக நிறைவேற்ற இருக்கிறோம் என்று இந்த மாமன்றத்திலே உறுதியளித்தார்கள். அந்த உறுதிமொழியை நிறைவேற்றுகின்ற வகையிலே இந்தச் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டு இன்றையதினம் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பட்டிருக்கிறது. இன்றைக்கு ஆட்சிப் பொறுப்பிலே இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகமானது உண்மையிலேயே நிர்வாகத்தை முழுக்க, முழுக்க ஜனநாயகத்தின் அடிப்படையிலே, வெளிப்படையாகவும், மக்களுக்கு நெருக்கம் உள்ளதாகவும் இருக்க வேண்டும் என்பதில் அழுத்தமான கொள்கையைக் கொண்டிருக்கிறது. எனவேதான் கடந்த காலத்தில் பல முறைகேடுகள், ஊழல்கள், தவறுகள், மோசடிகள், நிர்வாகத்திலே நடந்து வந்த நிலையில், நிர்வாகம் எப்படி நடக்கிறது என்பதைப் பற்றி பொதுமக்களுக்கு, சாதாரணமானவர்களுக்குத் தெரியாத பரிதாப சூழ்நிலை இருந்தது. அந்தச் சூழ்நிலை இருக்கக்கூடாது, அரசு என்ன திட்டங்களைக் கொண்டுவருகிறது, என்ன சட்டங்களைக் கொண்டு வருகிறது, என்ன நடவடிக்கையை எடுக்கிறது, என்ன அணுகுமுறையைப் பின்பற்றுகிறது, என்ன கொள்கையை வைத்திருக்கிறது என்பதை அவ்வப்போது மக்கள் தெரிந்துகொள்ள வேண்டும், அதற்கு ஒரு அரிய வாய்ப்பைக் கொடுக்க வேண்டும் என்ற ஒரு பெரிய நோக்கத்தோடுதான் இந்தத் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தை தமிழக அரசு கொண்டு வருகிறது என்பதை நான் பெருமையோடு சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். இந்தத் தகவல் பெறும் உரிமைச் சட்டம் ஏற்கெனவே நம்முடைய அரசியல் சட்டத்தில் Freedom of Speech and Expression என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்தக் கொள்கையை மையமாகக் கொண்டது இது என்பதை நான் அதிகமாக விளக்கத் தேவையில்லை.

தகவல் பெறும் உரிமை எவ்வளவு முக்கியம் என்பதைப் பற்றி ஒருமுறை 'ஐ.நா.' மன்றத்தின் சார்பில் ஒரு கருத்தரங்கு டெல்லியில் நடைபெற்றபோது, பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள் மிகச் சிறப்பாகக் குறிப்பிட்டார்கள்.

`If information including conflicting views and sometimes even contradictory views come from every quarter, we are more likely to arrive at the truth out of themselves' பல்வேறு மாறுபட்ட, வேறுபட்ட கருத்துக்களின் குழப்பங்களின் மத்தியில்தான் உண்மை வெளியாகும். அப்படிப்பட்ட நிலைக்கு ``The whole concept of the freedom of information vests in this idea" அதுதான் தகவல் பெறும் உரிமைக்கான ஒரு மையமான கருத்தாகும். ``I entirely agree that the sources of information should be as free and varied as possible" என்று பெருமதிப்பிற்குரிய பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்தக் கொள்கையின் ஒரு பெரும் பகுதியை நிறைவேற்றுகின்ற நோக்கத்தோடுதான் திராவிட முன்னேற்றக் கழக அரசு இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தாருங்கள் என்று உங்களைப் பணிவன்போடு வேண்டிக்கொண்டிருக்கிறது.



1997 ஏப்ரல் 30 ] [திரு. ஆலடி அருணா]

பிற்பகல் 12-35

மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் ஒரு கருத்தினைச் சொன்னார்கள். அதாவது, இதிலே நீங்கள் தகவல் பெறுகின்ற உரிமையைத் தந்து விட்டு, தகவல் பெறக்கூடாது என்பதற்குப் பல கட்டுப்பாடுகளை, நிபந்தனைகளை விதித்து இருக்கின்றீர்களே, அதனாலே, அதனைப் பயன்படுத்திக்கொண்டு, அதிகாரிகள் எங்களுக்குத் தகவல் தராமல் இருந்துவிடுவார்களே என்கின்ற ஒரு கருத்தினை என்னுடைய கவனத்திற்கு மாண்புமிகு உறுப்பினர்கள் கொண்டு வந்தார்கள். நாங்கள் எந்த எந்தத் தகவலைத் தரக்கூடாது என்று சொல்லியிருக்கிறோம். பாதுகாப்புக்குக் குந்தகம் விளைவிக்கிற, இறையாண்மைக்குக் குந்தகம் விளைவிக்கிற, சட்டம் ஒழுங்கிற்குக் குந்தகம் விளைவிக்கிற, வகுப்புக் கலவரத்தை உண்டாக்குகிற, தேவையில்லாத கசப்பு சூழ்நிலையை வளர்க்கிற, இப்படிப்பட்டவைகளுக்கு தகவல்கள் தர முடியாது என்று விளக்கமாக, தெளிவாக, நீதிமன்றங்கள் தவறாகப் பொருள் கொள்ளக்கூடாது என்கிற நோக்கத்தோடு, அதைத் தயாரித்து இருக்கிறோம். ஒரு சட்டத்தினை சுருக்கமாகச் சொல்வதினாலேயே அது குழப்பத்திற்கு இடம் அளிக்காது, அது தெளிவாக இருக்கும் என்று நாம் எண்ணிவிடக்கூடாது. உதாரணத்திற்கு அரசியல் சட்டத்தின் 14-ம் பிரிவை உங்களுக்குச் சொல்கிறேன்.

`The State shall not deny to any person equality before law and equal protection of Law within the territory of India' ஒரே sentence தான். All are equal before the eye of law, equal protection of law-இதுதான் அந்தக் கொள்கை.

ஆனால், ஒரே வரியிலே இருக்கிற அவற்றிற்கு எத்தனை வழக்குகள், ஆயிரக்கணக்கான வழக்குகள். எத்தனை விமர்சனங்கள், அது பற்றி,

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்திப் அவர்களுக்கெல்லாம் தெரியும். இன்னும் சொல்லப்போனால், சட்டம் என்றால் என்ன என்பதிலேயே இன்னும் தகராறு இருந்துகொண்டிருக்கிறது, உச்ச நீதிமன்றத்திலும் இருக்கிறது, அது பற்றி தத்துவ ரீதியாகவும் இருந்து கொண்டிருக்கிறது. எனவே, நாங்கள் சில கட்டுப்பாடுகளை விதித்து இருக்கிறோம் என்றால், அது நாட்டின் நன்மையைக் கருதியும், நிர்வாகத்தின் நலனைக் கருதியுமே தவிர, ஆளுங்கட்சியின் சுயநலத்திற்காக அதைச் செய்கிறோம் என்று அதனைத் தவறாக எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியமில்லை. இது போன்ற உரிமை பெறுகின்ற சட்டம் வேண்டுமென்று யாராவது போராடினார்களா, பேரணி நடத்தினார்களா, இந்தச் சட்டம் இல்லாததால் நாங்கள் சங்கடப்படுகிறோம் என்று யாராவது சொன்னார்களா, இல்லை. எங்களுடைய மனசாட்சியின் அடிப்படையில், எங்களுடைய ஜனநாயகப் பண்பின் அடிப்படையில், டாக்டர் கலைஞர் அரசு கொண்டு வருகிறது. இதை யாரும் வற்புறுத்தி, நிர்பந்தப்படுத்தி, நாங்கள் இதைக் கொண்டு வரவில்லை...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு, தங்களுடைய பதிலுரை சுருக்கமாக இருந்தால் நல்லது. இன்னும் பல்வேறு சட்டமுன்வடிவுகளை நிறைவேற்ற வேண்டியிருக்கிறது, உங்களுடைய துறை சம்பந்தமாகவே இன்னும் மூன்று சட்டமுன்வடிவுகள் இருக்கின்றன.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, உயர்ந்த நோக்கத்தோடுதான், இந்தச் சட்டத்தைக் கொண்டு வருகிறோம் என்பதை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். நீங்கள் எத்தனையோ துறைகளில் தகவல் பெறலாம். குறிப்பாகச் சொல்லப்பட்டிருப்பதைத் தவிர, மீதி எல்லா துறைகளிலிருந்தும் தகவலைப் பெறலாம். அமெரிக்காவில் அரசியல் சட்டத்தின் அதிகார வரம்பை வகுத்தபொழுது, மத்திய சர்க்காருக்கு என்று சில அதிகாரங்களைச் சொல்லிவிட்டு மற்ற அதிகாரங்கள் பூராவும் மாநிலங்களுக்கு என்று சொல்லிவிட்டார்கள். அதனாலேயே, மாநில அரசுகளுக்கு அரசில் அதிகாரம் இல்லாமலா போய்விட்டது. மத்திய அரசை விட மாநில அரசுக்குத்தான் அதிகாரமே அதிகம். அது போல் இந்த நிபந்தனை இல்லாத எல்லா பிரச்சினைகளிலும் உங்களுக்கு உரிமை இரு ்கிறது என்று பொருள். எல்லாவற்றிலும் உங்களுக்கு சுதந்திரம் இருக்கிறது என்று பொருள். அதை நாம் மறந்துவிடக்





கூடாது. இந்தத் தகவல் தருகின்ற உரிமை ஆர்.டி.ஓ. அல்லது டெபுடி கலெக்டர்களுக்குத்தான் அளிக்கப்படுமா, கீழ்நிலையில் இருக்கிற தாசில்தாருக்கு அளிக்கக்கூடாதா என்று கேட்டார்கள். அரசின் சார்பில் அதிகாரபூர்வமான தகவல்களைத் தரும்போது அது ஒரு பொறுப்பான அதிகாரிகளிடமிருந்து வருவதுதான் நியாயமானது, நேர்மையானது. எனவேதான், அதை அறிவித்திருக்கிறோம். தவிர, இது ஜனநாயக நாடு, ஆர்.டி.ஓ.,வையோ கலெக்டர்களையோ அல்லது செயலாளரையோ மற்ற அலுவலர்களையோ, பார்க்க முடியாமல் தத்தளித்துக் கொண்டிருக்க முடியவில்லை, இங்கே ஒன்றும் இரும்புத் திரை கிடையாது, யாரும் யாரையும் எப்போது வேண்டுமானாலும் பார்க்கலாம். எனவேதான் நாங்கள் ஆர்.டி.ஓ. என்று நிர்பந்திப்பதற்குக் காரணம், ஒரு பொறுப்புள்ள அதிகாரி என்ற அடிப்படையிலே நாங்கள் நிர்ணயித்திருக்கிறோமே தவிர, வேறு எந்த அடிப்படையிலும் அல்ல. இன்னும் ஒரு கருத்தினைச் சொன்னார்கள். இதை செலக்ட் கமிட்டிக்கு அனுப்பினால் இன்னும் ஆய்வு செய்யலாம் என்று சொன்னார்கள். பல விதிகளை ஆராய்ந்து, தெளிவுபடுத்தி, சட்ட வல்லுநர்களை கலந்து ஆராய்ந்துதான் இந்தச் சட்டமுன்வடிவு உருவாக்கப்பட்டிருக்கிறது. எனவே, இதனை பொறுக்குக் குழுவிற்கு (செலக்ட் கமிட்டி) அனுப்ப வேண்டிய அவசியமில்லை என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்திப் அவர்கள் நீதிமன்றத்திலே இந்தச் சட்டம் நிற்குமா என்ற சந்தேகத்தை எழுப்பினார்கள். நான் அவருக்குச் சொல்ல விரும்புகிறேன், அரசியல் சட்டத்தின் 19-ம் பிரிவில் நமக்கு பல அடிப்படை உரிமைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன, அதற்கு கீழே இருக்கிற பிரிவுகளில் எல்லாம் Reasonable restrictions நியாயமான காரணம் உள்ள நிபந்தனைகளுக்கு மாநில அரசுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கின்றன.

*பிற்பகல் 12-40*

எனவேதான் எல்லா நீதிமன்றங்களிலும் இந்தச் சட்டம் செல்லுபடியாகும் என்பதைச் சொல்லி, எந்த வழக்கையும் வெற்றிகரமாகச் சந்திக்கும் வாய்ப்பு இருக்கிறது என்பதையும் எடுத்துச்சொல்லி, இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தரவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரையும் பணிவன்போடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 7 வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 7 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,



"1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு தகவல் பெறுவதற்கான உரிமைச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 26/1997) நிறைவேற்றப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (2) குற்றவியல் செய் சட்ட (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 1997.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 1997-ஆம் ஆண்டு குற்றவியல் செய் சட்ட (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 32/1997), மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு குற்றவியல் செய் சட்ட (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு@ (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 32/1997) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** யாரேனும் ஆய்வு செய்கிறீர்களா? திரு. சி. ஞானசேகரன், ஒரு நிமிடத்தில் பேசி முடிக்க வேண்டும்.

---

@ 17-4-1997 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியின் சார்பாக இந்தச் சட்டமுன்வடிவை வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிற நான், ஒரே ஒரு ஆலோசனையைச் சொல்லவும் கடமைப்பட்டிருக்கின்றேன். இந்தியத் தண்டனைச் சட்டப் பிரிவு 420-ன்படி யாரெல்லாம், குற்றம் புரிந்து சொத்துக்கள் சேர்க்கிறார்களோ, அந்தச் சொத்துக்களையெல்லாம் ஜப்தி செய்ய வழக்குத் தொடுப்பதற்கு இந்தச் சட்டமுன்வடிவிலே வகை செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், ஜப்தி செய்யப்பட்ட சொத்துக்கள் எல்லாம் நீதிமன்றங்களிலே பல ஆண்டுகாலமாக வழக்குகள் முடிவடைந்தும் கொடுக்கப்படாமல் இருக்கிற நிலைமை உள்ளது. நிதி நிறுவனங்களை எடுத்துக்கொண்டால்கூட, எத்தனையோ பேர்கள் நட்டாற்றிலே விடப்பட்டிருக்கிறார்கள். நிதி நிறுவனங்களிடமிருந்துப் பெறப்பட்ட சொத்துக்களை எல்லாம் ஏலம் விட்டு, அது அசையாச் சொத்தாக இருந்தாலும்கூட அதையும் ஏலம்விட்டு, அந்தப் பணத்தை உரியவர்களுக்குக் கொடுப்பதற்கு ஒரு வழிமுறையைக் காணவேண்டுமென்ற ஒரு ஆலோசனையைச் சொல்லி, இந்தச் சட்டமுன்வடிவை வரவேற்று, அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, Attachment, அதாவது கையகப்படுத்துகின்ற சொத்துக்களை, வழக்கினுடைய தீர்வுக்குப் பிறகுதான் உரியவர்களுக்குக் கொடுப்பதையோ, மற்றவற்றையோ நாம் முடிவு செய்ய முடியும். ஆனால், அந்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள், குற்றவாளிகள் என்று நிரூபிக்கப்பட்டால் அந்தச் சொத்துக்களை அரசு எடுத்துக் கொள்வதற்கு, அதை ஏலம் விட்டு, சொத்துக்கள் யாருக்கு உரியதோ, அவர்களுக்குத் திருப்பிக் கொடுப்பதற்கு ஏற்கெனவே, Criminal Law Amendment Act, 1944-இல் இடமிருக்கிறது. எனவே, பாதிக்கப்பட்ட மக்களுக்கு - உதாரணமாக, இப்போது 31 நிதி நிறுவனங்களால் ஏறத்தாழ 177 கோடி ரூபாய்க்கு மோசடி நடந்திருக்கிறது. அரசினுடைய தீவிர முயற்சியினால் 105 கோடி ரூபாய்க்கான சொத்துக்கள் இன்றைக்குக் கையகப்படுத்தப் பட்டிருக்கின்றன. நீதிமன்றத்திலே, குற்றஞ்சாட்டப்பட்ட அந்த நிதி நிறுவனங்களின் அதிபர்கள் எல்லாம் குற்றவாளிகள் என்று நிரூபிக்கப்படுமேயானால், அந்தச் சொத்துக்களை எல்லாம் அரசே ஏலம்விட்டு, உரியவர்களுக்குத் திருப்பிக் கொடுக்க,



Criminal Law Amendment Act, 1944-ல் இடமிருக்கிறது என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு குற்றவியல் செய் சட்ட (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 32/1997) நிறைவேற்றப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## 5. அறிவிப்புகள் - தொடர்ச்சி

### (ச) தனி நீதிமன்றங்கள் சட்டமுன்வடிவு, 1997 (ஆ.இ)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு தனி நீதிமன்றங்கள் சட்டமுன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 39/1997) பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)-தொடர்ச்சி

### (ஊ) தனி நீதிமன்றங்கள் சட்டமுன்வடிவு, 1997

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு தனி நீதிமன்றங்கள் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 39/1997), மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.





பிற்பகல் 12-45

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு தனி நீதிமன்றங்கள் சட்டமுன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 39/1997) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ். திருநாவுக்கரசு.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவில், ஏதோ உச்ச நீதிமன்றத்தினுடைய அறிவுரைக்கு ஏற்ப அல்லது ஆலோசனைக்கேற்பக் கொண்டுவரப்பட்டுள்ளதைப் போல ஒரு தோற்றத்தை உருவாக்குகிற விதத்திலே சில வாசகங்கள் இடம் பெற்றுள்ளன. ஊழல் சம்பந்தமான வழக்குகளைத் துரிதப்படுத்தி விசாரிக்க வேண்டும், நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றெல்லாம் உச்ச நீதிமன்றத்தில் சில தீர்ப்புகளிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது என்பது உண்மைதான். அதிலே எந்தவிதமான கருத்து வேறுபாட்டுக்கும் இடமில்லை. ஆனால் இவற்றைத் தனி நீதிமன்றங்கள் மூலமாகத்தான் செய்ய வேண்டுமென்று, உச்ச நீதிமன்றத்திலே, எந்த உச்சநீதிமன்ற நீதிபதியும் எந்த அறிவுரையையும், ஆலோசனையையும் அரசுக்கு வழங்கவில்லை. இந்தச் சட்டமுன்வடிவிலே 1991-ஆம் ஆண்டு ஜூன் திங்களிலிருந்து, 1996-ஆம் ஆண்டு மே திங்கள் வரையிலான கால அளவுக்கு என்று குறிப்பிட்டிருப்பது உள்நோக்கம் உடையது. இரண்டாவது, இந்தக் காலகட்டத்திலே, பலர்மீது வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன; விசாரணை நடைபெற்று வருகிறது, குற்றவியல் நீதிமன்றங்களிலே. எனவே, ஏற்கெனவே இருக்கின்ற குற்றவியல் நீதிமன்றங்கள் போதுமானவை. இருக்கிற அடிப்படைகளை, ஆதாரங்களை மையமாக வைத்து, ஏற்கெனவே முறையாக இயங்கிக்கொண்டிருக்கின்ற குற்றவியல் நீதிமன்றங்களிலே இந்த வழக்குகளை விசாரிக்கலாம் என்பது அ.இ.அ.தி.மு.க.வின் கருத்தாகும்; என்னுடைய கருத்தும் அதுதான். ஸ்பெஷல் கோர்ட் அல்லது தனி நீதிமன்றங்கள் என்று வருகிறபோது, அதிலே அரசினுடைய செல்வாக்கைப் பயன்படுத்தக்கூடிய சூழ்நிலையும், அதிலே தனக்கு வேண்டியவர்களை நீதிபதிகளாக நியமிக்கக்கூடிய சூழ்நிலையும் அல்லது பரிந்துரை செய்யக்கூடிய சூழ்நிலையும்,

@ 26-4-1997 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

நேரடியாகவோ முறைமுகமாகவோ இடம் பெறச் செய்யக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன...

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசுக்குத் தனி நீதிமன்றங்களிலே தலையிடுவதற்கான செல்வாக்கு, அதிகாரம் இருக்கும் என்றால், வழக்கமாகச் செயல்படுகின்ற நீதிமன்றங்களிலும் அந்த வாய்ப்பு இருக்கும் என்று பொருள். ஆனால் இந்த அரசைப் பொறுத்தவரையில் வழக்கமாகச் செயல்படுகின்ற நீதிமன்றங்களாக இருந்தாலும் சரி, அல்லது தனி நீதிமன்றங்களாக இருந்தாலும் சரி, எந்தக் காலகட்டத்திலும் இந்த அரசு தலையீடு செய்யாது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இரண்டு நீதிமன்றங்களிலும் தலையிடுவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன என்று மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் சொல்கிறார்...

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வாய்ப்பு இருப்பதாகச் சொல்லவில்லை. உறுப்பினருடைய வாதத்திலே அந்தப் பொருள் இருக்கிறது என்றுதான் சொன்னேன்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதிலே முறையாக ஏற்கெனவே இயங்கிக்கொண்டிருக்கின்ற ரெகுலர் குற்றவியல் நீதிமன்றங்கள் என்கிறபோது, வழக்குகள் ஒரே நீதிபதியிடத்தில் வராது. பல வழக்குகள் பல நீதிபதிகள் மத்தியிலே விருப்பு வெறுப்புக்கு அப்பாற்பட்டு வரக்கூடிய சூழ்நிலை ஏற்படும். ஆனால் தனிநீதிமன்றங்கள் என்கிறபோது, குறிப்பிட்ட ஒருவரிடத்திலோ, இருவரிடத்திலோ வழக்குகள் வரக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. எத்தனை நீதிமன்றங்கள் அமைக்கிறார்களோ, எத்தனை நீதிபதிகள் போடுகிறார்களோ அவர்களிடம் மட்டுமே அந்த வழக்குகள் வரவேண்டிய சூழ்நிலை வரும். எனவே, அப்படி வருகிறபோது, நீதிபதிகள் நியமிக்கப்படுகிறபோது, அதற்குப் பின்னாலே பணியாற்றுகிற காலத்திலே, விசாரணை செய்கின்ற காலத்திலே அரசினுடைய செல்வாக்கு அதிலே பயன்படுத்தக்கூடிய சூழ்நிலை ஏற்படும். எனவே, இந்தக் குறிப்பிட்ட கால அளவு என்பது முன்னும் இல்லாமல்,



பின்னும் இல்லாமல், இந்தக் குறிப்பிட்டக் கால கட்டத்திலே, தனிநீதிமன்றங்கள் என்பது பழி வாங்கும் நோக்கோடு கூடிய ஒரு சட்டமுன்வடிவாகவே தெரிகிறது. தவறுகள் நடைபெற்று இருக்குமானால் அவற்றை முறையாக, நியாயமாக விசாரித்து ஊழல்களைக் களைகிற முயற்சிகளிலே ஈடுபடுவதிலேயோ அல்லது ஊழல்களைத் தடுக்கின்ற முயற்சிகளில் ஈடுபடுவதிலேயோ எந்தவிதமான கருத்துவேறுபாடுகளும் நிச்சயமாக இருக்க முடியாது.

*பிற்பகல் 12-50*

ஆனால், அதேநேரத்தில் அதற்கென்று தனியாக தனி நீதிமன்றங்களை அமைக்க வேண்டியது இல்லை; ஏற்கெனவே இருக்கின்ற குற்றவியல் நீதிமன்றங்களிலேயே—அவர்களுக்குப் போதுமான அதிகாரம், எல்லாவிதமான அதிகாரமும் உள்ளது; எனவே, அவற்றிலே நீங்கள் துரிதப்படுத்த வேண்டும் என்கின்ற ஒரே காரணத்திற்காக சொல்கிறீர்கள்; அவற்றிலேயே நீங்கள் துரிதப்படுத்தி இந்த வழக்குகளை எல்லாம் முடிக்க முடியும் என்பதை நான் எடுத்து சொல்லி, இது நியாயமாக நீங்கள் சொல்வதைப் போல, நாங்கள் தலையிட மாட்டோம் என்றாலும், தலையிடக்கூடிய வாய்ப்பு இருக்கிறது என்ற சந்தேகத்தையும்; இந்தத் தீர்ப்புக்கு பின்னாலே தலையீடு இருக்கிறது; இருந்திருக்கிறது என்பதைப் போன்ற ஓர் ஐயப்பாட்டையும் உருவாக்கக் கூடிய சூழல் உருவாகலாம் என்கின்ற காரணத்தினாலே, இதை ரெகுலர் நீதிமன்றங்களிலேயே விசாரிக்கிற விதத்திலே விட்டுவிடலாம்; தனி நீதிமன்றங்கள் தேவை இல்லை; எனவே, இந்தச் சட்டமுன்வடிவை திரும்பப் பெற வேண்டும் என்று அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே வற்புறுத்தி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. குழந்தை. தமிழரசன், சுருக்கமாகப் பேசி முடிக்க வேண்டும்.

**திரு. குழந்தை. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த 1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு தனி நீதிமன்றங்கள் சட்டமுன்வடிவை நான் மனதார வரவேற்கிறேன். நான் மட்டும் வரவேற்கவில்லை; தமிழ்நாட்டிலே இருக்கின்ற அத்தனை மக்களும் (மேசையைத் தட்டும் ஒலி) வரவேற்கிறார்கள். காரணம், மக்களினுடைய வாக்குகளைப் பெற்று, நம்பிக்கையின் அடிப்படையில் ஆட்சிக்கு வந்த முந்தைய ஆட்சியாளர்கள் 1991 ஜூன் முதல் 1996 மே மாதம் வரை இந்த நாட்டிலே அடித்த கொள்ளைகள், கோடி கோடியான ரூபாய்கள்

இந்த மக்கள் மன்றத்திற்கு, நாட்டிற்கு தெரியப்படுத்தப்பட வேண்டும் முந்தைய முதலமைச்சர் ஜெயலலிதா அவர்கள் மீது ஏறத்தாழ வழக்குகள் இதுவரை பதிவு செய்யப்பட்டுள்ளன. அதிலே 3 வழக்குகள் மீது இதுவரை சார்ஜ் ஷீட்-குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு இருக்கிறது. முந்தைய முதலமைச்சர் அவர்களை உறுதுணையாக வைத்துக்கொண்டு அ.இ.அ.தி.மு.க.வினர் ஊழல் செய்த காரணத்திற்காக இதுவரை 81 எப்.ஐ.ஆர் - முதல் தகவல் அறிக்கை இந்த நாட்டிலே பதிவு செய்யப்பட்டு இருக்கிறது. இவற்றை எல்லாம் விசாரிப்பதற்கு தனி நீதிமன்றம் அமைக்கப்பட்டால்தான் விரைவிலே அந்த வழக்குகள் - ஸ்பீடி டிரையல் - விசாரிக்கப்பட்டு, இந்த மக்கள் மன்றத்திலே குற்றம் செய்தவர்கள், ஊழல் செய்தவர்கள் தண்டிக்கப்படக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாகும்; இதற்குத் தனி நீதிமன்றம் அமைப்பதிலே எந்தவிதமான தவறும் இல்லை; அதிலே எந்தவிதமான உள்நோக்கமும் இல்லை என்று கூறிக்கொள்கிறேன். அதோடு, இவ்வளவு ஊழல் செய்த பிறகு, இவ்வளவு சொத்துக்கள் பறிமுதல் செய்த பிறகு, ஏறத்தாழ 39 பங்களாக்கள் இந்த நாட்டிலே முந்தைய ஆட்சியாளர்களால் சேர்க்கப்பட்டது என்று இந்த நாட்டிற்கு அறிவிக்கப்பட்டதற்குப் பின்னாலும்கூட, நீதிமன்றத்திலே நான் இதைச் சந்திப்பேன் என்று ஜெயலலிதா அவர்கள்.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. குழந்தை. தமிழரசன்:** உரையை முடித்துவிடுகிறேன். நீதிமன்றத்திலே அதைச் சந்திப்பேன்; நீதிமன்றத்திலே முகத்திரையை கிழிப்பேன் என்றெல்லாம் சவால் விட்டுக்கொண்டு இருக்கிறார்கள். இந்தத் தமிழகம் அந்த சவாலை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறது. ஒரே ஒரு வேண்டுகோளை வைக்கிறேன். தனி நீதிமன்றத்திலே நடக்கின்ற அத்தனை விசாரணையும் இந்த நாட்டு மக்களுக்கு நன்கு தெரிகின்ற வகையிலே டி.வி.-யில் ஒளிபரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்; அதற்கு இந்த மன்றம் ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டு அமைகிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகமும் அதனுடைய தோழமைக் கட்சிகளும் தேர்தல் நேரத்தில் ஒரு நேர்மையான



நிர்வாகத்தை நடத்துவோம், ஊழலற்ற ஆட்சியை நாங்கள் அமைப்போம்; யாரெல்லாம் கடந்த காலத்தில் ஊழல் செய்தார்களோ அவர்கள் மீது சட்டப்படி விசாரித்து நடவடிக்கை எடுப்போம் என்று உறுதி அளித்தது. அந்த உறுதி அளித்ததின் அடிப்படையில், மக்களுக்கு எந்த வாக்குறுதியைக் கொடுத்தோமோ அந்த வாக்குறுதியைக் காப்பாற்ற வேண்டும் என்ற பொறுப்புணர்வோடு, நியாய உணர்வோடுதான் இந்தத் தனி நீதிமன்றங்கள் அமைப்புச் சட்டத்தை நாங்கள் இன்றைக்கு முன்மொழிந்து இருக்கிறோமே தவிர; யாரையும் பழி வாங்குவதற்காக அல்ல; யார் மீதும் எங்களுக்கு அரசியல் அடிப்படையில் தனிப்பட்ட முறையில் எந்த குரோதமும் விரோதமும் கிடையாது. ஆனால், சட்டத்தை நிலைநாட்டி ஆகவேண்டும்; ஊழலை ஒழித்துக்கட்டி ஆகவேண்டும். அவர்கள் எவ்வளவு பெரிய பேர்வழியாக இருந்தாலும் நீதிமன்றத்திலே நிறுத்தப்பட வேண்டும் என்பதுதான் இந்த அரசினுடைய உறுதியான கொள்கை ஆகும். 1997-ஆம் ஆண்டு நாம் சுதந்திரதினத்தினுடைய பொன்விழாவைக் கொண்டாடிக் கொண்டு இருக்கின்றோம். இந்த ஆண்டு, சுதந்திர தினப் பொன்விழா ஆண்டு மட்டுமல்ல; இந்த ஆண்டு ஊழல் ஒழிப்பு ஆண்டு என்றுகூட நாம் பெருமையோடு சொல்லலாம் என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன். ஏனென்றால், உச்ச நீதிமன்றத்தில் கடந்த காலத்தில் மத்திய அரசிலே இடம் பெற்றிருந்த அமைச்சர்கள் எல்லாம் எப்படி நீதிமன்றத்திலும், உச்ச நீதிமன்றத்திலும், உயர் நீதிமன்றத்திலும், டில்லியிலே இருக்கின்ற மாவட்ட நீதிமன்றத்திலும் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகிறார்கள் என்பதை எல்லாம் மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள் தெளிவாக உணர்வார்கள். எனவே, இன்றைய தினம் நீதிமன்றங்கள் ஊழலை ஒழித்துக் கட்டுவதில் முனைப்போடு செயல்படுகின்றன. அதற்கு வேண்டுமானால் சில மாநில அரசுகள் ஒத்துழைப்பு கொடுக்காமல் இருக்கலாம். ஆனால், டாக்டர் கலைஞருடைய விழுமிய தலைமையில் இருக்கிற அரசு அப்படி முனைப்போடு செயல்படுவதற்கு எந்த நேரத்திலும் ஒத்துழைப்புக் கொடுக்கத் தயாராக இருக்கிறது என்பதின் அடையாளம்தான் இந்தச் சட்டமுன்வடிவு என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

*பிற்பகல் 12-55*

நீண்ட விளக்கங்கள் எல்லாம் சொல்ல ஆசைப்பட்டேன். அது தேவையில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் பேசும்போது, குற்றம் செய்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை

[திரு. ஆலடி அருணா] [1997 ஏப்ரல் 30

எதற்காகத் தனி நீதிமன்றத்தின் மூலம் விசாரிக்கவேண்டும், ஏற்கெனவே செயல்படுகின்ற நீதிமன்றங்களின் மூலமாக விசாரிக்கக் கூடாதா என்று கேட்டார்கள். நடைமுறையில் என்ன நடக்கிறது என்றால், சில நீதிமன்றங்களில் வழக்குகள் ஆண்டுக்கணக்கில் தேங்கிக் கிடக்கின்றன. 1980-ஆம் ஆண்டு போட்ட ஊழல் வழக்குகள் கூட நீதிமன்றத்தில் விசாரிக்க முடியாமல் இன்னும் இருக்கிறது. இவர்கள் எல்லாம் தப்பித்துக்கொண்டிருக்கிறார்கள்.

உங்களுக்கெல்லாம் தெரியும். முன்னாள் முதலமைச்சர் மீது ஒரு 'டிஸ்குவாலிபிகேஷன்' வழக்கு இருக்கிறது. அது இன்னமும் விசாரணைக்கே வரவில்லை. 1996-க்கு முன்னாலே அதிலே தீர்ப்புக் கொடுக்கப்பட்டிருக்குமேயானால், நாங்கள் இவ்வளவு சங்கடத்தையே அனுபவித்திருக்க வேண்டியிருக்காது. சரித்திரத்தின் போக்கே மாறியிருக்கும். எனவே இப்படிப்பட்ட நிலைகள் எல்லாம் எதிர்காலத்திலே இருக்கக்கூடாது. எனவே நீதி கிடைக்கவேண்டுமானால், உண்மையிலேயே ஊழல் செய்தவர்களைத் தண்டிக்கவேண்டுமானால், தனி நீதிமன்றங்கள் தேவைப்படுகின்றன என்பதே இந்த அரசினுடைய கொள்கையாகும்.

நான் இன்னொன்றையும் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை (டி.வி.ஏ.சி.) மட்டும் 149 வழக்குகளைப் பதிவு செய்திருக்கிறது. மாநில குற்றவியல் புலனாய்வுத்துறை (சி.பி.சி.ஐ.டி) மட்டும் 226 வழக்குகளைப் பதிவு செய்திருக்கிறது. ஆக மொத்தம் 375 வழக்குகள். இவற்றில் முன்னாள் முதலமைச்சர் தொடர்புடைய வழக்குகள் ஏழு. மற்ற முன்னாள் அமைச்சர்கள், ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., மற்றும் முக்கிய அதிகாரிகள் தொடர்புடைய வழக்குகள் 39, ஆக இந்த தனி நீதிமன்றங்கள் இந்த 46 வழக்குகளைத்தான் விசாரிக்கப்போகின்றன. இந்த 46 வழக்குகளை விசாரிப்பதன்மூலம் விரைவிலே அவைகளுக்குத் தீர்வு காணமுடியும். அவைகளுக்கு நல்ல முடிவு கிடைக்கும். மடியிலே கனம் இருந்தால்தானே உங்களுக்கு வழியிலே பயம்? உங்களுக்குத்தான் மடியில் கனம் இல்லையே? பிறகு ஏன் பயப்படுகிறீர்கள்? நீதிமன்றத்திற்கு வர ஏன் மறுக்கிறீர்கள்?

ஆனால் எனக்குக் கிடைத்திருக்கிற தகவல்படி, இந்த விசாரணையை எப்படித் தடுப்பது? எப்படி முடக்குவது? எப்படித் திசை திருப்புவது என்பதற்கான சூழ்ச்சிகள் எல்லாம், அதற்கான முயற்சிகள் எல்லாம் நடக்கின்றன என்ற தகவல்கள் கிடைத்திருக்கின்றன. அந்தத் தகவல்கள்



1997 ஏப்ரல் 30] [திரு. ஆலடி அருணா]

உண்மையாகவும் இருக்கலாம். ஒருவேளை தவறானதாகவும் இருக்கலாம். நோய் என்று சொல்லியே நீதிமன்றத்திற்கு வராமல் காலத்தைக் கடத்திவிடலாமா? இப்படி ஒரு ஆலோசனை. அல்லது சிகிச்சை என்று சொல்லி வெளிநாட்டுக்குப் போய் ஆண்டுக்கணக்காக உட்கார்ந்துக்கொள்ளலாமா? என்று இப்படி ஒரு எண்ணம்.

இன்னும் ஒரு படி மேலே போய், மூத்த வழக்கறிஞர்களின் ஆலோசனைகளைப் பெற்று ஒவ்வொரு பிரச்சினைக்கும் தடை ஏற்படுத்துவது, நாம் இந்தச் சட்டத்தை இப்போது நிறைவேற்றியவுடன், இந்தச் சட்டம் செல்லுமா என்று 'ரிட்' போடுவது, அதை சுப்ரீம் கோர்ட்டுக்குக் கொண்டுபோவது, ஆக இப்படிப்பட்ட பணிகளில் ஈடுபடலாமா என்று ஒரு முயற்சி நடக்கிறது. இதைவிட இன்னொரு சூழ்ச்சியும் அவர்களுக்கு இருக்கிறது. ஈட்டி எட்டியவரை பாயும், பணம் பாதாளம் வரை பாயும் என்ற நம்பிக்கையும் அவர்களுக்கு இருக்கிறது என்று அறிகிறேன். நான் அவர்களுக்குச் சொல்கிறேன். உங்கள் சூழ்ச்சிகள் முறியடிக்கப்படும். சூது விரட்டியடிக்கப்படும். எவ்வளவு பெரிய திமிங்கலங்களாக இருந்தாலும் சரி, அவர்களைச் சட்டத்தின் முன்னாலே நிறுத்துவோம். ஏனென்றால் அது எங்களுடைய கடமை. எங்களுடைய பொறுப்பு என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் எதற்காகத் தனி கோர்ட் என்று, சுப்ரீம் கோர்ட் சொல்லியிருக்கிறதே என்றார்கள். உண்மைதான். சுக்லா வழக்கில், உச்சநீதிமன்றம் அளித்த ஒரு தீர்ப்பை நான் இங்கே குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

``For the establishment of the continuance of the parliamentary democracy and to secure efficiency and purity of administration, it is necessary that when such a person commits serious abuse of power and or guilty of breach of trust imposed in them, they would form a special class of offenders"

அதாவது, இந்தக் குற்றவாளிகளைத் தனித் தரமாக, தனி இனமாகப் பாகுபடுத்தவேண்டும் என்று நீதிபதிகள் சொல்லியிருக்கிறார்கள்.

``Further the classification made has a reasonable nexus with the objects sought to be achieved namely, quick dispatch, speedy trial; the Act does not contravene the provisions of Article 14 என்று நீதிபதி கைலாசம், நீதிபதி ஃபசல் அலி, நீதிபதி ஏ.பி.கௌசல் ஆகிய மூன்று

நீதிபதிகள் கொண்ட குழு இந்தத் தீர்ப்பை அளித்திருக்கிறது. இந்த அடிப்படையிலேதான், இன்றைக்கு இந்தத் தனி நீதிமன்ற சட்டமுன்வடிவு வருகிறது. நீதியில் அக்கறையுள்ள திரு. திருநாவுக்கரசு அவர்களும் இதை வரவேற்பார் என்று நம்பிக்கை தெரிவித்து, இந்த மாமன்றமும் இதை முழுமனதுடன் வரவேற்கும் என்று நம்பிக்கை தெரிவித்து, இச்சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தரும்படி அன்போடு வேண்டுகின்றேன்.

பிறபகல் 1-00

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு அவர்கள், இதிலே அரசியல் செல்வாக்கெல்லாம் பயன்படுத்தப்படும் என்றெல்லாம் ஓர் அச்சத்தை வெளியிட்டிருக்கிறார்கள். யாரைக் குறித்த வழக்கில் அப்படி அரசியல் செல்வாக்கு வருகிறது? ஒருவேளை திரு. திருநாவுக்கரசு அவர்களின் நன்மைக்காகவே கொண்டு வரப்படுகின்ற சட்டமா என்றுகூட எங்களுக்குத் தோன்றுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

நேற்றையதினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களேகூட சட்டமன்றக் குறிப்பில் இருப்பதைப் படித்துப் பார்த்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் ஒரு நல்ல கருத்தை அப்போதிருந்த முன்னாள் முதலமைச்சரிடம் 'எங்களையெல்லாம் அடியாட்களாக மாற்றிவிடாதீர்கள் என்று சொன்னோம்' என்ற கருத்தை இங்கே வெளியிட்டார்கள். பொதுவாக யாரோடு சேரவேண்டும், யாரோடு சேரக் கூடாது என்பது குறித்து முடிவெடுப்பதற்காகவும் சரி—மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும்போதுகூட சூசகமாகச் சொல்லிக் கொண்டிருந்தார்கள். 'யாரோ ஒருவரைப் பற்றி என்று'—பொது வாழ்வில் யார் யாரெல்லாம் தவறிழைக்கிறார்களோ அவர்களையெல்லாம் தண்டிப்பதற்காகவே கொண்டு வரப்படுகின்ற ஒரு நீதிமன்றம், இதிலே நாம் அச்சப்பட வேண்டிய அவசியமேயில்லை. ஒரு வழக்கு அல்லது இரண்டு வழக்காகயிருந்தால் பரவாயில்லை, அவற்றை ரெகுலர் கோர்ட்டுகளிலே நாம் விசாரிக்க முடியும். ஆனால் பல வழக்குகள் இருக்கின்றன. `Delayed Justice is Denied Justice' என்று சொல்வார்கள். பொதுவாக அரசியல் வாழ்வில் இருப்பவர்கள்



அப்பழுக்கற்றவர்களாக இருக்க வேண்டும் என்கிற கருத்தைக் கொண்ட இந்த நீதிமன்றம் நிச்சயமாக வரவேற்கத்தக்க ஒன்று. ஆனால் இந்த நீதிமன்றத்திலேகூட காலதாமதம் வந்துவிடக் கூடாது. சில நேரங்களிலே ஸ்பெஷல் கோர்ட் என்று நியமிக்கிறோம். அந்த நீதிமன்றங்களிலேகூட வழக்குகள் டைம் லிமிட் இல்லாமல் நீண்டு கொண்டே போய்க்கொண்டிருக்கும். அதுமாதிரியில்லாமல் குறுகிய காலத்திற்குள் வழக்குகள் முடிக்கப்பட்டு, தீர்ப்புகள் சொல்லப்பட்டு நாட்டுக்கு நன்மை ஏற்பட வேண்டும். அதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர். (குறுக்கீடு)

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முன்பின் வருவதனால் குழப்பமாக இருக்கிறது. நியாயமாக அமைச்சர் அவர்கள் பேசியதற்குப் பிறகு மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் அவர்கள் பேசியிருக்கக்கூடாது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, அவர்கள் ஒரு `Point of Clarification' கேட்டார்கள். அதனாலேதான்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பரவாயில்லை. இப்பிரச்சினையில் என்னுடைய கருத்து என்னவென்றால், மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் அவர்கள் சொன்னதும் சரி, மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்கள் சொன்னதும் சரி, பொது வாழ்க்கையிலே ஊழல்கள் களையப்பட வேண்டும்; பொது வாழ்க்கையிலே நேர்மை வேண்டும் என்ற கருத்துக்களிலேயெல்லாம் எங்களுக்கு எந்தவிதமான வேறுபாடுகளும் கிடையாது. உச்ச நீதிமன்ற நீதிபதிகளேகூட அந்த வகையிலே தீர்ப்புகளைத் தந்திருக்கிறார்கள். அதிலும் பிரச்சினை கிடையாது. நாங்கள் சொல்வதெல்லாம், ரெகுலர் நீதிமன்றங்கள் அதாவது ஏற்கனவே இருக்கக்கூடிய குற்றவியல் நீதிமன்றங்களிலே இவற்றையெல்லாம் விசாரிக்கலாம். அவ்வாறு செய்வது எந்தவிதமான சந்தேகத்திற்கும் வழி வகுக்காமல் முறையாக நடப்பதற்கு உதவியாக இருக்கும். இதிலே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 'மடியிலே கனம் இருந்தால்தானே வழியிலே பயம் இருக்கும், ஏன் பயப்படுகிறீர்கள்' என்றெல்லாம் சொன்னார்கள். எங்கள் கழகத்தினுடைய பொதுச் செயலாளர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களே

சொல்லியிருக்கிறார்கள். 'என்மீது போட்டிருக்கிற வழக்குகளையெல்லாம் நீதிமன்றத்திலே சந்தித்து, அவற்றையெல்லாம் தவிடுபொடியாக்க நான் காத்திருக்கிறேன்' (சிரிப்பு) என்று சொல்லி அவரே 'எனக்கு பயமில்லை' என்று தெரிவித்திருக்கிறார். எனவே அதுபற்றிப் பிரச்சினையில்லை. அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்குப் பயமில்லை. ஆனால் இவற்றையெல்லாம் விசாரிக்க ஒரு தனி நீதிமன்றம் தேவையில்லை. அது பல யூகங்களுக்கும், சந்தேகங்களுக்கும் இடமளிக்கும். எனவே தவறுகள் நடக்காமல் வகைப்படுத்த வேண்டும் என்பதை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால் இவ்வாறு அமைக்கின்ற தனி நீதிமன்றம் ஒரு தவறான முன்னுதாரணமாக வருங்காலத்திலே அமையும் என்பதை நான் இந்த நேரத்திலே உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து இந்தச் சட்டமுன்வடிவை நீங்கள் நிறைவேற்ற வேண்டாம், திரும்பப் பெறவேண்டும் என்று வற்புறுத்துகிறேன். இது ஏதோ ஊழல் தடுக்கப்பட வேண்டும் என்பதற்கெல்லாம் எதிரானது அல்ல; விசாரணைகளுக்கு எதிரானது அல்ல. ரெகுலர் நீதிமன்றங்களிலே விசாரிக்கலாம் என்பதை நான் மீண்டும் சுட்டிக்காட்டி, இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்ற வேண்டுமென்று அரசு பிடிவாதம் பிடிக்குமேயானால், அ.இ.அ.தி.மு.க. சார்பிலே நாங்கள் வெளிநடப்புச் செய்ய வேண்டியிருக்கும். எனவே நீங்கள் வற்புறுத்துகிறீர்களா அல்லது சட்டமன்றத்திலே நிறைவேற்றப் போகிறீர்களா என்பதை மாண்புமிகு அமைச்சர் மூலமாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆர். சொக்கர்.

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, Point of Clarification-ல் மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்கள் சொல்லும்போது, இதுவரையுள்ள 46 வழக்குகளை மட்டும் இந்த நீதிமன்றம் விசாரிக்குமென்று சொன்னார்கள். இதுவரையிலும் உள்ள வழக்குகள் 46 ஆக இருக்கலாம். இனிமேலும் பழைய ஆட்சியாளர்கள் மீது தவறுகள் கண்டு பிடிக்கப்பட்டால் அந்தத் தவறுகளின் அடிப்படையில் வழக்குகள் பதிவு செய்யப்படுமேயானால், அந்த வழக்குகளையும் இந்த நீதிமன்றம் விசாரிக்குமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புவதோடு, உச்சநீதிமன்ற நீதிபதிகள் இதுபோன்ற வழக்குகளில் விசாரணை விரைவாக முடிக்கப்பட்டு நீதி வழங்க வேண்டும் என்றதன் அடிப்படையில் தனி நீதிமன்றம்



அமைக்கப்படலாம் என்று கருத்துத் தெரிவித்திருப்பதால் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பாக இந்தத் தனி நீதிமன்றம் அமைக்கப்படுவதை நாங்கள் வரவேற்கின்றோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆ இராசேந்திரன் என்கிற தீரன்.

*பிறபகல் 1-05*

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முன்னாள் முதலமைச்சரும் அவருடைய சக அமைச்சர்களும் செய்த முறைகேடுகள் பற்றி விசாரிக்க தனி நீதிமன்றம் அமைக்கப்பட்டிருப்பதை நாங்கள் பாராட்டி வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம். இதிலே மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் குறிப்பிட்டுச் சொன்னதைப்போல இந்த நீதிமன்றத்தின் மூலம் விசாரிக்கப்படுகிற வழக்குகள் எண்ணிக்கை இப்போது குறைவாக இருக்கலாம். ஆனால் இன்னும் தோண்டத் தோண்ட, 'கிணறு வெட்ட பூதம் கிளம்பியது' என்று சொல்வார்களே, அந்தப் பழமொழியைப் போல, ஏற்கெனவே நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சில நாட்களுக்கு முன்னால் சில கொசுறு ஊழல்களைப் பற்றியும் சொல்லி இருக்கிறார்கள். ஆகவே, அந்த ஊழல்களையும் இந்த நீதிமன்றம் விசாரிக்க வேண்டும். இந்த நேரத்தில் நான் வேண்டி விரும்பி கேட்டுக் கொள்வது எல்லாம் என்னவென்று சொன்னால், ஒருவேளை இந்த மாதிரியான விசாரணைக்கு தப்பித்துக் கொள்ளவேண்டும் என்பதற்காக வெளி நாடுகளுக்குக்கூட செல்ல வாய்ப்பு இருக்கிறது என்கிற ஒரு பயம் பரவலாக மக்கள் மத்தியிலே இருக்கிறது. ஆகவே, இதிலே சம்பந்தப்பட்டிருக்கிறவர்கள் வெளிநாடு செல்லாத அளவுக்குத் தக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கையெடுக்கப்பட வேண்டுமென்பதையும் இந்த நேரத்தில் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இதிலே நீதிமன்றத்தைச் சந்திக்க அச்சம் எங்களுக்கு இல்லையென்று முன்னாள் முதலமைச்சர் சொன்னாலும்கூட, 'புலிக்கு பயந்தவர்கள் எல்லாம் என்மீது வந்து படுத்துக்கொள்ளுங்கள்' என்று சொல்வார்களே அதைப்போல வேடிக்கையாகத்தான் இந்த நீதிமன்றத்தைப் பார்த்து தனக்கு அச்சம் இல்லையென்பதைப் போல அவர்கள் சொல்கிறார்கள். ஒரு வேதனையான செய்தி என்னவென்று சொன்னால், அவர் விஜய் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில், அப்பழுக்கில்லாத முன்னாள்

முதலமைச்சரும், தமிழகத்தினுடைய மிகப்பெரும் தலைவர்களில் ஒருவருமாக இருந்த, பெருந்தலைவர் காமராசர் அவர்களை இழுத்து வைத்து, அவர் மீது கூட குற்றஞ்சாட்டினார்கள் என்று சொல்லி, இவர் என்னவோ அவருக்கு எந்தவகையிலும் ஈடு இணையில்லாமல் இருக்கக்கூடியவர் போல, அவருக்கு இணையாக தன்னை ஒப்புமைகாட்டி பேசியிருக்கிறார்கள். எனவே, எந்தவகையிலும் தவறு செய்தவர்கள் முன்னாள் முதலமைச்சர், அமைச்சர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் மீது கடுமையான நடவடிக்கையெடுக்கிற வகையிலே இந்த நீதிமன்றம் சுதந்திரமாகவும், வெளிப்படையாகவும், மக்கள் மன்றங்களுக்கு உண்மைகளை எடுத்துச்சொல்கிற வகையிலே நடைபெற வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போதுள்ள வழக்குகளைச் சொன்னோம். இன்னும் விசாரணை நடந்து கொண்டிருக்கிறது. அந்த வழக்குகளையும் சேர்த்து அதே தனி நீதிமன்றத்திலே விசாரிப்பதற்கு சட்டத்தில் இடம் அளிக்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் சொன்னார்கள். நாங்கள் நிரபராதிகள் என்பதை நீதிமன்றத்திலே நிரூபித்துக் காட்டுவோம் என்று சொன்னார்கள். அது அவர்களுக்கு இருக்கிற உரிமை, அவர்களுக்கு இருக்கிற வாதம். ஆனால் அவர்களுக்கு நான் ஒன்றை நினைவுபடுத்த ஆசைப்படுகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே பீஷ்மநாராயண்சிங் அவர்களிடத்தில், அப்போதைய ஆளுநர் அவர்களிடத்தில் மனு கொடுத்தபோது, அந்த மனுவில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் உறுதி அளிக்கப்பட்டது. We undertake the responsibility of proving the charges என்று திராவிட முன்னேற்றக் கழகம் ஆண்மையோடு சொல்லியது. அன்றைக்கே அதைச் சொன்னோம் என்றால், இன்றைக்கு எவ்வளவு உறுதியோடு அதை நிரூபித்துக் காட்டுவோம் என்பதை திருநாவுக்கரசு அவர்கள் உணர்ந்து பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் திரு. திருநாவுக்கரசு அவர்கள் தேவையின்றி நீதிமன்றத்தைப் பற்றி சொல்லி, நீதிபதிகளுக்கு உள்நோக்கம் கற்பித்தார். அது நல்ல முறையல்ல, நல்ல பண்பல்ல. நீதிமன்றத்திலே நீங்கள் சந்திக்க வேண்டுமே தவிர, நீதிமன்றத்தைப் பற்றியோ, நீதிபதியைப் பற்றியோ குறை சொல்லக் கூடாது. இது தவறான முன்னுதாரணம் என்று சொல்கிறார்கள். தனி நீதிமன்றம் அமைப்பது தவறான முன்னுதாரணம் அல்ல. தலைசிறந்த முன்னுதாரணம் என்பதை அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ். திருநாவுக்கரசு.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர். நான் எந்த நீதிபதியைக் குறிப்பிட்டோ அல்லது எந்த நீதிமன்றத்தையும் குறிப்பிட்டோ, அவற்றிற்கு உள்நோக்கம் கற்பிக்கிற விதத்திலோ அல்லது யாரையும், எந்த நீதிபதியையும் களங்கப்படுத்துகிற விதத்திலோ எந்தக் கருத்தும் சொல்லவில்லை. நான் சுருக்கமாக, சொன்னது, ஏற்கனவே இயங்கிக் கொண்டிருக்கிற குற்றவியல் நீதிமன்றங்களிலேயே இந்த வழக்குகள் விசாரிக்கப்படட்டும், தனி நீதிமன்றம் வேண்டாம் என்பதுதான் என்னுடைய கருத்தே தவிர, இதிலே எந்த நீதிபதியையும் நான் மாசுபடுத்தி பேசவோ, குற்றம் சுமத்திப் பேசவோ, உள்நோக்கம் கற்பித்துப் பேசவோ இல்லை என்பதை மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் உணர்ந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீதிபதிகள் மீதும், நீதிமன்றங்களின் மீதும் இவ்வளவு நம்பிக்கையும் நல்லெண்ணமும் இருக்கிறபோது விசாரணையைச் சந்திப்பதற்கு மட்டும் ஏன் பயப்படுகிறீர்கள் என்பது தான் என்னுடைய ஐயமாக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (குறுக்கீடு)

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** பாயிண்ட் ஆப் ஆர்டர் சார் அமைச்சர் அவர்கள் சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட வேண்டுமென்று கேட்கவே இல்லையே?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** குரல் வாக்கெடுப்பிற்கு விட்ட பின்னால் பாயிண்ட் ஆப் ஆர்டர் கேட்க முடியாது.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** நீங்களாக அவசர அவசரமாக வாக்கெடுப்புக்கு விட்டு விட்டீர்கள். சட்டமுன்வடிவை நிறைவேற்றித்தர வேண்டுமென்று அமைச்சர் அவர்களை கேட்கச் சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் முதலிலேயே மூவ் பண்ணியிருக்கிறார்.

பிற்பகல் 1-10

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** பாயின்ட் ஆப் ஆர்டர் சார். எனவே இந்த சட்டமுன்வடிவை, நாங்கள் பிடிவாதமாகக் கொண்டு வந்து நிறைவேற்றப் போகிறோம், நாங்கள் தனி நீதிமன்றம் அமைக்கப் போகிறோம், ஏற்கெனவே இயங்கிக் கொண்டிருக்கிற நீதிமன்றத்திலே இதை விசாரிக்க மாட்டோம் என்று அரசு அடம் பிடிப்பதைக் கண்டித்து அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே வெளிநடப்புச் செய்கிறோம்.

(திரு. எஸ். திருநாவுக்கரசு மற்றும் திரு. சொ. கருப்பசாமி அவையில் இருந்து வெளி நடப்புச் செய்தனர்.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 11 வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 11 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு/தனி நீதிமன்றங்கள் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 39/1997) நிறைவேற்றப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

[1997 ஏப்ரல் 30

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

## (எ) கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1997

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.46/1997) மாண்புமிகு வணிக வரிகள் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. வே. தங்கபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 46/1997) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரிகள் துறை அமைச்சர் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 4 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

---

@29-4-1997 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



1997 ஏப்ரல் 30] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரிகள் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. வே. தங்கபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 46/1997) நிறைவேற்றப் பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரிகள் துறை அமைச்சர் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (ஏ) பொது விற்பனை வரி (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1997

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1997 ஆம் ஆண்டு தமிழ்நா பொது விற்பனை வரி (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடி (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.47/1997) மாண்புமி வணிக வரிகள் துறை அமைச்சர்.

* **மாண்புமிகு திரு. வே. தங்கபாண்டியன்:** மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே,

"1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 47/1997) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரிகள் துறை அமைச்சர் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 5 வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 5 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

---

@26-4-1997 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரிகள் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. வே. தங்கபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 47/1997) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரிகள் துறை அமைச்சர் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (ஐ) பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1997

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.48/1997) மாண்புமிகு வணிக வரிகள் துறை அமைச்சர்.

* **மாண்புமிகு திரு. வே. தங்கபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 48/1997) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிகவரிகள் துறை அமைச்சர் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிற்பகல் 1-15

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3 திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

@ 29-4-1997 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.





ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரிகள் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. வே. தங்கபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 48/1997) நிறைவேற்றப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரிகள் துறை அமைச்சர் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (ஒ) திரையரங்குகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1997

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரையரங்குகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 27/1997), மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[திரு. வ. முல்லைவேந்தன்] [1997 ஏப்ரல் 30

"1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரையரங்குகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு @ (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 27/1997) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 4 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

---

@ 17-4-1997 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



1997 ஏப்ரல் 30] [பேரவைத் தலைவர்]

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரையரங்குகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 27/1997) நிறைவேற்றப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## 8. அரசினர் தீர்மானங்கள்

### (அ) விதிகள் 30, 130 மற்றும் 132-ஐத் தளர்த்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் தீர்மானம், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

*** மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தி, 1997 ஆம் ஆண்டு, தந்தை பெரியார் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 49/1997) இன்றே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

[1997 ஏப்ரல் 30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

## 5. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (உ) தந்தை பெரியார் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 1997 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1997 ஆம் ஆண்டு தந்தை பெரியார் பல்கலைக் கழகச் சட்டமுன்வடிவைப் (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 49/1997) பேரவையின் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## (7) சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி

### (ஓ) தந்தை பெரியார் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 1997

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1997 ஆம் ஆண்டு தந்தை பெரியார் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 49/1997), மாண்புமிகு கல்வி அமைச்சர்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'1997 ஆம் ஆண்டு தந்தை பெரியார் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவுக்கு நான் ஒரு திருத்தத்தைத் தெரிவிக்கிறேன். தந்தை பெரியார் பல்கலைக் கழகம் என்பதற்குப் பதில் பெரியார் பல்கலைக் கழகச் சட்டமுன்வடிவு, @ (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 49/1997) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்". சட்டமுன்வடிவில் எங்கெல்லாம்

@ 30-4-1997 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



1997 ஏப்ரல் 30 ] [பேரவைத் தலைவர்]

'தந்தை பெரியார்' என்று உள்ளதோ அந்த இடங்களில் எல்லாம் 'பெரியார்' என்ற திருத்தத்தை மேற்கொள்ளப்பெற வேண்டும்.

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 65 வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 65 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி அமைச்சர்.

[1997 ஏப்ரல் 30

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் பல்கலைக் கழகச் சட்டமுன்வடிவு, ஏற்கனவே உள்ள பல்கலைக்கழகங்களில் இறுதியாக உருவான பல்கலைக் கழகத்திற்கு எந்தவிதமான சட்ட விதிமுறைகள் வகுக்கப்பட்டனவோ, அதே சட்ட விதிமுறைகளோடு அமைக்கப்பட்டு இருக்கிறது. ஏதேனும் மாற்றங்கள் எதிர்காலத்திலே தேவையானால் மற்ற பல்கலைக்கழகங்களுக்கு கருதப்படுவதுபோல் அந்தக் கால கட்டத்திலே தேவைப்படுகிறபோது, பட்டறிவின் பயனாகத் திருத்தங்கள் செய்யக் கருதப்படலாம்.

பிற்பகல் 1-20

இந்தப் பல்கலைக்கழகம் செப்டம்பர் 15-ஆம் தேதிக்குள் சேலத்தில் துவக்கப்பட வேண்டும் என்பதற்கான ஒரு அவசியமான, தேவையான சூழ்நிலையில் திட்டமிடப்பட்டிருக்கிறது. சேலத்திலே உள்ள பொறியியல் கல்லூரி வளாகத்தில் இதற்காக ஏறத்தாழ 130 அல்லது 140 ஏக்கர் நிலமும், அதற்குப் போதுமான வசதிகளும் கிடைக்கக் கூடிய சூழ்நிலையில், பொறியியல் கல்லூரி வளாகம் மிகப் பெரிய அளவிலே 1,000 ஏக்கர் அளவிற்கு உள்ள இடம் என்ற காரணத்தால், பல்கலைக் கழகம் அங்கேயே, அமைய, அதற்கான அடிப்படைப் பணிகள் விரைவாக நிறைவேற்றப்படுவதற்கு வழிவகை காணப்படும். ஏறத்தாழ ரூ. 630 லட்சம் அளவிற்கு, ரூ. 6 கோடிக்கு மேல் உடனடிப் பணிகளுக்காக ஒதுக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது. தந்தை பெரியார் என்று வழக்காற்றிலே சொல்கிற முறையிலே சொன்னாலும்கூட, இரண்டு சொற்களாக வருகிறபோது தந்தை பெரியார் என்பதை, டி.பி. என்று வழங்குகிற பழக்கங்கள் வந்துவிடும் என்ற காரணத்தால் பெரியார் என்றே வழங்கக் கருதப்பட்டது. அண்ணா பல்கலைக்கழகம் எப்படி அண்ணா என்ற பெயரில் மட்டும் அமைக்கப்பட்டிருக்கிறதோ, அதைப்போல பெரியார் பல்கலைக்கழகம் என்றே இது வழங்கும் என்றும், ஏற்கெனவே தரப்பட்ட சட்டமுன்வடிவிலே அந்தத் திருத்தம் இல்லாவிட்டாலும், திருத்தத்தோடு நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



1997 ஏப்ரல் 30 ] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

திருத்தப்பெற்றபடி சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (ஔ) நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டமுன்வடிவு, 1997

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 42/1997), மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 42/1997) கீழ்க்காணும் 14 சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களைக் கொண்ட ஆய்வுக் குழுவிற்கு அனுப்பப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

1. திரு. அ.லெ. சுப்பிரமணியன்
2. திரு. எஸ்.என்.எம். உபயதுல்லா
3. டாக்டர் காஞ்சனா கமலநாதன்
4. திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்
5. திரு. செங்கை சிவம்
6. திரு. சுப. தங்கவேலன்
7. திரு. அ. மணி
8. திரு. ஆர். சொக்கர்

9. திரு. ப. ரங்கநாதன்

10. திரு. கே. சுப்பராயன்

11. திரு. ம. அப்துல் லத்தீப்

12. திரு. பி.ஆர். சுந்தரம்

13. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்

14. திரு. கோ. சி. மணி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பேரவை விதி 146 (1)-ன் கீழ் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களையே இக்குழுவின் தலைவராக நியமிக்கின்றேன்.

## 10. பேரவைமுன் வைக்கப்பெற்ற அறிவிக்கைகளுக்கான திருத்தம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைமுன் வைக்கப்பெற்ற அறிவிக்கைகளுக்கான திருத்தம், திரு. பி. வெங்கடசாமி.

*** Thiru B. Venkatasamy:** I move the following amendment to Rule 23 of the Notification issued in G.O.Ms.No.131, Prohibition and Excise (VIII) Department, dated 11th June, 1996.

"In rule 23, the following words shall be inserted at the end:

'And those firms or individuals who are violating the rules may be debarred from bidding in future and in addition to the forfeiture of the deposit, a fine not less than 50,000/- (Fifty thousand) shall be levied'."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**Hon. Thiru Aladi Aruna:** Hon. Speaker Sir, the amendment moved by the Hon. Member is not agreeable to the Government. In his amendment, he has suggested three important things:

(1) To forfeiture the entire amount of deposit;

(2) Person who violates rules and regulations cannot be allowed in future auction;

(3) Punishment to the extent of Rs. 50,000/-.

It amounts to double punishment. It is against the principles of natural justice. Therefore, it is not agreeable to the Government.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. வெங்கடசாமி அவர்களின் திருத்தம் வலியுறுத்தப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. பி. வெங்கடசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

## 9. அரசினர் தனித் தீர்மானம்

**பணியிலிருந்து ஓய்வு பெறவிருக்கும் பேரவைச் செயலாளர் திரு. செ.சு. ஜானகிராமன் அவர்களுக்குப் பாராட்டுதல்கள்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் செயலாளராக 30-6-1991 -ஆம் நாள் முதல் பணியாற்றி 30-4-1997-ஆம் நாள் ஓய்வுபெற இருக்கும் திரு. செ.சு. ஜானகிராமன், பி.ஏ.,பி.எல்., அவர்களைப் பாராட்டும் வகையில் ஒரு தீர்மானத்தை பேரவை முன்னவர் அவர்கள் மொழிவார்கள்.

பிற்பகல் 1-25

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

[பேராசிரியர் க. அன்பழகன்] [1997 ஏப்ரல் 30

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் செயலாளராக 30-6-1991-ஆம் நாள் முதல் பணியாற்றி 30-4-1997-ஆம் நாள் ஓய்வு பெறவிருக்கும் திரு. செ.சு. ஜானகிராமன், பி.ஏ., பி.எல்., சட்டமன்றப் பேரவையில் 20-8-1958 முதல் இந்நாள் வரையில் சற்றேறக்குறைய 39 ஆண்டு காலம் ஆற்றியுள்ள சிறந்த பணிகள், எந்த நேரத்திலும் தயக்கமின்றி உடனடியாக மேலான பரிந்துரை அளிக்கும் திறன், சட்டமன்ற விதிகள் பற்றியும், சட்டமன்ற, பாராளுமன்ற மரபுகள் பற்றியும் தெளிவாகவும், திட்பமாகவும் அறிந்து வைத்து, அவ்வப்போது எடுத்துக்காட்டும் நுண்ணிய அறிவாற்றல், உறுப்பினர்கள் தங்கள் கடமைகளை சட்டமன்றப் பேரவையிலும் சரி, அவற்றின் பல்வேறு குழுக்களிலும் சரி, செவ்வனே நிறைவேற்ற நல்கிய உதவி, ஆகியவற்றைப் போற்றிப் புகழ்ந்து, இப்பேரவை பாராட்டுவதோடு, இப்பேரவை பெரிதும் விரும்பி நல்கும் பாராட்டுதல்களை அவருக்குத் தெரிவிக்குமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறது'' என்ற இந்தத் தீர்மானத்தை நான் மொழிகிறேன்.

திரு. ஜானகிராமன் அவர்கள் கடந்த காலத்தில் சட்டமன்றப் பேரவையில் இப்போதுள்ள பொறுப்புக்குக் கீழேயுள்ள பல பொறுப்புக்களிலே பணியாற்றி, படிப்படியாக வளர்ந்து, இந்தத் தலைமை பொறுப்பை ஏற்றவர்கள். நீண்ட அனுபவம், இந்தச் சட்டமன்ற விதிகளிலே பயிற்சி, நடைமுறைகளிலே காட்டப்பட வேண்டிய பல்வேறுவிதமான இணக்கமான முடிவுகள், இவைகளிலே மிகத் தெளிந்த சிந்தனையோடு எந்த நேரத்திலும் விளக்கம் தரக்கூடிய ஆற்றலோடு விளங்கி கடமையாற்றி இருக்கிறார்கள். இந்த ஆட்சி பொறுப்பேற்றதற்குப் பின்னால், ஏறத்தாழ ஓராண்டு காலத்திலேயும் அவர் ஆற்றியுள்ள பணி எந்த அளவு நமக்கெல்லாம் பயன்படத்தக்கதாக இருந்தது என்பதை நாம் எல்லாம் அறிவோம். ஒரு நடுநிலை சிந்தனையோடு செயல்பட்ட அவருக்கு நாம் அனைவரும் பாராட்டுத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றோம். சட்டமன்றத்தினுடைய தகுதி, சட்டமன்றப் பணிகளுடைய சிறப்பு, இவை எல்லாம் செயலாளருடைய உரிய வழிகாட்டுதலால் பெருமைப் பெறுகிறது. எனவே, அப்படிப்பட்ட நல்லதொரு பணியைத் திறமையாக ஆற்றிய திரு. ஜானகிராமன் அவர்களுக்குப் பாராட்டுதல்களைத் தெரிவிப்பதோடு, அவர் இன்னும் நலமோடு பல்லாண்டு வாழ வேண்டும் என்று வாழ்த்தி, என்னுடைய பாராட்டை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



1997 ஏப்ரல் 30]

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சட்டமன்றச் செயலாளர் திரு. ஜானகிராமன் அவர்கள் மிகச் சிறந்த—அவருக்குக் கிட்டத்தட்ட 62 வயதாகியிருக்கும் என்று நினைக்கிறேன்—ஆனால் ஒரு நல்ல இளைஞர் போன்ற சுறுசுறுப்போடு செயல்பட்டு, இந்த அவையில் கடந்த 5 ஆண்டுகாலமும் இந்த ஓராண்டு சேர்த்து 6 ஆண்டுகாலம் ஒவ்வொரு துறையிலேயும் தன்னுடைய திறமையை வெளிப்படுத்துகின்ற அளவுக்கு சிறந்த செயலாளராகச் செயல்பட்டார்கள். அவருக்கு என்னுடைய பாராட்டை நான் தெரிவித்துக்கொள்வதோடு, இந்தச் சட்டமன்றம் என்பது 50 ஆண்டு காலம் இருந்தது, இன்னும் ஆயிரம் ஆண்டு காலம் இருக்கப் போகிறது என்கின்ற முறையில் நம்முடைய செயலாளராக இருந்து இன்று ஓய்வு பெற இருக்கின்ற திரு. ஜானகிராமன் அவர்கள், இந்தச் சட்டமன்றத்தினுடைய நிகழ்ச்சிகளையெல்லாம் தொகுத்து எழுதி வருங்கால சட்டமன்ற உறுப்பினர்களுக்கு, இந்தச் சட்டமன்றம் எப்படி நடந்தது, எப்படி நடக்க வேண்டும் என்பதனை எல்லாம் மிக விளக்கமாக ஒரு ஆய்வுரை எழுத வேண்டும் என்று அவரை நான் கேட்டுக்கொள்கிறேன். அந்த முறையில் இந்தச் சட்டமன்றத்திற்கும் —நிறைய அனுபவங்களைப் பெற்ற நம்முடைய ஓய்வுபெறவிருக்கின்ற நம்முடைய செயலாளர் அவர்கள்—தமிழக மக்களுக்கும், நம்முடைய இந்திய அரசியலுக்கும் ஒரு பொக்கிஷமாக ஒரு புத்தகத்தை அவர்கள் எழுதி வழங்க வேண்டுமென்று கேட்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அனைத்துக் கட்சித் தலைவர்கள் சார்பிலும் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களை வாழ்த்துத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 1-30

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவை முன்னவர் அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தில் தொடர்ந்து அவர் வெளியிட்ட கருத்துக்களையும், எதிர்க்கட்சியினுடைய தலைவர் மாண்புமிகு பாலகிருஷ்ணன் அவர்கள் அதனை வழிமொழிந்து தெரிவித்த கருத்துக்களையும்—எதிர்க் கட்சித் தலைவர் என்று மாத்திரம் குறிப்பிடாமல் பெயரைக் குறிப்பிட்டதற்குக் காரணம் அந்தப் பெயரும் பதிவாக வேண்டும் என்பதற்காகத்தான். (சிரிப்பு) நானும் வழி மொழிந்து சில கருத்துக்களை இங்கே கூறிட விரும்புகின்றேன்.

[கலைஞர் மு. கருணாநிதி] [1997 ஏப்ரல் 30

திரு. ஜானகிராமன் அவர்கள் இந்தச் சட்டமன்றத்திலே நீண்ட நெடுங்காலமாக செயலாளராக, செயலாளராக பொறுப்பு ஏற்றதற்கு முன்பு வேறு பல பணிகளிலே பொறுப்பு ஏற்று நம் அனைவருடனும் மிக அன்பாகப் பழகி, இதமான நல்லுரைகளையெல்லாம் வழங்கி சட்டமன்றத்தினுடைய கண்ணியம் காப்பாற்றப்பட பேருதவி புரிந்தவர் ஆவார்.

நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே பேசும்போது கடந்த 5 ஆண்டுக்காலமும் இந்த ஓராண்டுக்காலமும் என்று குறிப்பிட்டார்கள். ஜானகிராமன் அவர்கள் நல்ல நேர்மையாளராக இருந்தாலும்கூட, நல்ல அறிவுரைகளை எடுத்துச் சொல்லக்கூடிய ஆற்றல் படைத்தவராக இருந்தாலும்கூட, அதற்கேற்ற சட்ட நுணுக்க அறிவைப் பெற்றிருந்தவராக இருந்தாலும்கூட, சட்டமன்றம் எப்படி நடைபெற வேண்டும் என்ற விதிமுறைகளையெல்லாம் ஆழ்ந்து, ஆய்ந்து அறிந்தவராக இருந்தாலும்கூட, அவராலும் நெருக்கடிகளுக்கு ஆளாகாமல் இருக்க முடியவில்லை.

எப்படி இந்த 5 ஆண்டு காலத்திலே தமிழகம் சிக்குண்டு கிடந்ததோ அதைப்போல அவரும் சிக்குண்டு கஷ்டப்பட வேண்டிய நிலைமையெல்லாம் ஏற்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகம் மீண்டதைப்போல அவரும் மீண்டு வந்து இந்த ஓராண்டுக் காலமாக எங்களோடு இருந்து அரிய பல யோசனைகளையெல்லாம் எங்களுக்கு அவர்கள் வழங்கியிருக்கின்றார்கள். அவர்கள் இன்றைக்கு ஓய்வு பெறுகிறார் என்றாலும்கூட நம்முடைய அவை முன்னவரும், எதிர்க் கட்சித் தலைவரும் சுட்டிக்காட்டியதைப்போல இன்னமும் நல்ல சுறுசுறுப்போடு, விறுவிறுப்பாக ஒரு இளைஞரைப்போல் பணியாற்றுகின்ற பக்குவம் அவருக்கு இருக்கின்ற காரணத்தால் இந்த அரசு அவரை ஓய்வுபெற்று விட்டீர்களே, எனவே போய்விடுங்கள் என்று கூறாமல் அவருக்கு உற்ற பணிகள், உரிய பணிகள் ஏதாவது இருப்பின் அவற்றைக் கண்டெடுத்து அந்தப் பணிகள் மூலமாக அவருக்கு, இந்தத் தமிழகத்திற்கு, தமிழக அரசுக்குத் தொண்டு செய்யக்கூடிய அந்த வாய்ப்பை நிச்சயமாக வழங்கும் என்ற உறுதியை (மேசையைத் தட்டும் ஒலி) நான் இங்கே வழங்கி அவர் பல்லாண்டு வாழ்க என்று வாழ்த்தி இந்த அளவில் என்னுடைய உரையை நிறைவு செய்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைத் தலைவர் என்ற முறையில் மரபின் காரணமாக சில வார்த்தைகள் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.



1997 ஏப்ரல் 30 ] [பேரவைத் தலைவர்]

30 ஆண்டு காலமாக திரு. ஜானகிராமன் அவர்களை நன்றாக எனக்குத் தெரியும். 1967-ஆம் ஆண்டுக்குப் பிறகு இன்றைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2, 3 முறை பல்வேறு குழுத் தலைவனாகப் பணியாற்ற எனக்கு வாய்ப்புத் தந்தார்கள். அந்தக் குழுக்களில் எல்லாம் நான் தலைவராகப் பணியாற்றும்போது திரு. ஜானகிராமன் எனக்கு உதவியாக அந்தக் குழுக்களில் பணியாற்றினார். ஆகவே மிகவும் நன்றாகவே தெரியும். அவர் சிறந்த சட்ட நுணுக்கம் உள்ளவர். ஏராளமான அனுபவம் இந்தச் சட்டமன்றத் துறையிலே அவருக்கு உண்டு. நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொன்னதைப் போல பல நெருக்கடியான காலங்களிலேகூட தன்னுடைய பதவியைக் காப்பாற்றிக் கொண்டார் என்பது நமக்கெல்லாம் மகிழ்ச்சியைத் தருகின்றது. அந்த வகையில் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், பேரவை முன்னவர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் சொன்ன பாராட்டுக்களோடு என்னுடைய பாராட்டையும் தெரிவித்து மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை.

தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

## 5. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஊ) பேரவை நிறைவேற்றிய அலுவல்கள் பற்றிய விவரங்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இறுதியாக ஒரு சடங்கு, பேரவைத் தலைவர் என்ற முறையில் நான் செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆக்வே சில நிமிடங்கள் பொருத்தருளுமாறு கேட்டுக்கொள்கிறேன். பேரவை நிறைவேற்றிய அலுவல்கள் குறித்து அறிக்கையைப் படிப்பதும் இந்த அவையின் மரபு.

பிற்பகல் 1-35

பதினோராவது சட்டமன்றப் பேரவையின் மூன்றாவது கூட்டத் தொடரின் முதல் கூட்டம், 22-1-1997 அன்று தொடங்கி 31-1-1997 வரை நடைபெற்றது.

[பேரவைத் தலைவர்] [1997 ஏப்ரல் 30

இரண்டாவது கூட்டம் 5-3-1997 முதல் இன்று 30-4-1997 வரை நடைபெற்றுள்ளது.

| | |
|---|---|
| பேரவை கூடிய மொத்த நாட்கள் | 46 |
| மாலையிலும் பேரவை கூடிய நாட்கள் | 3 |
| அவைக்கூட்டம் நடைபெற்ற மொத்த நேரம் ஏறத்தாழ | 196 மணி நேரம் |
| மேதகு ஆளுநர் அவர்கள் பேரவையில் 22-1-1997 அன்று உரையாற்றினார்கள். ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம் நடைபெற்ற நாட்கள் | 5 |
| பங்குகொண்ட உறுப்பினர்கள் | 38 |

1997-98-ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை 5-3-1997 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேரவைக்கு அளித்தார்கள்.

நிதி அலுவல்கள்

| | |
|---|---|
| வரவு-செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம் நடைபெற்ற நாட்கள் | 6 |
| பங்குகொண்ட உறுப்பினர்கள் | 52 |
| மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும் நடைபெற்ற மொத்த நாட்கள் | 25 |
| கொடுக்கப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் | 2923 |
| அவைமுன் வைக்கப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் | 2736 |
| விவாதித்து நிறைவேற்றப்பட்ட மானியக் கோரிக்கைகள் | 61 |
| உறுப்பினர்கள் ஆற்றிய மொத்த உரைகள் (குறுக்கீடுகள் இதில் இடம் பெறாது) | 312 |



1997 ஏப்ரல் 30 ] [பேரவைத் தலைவர்]

**சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானம்**

| | |
|---|---|
| அவசரத் தன்மை வாய்ந்த மிக முக்கியமான பொது பொருள்கள் குறித்து 'சிறப்புக் கவன ஈர்ப்பு' அதாவது ஸ்பெஷல் மென்ஷன் என்ற வகையில் அவையில் எடுத்துக்கொள்ளப்பட்டவை | 43 |
| அவற்றில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் அளித்தவை | 23 |
| எடுத்துக் கொள்ளப்பட்ட மொத்த நேரம் | 10 மணி 46 நிமிடங்கள் |
| பங்கு கொண்ட உறுப்பினர்கள் | 125 |
| இக்கூட்டத் தொடரில் ஆற்றப்பெற்ற மொத்த உரைகள் | 1012 |

**வினாக்கள் பற்றிய விவரங்கள்**

| | |
|---|---|
| 31-8-1996 முதல் நேற்று வரை சட்டமன்ற உறுப்பினர்களிடமிருந்து பெறப்பட்டு ஆய்வு செய்யப்பட்ட மொத்த வினாக்கள் | 6122 |
| வினாக்கள் அளித்த உறுப்பினர்களின் எண்ணிக்கை | 145 |
| அனுமதிக்கப்பட்ட மொத்த வினாக்கள் | 3208 |
| உடுக்குறியிட்டவை | 2562 |
| உடுக்குறியிடாதவை | 646 |

அனுமதிக்கப்பட்ட வினாக்களில் முதல் ஐந்து நிலைகளில் இருப்பவர்கள்:

| | |
|---|---|
| 1. திரு. இ. கணேசன் | 325 வினாக்கள் |
| 2. திரு. கே. சுப்பராயன் | 273 வினாக்கள் |
| 3. திரு. கு. ரவி அருணன் | 135 வினாக்கள் |

| | | |
|---|---|---|
| 4. திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத் | 109 | வினாக்கள் |
| 5. திரு. ப. கோவிந்தன் | 86 | வினாக்கள் |

**உடுக்குறியிட்ட வினாக்கள்**

| | | |
|---|---|---|
| இக்கூட்டத் தொடரின்போது அவையில் விடையளிக்கப்பட்டவை | 741 | |
| குறுகிய கால வினாக்கள் | 3 | |
| வினாக்கள்-விடைகள் நடந்த நாட்கள் | 38 | |
| வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்பட்ட நாட்கள் | 27 | |
| நீட்டிக்கப்பட்ட மொத்த நேரம் | 256 | நிமிடங்கள் |
| துணை வினாக்கள் | 1541 | |
| உடுக்குறியிடாத வினாக்கள் | 615 | |
| உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப் பெற்ற உடுக்குறியிட்ட வினாக்கள் | 1115 | |

**உரிமை மீறல் குறித்தப் பிரச்சினைகள்**

| | |
|---|---|
| 1. அவையில் எழுப்பப் பெற்றவை | 2 |
| 2. உரிமைக் குழுவிற்கு அனுப்பப் பெற்றவை | 1 |

**அரசினர் சட்டமுன்வடிவுகள்**

| | |
|---|---|
| வரப்பெற்றவை | 49 |
| நிறைவேற்றப்பெற்றவை | 48 |

**அரசினர் தனித் தீர்மானங்கள்**

| | |
|---|---|
| வரப்பெற்றவை | 1 |
| நிறைவேற்றப்பெற்றவை | 1 |

**பேரவை குழுக்கள் அவைக்கு அளித்துள்ள அறிக்கைகள்**

| | |
|---|---|
| 1. பொது நிறுவனங்கள் குழு | 33 |
| 2. பொதுக் கணக்குக் குழு | 27 |



| | |
|---|---|
| 3. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு | 12 |
| 4. மதிப்பீட்டுக் குழு | 8 |
| 5. மனுக்கள் குழு | 6 |
| 6. அரசு உறுதிமொழிக் குழு | 3 |
| 7. சட்ட விதிகள் ஆய்வுக் குழு | 3 |
| 8. அவை உரிமைக் குழு | 2 |

**கவன ஈர்ப்புத் தீர்மானங்கள்**

| | |
|---|---|
| உறுப்பினர்களிடமிருந்து வரப்பெற்றவை | 327 |
| அனுமதிக்கப்பெற்றவை | 83 |
| அவையில் எடுத்துக் கொள்ளப்பெற்று விளக்கம் அளிக்கப்பெற்றவை | 30 |
| இறுதி நாளன்று அவைமுன் வைக்கப் பெற்றவை | 27 |

## பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

| | |
|---|---|
| (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும் | 159 |
| (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள் | 222 |

**விதி 110-ன் கீழ் அமைச்சர்களின் அறிக்கைகள்**

| | |
|---|---|
| மொத்தம் | 7 |
| மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளித்தவை | 4 |

பிற்பகல் 1-40

**உறுப்பினர்கள் வருகை**

இக்கூட்டத் தொடரின்போது அனைத்து நாட்களும் பேரவைக்கு வருகை புரிந்த உறுப்பினர்கள் பட்டியல். அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துக்கள்.

[பேரவைத் தலைவர்] [1997 ஏப்ரல் 30

திரு. அ. அசோகன்

திரு. பால. ஆனந்தன்

திரு. இ. கணேசன்

திரு. டி. குண்டன்

திரு. வி. கோவிந்தன்

திருமதி ஆர். சரஸ்வதி

திரு. கே. சுந்தர்

திரு. சி. சுப்பிரமணி என்கிற சி.சு. மணி

திரு. ரா. சேதுநாதன்

டாக்டர் ஆ. ஞானசேகரன்

திரு. வீ. தமிழ்மணி

திரு. டி. நடராஜன்

திரு. கொ.வி. நன்னன்

திரு. ஜி. பழனிசாமி

திரு. மு. பன்னீர்செல்வம்

திரு. இ. புகழேந்தி

திரு. பெருந்துறை நா. பெரியசாமி

திரு. இரா. பேர்னார்டு

திரு. டி. மணி

திரு. செ. மதிவாணன்

திரு. ச.க. வெங்கடேசன்

திரு. மீ.அ. வைத்தியலிங்கம்



1997 ஏப்ரல் 30 ] [பேரவைத் தலைவர்]

**பார்வையாளர்கள்**

| | | |
|---|---|---|
| பார்வையாளர்கள் மாடத்தில் அனுமதிக்கப் பெற்றவர்கள் | 29,851 | ஆண்கள் |
| | 1,664 | பெண்கள் |
| தலைவர் மாடத்தில் அனுமதிக்கப் பெற்றவர்கள் மொத்தம் | 22,000 | |

**நூலகம்**

| | | |
|---|---|---|
| சட்டமன்ற நூலகத்திற்கு வருகை தந்தோர் | 475 | பேர் |
| வழங்கப்பெற்ற நூல்கள் | 694 | |

**நடவடிக்கைக் குறிப்புகள்**

| | |
|---|---|
| தட்டச்சு செய்யப்பெற்ற மொத்தப் பக்கங்கள் | 11,049 |
| மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு வழங்கப்பெற்ற நடவடிக்கைக் குறிப்புகளின் எண்ணிக்கை | 3,053 |
| தலைமைச் செயலகத்தில் பல்வேறு துறைகளுக்கு அனுப்பப்பட்ட நடவடிக்கைக் குறிப்புகளின் எண்ணிக்கை | 961 |

அடுத்து, சட்டமன்றப் பேரவை வைர விழாவும், தமிழகச் சட்டமன்ற பவள விழாவும் 14-7-1997 அன்று ஒருங்கே கொண்டாடப்பட உள்ளன.

இந்திய விடுதலை நாள் பொன் விழாவும் கொண்டாடப்பட உள்ளது.

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு உறுப்பினருக்கும் 25 இலட்சம் ரூபாய் மாண்புமிகு முதலமைச்சரவர்களால் வழங்க ஒதுக்கப்பட்டது.

சென்னை அரசினர் தோட்டத்தில் ரூபாய் 45 கோடி செலவில் உறுப்பினர்களுக்கு 240 அடுக்கு மாடி வீடுகள் கட்ட ஒப்புதல் அளிக்கப்பட்டது.

ரூபாய் 61 இலட்சம் செலவில் சட்டமன்றப் பேரவை செயலகத்தில் கணிப்பொறி அறிமுகப்படுத்தப்பட்ட திட்டத்தின்கீழ் முதற்கட்டமாக

ரூபாய் 13 இலட்சம் செலவில் நடவடிக்கை குறிப்புகளைத் தயாரிக்க கணிப்பொறிகள் நிறுவப்பட்டு உள்ளன.

கடந்த ஆண்டு உறுப்பினர்கள் மொத்தச் சம்பளம் ரூபாய் 1550 அளவுக்குக் கூட்டப்பட்டது. இந்த ஆண்டு ரூபாய் 2000 அளவுக்கு அதிகரிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் உறுப்பினருக்குரிய மாத ஓய்வூதியத்தின் குறைந்தபட்சத் தொகை ரூபாய் 800-லிருந்து ரூபாய் 1250 ஆகவும், ஒவ்வொரு வருட பதவிக் காலத்திற்கும் ரூபாய் 100 வீதம் என்று வைத்து அதிகபட்சத் தொகை ரூபாய் 1500-லிருந்து ரூபாய் 2500 ஆக உயர்த்தப்பட்டு உள்ளது.

சென்ற ஆண்டைவிட சட்டமன்றத்திற்காக இவ்வாண்டு ரூபாய் 60 இலட்சத்து 45 ஆயிரம் அதிகப்படுத்தி சுமார் 6 கோடியே 69 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

உறுப்பினர் மருத்துவச் செலவுக்காக வழங்கப்படும் தொகை ரூபாய் 1000-லிருந்து 2000 ஆக உயர்த்தப்பட்டு உள்ளது.

1996-97-ஆம் ஆண்டு அலுவல் ஆய்வுக் குழு மற்றும் விதிகள் குழு தவிர மற்றப் பேரவைக் குழுக்கள் அனைத்தும் வெளி மாநிலங்களில் ஆய்வுப் பயணம் மேற்கொண்டது.

பேரவை வரலாற்றில் முதன்முறையாகப் பத்திரிகை ஆலோசனைக் குழு தென் மாநிலங்களில் ஆய்வுப் பயணம் மேற்கொண்டது.

சட்ட விதிகள் ஆய்வுக் குழுவிற்கு ஆளுங்கட்சி உறுப்பினர்களைத் தலைவராகப் போடுவதே வழக்கம். இருப்பினும் 1997-98-ஆம் ஆண்டு சட்ட விதிகள் ஆய்வுக் குழுவில் முதன்முறையாக எதிர்க்கட்சி உறுப்பினர் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

சட்டமன்ற நூலகத்தில் உள்ள புத்தகங்களையும், பழைய ஆவணங்களையும் பாதுகாக்க ரூபாய் 23 இலட்சம் செலவில் சீரனி வசதி, ஏர்கண்டிஷன் செய்யப்படும்.

பேரவை அலுவல்களை நிறைவேற்ற உதவியாக இருந்தவர்களுக்கு நன்றி.

முதல் நன்றி மாண்புமிகு முதலமைச்சரவர்களுக்கு. தேசிய விவகாரங்களுக்காக டெல்லி சென்ற நாட்கள் தவிர, எல்லா நாட்களும், எல்லா நேரத்திலும் பேரவையிலே இருந்ததற்காக தனிப்பட்ட முறையிலே (மேசையைத் தட்டும் ஒலி) அவருக்கு என் நன்றியையும், வணக்கத்தையும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.



மாண்புமிகு அவை முன்னவரவர்கள், மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் அனைத்து உறுப்பினர்கள், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், இதர கட்சித் தலைவர்கள், மாண்புமிகு மாற்றுத் தலைவர்கள் திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், திரு. இரா. ஆவுடையப்பன், திரு. வை. இராமசாமி, திரு. செ. இராமலிங்கம், திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள், திரு. கே. சுப்பராயன், அரசுத் தலைமைக் கொறடா மற்றும் இதர கட்சிக் கொறடாக்கள், பத்திரிகையாளர்கள், வானொலி, தொலைக்காட்சி, இதர செய்தி நிறுவனங்கள், பேரவைச் செயலாளர், திரு. செ.சு. ஜானகிராமன், இதர அலுவலர்கள், பேரவை நிருபர்கள் மற்றும் பணியாளர்கள், ஒலிபெருக்கி வசதி செய்த பொதுப் பணித் துறை ரேடியோ ஆப்பரேட்டர்கள், பேரவைக் காவலர்கள், மின்னணு கடிகாரத்தை பராமரித்த திரு. சுவாமிநாதன், அனைவருக்கும் நன்றி.

பிற்பகல் 1-45

பேரவைத் தலைவர் என்ற முறையில் கடந்த 55 நாட்களாக எல்லா வகையிலும் எனக்கு ஒத்துழைப்புத் தந்த மாண்புமிகு உறுப்பினர்களுக்கு எனது நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். சில நேரங்களிலே கோபமாக நடந்திருந்தால் அதைப் பொறுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நான் இந்த நிலையை எடுப்பதற்குக் காரணம், இன்னும் சில மாதங்களில் நம்முடைய அன்றாட நிகழ்ச்சிகள் தொலைக்காட்சியிலே காட்டப்படப் போகின்றன. அந்த வகையில், நம்முடைய சட்டமன்றம் எப்படி நடக்கின்றது என்பது நாட்டுக்கு எடுத்துக்காட்டாக இருக்க வேண்டுமென்று விரும்புகின்றேன்.

குறிப்பாக, ஒன்றை மட்டும் சொல்கிறேன். நேரம் அதிகமாகிவிட்டது. பேரவைத் தலைவர் இருக்கைக்கும் பேசுகின்றவர்க்கும் இடையிலே யாருமே போகக் கூடாது என்ற மரபை அடிக்கடி நினைவுபடுத்தியிருக்கின்றேன். ஆனால், அதற்கு அடிபணிந்து அந்த மரபைக் கடைப்பிடித்தவர், இதுவரையிலே நான் பார்த்ததிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒருவர்தான். (மேசையைத் தட்டும் ஒலி) நான்கு முறை இங்கே பக்கத்திலே நின்று பேசுகின்றவர் பேசிய பிறகுதான் அவர்கள் இருக்கைக்குச் சென்றார்கள். ஆகவே, இப்படிப்பட்ட மரபுகளை நீங்கள் எல்லோரும் வருங்காலத்திலே கடைப்பிடித்து நம்முடைய சட்டமன்றம் இந்தியாவிலேயே ஒரு சிறந்த சட்டமன்றம் (மேசையைத் தட்டும் ஒலி) என்ற நற்பெயரை நீங்கள் இந்தத் தமிழ்நாட்டு மக்களுக்கு வாங்கிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[1997 ஏப்ரல் 30

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்படுவது பற்றிய அரசினர் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

## 8. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

### (ஆ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறுதல்

* **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பேரவை விதி 25(1)-ன்படி, பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறலாம்" என்ற தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

மறுப்போரே இல்லையென்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை. தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்படுகிறது. வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-47 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 11. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

159. 1994-95-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் பதினொன்றாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)



1997 ஏப்ரல் 30 ]

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

209. 1995-96-ஆம் ஆண்டிற்கான சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் பதினெட்டாவது ஆண்டறிக்கை. (தமிழ், ஆங்கிலம்)

210. மதிப்பீட்டுக் குழுவின் ஏழாவது அறிக்கை, 1996-97.

211. மதிப்பீட்டுக் குழுவின் எட்டாவது அறிக்கை, 1996-97.

212. பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்திநான்காவது அறிக்கை, 1996-97.

213. பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்தைந்தாவது அறிக்கை, 1996-97.

214. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 55-ன் கீழ் அனுமதிக்கப்பெற்ற கவன ஈர்ப்புத் தீர்மான அறிவிப்புகளின் மீது பெறப்பட்ட அறிக்கைகளின் பட்டியல் (வரிசை எண் 1 முதல் 27 வரை).

215. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (பத்தாவது பட்டியல்) (வரிசை எண் 1 முதல் 200 வரை) (உடுக்குறியிட்ட வினாக்கள் உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டவை).

216. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (பதினொன்றாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 200 வரை) (உடுக்குறியிட்ட வினாக்கள் உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டவை).

217. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (பன்னிரெண்டாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 200 வரை) (உடுக்குறியிட்ட வினாக்கள் உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டவை).

218. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (பதின்மூன்றாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 200 வரை) (உடுக்குறியிட்ட வினாக்கள் உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டவை).

219. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (பதினான்காவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 200 வரை) (உடுக்குறியிட்ட வினாக்கள் உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டவை).

220. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (பதினைந்தாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 115 வரை).

221. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (பதினாறாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 65 வரை).

## இணைப்பு

*(820 ஆம் பக்கத்தில் வரிசை எண் 3 என்பதன் கீழுள்ள குறிப்பைக் காண்க.)*

### 1. தூத்துக்குடி நடுநிலைப்பள்ளியில் ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்கப்படாமல் பாதிக்கப்பட்டுள்ளது குறித்து

**உறுப்பினர்: டாக்டர் அ. செல்லக்குமார்**

**அமைச்சர்: மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், (கல்வி அமைச்சர்)**

**அறிக்கை**

*தூத்துக்குடி, தச்சர் தெரு, உதவி பெறும் நடுநிலைப்பள்ளி, 10வது வார்டில் திரு. ஜி. தங்கப்பழம் என்பவரால் வாடகைக் கட்டிடத்தில் நடத்தப்பட்டு வந்தது. இப்பள்ளியின் கட்டிட உரிமையாளர் தூத்துக்குடி மாவட்ட முன்சிப் நீதிமன்றத்தில் தொடுத்திருந்த வழக்கில், 27-7-1995 அன்று வழங்கப்பட்ட தீர்ப்பாணையின்படி, பள்ளிக்கட்டிடம் காலி செய்யப்பட்டு 2-8-1995 அன்று கட்டிட உரிமையாளரிடம் ஒப்படைக்கப்பட்டது. அதன்பின், பள்ளிச் செயலர் தனக்குச் சொந்தமான ஒன்பதாவது வார்டில் உள்ள பள்ளிக்குச் சொந்தமான விளையாட்டு மைதானம் 81ஏ, கோபால்சாமி நாயக்கர் தெருவில் பள்ளி செயல்பட்டு வந்ததாகத் தெரிகிறது. மேற்படி பள்ளியினை தொடர்ந்து நடத்த இயலாத காரணத்தினால், தனது பள்ளிப் பொறுப்பு அனைத்தும் திரு. எஸ். வாசன் என்பாரிடம் 14-8-1995 முதல் ஒப்படைத்துவிட்டதாக தச்சர் தெரு நடுநிலைப்பள்ளியின் நிர்வாகி தேதியிடப்படாத கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். ஆனால், 6-9-1995 தேதியிட்ட கடிதத்தின் குறிப்பில் பள்ளி தனது நிர்வாகத்தின்கீழ் தான் 3-8-1995 முதல் இயங்கி வருகிறது என்று பள்ளிச் செயலர் தெரிவித்துள்ளார். ஆறு ஆசிரியர்கள் (நிர்வாகியின் சொந்தக்காரர்கள்) நிர்வாகியின்கீழ் தனியாகவும், தலைமை ஆசிரியர் உட்பட 19 ஆசிரியர்கள் வேறு ஒரு தனிப்பிரிவாகவும் பள்ளியை நடத்தி வருகிறார்கள். திரு. எஸ். வாசன் என்பாருக்கு பள்ளியின் நிர்வாக மாற்றம் செய்யப்பட்டதற்குரிய கருத்துருக்கள் ஏதும் பெறப்படாததால், நிர்வாக மாற்றம் குறித்து ஆணை ஏதும் வழங்கப்படவில்லை. திரு. எஸ். வாசன் என்பார் கல்வித் துறையால் அங்கீகரிக்கப்பட்ட நிர்வாகி இல்லை. தற்சமயம் திரு. ஜி. தங்கப்பழம் என்பவரே மேற்படி பள்ளியின் அங்கீகரிக்கப்பட்ட செயலர் ஆவார். இப்பள்ளியின் நிர்வாகி யார்*

என்பதற்கான பிரச்சினை எதுவும் இல்லை. மேற்படி பள்ளியின் அங்கீகரிக்கப்பட்ட செயலராக திரு. ஜி. தங்கப்பழம் என்பார் இருக்கும் நிலையில், தலைமை ஆசிரியர் தனியாக பிரிந்து சென்று 18 ஆசிரியர்களுடன் பள்ளியை நடத்தி வருவது விதிகளுக்கு முரணானது.

மேற்கண்ட பள்ளி இரண்டாகப் பிரிந்து செயல்படும் நிலையில், ஆசிரியர்கள் ஊதியம் பெறுவதில் தடை ஏற்படலாகாது என்ற கருத்தில், தூத்துக்குடி மாவட்ட தொடக்கக்கல்வி அலுவலர் தனது ந.க.எண்.3538/ ஆ6/95, நாள் 4-10-1995-ன்படி, நேரடி மானியம் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளார். அதன்படி செப்டம்பர், அக்டோபர் 1995-க்கான ஊதியம் தூத்துக்குடி நகர்ப்புற உதவிக்கல்வி அலுவலரால் பெற்று பள்ளித் தலைமை ஆசிரியர் மூலம் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டது. ஆயினும், பள்ளிச் செயலர் திரு. ஜி. தங்கப்பழம் என்பாரின்கீழ் பணியாற்றிய 6 ஆசிரியர்கள், நேரடி மானியம் மூலம் ஊதியம் பெற மறுத்ததால் இத்தொகை அரசு கணக்கில் திரும்பச் செலுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தூத்துக்குடி, மாவட்ட தொடக்கக்கல்வி அலுவலரின் ந.க.எண்.3538/ ஆ6/95, நாள் 26-12-1995 நாளிட்ட கடிதத்தில், தச்சர் தெரு பள்ளியின் நிர்வாகி திரு. ஜி. தங்கப்பழம் என்பவரால் ஆறு ஆசிரியர்களைக் கொண்டு நடத்தும் பள்ளிக் கட்டிடத்திற்கு கட்டிட உறுதிச் சான்று, கட்டிட உரிமம், சுகாதாரச்சான்று பெறப்படாததாலும், போதுமான தளவாடச் சாமான்கள், நூலக வசதி இல்லாத காரணத்தாலும், பள்ளிக்கு வழங்கப்பட்ட நிரந்தர அங்கீகாரம் மற்றும் மானிய உதவியை ஏன் திரும்பப் பெறக்கூடாது என்று முன்னறிவிப்பு தபால் அனுப்பப்பட்டது. இதனை எதிர்த்து பள்ளிச் செயலர், சென்னை உயர்நீதிமன்றத்தில் உரிமை மனு எண் 419/96 மற்றும் உரிமை பல்வகை மனு எண் 678/96-ல் வழக்கு தொடுத்து 11-1-1996 முதல் 3 வாரத்திற்கு கீழ்க்கண்டபடி இடைக்காலத் தடை பெற்றார்.

"Interim injunction restraining the respondents 1 to 5 herein from any manner interfering with the administration of the petitioner's school by withholding the grant or withdrawing the permanent recognition of the petitioner's school".

3 வாரத்திற்கு அளிக்கப்பட்ட தடை ஆணையினை தொடர்ந்து நீட்டிப்பதாக 1-2-1996 அன்று பிறப்பிக்கப்பட்ட ஆணையிலும், 19-6-1996-ல் பிறப்பிக்கப்பட்ட ஆணையில் மறு உத்தரவு பிறப்பிக்கும்வரை (Until further orders) தடை ஆணை நீட்டிப்பதாக ஆணை



வழங்கப்பட்டுள்ளது. அத்தீர்ப்பாணையினைத் தொடர்ந்து, நிர்வாகியால் நீதிமன்ற அவமதிப்பு வழக்குத் தொடர்ந்து அதன் காரணமாக நீதிமன்ற அவமதிப்பு வழக்கு நோட்டீஸ் சி.ஏ.134/96 பெறப்பட்டது.

நீதிமன்ற அவமதிப்பு வழக்கு சார்பாக நிர்வாகி மூலம் போதனா மானியம் ஏழு ஆசிரியர்களுக்கு அனுமதிக்கப்பட்டு வருகிறது. (தலைமை ஆசிரியர் கீழ் பணிபுரியும் 18 ஆசிரியர்களில் ஒருவர் நிர்வாகியின்கீழ் நடைபெறும் பள்ளியில் சேர்ந்துவிட்டார். நீதிமன்ற தடை ஆணை உள்ளதால் பள்ளி நிர்வாகி பொறுப்பில் உள்ளவர்களுக்கு ஊதியம் வழங்கப்பட்டது. 18 ஆசிரியர்களுக்கும் மானியம் வழங்கப்படவில்லை.

தூத்துக்குடி மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர் மேற்படி ஆசிரியர்களுக்கு நேரடி மானியம் வழங்கியதை எதிர்த்து, நிர்வாகி திரு. ஜி. தங்கப்பழம் தொடுத்த வழக்கு உரிமை மனு எண் 15878/95, உரிமை பல்வகை மனு எண்25250/95 19-6-1996-ல் தள்ளுபடி செய்யப்பட்டது. எனினும், மேற்படி ஆசிரியர்கள் விதிகளுக்கு முரணாக தன்னிச்சையாக பள்ளி நடத்தி வருவதால் அவர்களுக்குப் போதனா மானியம் வழங்கப்படவில்லை.

## 2. மேல்நிலைக் கல்விப் பணியில் முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டது குறித்து

**உறுப்பினர்: திரு. கே. சுப்பராயன்**

**அமைச்சர்: மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், (கல்வி அமைச்சர்)**

**அறிக்கை**

1996-97-ல் அரசு மேல்நிலைப்பள்ளிகளில் காலியாக இருந்த முதுகலை ஆசிரியர் பணியிடங்கள் ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலம் பூர்த்தி செய்ய வேண்டி இருந்தது. ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் நேர்காணல் நடத்தி தெரிவு செய்து, ஆசிரியர்கள் நியமனம் செய்ய பட்டியல் பெற காலதாமதமாகும் என்பதால், மாணவர்கள் நலன் கருதி மாவட்ட வேலை வாய்ப்புகள் பதிவு முன்னுரிமை உள்ளிட்ட சில கோட்பாடுகளின் அடிப்படையில் தற்காலிகமாக நியமனம் செய்ய அரசு ஆணை எண் 684, கல்வி அறிவியல் மற்றும் தொழில் நுட்பத் துறை, நாள் 24-9-1996-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டது. அதனடிப்படையில் மாநில மற்றும் சார்நிலைப் பொது விதி 10 (ஏ) (I)ன்படி முதுகலை ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டனர். அந்த நியமனம் முற்றிலும் தற்காலிகமானது என்றும் எவ்வித முன்னறிவிப்புமின்றி அவர்கள் பணியிலிருந்து நீக்கப்படுவார் எனவும் இந்நியமனம் பெற்றதால் நிரந்தர

[1997 ஏப்ரல் 30

வேலைவாய்ப்பு அளிக்கக் கோரி பின்னர் எந்தவித தனி முன்னுரிமையும் கோரக்கூடாது எனவும் தெளிவாகத் தெரிவிக்கப்பட்டது. மேலும், ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலம் முறையான ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படும்வரை இது ஓர் இடைக்கால (Stop Gap Arrangement) ஏற்பாடு எனவும் தெரிவிக்கப்பட்டது.

2. ஆசிரியர் தேர்வு வாரியத்திலிருந்து பட்டியல் பெறப்பட்டு தற்போது முறையான நியமனம் நடைபெற்று வருகிறது. ஆனால் பள்ளித் தேர்வுகள் தொடங்கப்பட்டதாலும், ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் முறையான நியமனம் செய்ய வேண்டியதைவிட சில பாடங்களில் பணியிடங்கள் அதிக அளவில் காலி ஏற்பட்டதாலும், தற்காலிக அடிப்படையில் நியமிக்கப்பட்டவர்கள் மேல்நிலைத் தேர்வுகள் முடியும் வரை அனுமதிக்கப்பட்டு, ஒட்டு மொத்தமாக அனைத்துப் பாடங்களிலும் தற்காலிக அடிப்படையில் நியமிக்கப்பட்டவர்களை 4-4-1997 பிற்பகல் பணி நீக்கம் செய்து ஆணை வழங்கப்பட்டது.

3. தற்காலிக அடிப்படையில் நியமிக்கப்பட்டவர்களில் பலர் தமிழ்நாடு ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதால் அவர்களும் முறைப்படி பணிநீக்கம் செய்யப்பட்டு மீளவும் முறையாக நியமனம் செய்யப்பட்டும் தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார்கள்.

## 3. மின் அழுத்தக் குறைவினால் பள்ளி, கல்லூரி மாணவர்கள் படிக்க இயலாமை குறித்து

**உறுப்பினர்:** திரு. டி. மணி

**அமைச்சர்:** மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி (மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை)

### அறிக்கை

கன்னியாகுமரி மாவட்டம் மாங்கோடு கிராமம் குளப்பாறை என்ற ஊரில் நிலவி வரும் மின் அழுத்தக் குறைவை நிவர்த்தி செய்வதற்கான குளப்பாறை பகுதியில் ஒரு மின் மாற்றி அமைப்பதற்கும் மேலும் ஒருமுனை மின் கம்பியை மும்முனை மின் கம்பியாக மாற்றுவதற்கும் அனுமதி வழங்கப்பட்டு, வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன.



1997 ஏப்ரல் 30]

மேற்குறிப்பிட்ட மேம்பாட்டுத், திட்டங்களை வருகின்ற ஏப்ரல் மாத இறுதிக்குள் செய்து முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இப்பணிகள் முடிவடைந்தவுடன் மேற்குறிப்பிடப்பட்டுள்ள பகுதியில் சீரான மின் அழுத்தம் நிலவும்.

## 4. திருவாரூர் ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டம் திருத்துறைப் பூண்டியில் உள்ள அரசு பொது மருத்துவமனையை வேறு இடத்திற்கு மாற்றுவதன் அவசியம் குறித்து

**உறுப்பினர்:** திரு. ஜி. பழனிசாமி

**அமைச்சர்:** மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி (மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத்துறை)

### அறிக்கை

திருவாரூர் ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டத்திலுள்ள திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனை, தற்பொழுது 108 படுக்கைகள் கொண்ட இரண்டு பகுதிகளாக இயங்கிவருகிறது. ஒரு பகுதியில் 48 படுக்கைகளும், மற்றொரு பகுதியில் 60 படுக்கைகளும் அமையப்பெற்றுள்ளன. எனவே, இம்மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் உள் நோயாளிகள் இட நெருக்கடி ஏதுமின்றி நல்ல முறையில் மருத்துவ வசதி பெறுகிறார்கள். இம்மருத்துவமனையில் தற்பொழுது, சுகாதாரக் கேடுகள் எதுவுமில்லை. மேலும் இம்மருத்துவமனையை வேறு இடத்திற்கு மாற்றினால், திருத்துறைப்பூண்டியிலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் வசிக்கும் பொது மக்களுக்கு பெரிதும் பாதிப்பு ஏற்படும். இந்நிலையில், இம்மருத்துவமனையை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டிய அவசியமில்லை.

## 5. தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணியிலும், அதனைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் தொடர்ந்து மின் வெட்டு ஏற்பட்டு வருவது குறித்து

**உறுப்பினர்:** திரு. வி. திருஞானசம்பந்தம்

**அமைச்சர்:** மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி (மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத்துறை)

### அறிக்கை

தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணியும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களும், பேராவூரணி 66 கிலோ வோல்ட் துணை மின்

நிலையத்திலிருந்து மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றது. இந்த 66 கி.வோ. பேராவூரணி துணை மின் நிலையம், பட்டுக்கோட்டை 110 கி.வோ. துணை மின் நிலையம் மூலமாகவும், பட்டுக்கோட்டை துணை மின் நிலையம் திருவாரூர் 230 கி.வோ. துணை மின் நிலையத்திலிருந்தும் மின்சாரம் பெற்று வருகின்றது.

இந்த 230 கி.வோ. துணை மின் நிலையத்திலிருந்து செல்லும் 110 கி.வோ. மின்னூட்டியில் குறைந்த மின் அதிர்வு எண் இடை மாற்றீடு (Under Frequency Relay) பொருத்தப்பட்டுள்ளது. இந்த குறைந்த மின் அதிர்வு எண் இடைமாற்றீடு 47.8 C/s-ல் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மின் அதிர்வெண் இதற்கும் கீழே செல்லும் பொழுது இந்த இடை மாற்றீடு (Relay) இயங்குவதால் மின்சாரம் தடைபடுகின்றது. மேற்குறிப்பிட்ட காரணத்தினாலும் மின் கட்டமைப்பின் நிலையினைப் பொருத்தும் பேராவூரணி பகுதிகளில் மின் தடங்கல்கள் ஏற்பட்டன. இந்த நிலையினை சீர்படுத்துவதற்காகத்தான் 20-3-1997 முதல் தமிழ் நாட்டில் கிராமியப் பகுதிகளில் 10 மணி நேரம் (பகலில் 4 மணி நேரமும் இரவில் 6 மணி நேரமும்) மூன்று பிரிவுகளாகப் பகலிலும், 2 பிரிவுகளாக இரவிலும் மின் விநியோகம் செய்ய உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. இதனால் பொதுவாக மின் அழுத்த நிலையில் முன்னேற்றம் அடையும்.

## 6. கிருஷ்ணகிரியில் காலரா நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது குறித்து

**உறுப்பினர்: டாக்டர் காஞ்சனா கமலநாதன்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி (மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை)**

### அறிக்கை

தருமபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி நகராட்சியில் 18-3-1997 முதல் 26-3-1997 வரை மொத்தம் 45 நபர்கள் வயிற்றுப் போக்கு நோயினால் பாதிக்கப்பட்டனர். அதிர்ஷ்டவசமாக இந்நோயினால் இறப்பு ஏதும் ஏற்படவில்லை. இது தவிர கிருஷ்ணகிரி ஊராட்சி ஒன்றியப் பகுதியில் உள்ள சிக்கப்பூவத்தி, கொடியூர், பி.சி. புதூர், முழுகலப்பள்ளி மற்றும் சிவானந்தபுரம் ஆகிய கிராமங்களில் ஆறுபேர் வயிற்றுப்போக்கு நோயினால் பாதிக்கப்பட்டனர். இதில் ஒருவர் இறந்துவிட்டார்.



பாதிக்கப்பட்ட கிராமங்கள்/நபர்களின் விவரம் பின்வருமாறு:—

| வரிசை எண் | பாதிக்கப்பட்ட கிராமத்தின் பெயர் | பாதிப்பு | இறப்பு | பாதிப்பு ஏற்பட்ட நாள் |
|---|---|---|---|---|
| 1. | சிக்கப்பூவத்தி, ஆலப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையம் | 1 | 1 | 27-3-97 முதல் 28-3-97 வரை |
| 2. | கொடியூர் ஆலப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையம் | 1 | - | 23-3-97 |
| 3. | பி.சி புதூர், எம்.சி. பள்ளி ஆரம்ப சுகாதார நிலையம் | 1 | - | 25-3-97 |
| 4. | முழுகலப்பள்ளி, எம்.சி. பள்ளி ஆரம்ப சுகாதார நிலையம் | 1 | - | 25-3-97 |
| 5. | சிவானந்தபுரம், பெல்லராம்பள்ளி ஆரம்ப சுகாதார நிலையம் | 2 | - | 23-3-97 |
| | | 6 | 1 | |

கிருஷ்ணகிரி நகராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியப் பகுதியில் பொதுச் சுகாதாரத் துறையினரால் பின்வரும் சிகிச்சை மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:

1. நீரிழப்பைத் தடுக்க உப்பு சர்க்கரை பொட்டலங்கள் வழங்குதல்.
2. கிருமி நாசினி தெளித்தல்.
3. குடிநீரில் குளோரின் கலந்து வழங்குதல்.

கிருஷ்ணகிரி ஊராட்சி ஒன்றியப் பகுதியில் குடிநீர் குழாய்கள் பழுதடைந்ததாலும் குடிநீர் மேல்நிலைத் தொட்டிகள் சுத்தம் செய்யப்படாததாலும் குடிநீரில் மாசு ஏற்பட்டதே வயிற்றுப்போக்கு ஏற்பட காரணம் ஆகும்.

இந்நோய் மேலும் பரவுவதைத் தடுக்க பொதுச் சுகாதாரத் துறையின் மூலம் கிருஷ்ணகிரி நகராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியப் பகுதியில்

[1997 ஏப்ரல் 30

மருத்துவ அலுவலர்கள் அடங்கிய மருத்துவக் குழுக்கள் அமைக்கப்பட்டு தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மக்களுக்கு சுகாதாரக் கல்வியும் போதிக்கப்பட்டது. பாதிக்கப்பட்ட இடங்கள் இக்குழுக்களின் தீவிர கண்காணிப்பில் உள்ளன. கிருஷ்ணகிரி சுகாதார துணை இயக்குநர் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்டு தடுப்பு நடவடிக்கைகளைக் கண்காணித்து வருகிறார்.

அரசு மருத்துவமனை மற்றும் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் வயிற்றுப்போக்கு தடுப்பு மருந்து வகைகள் போதிய அளவு கையிருப்பில் உள்ளது.

**7. மதுரை நகருக்கு அருகிலுள்ள ஈச்சநோடை கிராமத்தில் தட்டம்மை நோயால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளது குறித்து**

**உறுப்பினர்கள்:** திரு. வை. சிவபுண்ணியம், திரு. இ. கணேசன், திரு. டி. மணி.

**அமைச்சர்:** மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி (மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை)

**அறிக்கை**

மதுரைக்கு அருகில், பசும்பொன் மாவட்டத்தைச் சார்ந்த கொந்தகை ஆரம்ப சுகாதார நிலைய எல்லைக்குட்பட்ட ஈச்சநோடை என்ற கிராமத்தில் தட்டம்மை நோயினால் பாதிக்கப்பட்டோர் விவரம் வருமாறு:-

| பாதிக்கப்பட்ட கிராமம் | நோய் | பாதிக்கப்பட்டவர் எண்ணிக்கை | இறப்பு | பாதிக்கப்பட்ட நாள் |
|---|---|---|---|---|
| ஈச்சநோடை | தட்டம்மை | 1 | — | 4-4-97 |
| | சின்னம்மை | 7 | — | 13-3-97 முதல் 3-4-97 வரை |
| | மம்ப்ஸ் | 1 | — | 30-3-97 |
| | நெப்ரைட்டிஸ் | 1 | — | — |



1997 ஏப்ரல் 30]

மேலும், மதுரை மாவட்டத்தில் வளையாங்குளம் ஆரம்ப சுகாதார நிலைய எல்லைக்குட்பட்ட கிராமத்தில் பாதிக்கப்பட்டவர்களின் விவரம்:-

| வரிசை எண் | பாதிக்கப்பட்ட கிராமம் | நோய் | பாதிக்கப்பட்டவர் எண்ணிக்கை | இறப்பு | பாதிக்கப்பட்ட நாள் |
|---|---|---|---|---|---|
| 1. | சூலஸ்குரணி | சின்னம்மை | 6 | . | 17-3-97 முதல் 1-4-97 வரை |
| 2. | பிள்ளையார்பட்டி | சின்னம்மை | 1 | . | 24-3-97 |
| 3. | நல்லூர் | சின்னம்மை | 1 | . | 28-3-97 |
| 4. | குதிரைக்குதி | தட்டம்மை | 1 | . | 1-4-97 |
| 5. | புதுகேசவன்குண்டு | தட்டம்மை | 1 | . | 30-3-97 |

3. மதுரை மற்றும் பசும்பொன் மாவட்டத்தைச் சார்ந்த சுகாதாரப் பணிகளின் துணை இயக்குநர் 4-4-1997 அன்று பார்வையிட்டு போதிய தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டார். 7-4-1997 அன்று பொதுச் சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு துறை இணை இயக்குநர் (கொள்ளை நோய்) அவர்கள் மேற்கண்ட பாதிக்கப்பட்ட கிராமங்களுக்கு சுகாதாரத் துறை மாவட்ட துணை இயக்குநருடன் சென்று பார்வையிட்டு, இந்நோய் மேலும் பரவாமல் இருக்க கீழ்க்கண்ட தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன:

(அ) இந்நோயினால் பாதிக்கப்பட்டவர்களை தினந்தோறும் பொதுச் சுகாதார பணியாளர்கள் மற்றும் மருத்துவர்கள் அடங்கிய குழுக்கள் கண்காணித்து வருகின்றனர்.

(ஆ) பாதிக்கப்பட்டவர்களுக்கு நோயின் தன்மை அறிந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

4. பாதிக்கப்பட்ட கிராமங்கள் அனைத்தும் தீவிர கண்காணிப்பில் இருந்து வருகின்றன. மேலும் அரசு மருத்துவமனை மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் போதிய நோய்த் தடுப்பு மருந்துகள் கையிருப்பில் உள்ளன. இந்நோயினால் இறப்புகள் ஏதும் நிகழவில்லை. பாதிக்கப்பட்ட இடங்களில் நோய் பரவாமல் இருக்க தேவையான தடுப்பு நடவடிக்கைகள் பொதுச் சுகாதாரத் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 8. வடாற்காடு-அம்பேத்கர் மாவட்டம் ஆம்பூரிலிருந்து வெள்ளக்குட்டை கிராமத்திற்கு சாலை அமைத்தல் குறித்து

**உறுப்பினர்: திரு. சி. ஞானசேகரன்:**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் (வருவாய்த் துறை)**

### அறிக்கை

வடாற்காடு-அம்பேத்கர் மாவட்டம், வாணியம்பாடி வட்டம், ஆம்பூர் முதல் வெள்ளக்குட்டை கிராமம் வரை கரும்புச்சாலை அபிவிருத்தி திட்டத்தின்கீழ் 6 கி.மீ. சாலை அமைக்க 1.60.0 ஹெக்டேர் நிலம் தேவைப்படுகிறது. இது வனத் துறையைச் சேர்ந்தது. மேற்குறிப்பிட்ட 1.60.0 ஹெக்டேர் பரப்பளவு நிலத்தை வனத் துறையிடமிருந்து பெற வேண்டுமாயின் அதற்கு ஈடாக, மத்திய பாதுகாப்பு சட்டத்தின்படி (Forest Conservation Act) இரண்டு மடங்கு அதாவது 3.20.0 ஹெக்டேர் பரப்புள்ள நிலம் வனத் துறைக்கு மாற்றம் செய்ய வேண்டும். இது தொடர்பாக விண்ணமங்கலம் கிராமம் ச.நெ. 504/1-ல் 3.16.5 ஹெக்டேர் 'தீர்வை ஏற்படாத தரிசு' மற்றும் 504/21-ல் 0.16.0 ஹெக்டேர் பரப்பளவு அரசு நிலங்களை வனத்துறைக்கு ஈட்டு நிலமாகக் கொடுக்கலாம் என மாவட்டாட்சியர் செயற்குறிப்பு அனுப்பியுள்ளார். நில நிருவாக ஆணையரும் பரிந்துரைத்துள்ளார். இருப்பினும், சர்க்கரை ஆலையின் சாலைக்குத் தேவைப்படும் நிலம் வனத் துறையைச் சேர்ந்ததால் முதன்மை வனத்துறைத் தலைவரின் குறிப்புரை கேட்கப்பட்டுள்ளது. அவரது அறிக்கை கிடைத்ததும் இக் கோரிக்கை மீது மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

## 9. வேலூர் நகரின் குடிநீர் பஞ்சத்தைப் போக்க புதிய வேலூர்-பாலாறு குடிநீர் திட்டம் நிறைவேறாதது குறித்து

**உறுப்பினர்: திரு. சி. ஞானசேகரன்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. கோ.சி. மணி (ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை)**



### அறிக்கை

வேலூர் நகராட்சிக்கு பாலாற்றை நீர் ஆதாரமாக கொண்டு 1934-ஆம் ஆண்டு முதல் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்பட்டது. இதற்கடுத்து, குடிநீர் முன்னேற்றத் திட்டம் 1982-ஆம் ஆண்டு கருகம்புத்தூர் அருகில் தலைமையிடம் அமைத்து தினசரி கூடுதலாக 155 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்க திட்டமிடப்பட்டது. ஆனால், வறட்சிக் காலங்களில் பாலாறு தலைமையிடத்தில் இருந்தும் கருகம்புத்தூர் தலைமைப் பணியிடத்தில் இருந்தும், மொத்தமாக 35 லட்சம் லிட்டர் குடிநீர் மட்டுமே வழங்க முடிந்ததால் மீண்டும் ஒரு குடிநீர் முன்னேற்றத் திட்டம் தயாரிக்கப்பட்டது. 1996-ல் தயாரிக்கப்பட்ட இந்த புதிய குடிநீர் முன்னேற்றத் திட்டத்தில் தினசரி கூடுதலாக 112 லட்சம் லிட்டர் குடிநீர் வழங்க வழிசெய்கிறது. இதனால் சராசரி பருவ காலங்களில் மொத்தமாக 216 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்க இயலும். வேலூர் நகராட்சியின் தற்போதைய மக்கட் தொகை 1,75,000 ஆகும். இந்தப் புதிய குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் 2021-ஆம் ஆண்டு எதிர்பார்க்கும் 2,16,000 மக்கள் தொகைக்கு குடிநீர் திட்டம் ரூ.9.5 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டது. இப்பொழுது இத்திட்டத்திற்கு அரசின் ஒப்புதல் அளிக்கப்பட்டு உள்ளது. இத்திட்டத்திற்கு நிதி 2/3 பாகம் ஆயுள் காப்பீட்டுக் கழக கடனாகவும் 1/3 பாகம் அரசுக் கடனாகவும் வழங்க உள்ளது. இது குறித்து அரசாணை எண் 85, ஊரக வளர்ச்சி (கு.வ.I) துறை, நாள் 24-3-1997-ல் வெளியிடப்பட்டு விட்டது.

24-10-1996 வரை இந்த நகராட்சியில் ஒரு நாள் விட்டு ஒரு நாள் 110 லட்சம் லிட்டர் (சுமார் 70 எல்.பி.சி.டி) குடிநீர் வழங்கப்பட்டது. நகராட்சியின் புதிய மன்றம் (Council) 25-10-1996-ல் பதவி ஏற்றது முதல் 10-3-1997 வரை தினசரி குடிநீர் வழங்கப்பட்டது. 11-3-1997 முதல் மீண்டும் ஒருநாள் விட்டு ஒரு நாள் 110 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

[1997 ஏப்ரல் 30

## 10. ஆம்பூர், வாணியம்பாடி நகராட்சிகளில் குடிநீர் பஞ்சம் ஏற்பட்டு மக்கள் அவதிக்குள்ளாவது குறித்து

**உறுப்பினர்: திரு. சி. ஞானசேகரன்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. கோ.சி. மணி (ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை)**

### அறிக்கை

**ஆம்பூர் நகராட்சி குடிநீர்த் திட்டம்:**

வடஆற்காடு அம்பேத்கர் மாவட்டத்தில் ஆம்பூர் அமைந்துள்ளது. இதன் மக்கள் தொகை 1991-ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி 75,911 ஆகும். நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு 90 லிட்டர் வீதம், 60 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்க வேண்டும். ஆனால் தற்போது நடைமுறையில் உள்ள குடிநீர் விநியோக குறைபாட்டினால் தினம் 18 மணி நேரம் மின் இறைப்பான் இயங்கி நாள் ஒன்றுக்கு 54 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்கப்படுகிறது. பாலாற்றின் பச்சகுப்பம் அருகாமையில் அமைக்கப்பட்டுள்ள 3 நீர் உறிஞ்சும் கிணற்றில் இருந்து நீர் 120 எச்.பி. விசைப் பம்பு மூலம் 18 மணி நேரம் இயங்கி 18 இலட்சம் லிட்டர் கொள்ளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் நீர் சேகரிக்கப்பட்டு 6,723 வீட்டு இணைப்புகளின் மூலம் விநியோகிக்கப்படுகிறது. மேலும் ஆணை மடுகு பகுதியில் 2 திறந்த வெளிக் கிணறுகள், 3 ஆழ்துளைக் கிணறுகள் இவற்றில் இருந்து தினசரி 3.5 இலட்சம் லிட்டர் குடிநீர் பெறப்பட்டு பொதுக் குழாய்கள் (P.F.) மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் ஆம்பூர் நகராட்சியின் கோரிக்கையின் பேரில் புதிய குடிநீர் அபிவிருத்தித் திட்டத்திற்கான ஆய்வுப் பணித் தொடங்கப்பட உள்ளது. ஆய்வுப் பணிகள் முடிக்கப் பெற்று உத்தேச மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அரசின் ஒப்புதலுக்காக வாரியத்தின் பரிந்துரையுடன் சமர்ப்பிக்கப்படும்.

**வாணியம்பாடி நகராட்சி குடிநீர்த் திட்டம்:**

வட ஆற்காடு-அம்பேத்கர் மாவட்டத்தில் அமைந்துள்ள வாணியம்பாடி நகராட்சியின் மக்கள் தொகை 1991-ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 72,428 ஆகும். நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 90 லிட்டர் வீதம் 62 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்கப்பட வேண்டும். ஆனால் தற்போது நகராட்சியின் குடிநீர் விநியோக



1997 ஏப்ரல் 30 ]

முறைப்படி 2 மின் இறைப்பான்கள் இயங்கி நாள் ஒன்றுக்கு 50 இலட்சம் லிட்டர் தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. கடந்த 17-3-1997 முதல் சிங்காரப்பேட்டை துணை அனல் மின் நிலையத்தில் ஏற்பட்ட பழுதின் காரணமாக இரவில் 8 மணி நேரம் மட்டுமே மின்சாரம் இருப்பதால், 8 மணி நேரம் பம்பு செட்டுகளை இயக்கி சுமார் 20 இலட்சம் லிட்டர் குடிநீர் மட்டுமே வழங்கப்படுகிறது. துணை மின் நிலையத்தின் பழுது சரி செய்யப்பட்டவுடன் 20 மணி நேரம் பம்பு செட்டுகளை இயக்கி 50 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்க வகை செய்யப்படும். கோடைக் காலத்தில் தலைமைப் பணியிடத்தில் கொடையஞ்சி அருகே நீர் ஆதாரம் குறைந்து வருகிறது. எனவே நீர் ஆதாரத்தை அபிவிருத்தி செய்ய தற்போதுள்ள தலைமைப் பணியிடத்தில் அருகே உள்ள அம்பலூரில் புதிதாக இரண்டு நீர் உறிஞ்சுக் கிணறுகள் அமைக்க ரூ.49.82 இலட்சத்தில் வைப்புத் தொகை திட்டம் தயாரித்து வாரிய ஒப்புதல் வழங்கப்பட்டு திட்டம் நடைபெற உள்ளது. இத்திட்டம் 12/97க்குள் முடிக்கப்படவுள்ளது. இப்பணி முடிவடைந்த பின் தினமும் 62 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்கப்படும்.

## 11. தமிழ்நாடு அரசு வேளாண்மைத்துறையில் வேளாண்மைப் பள்ளிகள் (பயிற்சி மையம்) கடந்த 1992-ல் மூடப்பட்டது குறித்து

**உறுப்பினர்: திரு. அ. வெங்கடாசலம்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் (வேளாண்மைத் துறை)**

### அறிக்கை

தமிழ்நாட்டில் கீழ்க்கண்ட பன்னிரண்டு இடங்களில் வேளாண்மைப் பள்ளிகள் செயல்பட்டு வந்தன:-

| வரிசை எண் | இடம் | மாவட்டம் |
|---|---|---|
| 1. | காஞ்சிபுரம் | அண்ணா மாவட்டம் |
| 2. | நவ்லக் | வடஆற்காடு அம்பேத்கர் |
| 3. | காக்குப்பம் | விழுப்புரம் ராமசாமி படையாச்சியார் |

| வரிசை எண் | இடம் | மாவட்டம் |
|---|---|---|
| 4. | சாக்கோட்டை | தஞ்சாவூர் |
| 5. | குடுமியான்மலை | புதுக்கோட்டை |
| 6. | பரமக்குடி | இராமநாதபுரம் |
| 7. | கிள்ளிகுளம் | திருநெல்வேலி-கட்டபொம்மன் |
| 8. | திருப்பதிசாரம் | கன்னியாகுமரி |
| 9. | பவானிசாகர் | பெரியார் |
| 10. | மேட்டூர் அணை | சேலம் |
| 11. | பாப்பாரப்பட்டி | தர்மபுரி |
| 12. | வினாயகபுரம் | மதுரை |

மேற்கண்ட பள்ளிகளில் ஓராண்டு வயல் விளக்க அலுவலர் சான்றிதழ் பயிற்சி (Certificate Course) அளிக்கப்பட்டு வந்தது. ஒரு பள்ளிக்கு 25 மாணவர்கள் வீதம் ஆண்டுக்கு 300 மாணவர்கள் இச்சான்றிதழ் பயிற்சி பெற்று வந்தனர்.

2. கடந்த 21-4-1992 அன்று, வேளாண்மைத்துறை மானியக் கோரிக்கையின் போது, முன்னாள் வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட அறிவிப்பினை செய்தார்:

"இதுகாறும் நடைபெற்று வந்த ஓராண்டு வயல் விளக்க அலுவலர் சான்றிதழ் பயிற்சி இனி ஈராண்டு உதவி வேளாண்மை அலுவலர் பயிற்சியாக மாற்றி அமைக்கப்படும். இத்திட்டத்தால் வயல் விளக்க அலுவலர்களின் பணி நிலை படிப்படியாக உதவி வேளாண்மை அலுவலர்களின் நிலைக்கு உயர்த்தப்படும். தொழில் நுட்பச் செறிவும், விஞ்ஞான அறிவும் விவசாயிகளைச் சென்றடைய இம்மாற்றம் பெரிதும் உதவியாக இருக்கும்".

3. மேற்கண்ட அறிவிப்பின் தொடர்பாக வேளாண்மை இயக்குநர் அவர்களின் முன்மொழிவு கோரப்பட்டது. வேளாண்மை இயக்குநர்



அவர்கள் இந்த அறிவிப்பின் தொடர்பாக 1992-93 கல்வி ஆண்டில், ஓராண்டு வேளாண் பள்ளி பயிற்சிக்கு மாணவர்களைத் தேர்ந்தெடுப்பது தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய அனைத்து நடவடிக்கைகளும் நிறுத்தி வைக்கப்படுகிறது என்றும், ஓராண்டு வேளாண்மை பள்ளி பயிற்சியை ஈராண்டு வேளாண்மை சான்றிதழ் பயிற்சியாக மாற்றுவதற்கு அரசுக்கு முன்மொழிவு அனுப்பி பரிசீலிக்கப்பட்டு, 1992-93 முதல் ஓராண்டு சான்றிதழ் பயிற்சி நிறுத்தப்பட்டு, இரண்டாண்டு பட்டய பயிற்சி துவங்க ஆணை வெளியிடப்பட்டது. அதன்படி சான்றிதழ் பயிற்சி பள்ளிகள் மூடப்பட்டு ஈராண்டு வேளாண்மை பட்டயப்படிப்பு (வேளாண்மை டிப்ளமோ) புதுக்கோட்டை மாவட்டம் குடுமியான் மலையிலும், வட ஆற்காடு-அம்பேத்கர் மாவட்டம் நவ்லாக்கிலும் உள்ள இரண்டு பள்ளிகளில் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. இப்பள்ளிகளில் ஓர் ஆண்டுக்கு ஒரு பள்ளியில் 25 மாணவர்கள் வீதம் 50 மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள். இப்பட்டய படிப்பு முடிப்பவர்களுக்கு வேலைவாய்ப்பு உத்தரவாதம் ஏதும் கொடுக்கப்படவில்லை.

4. வேளாண்மைப் பள்ளிகளில் ஓராண்டு காலச் சான்றிதழ் பயிற்சி முடித்த மாணவர்களை தமிழ்நாடு அரசு வேளாண் துறையில் வயல் விளக்க அலுவலர்களாக பணி நியமனம் செய்யப்பட்டது. தற்போது வயல் விளக்க அலுவலர் பதவி வகிப்பவர்களுக்கு குடுமியான்மலையில் உள்ள மாநில வேளாண்மை விரிவாக்க மேலாண்மை நிலையத்தில் (State Agricultural Extension Management Insitute) பயிற்சி அளிக்கப்பட்டு, பணி உயர் நிலைப்படுத்தல் முறைப்படி (Upgradation) அவர்கள் உதவி வேளாண்மை அலுவலர்களாகப் பணிமாற்றம் பெறுகின்றனர். இதன் காரணமாக வயல் விளக்க அலுவலர் பதவிக்குத் தேர்வு செய்தல் தற்போது நிறுத்தப்பட்டு விட்டது. எனவே ஓராண்டு சான்றிதழ் பயிற்சி முடிப்பவர்களுக்கு அரசு வேலைவாய்ப்பு என்பது இல்லை. தனியார் நிறுவனங்களிலும் வேலைவாய்ப்பு இல்லை. எனவே ஓராண்டு சான்றிதழ் பயிற்சி பள்ளிகளை அரசு மூடிவிட்டது.

## 12. பெரணமல்லூர் தொகுதி, பெரணமல்லூர் பேரூரில் வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வரும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் சரியாக இயங்காதது குறித்து

**உறுப்பினர்: திரு. என். பாண்டுரங்கன்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் (வேளாண்மைத் துறை)**

**அறிக்கை**

வடஆற்காடு விற்பனைக் குழுவின் பொறுப்பில் பெரணமல்லூர், பேரூரில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் 1979 முதல் இயங்கி வருகிறது. தற்பொழுது இது பேரூராட்சிக்குச் சொந்தமான கட்டிடத்தில் ரூ.150/- மாத வாடகை செலுத்தி இயங்கி வருகிறது. தொடங்கிய நாள் முதல் இதனுடைய வருவாய் இதன் செலவினத்திற்குக் கூட ஈடுகட்ட முடியாமல் குறைவாகவே இருந்து வருகிறது. பெரணமல்லூர் ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தின் வரத்து மற்றும் வருவாய் நாளுக்கு நாள் குறைந்தும், செலவினம் நாளுக்கு நாள் மிகக் கூடுதலாகவும், நிர்வாகச் செலவினத்தைக் கூட ஈடு செய்ய முடியாத நிலை உள்ளது. கடந்த சில ஆண்டுகளில் மேற்படி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு வரப்பெற்ற வரத்து, வருவாய் மற்றும் செலவின விவரங்கள் பின்வருமாறு:-

| வருடம் | வரத்து (மெ.டன்) | வருவாய் (ரூபாய்) | செலவினம் (ரூபாய்) |
|---|---|---|---|
| 1990-91 | 229 | 13000 | 73000 |
| 1991-92 | 162 | 17000 | 78000 |
| 1992-93 | 44 | 21000 | 101000 |
| 1993-94 | 5 | 3000 | 108000 |
| 1994-95 | — | 4000 | 91000 |
| 1995-96 | 118 | 27886 | 100000 |
| 1996-97 | 13 | 10867 | 110000 |

பெரணமல்லூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு அருகாமையில் மூன்று பெரிய ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் வந்தவாசி, சேத்துப்பட்டு, ஆரணி ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன. இவற்றிற்கும் பெரணமல்லூருக்கும் இடையே உள்ள தூரம் பின்வருமாறு:-

| | | |
|---|---|---|
| பெரணமல்லூரிலிருந்து வந்தவாசி | — | 18 கி.மீ. |
| பெரணமல்லூரிலிருந்து சேத்துப்பட்டு | — | 18 கி.மீ. |
| பெரணமல்லூரிலிருந்து ஆரணி | — | 15 கி.மீ. |



கடந்த மூன்று ஆண்டுகளில் இந்தப் பகுதியில் இயங்குகின்ற நான்கு ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு வந்த வரத்தும் வருமானமும் பின்வருமாறு:-

| ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் பெயர் | வரத்து (மெட்ரிக் டன்னில்) 94-95 | 95-96 | 96-97 | வருவாய் ரூ. இலட்சத்தில் 94-95 | 95-96 | 96-97 |
|---|---|---|---|---|---|---|
| 1. பெரணமல்லூர் | - | 118 | 13 | 0.04 | 0.28 | 0.11 |
| 2. ஆரணி | 2643 | 3023 | 3090 | 12.30 | 12.70 | 7.90 |
| 3. வந்தவாசி | 14348 | 15590 | 16864 | 15.82 | 11.08 | 11.02 |
| 4. சேத்துப்பட்டு | 39862 | 39796 | 36094 | 23.32 | 24.85 | 22.91 |

அதிக வரத்து வருகின்ற அருகில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு வியாபாரிகள் அதிகளவில் செல்வதால் பெரணமல்லூரில் விவசாய விளைபொருட்களின் வரத்து அதிகமாக இல்லை. விவசாய வியாபாரிகளைத் தொடர்பு கொண்டு பெரணமல்லூரிலும் விவசாய விளைபொருட்களை வாங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. அதிக விலை கிடைக்கிறது என்பதற்காக இதர ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு விளைபொருட்களைக் கொண்டு செல்வதைப் போல இங்கு விளைபொருட்களை கொண்டுவர வேண்டும் என விவசாயிகள் மத்தியில் பிரச்சாரம் செய்யப்பட்டு வருகிறது. வரத்தும் வருமானமும் கணிசமாக அதிகரிக்கின்றபட்சத்தில் சொந்த நிலம் வாங்கி கட்டிடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

## 13. தென்ஆற்காடு வள்ளலார் மாவட்டத் தலைநகர் கடலூர் தேவனாம்பட்டினம் வெள்ளிக் கடற்கரையில் ஏற்பட்டிருக்கும் கடல் அரிப்பை தடுப்பதன் அவசியம் குறித்து

**உறுப்பினர்: திரு. இ. புகழேந்தி**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. துரைமுருகன் (பொதுப் பணித் துறை)**

[1997 ஏப்ரல் 30

### அறிக்கை

வெள்ளிக் கடற்கரைக்குத் தெற்கே சேரனாங்குப்பம் முதல் வடக்கே தாழங்குடி வரையில் சுமார் 3 கி.மீட்டர் நீளத்திற்குக் கடலரிப்பு ஏற்பட்டுள்ளது. சென்ற பல ஆண்டுகளில் சுமார் 100 மீட்டர் தொலைவிற்கு கரை அரிக்கப்பட்டுள்ளது. வெள்ளிக் கடற்கரையில் சென்ற ஆறு மாதங்களில் சுமார் 50 மீட்டர் தூரம் அதிகப்படியாக அரிப்பு ஏற்பட்டுள்ளது. இந்த நிகழ்வால், மீனவர்கள் குடியிருப்பும் தளவாடங்களும் எதிர் வரும் காலங்களில் பாதிக்கும் வாய்ப்புள்ளது. இவை குறித்து தக்க ஆய்வு நடத்தி மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

## 14. சாலைப் போக்குவரத்துத் துறை மருத்துவக் கல்லூரியில் அடிப்படை வசதிகள் செய்யப்படாததால் மருத்துவ மாணவர்கள் பாதிக்கப்படுவது குறித்து

**உறுப்பினர்: திரு. நா. பெரியசாமி**

**அமைச்சர்: மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி *(போக்குவரத்துத் துறை)***

### அறிக்கை

தமிழக அரசு பெருந்துறையில் 60 மாணவர்கள் சேர்க்கையுடன் மருத்துவக் கல்லூரி ஒன்று துவக்க அனுமதி அளித்தது. அவ்வாணைக்கேற்ப 1986-87-ஆம் கல்வியாண்டிலிருந்து பெருந்துறை மருத்துவக் கல்லூரி நிர்வாகத் தரப்பில் தேர்வு செய்யப்பட்ட 20 மாணவர்கள் சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியில் சேர்க்கப்பட்டு மருத்துவக் கல்வி பயின்று வந்தனர். பின்பு 1992-93-ஆம் ஆண்டில் கல்லூரிக்கான கட்டிட வசதிகள் பெருந்துறை வளாகத்தில் தயாராகவே இக்கல்லூரிக்கான 60 மாணவர்களும் பெருந்துறை மருத்துவக் கல்லூரியிலேயே அனுமதிக்கப்பட்டார்கள். இந்திய மருத்துவக் குழுமம் பெருந்துறை மருத்துவக் கல்லூரிக்கு அங்கீகாரம் வழங்குவது தொடர்பாகத் தன்னுடைய ஆய்வுக்குழுவை அக்டோபர் 1993-ல் பெருந்துறை மருத்துவக் கல்லூரிக்கு அனுப்பி ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வின் அறிக்கையை மருத்துவ குழுமத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டு, மருத்துவர் குழுமம் பெருந்துறை மருத்துவக் கல்லூரியை ஆய்வுக் குழுவில் குறிப்பிடப்பட்டுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்து டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழகம் மூலம் 6 மாதத்திற்குள் அறிக்கை



1997 ஏப்ரல் 30]

ஒன்றினை அனுப்ப வேண்டினார்கள். அவ்வாறே குறைகளை நீக்கி அறிக்கை ஒன்றினை டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம் மூலம் இந்திய மருத்துவக் குழுமத்திற்கு அனுப்பப்பட்டது. கடைசியாக அனைத்துக் குறைபாடுகளையும் நிவர்த்தி செய்து 21-11-1996 அன்று டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம் மூலம் இந்திய மருத்துவக் குழுமத்திற்கு அனுப்பி தங்கள் ஆய்வுக் குழுவினை இறுதியாண்டு எம்.பி.பி.எஸ். மாணவர்கள் மருத்துவமனைப் பயிற்சித் தேர்வு டிசம்பர் 16 முதல் 18 வரை எழுத இருப்பதால் அப்பொழுது ஆய்வுக்குழுவினை அனுப்பி பெருந்துறை மருத்துவக் கல்லூரிக்கு அங்கீகாரம் வழங்க கோரப்பட்டது. அவ்வாறே இந்திய மருத்துவக் குழுமம் டிசம்பர் 16 மற்றும் 17 தேதிகளில் ஒரு ஆய்வாளரை அனுப்பி ஆய்வு செய்து அவர் ஆய்வறிக்கையினை அகில இந்திய மருத்துவக் குழுமத்திற்கு சமர்ப்பித்துள்ளார். இவ்வாய்வுக் குழுவின் அறிக்கை இக்குழுமத்தின் செயற்குழுவில் வைக்கப்பட்டு பின்னர் பொதுக்குழுவின் மூலம் இசைவு பெற்ற பின்னர் இந்திய மருத்துவக் குழுமம் பெருந்துறை மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அங்கீகாரம் வழங்க வாய்ப்புள்ளது. டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம் 1992-93, 1993-94 மற்றும் 1994-95 கல்வியாண்டிற்கு ஆங்கீகாரம் அளித்துள்ளது. மேலும் 1995-96, 1996-97க்குத் தனது குழுவினை ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு கேட்டுள்ளார்கள். மேலும் CRRI பயிற்சி சம்பந்தமாகத் தனது குழுவினை மார்ச் 13,14 தேதிகளில் பெருந்துறை மருத்துவக் கல்லூரிக்கு அனுப்பி ஆய்வு செய்யப்பட்டுள்ளது. P.S.G. மருத்துவக் கல்லூரி மற்றும் இராஜா முத்தையா மருத்துவக் கல்லூரி போன்ற கல்லூரிகட்கு சுமார் 10 ஆண்டுகளுக்குப் பிறகுதான் இந்திய மருத்துவக் குழுமத்தின் நிலையான அங்கீகாரம் அளிக்கப்பட்டது. எனவே இந்திய மருத்துவ குழுமம் அங்கீகாரம் பெறுவது என்பது காலக்கிரமத்தில் நடைபெறும் செயல். பெருந்துறை மருத்துவக் கல்லூரி பெருந்துறை வளாகத்தில் 1992-93 முதல் 5 வருடங்களாகத்தான் இயங்கி வருகிறது. இந்திய மருத்துவக் குழுமத்தின் அங்கீகாரம் பெறுவதற்கு நிர்வாகத் தரப்பின் மூலம் அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகிறது. மேலும் இந்திய மருத்துவ குழுமத்தினால் நிர்ணயிக்கப்பட்ட தேவையான பயிற்றுவிப்பார்களும் மற்றும் அடிப்படை வசதிகள் யாவும் மருத்துவ மாணவர்களுக்குச் செய்யப்பட்டு வருகின்றது. இதனால் மருத்துவ மாணவர்கள் CRRI செய்ய தடை ஏதும் இல்லை.

[1997 ஏப்ரல் 30

இதுவரை செய்யப்பட்டுள்ள அடிப்படை வசதிகள் விபரம் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| கல்லூரி கட்டிடம், மாணவ, மாணவியர் விடுதி, புதிய மருத்துவமனை, ஆசிரியர் மற்றும் பணியாளர் வீட்டு வசதி | .. | ரூபாய் 13.00 கோடி |
| படுக்கை வசதிகள் | .. | 540 பேருகளுக்கு |
| புறநோயாளிகள் தினசரி எண்ணிக்கை | .. | 500 விருந்து 800 வரை |
| மருத்துவ தளவாடங்கள் மதிப்பு | .. | ரூபாய் 4.00 கோடி |
| மருத்துவ கல்வி ஆசிரியர்கள் எண்ணிக்கை | .. | 96 |
| மாணவ, மாணவியர்களின் எண்ணிக்கை | .. | 269 |

எனவே இது குறித்து மாணவர்கள் பதட்டமடைய காரணம் ஏதுமில்லை.

**15. வடாற்காடு-அம்பேத்கர் மாவட்டம், வாணியம்பாடி நகராட்சி எதிரில் தேசிய நெடுஞ்சாலைத்துறை புதிய பைபாஸ் ரோடு போட ரோடுக்கு அப்பாற்பட்டு தனியே நிற்கும் கூட்டுறவுத் துறை கிடங்கை கையகப்படுத்த வேண்டி தேவையில்லாமல் வைத்துள்ளது குறித்து**

**உறுப்பினர்: திரு. சி. ஞானசேகரன்:**

**அமைச்சர்: மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி** *(போக்குவரத்துத் துறை).*

**அறிக்கை**

மேற்படி கவன ஈர்ப்பில் குறிப்பிட்டுள்ள வாணியம்பாடி புறவழிச்சாலைக்காக சர்வே எண் 5/2-ல் ஆம்பூர்பேட் கிராமத்தில் கையகப்படுத்தபட்ட நிலங்களுள் கூட்டுறவுக் கிடங்கும் நகர சர்வே எண் 9ஜி/4-ல் உள்ள கூட்டுறவுத் துறை கிடங்கில் அடங்கிய 16,658 சதுர அடிகள் விஸ்தீரணம் கொண்ட நிலமும் அடங்கியுள்ளது. இந்நிலம் மற்றும் கிடங்கிற்கான மதிப்பு 30% ஆறுதல் தொகையுடன் சேர்த்து ரூ. 49,24,311 ஆகும்.

மேற்கண்ட தொகையான ரூ. 49,24,311/-க்கான வங்கி வரைவை பெற்றுக்கொள்ள மறுத்து, அதிக இழப்பீட்டுத் தொகை வேண்டுமென தனி அதிகாரி வாணியம்பாடி கூட்டுறவுக் [illegible]



1997 ஏப்ரல் 30 ]

உயர்நீதி மன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார். இதற்கான எதிர்மனு தாக்கல் செய்யுமாறு கோரி வருவாய் கோட்ட அலுவலர், திருப்பத்தூர் அரசு வழக்கறிஞரைக் கோரியுள்ளார்.

இந்தக் கிடங்கு புறவழிச்சாலைக்கு தேவையான 60 மீட்டர் அகலத்திற்குள் உள்ளதாலும் கட்டிடத்தின் ஒரு பகுதி ஓடுதளப்பாதையில் வருவதாலும் கையகப்படுத்தப்பட்டது. எனவே, இதற்கு விதி விலக்கு அளிக்க இயலாது. மேலும் இந்தக் கிடங்கில் தற்பொழுது வாணியம்பாடி பிரிவு அலுவலகத்திற்கு சொந்தமான சிமெண்ட் கம்பிகள் மற்றும் தளவாடச் சாமான்கள் வைக்கப்பட்டுள்ளன. தேவையில்லாமல் கையகப்படுத்தவில்லை.

**16. தமிழகத்திலுள்ள அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களில் உதிரி பாகங்களை போதிய அளவு அரசு வாங்காததால் நூற்றுக்கணக்கான பேருந்துகள் ஓடாமல் உள்ளது குறித்து**

**உறுப்பினர்: திரு. சி. ஞானசேகரன்.**

**அமைச்சர்: மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி** *(போக்குவரத்துத் துறை)*

**அறிக்கை**

அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்குத் தேவையான உதிரி பாகங்கள் மற்றும் அடிச்சட்டங்கள் போன்றவற்றை வாங்குவதில் வழிமுறைகள் சரியாக பின்பற்றப்படாததாலும், இதர காரணங்களினாலும் ஏற்படுகின்ற முறைகேடுகளைத் தவிர்க்கும் பொருட்டு அரசு ஆணை (நிலை) எண் 126, போக்குவரத்து, நாள் 4-7-1996-ல் போக்குவரத்துக் கழகங்களுக்குத் தேவையான அனைத்துப் பொருள்களையும் வாங்குவதற்கு விலை மற்றும் நிபந்தனைகளை நிர்ணயம் செய்வதற்காக உயர்மட்டக் குழு ஒன்றையும், சார்புக் குழு ஒன்றையும் ஏற்படுத்தி ஆணை பிறப்பிக்கப்பட்டது. உயர்மட்டக் குழுவின் ஆலோசனையின் பேரில் அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களுக்கும் ஏற்ற பொதுவான ஒரு நடைமுறையை ஏற்படுத்தி அதன்படி உதிரி பாகங்கள் மற்றும் அடிச்சட்டங்கள் போன்றவற்றை விதிகளுக்குட்பட்டு வாங்குவதற்கான வழிமுறைகள் நிர்ணயிக்கப்பட்டு, போக்குவரத்துக் கழகங்களுக்கு தெளிவான அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. அதன்படி போக்குவரத்துக் கழகங்கள் அனைத்தும் செயல்பட்டு பேருந்துகள் அனைத்தும் ஒழுங்காக இயங்கும் வகையில்

நடவடிக்கைகள் எடுத்து வருகின்றன. மேலும் 8-3-1997 வரை 1,106 புதிய பேருந்துகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இதன் விளைவாக பேருந்து இயக்கம் முற்றிலுமாக சீரடைந்து விடும். தற்போது போக்குவரத்துக் கழகங்கள் பேருந்துகளைப் பராமரிப்பதில் தனிக்கவனம் செலுத்தி, பேருந்துகள் எந்நிலையிலும் ஓடாதிருப்பதைத் தவிர்ப்பதற்கான கடுமையான நடவடிக்கைகளை எடுக்கும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளன.

## 17. மதுரையில் 'ரிங்' ரோடு அமைக்கப்படாததால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து

**உறுப்பினர்: திரு. சி. ஞானசேகரன்.**

**அமைச்சர்: மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி** *(போக்குவரத்துத் துறை).*

**அறிக்கை**

உலக வங்கி நிதி உதவியுடன் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் மதுரையில் வட்டச்சாலை அமைக்கும் பணிக்கு அரசு ஆணை (நிலை) எண் 188, பொதுப்பணித்துறை, நாள்: 4-3-1996-ல் ரூ. 22 கோடிக்கு நிர்வாக ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. இப்பணிக்கு தலைமைப் பொறியாளர் (நெடுஞ்சாலை), ஆய்வு மற்றும் வடிவமைப்பு அவர்களால் ரூ. 24.20 கோடிக்கு ஒட்டுமொத்த மதிப்பீட்டிற்கு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

2. இந்த வட்டச்சாலையின் மொத்த நீளம் 27.2 கி.மீ. ஆகும். பணியினை விரைவில் செய்து முடிக்க ஏதுவாக இந்த சாலையின் மொத்த நீளமும் ஐந்து பகுதிகள்ாக பணிப்பிரிப்பு செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு பகுதிக்கும் தனித்தனியே ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்த வட்டச் சாலையில் இரு இடங்களில் குறுக்கிடும் இருப்புப்பாதையின் மேல் மேம்பாலங்கள் அமைக்க இரயில்வே துறைக்கு ரூ. 215 இலட்சம் முன்பணம் வழங்கப்பட்டுள்ளது. இந்த வட்டச்சாலை அமைப்பதற்கு தேவைப்படும் மொத்த நீளமும் ஏற்கெனவே கையகப்படுத்தப்பட்டு தற்போது நெடுஞ்சாலைத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது.

3. 30-9-1996-க்கு பின்னர் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் இதுபோன்ற புதிய பணிகளைச் சேர்க்க இயலாது என உலக வங்கி தெரிவித்தது. தற்போது தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித்திட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்பட்ட பணிகளில் எஞ்சிய பணிகளுக்காக





31-3-1997 வரை கடனுதவி அளிப்பதாக உலக வங்கி தெரிவித்தது. உலக வங்கியின் கடனுதவி மேலும் நீட்டிக்கப்படாவிட்டால், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளமைப்பு நிதி நிறுவனத்திடமிருந்து (Tamil Nadu Urban Infrastructure Financial Services Limited) நிதியினைப் பெற்று மதுரை மாநகராட்சியால் இப்பணியினை செயல்படுத்தக் கூடிய சாத்தியக்கூறுகள் பற்றி முடிவு செய்ய விரைவு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## 18. தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு வட்டம், விஷ்ணம்பேட்டை கிராமத்தில் அரசு கையகப்படுத்திய நிலத்தில் சில நபர்கள் ஆக்கிரமித்துள்ளதை அகற்றுவது குறித்து

**உறுப்பினர்: திரு. துரை சந்திரசேகரன்.**

**அமைச்சர்: மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி** *(போக்குவரத்துத் துறை).*

**அறிக்கை**

விஷ்ணம்பேட்டை கிராமம், திருவையாறு தாலுக்கா, தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள 1.87 ஏக்கர் நிலம் சர்வே எண் 394/2, 3 மற்றும் 5 ஆகியன சோழன் போக்குவரத்துக் கழகத்திற்கு பணிமனை கட்டுவதற்கு தக்கார், அருள்மிகு வினாயகர் விசுவநாதன் கோவில் நந்தவனம் தருமம் அவர்களிடமிருந்து 1-4-1988 அன்று பெற்றுக்கொள்ளப்பட்டது. மேற்படி நிலத்திற்கு தமிழ்நாடு இந்து அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் அவர்களும் தடையில்லா சான்று 2-2-1998 தேதியிட்ட கடிதம் மூலம் வழங்கி உள்ளார்கள். பின்னர் இந்த நிலத்திற்கு நிலம் கையகப்படுத்தும் முகமாக மாவட்ட வருவாய்த்துறையினருக்கு மனு செய்து அது தற்போது தீர்ப்பாணை வழங்கப்பட்ட அளவில் உள்ளது. மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் இந்த கையகப்படுத்துவதற்கு நிலத்தின் மதிப்பு ரூ. 3,70,190 எனவும், அதை செலுத்துமாறும் கோரியுள்ளார்கள். இதனிடையே திருக்காட்டுப்பள்ளியை சேர்ந்த தனி நபர்கள் சோழன் போக்குவரத்து கழகத்தின் பொறுப்பிலுள்ள மேற்படி நிலத்தில் அத்துமீறி புகுந்துள்ளார்கள். அவர்களை வெளியேற்றும் பொருட்டு திருக்காட்டுப்பள்ளி காவல் நிலையத்தில் புகார் மனு சென்ற 13-3-96 அன்று தாக்கல் செய்து, சோழன் போக்குவரத்துக் கழகம் நடவடிக்கை எடுக்க கோரியுள்ளது. இந்த நிலத்தை சோழன் போக்குவரத்துக் கழகம் தக்க வைத்துக் கொள்ள அரசினால் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. மேலும் இந்த நிலத்தில் அத்துமீறி நுழைந்தவர்களை

வெளியேற்ற வருவாய்த்துறை மற்றும் காவல் துறையினர் உதவி நாடி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**19. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள கிராமிய சிறுபட்டு நூற்பாலை கதவடைப்பு செய்யப்பட்டதால் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருப்பது குறித்து**

**உறுப்பினர்: திரு. பே. வே. ஸ்ரீ. வெங்கடேசன்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்** *(தொழிலாளர் நலத்துறை)*

**அறிக்கை**

தர்மபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி அணையிலுள்ள கிராமிய பட்டு நூற்பாலையில் டான்சில்க் பட்டு நூல் உற்பத்தி செய்யப்படுகிறது. காஞ்சிபுரத்திலுள்ள டான்சில்க் நிறுவனத்தை தலைமை அலுவலகமாகக் கொண்டு அதன் கட்டுப்பாட்டில் இந்நிறுவனம் இயங்கி வருகிறது. இத் தொழிற்சாலையில் மொத்தம் 85 தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இந்நிறுவனத்தின் கொதிகலன் மற்றும் நீர் அளவு காட்டும் கருவி (வாட்டர் லெவல் இண்டிகேட்டர்) நீராவி அளவு காட்டும் கருவி (ஸ்டீம் சேப்டி வால்வுகள்) ஆகியவை பழுதடைந்து உள்ளதால் அவற்றை சீர்செய்யும் பொருட்டு அதில் பணிபுரிந்த 85 தொழிலாளர்களில் 78 தொழிலாளர்களுக்கு 3-4-96-ந் தேதி முதல் லே-ஆப் வழங்கப்பட்டு அதற்குரிய நஷ்டஈடும் வழங்கப்பட்டு அதற்குரிய நஷ்டஈடும் வழங்க உள்ளதாக டான்சில்க் பட்டு நூற்பாலை உதவி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

இந்த லே-ஆப் (தற்காலிக வேலையின்மை ஓய்வு)-ஐ ஆட்சேபித்து இந்நிறுவனத் தொழிலாளர்கள் சார்ந்துள்ள (1) பட்டு தொழிலாளர் சங்கம், (2) தொழிலாளர் முன்னேற்ற சங்கம் (3) தேசிய பட்டுத் தொழிலாளர் சங்கம் ஆகியவை, கிருஷ்ணகிரி தொழிலாளர் அலுவலர் முன்பு தாவா தாக்கல் செய்தனர். இதனையடுத்து தொழிலாளர் அலுவலர் முன்பு பலதேதிகளில் பேச்சு வார்த்தைகள் நடந்தபோது நிர்வாகம் கலந்து கொள்ளவில்லை. தொழிற்சங்கத்தரப்பில், பயிற்சியற்ற தொழிலாளர்களை கொதிகலன் இயக்கத்தில் பயன்படுத்தியதால் சேதம் ஏற்பட்டதெனவும், தொழிலாளர்களைப் பழிவாங்க வேண்டும் என்பதற்காகவே தற்காலிக வேலையின்மை ஓய்வு (லே-ஆப்) வழங்கப்பட்டுள்ளது எனவும், இதனை ரத்து செய்து உடனடியாக பணி வழங்கப்பட வேண்டும் எனவும் கோரியுள்ளனர்.



தொழிலாளர்கள் ஆலை வாயிலின் முன் கண்ணாடிகளை உடைத்தும் அலுவலகச் சிப்பந்திகளை (ஸ்டாப்) கட்டாயப்படுத்தி உதவி இயக்குநரின் அறைக்குள் வைத்து பூட்டி சிறைப்படுத்தியதாகவும், பின்னர் காவல் துறையின் உதவியின் பேரில் அவர்களை விடுவித்ததாகவும், உடமைகளுக்கு பாதுகாப்பற்ற நிலையில் நிர்வாகத்தினை சுமுகமான நிலையில் இயக்க போதிய வாய்ப்புகள் இல்லாததால் 15-6-96-ம் தேதி முதல் கதவடைப்பு செய்ததாகவும் நிர்வாகம் தெரிவித்துள்ளது. தொடர்ந்து பல தினங்களில் தொழிலாளர் அலுவலர் முன்பு பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. 2-7-96 அன்று மட்டும் நிர்வாகத்தின் உதவி இயக்குநர் கலந்து கொண்டார். ஆலையின் நிலையில் முன்னேற்றம் ஏற்படாததால் கதவடைப்பு தொடர்கிறது எனவும், நிலைமை சீரடைந்தால் கதவடைப்பு நீக்குவது குறித்து பரிசீலனை செய்யப்படுமெனவும் தெரிவித்துள்ளனர். இப்பிரச்சினையில் கிருஷ்ணகிரி தொழிலாளர் அலுவலர், சேலம் தொழிலாளர் துணை ஆணையர் மற்றும் தொழிலாளர் தனித் துணை ஆணையர், சென்னை முன்பு பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. பேச்சுவார்த்தைகள் மூலம் சுமுகமான உடன்பாடு ஏதும் ஏற்படவில்லை. தொழிலாளர் தனித் துணை ஆணையர் கேட்டுக் கொண்டபடி கதவடைப்பினை நிர்வாகம் நீக்கவில்லை. தொழிற் தகராறு சட்டப் பிரிவு 12(4)-இன் கீழ் சமரச முறிவறிக்கை கிடைக்கப் பெற்று இத்தாவாவை தொழிலாளர் நீதிமன்றத் தீர்ப்பிற்குவிட அரசு தீர்மானித்துள்ளது.

**20. பெரியார் மாவட்டம், சத்தியமங்கலம் வட்டத்தில் தனியார் காகித ஆலை ஒன்றில் விஷவாயு தாக்கி இரண்டு தொழிலாளர்கள் உயிரிழந்துள்ளது மற்றும் பலர் பாதிக்கப்பட்டிருப்பது குறித்து**

**உறுப்பினர்: திரு. நா. பெரியசாமி**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்** *(தொழிலாளர் நலத் துறை)*

**அறிக்கை**

சாம் டர்போ இண்டஸ்ட்ரி லிமிடெட் (பேப்பர் டிவிஷன்) என்ற இத்தொழிற்சாலையில் 23-3-97 அன்று பிற்பகல் 3 மணி அளவில் தொழிற்சாலையை சுத்தப்படுத்தும் பணியில் 7 தொழிலாளர்கள் டிரம் செஸ்ட் உள்ளே இறங்கி ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

[1997 ஏப்ரல் 30

சுத்தப்படுத்திக்கொண்டிருந்தபோது திடீரென மயக்கமடைந்த அவர்களை வெளியே எடுத்து அருகிலுள்ள ஹோலி கிராஸ் என்ற தனியார் மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றபோது அங்கு

**இறந்தவர்கள் விபரம்:**

1. திரு. எஸ். கிருஷ்ணன், (20), த/பெ. திரு. சுப்பையன்
2. திரு. இ. குமரன், (24), த/பெ. திரு. எத்திராஜுலு

ஆகிய இரண்டுபேர் மரணமடைந்ததாக அறிவிக்கப்பட்டது. மற்ற 5 பேர் கோவையில் உள்ள கே.ஜி. மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

**சிகிச்சை பெற்று வருவோரின் விபரம்**

| வ.எண். | பெயர் வயது மற்றும் தந்தையின் பெயர் | தற்போதைய நிலை |
|---|---|---|
| 1. | திரு. எம். முருகன், (30), த/பெ. முருகன் | நலம் |
| 2. | திரு. எஸ். தண்டபாணி, (27), த/பெ. திரு. சுப்பராயன் | நலம் |
| 3. | திரு. சி. கிருஷ்ணமூர்த்தி, (30), த/பெ. திரு. செல்லமுத்து | உடல்நிலை கவலைக்கிடம் |
| 4. | திரு. ஏ. செல்வநாதன், (43), த/பெ. திரு. அந்தோணிசாமி | நலம் |
| 5. | திரு. எம். வடிவேலு, (43), த/பெ. திரு. பி. முத்துசாமி, | சுமார்நிலை |

கோவையில் உள்ள கே.ஜி. மருத்துவமனையில் இவ்விபத்து குறித்து காவல் துறையினர் தெரிவிக்கும்போது (Unknown gas poisoning) என்று அறிக்கை கொடுத்துள்ளனர். கே.ஜி. மருத்துவமனை டாக்டர்கள் [Acute Respiratory Distress Syndrome (A.R.D.S.)] என்று இவ்விபத்து குறித்து கணித்துள்ளனர்.

**விபத்தின் காரணம்:**

இது தினசரி 40 டன் எழுதும் காகிதம் தயாரிக்கும் திறனுடைய தனியார் தொழிற்சாலை ஆகும். இது தொழிற்சாலைகள் சட்டம் 1948-ன்படி பதிவு செய்யப்படாத தொழிற்சாலையாகும். இங்கு 11 செஸ்ட்கள் (மூடிய தொட்டிகள்) உள்ளன. பழைய காகிதங்களை தண்ணீரில் ஊறவைத்து தயாரிக்கப்படும் காகிதக்கூழ் இந்தத்



1997 ஏப்ரல் 30]

தொட்டிகளில் ஊற்றி வைக்கப்படுகின்றன. செஸ்ட் 3.7 மீ., 3.7 மீ., 3.75 மீ. என்ற அளவுடையது.

இரண்டு மாதங்களுக்கு முன்பு காகிதக்கூழ் தயாரித்து செஸ்ட்களில் வைத்திருந்தனர். இந்த செஸ்ட்களை சுத்தப்படுத்தும் பணி 23-3-1997 அன்று மேற்கொள்ளப்பட்டது. இரண்டாவது செஸ்ட்டினை சுத்தப்படுத்தும் பணியில் 7 பேர் ஈடுபடுத்தப்பட்டனர். அவர்கள் செஸ்ட்டில் இறங்கி சுத்தப்படுத்தும்போது திடீரென மயக்கமடைந்தனர். போதுமான பிராணவாயு (ஆக்சிஜன்) இல்லாததால் மயக்கமடைந்திருக்கலாம் அல்லது வெகு நாட்களாக காகிதக்கூழ் செஸ்ட்டில் வைத்திருந்ததால் மீத்தேன் மற்றும் கார்பன்-டை-ஆக்சைடு போன்ற விஷ வாயு இருந்திருக்கலாம். இதனால் போதுமான பிராணவாயுவினை சுவாசிக்க இயலாமல் மயக்கமடைந்துள்ளனர்.

**எடுக்கப்பட்ட நடவடிக்கை:**

இத்துறையைச் சார்ந்த ஈரோடு தொழிற்சாலைகள் துணைத் தலைமை ஆய்வாளர் இவ்விபத்து குறித்து 23-3-1997 அன்று நேரில் ஆய்வு மேற்கொண்டு இத்தகவல்களை அளித்துள்ளார். ஆய்வின்போது தொழிற்சாலையில் 10 பேருக்கு மேல் பணியில் இருந்தது கண்டறியப்பட்டதால் தொழிற்சாலைச் சட்டப்படி இத்தொழிற்சாலை பதிவு செய்யப்பட்டு, உரிமம் பெறாமல் தொழிற்சாலை நடத்துவதற்கும் மற்ற பாதுகாப்பு முரண்பாடுகளுக்கும் நிர்வாகத்தினருக்குக் காரணம் காட்டும் அறிக்கை வழங்கப்பட்டு நீதிமன்றத்தில் வழக்கு தொடர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இவ்விபத்து தொடர்பாக தொழிற்சாலையின் பணி மேலாளர், திரு. கோபால்ராவ், திரு. நடராஜன் (மேலாளர் பல்ப்), திரு. ராஜராஜன் (தலைமைப் பொறியாளர்) ஆகியோருக்கெதிராக காவல் துறையினர் குற்றப்பிரிவு (Indian Penal Code 304-A-ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து நடவடிக்கை எடுப்பதாகவும் தெரியவருகிறது.

## 21. வள்ளலார் மாவட்டம், வடலூரில் மூடப்பட்டுள்ள சேஷசாயி தொழிற்சாலை திறக்கப்படாததால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து

**உறுப்பினர்:** திரு. ச. அழகிரி

**அமைச்சர்:** மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான் (தொழிலாளர் நலத்துறை)

[1997 ஏப்ரல் 30

## அறிக்கை

சுமார் 1600 தொழிலாளர்கள் பணிபுரிந்து வந்த நலிவடைந்த நிறுவனமான வடலூரில் உள்ள சேஷசாயி இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் தொழிற்சாலை 12-01-1991 முதல் இயங்காமலிருந்தது. இத்தொழிற்சாலையை மீண்டும் திறப்பதற்கான சாத்தியக்கூறுகளை ஏற்படுத்தும் வகையில் தொழிலாளர் ஆணையர் அவர்கள் பேச்சுவார்த்தை மேற்கொண்டார். பல்வேறு பேச்சுவார்த்தைகளுக்குப் பின்னர், 28-10-1992 அன்று இத் தொழிற்சாலையைத் திறப்பது குறித்து ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. அவ்வொப்பந்தப்படி, 31-3-1993-க்குள் தொழிற்சாலையைத் திறந்து இயக்கவும், சில தொழிலாளர்களை ஆட்குறைப்பு செய்யவும், ஆட்குறைப்பு செய்யப்படும் தொழிலாளர்களுக்கு நஷ்ட ஈடு வழங்கவும், தொழிலாளர்களது ஊதியக் குறைப்பு ஆகியவை குறித்தும் ஒப்புக் கொள்ளப்பட்டது. நலிவடைந்த இத்தொழிற்சாலையை மீண்டும் இயக்குவதற்காக நிர்வாகம் வெளிநாட்டிலுள்ள ஒரு நிதி நிறுவனத்திடம் இருந்து நிதியுதவி கோரியதில், அந்நிறுவனம் நிதியுதவி வழங்க முன்வந்ததாக தெரிவிக்கப்பட்டது.

தொழிற்சாலையை மீண்டும் திறப்பதற்கு வேண்டிய நிதி ஆதாரத்தைப் பெருக்குவதற்கு பி.ஐ.எப்.ஆர். பிறப்பித்த உத்தரவின்படி நிர்வாகம் திடமான முன்மொழிவினை சமர்ப்பிக்கவில்லை என்ற காரணத்தினால், பி.ஐ.எப்.ஆர். தன் 30-12-1993-ஆம் நாளைய உத்தரவின்படி நிறுவனத்தை கலைத்திட உத்தரவுகள் பிறப்பித்துள்ளது. பி.ஐ.எப்.ஆர்-இன் இந்த உத்தரவுகளை ஆட்சேபித்து நிர்வாகம் தாக்கல் செய்த மேல்முறையீட்டினை எ.எ.ஐ.எப்.ஆர்., பி.ஐ.எப்.ஆர். உத்தரவுகளில் எவ்வித குறைபாடும் இல்லை என்ற காரணத்தின் பேரில் தள்ளுபடி செய்தது. எ.எ.ஐ.எப்.ஆர்.-இன் இந்த உத்தரவுகளை ஆட்சேபித்து, நிர்வாகம் சென்னை உயர்நீதிமன்றத்தில் தக்க நிவாரணம் கோரி மனு தாக்கல் செய்தனர். நிர்வாகம், எ.எ.ஐ.எப்.ஆர்.-யிடம் 9-8-1994-ஆம் நாளிட்ட உத்தரவுகளை மறுபரிசீலனை செய்ய எ.எ.ஐ.எப்.ஆர்-யிடம் மனு தாக்கல் செய்தனர். இம்மனுவும், எ.எ.ஐ.எப்.ஆர்-யினால் தள்ளுபடி செய்யப்பட்டதனால் நிர்வாகம், பி.ஐ.எப்.ஆர்.-இன் 30-12-1993-ஆம் நாளிட்ட உத்திரவு மற்றும் எ.எ.ஐ.எப்.ஆர்-இன் 9-8-1994-ஆம் மற்றும் 23-11-1994-ஆம் நாளிட்ட உத்தரவுகளை ஆட்சேபித்து, டில்லி உயர்நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்தது. இந்நிலையில், நிறுவனத்திடமிருந்து தங்களுக்குச் சேர வேண்டிய கடன் தொகையைத் திரும்பப் பெறும் பொருட்டு, ஐ.சி.ஐ.சி.ஐ நிறுவனம், பம்பாய்



1997 ஏப்ரல் 30 ]

உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த ரிட் மனு தொடர்பாக பம்பாய் உயர்நீதிமன்றத்தில் ரிசீவர் 27-12-1994 அன்று இந்நிறுவனத்தின் சொத்துக்களை வலுக்கட்டாயமாக தம் பொறுப்பில் எடுத்துக்கொண்டார்.

இந்நிலையில், இத்தொழிற்சாலையை மீண்டும் இயக்கிடும் வண்ணம் புதிய நிறுவனத்தின் அமைவுக்கான ஆக்க முயற்சிகளைச் செய்யும் பொருட்டு சென்னையில் உள்ள டிரைபின் எக்ஸ்போர்ட் (பி) லிட்., நிர்வாக இயக்குநர் திரு. பி.சி. தாமஸ் என்பவர் தனது புனரமைப்புத் திட்டத்தினை முன்வைத்துள்ளார்.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் மூலமாக ரூ.20 கோடி கீழ்க்கண்ட நிபந்தனைகளின்படி கால எல்லைகளுடன் கூடிய கடனுதவித் தொகை (Term Loan) வழங்கப்பட வேண்டும் என்றும், கடனுதவித் தொகைக்கான காலப்பகுதி 7 ஆண்டுகளாகவும், வட்டி கடனுதவித் தொகைக்கு ஒரு வருடம் விடுமுறைக்காலமாகவும், மற்றும் மூலதனத் தொகைக்கு மூன்று வருடங்கள் விடுமுறைக் பின்னர் மூலதனத் தொகைக்கு மூன்று வருடங்கள் விடுமுறைக் காலமாகவும் நிலம், கட்டிடம் மற்றும் இயந்திரங்களுக்கு ஒன்றுபட்ட உத்தரவாதம் அளிக்க வேண்டும் என்றும், விற்பனை வரியைப் பொறுத்தமட்டில் குறைந்தபட்சம் 3 ஆண்டுகளுக்கு விடுமுறை அளிக்கப்பட வேண்டும் என்றும், மின்சாரத்தைப் பொறுத்தமட்டில், முதல் ஆண்டில் இலவச மின்சாரமும், பராமரிப்புப் பணி தொடங்கப்பட்டவுடன், அடுத்த 2 ஆண்டிற்கு சலுகையுடன் கூடிய மின்சாரம் வழங்கப்பட வேண்டும் என்றும் சில நிபந்தனைகளை இவர் தமிழக அரசிடம் கோரியுள்ளார்.

இப்பிரச்சினை குறித்து மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் 27-11-1996 அன்று மேற்கூறிய புதிய தொழில் முனைவோரிடமும், தொழிற் சங்கங்களுடனும் விவாதித்தார்கள். இந்தப் புதிய தொழில் முனைவோர் தற்போதுள்ள "Paid up Capital"-க்கு மேல் 3½ கோடி ரூபாய் கொணர முடியும் என்றும், அதன் பின்பு நிர்வாகம் தன்னுடைய கட்டுப்பாட்டிற்குள் வர வேண்டும் என்றும், அவ்வாறு நிர்வாகம் கட்டுப்பாட்டிற்குள் வந்த பின்பு, வங்கிகளுக்குக் கொடுக்கப்பட வேண்டிய ரூ. 10 கோடியையும், தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய ரூ. 2 கோடியும், தாம் கொடுப்பதாகக் கூறினார். அரசு தரப்பில் ரூ. 5 கோடி சாப்ட் லோனும், விற்பனை வரி மற்றும் மின்வாரிய சலுகைகளைப் பரிசீலனை செய்ய வேண்டும் எனவும் கோரினார்.

இதனையடுத்து, சென்னை, தொழிலாளர் ஆணையர் முன்பு நடைபெற்ற பேச்சுவார்த்தையில், புதிய தொழில் முனைவோர் திரு. ஜே.என். தாமஸ் செரியன், இதர வங்கிகளுடன் ஒரு கூட்டம் நடத்தியதாகவும், அதில் திரு. தாமஸ் செரியன் ஏற்கெனவே அறிவித்து இருந்ததற்கு மேல் (ரூ. 10 கோடி) ரூ. 3 கோடி கொணர இசைவு தெரிவித்ததாகவும், ஆனால் இது 60 மாத காலங்களில் முடியும் என்று தெரிவித்ததாகவும், வங்கிகளின் கருத்துக்களைக் கேட்டறிய 29-1-1997 அன்று மீண்டும் கூட்டம் ஒன்று ஏற்பாடு செய்திருப்பதாகவும், அதில் புதிய தொழில் முனைவோர் திரு. தாமஸ் செரியன் அவர்களும் வர இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. இந்தக் கூட்டத்தின் முடிவுக்கு பின்பு ஒவ்வொரு வங்கி நிர்வாகமும் தத்தம் குழுமத்திற்கு விவரங்களைத் தெரிவித்து, குழுமத்தின் உத்தரவின் அடிப்படையில்தான் நடவடிக்கை எடுக்க இயலும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில், சென்னை உயர்நீதிமன்றத்தில் தொழிற்சங்கங்கள் செய்திருந்த ரிட்மனு எண் 1681/96-இல் 5-12-1996 அன்று தீர்ப்பு வழங்கியதாகவும், அத்தீர்ப்பில் தொழிற்சங்கங்கள் தாக்கல் செய்திருந்த ரிட் மனுவினைத் தள்ளுபடி செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், மேற்படி தீர்ப்பில், பத்தி-16-இல், கூறியபடி கலைத்தல் மனு குறித்தும் இறுதி விசாரணை முடிந்து, உயர்நீதிமன்றம் இதனைக் கலைக்க உத்தரவு பிறப்பித்து தீர்ப்பு வழங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலோட்டமாகப் பார்க்கும் பொழுது, புதிய தொழில் முனைவோர் வருவதற்கு விருப்பம் தெரிவிக்கும் தொகை திருப்தி அளிக்கவில்லை என்றும், இந்தத் தொகையை ஒட்டுமொத்தமாக ஒரே தவணையில் கொடுத்தால்கூட பரிசீலிக்க ஏதுவாக இருக்கும் என்றும், மேலும் இந்தத் தொகையைக்கூட எந்த வழியில் எப்படி அவர் கொணரப் போகிறார் என்ற விவரத்தை அவர் இதுகாறும் தெரிவிக்கவில்லை என்றும், வங்கி மற்றும் நிதி நிறுவனங்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. மேலும் இந்நிறுவனத்திற்கு நிதி உதவி அளித்துள்ள அனைத்து வங்கிகளின் கூட்டம் 29-01-1997 அன்று நடக்க இருப்பதாகவும், இதன் முடிவினை தெரிவிப்பதாகவும் வங்கியினர் தெரிவித்தனர். ஆனால் இது வரை இதுபற்றி இன்னும் தெரிவிக்கப்படவில்லை. இவ்வறிக்கை வரப்பெற்றவுடன் தொழிற்சாலையைத் திறப்பதற்கான நடவடிக்கை துரிதப்படுத்தப்படும்.



## 22. திருவள்ளுவர் மாவட்டம், அரியலூர், ஜெயங்கொண்டம் ஆகிய இரண்டு ஊர்களிலும் உள்ள நீதிமன்றங்களில் 11-11-1996 முதல் வழக்கறிஞர்கள் வேலைக்குச் செல்லாமல் இருப்பது குறித்து

**உறுப்பினர்: திரு. டி. அமரமூர்த்தி**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. ஆலடி அருணா** *(சட்டத் துறை)*

### அறிக்கை

பெரம்பலூர் திருவள்ளுவர் மாவட்டம், அரியலூர், ஜெயங் கொண்டம் ஆகிய ஊர்களில் உள்ள வழக்கறிஞர்கள் மாவட்டத் தலைமையிடத்தைப் பெரம்பலூரிலிருந்து அரியலூருக்கு மாற்றக் கோரி 11-11-1996 முதல் நீதிமன்றங்களைப் புறக்கணிப்புச் செய்து வருகின்றனர்.

30-9-1995 நாளிட்ட வருவாய்த் துறையின் அரசு ஆணை நிலை எண் 913-ல் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தை மூன்று வருவாய் மாவட்டங்களாகப் பிரிக்க ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. அரியலூரில் மாவட்ட நீதிமன்றம் ஏற்படுத்தப்பட வேண்டும் என அரியலூர் மற்றும் ஜெயங்கொண்டம் வழக்கறிஞர்கள் சங்கங்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்கள் உயர்நீதிமன்றத்தின் பரிசீலனைக்காக அனுப்பப்பட்டன. அரசு ஆணை நிலை எண் 814, வருவாய்த் துறை, நாள் 21-8-1996ல் அரியலூரில் குற்றவியல் அமர்வு நீதிமன்றம் அமைப்பது குறித்து சென்னை உயர்நீதிமன்றத்தின் ஆலோசனை பெற்று ஆணைகள் வெளியிடப்படும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

2. வழக்கறிஞர்கள் சங்கங்களிடமிருந்து பெறப்பட்டக் கோரிக்கை மனுக்களைப் பரிசீலித்த பின்னர், பெரம்பலூர் திருவள்ளுவர் நீதித் துறை மாவட்டத்திற்கானத் தலைமையிடம் பெரம்பலூர் என உயர்நீதிமன்றம் முடிவு செய்ததாக, உயர்நீதிமன்றப் பதிவாளர் தெரிவித்துள்ளார். அதன் அடிப்படையில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தை மூன்று நீதித் துறை மாவட்டங்களாகப் பின்வருமாறு அமைப்பதற்குச் சென்னை உயர்நீதிமன்றம் 1-11-1996 அன்று செயற்குறிப்பினை அரசுக்கு அனுப்பியது.

(1) திருச்சிராப்பள்ளியைத் தலைமையிடமாகக் கொண்டு திருச்சிராப்பள்ளி பெரும்பிடுகு முத்தரையர் மாவட்டம்

(2) கரூரைத் தலைமையிடமாகக் கொண்டு கரூர் தீரன் சின்னமலைக் கவுண்டர் மாவட்டம்

(3) பெரம்பலூரைத் தலைமையிடமாகக் கொண்டு பெரம்பலூர் திருவள்ளுவர் மாவட்டம்

3. 9-1-1997 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் அனைத்துத் தரப்புக் கட்சிகள், சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாவட்ட முக்கிய பிரமுகர்கள் அடங்கியக் கூட்டம் ஒன்று நடத்தப்பட்டு அக்கூட்டத்தில் பெரம்பலூர் மற்றும் அரியலூரில் எந்தெந்த அரசு அலுவலகங்கள் அமைக்கப்பட வேண்டும் என்று முடிவு எடுக்கப்பட்டது. அதன் அடிப்படையில் அரசு ஆணை (நிலை) எண் 28, வருவாய்த் துறை, நாள் 10-1-1997-ல் பெரம்பலூரிலும், அரியலூரிலும் செயல்பட வேண்டிய அலுவலகங்கள் குறித்து ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன.

மேற்சொன்ன அரசு ஆணையில் பெரம்பலூர் திருவள்ளுவர் மாவட்டத்தின் கீழ்க்குறிப்பிட்டுள்ள சில மாவட்ட அலுவலகங்கள் அரியலூரிலும் இன்னும் சில மாவட்ட அலுவலகங்கள் பெரம்பலூரிலும் இயங்க வேண்டும் என ஆணைகள் வெளியிடப்பட்டன.

**(அ) அரியலூரில் இயங்க வேண்டிய அலுவலகங்கள்:**

1. பொது மேலாளர், மாவட்டத் தொழில் மையம்
2. தனி அலுவலர், மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி
3. செயற்பொறியாளர் அலுவலகம் (வேளாண்மை பொறியியல்)
4. கூட்டுறவுத் தணிக்கை அலுவலகம் (துணைப் பதிவாளர், தணிக்கை)
5. தொழிற்சாலை ஆய்வாளர் அலுவலகம்
6. வணிக வரி அலுவலர் அலுவலகம்
7. உதவி இயக்குநர் அலுவலகம் (தோட்டக் கலை)
8. இணை இயக்குநர் அலுவலகம் (கால்நடைப் பராமரிப்புத் துறை)
9. மாவட்ட விளையாட்டுத் துறை அலுவலர் அலுவலகம்
10. கோட்டப் பொறியாளர் அலுவலகம் (நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணி)
11. கோட்டப் பொறியாளர் அலுவலகம் (கிராமப் புறச் சாலைகள்)
12. கோட்டப் பொறியாளர் அலுவலகம் (நெடுஞ்சாலைத் துறை ஆய்வு)



13. செயற்பொறியாளர் அலுவலகம் (பொதுப்பணித் துறை கட்டிடங்கள்)
14. மின் ஆய்வாளர் அலுவலகம் (பொதுப் பணித் துறை)
15. உதவி இயக்குநர் அலுவலகம் (புள்ளியியல்)
16. உதவி இயக்குநர் அலுவலகம் (கைத்தறி மற்றும் நெசவு)
17. மேலாளர், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம்
18. உதவி இயக்குநர் அலுவலகம் (வேலைவாய்ப்பு-தொழிற்கல்வி)
19. மாவட்ட வன அலுவலர் அலுவலகம்
20. உதவி ஆணையர் அலுவலகம் (இந்து சமய அறநிலையத் துறை)
21. தனி அலுவலர் (வேளாண்மை விற்பனை)
22. உதவி இயக்குநர் அலுவலகம் (விதைச் சான்று)
23. உதவி ஆய்வாளர் (உள்ளாட்சி நிதித் தணிக்கை)
24. உதவி ஆணையர் அலுவலகம் (நிலச் சீர்திருத்தம்)
25. மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர் அலுவலகம்

**(ஆ) பெரம்பலூரில் இயங்க வேண்டிய அலுவலகங்கள்:**

1. மண்டலப் போக்குவரத்து அலுவலர் அலுவலகம்
2. மாவட்டச் சுற்றுலா அலுவலர் அலுவலகம்
3. இணை இயக்குநர் அலுவலகம் (வேளாண்மை)
4. துணைப் பதிவாளர் அலுவலகம் (பால் வளம்)
5. உதவி இயக்குநர் அலுவலகம் (முன்னாள் இராணுவ வீரர் நலம்)
6. உதவி இயக்குநர் அலுவலகம் (பேரூராட்சிகள்)
7. உதவி இயக்குநர் அலுவலகம் (நகர மற்றும் கிராமப் புற அமைப்புத் திட்டம்)
8. கருவூல அலுவலர் அலுவலகம்
9. கோட்டப் பொறியாளர் அலுவலகம் (கரும்புச் சாலை அபிவிருத்தித் திட்டம்)
10. மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம் (தமிழ்நாடு வேளாண் சாலைகள் அபிவிருத்தித் திட்டம்)

[1997 ஏப்ரல் 30

11. மாவட்ட ஊட்டச் சத்துத் திட்ட அலுவலர் அலுவலகம்
12. உதவி இயக்குநர் அலுவலகம் (காதி மற்றும் கிராமிய தொழிற்சாலைகள்)
13. உதவி இயக்குநர் அலுவலகம் (வேலை வாய்ப்பு)
14. மாவட்ட மேலாளர் அலுவலகம் (தாட்கோ)
15. மாவட்டக் கணிப்பொறி மையம்

4. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தை மூன்று நீதித் துறை மாவட்டங்களாகப் பிரிப்பது குறித்து சென்னை உயர்நீதிமன்றம் அனுப்பியுள்ள செயற்குறிப்பின் மீது அரசு விரைவில் முடிவு எடுக்கும்.

## 23. மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்களில் அதிகார வரம்பை குறைத்துள்ளதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து

**உறுப்பினர்கள்:** திரு. ஏ. ராசேந்திரன், திரு. குழந்தை. தமிழரசன், திரு. சி. ஞானசேகரன், திரு. வ. அன்பழகன்

**அமைச்சர்:** மாண்புமிகு திரு. ஆலடி அருணா (சட்டத் துறை)

**அறிக்கை**

நீதிபதி திரு. மாலிமத் தலைமையின்கீழ் இந்திய அரசால் அமைத்துருவாக்கப்பட்ட குழுவானது நீதிமன்றங்களில் வழக்குகள் அதிகரித்து வருவது குறித்தும் அதன் விளைவாக வழக்குகளைத் தீர்ப்பதில் ஏற்படுகின்ற காலதாமதம் குறித்துமான பிரச்சினையைச் சமாளிப்பதற்கான தன்னுடைய பரிந்துரைகளை அளித்தது. மேற்சொன்ன பரிந்துரைகள் 1992-ஆம் ஆண்டில் நடந்த சட்ட அமைச்சர்கள் மாநாட்டிலும், 1993-ஆம் ஆண்டில் நடந்த முதலமைச்சர்கள் மற்றும் தலைமை நீதிபதிகள் மாநாட்டிலும்கூட விவாதிக்கப்பட்டன. பல்வேறு நடவடிக்கைகள் உள்ளடங்கலாக நீதிமன்றங்களின் படிவரிசையில் பண வகை விசாரணை அதிகாரத்தில் ஏற்ற முறை சீராய்வு செய்யப்படுவதும் நீதிமன்றங்களில் சேர்ந்து குவிந்து வருகின்ற வழக்கு தேக்க நிலுவைகளைச் சமாளிப்பதற்கான நடவடிக்கைகளில் ஒன்றாகக் கருதப்பட்டது.

2. அதன்படி, அரசு சென்னை உயர்நீதிமன்றத்துடன் கலந்தாய்வு செய்து தமிழ்நாட்டில் நீதிமன்றங்களின் பண வகை விசாரணை அதிகாரத்தை மறு ஆய்வு செய்வது குறித்தப் பிரச்சினையை பரிசீலனை செய்தது. சென்னை உயர்நீதிமன்றத்தின் கருத்துரு மற்றும் பரிந்துரைகளின் அடிப்படையில், அரசு 1873-ஆம் ஆண்டு தமிழ்நாடு



1997 ஏப்ரல் 30 ]

உரிமையியல் நீதிமன்றங்கள் சட்டத்தையும் (மையச் சட்டம் III/ 1873), 1892-ஆம் ஆண்டு சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்றச் சட்டத்தையும் (மையச் சட்டம் VII/ 1892), 1882-ஆம் ஆண்டு மாநகர சிறு வழக்கு நீதிமன்றங்கள் சட்டத்தையும் (மையச் சட்டம் XV / 1882) மற்றும் 1887-ஆம் ஆண்டு மாகாண சிறு வழக்கு நீதிமன்றங்கள் சட்டத்தையும் (மையச் சட்டம் IX / 1887) தக்கவாறு திருத்தியமைப்பதன் மூலம் மாநிலத்தில் உயர்நீதிமன்றத்தின் கீழமைந்துள்ள பல்வேறு உரிமையியல் மற்றும் சிறு வழக்கு நீதிமன்றங்களின் பண வகையிலான அதிகார வரம்பினை உயர்த்துவதென முடிவு செய்து சட்டங்கள் இயற்றப்பட்டன. இத்திருத்தச் சட்டங்கள் 1-12-1995 முதல் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

3. இங்ஙனம் 1873-ஆம் ஆண்டு தமிழ்நாடு உரிமையியல் நீதிமன்றங்கள் சட்டம், பிரிவு 28-ற்கும், 1887-ஆம் ஆண்டு மாகாண சிறு வழக்கு நீதிமன்றங்கள் சட்டம், பிரிவு 15-ற்கும் கீழ்வருமாறு திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன.

| ***1873-ஆம் ஆண்டு தமிழ்நாடு உரிமையியல் நீதிமன்றங்கள் சட்டம்*** | ***1873-ஆம் ஆண்டு தமிழ்நாடு உரிமையியல் நீதிமன்றங்கள் சட்டம்*** |
|---|---|
| **இருந்து வந்த பிரிவு** | **திருத்தத்தினை உள்ளடக்கிய பிரிவு** |
| ***"28. மாவட்ட நீதிபதிக்கு அல்லது சார்நிலை நீதிபதிக்கு சிறு வழக்குகள் அதிகார வரம்பினைச் சூட்டுதல்:—*** | ***"28. மாவட்ட நீதிபதிக்கு அல்லது சார்நிலை நீதிபதிக்கு சிறு வழக்குகள் அதிகார வரம்பினைச் சூட்டுதல்:-*** |
| உயர்நீதிமன்றம், அதிகார முறை அரசிதழில் அறிவிக்கை செய்வதன் மூலம், அப்போதைக்கப்போதுதான் குறிப்பிடுகின்ற வட்டார எல்லைக்குள்,— | உயர்நீதிமன்றம், அதிகார முறை அரசிதழில் அறிவிக்கை செய்வதன் மூலம், அப்போதைக்கப்போது தான் குறிப்பிடுகின்ற வட்டார எல்லைகளுக்குள்.— |
| மாவட்ட அல்லது சார்நிலை நீதிபதி எவருக்கும் சிறு வழக்குகள் நீதிமன்றங்களால் விசாரணை செய்யப்படத்தக்க உரிமை வழக்குகளின் விசாரணைக்காக இரண்டாயிரம் ரூபாய் தொகை | மாவட்ட அல்லது சார்நிலை நீதிபதி எவருக்கும் சிறு வழக்கு நீதிமன்றங்களால் விசாரணை செய்யப்படத்தக்க இருபதனாயிரம் ரூபாய் தொகை வரையிலான உரிமை வழக்குகளின் |

| | |
|---|---|
| வரையிலான அத்தகைய நீதிமன்ற நீதிபதியொருவரின் அதிகார வரம்பை சூட்டலாம். | விசாரணைக்காக அத்தகைய நீதிமன்ற நீதிபதியொருவரின் அதிகார வரம்பைச் சூட்டலாம். |
| *மாவட்ட முன்சீப்புக்கு அதே போன்ற அதிகார வரம்பினைச் சூட்டுதல்:—* | *மாவட்ட முன்சீப்புக்கு அதேபோன்ற அதிகார வரம்பினைச் சூட்டுதல்:—* |
| மாவட்ட முன்சீப் எவருக்கும் ஐநூறு ரூபாய் தொகை வரையிலான அதேபோன்ற அதிகார வரம்பைச் சூட்டலாம். | மாவட்ட முன்சீப் எவருக்கும் ஐயாயிரம் வரையிலான அதேபோன்ற அதிகார வரம்பைச் சூட்டலாம். |
| மேலும், அதேபோன்ற அறிவிக்கையின் மூலம், தான் பொருத்தமென நினைக்கிற போதெல்லாம் அவ்வாறு அதிகார வரம்புசூட்டப்பட்ட மாவட்ட அல்லது சார்நிலை நீதிபதிகளிடமிருந்தோ மாவட்ட முன்சீப்பிடமிருந்தோ அத்தகைய அதிகார வரம்பைத் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். | மாற்றமில்லை |
| **1887-ஆம் ஆண்டு மாகாண சிறுவழக்கு நீதிமன்றங்கள் சட்டம்** | **1887-ஆம் ஆண்டு மாகாண சிறுவழக்கு நீதிமன்றங்கள் சட்டம்.** |
| இருந்துவந்த பிரிவு | திருத்தத்தினை உள்ளடக்கிய பிரிவு |
| **“15. சிறு வழக்குகள் நீதிமன்றத்தால் விசாரணை செய்யப்படத்தக்க உரிமை வழக்குகள்:—** | **“15. சிறு வழக்குகள் நீதிமன்றத்தால் விசாரணை செய்யப்படத்தக்க உரிமை வழக்குகள்:—** |
| (1) சிறு வழக்குகள் நீதிமன்ற மொன்றின் விசாரணையிலிருந்து விலக்களிக்கப்பட்ட உரிமை வழக்குகளாக இரண்டாம் இணைப்புப் பட்டியலில் குறித்துரைக்கப்பட்ட உரிமை வழக்குகளை சிறு வழக்குகள் நீதிமன்றமொன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுதல் கூடாது. | மாற்றமில்லை. |
| (2) அந்த இணைப்புப் பட்டியலில் குறித்துரைக்கப்பட்ட விலக்குகளுக்கும் அப்போதைக்கு நடைமுறையிலுள்ள சட்டம் எதனின் வகைமுறைகளுக்கும் உட்பட்டு ஐந்நூறு ரூபாய்களுக்கு மேற்படாத மதிப்புள்ள உரிமையியல் இயல்புள்ள அனைத்து உரிமை வழக்குகளும், சிறு வழக்குகள் நீதிமன்றத்தால் விசாரணை செய்யப்படத்தக்கதாகும். | (2) அந்த இணைப்புப் பட்டியலில் குறித்துரைக்கப்பட்ட விலக்குகளுக்கும் அப்போதைக்கு நடைமுறையிலுள்ள சட்டம் எதனின் வகைமுறைகளுக்கும் உட்பட்டு, ஐந்தாயிரம் ரூபாய் களுக்கு மேற்படாத உரிமையியல் இயல்புள்ள அனைத்து உரிமை வழக்குகளும், சிறு வழக்குகள் நீதிமன்றத்தால் விசாரணை செய்யப்படத்தக்கதாகும். |
| (3) மேற்சொன்னவற்றுக்கு உட்பட்டு மாநில அரசானது, எழுத்துருவிலான ஆணையின் மூலமாக, உரிமையியல் இயல்புள்ள ஓராயிரம் ரூபாய்களுக்கு மேற்படாத மதிப்புள்ள அனைத்து உரிமை வழக்குகளும் அந்த ஆணையில் சொல்லப்பட்ட சிறு வழக்குகள் நீதிமன்றமொன்றினால் விசாரணை செய்யப்படத் தக்கதாகும்.” | (3) மேற்சொன்னவற்றுக்கு உட்பட்டு, மாநில அரசானது எழுத்துருவிலான ஆணையின் மூலமாக, உரிமையியல் இயல்புள்ள ஐந்தாயிரம் ரூபாய் களுக்கு மேற்படாத மதிப்புள்ள அனைத்து உரிமை வழக்குகளும் அந்த ஆணையில் சொல்லப்பட்ட சிறு வழக்குகள் நீதிமன்றமொன்றினால் விசாரணை செய்யப்படத் தக்கதாகும்.” |



மேற்சொன்ன வகைமுறைகளிலிருந்து மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்களின் முதலேற்பு அதிகார வரம்பானது ரூ. 30,000/- வரையில் என இருக்கும்போது 1873-ஆம் ஆண்டு தமிழ்நாடு உரிமையியல் நீதிமன்றங்கள் சட்டத்தின் (மூன்றாம் மையச் சட்டம்) 28-ஆம் பிரிவானது சிறு வழக்குகளின் அதிகார வரம்பினைப் பொறுத்தவரையில் ரூ. 20,000/- வரையிலான வழக்குகளின் அதிகார வரம்பானது சார்பு நீதிபதிகளிடம் உற்று அடையச் செய்வதற்கு இயல்விக்கிறது. இதனால் ரூ. 5,000/-க்கு மேற்பட்டு ரூ. 20,000/-

வரையிலான அத்தகையவழக்கு சார்நிலை நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்படுகின்றனவே அல்லாமல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்படுவதில்லை. இதனால் வழக்கறிஞர்களுக்கும் வழக்கு தரப்பினருக்கும் இடர்பாடு ஏற்பட்டு சில வழக்கறிஞர்கள் நீதிமன்றங்களைப் புறக்கணித்து வருகின்றனர். எனவே வழக்கறிஞர்கள் இடர்பாடுகளை நீக்கும்பொருட்டு தக்க நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ளுமாறு உயர்நீதிமன்றத்திடம் அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

## 24. திருப்பூரில் 114 சாயப்பட்டறைகளை மூடிவிடுமாறு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து.

**உறுப்பினர்கள்:** திரு. கே. சுப்பராயன், திரு. சி. ஞானசேகரன்.

**அமைச்சர் :** மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி (கைத்தறித் துறை).

**(1) திருப்பூர் சாயத் தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளது குறித்து**

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் 1982-ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின்கீழ் நிறுவப்பட்டது. இச்சட்டத்தின்கீழ் தொழிற்சாலைகள் தங்களது கழிவுநீரை சுத்திகரிப்பு நிலையம் அமைத்து சுத்திகரித்து வெளியேற்றுவதற்கு வாரியத்தின் இசைவு பெற வேண்டும். கோவை மாவட்டம், திருப்பூர் நகரம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதியில் 866 சலவை மற்றும் சாயத் தொழிற்சாலைகள் உள்ளன. இவற்றில் 288 தொழிற்சாலைகள் பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் சேர்ந்துள்ளன. 464, தொழிற்சாலைகள் தனித்தனியாக கழிவுநீர் சுத்திரிகப்பு நிலையங்கள் அமைக்க இருக்கின்றன. மீதமுள்ள 114 தொழிற்சாலைகள் தாங்களாகவே தொழிற்சாலைகளை மூடியுள்ளன. 288 தொழிற்சாலைகளை உள்ளடக்கிய பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அங்கேரிப்பாளையம், ஆண்டிப்பாளையம், மன்னாரை, வீரபாண்டி, சின்னக்கரை, மாணிக்கபுரம், புதூர், காசிப்பாளையம், குணங்கல்பாளையம் ஆகிய 8 இடங்களில் சுத்திகரிப்பு நிலையங்களை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. மேலும் 2 தொழிற்சாலைகள் தாங்களாகவே கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தை அமைக்கும் பணியைச் செய்து வருகின்றன.



**பணி முன்னேற்றம் விவரம் வருமாறு:**

| | | | |
|---|---|---|---|
| 1. | தனிப்பட்ட சுத்திகரிப்பு நிலையம் முழுவதுமாக அமைத்து முடித்து அவை இயக்கத்தில் உள்ள தொழிற்சாலைகள் | .. | 5 |
| 2. | 75 விழுக்காடுகள் மற்றும் அதற்கு மேல் சுத்திகரிப்பு நிலையப் பணிகள் முடிந்திருப்பவை | .. | 110 |
| 3. | 50 விழுக்காடுகள் மற்றும் 75 விழுக்காடுகளுக்குட்பட்ட சுத்திகரிப்பு நிலையப் பணிகள் முடித்திருப்பவை | .. | 91 |
| 4. | சுத்திகரிப்பு நிலையக் கட்டுமானப் பணிகள் ஆரம்ப நிலையிலுள்ளவை | .. | 204 |
| 5. | இதுவரை சுத்திகரிப்பு நிலையம் அமைக்க எவ்வித முயற்சியும் ஆரம்பிக்காதவை | .. | 54 |
| | மொத்தம் | .. | **464** |

(2) திருப்பூர் சாயத் தொழிற்சாலைகள் தாங்களாகவே சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்க 30-9-1996 வரையிலும், பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க 31-12-1996 வரையிலும் காலக்கெடு தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தால் விதிக்கப்பட்டிருந்தது. மேலும் இச்சுத்திகரிப்பு நிலையங்களின் கட்டுமானப் பணி முன்னேற்றம் குறித்து, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத் தலைவர் அவர்களால் 6-11-1996 அன்று வாரியத் தலைமை அலுவலகம், சென்னையில் திருப்பூர் டையர்ஸ் அஸோஸியேஷன் பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலைய இயக்குநர்கள் ஆகியோருடன் கூட்டம் ஒன்று நடத்தி விவாதிக்கப்பட்டது. திருப்பூர் டையர்ஸ் அஸோஸியேஷன் மற்றும் பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலைய இயக்குநர்களின் கோரிக்கைகளுக்கிணங்க, வாரியம் பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க 31-3-1997 வரையிலும் காலக்கெடு நீட்டித்தது.

அதன் பின்னரும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க எந்த முயற்சியும் ஆரம்பிக்காத 54 சாய மற்றும் சலவைத் தொழிற்சாலைகளை 1974-ஆம் ஆண்டு திருத்தப்பட்ட நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் பிரிவு 33-ஏ-ன் கீழ் மூட உத்தரவு, வாரியத்தால் வழங்கப்பட்டுள்ளது.

(3) மேலும் கரூர் தாலுகா, நொய்யல் கால்வாய் விவசாயிகளின் அமைப்பு சென்னை உயர்நீதி மன்றத்தில் சலவை மற்றும் சாயத்

தொழிற்சாலைகள் வெளியேற்றும் கழிவுநீரால் நொய்யலாறு மாசு அடைந்துள்ளதாக வழக்கு தொடர்ந்துள்ளது. இது குறித்து, வாரியம் சென்னை உயர்நீதி மன்றத்தில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளது. இதில் மேற்கண்ட வழக்கு 6-3-1997-ல் விசாரணைக்கு வந்தபோது, உயர்நீதிமன்றம் தானாக மூடியுள்ள 114 சாயப்பட்டறைகள் மற்றும் எந்தவித நடவடிக்கையும் எடுக்காத 54 சாயப்பட்டறைகளை மூடும்படியும், தனித்தனியாக சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் சாயப்பட்டறைகளுக்கு 3-4-1997 வரையும் கூட்டாக சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் சாயப்பட்டறைகளுக்கு 31-5-1997 வரையும் கால அவகாசம் கொடுத்துள்ளது. மேற்படி காலத்திற்குள் கழிவுநீர் நிலையம் அமைக்கப்படாவிட்டாலும், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்திடமிருந்து இசைவாணை பெறப்படா விட்டாலும் சாயப் பட்டறைகளை மூடும்படி உத்தரவிட்டுள்ளது.

**(II) வடஆற்காடு அம்பேத்கர் மாவட்டத்தில் தோல் தொழிற்சாலை மூடப்பட்டுள்ளது குறித்து**

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் 1982-ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின்கீழ் நிறுவப்பட்டது. இச்சட்டத்தின்கீழ் தொழிற்சாலைகள் தங்களது கழிவுநீரை வெளியேற்ற வாரியத்தின் இசைவினைப் பெறவேண்டும். தோல் தொழிற்சாலைகளைப் பொறுத்தவரை இத்தகைய தொழிற்சாலைகளிலிருந்து வெளிவரும் சுத்திகரிக்கப்படாத கழிவுநீரால் நிலத்தடி நீர் மற்றும் நிலம் மாசு அடைவதாக பொது மக்களிடமிருந்து மனுக்கள் பெறப்பட்டன. தோல் தொழிற்சாலைகளில் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களை நிறுவியும், இயக்கியும் கழிவுநீரை சுத்திகரிப்பு செய்து வெளியேற்றும்படி இத்தொழிற்சாலைகளுக்குத் தொடர்ந்து அறிவுரைகள் வாரியத்தினால் வழங்கப்பட்டுள்ளன.

வடஆற்காடு அம்பேத்கர் மாவட்டத்தில் தோல் பதனிடுதல் மற்றும் தோல் அட்டைத் தயாரிக்கும் தொழிற்சாலைகள் அமைந்துள்ளன. இத் தொழிற்சாலைகளினால் அம்மாவட்டத்திலுள்ள விவசாய நிலங்கள் மற்றும் நிலத்தடி நீர் பாதிக்கப்படுவதைக் கருத்தில் கொண்டு, அம்மாவட்டத்திலுள்ள வேலூர் மக்கள் நல மன்றம் 1991-ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் இந்திய உச்சநீதிமன்றத்தில் வழக்கு ஒன்று தொடர்ந்தது. இவ்வழக்கின் மீது உச்சநீதிமன்றம் பல்வேறு தேதிகளில் தீர்ப்புகளை வழங்கியுள்ளன. இத்தொழிற்சாலைகளில் பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் சேராமலும் அல்லது தனியாக கழிவு நீர்



சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்காத தோல் தொழிற்சாலைகளை மூடும்படி உச்சநீதிமன்றம் பல்வேறு தேதிகளில் உத்தரவிட்டது. இத்தொழிற்சாலைகள் தனிப்பட்ட முறையிலோ அல்லது கூட்டுச் சேர்ந்தோ பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்து சரிவர இயங்கும் பட்சத்தில் கால அவகாசத்தின் அடிப்படையில் இத்தொழிற்சாலைகளைத் திறக்கலாம் என ஆணையிட்டுள்ளது. இவ்வுத்தரவின்படி அம்பேத்கர் மாவட்டத்தில் 569 தோல் பதனிடும் தொழிற்சாலைகளில் 415 தோல் பதனிடும் தொழிற்சாலைகளுக்கு வாரியம் இசைவினை வழங்கியுள்ளது. அவற்றில் 87 தோல் பதனிடும் தொழிற்சாலைகள் தாங்களாகவே சுத்திகரிப்பு நிலையங்களை அமைத்து உள்ளன. எஞ்சியுள்ள 328 தொழிற்சாலைகள் 7 பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்து சுத்திகரிப்பு செய்கின்றன. மீதமுள்ள 154 தொழிற்சாலைகளுக்கு அவை தாங்களாகவோ அல்லது கூட்டுச் சேர்ந்தோ கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்காத காரணத்தினால் இசைவாணை வழங்கவில்லை. கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்காதவரை இந்தத் தொழிற்சாலைகள் இயங்க முடியாது. மேற்படி மூடப்பட்டுள்ள 154 தோல் பதனிடும் தொழிற்சாலைகளில் 124 தொழிற்சாலைகள் பொது சுத்திகரிப்பு நிலையங்களின் அமைப்பிலும், 30 தொழிற்சாலைகள் பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் சேராமலும் அல்லது தனியாக கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்காமலும் உள்ளன.

எனவே நிலத்தடி நீர் மற்றும் நிலம் மாசுபடுவதைத் தடுப்பது மிகவும் அவசியம். தொழிற்சாலைகளில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் தனியாகவோ அல்லது கூட்டுச் சேர்ந்தோ அமைப்பது மிகவும் அவசியம். அவ்வாறு நிலையங்கள் அமைத்த பின்னர் இத்தொழிற்சாலைகளுக்கு இசைவாணை வழங்கப்படும்.

**25. வடாற்காடு அம்பேத்கர் மாவட்டத்தில் வாணியம்பாடி தாலுக்கா காவலூர் வான் ஆராய்ச்சி நிலையத்தைக் காலி செய்து கொண்டு உடனே செல்ல வேண்டும் என்று வனத் துறை நோட்டீஸ் அனுப்பியதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து**

**உறுப்பினர்: திரு. சி. ஞானசேகரன்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி (வனம் மற்றும் கால்நடைத் துறை)**

[1997 ஏப்ரல் 30

## அறிக்கை

வாணியம்பாடி தாலுக்கா ஜவ்வாது மலையில் காவலூர் வான் ஆராய்ச்சி நிலையத்திற்கு 40 ஏக்கர் வன நிலம் குத்தகைக்கு பத்து ஆண்டுகளுக்கு வழங்கப்பட்டது என்றும், மேலும் கூடுதலாக 60 ஏக்கர் நிலத்தில் கட்டடம் கட்ட மற்றும் இதர வேலைகள் செய்ய மேற்கண்ட நிலையத்திற்கு அனுமதி வழங்கப்பட்டது என்றும், பின்பு மேற்கண்ட இரண்டு குத்தகைகளும் ஒன்றாக்கப்பட்டு ஒரே குத்தகை ஒப்பந்த அறிக்கை 5-9-1975 முதல் 4-9-1985 வரை மத்திய அரசும் மாநில அரசும் இணைந்து போடப்பட்டது என்றும், குத்தகைக் காலம் 4-9-1985 அன்று முடிவடைகிறது என்றும் முதன்மை வனத் துறைத் தலைவர் தெரிவித்துள்ளார்.

2. மேலும் மைய அரசின் வனப்பாதுகாப்புச் சட்டம் 1980 பிரிவு 2 (iii) இன்படி வன நிலத்தில் வனவியல் அல்லாத பிறவேலைகள் செய்ய (குத்தகை புதுப்பித்தல் உட்பட) மத்திய அரசின் முன் அனுமதி பெற வேண்டும். அவ்வாறு அனுமதி பெறாத செயல்களை உடனடியாக நிறுத்தும்படி உச்சநீதிமன்றம் வழக்கு எண் (சிவில்) 202/1995 நாள் 12-12-1996-இல் உத்தரவு வழங்கியுள்ளது. உச்சநீதிமன்ற உத்தரவின்படி திருப்பத்தூர் மாவட்ட வன அலுவலர் வான் ஆராய்ச்சி நிலையத்தில் நடவடிக்கைகளை நிறுத்தும்படி தாக்கீது அனுப்பியுள்ளார் என்றும் தெரிவித்துள்ளார். மேலும் அவர் தம் அறிக்கையில் வான் ஆராய்ச்சி நிலையம் தற்போது திருப்பத்தூர் மாவட்ட வன அலுவலரிடம் மைய அரசின் 1980-ஆம் ஆண்டைய வனப்பாதுகாப்புச் சட்டப்பிரிவு 2(iii) இன்படி ஒப்புதல்பெற செயற்குறிப்பு அனுப்பியுள்ளார்கள் என்றும், அவை அவரின் பரிசீலனையில் உள்ளது என்றும் குத்தகையைப் புதுப்பிக்க மத்திய அரசின் அனுமதியினை விரைவில் பெற நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்றும் தெரிவித்துள்ளார்.

3. முதன்மை வனத் துறைத் தலைவரின் அறிக்கையை, தற்போது உச்சநீதிமன்றம் 11-2-1997 அன்று வழங்கிய இடைக்கால தீர்ப்பின் அடிப்படையிலும், இந்த தீர்ப்பு தொடர்பாக இந்தியாவின் அட்டர்னி ஜெனரல் 15-1-1997 அன்று அளித்த மேலான கருத்தின் அடிப்படையில் 27-3-1997-ஆம் நாளிட்ட அரசு கடிதத்தில் முதன்மை வனத் துறைத் தலைவர் மற்றும் திருப்பத்தூர் மாவட்ட வன அலுவலர் ஆகியோருக்கு, இன்னபிறவற்றுடன், காவலூர் வானவியல் ஆராய்ச்சி நிலையம் தொடர்ந்து செயல்படுவதற்கு அனுமதிக்கும்படியும், குத்தகையினை



1997 ஏப்ரல் 30]

மேலும் 10 ஆண்டுகளுக்கு புதுப்பிக்கும் பொருட்டு தேவையான செயற்குறிப்பினை உடனடியாக அனுப்பிவைக்கும்படியும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

## 26. வேலூரில் உள்ள முத்து மண்டபம் பராமரிப்பு இன்றி சமூகவிரோத செயல்கள் நடக்கும் இடமாக உள்ள நிலை குறித்து

**உறுப்பினர்: திரு. சி. ஞானசேகரன்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன் (செய்தி மற்றும் விளம்பரத்துறை)**

## அறிக்கை.

கண்டி கடைசித் தமிழ் மன்னர் விக்ரம ராஜ சிங்கன் நினைவாக வேலூர் பாலாற்றங்கரையில் அவர் புதைக்கப்பட்ட இடத்தில் எழுப்பப்பட்ட முத்து மண்டபம் எதிரில் நகராட்சியின் நீரேற்று நிலையமும் குடிநீர் வடிகால் வாரியமும் உள்ளது. எனவே எந்த நேரத்திலும் மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ளதால் முத்து மண்டபத்தில் சமூக விரோதச் செயல்கள் ஏதும் நடப்பதில்லை என மாவட்ட ஆட்சித் தலைவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். மேலும் வேலூர் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் மற்றும் அலுவலகப்பணியாளர்கள் அவ்வப்போது முத்து மண்டபத்தை மேற்பார்வையிட்டு வருகிறார்கள். முத்து மண்டபத்தை நல்ல முறையில் பராமரித்திட பணியாளர்கள் நியமிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## பன்னாட்டு புகையிலை நிறுவனமான ஐ.டி.சி. அறிமுகப்படுத்த உள்ள 'அல்ட்ரா' சிகரெட்டை அறிமுகப்படுத்தும் விளம்பரத்திற்காக திரைப்படம் தயாரிக்கப்பட்டது குறித்து

**உறுப்பினர்கள்: திரு. ப. ரங்கநாதன், திரு. வை. சிவபுண்ணியம்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன் (செய்தி மற்றும் விளம்பரத்துறை)**

[1997 ஏப்ரல் 30

**அறிக்கை**

சென்னை 20-ல் உள்ள திருவாளர் போர்டு வாக்கர்ஸ் என்னும் நிறுவனம், இந்தியன் டுபோக்கோ கம்பெனி என்ற நிறுவனத்திற்காக எம்.ஜி.ஆர். திரைப்பட நகரில் உள்ள இத்தாலியன் தோட்டத்தில் (Eitalian Garden) இசை நிகழ்ச்சி நடத்துவதற்காக எம்.ஜி.ஆர். திரைப்பட நகர் அலுவலர்களை அணுகி, அதற்குரிய கடிதத்தினைக் கொடுத்து முறையான உரிமையும் பெற்று அதற்கான முன்பணத்தினையும் கட்டி 1997 பிப்ரவரி 1-ந்தேதி மாலை 8-30 மணியிலிருந்து தங்கள் விழாவினை நடத்தினார்கள். அந்த விழாவில் எல்லா வயதினர்களும் கலந்து கொண்டு இரவு விருந்து மட்டும் அளிக்கப்பட்டது. மேற்கூறிய நிகழ்ச்சி அமைதியான முறையில் நடந்து முடிந்தது.

மேற்கண்ட விழாவில் சிகரெட் விளம்பரத்திற்குரிய பேனர்கள் (Banners) கட்டப்பட்டிருந்தன. அல்ட்ரா என்ற சிகரெட்டும் விநியோகிக்கப்பட்டது. எந்த விதமான படப்பிடிப்பும் அங்கே நடைபெறவில்லை என்பதோடு அதற்கான அனுமதியும் பெறப்படவில்லை.

மேலும் திரைப்பட நகர் நிர்வாகிகள் அனுமதி பெற்று நிகழ்ச்சி நடத்தும்போது மிகவும் கண்காணித்து தவறுகள் நடக்காது பார்த்துக்கொள்ள கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

ஃஃஃ

D
V211,31
21844